கிரிமினல் வியவகார
சங்கிரகம்

CANNOT BE DIGITIZED

Z2,5
N09
83385

# PRACTICAL CRIMINAL LAW

## IN TAMIL.

# கிரிமினல் வியவகார ஸங்கிரகம்.

இதில்

இந்தியன் பீனல்கோட், கிரிமினல் ப்ரோஸீஜர்கோட்-சாட்சியச்சட்டம்
அடிதண்டனை ஆக்ட்டு, சிறுவர்களைச் சீர்திருத்துவதற்கான ஆக்ட்டு,
முதலியவைகளும் ஜெயில் ரூல்கள், பிராதுகள், மனுக்கள்
இவைகளுக்கெல்லாம் மசோதாக்களும்
அடங்கியுள்ளது.

இது
திருநெல்வேலி ஜில்லா வக்கீல்
**K. R. கிருஷ்ணமாச்சாரியாரால்**
எழுதப்பட்டது.

முதற்பதிப்பு.

**MADRAS:**
PRINTED BY THOMPSON & CO.,
AT THE "MINERVA" PRESS, 33, BROADW

1909.

*All Rights Reserved.*

83385

Z2,5
N09

REGISTRAR
7 APR 1909
MADRAS.

To

THE HON'BLE

# Sir Charles Arnold White, Kt.,

*(Barrister-at-Law)*

Chief Justice

*of His Majesty's High Court of Judicature at Madras,*

THIS LITTLE VOLUME

IS BY KIND PERMISSION

***MOST RESPECTFULLY DEDICATED***

As an Humble Token of Esteem and Regard

**BY THE COMPILER.**

இந்தப் புஸ்தகத்தை

மிகவும் பக்ஷத்துடன் கொடுக்கப்பட்ட

அனுமதியின் பேரில் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு

ச்சீப் ஜஸ்டிஸாகிய ஹானரபிள்

**ஸர். ச்சார்லெஸ் ஆர்னல்ட் ஒயிட், நைட்,**

பாரிஸ்டர் அட்லா அவர்கள் ஸமுகத்துக்கு,

இந்த கிரந்த கர்த்தாவினால் மிகவும் வணக்கத்துடன்

அரங்கேற்றப்பட்டது.

# முகவுரை.

இந்த ராஜதானியிலுள்ள இங்கிலீஷ் தெரியாமல் தமிழ்மட்டும் தெரிந்த ஜனங்கள், கிரிமினல் சட்டங்களையும் கிரிமினல் கோர்ட்டு நடவடிக்கைகளையும், பிராது மனுக்கள் முதலியதுகளைத் தாங்களே எழுதிக்கொள்ளும் விதத்தையும் எளிதில் அறிந்து கொள்ளும் படியான விதமாயுள்ள தமிழ் புஸ்தகங்கள் ஏதும் இதுவரையிலில்லாமலிருப்பதைப் பற்றிப் பலவாறாக பிரஸ்தாபிப்பதை நாளடைவில் கேட்டிருக்கிறேன். ஜெயிலுக்கு அனுப்பப்படும் கைதிகள் ஜெயிலில் செய்யும் பற்பல வகையான வேலைகளையும். ஜெயில் ரூல்படி நடக்காத கைதிகளுக்கு ஜெயிலில் கொடுக்கப்படும் பற்பல சிக்ஷைகள், போடப்படும் பற்பல வகுப்பு விலங்குகள் முதலிய வற்றையும், தீவாந்தரத்துக்கு அனுப்பப்படும் கைதிகள் தீவாந்தரத்தில் எவ்விதம் நடத்தப்படுகிறார்கள் என்ற விஷயத்தையும், விதிக்கப்படுகிற ஒவ்வொரு தண்டனையையும் நிறைவேற்றும் விதத்தையும், அது விதிக்கப்பட்டது முதல் கடாசிவரை நடக்கும் நடவடிக்கைகளையும், இது போலொற்ற அநேக முக்கியமான விஷயங்களையும், ஜனங்களுக்குத் தெரியச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தப் புஸ்தகத்தை எழுதத் துணிந்தேன்.

இந்தப் புஸ்தகத்தின் மாதிரியான புஸ்தகம் இதற்கு முன் எத்தப்பாஷையிலுமில்லை. இந்தப் புஸ்தகமே இப்பேர்ப்பட்ட விஷயத்தில்முதல் முயற்சியாகயிருப்பதால் அநேக விதமாயுள்ள குறைவுகளிருக்கக்கூடும். அன்ன பக்ஷியானது எப்படி பாலுடன்சேர்ந்த தண்ணீரைப் பிரித்து பாலை மாத்திரம் அருந்துமோ, அதுபோல எல்லாம் தெரிந்த நண்பர்கள் இப்புஸ்தகத்திலிருக்கும் தோஷங்களைத் தள்ளிவிட்டு குணமான அம்சங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு பிசகாயுள்ள விஷயங்களையும், சீர்திருத்தவேண்டிய அம்சங்களையும், எனக்குத் தெரியப்படுத்தும்படி தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கே. ஆர். கிருஷ்ணமாசாரி.

1-4-09.

7 APR 1909
MADRAS.

# அட்டவணை.

என்பது எந்தப் புஸ்தகத்துக்கும் முக்கியமாக எழுதவேண்டிய விஷயமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், அட்டவணையினால் ஒரு புஸ்தகம் படிப்பவர்களுக்கு யிருக்கும் நன்மையும் சௌகரியமும் எவ்வளவு யிருக்கிறதோ அதைப்போலவேயே தீமையும் ஸமபாகமாக யிருக்கிற தென்பதிலும் ஸந்தேகமில்லை. அதாவது அட்டவணை யிருக்கும் புஸ்தகங்களை மிகவும் சுருசுருப்பாகவும் சோம்பலே யில்லாமலுமிருப்பவர்களும் அடிமுதல் கடாசிவரை படித்திருக்கமாட்டார்களென்பது நிச்சயம். அந்தப் புஸ்தகத்தில் தனக்கு வேண்டும் விஷயம் எந்தப் பக்கத்திலிருக்கிறதென்பதை அட்டவணையைப் பார்த்துத் தெரிந்துகொண்டு அந்த விஷயத்தைமட்டும் படித்துவிட்டு புஸ்தகத்தைக் கீழேவைத்து விடுவார்கள். அட்டவணையில்லாத புஸ்தக விஷயமாகவோவென்றால், அந்தப் புஸ்தகத்தில் இன்ன பக்கத்தில் இன்ன விஷய மிருக்கிறதென்பது புதிதாக அந்தப் புஸ்தகத்தைக் கையில் எடுப்பவர்களுக்குத் தெரியமாட்டாது. அதில் இருக்கும் விஷயங்களை தெரிந்துகொள்ளும் படிக்காக புஸ்தகம் பூராவும் படிக்கும்படியாக நேரிடும். அட்டவணை யில்லாத ஒரு புஸ்தகத்தை ஒருதரம் போல இரண்டாவது தரம் படித்துவிட்டால் இன்ன பக்கத்தில் இன்ன விஷயமிருக்கிறதென்பது நன்றாக மனதில் பதிந்துவிடும். மனஸாகிற புஸ்தகத்தில் புத்தியாகிற பேனாவினால் கவனமென்னும் மையைக்கொண்டு அட்டவணை எழுதிவிட்டால் நினைத்த மாத்திரத்தில் அந்தப் புஸ்தகத்திலுள்ள எந்த விஷயங்களையும் திருப்பிவிடக்கூடும். ஆகையால், புஸ்தகத்தை இந்தக் கடாசிவரை பூராவும் எல்லாரும் நன்றாகக் கவனத்துடன் படிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தப் புஸ்தகத்துக்கு அட்டவணை யெழுதாமல் வேணுமென்றே நிறுத்தி யிருக்கிறேன். மேலும் இந்தப் புஸ்தகத்தின் ஒவ்வொரு அத்தியாயத்தின் தலைப்பிலும், ஒவ்வொரு பக்கத்தின் உச்சியிலும், அநேக பிரிவுகளின் மார்ஜினிலும் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு பாராவிலும், அடங்கியிருக்கும் விஷயங்களின்ன தென்பதை யெழுதப்பட்டிருக்கிறது.

இது சங்கதிகளை யெல்லாம் உத்தேசித்து இந்தப் புஸ்தகத்துக்கு அட்டவணை யில்லாமலிருப்பதை இந்தப் புஸ்தகம் படிப்பவர்கள் ஒரு குறைவாக எண்ணமாட்டார்களென்று நம்புகிறேன்.

கே. ஆர். கிருஷ்ணமாசாரி.




மாக்ஷிமை தங்கிய ஏழாவது எட்வர்ட்
இந்திய
சக்கரவர்த்தி அவர்கள்.

மாக்ஷிமை தங்கிய அலெக்ஸாண்ட்ரா
மகாராணி இந்திய
சக்கரவர்த்தினி அவர்கள்.

மாக்ஷிமைதங்கிய காலஞ்சென்ற
விக்டோரியா சக்ரவர்த்தினி அவர்கள்.

மஹிமை தங்கிய வேல்ஸ் இளவரசர்
அவர்கள்.

மஹிமை தங்கிய வேல்ஸ் இளவரசி
அவர்கள்.

7 APR 1909
MADRAS

# INDIA, THEN AND NOW,

## A plea for loyalty to Britain.

It is a favourite maxim of the Hindu Scriptures that the king has got an element of divinity in him ; and this thesis, though it might be controverted, in this age of political and constitutional liberty, was, none the less, widely current in Europe, some centuries back. And the same doctrine has recently found an energetic exponent, in no less a force of the Nineteenth Century than Carlyle. According to him, the king, the *real king* has, certainly, got a spark of the divine, in him. This view, indeed, is yet far from having gained an enthusiastic acceptation. But with regard to a kindred idea of his, no less a favourite with him than this, it may be asserted, the majority of the educated world think in much the same way as he. In explanation of this, it may be said that, when the latter says that the order of the political life of a people is divine and sacred, his opponents receive him, with this much of tolerance, that they grant, that the political order amidst which, one happens to be cast, should be looked upon, as if it were divine and sacred. It would appear that this is nothing strange to Hindu ears. Nevertheless, if we can read anything from what is called the signs of the times, we can suppose that this belief, even if entertained greatly by Hindus, has been relegated to the back-ground of their active ideas. This seems to have been the work of harebrained enthusiasts, sceptical alike in the efficacy of laws, human and divine. If this pamphlet can do its mite, in counteracting this influence and restoring the Hindu mind to its wonted equilibrium, it must consider itself, as having fulfilled the purpose it started with.

Indeed, no human institution can be perfect, and political machinery being of human construction more or less, cannot choose but exhibit some faults. This is remarkably the case with some Governments, and less perceptibly with others. At all events, even when the most serious interests are threatened, human beings should not be slack of evincing a spirit of sincere respect for political order. If this be so, it would be nothing short of a heinous crime, to disturb it when flimsy matters are involved or when no such cause exists. If it is a fact that there is discontent in India, menancing the present political stability to which it has attained, thanks to the British rule, in all sincerity it may be believed, that it arises more or less out of small, unimportant matters or practically nothing—it may be merely because of sentiment and hot-headed fantasy. Under such circumstances, one would entertain no doubt about the soundness of the view, that calls any action proceeding from such discontent as a sin against God and man. If the Unseen Power, as all philosophers agree in saying, arrests the progress of a cause merely on the ground that the method pursued by its up holders is sinful, in all safe reason, it should hold in greater detestation indeed, any attempt essentially unrighteous in aim. And that the very idea of rising against such paternal, all-gracious rulers as the British whom God Almighty, in his ineffable mercy, has sent to rule over us is thoroughly unrighteous, no man can entertain the least scepticism about.

For, if the reader should demand, why this is asserted, as if without the least fear that it would be challenged, he may be asked to contrast, with a careful eye, the state of things he observes around him, with that which the pages of Indian history show him to have prevailed, in the past. Any sincere heart really loving its brethern and its motherland, will prostrate itself in dumb gratitude and pour tears of thankfulness to God Almighty, for His grace in sending it such blessings as it sees around it, and—not less surely to the agents, He has chosen to execute His purpose through. And what may the blessings be, that our friend's eye detects to have come over him recently?

First, we have to speak of the security, which person and property are almost guaranteed at present. To be sure, human ambitions are many and various, they are worthy and otherwise, they vary in intensity, sometimes they are successful and at other times, not.



But this much is common between them, that they are at first, in the minds of men that is, founded on hopes the fulfilment of some of which is explicitly thought of and prayed for, others, whose fulfilment is tacitly counted on, as a matter of course. Assuredly, the hope respecting the security of the person of a man, occurs in the second category, but none the less is the fulfilment thereof, among the most important conditions, which put a limit to the realization of ambitious ends. You must have your wall, saith the proverb, before you think of drawing a beautiful figure thereon—and similarly, you must be able to count upon your existence, before your thoughts soar to ambitious heights. Certainly, there have been ambitious men and plenty of opportunities for them, in the past in India, but the fact remains that many of their projects came to grief, merely because this condition was not fulfilled. Often, in the engrossing pursuit of their ends, they fell, fell for ever—by the hand of an assassin it might be, or a turn of royal caprice or, owing to the operation of one of one thousand and one causes, it does not matter which. Really indeed, the importance of this requisite of a community cannot be gauged: but, this just a trace of an attempt to shadow its outlines, is sufficient for the purposes which it aims at. Next to security of person comes that of property. Laws of physiology are more or less immutable, and if you are not sure of obtaining your necessaries, at the proper time, you must count yourself as good as dead. And, it is not a solitary instance in the annals of India, that a storm of marauders alighted on villages and if it did not deluge them with blood, it at least swept away from the vicinity, everything that belonged to the villagers, thus causing intolerable misery. A popular Sanskrit dramatis prefers death to poverty, because, he says, the latter scorches us without consuming us and ending the matter there: and it is not one of the least pitiable forms of misery, to have your very food knocked out of your hand, while you are about to raise it to your lips. And it was not once, or rarely, every moment the danger was imminent, and while the actual danger was absent, its oppressiveness was imagined in its dire outline. And there was no judge, let it be understood, to hear the complaints of the innocent villagers. Indeed, no complaints of the sort were even thought of, because it was a known fact, that justice would not be rendered. In those days, surely, the prayer "Give us Oh! Lord! our

While the bench is given the veneration it deserves, appeals lie from Subordinate Courts to superior authorities. Accused persons are given all opportunities of establishing their innocence, and all attempts have been made to render legal advice accessible to all. Thus, to have constructed an efficiently organised judicial system calculated to meet the needs evolved by modern conditions, to work the system in the interests of justice, and in the cause of the oppressed, to have produced peace and order, to have ensured security to person and property, to have also evolved a set of legal codes to assist people in their daily life—all these are titles of the British to glory all their own—nay, the claims of the British to our eternal gratitude.

Next come, in the order of importance, the genuine attempts made by the British, to bring us abreast of the world, on its road to civilisation. And first among these comes the liberal education which British rule has brought to us. It is not merely the concrete facts that university education is given us that is important, but the spirit, underlying this system of education. There is an honest attempt, to impart to us, all the knowledge that the civilised world is in possession of, and this is dictated by a sympathetic desire on their part, to give us real edification and set us on our progressive march. Here again, our religious susceptibilities are duly respected. The conquest by Britain of India, on the whole, is less physical than mental and moral. To redeem us from some of our vulgar errors if possible, to widen the scope of our sympathy, to impart to us nobility, a self-sacrificing spirit and large-mindedness, to set us thinking, to arouse our attention to the brilliant past we had, to make us emulate the other nations of the world, to reclaim the Indian genius, in short, from the stupor it has gone into and make it contribute its mite to the progress of the world in general—these are the purposes aimed at, and the fulness of time will certainly testify to the sincerity and greatness of their aspirations, and the efficacy of the means, if the system begun with, is allowed to run its course.

There is no need to explain or illustrate, in detail, these statements. They are too obvious to require any but the most cursory notice. But this subject has another aspect, which one must make a brief mention of. This University Education, apart from elevating our minds in the direction indicated, opens up avenues to high employment and distinction, besides furnishing us with the loaves and fishes of office. Such persons as come to the first rank, have everything in their power to improve the state of their country, and their people, and this influence is cumulative. Wealth, indeed, is a low end in life, taken in itself; but so long as man remains what he is, it cannot choose but hold forth a charm for him, and in spite of the obscure musings of philosophers, it has got a function of its own to discharge in social life. Mostly, with the purpose of improving the economic position of the country and its people, is technical education given us by the Government, and encouraged by it, when private agency takes the initiative. The liberal professions are fed from colleges, maintained by Government or otherwise encouraged by it.

All these merit the thankfulness, that any true heart, under the most favourable circumstances, can render to the author of its weal. And the sympathetic spirit of our rulers, wedded to our affection for them tendered in reverent gratitude, so common with Hindus, would make, if uncrossed by adverse fate, or perverse mischief, a moral tie which would bring east and west together, in a happy bond of mutual esteem on which both may congratulate themselves; for such an end would be blissful to both the parties, and the fact that the mission of England in India is noble, will naturally invoke the blessings of the Deity on the union of the hearts of both, and will probably in time, work out a state of affairs, when Eastern and Western Civilisations will pour their waters into the same channel, each correcting the other's faults, and each filling up the space left vacant by the other. But, if on the other hand, India [illegible] receive the hand, proferred by the British in friendship [illegible] scorn, or evince any attitude towards it but one of heartfelt thankfulness, then woe for India! To rise against British rule—a fine way of manifesting our gratitude *that* will be!—something in the style Bhasmasura, who it is related, subjected himself to a severe penance, in order to obtain the grace of Lord Siva, and when his invocation had been answered, he besought the Lord to impart to his hand the power of burning to ashes, all those whose heads he chose to light it upon. When the Lord had granted him his request, (out of sheer curiosity, it might be), lo! the very first business the votary thought of setting to himself, was to try to have the efficacy of the boon proved on Siva's head; and he had well nigh touched the sacred temples, with his profane hand, when the third eye of the Lord burst open, and

the lurid flame emitted from it, left no trace of him, but a heap of charred dust. If we imitate Bhasmasura let us know we would be doing it, at our peril. It is thousand chances that we shall come to grief, as he did. The British people should be understood in both their aspects. Grace, certainly, they have quite an abundance of, and it is almost impossible, to pay in words, a fitting tribute to their magnanimity, in striving to elevate us from the depths of degradation and bondage (physical, mental and moral), which we had sunk into : but we must clearly understand, that this is no conciliatory attitude borne towards us, in order to cheat us into submission. They proffer us the hand of friendship with due love for us, and in proper consideration of our welfare : but if it be received with suspicion or cold reserve, then woe to us ! It is not because that they cannot " awe us into quiescence ", that they follow this milder policy, but if our bearing gives them the least room for provocation, it would not take them long, to make us feel the desolating effects of an unequal combat, (in which it is we, that would have to do with odds), once their might is let loose on us.

But, to resume our thread, it were vain to waste time, in trying to catalogue the advantages, which we have got, at the hands of our gracious rulers. There is not a nook or corner of our life, but it has felt, immediately or remotely, the lifegiving effects of British rule ; were it but to enforce this statement, the reader may be asked to glance at the posts, the telegraphs, the railways, the tramways, the vast irrigation works, the sanitary arrangements, the dispensaries, the projects of navigation and other facilities of trade, the comforts that sweeten domestic life like the gramophone and the photograph, and what not—all which advantages have accrued to us in the wake of British rule. In a word, it is they that, actuated by their noble ideas of generosity, are bringing us to a level with the rest of the world, on the high road to civilisation. It is not certainly one of the least notable facts of Indian History, that she was living her life of ' Splendid isolation ' in the past. If now, we can say, that the wall that stood betwixt our life and that of other peoples, has fallen down, no mean part of the credit attaching to this achievement, belongs to the British.

All this considered, it is something of a sacred duty resting on our shoulders to render our heartfelt gratitude to them, by signs, if



not in words. As to this, all varying shades of religious and philosophical doctrine, are at one, in urging us to manifest unspotted loyalty to our rulers, if indeed, it is no more than a trifling tribute to their generosity. But, let us suppose, that we may safely defy the dictates of our moral sense and religious duty, our delicate conscience and public opinion (opinion, that is, of the civilised, world) alike, suppose further that our failure to pursue the path pointed out by our sense of duty, will not be visited with the condign punishment it richly deserves, in the next world, is it safe or politic for us, to drive into the hostile camp, a nation (hitherto our affectionate rulers,) of whose might, her most persistant and implacable foes have tasted the bitter fruits ? If Dame Duty reprehends highly, the ideas propogated by the irresponsible and the light hearted, at present in India, what does her sister Prudence suggest ? Does she require us to plunge headlong, into hostile operations, against the British, setting at naught, the scruples of duty ? Not that any intelligent and rational being, with a penetrative vision and a cool judgment, can know of.

Much of tall talk relative to our national advancement, is prevalant now ; but it does not require the persistant exercise, of a man's ingenuity, to lay bare the essential hollowness of all such utterances. Speak of national advancement ! What means the term *nation* ? You must first explain *that*, before you sound your trumpet, to summon your patriots under your banner. It would not be too much to say, however sanctified, the idea denoted by the term *nation*, may be held to be in other parts of the world, that it cannot be appropriately applied to India, under the present conditions, without the sacrifice of a man's consistency or much of its meaning. In fact it is only, by a figure of speech, that the term *nation* may be made to siginfy India as at present situated. To justify the pretensions of an aggregated mass of people to be called a nation, certain tests have to be satisfied, and India thus tested, is found wanting. Platform orators have never wearied of painting the past of the land of the Hindus, in glowing and picturesque colours, and they have this much of justification, that their praise is greatly deserved. Still, they cannot evade the rather perplexing question " never mind what you were ten centuries ago but what *are* you now ? " *This* is the more important of the two, and an investigation of it, does not give the most encouraging of answers,

indeed, the answer to the question, does not freeze his hopes, completely to the source.

It is an awkward fact—that shirk, as any sensitive Hindu will, he has to admit—that either, owing to the unchecked operation of evil principles in our nature, or owing to the continued existence of greatly trying difficulties beyond our control, the better part of our nature has partially denied itself, and the virtues that the ancient Aryans could boast of, have at least sunk into a deep sleep. To go to details, at present, feelings of self-interest, sordid greed, jealousy and envy are no infrequent inhabitants of an average un-educated Hindu's heart, and all these tend to exclude from their haunts, more worthy feelings; and to rise above considerations of the sort indicated, to those arising from disinteretsed ideas, relative to the welfare of the community, is possible only in the case of a few. It is not meant that men belonging to other races, are perfect—for were this so, it would be time to repeal all penal laws now in force—only, whereas in other cases, the defects of ordinary human nature, have been partly removed, by education and the force of a common sentiment, they manifest themselves a little too prominently here, owing to want of education at present and owing to the existence, at our back, of centuries of misrule and confusion. Added to this, is the fact that, while the ancient Hindus cultivated their taste, for spiritual enquiry and philosophical speculation, they neglected such temporal and tangible matters, such as political advancement; and as a consequence, the sturdy virtues called for, from a nation, by the exigencies of politics, have had no opportunity to develop here. Such being the case, no common sentiment has arisen in the minds of the Hindus; and the patriot will have to create a nation, out of the mass of people he belongs to, before he could embark it, on the struggle for political freedom. This is almost a gigantic task; the subjective sentiment that must precede the formation of a nation, is the complex result of the operation of a variety of forces (*e.g.*, community of race, religion, language, traditions, prejudices and so on), under the subtle influence of time. Proceeding upon this truth emphasised by Political Science, one could easily understand that the formation of an Indian nation, may be safely posted to at least 5000 A.D., for, not one of the forces noted, can be seen to be actively operative now. Nations are not



usually made in a day, and if this is true always and under all conditions, it is still more true of India as it exists.

Such rays of national consciousness, as do relieve the otherwise total gloom, are of the begetting of the Western Education, given us by our rulers. The tender fibrils of Nationality, now traceable in India, will need, many a year of delicate nursing and unremitting attention, before they grow up into a large tree, with wide-spread branch and tasselled flower; and much of this work, will have to come from our rulers.

Or, if we have not, in the least degree, the national sentiment, whose moral force is sufficient to make a breach, in any the strongest rampart, have we got material resources, which can be reckoned on by a scheming patriot, and which can be looked to, to compensate, for the lack of this vital motive force of national sentiment. Here too, we get the same dismal answer. Not only do we lack in material resources, but we are dealing with a people, who hold the premiership in war, whether on sea or on land. The sun never sets in the British Empire, and we would have probably, to encounter a concentrated onslaught of nearly half the strength of the world, if we proceed against them. They are in the van of scientific progress, and have a marvellous power, of using modern scientific inventions, to promote their national strength. And we—whose knowledge of modern science, in its applications, is of the crudest—whose smiths take, not less than three days, to make a single pin—whose superstitious prejudices and worn out customs manifest a startling vitality, thus preventing us, from deriving the advaantages, which modern civilization has opened up, to other nations—whose physical detoriora-tion has become a by-word, and is still debating whether to stop or no—in short who stand disqualified, from engaging in any martial enterprise, by every physical test—are *we* to rise against such a redoubtable power as Britain, and not end in total annihilation? Let us beware!—if we persist in entertaining intentions, hostile to the British, we should be committing national suicide.

When Duty and Prudence suggest the same course, it is idle to think of the alternativeidle, that is, if we have the least interest, in the development of our nationality. Let us not spurn the dictates of duty and the counsels of prudence. Let us be loyal to the British Raj, heartily and fully—at any rate, for having brought to us untold blessings, and let us rely on it for the regeneration of our land. The

latter will surely come about, if only we take care, we do not disturb our rulers, in the carrying out of their divine mission in our land. The British will make us fit to share, in the Government of our land, and then, give us Self-Govermen*. That their ideas are thoroughly liberal and generous, the recent measures of our great Secretary of State, have given us an additional proof of, if indeed, such were needed. Our just demands will be conceded, if we wait patiently. Hence, let us be loyal to the British, loyal to the core and then God and our no less gracious rulers, will take care to elevate our land, to its deserved height.

K. R. KRISHNAMA CHARI.

---



H. E. THE RIGHT HON'BLE SIR ARTHUR LAWLEY, K.C.M.G., G.C.I.E.,

மாட்சிமைதங்கிய அதிகனம். ஸர். ஆர்தர் லாலி, கே.ஸி.எம்.ஜி.,ஜி.ஸி.ஐ.இ.

சென்னை கவர்னர் அவர்கள்.



**THE HON'BLE SIR C. ARNOLD WHITE, KT., CHIEF JUSTICE.**

கனம். ஸர். ச்சார்லேஸ் ஆர்நால்ட் ஒயிட், நைட், சென்னை ஹைர்கோர்ட்டு பிரதான ஜட்ஜி.

7 - APR 1909
MADRAS.

# அத்தியாயம் 1.

## கிரிமினல் சட்டம் உண்டுபண்ணியிருப்பதின் நோக்கம்.

துஷ்டர்களை அடக்குவது.

கடவுளுடைய அருளினால் அரசர்களாயிருப்பவர்கள் நீதி தவறாமல் ராச்சிய பரிபாலனஞ் செய்வதற்கும், தங்கள் ராச்சியங்கள் விஷயத்திலாவது அல்லது தங்கள் ஸம்ரக்ஷணையிலிருக்கும் பிரஜைகள் விஷயத்திலாவது கொடிய அன்னிய அரசர்கள் அல்லது அன்னிய ராச்சியங்களிலிருக்கும் மற்றத்துஷ்டர்கள் பிரவேசித்து அக்கிரமச் செய்கைகளைச் செய்ய வொட்டாது பாதுகாப்பதற்கும், ஸாம, தான, பேத, தண்டமென்னும் சதுர்வித உபாயங்களையும் பிரயோகிக்கவேண்டியது அவசியமாகவிருக்கிறது. துஷ்டநிக்கிரகஞ் செய்வதும் சிஷ்டபரிபாலனஞ்செய்வதும் அரசர்களுடைய முக்கியமான கடமைகளாக ஏற்பட்டிருக்கிறது. இந்தக்கடமைகளில் துஷ்டநிக்கிரகஞ் செய்வது அத்தியாவசியமானது. துஷ்டநிக்கிரகமென்பது துஷ்டர்களை அடக்குவதுதான். துஷ்டர்களென்றால், மூர்க்கரென்று மாத்திரம் அர்த்தமல்ல. நியாயமான சங்கதிகளைச்செய்யாமல் அநியாயமான சங்கதிகளைச் செய்பவர்கள் தான் துஷ்டர்கள். தங்கள் விஷயமாய் மற்றவர்கள் எந்தச்செய்கையைச்செய்தால் தங்களுடைய மனசுக்கு வருத்தமுண்டாகுமோ அப்பேர்ப்பட்ட செய்கையைக் கொஞ்சமும் யோசியாது பிறர் விஷயமாய்ச்செய்பவர்களே துஷ்டர்களாவார்கள்.

குற்றஞ் செய்தவர்களை உடனே தண்டிக்க ஜனங்கள்விரும்புவது.

2. ஒருவன் எவ்வளவு நல்ல சுவபாவத்தையும் குணங்களையுமுடையவனாகவிருந்தாலுமே, தன்னுடைய பொருள்களில் எதையும் தன்னுடைய அனுமதியாவது சம்மதமாவதில்லாமல் அன்னியர்கள் யாரும் கொண்டுபோகச் சம்மதிக்கமாட்டான். அப்படியே கொண்டுபோய்விட்டால், கொண்டுபோகப்பட்ட பொருளின் கிரயத்திற்கும், உபயோகத்திற்குந் தக்கபடி ஓயாத மனவருத்தமும் கொண்டுபோனவனிடத்தில் அடங்காத கோபமும் உண்டாவது மனிதர்களின் இயற்கையான சுவபாவமாகவிருந்துகொண்டிருக்கிறது. ஒருவனுக்குப்பாத்தியமுள்ள ஒரு அசையும் பொருளை அந்தப் பொருள் விஷயத்தில் யாதொரு எவ்விதப் பாத்தியதையுமில்லாத மற்றொருவன், பொருளுக்குச் சொந்தக்காரனுடைய சம்மதம் அல்லது அனுமதியில்லாமலாவது அல்லது அவனுக்குத் தெரியாமலாவது கொண்டுபோய்விடுவானேயாகில் அது திருட்டென்று சொல்லப்படும். இந்தவிதமாக ஒருவன் பொருளை மற்றொருவன் திருடிக்கொண்டு போய்விட்டால், பொருளுக்குடையவன், தன் பொருளைத் திருடன் கொண்டுபோகும்பொழுது தான் கண்டிருந்தால் அவன் உயிருடன்பிழைத்துப்போயிருப்பானோ, தன் கண்ணில்ப் படாமல் அநியாயமாகத்தப்பிப்போய்விட்டானே யென்று சொல்லிப் புலம்புகிறான். தன் பொருளைத் திருடன் திருடிக்கொண்டு போகையில் அவனைக் கண்டுபிடியாவிட்டாலும், பின்னீடாகிலும் துப்புத் துலக்கி, ஸாத்தியப்

பட்டால் தன் பொருளையுங் கண்டுபிடித்து, எப்படியாவது திருடிக்கொண்டு போனவனை ஜெயிலுக்கு அனுப்பிவிடவேண்டுமென்று நினைக்கிறான். மேலும் திருட்டுப்போன தன் பொருள் தனக்குத்திரும்பக்கிடைத்தாலுமே கிடைக்காவிட்டாலுமே, திருடிக்கொண்டுபோனவனை ஜெயிலுக்கு அனுப்பித்தீரவேண்டுமென்று நினைப்பது திருட்டுக்கொடுக்கும் பெரும்பான்மையோரின் கொள்கையாக யிருந்துகொண்டிருக்கிறது.

துஷ்டர்களை அடக்குவதற்காககிரிமினல் கோர்ட்டுகளேற்படுத்தியிருப்பது.

3. உலக இயற்கையிப்படியிருக்க, பிறர்பொருள்களைச்சிலர் தாராளமாகத் திருடுகிறார்கள். அல்லாமலும், தன் வீட்டு ஸ்திரீகளை அன்னிய புருஷர்கள் கண்ணெடுத்துப் பார்த்துவிட்டால், அப்படிப் பார்த்தவர்கள் மேரில் யாருக்குங் கோபம் வந்துவிடுகிறது. இவ்விதம் யாருக்குக்கோபம் வரு கிறதோ அவர்களிலேயே சிலர் பிறருடைய ஸ்திரீகள் விஷயமாய்ச்செய்யும் அக்கிரமச்செய்கைகளைச்சொல்லி முடியாது. தன்னை ஒருவன் மோசஞ்செய்து விட்டால், மோசஞ் செய்தவனிடம், மோசஞ் செய்யப்பட்டவனுக்கு வரும் கோபத்துக்கு எல்லை கிடையாது. பிறரால் மோசஞ் செய்யப்பட்டவர்களே, தன்னை மோசஞ் செய்யாத வேறு சிலரை மோசஞ் செய்துவிடுகிறார்கள். இவைபோலொத்த அநேகக் குற்றச்செய்கைகளில் எதையும் கூசாது மனந் துணிந்து செய்பவர்கள் தான் துஷ்டர்களெனப்படுவார்கள். இப்பேர்ப் பட்ட துஷ்டர்களை நிக்கிரகஞ் செய்து (அடக்கி) சிஷ்டர்களைப்பரிபாலனம், செய்யும்பொருட்டே (அதாவது யோக்கியர்களுடைய சரீரம் உயிர் முதலியவற்றையும் பொருளையுங் காப்பாற்றிக்கொடுப்பது) கிரிமினல்ச் சட்டங்களும் கிரிமினல்க் கோர்ட்டுகளும் போலீஸ் இலாகாவும் (Police Department) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

குற்றச் செய்கைகளுக்கு கிரிமினல் கோர்ட்டுகளில் பரிகாரம் பெற்றுக்கொள்ளும்படி யேற்பாடு செய்திருப்பதின் காரணங்கள்.

4. குற்றச்செய்கைகளால் ஏற்படுகிற சகல கஷ்டநஷ்டங்களுக்கும் ஸிவில்க் கோர்ட்டுகளில் வியாச்சியஞ்செய்து பரிகாரம் பெற்றுக்கொள்ளக் கூடுமென்று டார்ட்ஸ் (Law of Torts) என்னும் சட்டத்தினால் யாவருக்குந் தெரியவரும். அப்படிக்கிருக்க குற்றச்செய்கைகளை அடக்கும்பொருட்டு, கிரிமினல்ச் சட்டங்களும் கிரிமினல்க் கோர்ட்டுகளும் ஏற்படுத்தி யிருப்பதன் கருத்தென்னவென்று தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாக யிருக்கிறது. கொடிய செய்கைகளை பிறர் விஷயமாக மனந்துணிந்து செய்யுந் தன்மையுள்ள கடினமான மனதையுடைய துஷ்டர்களை, ஸாம-தான-பேத, தண்டமென்னும் சதுர்வித உபாயங்களில் தண்டமென்னும் நான்காவது உபாயத்தினால் தான் அடக்கமுடியும். ஒருவருக்கு முள் தைத்துவிட்டால், அந்த முள்ளை, எப்படி அந்த முள்ளைப்பார்க்கிலும் அதிகக்கூர்மையும் பலமுமான ஊசியைக்கொண்டு அல்லது முள் வாங்கியைக்கொண்டு எடுக்கிறோமோ அதுபோல துஷ்டர்களை அவர்களைப்பார்க்கிலும் அதிகக்கடினமான சித்தத்துடன் சிக்ஷை செய்வதின் மூலமாகத்தான் அடக்கமுடியும். இது சங்கதியை உத்தேசித்தே "அடி உதவுகிறாப்போல் அண்ணன் தம்பியும் உதவமாட்டான்," "அடியாதமாடு பணியாது," "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமென்பார்கள்," என்ற பழமொழிகள் ஏற்பட்டிருக்கிறாப்போலிருக்கிறது. நாகரீகமில்லாத பூர்வகாலத்தில், ஒருவனுடைய பல்லை மற்றொருவன் வேணுமென்று அக்கிரமமாய் உடைத்த குற்றஞ் செய்துவிட்டால் அந்த மற்றொருவனுடைய பல்லைப்பிடுங்கிவிடும்படிக்கும், ஒருவனுடைய கண்ணை மற்றொருவன் வேணுமென்று குத்திவிட்டால் அந்த மற்றொருவனுடைய கண் விழியைப்பிடுங்கிவிடும்படிக்கும், ஒருவனுடைய உயிரை



மற்றொருவன் வாங்கிவிட்டால் அந்த மற்றொருவனுடைய உயிரையும் வாங்கிவிடும்படிக்கும் பழிக்குப்பழி வாங்குகிற தண்டனைகள் விதிக்கப்பட்டு வந்திருக்கிறது. மாட்சிமைதங்கிய நமது பிரிட்டிஷ் அரசாக்ஷியில் இப்பொழுது இந்தியன் பினல்கோடிலும் மற்றக் கிரிமினல்ச் சட்டங்களிலும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தண்டனையும் செய்யப்படுகிற குற்றத்தின் தன்மைக்கு இணக்கமாகவும் பூர்வகாலத்தில் பழிக்குப்பழி வாங்கித் தண்டனை விதித்துவந்ததாகிய வழக்கத்திற்கும் ஒத்துமை யாகவுமிருக்கிறது. இந்தியன் பினல்கோடிலும், பிறர் உயிரை மாய்த்துக் கொலை என்னுங் குற்றஞ் செய்தவனுக்கு மரண தண்டனையே விதிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவனை அக்கிரமமாகக் கைதட்டி அடிக்கப் போனவனுக்கு கிரிமினல்க் கோர்ட்டுகளில் இப்பொழுது அநுஷ்டானத்தில் சொற்ப அபராதந்தான் விதிக்கப்படுகிறது. ஒருவனுக்குக் கொடுந்துன்ப முண்டாக்கினவனுக்கு, காவல் தண்டனையும் அபராததண்டனையும் விதிக்கப்படுகிறது. ஒருவன் சொத்தைத்திருடினவனுக்கு, அபராததண்டனையாவது காவல் தண்டனையாவது அல்லது இரண்டு தண்டனையுமாவது விதிக்கப்படுகிறது. கட்டடம் நுழைந்து களவு செய்தவனுக்குக் காவல்தண்டனையும், அபராத தண்டனையும் விதிக்கப்படுகிறது. இப்பேர்ப்பட்ட கண்டிப்பான ஏற்பாடுகளடங்கிய சட்டதிட்டங்களினால், குற்றஞ் செய்தவர்களுக்குத் தக்கபடி தண்டனை விதித்து நிறைவேற்றிவரும்பொழுதே ஓயாமற் செய்யப்படுகிற குற்றச்செய்கைகளைப் பார்க்கும்பொழுது கண்டிதமான சட்டங்களும், கிரிமினல்க் கோர்ட்டுகளுமில்லாவிட்டால், ஒருவருடைய சரீரமும், பொருளும், உயிரும் பந்தோபஸ்தாக யிருக்கிறது [illegible] சந்தேகம். இவ்விதமாகத் தண்டனைசெய்து புத்தி [illegible] துஷ்டர்களுக்கு ஸிவில்க்கோர்ட்டுத்தீர்ப்பினால் யாதொரு புத்தியும் வரமாட்டாதென்றே கிரிமினல் சட்டங்களும் கிரிமினல்க் கோர்ட்டுகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அல்லாமலும் குற்றஞ் செய்தவனுக்குத் தண்டனை விதிக்கும் நோக்கமானது, அவன் அந்தப்படி குற்றச்செய்கையை [illegible] ஒருபொழுதுஞ் செய்யாதவிதமாய் அவனுக்குப்புத்தி வருத்தும்படிக்காகவும், அவனுக்கு விதிக்கப்படுகிற தண்டனையை மற்றவர்கள் பார்த்துப்பயந்து குற்றச்செய்கைகளைச் செய்யாமலிருக்கும்படி மற்றவர்களுக்கும் புத்தி வருத்தும்படிக்காகவுமிருக்கிறது.

5. இதுநிற்க, செய்யப்பட்ட குற்றச்செய்கைகளுக்கும் ஸிவில்க்கோர்ட்டிலேயே பரிகாரந் தேடிக்கொள்ளும்படி ஏற்படுத்தியிருந்தும் [illegible]மாகக் கிரிமினல்க் கோர்ட்டுகள் ஏற்படுத்தியிருப்பதற்கு [illegible] யிருக்கின்றன. ஸிவில் வியாச்சியங்களுக்கு வியாச்சியத்தின் [illegible] வியாச்சியமூலத்தின் பெருமான தொகையின் மதிப்புக்குத் தக்கபடி மவுண்டு என்னும் கோர்ட்டுக் கட்டணத்தை நூறு ரூபாய் வியாச்சியத்திற்கு ரூ 7-8-0 வீதம், வியாச்சியம் போடும்பொழுதே, முதலில் ஸ்டாம்பு ரூபமாகக் கட்டவேண்டியதாகயிருக்கிறது. பிரதிவாதி சம்மன்படி யென்றும், சாக்ஷி சம்மன் படியென்றும், வழிப்படி யென்றும், சாப்பாட்டுப்படி யென்றும், கமிஷன் பீஸ் யென்றும் பலவாறான செலவுகள் ஸிவில்க்கேசுகளில் ஏற்படுகிறது. மேலும் ஸிவில்க்கேசுகளில் ஒழுங்குப்படிக்கும் சட்டப்படிக்கும் நடத்தவேண்டிய நடவடிக்கைகளெல்லாம் நடத்தி கேசுகள் பைசலாவதற்கு அநேகக் காலஞ் செல்லுகிறது. இவ்வாறு சங்கதிகளும், சொத்துகளின் விஷயமாய் தாயாதிக்காரர்களுக்குள்ளும், ஸமீப பந்துக்களுக்குள்ளும் வருகிற பாத்தியா

பாத்தியதை வழக்குகளுக்கும், கொடுக்கல் வாங்கல் வியாச்சியங்களுக்கும், மற்ற இச்சாமாத்திரமான சங்கதிகளில் நேரிட்டதாக நினைக்கிற நஷ்டங்களுக்குப் பரிஹாரம் கேழ்ப்பதுமான வியாச்சியங்களுக்கும் சரியாகயிருக்கும். இதேவிதமாக, ஒருவருடைய கற்புநிலைமை தவருத ஸ்திரீயை ஜோரா வலிசெய்து கற்புநிலைமை யழித்தவன்பேரிலும், ஒருவரை அக்கிரமமாக வழிமறித்து மண்டையை உடைத்து அவரிடத்திலிருந்த சொத்தையெல்லாம் பிடுங்கி வழிப்பறி செய்த ஒருவன்பேரிலும், ஒருவரைக் கொலைசெய்த ஒருவன்பேரிலும் ஸிவில் வியாச்சியஞ்செய்து பரிஹாரம் பெற்றுக்கொள்ளும்படி ஏற்பாடுசெய்திருந்தால் ஸிவில் வியாச்சியம் பைசல்செய்யப்படும் வரை குற்றஞ்செய்தவன் எங்கேயாவதுபோய் ஒளிந்துகொள்ளுவான். குற்றஞ்செய்ததாகச் சொல்லப்பட்டவனை உடனே விசாரியாமல் விட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்தின்பேரில் அதிசீக்கிரத்தில் நடவடிக்கை நடத்தப்படுகிறது. மேலும், தன் ஸம்ஸாரத்தின் கற்புநிலைமை அழிக்கப்பட்டு மனவருத்தத்துடனிருப்பவனையும், தன் ஸர்வ ஆஸ்திகளையும் பறிகொடுத்துவிட்டு வருத்தத்துடனிருப்பவனையும், உயிரைப் பறிகொடுத்ததினால் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற கொலைசெய்யப்பட்டவனுடைய பந்துக்களையும், மவுண்டுருத வியகோர்ட்டுக்கட்டணங்கள் சட்டச்சொல்வது நியாயமில்லையென்றும் நன்குணர்ந்து மாட்சிமைதங்கிய நமது கவர்ன்மெண்டாரவர்கள் அடியிற் சொல்லப்பட்டிருக்கிற முக்கியமான 2 - நோக்கங்களுடன், கிரிமினல் சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

(1) குற்றக்காரர்களுக்குக் கூடியமட்டிலும் சிரமமில்லாமல் குற்றத் தீர்ப்புகள் கிடைக்கவேண்டியது.

(2) கூடியவரையில் குறைந்தகாலத்திற்குள்ளும் செலவுக்குள்ளும் குற்றச் செய்கைகள் நடந்ததாகச் சொல்லப்பட்டதின் உண்மையைக் கண்டுபிடித்து நியாயம் செய்யவேண்டியது என்ற 2 நோக்கங்களுடன்.

நல்நீதி விசாரணை கூடியவரை [illegible]ல்லாமலும் துரிதமாயும் நடத்தப்பட வேண்டியதென்பது.

6. இந்த நோக்கங்களுக்கிணங்க, கிராம மாஜிஸ்திரேட்டுகளிடத்தில் எழுத்துமூலமாகத்தெரியப்படுத்தப்பட்ட குற்றசமாசாரத்தைக்குறித்த பிராதுகளுக்கு கோர்ட்டுபீசு லேபில் வேண்டியதில்லையென்றும், டை கிராம மாஜிஸ்திரேட்டார்முன் விசாரணைசெய்யப்படும் கேசுகளில் எதிரி, சாட்சிகள் இவர்களை சம்மன் செய்து வருத்துவதற்குப்படிமுதலியது கட்டவேண்டியதில்லையென்றும், போலீசாரிடமும் எழுத்துமூலமாகத் தெரியப்படுத்தப்பட்ட குற்றசமாசாரப் பிராதுகளுக்கும் கோர்ட்டுபீசு லேபில் ஒட்டவேண்டியதில்லையென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (1870ம்-ளுத்து 7-வது ஆக்ட்டாகிய கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு, 18 - வது பிரிவு, 16 - வது உட்பிரிவைப் பார்க்க.) போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடியதென்று, 1898ம்-ளுத்திய 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீடியூர் கோடின் 2-வது ஷெடியூலின் 3-வது கலத்தில்க் கண்டவும், அதற்கு நேர் 2-வது கலத்தில் இன்ன குற்றமென்று விவரிக்கப்பட்டிருக்கிறவும், 1-வது கலத்தில் அது இன்னபிரிவென்று சொல்லப்பட்டிருக்கிறதுமான கேசுகளுக்கு எதிரிகளுக்காவது வாதிபக்கம், எதிரி பக்கம் சாக்ஷிகளுக்காவது, சம்மன், வாறண்டு, முதலியது பிறப்பிவிப்பதற்கு வேண்டிய படி கட்டவேண்டியதில்லையென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு 31-வது பிரிவைப்பார்க்க.)

வாறண்டு கேசுகளிலும், எதிரிகள், வாதிபக்கம் சாக்ஷிகள், எதிரிபக்கம் சாக்ஷிகள், இவர்களுக்கு சம்மன் வாறண்டு முதலியதுகள் பிறப்பிவிக்கப் படி கட்டவேண்டியதில்லை யென்று சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டாரவர்கள் உத்தரவுசெய்திருக்கிறார்கள்.



ஸம்மன் கேசுகள், வாறண்டு கேசுகள், போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடியகேசுகள், வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாதகேசுகள், ஜாமீன் பேரில் விடக்கூடிய கேசுகள், விடக்கூடாத கேசுகள், இவைகள் இன்னின்னதென்பதைப்பற்றி இந்த அத்தியாயத்தின் கடாசியில் 18, 19, 20, 21, 22, 23-வது பாராக்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

கிரிமினல் பிராதுகளுக்கு ஸர்க்காரே வாதியாகவிருப்பதின் காரணம்.

7. பாவம் பழிக்கஞ்சாது ஒருவனைக் கொலைசெய்பவனும், ஒருவர் ஸ்திரீயின் கற்பை அழிப்பவனும், ஒருவனை மோசஞ் செய்பவனும், ஒருவனுடைய சொத்தைத் திருடுகிறவனும், இன்னும் ஒருவன் விஷயமாய் இப்பேர்ப்பட்ட எந்த அக்கிரமமான செய்கைகளையுஞ் செய்பவனும், சமயம் நேரிடும்போது எல்லார்விஷயமாயும் துஷ்டச்செய்கைகளைச் செய்வானென்பதில் சந்தேகமில்லை. இது காரணத்தினாலேயே, யாதாமொருவர் விஷயமாய் கொடிய செய்கைகளைச்செய்கிற அந்த துஷ்டனை, அசேஷ ஜனங்களும், தங்கள் விஷயத்திலேயே அவன் குற்றச்செய்கைகளைச் செய்ததாக எண்ணி அவனைத் தண்டனைக்குக் கொண்டுவருவதற்கு வேண்டும் முயற்சை செய்வது உலக இயற்கையாகயிருந்து கொண்டிருக்கிறது. பிரஜைகளுடைய உயிர்களையும், சொத்துக்களையும் தங்களுடையதாகப் பாவித்து நீதியுடன் அரசுபுரிந்து வருகிற ராஜாங்கத்தார் தங்கள் பிரஜைகளில் யாருக்கும் தீங்கு செய்கிற துஷ்டர்களைத் தங்களுக்கே நேரில்த் தீங்குசெய்தவர்களாக எண்ணி அவர்களைத் தகுந்த தண்டனைக்குக்கொண்டுவருவது தங்கள் கடமை யென்று நினைத்து எல்லாக்கிரிமினல் கேசுகளிலும் தாங்களே வாதியாகயிருந்துகொண்டிருக்கிறார்கள். ஸிவில் கேசுகளில் கக்ஷிக்காரர்கள் தங்களுக்குள் சமாதானமாகப்போகவும், சமாதானமாகப்போய்விட்டால் வியாச்சியத்தை நிறுத்திக்கொள்ளவும் பாத்தியதை கக்ஷிக்காரர்களுக்குண்டு. கிரிமினல் கேசுகளில் பிராதுகளை அவ்விதம் நிறுத்திக்கொள்ளும் பாத்தியதை அநேகமாய் எல்லாக்கேசுகளிலும் ராஜாங்கத்தாருக்கு இருக்கிறதே யல்லது கக்ஷிக்காரர்களுக்கில்லை. இதை உத்தேசித்தே வாறண்டு கேசுகளில் பிராதை நிறுத்திக்கொள்ளுவதற்கு யாதொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. சம்மன் கேசுகளில் பிராதை நிறுத்திக்கொள்ளுகிறதற்கு, கி. பு. கோடு 248-வது பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், கேசை நிறுத்திக்கொள்ளுவதற்குப் போதுமான முகாந்தரங்களிருப்பதாக, மாஜிஸ்திரேட்டைத் திருப்திசெய்து அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டு தான் கேசை நிறுத்திக்கொள்ளலாமென்று கண்டிப்பான நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கிரிமினல் கோடிலுள்ள மொத்தம் 511 பிரிவுகளில், 361 பிரிவுகள் குற்றங்களுக்குத்தண்டனை விதிக்கும் பிரிவுகளாகயிருக்கின்றன. இந்த 361 பிரிவுகளில் அடியில்க் குறிப்பிட்டிருக்கிற 23-பிரிவுகளில்க்கண்ட குற்றங்களுக்காகச் செய்யப்படும் பிராதுகள்மட்டுந்தான் கோர்ட்டார் அனுமதியில்லாமலேயே ராஜியாய்ப்போகக்கூடியதென்று கி. பு. கோடு 345-வது பிரிவினால் தெரிகிறது. அவைகளின்னதென்பதை இந்த அத்தியாயத்தின் கடாசியில் 16-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது.

8. மாட்சிமை தங்கிய ஆங்கிலேய அரசாட்சியின் பெருமையானது, "Prevention is Better than Cure," என்னும் பழமொழியை, அதாவது, ஒரு வியாதி, அல்லது ஒரு கெடுதலான சங்கதி, அல்லது சங்கடம் நேர்ந்து

விட்ட பிறகு அதற்குப்பரிஹாரம் தேடுவதைப் பார்க்கிலும் அப்பேர்ப்பட்ட சங்கதி நேரிடாமலேயே யிருக்கும்படி தடுக்கக்கூடிய முன் உபாயங்களைத் தேடிக்கொள்வது நலம் என்னும் பழமொழியைக் கைக்கொண்டு அரசர்களுக் குரிய சதுர்வித உபாயத்தோடு ராஜ்யத்தையும் பிரஜைகளையுங் காப்பாற்று வருவதில்த் தானிருக்கிறது. இது கொள்கையைக் கைக்கொண்டு ஒருகுற்றஞ், செய்தவனுக்கு அவன் செய்த குற்றத்தின் தன்மைக்கும் அவன் அந்தக்குற்றத் தைச்செய்தவிதம் சந்தர்ப்பம் இவைகளுக்குத் தக்கபடி அந்தக்குற்றஞ்செய்த வன் மறுபடி ஒரு குற்றமுஞ் செய்யாமல் அவனுக்குப் புத்தி வரும்படியான மாதிரியாகவும், மற்றவர்கள் அவனுக்கு விதிக்கப்படுகிற தண்டனையைப் பார்த்து குற்றச்செய்கைகளைச்செய்யப் பயப்படும்படியான மாதிரியானவுமான தண்டனை விதிக்கப்படுகிறது. இந்தியன் பினல் கோடில், குற்றத்திற் குத்தக்கபடி தண்டனைகள் ஏற்படுத்தி யிருப்பது கூட அவ்வளவு பெரியதல்ல. அந்தத்தண்டனைகளை கண்டிப்பாகவும், விசாரணையாகவும் நிறை வேற்றுவதற்காகசெய்யப்பட்டிருக்கிற ஏற்பாடுகள் மிகவும் மெச்சத்தக்கதாக யிருக்கிறது. ஜெயில் தண்டனையை நிறைவேற்றும் விஷயமாய்ச் செய்யப் பட்டிருக்கும் 1900-ம் வருஷத்திய 3-வது ஆக்ட்டாகிய கைதிகள் ஆக்ட்டி னுடையவும், 1894-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்டாகிய ஜெயில் ஆக்ட்டினுடைய வும், ஜெயில் ஆக்ட்டுப்படி கவர்ன்மெண்டாரவர்களால் செய்யப்பட்டிருக்கிற விதிகளினுடையவும் ஏற்பாடுகளை நன்றாய்ப் படித்து ஆலோசித்துப்பார்க் கையில் மாட்சிமை தங்கிய நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்குப் பிரஜை கள் விஷயமாயிருக்கும் நல்லெண்ணமும், தமது பிரஜைகளை எவ்விதத்தி லாவது நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்கிற அபிப்பிராயமும் நன்கு விளங்கும்.

ஜெயில்தண்டனைக் கேற்பட்ட கஷ்டங்களிருந்தும் ஜெயில்கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதின் ஏற்பாடு.

9. ஜாதி, மதம், ஆசாரம், அனுஷ்டானம் இவைகளை அவரவர்களின் வர் ணாசிரம தர்மங்களின்படி மிகவும் கண்டிப்பாய்க் கவனித்துவந்த நமது ஹிந்து முன்னோர்களின் வம்சத்தைச்சேர்ந்தவர்களும், மற்றவர்களும் ஜெயில் ஆக்ட்டி ன்படி செய்யப்பட்டிருக்கிற விதிகளையும், ஜெயிலிலிருக்கும் கைதிகளால்ச் செய்யப்படும் குற்றங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற தண்டனைகளையும் படித்துப்பார்ப்பார்களேயாகில் ஜெயிலைப்பூலோக நரகமாயும், ஜெயிலில் வைக் கப்பட்டிருப்பவர்களை நரகானுபவஞ்செய்பவர்களாயும் மதிக்கவேண்டியதாக யேயிருக்கும். இவ்வளவு இழிவாகஜெயிலிலிருப்பவர்களை நரகானுபவஞ் செய் கிறவர்களென்று சொல்லக்காரணமென்ன? அவர்களுக்கு ஜெயிலென்னு மிடத்தில், காற்று, மழை, வெய்யில் முதலியவைகளிலிருந்து அவர்கள் தேகத்தைக் காப்பாற்றக்கூடிய கட்டடங்கள் இல்லையாவென்று கேழ்க்கக் கூடும். ஜெயில் தண்டனையை அனுபவிப்பவர்களில் பெரும்பான்மை யோருக்கு அவரவர்கள் சொந்தக்கிராமத்தில், சிலருக்குச்சிறியகுடிசைகளும், சிலருக்கு மச்சுக்கட்டடமென்று பெயர் மட்டும் பூண்டு வியாதியையே விளை விக்கக்கூடியு இடத்தில் கொஞ்சமும் காற்றோட்ட மில்லாதவும், [illegible] முதலியவைகளும் எலி முதலிய பாதககரமான அநேக ஜந்துக்கள் நிறைந் திருக்கும் வீடுகள்தானிருக்கும். ஆனால் ஜெயிலென்னும் இடமோ வென்றால், அதிகமாய் ஜனங்கள் வசிக்கும் வீடுகளை விட்டுப்போதுமான மட்டில் விலகிய தாயும், நல்ல காற்றுள்ளதாயுமுள்ள இடத்தில், வைத்திய சாஸ்திரப்படி தேக சுகத்துக்குரிய சங்கதிகளை எல்லாம் கவனித்து, வெயில், மழை, பனி, காற்றுக் காலங்களிலும் யாதொரு கஷ்டமுமின்றி வசிக்கும்படியான முதல் தரமான கட்டடங்கள் கட்டப்பட்டு, அவைகளிலாவது அவைகளின் பக்கங்களிலாவது,



யாதொரு அழுக்கு, தூசி, குப்பை, ஈரம் முதலியது யாதொன்று மில்லாமல் பிரதிதினம் சுத்தி செய்யப்பட்டு வரப்பட்ட நேர்த்தியான கட்ட மாகயிருக்கிறது.

கைதிகளுக் கும் கொடுக்கப்படுகிற ஆகாரம் ஜலம் இவைகளைப் பற்றி.

10. வசிப்பதற்கு இடத்திற்குக்குறைவில்லை, சாப்பிட ஆகாரத்திற்கும், குடிக்குந் தண்ணீருக்கும் குறைவுண்டோ வென்றால், அதுவும் கிடையாது. உத்தமமான ஜாதி, வம்சம் இவைகளில் ஜனித்து நற்குண நற்செய்கையுள்ள வர்களோடு பழகினவர்களாவது சரியான ஐவேசுள்ளவர்களாவது சாதாரண மாக ஜெயிலுக்குப்போகிறதில்லை. இப்பேர்ப்பட்டவர்களில் அபூர்வமான சிலர் தங்கள் ஊழ்வினையின் [illegible]தாவசத்தால், மட்டுக்கு மிஞ்சின காமாதுர மான செய்கைகள் சம்மந்தமான குற்றங்களுக்காகவும், மட்டுக்கு மிஞ்சின அகங்காரத்தினாலும் கோபத்தினாலும் செய்யப்படும் குற்றச்செய்கைகளுக் காகவும்தண்டிக்கப்பட்டு ஜெயிலுக்கு அனுப்பப்படுகிறார்கள். ஜெயிலிலிருப்ப வர்களில் பெரும்பான்மையோர் சாதாரணமானவும் தணிந்தவுமான நிலைமையி லுள்ளவர்களாகவேயே யிருக்கிறார்கள். இவர்களிலனேகர் தங்கள் வீடுகளி லிருக்கும் காலத்தில், விடிந்து எழுந்திருந்த உடன் அவரவர்களுக்கிருக்கும் வேலைகளைப்பார்த்துவிட்டு ஆகாரம் கிடைத்தபோது அல்லது தங்களுக்கு சௌகரியப்பட்டபோது தான் சாப்பிடுவார்கள். மிகவும் சிறிய கிராமங்களில் வசிக்கும் பிராம்மணர்கள் கூட, கம்பம்புல்லு, கேப்பை, சோளம், சாமை, முதலியதானியங்களையே தான் சாப்பாட்டுக்காக உபயோகப்படுத்துகிறார்கள். சிலருக்கு நெல்விளைந்தாலும் அதை விற்றுப்போடுகிறார்களே யல்லது தன் சொந்தச்சாப்பாட்டுக்கு உபயோகிக்கிறதில்லை. ஏனென்றால், நெல் அரிசிச் சாப்பாடு சிலர் தேஹத்திற்கு ஒத்துக்கொள்ளுகிறதில்லை. சிலருக்கு நெல் சாப்பாடு சாப்பிட்டால் தேகம் பலங்குறைந்து மெலிந்து விடுகிறது. ஆகை யால் கிராமந்தரங்களில் வசிப்பவர்கள் நெல் தவிர மற்றத்தானியங்களையே சாப்பாட்டுக்கு உபயோகிப்பவர்களாக யிருக்கிறார்கள். ஆகையால் ஜெயிலில் சாப்பாட்டுக்காக உபயோகப்படுத்தும் தானியங்களைப்பற்றிக் குறைவுசொல்ல இடமில்லை. ஜெயிலிலுள்ளவர்களுக்குப் பிரதிதினமும் காலை 7-மணிக்குள் காலைச் சாப்பாடும், 11-மணிக்கு பகல் சாப்பாடும், மாலை 5-மணி முதல் 5½-மணிக்குள் சாயங்காலச்சாப்பாடும் தவறாமல் சரியானபடி கொடுக்கப்பட்டு வருகிறது. குடிக்கும் தண்ணீரோவென்றால் அசுத்தமான வஸ்துக்கள் சேர மார்க்கமே யில்லாத மிகவும் சுத்தமான இடத்தில் வெட்டப்பட்டுப் பாதுகாத் துக்கொள்ளப்பட்ட கிணற்றிலிருந்து இறைக்கப்பட்ட சுத்தமான ஜலத்தை நன்றாய் வடிகட்டினதாகத்தானிருக்கிறது. ஆனால், ஜெயிலில் வைக்கப்பட் டிருப்பவர்கள் தங்கள் கிராமங்களிலிருக்கும் பொழுதோவென்றால் அசுத்தம் நிறைந்த ஏரிகளிலும், ஊரணிகளிலும், தெப்பக்குளங்களிலுமுள்ள கட்டுக் கிடையான ஜலத்தையே எவ்வகையிலும் சுத்தம் செய்யாமலேயே உபயோ கிப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் மேற்கண்ட சுத்தமான கிணற்று ஜலத் தையே தினமும் ஸ்நானபானங்களுக்கு உபயோகிக்கிறார்கள்.

கைதிகளுக்குக்கொடுக்கப்படுகிற வஸ்திரம்படுக்கை இவைகளைப் பற்றி.

11. வஸ்திரம், படுக்கை வகையராக்களில் குறைவுண்டோ வென்றால் அதுவுமில்லை. ஆண்பிள்ளைக் கைதிகளில் ஒவ்வொருவருக்கும் 4-வது அத்தி யாயத்தில் பிம்பம்போட்டு காட்டப்பட்டிருக்கிறபடி, ஒரு கட்டையான உடு ப்பு, கால்ச்சட்டை, குல்லா, லங்கோட்டி (கோவணம்) இவைகள் சேர்ந்த ஜதை யொன்று 1[illegible] மாதத்திற்குக்குறைந்தகாலத்திற்குத்தண்டனையடைந்தவர்களுக்கும், மேற்கண்ட ஜதையில் இரண்டு அதற்கு மேற்பட்ட காலத்திற்கு தண்டனைப்

பட்டவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. ஆண்பிள்ளைக் கைதிகளுக்கு 1 புது உடுப்பும் குல்லாவும் 9 மாதத்திற்கு 1 தடவையும், 6 மாதத்திற்கு ஒரு தடவை 1 ஜோடு கால்ச்சட்டையும் கொடுக்கப்படுகிறது. பெண்பிள்ளைக் கைதிகள் ஒவ்வொருவருக்கும் 6 கஜ நீளத்தில் 1 கஜ அகலத்தில் 2. புடவைகள் 9 மாதத்திற்கு ஒரு தடவை கொடுக்கப்படுகிறது. மழைகாலம் பனிகாலத்தில், அதாவது அர்ப்பிசி மாதம் முதல் மாசி மாதம் வரை உபயோகிக்க வேண்டியதற்காக முழுவதும் ரோமத்தால் நெசவு செய்த துணியிலேயே தைக்கப்பட்ட உடுப்பும் கொடுக்கப்படுகிறது. கயிற்றினால் 8 அடி நீளம், 2½ அடி அகலத்தில் செய்யப்பட்ட பாய் 1-ம் கம்பளி 1-ம் படுக்கைக்காகக் கொடுக்கப்படுகிறது. பாயின் நீளம் 8 அடியிருப்பதின் காரணம், படுக்கைக்கு வேண்டிய நீளத்தை விரித்துக்கொண்டு பாக்கி நீளத்தைச் சுற்றி தலையணையாக வைத்துக்கொள்ள வேண்டியதற்காகத்தான். கைதிகள் கீழே தரையில் படுக்கவே கூடாது. செங்கல்லினாலும், மண்ணினாலும், 6 அடி நீளம், 2½ அடி அகலம், 9 அங்குல உயரத்தில் கட்டப்பட்டு, சிமிட்டிச்சுண்ணாம்பினால் பூசி ஸன்னமிடப்பட்ட திரணையில் ஒவ்வொரு கைதியும் தூங்கவேண்டியது. அதே திரணைகளிலேயே தலை சும்மாடுகளும் செங்கல்லினாலும் மண்ணினாலும் கட்டப்பட்டிருக்கும். இப்பேர்ப்பட்ட சும்மாடுகள் கட்டப்பட்டிருந்தால் 8 அடி நீளமுள்ள பாய்க்குப்பதில் 6 அடி நீளமுள்ள பாய் கொடுக்கப்படும். இந்தக்கைதிகளில் அநேகர் தங்களுடைய வீடுகளிலிருக்கும்போதோ வென்றால், தரையிலும் தங்கள் வீட்டுவாசல் தெருக்களிலும், விரிப்புமுதலியதுகள் யாதொன்றும் மில்லாமலும் உடம்பை பூராவாக மூடிக்கொள்ளுவதற்குக்கூடச் சரியான துணிகூட யில்லாமலும் படுப்பது வழக்கம்.

ஜெயிலில் கைதிகளுக்குவேலை ... படுத்தி ... பின் ... க்கம்.

12. பொழுது போக்குக்கும், தேகாப்பியாசத்திற்கும் வேலைக்குக் குறைவுண்டோ வென்றால் அதற்கும் குறைவில்லை. கிராமாந்தரங்களிலும் பட்டி தொட்டிகளிலுமுள்ள சாதாரண ஜனங்கள் தங்கள் சொந்தத்துக்காவது கூலிக்காவது நிலங்களை உழுவதிலும், பயிர்களுக்குக் கிணர்களிலிருந்து தண்ணீர் இறைப்பதிலும், குப்பை உரம் முதலியதுகளை நிலங்களுக்குச் சேர்ப்பதிலுமாக வேலைசெய்தே பொழுதுபோக்குகிறார்கள், ஆனால், ஜெயிலிலோவென்றால் பற்பலவகையான மிகவும் விநோதமும் உபயோகமுமான கைத்தொழில்களை கைதிகளுக்கு எளிதாகக்கற்பித்து வேலைவாங்குகிறார்கள். இப்படிச் செய்வதானது (1) கைதிகளைப் பந்தோபஸ்தாய் வைப்பதிலும், அவர்களுக்கு அன்னவஸ்திர முதலியது கொடுப்பதிலும் செலவாகும் பொருளுக்கு அவர்களைக்கொண்டே வேலைவாங்கி ஈடுசெய்யலா மென்றும் (2) கைதிகளுக்கு, மிகவும் உபயோகமுள்ள கைத்தொழில்களைக் கற்பித்துக்கொடுப்பதனால் அவர்கள் ஜெயிலிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பின் தாங்கள் ஜெயிலில் கற்றுக்கொண்ட விசேஷமான கைத்தொழில்களின் பெருமையைக்காட்டிச் சரியானபடி வேலைசெய்து நாணயமாய்க் காலக்ஷேபம் செய்வதில் நோக்கமாயிருப்பார்களே யல்லது, சம்பாத்தியஞ் செய்யும் வழி தெரிந்திருப்பதைவிட்டு மறுபடி குற்றச் செய்கைகளைச்செய்து ஜெயிலிற் போய்ச்சேரமாட்டார்களென்ற நோக்கங்களுடனுந்தான். ஜெயில்களில் ஏற்படுத்தியிருக்கும் கைத்தொழில்களைநன்றாக அபிவிருத்திசெய்து லாபகரமான விதமாய் நடத்துவதை உத்தேசித்தும், கைதிகள் அவரவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட வேலையில் தேர்ச்சியடையும் பொருட்டும், வேலையைச் சரியானபடிக் கற்றுக்கொண்டு திருப்திகரமாகச்செய்யாதவர்களுக்குஜயில் ரூல்களின்படிக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதண்டனை கிடைக்குமென்றும் வேலையில்...



சமர்த்தரென்று பெயர் வாங்கி வேலையை ஊக்கத்தோடு செய்தவர்களுக்கும் ... மற்றவர்களுக்கில்லாத சில சுதந்திரங்கள் வகையராக் கிடைக்குமென்றும் விதிகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதன்னியில், ஒவ்வொரு ஜெயிலிலும் வேலையில்லாத ஞாயிற்றுக்கிழமை முதலிய தினங்களில் கைதிகளின் உபயோகத்திற்காக சூப்பிரின்டெண்டாண்டு ஒப்புக் கொண்ட சிலபுஸ்தகங்கள் இங்கிலீஷிலும் அந்தந்த ஜில்லாவின் சுதேச பாஷையிலும் வாங்கி வைக்கப்பட்டிருக்கும்.

13. மேலேகண்ட வேலைகளை அவரவர்கள் தேகபலத்திற்குத்தக்கபடி தெரிந்து கொடுக்கப்படும். கைதிகளுக்கு சீக்கு முதலியது நேரிட்டால் அதைப்பற்றி உடனுக்குடனே பார்த்து, வேண்டும் ஔஷதங்களைக் கொடுக்கப்படும். கைதிகளுக்கு வைத்தியம் பார்க்கிறதற்கென்றே பிரத்தியேகமான வைத்திய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லாமலும் கைதிகளின் சரீர சுகம் கெட்டுப்போகாமலிருக்கும்படிக்கும், வியாதிகளை அணுகாமலிருக்கும்படிக்கும் வேண்டிய விஷயங்களையும் முன் பாதுகாப்புகளையுஞ்செய்துவைக்கப்பட்டிருக்கிறது. கைதிகள் பலத்திற் குறைந்துபோய் விட்டார்களா? இளைத்துப்போய் விட்டார்களா? என்று அறிந்துகொள்ளும் பொருட்டு 2 வாரத்திற்கொரு தடவல் ஞாயிற்றுக்கிழமைதோறும் ஒவ்வொரு கைதியையும் நிறுத்துப்பார்க்கிறார்கள். துல்லியமான இடையைக் கண்டு பிடிக்கும்பொருட்டு அடியில்க்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 2 வாரங்களுக்கு முன் எந்த நிறுக்கிற யந்திரத்தில் நிறுக்கப்பட்டதோ அதே யந்திரத்தில்த்தான் நிறுக்கவேண்டும். நிறுக்கிற யந்திரம் சரியான நிலைமையிலிருக்கிறதாவென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு, துல்லியமான 56 ராத்தல் படிக்கல்லைப்போட்டு நிறுத்து முதலாவது நிறுக்கிற யந்திரத்தைச்சரிபார்த்துகொள்ளவேண்டும். 15 நாளைக்கு முன் எத்தனை மணிக்கு நிறுக்கப்பட்டதோ அதே நேரத்தில்த்தான் நிறுக்கவேண்டும். 15 நாளைக்கு முன் நிறுவை கைதி சாப்பிட்டு எத்தனை மணிக்குப்பின்பு நிறுக்கப்பட்டதோ, அத்தனை மணிக்குப்பிறகு தான் நிறுக்கவேண்டும். கைதிகளை உடுப்பு முதலியதுகள் போடாமலே வெற்றுடம்பில்த்தான் நிறுக்கவேண்டும். ஒவ்வொரு தடவல் நிறுக்குங்காலத்திலும் ஒவ்வொரு கைதியுமிருக்கும் இடையை அதற்கென்று வைத்திருக்கும் நிறுவை ரிஜிஸ்தரிலும் கைதிகளின் சரித்திரச்சீட்டிலும் எழுதிவைக்கவேண்டும். நிறுவைக்கு அடுத்த மறுநாள் கைதிகளை நிறுத்திச்சரி பார்க்கும்பொழுது 15 நாளைக்குமுன் நிறுத்த இடையைவிட 3ராத்தல் குறைந்திருக்கிறவர்களையும், ஜெயிலுக்கு வந்த உடன் நிறுக்கப்பட்ட நிறையிலிருந்து 7 ராத்தல் இடை குறைந்திருக்கிறவர்களையும், அடுத்து மூன்று நிறுவைகளில் கொஞ்சங்கொஞ்சமாய் இடையில்க் குறைந்துகொண்டுவருகிறவர்களையும் சூப்பிரின்டெண்டினுடையவும், மெடிகல் ஆபீசருடையவும் பரிசோதனைக்காக பிரத்தியேகமாக நிறுத்தவேண்டும். 100 ராத்தலுக்குக் கீழ்ப்பட்ட இடையுள்ளவர்களாக யிருக்கிற கைதிகளின் இடை குறைந்து வந்தால் அதை மிகவும் முக்கியமான விஷயமாக நினைத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

கைதிகளின் சுகம், பலம் இவைகள் குறைந்துபோய்விட்டனவென்று அதைத் தெரிந்துகொள்வதற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள்.

14. ஜெயிலில் கைதிகளுடைய தேகசுக விஷயமாகவும், அவர்கள் விடுதலையாய்ப்போனபிறகு மிகவும் ஏழையான நிலைமையிலிருப்பவர்களுக்குந்தங்கள் காலக்ஷேபத்திற்கு யாதொரு குறைவுமின்றி ஸம்பாதியஞ் செய்துகொள்ளக்கூடிய கைத்தொழில்களைக் கற்றுக்கொடுக்கும் விஷயமாகவும் மாட்சிமை

*கைதிகளுக்கு ஜெயிலில்சுகம் ஒருபங்கும் கஷ்டம் கோடி பங்கு அதிகமாகவு மிருப்பது.*

தங்கிய கவர்ன்மெண்டாரவர்கள் செய்திருக்கும் மிகவும் தயாளமானவும் புத்தி சாதுர்யமானவுமான ஏற்பாடுகளைப்பற்றிக்கூடியவரை விவரமாக மேற்கண்ட பாராக்களில் எழுதியாய்விட்டது. மேலே 9 – வது பாராவில் ஜெயிலைப் பூலோக நரகமென்றும் ஜெயிலிலிருப்பவர்களை நரகானுபவஞ் செய்கிறவர்களென்றும் சொல்லப்பட்டிருப்பதின் உண்மையை ருஜுச்செய்யவேண்டிய தவசியம். ஏனென்றால், ஜெயிலில் கைதிகளுடைய தேகசுக விஷயமாயும், கைதிகளுக்கு ஜெயிலை விட்டு விடுதலை செய்யப்பட்டபின் எண்ணிறந்த பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடிய கைத்தொழில்களைக் கற்பித்துக்கொடுக்கும் விஷயமாகவுஞ் செய்திருக்கப்பட்ட நேர்த்தியான ஏற்பாடுகளைப்படித்து அல்லது படிக்கக் கேட்டுத்தெரிந்து கொள்ளுகிற ஏழை ஜனங்கள் ஜெயிலுக்குப்போவது பொதுவாக அவமானமான சங்கதியாக யிருந்தாலும், சர்க்கார்ச் செலவிலேயே காலக்ஷேபத்தையுங் கழித்துக்கொண்டு நல்ல கைத்தொழில்களையுங் கற்றுக்கொண்டு வந்துவிடலாமே என்ற எண்ணத்தின்பேரில் ஜெயிலுக்குப்போவதிலுங் குற்றமில்லையென்று எண்ணக்கூடியதாக யிருந்தாலு மிருக்கும். உலகத்தில் கெடுதலேயன்னில் பூராவும் நன்மையாகவே யுள்ளவும், நன்மையேயில்லாமல் பூராவுங் கெடுதலாகவேயுள்ளவும், கஷ்டமேயில்லாமல் சுகமாகவேயுள்ளவும், சுகமேயில்லாமல் பூராவுங் கஷ்டமாகவே யுள்ளவுமான சங்கதி யாதொன்றுமே கிடையாது. இதை யுத்தேசித்து புத்திமான்கள் ஒரு காரியத்தைச்செய்ய ஆரம்பிக்குமுன் அந்தக்காரியத்தைச் செய்வதால் நேரிடக்கூடிய கஷ்ட நஷ்டங்களையும், சுக லாபங்களையும் கணக்கிட்டுப்பார்த்து, கஷ்ட நஷ்டங்கள் ஜாஸ்தியாகவும் சுக லாபங்கள் கம்மியாகவு மிருக்கிற காரியங்களைச் செய்யாமல் விலக்கிவிட்டு, கஷ்ட நஷ்டங்கள் குறைவாகவும் சுக லாபங்கள் ஜாஸ்தியாகவும் ஏற்படுகிற காரியங்களைச் செய்யவும் வேண்டும். இப்படிக் கணக்கிட்டுப் பார்ப்பதில் கைதிகளுக்கு ஜெயிலிலிருக்கும் சுகலாபங்களைவிட 4-வது அத்தியாயத்தில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி ஏற்படுகிற கஷ்ட நஷ்டங்கள் ஆயிரம் பங்கென்று சொன்னால்போதாது, பதினாயிரம்பங்கு, அல்ல, அதுவும்போதாது, கோடிப்பங்கு ஜாஸ்தியாக ஏற்படுகிறபடியால், ஜெயிலில் கைதிகள் படும்பாடுகளை மிகவும் விவரமாய்ச் சொல்லவேண்டியது அத்தியாவசியமாகவே ஏற்படுகிறது. மேலும், இது விஷயங்களைப்பற்றி இதற்குமுன் யாரும் ஒரு புஸ்தகமும் எழுதவில்லை. ஜெயிலில் கைதிகள் படுங் கஷ்டங்களை நன்றாய்க் கேட்டறிந்த பரம்பரைக்கள்ளன் மகன் பக்காக் கள்ளனும் களவுதொழிலை விலக்கிவிடுவானென்பதும், கடுங்கோபக்காரனும் தனது கோபத்தை அடக்கிக்கொண்டு குற்றச்செய்கைகளைச்செய்யயோசிப்பானென்பதும் உறுதியான விஷயம். ஆகையால் ஜெயிலில் கைதிகள் விஷயமாகச் செய்திருக்கப்பட்ட சகல ரூல்களையும், அவர்கள் செய்யவேண்டிய வேலைகளையும் மற்ற விஷயங்களையும் பற்றி இதனடியில் 4 – வது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

15. இவ்வுலகத்தில் எளியவர்களாயிருக்கிற மானிடரும் தன்னுடையதென்றும், தனக்கு இஷ்டமானபடி செய்யவும் செலவிடவுங்கூடிய விதமாகத் தனக்குச் சொந்தமென்றுஞ் சொல்லிக்கொள்ளவுங்கூடிய பொருள்கள்தன்னுடைய தேகத்திலுள்ள அவயவங்களும் மனதுமே யல்லது வேறில்லை. ஜெயிலுக்குப்போய்விட்டால் இந்த அவயவங்களும் மனதும் ஜெயிலிலிருக்கும் கைதிக்குச் சொந்தமில்லாமல்ப்போய்விடுகிறது. ஜெயிலில் கைதியாயிருக்கிற ஒருவனால்ச்செய்யப்படுகிற ஒவ்வொரு கைதவறுதலான அல்லது



தவறுசெயலான சங்கதியையும், ஜெயில் உத்தியோகஸ்தர்களுக்கு அப்படிச் செய்ய இஷ்டமுண்டானால் ஜெயில்க்குற்றமாக எடுத்துக்கொண்டு கைதிக்கு ஜெயில் ரூல்ப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிற தண்டனை விதிக்கலாம்.

## 16. கோர்ட்டாருடைய அனுமதியில்லாமலே ராஜியாய்ப் போகக்கூடிய கேசுகள்.

| இ.பி.கோ. செக்ஷன். | இன்ன குற்றமென்பதின் விவரம். | கேசை ராஜிசெய்ய வேண்டியது யார். |
|---|---|---|
| 298 | ஒருவனுடைய மதசம்மந்தமான உணர்ச்சிக்குச்சங்கடமுண்டுபண்ணக்கூடிய விதமாக, வேணுமென்று பேசுவது முதலிய காரியத்தைச்செய்வது. | யாருடைய உணர்ச்சிக்குச் சங்கடமுண்டு பண்ணப்பட்டதோ அவர். |
| 323 | மனதார ஒருவருக்குத் துன்பமுண்டுபண்ணுவது. | யாருக்குத்துன்பமுண்டு பண்ணப்பட்டதோ அவர். |
| 334 | திடீரென்று அதிகமாய்க் கோபமூட்டப்பட்டதினால் மனதார ஒருவருக்குத் துன்பமுண்டு பண்ணுவது. | [illegible] |
| 341 | அக்கிரமமாய்த் தடுப்பது. | தடுக்கப்பட்டவர். |
| 342 | அக்கிரமமாக அடைத்து அல்லது கட்டிவைப்பது. | அடைக்கப்பட்ட அல்லது கட்டிவைக்கப்பட்டவர். |
| 352 | பலவந்தஞ்செய்வது அல்லது தாக்குவது. | பலவந்தஞ் செய்யப்பட்ட அல்லது தாக்கப்பட்டவர். |
| 355 | ஒருவனை அவமானப்படுத்த வேணுமென்று தாக்குவது அல்லது பலவந்தஞ்செய்வது. | தாக்கப்பட்டவர் அல்லது பலவந்தஞ் செய்யப்பட்டவர். |
| 358 | அதிகக்கோப மூட்டப்படுவதனால் பலவந்தஞ் செய்வது அல்லது தாக்குவது. | ஷை |
| 374 | ஒருவனை சட்டத்துக்கு விரோதமாகவும் அவன் மனதுக்கு விரோதமாகவும் கட்டாயமாக வேலை வாங்குவது. | வேலை வாங்கப்பட்டவர். |
| 426 | கெடுதி செய்வது அல்லது நஷ்டப்படுத்துவது. | நஷ்டமடைந்தவர். |
| 427 | கெடுதி செய்வதனால் ரூ 50-க்காவது அல்லது அதற்கு மேற்பட்டாவது நஷ்டமுண்டாக்குவது. | ஷை |

## கோர்ட்டாருடைய அனுமதி பெற்றுக்கொண்டு ராஜியாய்ப் போகக்கூடிய கேசுகள்.

17. மேலே கண்ட குற்றங்களைப்பார்க்கிலும் கொடூரமானதென்று நினைக்கப்படுகிற அடியில்கண்ட குற்றங்களுக்காகச் செய்யப்படுகிற பிராதுகளில் கோர்ட்டார் அனுமதி பெற்றுக்கொண்டு ராஜியாய்ப்போகலாம்.

(1) இ. பி. கோடு 324-வது பிரிவு.—அபாயமான ஆயுதங்களினாலாவது வேறே வகையினாலாவது மனதாரத் துன்பமுண்டு பண்ணுவது.

(2) இ. பி. கோடு 325-வது பிரிவு.—மனதாரக் கொடுந் துன்பமுண்டுபண்ணுவது.

(3) இ. பி. கோடு 335-வது பிரிவு.—கோபமூட்டப்படுவதினாலே கொடுந்துன்ப முண்டு பண்ணுவது.

(4) இ. பி. கோடு 337-வது பிரிவு.—பிறருடைய பிராணனுக்காவது சரீரக்ஷேமத்திற்காவது அபாயமுண்டுபண்ணுகிற காரியத்தைச்செய்து அதனால் துன்ப முண்டு பண்ணுவது.

(5) இ. பி. கோடு 338-வது பிரிவு.—பிறருடைய பிராணனுக்காவது சரீரக்ஷேமத்திற்காவது அபாய முண்டுபண்ணுகிற காரியத்தைச்செய்து அதினாலே கொடுந்துன்ப முண்டுபண்ணுவது.

மேற்கண்ட பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்கள் யாருக்கு விரோதமாகச்செய்யப்பட்டு யாருக்குத்துன்ப முண்டுபண்ணப்பட்டதோ அவர் கோர்ட்டாரிடம் அனுமதிபெற்று ராஜியாய்ப்போகலாம்.

### குறிப்பு.

மற்ற ஆக்ட்டுகளின்படிக்குள்ள கேசுகளில் அந்தந்த ஆக்ட்டுகளில் ராஜியாய்ப்போகலாமென்று தெளிவான ஏற்பாடு கண்டிருந்தாலொழிய ராஜியாய்ப்போகக்கூடாது. *பினல்கோடு தவிர மற்றகிரிமினல் சட்டங்களின்படிக்குள்ள கேசுகளில் ராஜியாகக்கூடாது.*

**உதாரணம்:**—காட்டு இலாகாக் கேசுகளில் (Forest Cases) கேசு பைசலாகுமுன் எப்போதாவது எதிரியிடம் நஷ்ட பரிகாரத் தொகையைப்பெற்றுக்கொண்டு, எதிரியோடு ராஜியாகப் போகலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (சென்னை 1882-ம் வருஷத்து 5-வது ஆக்டு 55-வது பிரிவு).

### ஸம்மன் கேசுகள்.

18. மரண தண்டனையாவது, தண்ணீர்மேலேற்றுந்தண்டனையாவது, 6 மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குக் காவல் தண்டனையாவது விதிக்கக்கூடாத கேசு ஸம்மன் கேசாகும். 6 மாதத்திற்காவது அல்லது அதற்குக் குறைந்தகாலத்திற்காவது காவல்தண்டனை, அபராத தண்டனை, இவைகள் தனித்தனியாகவாவது, சேர்ந்தாவது, விதிக்கப்படக்கூடிய கேசுதான் ஸம்மன் கேசென்பது. (கி. பு. கோடு 4-வது பிரிவு V. உட்பிரிவு.) *ஸம்மன்கேசென்றால் என்னவென்பது.*

அடியில்கண்டவைகள் ஸம்மன் கேசுகள். அவைகளில் வாதிபக்கம் சாக்ஷிகள், எதிரி, எதிரிபக்கம் சாக்ஷிகள் இவர்களுக்கு ஸம்மன், வாறண்டு முதலியதுகள் பிறப்பிவிப்பதற்குப்படி கட்டவேண்டியது. அடியிற்கண்ட கேசுகளில் *அடையாளம் போடப்பட்டிருக்கிற கேசுகள்போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடியவைகள். *ஸம்மன் கேசுகளில்படிகட்டவேண்டியது.*

1890-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்டு. (ரெயில்வே ஆக்ட்டு) 99, 102, 103, 104, 106, 107, 108, 109, 120, 121, 122, 123, 124, 125, 130-வது பிரிவுகள். மற்றஆக்ட்டு களின்படிக்குள்ள வம்மான் கேசுகள்

1890-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு. (பிராணிகளை இ[illegible] செய்வதைத் தடுப்பதற்கான ஆக்ட்டு.) 3, 4, 5, 6, 7-வது பிரிவுகள்.

1998-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (தபாலாபீஸ் ஆக்ட்டு) 49, 50, 51, 58, 59, 60, 63, 64, 65, 66, 67, 69-வது பிரிவுகள்.

1899-ம் வருஷத்திய 2-வதுஆக்ட்டு. (ஸ்டாம்ப் ஆக்ட்டு) 62, 63, 64, 65, 66, 67, 68, 69-வது பிரிவுகள்.

1899-ம் வருஷத்திய 8-வதுஆக்ட்டு. (மண்ணெண்ணை ஆக்ட்டு 15, 16-வது பிரிவுகள்.

## 19. வாறண்டுக்கேசுகள்.

மரண தண்டனையாவது, தண்ணீர் மேலேற்றுகிற தண்டனையாவது, ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குக்காவல் தண்டனையாவது விதிக்கப்படத்தக்க குற்றத்தைப்பற்றி விசாரிக்கப்படும் கேசு வாறண்டு கேசென்று சொல்லப்படும். வாறண்டுகேஸென்றால் என்னவென்பது.

(கி. பு. கோடு. 4-வது பிரிவு. (W) உட்பிரிவு.)

| இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. |
|---|---|---|---|---|---|
| 115 | 167 | 210 | 316 | 465 | 493 |
| ~~118~~ | 168 | 211 | 323 | 466 | 494 |
| 119 | 169 | 213 | 345 | 468 | 495 |
| 121 | 177பின் பாகம். | 214 | 355 | 469 | 496 |
| 121A. | 181 | 215 | 370 | 472 | 497 |
| 122 | 189 | 217 | 384 | 473 | 498 |
| 123 | 190 | 218 | 385 | 474 | 500 |
| 124 | 193 | 219 | 386 | 475 | 501 |
| 124A. | 194 | 220 | 387 | 476 | 502 |
| 125 | 195 | 221 | 388 | 477 | 504 |
| 126 | 196 | 222 | 389 | 477A. | 505 |
| 127 | 197 | 223 | 403 | 482 | 506 |
| 128 | 198 | 225A. | 404 | 483 | 507 |
| 129 | 199 | 227 | 405 | 484 | 508 |
| 13[illegible] | 200 | 229 | 417 | 485 | 509 |
| 153A. | 201 | 264 | 418 | 486 | |
| 159 | 203 | 265 | 421 | 487 | |
| 161 | 204 | 266 | 422 | 488 | |
| 162 | 205 | 267 | 423 | 489 | |
| 163 | 206 | 312 | 424 | 489A. | |
| 164 | 207 | 313 | 427 | 489B. | |
| 165 | 208 | 314 | 434 | 489C. | |
| 166 | 209 | 315 | 462 | 489D. | |

## மற்ற ஆக்ட்டுகளின்படிக்குள்ள வாறண்டு கேசுகள்.

1867-ம் வருஷத்திய 25-வது ஆக்ட்டு. (அச்சுயந்திர ஆக்ட்டு.) 12, 13, 14, 15-வது பிரிவுகள்.

1871-ம் வருஷத்திய 31-வது ஆக்ட்டு. (கிறுக்கிற குண்டுகள், (பூடிகள்) அளக்கிறபடிகள் முதலியவற்றைப்பற்றிய ஆக்ட்டு.) 16-வது பிரிவு.

1877-ம் வருஷத்திய 3-வது ஆக்ட்டு. (இந்தியன் ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட்டு) 21, 82-வது பிரிவுகள்.

1878-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (புதையல் கண்டெடுப்பதைப்பற்றிய ஆக்ட்டு) 20-வது பிரிவு.

1878-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு. (ஆயுத ஆக்ட்டு) 19, 20-வது பிரிவுகள்.

1882-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (இந்தியன் கம்பெனி ஆக்ட்டு) 217-வது பிரிவு.

1882-ம் வருஷத்திய சென்னபட்டணம் 5-வது ஆக்ட்டு. (காட்டு இலாகா ஆக்ட்டு.) 50-வது பிரிவு.

1885-ம் வருஷத்திய 13-வது ஆக்ட்டு. (தந்தி ஆக்ட்டு) 24, 25, 26, 27, !9, 30-வது பிரிவுகள்.

1890-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்டு. (ரெயில்வே ஆக்ட்டு) 100, 101, 05, 126, 127, 128, 129-வது பிரிவுகள்.

1898-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (தபாலாபீஸ் ஆக்ட்டு). 52, 53, 54, 55, 56, 61, 62, 68-வது பிரிவுகள்.

## 20. போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகள்.

கீழேகண்ட, போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடியகேசுகளில் இந்த அடையாளமிட்ட பிரிவுகளைத் தவிர மற்றவைகளெல்லாம் வாறண்டுக் கேசுகள் தான்.

கிரிமினல் புரொஸீடியூர்க் கோடின் 2-வது ஷெடியூல் 3-வது கலத்திலாவது, அல்லது வேறு சட்டங்களிலாவது, போலீசார், மாஜிஸ்டிரேட்டுக் கோர்ட்டிலிருந்து பிறப்பிவிக்கப்பட்ட வாறண்டில்லாமலேயே குற்றஞ் செய்தவனைப்பிடிக்கலாமென்று சொல்லியிருக்கப்பட்ட கேசுதான் போலீசார் வாறண்டில்லாமலும் பிடிக்கக்கூடிய கேசாகும். அவ்விதம் எந்தக்குற்றத்திற்காக போலீசார் வாறண்டில்லாமல் குற்றஞ் செய்தவனைப் பிடிக்கலாமோ அந்தக்குற்றமும் போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய குற்றமாகும்.

(கி. பு. கோடு 4-வது பிரிவு (F) உட்பிரிவு.)



| இந்தியன் பினல் கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. |
|---|---|---|---|---|---|
| 131 | 234 | *269 | 325 | 371 | 428 |
| 132 | 235 | 270 | 326 | 372 | 429 |
| 133 | 236 | *277 | 327 | 373 | 430 |
| 134 | 237 | *278 | 328 | 374 | 431 |
| 135 | 238 | *280 | 329 | 376பின்பா | 432 |
| 136 | 239 | 281 | 330 | 377 | 433 |
| *138 | 240 | *282 | 331 | 379 | 435 |
| *140 | 241 | *283 | 332 | 380 | 436 |
| *14[illegible] | 242 | *285 | 333 | 381 | 437 |
| 144 | 243 | *286 | 335 | 382 | 438 |
| 145 | 244 | *289 | *336 | 392 | 439 |
| 147 | 245 | *291 | *337 | 393 | 440 |
| 14[illegible] | 246 | *292 | 338 | 394 | *447 |
| 150 | 247 | *293 | *341 | 395 | 448 |
| *151 | 248 | *294 | 342 | 396 | 449 |
| 152 | 249 | 295 | 343 | 397 | 450 |
| *153 | 250 | 296 | 344 | 398 | 451 |
| *157 | 251 | 297 | 346 | 399 | 452 |
| *158 | 252 | 302 | 347 | 400 | 453 |
| 170 | 253 | 303 | 348 | 401 | 454 |
| *171 | 254 | 304 | 353 | 402 | 455 |
| 212 | 255 | 304A | 354 | 40[illegible] | 456 |
| 216 | 256 | 305 | 356 | 40[illegible] | 457 |
| 216A | 257 | 306 | 357 | 408 | 458 |
| 224 | 258 | 307 | 363 | 409 | 459 |
| 225 | 259 | 308 | 364 | 411 | 460 |
| *225B | 260 | 309 | 365 | 412 | 461 |
| 226 | 261 | 311 | 366 | 413 | 462 |
| 231 | 262 | 317 | 367 | 414 | 467பின்பா |
| 232 | 263 | 318 | 368 | 419 | 471 |
| 233 | *263A | 324 | 369 | 420 | பின்டாகம் |

### மற்ற ஆக்ட்டுகளின்படி போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகள்.

1871-ம் வருஷத்திய 31-வது ஆக்ட்டு. (நிறுக்கிறபடிகள், அளக்கிறபடிகள் முதலியவற்றைப்பற்றிய ஆக்ட்டு.) 16-வது பிரிவு.

1877-ம் வருஷத்திய 3-வது ஆக்ட்டு. (இந்தியன் ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட்டு.) 81, 82-வது பிரிவுகள்.

1878-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு. (ஆயுத ஆக்ட்டு.) 19, 20-வது பிரிவுகள்.

1882-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (இந்தியன் கம்பெனி ஆக்ட்டு.) 217-வது பிரிவு.

1885-ம் வருஷத்திய 13-வது ஆக்ட்டு. (தந்தி ஆக்ட்டு.) 25, 26, 27, 29-வது பிரிவுகள்.

1890-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்டு. (ரெயில்வே ஆக்ட்டு.) 119, 120, 121, 126, 127, 128, 129, 130-(1) வது பிரிவுகள்.

1898-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (தபாலாபீஸ் ஆக்ட்டு.) 5-வது பிரிவு.

## 21. போலீசார் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகள்.

| இந்தியன் பீனல் கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. |
|---|---|---|---|---|---|
| 121 | 175 | 207 | 284 | 421 | 489C. |
| 121A | 176 | 208 | 287 | 422 | 489D. |
| 122 | 177 | 209 | 288 | 423 | 490 |
| 123 | 178 | 210 | 290 | 424 | 491 |
| 124 | 179 | 211 | 294A. | 426 | 492 |
| 124A | 180 | 213 | 298 | 427 | 493 |
| 125 | 181 | 214 | 312 | 434 | 494 |
| 126 | 182 | 215 | 313 | 465 | 495 |
| 127 | 183 | 217 | 314 | 466 | 496 |
| 128 | 184 | 218 | 315 | 467, 1-2. | 497 |
| 129 | 185 | 219 | 316 | 468 | 498 |
| 130 | 186 | 220 | 323 | 469 | 500 |
| 137 | 187 | 221 | 334 | 471-1 | 501 |
| 153A | 188 | 222 | 345 | 472 | 502 |
| 154 | 189 | 223 | 352 | 473 | 504 |
| 155 | 190 | 225A | 355 | 474 | 505 |
| 156 | 193 | 227 | 358 | 475 | 506 |
| 160 | 194 | 228 | 370 | 476 | 507 |
| 161 | 195 | 229 | 376-1ம் | 477 | 508 |
| 162 | 196 | 264 | 384 | 477A. | 509 |
| 163 | 197 | 265 | 385 | 482 | 510 |
| 164 | 198 | 266 | 386 | 483 | |
| 165 | 199 | 267 | 387 | 484 | |
| 166 | 200 | 271 | 388 | 485 | |
| 167 | 201 | 272 | 389 | 486 | |
| 168 | 202 | 273 | 403 | 487 | |
| 169 | 203 | 274 | 404 | 488 | |
| 172 | 204 | 275 | 405 | 489 | |
| 173 | 205 | 276 | 417 | 489-A. | |
| 174 | 206 | 278 | 418 | 489-B. | |

மற்ற ஆக்ட்டுகளின்படி போலீசார் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகள்.

1867-ம் வருஷத்திய 25-வது (ஆக்ட்டு அச்சயந்திர ஆக்ட்டு.) 12, 13, 14, 15-வது பிரிவுகள்.



1871-ம் வருஷத்திய 1-வது ஆக்ட்டு. (பவுண்டு ஆக்ட்டு) 24, 26, 27-வது பிரிவுகள். வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகள்.

1878-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு (புதையல் கண்டெடுப்பதைப்பற்றிய ஆக்ட்டு.) 24, 26, 27-வது பிரிவுகள்.

1878-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு (ஆயுத ஆக்ட்டு.) 21, 22, 23-பிரிவுகள்.

1881-ம் வருஷத்திய 15-வது ஆக்ட்டு. (தொழிற்சாலை ஆக்ட்டு.) 15-வது பிரிவு.

1882-ம் வருஷத்திய சென்னப்பட்டணம் 5-வது ஆக்ட்டு. (காட்டு இலாகா ஆக்ட்டு.) 50, 52-வது பிரிவுகள்.

1885-ம் வருஷத்திய 13-வது ஆக்ட்டு. (தந்தி ஆக்ட்டு.) 20, 21, 22, 23, 24, 28, 30-வது பிரிவுகள்.

1886-வது வருஷத்திய 1-வது ஆக்ட்டு. (ஆப்காரி ஆக்ட்டு. சாராயம் கள்ளு முதலியவைகள், இறக்குவது விற்பனை செய்வதைக்குறித்த ஆக்ட்டு.) 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63-வது பிரிவுகள்.

1889-ம் வருஷத்திய 4-வது ஆக்ட்டு. (உப்பு ஆக்ட்டு.) 74, 75, 76, 77, 78-வது பிரிவுகள்.

1890-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்டு. (ரெயில்வே ஆக்ட்டு.) 99, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 130-வது பிரிவுகள்.

1890-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு (பிராணிகளை இம்சை செய்வதைத் தடுப்பதற்கான ஆக்ட்டு.) 3, 4, 5, 6-வது பிரிவுகள்.

1998-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (தபாலாபீஸ் ஆக்ட்டு.) 49, 50, 51, 54, 55, 56, 58, 59, 60, 61, 62, 66, 67, 68, 69-வது பிரிவுகள்.

1899-ம் வருஷத்திய 2-வது ஆக்ட்டு. (ஸ்டாம்பு ஆக்ட்டு.) 62, 63, 64, 65, 66, 67, 68, 69-வது பிரிவுகள்.

1899-ம் வருஷத்திய 8-வது ஆக்ட்டு, (மண்ணெண்ணை ஆக்ட்டு.) 15, 16-வது பிரிவுகள்.

## 22. ஜாமீன்பேரில் விடக்கூடிய கேசுகள்.

இண்டியன் புரொஸீடியூர் கோடின் 2-வது ஷெடியூலின் 5-வது கலத்திலாவது, அல்லது வேறு சட்டங்களிலாவது குற்றஞ்செய்தவனை, குறிப்பிட்ட காலங்களிலாவது அல்லது வேண்டும்போதாவது ஆஜராவதாக ஜாமீன் வாங்கிக்கொண்டு விட்டுவிடக்கூடிய கேசுதான் ஜாமீன்பேரில் விடக்கூடிய கேசென்று சொல்லப்படும். அவ்விதம் விடக்கூடாதென்று ஏற்பட்ட கேசுகள் ஜாமீன்பேரில் விடக்கூடாத கேசென்று சொல்லப்படும். ஜாமீன்பேரில் விடக்கூடிய கேசென்றால் என்ன? என்பது.

இ. பு. கோடு 4-வது பிரிவு (B) உட்பிரிவு.

| இந்தியன் பினல் கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. | இ. பி. கோடின் பிரிவு. |
|---|---|---|---|---|---|
| 129 | 179 | 2,22 3-ம் | 284 | 348 | 61 |
| 135 | 180 | பாகம். | 285 | 352 | 462 |
| 136 | 181 | 223 | 286 | 353 | 465 |
| 137 | 183 | 224 | 287 | 354 | 469 |
| 138 | 184 | 225 | 288 | 355 | 471 |
| 140 | 185 | 1-பாகம். | 289 | 357 | 472 |
| [illegible] | 186 | 225A. | 290 | 358 | 473 |
| 144 | 187 | 225B. | 291 | 370 | 474 |
| 145 | 188 | 228 | 292 | 374 | 475 |
| 147 | 189 | 229 | 293 | 376 | 482 |
| 148 | 190 | 255 | 294 | 1-பாகம் | 483 |
| 151 | 192 | 256 | 294A. | 384 | 484 |
| 152 | 193 | 257 | 295 | 385 | 485 |
| 153 | 197 | 258 | 296 | 388 | 486 |
| 154 | 198 | 259 | 297 | 389 | 487 |
| 155 | 199 | 260 | 298 | 403 | 488 |
| 156 | 200 | 251 | 304A. | 404 | 489 |
| 157 | 201 | 262 | 308 | 417 | 490 |
| 158 | 202 | 263 | 309 | 418 | 491 |
| 159 | 203 | 263A. | 313 | 419 | 492 |
| 160 | 204 | 264 | 317 | 420 | 494 |
| 161 | 205 | 265 | 318 | 421 | 497 |
| 162 | 206 | 266 | 323 | 422 | 498 |
| 163 | [illegible] | 267 | 324 | 423 | 500 |
| 164 | 208 | 269 | 325 | 424 | 501 |
| 165 | 209 | [illegible] | 330 | 426 | 502 |
| 166 | 210 | 271 | 332 | 427 | 504 |
| 167 | 211 | 272 | 334 | 428 | 506 |
| 168 | 212 | 273 | 335 | 429 | 507 |
| 169 | 213 | 274 | 336 | 430 | 508 |
| 170 | 214 | 275 | 337 | 431 | 509 |
| 171 | 215 | 276 | 338 | 432 | 510 |
| 172 | 216 | 277 | 341 | 433 | |
| 173 | 216A. | 278 | 342 | 434 | |
| 174 | 217 | 279 | 343 | 435 | |
| 175 | 218 | 280 | 344 | 447 | |
| 176 | 219 | 281 | 345 | 448 | |
| 177 | 220 | 282 | 346 | 451 | |
| 178 | 221 | 283 | 347 | 1-பாகம் | |

மற்ற ஆக்ட்டுகளின்படி ஜாமீன்பேரில் விடக்கூடிய கேசுகள்.

1867-ம் வருஷத்திய 25-வது ஆக்ட்டு. (அச்சயந்திர ஆக்ட்டு.) 12, 13, 14, 15-வது பிரிவுகள்.

1871-ம் வருஷத்திய 1-வது ஆக்ட்டு. (பவுண்டு ஆக்ட்டு.) 24, 26, 27-வது பிரிவுகள்.



1878-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (புதையல் கண்டெடுப்பதைப் பற்றிய ஆக்ட்டு.) 20, 21-வது பிரிவுகள். ஜாமீன்பேரில் விடக்கூடிய கேசுகள்.

1878-ம்வருஷத்திய 11-வது ஆக்ட்டு. (ஆயுத ஆக்ட்டு.) 21, 22, 23-வது பிரிவுகள்.

1881-ம்வருஷத்திய 15-வது ஆக்ட்டு. (தொழிற்சாலை ஆக்ட்டு.) 15-வது பிரிவு.

1882-ம் வருஷத்திய சென்னப்பட்டணம் 5-வது ஆக்ட்டு. (காட்டு இலாகா ஆக்ட்டு.) 50, 52-வது பிரிவுகள்.

1885-ம் வருஷத்திய 13-வது ஆக்ட்டு. (தந்தி ஆக்ட்டு) 20, 21, 22, 23, 24, 28, 30-வது பிரிவுகள்.

1886-ம் வருஷத்திய 1-வது ஆக்ட்டு. (ஆப்காரி ஆக்ட்டு. சாராயம், கள்ளு முதலியவைகள் இறக்குவது விற்பனை செய்வதைக்குறித்த ஆக்ட்டு.) 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63-வது பிரிவுகள்.

1889-ம் வருஷத்திய சென்னபட்டணம் 3-வது ஆக்ட்டு. (பட்டணங்களில் அசங்கியம் செய்வதைத் தடுப்பதற்காக செய்யப்பட்ட ஆக்ட்டு.) இந்த ஆக்டின்படிக்குள்ள குற்றங்களெல்லாம்.

1889-ம் வருஷத்திய 4-வது ஆக்ட்டு. (உப்பு ஆக்ட்டு.) 74, 75, 76, 77, 78-வது பிரிவுகள்.

1890-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்டு. (ரெயில்வே ஆக்ட்டு.) 99, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 116, 117, 118, 119, 120, 121, 122, 123, [illegible], 125, 130-வது பிரிவுகள்.

1890-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு. (பிராணிகளை இம்சை செய்வதைத் தடுப்பதற்கான ஆக்ட்டு.) 3, 4, 5, 6-வது பிரிவுகள்.

1898-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு (தபாலாபீஸ் ஆக்ட்டு.) 49, 50, 51, 54, 55, 56, 58, 59, 60, 61, 62, 66, 67, 68, 69-வது பிரிவுகள்.

1899-ம் வருஷத்திய 2-வது ஆக்ட்டு. (ஸ்டாம்பு ஆக்ட்டு.) 62, 63, 64, [illegible], 67, 68, 69-வது பிரிவுகள்.

1899-ம் வருஷத்திய 8-வது ஆக்ட்டு. (மண்ணெண்ணை ஆக்ட்டு.) 15,

---

இந்தப் புஸ்தகத்தின் 21-வது பக்கம் 23-வது விஷயத்தின் ஹெட்டிங்கிலும், மார்ஜனிலும் "ஜாமீன்பேரில்விட" என்று போட்டிருக்கும் பாகத்தை "வாறண்டில்லாமல் பிடிக்க" என்று படித்துக்கொள்ளவும்.

| இந்தியன் பினல் கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. | இ.பி. கோடின் பிரிவு. |
|---|---|---|---|---|---|
| 115 | 226 | 251 | 365 | 399 | 455 |
| 118 | 227 | 252 | 366 | 400 | 456 |
| 119-2-ம் பாகம் | 231 | 253 | 367 | 401 | 457 |
| 121 | 232 | 254 | 368 | 402 | 458 |
| 121A. | 233 | 302 | 369 | 406 | 459 |
| 122 | 234 | 303 | 371 | 407 | 460 |
| 123 | 235 | 304 | 372 | 408 | 466 |
| 124 | 236 | 306 | 373 | 409 | 467 |
| 125 | 237 | 307 | 376 | 411 | 468 |
| 126 | 238 | 311 | 377 | 412 | 476 |
| 127 | 239 | 313 | 379 | 413 | 477 |
| 128 | 240 | 314 | 380 | 414 | 477A. |
| 130 | 241 | 315 | 381 | 436 | 493 |
| 131 | 242 | 316 | 382 | 437 | 495 |
| 132 | 243 | 326 | 386 | 438 | 496 |
| 133 | 244 | 327 | 387 | 439 | 505 |
| 134 | 245 | 328 | 392 | 440 | |
| 153A. | 246 | 329 | 393 | 449 | |
| 194 | 247 | 331 | 394 | 450 | |
| 222,2-ம் பாகம் | | 333 | 395 | 451, 2-ம் பாகம் | |
| 225,2-ம் | 248 | 356 | 396 | 452 | |
| 3-ம் | 249 | 363 | 397 | 453 | |
| 4-ம் | 250 | 364 | 398 | 454 | |
| 5-ம் | | | | | |

மற்ற ஆக்ட்டுகளின்படி ஜாமீன்பேரில் விடக்கூடாத கேசுகள்.

1878-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு. (ஆயுத ஆக்ட்டு.) 19, 20-வது பிரிவுகள்.

1882-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (இந்தியன் கம்பெனி ஆக்ட்டு.) 217-வது பிரிவு.

1871-ம் வருஷத்திய 31-வது ஆக்ட்டு. (விருச்சிறபடிகள், அளக்கிறபடிகள் முதலியவற்றைப்பற்றிய ஆக்ட்டு.) 16-வது பிரிவு.

1877-ம் வருஷத்திய 3-வது ஆக்ட்டு. (இந்தியன் ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட்டு.) 81, 82-வது பிரிவுகள்.

1885-ம் வருஷத்திய 13-வது ஆக்ட்டு. (தந்தி ஆக்ட்டு.) 25, 2[illegible], 2[illegible], 29-வது பிரிவுகள்.

1890-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்டு. (ரெயில்வே ஆக்ட்டு.) 119, 12[illegible], 121, 126, 127-வது பிரிவுகள்.

1898-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டு. (தபாலாபீஸ் ஆக்ட்டு.) 52-வ[illegible]



# அத்தியாயம் 2.

1-வது அத்தியாயத்தில் கிரிமினல் சட்டங்கள் உண்டுபண்ணப்பட்டதினுடையதும், கிரிமினல்க் கோர்ட்டுகள் ஏர்ப்படுத்தப்பட்டதினுடையவும், கருத்து, நோக்கம் இவைகளின்னதென்பதைப்பற்றி விவரமாகச் சொல்லியாய் விட்டது.

பற்பல விதமான கிரிமினல்க் கோர்ட்டுகளின்னதென்பதையும் ஒவ்வொரு கிரிமினல்க் கோர்ட்டினுடைய அதிகாரங்களின்னதென்பதையும், செய்யப்படும் குற்றங்கள் விஷயமாகக் கிரிமினல்க் கோர்ட்டுகளில் நடத்தப்படவேண்டிய நடவடிக்கைகளின்னதென்பதான விஷயங்கள் முதலியவைகளையும் பற்றிச் சொல்லுமுன், குற்றச் செய்கைகளை ஜனங்கள் செய்யாமலே தடுக்கும்படியான வழியைச்செய்வது நலமாகயிருக்கும். அப்படித் தடுப்பதற்காக, குற்றச்செய்கை செய்தவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகளின்னதென்பதையும் அந்தத் தெண்டனைகளை நிறைவேற்றப்படும் விதங்களின்னதென்பதையும் அந்தத் தண்டனைகளினால் தண்டனை வி[illegible]பட்டவர்களுக்கும், அவர்களைச்சேர்ந்த மற்றப் பந்துக்களுக்கும் நேரிடுகிற கஷ்டநஷ்டங்கள் எண்ணிறந்ததாகயிருக்கிறதென்பதையும், மற்ற விஷயங்களுக்கு முன்னால்ச் சொல்லவேண்டியது அவசியமாகயிருக்கிறபடியால், இந்த அத்தியாயத்தில் இவைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

### 24. இந்தியன் [illegible]படிக்கும், மற்றக்கிரிமினல் சட்டங்களின் படிக்கும், பற்பல குற்றச்செய்கைகளுக்கு ஏர்ப்படுத்தப் பட்டிருக்கும் தண்டனைகள்.

பற்பல குற்றச் செய்கைகளுக்கு விதிக்கக்கூடிய தண்டனைகள்.

(1) அபராததண்டனை.

(2) காவல் தண்டனை.

(3) அடிதண்டனை.

(4) திவாந்தரம் அனுப்புகிறதென்னும் தண்ணீர்மேலேற்றுகிற தண்டனை.

(5) இசைகு [illegible]தண்டனை.

(6) சொத்தைப் பறிமுதல் செய்யும் தண்டனை.

(7) மரணதண்டனை.

மேற்கண்ட 7-வகைத் தண்டனைகளையும், ஒவ்வொன்றாக அடியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

### 25. 1 - அபராத தண்டனை.

அபராத தண்டனையானது, பொதுவாக தண்டனைகளுக்குள் குறைந்த[illegible]தென்று ஐவேசுள்ளவர்களாலும், ஏழைகளாகயிருந்தாலும் பொருளைப்பார்க்கிலும் மானமே பெரியதென்று நினைத்து ஜெயில் தண்ட

> ஏழைகளுக்கு அபராத தண்டனை மற்றத் தண்டனைகளைவிட அதிக் கொடூரமானது.

னையை அனுபவிப்பதைவிட ஸர்வ ஆஸ்தியையுமாவது இழந்துவிடலாம், அல்லது உயிரையாவது கொடுத்துவிடலாமென்று நினைக்கிற மனுஷர்களாலும் எண்ணப்பட்டிருக்கிறது. ஆனால் வாஸ்தவத்தில் பெரும்பான்மையாயிருக்கிற ஏழை ஜனங்களுக்கு மற்றத் தண்டனைகளைப்பார்க்க அபராத தண்டனையானது அதிக கொடூரமுள்ளதாகவே, ஏற்பட்டுவிடுகிறது. ஏனென்றால், 100 ரூபாய்க்குமட்டும் ஆஸ்திகளுள்ளவனும், தணிந்த ஜாதியாயும் சாதாரணமாகக் கூலி வேலைசெய்து காலக்ஷேபம் செய்கிறவனையுமுள்ள ஒருவனை அவன் செய்த குற்றத்திற்காக ஒருமாதம் ஜெயிலில்போட்டுவிட்டால் அதிக வருத்தமின்றி ஜெயிலிலிருந்து வேலை செய்துவிட்டு ஒருமாதம் தன் காலக்ஷேபத்தையும் ஸர்க்கார்ச் செலவிலேயே கழித்துக்கொண்டு வெளியே வந்துவிடுவான்; அவனுக்கே, அடிதண்டனை விதிக்கக்கூடிய கேசுகளில் அடித்து விட்டுவிட்டால் அதை அதிகமாக உணராமல் அடியைப்பட்டுவிட்டு, வெளியே போய்விடுவான். அப்படிக்கெல்லாமில்லாமல், அவனுக்கு 100 ரூபாய் அபராதம் விதித்துவிட்டால் அவனுடைய ஸர்வ ஆஸ்தியும்போய் அவன் அடியோடே கெட்டுப்போவதோடு, அவன் குடும்பத்தில் அவனைச் சேர்ந்தவர்களெல்லோரும் கெட்டுப்போய்விடுகிறார்கள். ஆகையால், சாதாரணமான தணிந்த நிலைமையிலுள்ளவர்களுக்கும், ஏழைகளுக்கும் அபராத தண்டனையானது மற்ற எல்லாத் தண்டனைகளைப்பார்க்கிலும் அதிகக் கொடூரமானதாகத் தோன்றுகிறது. இப்படி அபராத தண்டனையை மிகவும் கொடூரமாக நினைக்கும் ஜனங்கள் குற்றச்செய்கைகள்செய்து தண்டிக்கப்படும்பொழுது அவர்களுக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டால் அவர்கள் திரும்ப ஒரு குற்றச்செய்கையும் செய்யமாட்டார்கள். குற்றஞ் செய்தவர்களுக்கு தண்டனை விதிப்பதின் கருத்தானது, ஒருவனைத் தண்டனை விதிக்கப்பட்டு அந்தத் தண்டனையை அனுபவித்தவர்கள் மறுபடியுங் குற்றச் செய்கைகளைச் செய்யாமலிருக்கும் பொருட்டும், குற்றச்செய்கைகள் செய்தவர்கள் அனுபவிக்குந் தண்டனையைப் பார்த்து மற்றவர்கள் குற்றச்செய்கைகளைச் செய்யப் பயப்படும் பொருட்டுமாகவேயிருக்கிறது. எவர்கள் எந்தத் தண்டனையை அதிகக்கொடூரமென்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு அந்தத் தண்டனையையே விதித்தால்தான் அவர்கள் மறுபடியுங் குற்றச்செய்கைகளைச் செய்யமாட்டார்கள். மேற்கண்ட காரணங்களால், காவல் தண்டனையாவது அபராத தண்டனையாவது விதிக்கக்கூடிய கேசுகளில் ஏழைகளாகயிருப்பவர்களுக்கு அபராததண்டனையே விதிக்கவேண்டுமென்பது சட்டத்தின் கருத்தாகயிருக்கிறது. ஆனால், ஒருவனுக்கு அபராததண்டனை விதிப்பதில், அவன் செய்ததாக ருசுவாயிருக்கிற குற்றத்தின் தன்மையையும், மற்றச்சந்தர்ப்பங்களையும் நன்றாய் ஆலோசித்துச் செய்யவேண்டும். அபராதம் போடப்படுகிறவனை அடியோடு கெடுத்துப்போடும்படியான விதமாகவாவது அல்லது அவன்நிலைமைக்குத் தகாத அதிக அபராதத்தைப் போட்டு, அந்த அபராதம் செலுத்தப்படாமலிருப்பதற்காக ஜெயிலில் போட்டுவைக்கலாமென்ற நோக்கத்துடனாவது மட்டுக்குமிஞ்சின அபராதம் விதிக்கக்கூடாது.

> நிதானமான அபராதம் விதிக்க வேண்டுமென்பது.

26. இந்தியன்பினல்கோடிலும், மற்றக் கிரிமினல் சட்டங்களிலும், சில குற்றங்களுக்கு இருவகைக்காவல் தண்டனையிலொன்றாவது, அல்லது அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கலாமென்றும், சில குற்றங்களுக்கு வெறுங் காவலாவது அல்லது அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கலாமென்றும், சில குற்றங்களுக்கு இருவகைப்பட்ட காவல் தண்டனையிலொன்றாவது அல்லது அபராதமாவது, இவை



இரண்டில் ஒன்றுதான் விதிக்கலாமென்றும், சில குற்றங்களுக்கு அபராத தண்டனை மட்டுந்தான் விதிக்கலாமென்றும் நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தனை ரூபாய்க்குமேற்போகாமல் அபராதம் விதிக்கலாமென்று அநேகமாய் இந்தியன் பினல்கோடில் குற்றதண்டனைப் பிரிவுகளில் ஒவ்வொன்றிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியன் பினல்கோடில் அடியிற்கண்ட பிரிவுகளுக்கு இத்தனை ரூபாய்வரை அபராதம் விதிக்கலாமென்று சொல்லப்படாமல் தொகை குறிப்பிடாமலேயே அபராதம் விதிக்கலாமென்று மாத்திரங் கண்டிருக்கிறது.

## 27. அபராத தண்டனைமட்டும் விதிக்கக்கூடிய கேசுகள்.

குறிப்பிடப்படாத அபராதம் :—155, 156-வது பிரிவுகள்.

### குறிப்பிடப்பட்ட அபராதம் மட்டும் விதிக்கக்கூடிய கேசுகள்.

ரூபாய் 200 வரை அபராதம் விதிக்கக்கூடியவைகள் :—263-A, 283, 290-வது பிரிவுகள்.

ரூபாய் 500 வரை அபராதம் விதிக்கக்கூடியவைகள் :—137, 278-வது பிரிவுகள்.

ரூபாய் 1000 ஷை ஷை 154, 294-A—வது பிரிவுகள்.

ஒரு குற்றச் செய்கைக்காக இவ்வளவு தொகைவரை அபராதம் போடலாமென்று குறிப்பிட்டுச் சொல்லப்படாத கேசுகளில், எவ்வளவு அபராதம் வேண்டுமோ அவ்வளவு அபராதம்போடலாம். ஆனால், போடப்பட்ட அபராதத் தொகையானது மிகவும் ஜாஸ்தியாய்ப் போய்விடக்கூடாதென்று இ. பி. கோடு 63-வதுபிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த 63-வது பிரிவுப்படி, அபராதத்தொகை குறிப்பிட்டுச் சொல்லப்படாதகேசுகளில், இஷ்டப்படி மனதிற்குத்தோன்றின அபராதத்தைவிதிக்கும் அதிகாரம்ஹைக் கோர்ட்டார், ஸெஷன்ஸ் கோர்ட்டார் இவர்களுக்குமாத்திரந்தானிருக்கிறதா, அல்லது 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்குமிருக்கிறதாவென்பதைப்பற்றி அடியிற்கண்ட காரணங்களால், கல்கத்தா ஹைக்கோர்ட்டார் ஸந்தேகமாக அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். அதாவது, ஒரு 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுக்கு ரூ. 50-க்கும், 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுக்கு ரூ. 200-க்கும், 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுக்கு ரூ.1000-க்கும் மேற்பட்டு, அபராதம் விதிக்கக் கிரிமினல் புரொஸீடியூர்கோடு 32-வது பிரிவுப்படிக்காவது அல்லது வேறு எந்தச்சட்டப்படிக்காவது அதிகாரமில்லை. இப்படியிருக்க, 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் இந்தியன் பினல்கோடு 63-வது பிரிவில்கண்டபடி குறிப்பிடப்படாத அபராதத்தை விதிக்க, அவர்களுக்கு அதிகாரமிருக்குமென்பது ஸந்தேகமென்றும், குறிப்பிடப்படாத அபராதத்தை விதிக்க, ஹைக்கோர்ட்டார், ஸெஷன்ஸ் கோர்ட்டார் இவர்களுக்கு மாத்திரந்தான் அதிகாரமிருக்கிறதென்றும் தாத்பரியப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அடியில் விவரிக்கப்பட்டிருக்கிற சங்கதிகளினால் 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கும்

இந்தியன் பினல்கோடு 63-வது பிரிவில்கண்டபடி, குறிப்பிடப்படாத அபராதத்தை விதிக்க அதிகாரமிருக்கிறதென்றே தெளிவாக வெளியாகிறது.

குறிப்பிடப்படாத அபராத தண்டனைமட்டும் விதிக்கக்கூடிய குற்றங்களை, இ. பி. கோடு 155, 156-வது பிரிவுகளில்கண்ட குற்றங்களை 1-வது, 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும் விசாரிக்கலாமென்றும், காவல் தண்டனையோடு குறிப்பிடப்படாத அபராத தண்டனையும் கட்டாயமாக விதிக்கவேண்டுமென்று ஏற்படுகிற இ. பி. கோடு, 133, 181, 193, 209, 211-ல் (2-ம் பாகம்), 212, 213, 214, 216, 216-A. 225-ல் (2-ம்பாகம்) 233, 235-ல் (முதல்பாகம்) 237, 239, 240, 242, 243, 246, 247, 248, 249, 250, 251, 252, 253 259, 304-A, 326, 348, 363, 365, 369, 372, 373, 377, 382, 392, 395, 394, 401, 407, 409, 435, 440, 455, 458, 469, 484 இந்தப்பிரிவுகளில்கண்ட குற்றங்களை 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும், இ. பி. கோடு 221-ல் (3) 225-(1) 309, 325, 344, 347, 381, 404, 408, 420, 451-(2) 452, 453, 454, 456, 457, இந்தப் பிரிவுகளில் கண்ட குற்றங்களை 1, 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும்; இ. பி. கோடு 380, 451, (1) இந்தப் பிரிவுகளில் கண்ட குற்றங்களை 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும்;

காவல் தண்டனையாவது, அல்லது அபராதத்தண்டனையாவது, அல்லது காவல்தண்டனையும் குறிப்பிடப்படாத அபராத தண்டனையுமாகிய இரண்டுமாவது விதிக்கக்கூடிய கேசுகளில் இ. பி. கோடு 148, 153, 160, 161, 162, 163, 164, 167, 168, 169, 201-(2) 204, 205, 208, 210, 211, 212, 213, 214-(2), 215, 216, 263, 263-A, 304-A, 332, 465, 485, 497, 500, 501, 502, 506-(1), 509, இந்தப் பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்களை 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும், 135, 136, 138, 157, 164, 165, 166, 177, 189, 190, 202, 203, 206, 207, 217, 221-(2), 223, 224, 225, 225-A (b), 225-B, 262, 264, 265, 266, 267, 269, 270, 271, 291, 292, 293, 294, 295, 296, 297, 298, 309, 318, 324, 348, 353, 354, 355, 384, 385, 406, 411, 414, 417, 418, 419, 421, 422, 423, 424, 427, 428, 429, 430, 431, 432, 434, 461, 462, 482, 483, 486, 487, 488, 489, 498, 506-(2) இந்தப் பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்களை 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும்;

இ. பி. கோடு 143, 144, 145, 147, 151, 158, 170, 294-A (1), 356, 374, 379, 403, 426, 504, இந்தப் பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்களை 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும், விசாரிக்கலாமென்று கிரிமினல் புரொஸீடியூர்கோடு 2-வது ஷெடியூல் 8-வது கலத்தில் கண்டிருக்கிறது. இந்த முக்கியமான சங்கதியை யோசிக்கும்போது, இ. பி. கோடு 63-வது பிரிவுப்படி குறிப்பிடப்படாத அபராதம் போடுவதற்கு அதிகாரம், ஹைகோர்ட்டார், ஸெஷன்கோர்ட்டார் இவர்களுக்கிருப்பதோடு, 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கும், அவரவர்களுக்கிருக்கும் மாஜிஸ்திரேட்டு அதிகாரத்துக்கு, விதிக்கலாமென்று ஏற்பட்டிருக்கும் உயர்ந்த தொகைக்கு மேற்போகாமல் எந்தத்தொகையும் அபராதம் போட அதிகார மிருப்பதாகவே, தெளிவாக ஏற்படுகிறது. இந்த அபிப்பிராயத்திற்கு ஒத்து, பஞ்சாப் முக்கிய கோர்ட்டாரும், 1878-ம் வருஷத்திய, பஞ்சாப் ரிக்கார்டு நெ. 18-ல் பைசல் செய்திருக்கிறார்கள்.



## இந்தியன் பினல்கோடின்படி குறிப்பிடாத அபராதம் விதிக்கக்கூடிய கேசுகள்.

### 28. காவல் தண்டனையோடுகூட அபராதமும் கட்டாயமாக விதிக்கவேண்டிய கேசுகளில், அபராதம் குறிப்பிடப்படாத கேசுகள்.

இந்தியன் பினல்கோடின் பிரிவுகள்:-115, 118, 123, 124, 126, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 181, 193, 194, 201, 209, 211, 212, 213, 214, 216, 216-A, 225, 226, 231, 232, 233, 234, 235, 237, 238, 239, 240, 242, 243, 244, 245, 246, 247, 248, 249, 250, 251, 252, 253, 255, 256, 257, 258, 259, 302, 304, 305, 306, 307, 311, 312, 313, 314, 316, 325, 326, 327, 328, 329, 330, 331, 333, 344, 347, 348, 363, 364, 365, 366, 367, 369, 370, 371, 372, 373, 376, 377, 380, 381, 382, 386, 387, 388, 389, 392, 393, 394, 395, 396, 397, 400, 401, 402, 404, 407, 408, 409, 412, 413, 420, 435, 436, 437, 438, 439, 440, 449, 450, 451, 452, 453, 454, 455, 456, 457, 458, 459, 460, 466, 467, 468, 469, 472, 473, 474, 475, 476, 477, 484, [illegible], 494, [illegible], 496.

### 29. காவல் தண்டனையாவது அபராத தண்டனையாவது விதிக்கக்கூடிய கேசுகளில், குற்றச்செய்கையில் சம்பந்தப்பட்ட சொத்தின் மதிப்புக்குத்தக்கபடி அபராதம் விதிக்கவேண்டுமென்று அபராதம் குறிப்பிடப்படாத கேசு.

இந்தியன் பினல்கோடு 254-வது பிரிவு.

### 30. காவல் தண்டனையோடு சேர்ந்தாவது, அல்லது தனிமையாவாவது, அபராதம் விதிக்கக்கூடிய கேசுகளில், அபராதம் குறிப்பிடப்படாத கேசுகள்.

இந்தியன் பினல்கோடு பிரிவுகள்:— 116, 117, 119, 120, 124-A, 125, 135, 136, 138, 143, 144, 145, 147, 148, 151, 152, 153, 153-A, 157, 158, 161, 162, 163, 164, 165, 166, 167, 168, 169, 170, 177, 189, 190, 201, 202, 203, 204, 205, 206, 207, 208, 210, 211, 212, 213, 214, 215, 216, 217, 218, 219, 220, 221, 222, 223, 224, 225, 225-A, 225-B, 229, 260, 261, 262, 263, 264, 265, 266, 267, 269, 270, 271, 281, 291, 292, 293, 294, 295, 296, 297, 298, 304, 304-A, 308, 309, 312, 315, 317, 318, 324, 332, 343, 353, 354, 355, 356, 374, 379, 384, 385, 403, 406, 411, 414, 417, 418, 419, 421, 422, 423, 424, 426, 427, 428, 429, 430, 431, 432, 433, 434, 461, 462, 465, 477-A, 482, 483, 485, 486, 487, 488, 489, 497, 498, 500, 501, 502, 504, 505, 506, 508, 509, 511.

### 31. காவல் தண்டனையோடு சேர்ந்தாவது அல்லது தனிமையாகவாவது குறிப்பிடப்பட்ட அபராதம் விதிக்கக்கூடிய கேசுகள்.

ரூபாய் 10-வரை அபராதம் போடக்கூடியது. இ. பி. கோடு 510-வது பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| ரூபாய் 100 | ஷை | ஷை | 160, 490-வது பிரிவுகள். |
| ரூபாய் 200 | ஷை | ஷை | 171, 185, 187, 188, 358, 491-வது பிரிவுகள். |
| ரூபாய் 250 | ஷை | ஷை | 336-வது பிரிவு. |
| ரூபாய் 500 | ஷை | ஷை | 140, 172-(1) 173-(2) |

174-(2), 175-(1), 176-(1), 180, 184, 186, 187, 277, 334, 337, 341, 352, 447-வது பிரிவுகள்.

ரூபாய் 1000, வரை அபராதம் போடக்கூடியது, இ.பி. கோடு 172-(2), 173-(2), 174-(2), 175 - (2), 176-(2), 177, 178, 179, 182, 183, 188, 228, 272, 273, 274, 275, 276, 279, 280, 282, 284, 285, 286, 287, 288, 289, 323, 338, 342, 357, 448-வது பிரிவுகள்.

ரூபாய் 2000 வரை அபராதம் போடக்கூடியது. இ. பி. கோடு 335-வது பிரிவு.

### 32. ஒருவனுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத் தவறினால் சட்டப்படி நடத்தப்படும் நடவடிக்கைகள்.

அபராதஞ் செலுத்தத் தவறினால் எவ்விதமான காவல்தண்டனை விதிக்கவேண்டுமென்பது.

விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத் தவறினால், காவல்தண்டனை விதிக்கலாம். (இ. பி. கோடு, 64-வது பிரிவு.)

காவல்தண்டனையுடன், அபராத தண்டனையுஞ் சேர்ந்து விதிக்கப்பட்ட கேசுகளில், அபராதஞ் செலுத்தத் தவறினதற்காக விதிக்கப்படுங் காவல் தண்டனையானது, அபராதத்துடன் சேர்ந்து விதிக்கப்பட்டிருக்குங் காவல் தண்டனை, வெறுங்காவலாகவோ கடினகாவலாகவோ எப்படி யிருக்கிறதோ அப்படி யிருக்கவேண்டும். (இ. பி. கோடு, 66-வது பிரிவு.)

(உதாரணம் 1.) ஏ, என்பவனுக்கு ஒருமாதம் வெறுங்காவலும், 50 ரூ. அபராதமும் விதிக்கப்படுகிறது. 50 ரூ. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் வெறுங்காவல்தண்டனை விதிக்கலாம்.

(உதாரணம் 2.) பி, என்பவனுக்கு 3-மாதங் கடினகாவலும், ரூ. 100 அபராதமும் விதிக்கப்படுகிறது. 100 ரூ. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் கடினகாவல் தண்டனை விதிக்கலாம்.

காவல்தண்டனையுடன் விதிக்கப்படுகிற அபராதஞ் செலுத்தத் தவறினால் எவ்வளவு காவல்தண்டனை விதிக்கலாமென்பது.

33. மேலேகண்டபடி காவல் தண்டனையுடன்கூட விதிக்கப்படுகிற அபராதத்தைச்செலுத்தத்தவறினால்,எந்தக்குற்றத்திற்காக காவல்தண்டனையும் அபராததண்டனையுஞ்சேர்ந்து விதிக்கப்பட்டிருக்கிறதோ அந்தக்குற்றத்திற்கு மேல்கண்ட தண்டனை விதித்த கோர்ட்டாருக்கு எவ்வளவு காவல் தண்டனை விதிக்க அதிகாரமிருக்கிறதோ, அந்த அதிகாரத்தில் 4-ல் ஒரு பங்கு காவல் தண்டனை விதிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 33, பி.)

(உதாரணம்.—1) மூன்றுவருஷங்காவல்தண்டனைவிதிக்கக்கூடிய இ.பி. கோடு 379-வது பிரிவுப்படிக்குள்ள திருட்டுக் குற்றத்திற்காக ஒருவனுக்குக்



காவல் தண்டனையும், அபராததண்டனையும் விதிக்கப்படுகிறது. களவு குற்றத்திற்கு மூன்று வருஷந் தண்டனை ஏற்பட்டிருந்தாலும், அந்தக் குற்றத்திற்கு தங்களுடைய பூரா அதிகாரத்தைச் செலுத்தினபோதிலும் ஒரு 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு, 2 வருஷமும், 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 6-மாதமும், 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 1-மாதமுந்தான் தண்டிக்கலாமென்று கி.பு. கோடின் 32-வது பிரிவினால் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், மேலேகண்ட அபராதத்தைச் செலுத்தத் தவறினதற்காக 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் தாங்கள் இந்தக் குற்றத்திற்கு விதிக்கக்கூடிய தண்டனையாகிய 2-வருஷம், 6 மாதம், 1 மாதம் இவைகளில் 4-ல், ஒருபங்காகிய 6-மாதம், $1\frac{1}{2}$-மாதம், 1-வாரம், இந்த தண்டனைகளைத்தான் விதிக்கலாம்.

(உதாரணம்.—2) மூன்று மாதங் காவல் தண்டனை விதிக்கக்கூடிய ஒரு குற்றத்திற்காக, ஒருவனுக்குக் காவல்தண்டனையோடு அபராதமும் விதிக்கப்படுகிறது. அபராதத்தைச் செலுத்தத்தவறினால் 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 3-வாரமும், 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 3-வாரமும், 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 1-வாரமும், காவல்தண்டனை விதிக்கலாம்.

(உதாரணம்.—3.) ஒரு வருஷங் காவல் தண்டனை விதிக்கக்கூடிய ஒரு குற்றத்திற்காக, ஒருவனுக்கு காவல் தண்டனையோடு அபராததண்டனையும் விதிக்கப்படுகிறது. அபராதத்தைச் செலுத்தத்தவறினால், 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 3-மாதமும், 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு $1\frac{1}{2}$-மாதமும், 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 1-வாரமும், காவல்தண்டனை விதிக்கலாம்.

குறிப்பு 1. காவல்தண்டனையோடு சேர்ந்து விதிக்கப்படுகிற அபராதத்தைச் செலுத்தத்தவறினதற்காக கி.பு. கோடு 33-வது பிரிவுப்படி விதிக்கக்கூடிய, மாஜிஸ்திரேட்டுகளின் அதிகாரத்தில், 4 - ல் 1-பங்கு தண்டனையானது அடியிற்கண்ட தாரணைக்கு ஒருபொழுதும் மேல்போகாது.

1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 6-மாதம்.
2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு $1\frac{1}{2}$-மாதம்.
3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 1-வாரம்.

குறிப்பு 2. ஒரு குற்றத்திற்காக காவல் தண்டனை விதிப்பதில் ஒரு மாஜிஸ்திரேட்டு தன் பூரா அதிகாரத்தையும் உபயோகப்படுத்தி யிருந்தாலும், அதோடுகூட அபராதஞ் செலுத்தாமலிருப்பதற்காக விதிக்கப்படுங் காவல் தண்டனையையும் சேர்த்து மேற்கண்ட தாரணைப்படி விதிக்கலாம்.

காவல்தண்டனை யாவது அபராத தண்டனையாவது அல்லது இரண்டுமாவது விதிக்கக் கூடிய கேசுகளில் அபராதம் மட்டும் விதிக்கப்பட்டு அதைச் செலுத்தத் தவறினால் எவ்வளவு காவல்தண்டனை விதிக்கலாமென்பது.

34. காவல் தண்டனையோடு அபராத தண்டனையும் விதிக்கப்படக்கூடிய கேசுகளிலாவது, அல்லது, காவல்தண்டனையாவது அபராததண்டனையாவது விதிக்கப்படக்கூடிய கேசுகளிலாவது, அபராத தண்டனைமட்டும் விதிக்கப்பட்டால், அபராதஞ்செலுத்தத் தவறினதற்காக, எந்தக்குற்றத்திற்கு அபராத தண்டனை விதிக்கப்பட்டதோ அந்தக் குற்றத்திற்கு சட்டப்படி விதிக்கக்கூடிய பூராக்காவல் தண்டனையில் 4-ல் ஒருபங்கு விதிக்கலாம். (இ. பி. கோடு, பிரிவு 65.)

(உதாரணம்) 2 - வருஷங் காவல் தண்டனையாவது, அல்லது அபராத தண்டனையாவது அல்லது இரண்டுமாவது விதிக்கக்கூடிய குற்றமாகிய இ. பி. கோடு 147-வது பிரிவில்கண்ட கூட்டக்கலகஞ்செய்த குற்றத்திற்காக, அபராதம் மட்டும் விதிக்கப்படுகிறது. அபராதத்தைச் செலுத்த

தவறினால், 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு அந்தக்குற்றத்திற்கு ஏற்பட்டிருக்கிறமொத்த தண்டனை 2-வருஷத்தில் 4-ல் ஒரு பங்காகிய 6-மாதமும், 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 6-மாதமும் தெண்டிக்கலாம். ஆனால், 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு ஒரு மாதந்தான் தண்டிக்கலாம். ஏனென்றால், அவருக்கு 1-மாதத்துக்குமேல் தண்டிக்க அதிகாரம் கிடையாது.

35. இ. பி. கோடு 65-வது பிரிவுப்படி விதிக்கப்படும் அபராதத்தைச் செலுத்தாததற்காகக் கொடுக்கப்படுங் காவல்தண்டனையானது கி. பு. கோடு 32-வது பிரிவுப்படி தங்களுக்குள்ள அதிகாரத்துக்கு மேற்பட்டுப் போய்விடாமல் மாஜிஸ்திரேட்டுகள், கவனமாக யிருக்கவேண்டுமென்று கி. பு. கோடு 33-வது பிரிவு ஏ. உட்பிரிவில் சொல்லியிருப்பதையும் மனதில் வைக்கவேண்டும். 65-வது பிரிவில்கண்ட மொத்த தண்டனையில் 4-ல் 1-பங்கு தண்டனையானது, அந்தந்த மாஜிஸ்திரேட்டின் அதிகாரத்திற்குட்பட்ட தண்டனையாகவிருந்தால் பூராதண்டனையையும் செலுத்த அதிகாரமுண்டு. தங்கள் அதிகாரத்துக்குமேல் போய்விட்டால் தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட காவல்தண்டனைதான், விதிக்கவேண்டும்.

(உதாரணம்.—1.) 6-மாதங் காவல்தண்டனையாவது அல்லது அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கக்கூடிய இ. பி. கோடு 151-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்திற்காக, அபராதம்மட்டும் விதிக்கப்படுகிறது. அபராதஞ் செலுத்தத்தவறினால் 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு, குற்றத்திற்கேற்பட்ட மொத்த தண்டனையில் 4-ல் 1-பங்கு 1½-மாதமும், 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 1½-மாதமும், 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 1-மாதமும், தண்டிக்கலாம். 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுக்கு 1 மாதத்திற்கு மேற்பட்டு தண்டிக்கும் அதிகாரமில்லையாதலால் அவர் தன் அதிகாரத்திற்குட்பட்டு 1-மாதந்தான் தண்டிக்கலாம்.

(உதாரணம்,—2.) ஒரு வருஷக் காவல் தண்டனையாவது அல்லது அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கக்கூடிய குற்றமாகிய இ. பி. கோடு 153-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்திற்காக அபராதத் தண்டனை மட்டும் விதிக்கப்படுகிறது. அபராதஞ்செலுத்தத் தவறினால் 1, 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் 3 மாதமும், 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 1 மாதமும் தண்டனை விதிக்கலாம்.

36. அபராதம்மட்டும் விதிக்கக்கூடிய கேசுகளில் விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத் தவறினால், அடியில்கண்ட கோர்வைப்படிக்குள்ள வெறுங்காவல் தண்டனை விதிக்கலாம்.

ரூ. 50-க்குமேற்போகாத அபராதத்திற்கு 2-மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கும்;

ரூ. 100-க்கு மேற்போகாத அபராதத்திற்கு 4 மாதத்திற்கு மேற்போகாத காலத்திற்கும், அதற்கு மேற்பட்ட தொகை எவ்வளவாக யிருந்தாலும் 6 மாதத்திற்கு மேல்போகாத காலத்திற்கும் வெறுங்காவலில் வைக்கலாம். (இ. பி. கோடு, பிரிவு 67.)

அபராதத்தொகை பூராவும் வசூலானவுடன் விடுதலை செய்யப்படுமென்பது.

37. விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தாததற்காக காவலில்வைக்கப்பட்டிருந்தால், அந்த அபராதத் தொகை பூராவும், செலுத்தப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்டவுடன் காவலிலிருந்து விடுதலை செய்யப்படுவான். (இ. பி. கோடு, பிரிவு 68).



விதிக்கப்பட்ட அபராதத்தில் சிலபாகத்தைமட்டுஞ் செலுத்தி மீதம்பாக்கியிருந்தால் நடக்கும் நடவடிக்கை.

38. விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத்தவறினால் இருக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிற காவல் தண்டனை நாள் பூராவும் தீர்ந்து போகுமுன், விதிக்கப்பட்ட அபராதத்திற் சில பாகம் வசூலானால், போடப்பட்ட அபராதத்தின் தொகைக்கும், அபராதஞ் செலுத்தத்தவறினால் இருக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிற காவல் தண்டனை நாளுக்கும் ஈவு பார்த்து வசூலாயிருக்கிற தொகைபோக, வசூலாகாமலிருக்கிற அபராதத் தொகைக்குள்ள நாள் பூராவும் காவலிலிருந்து முடிந்துவிட்டால், வசூலாயிருக்கிற தொகைக்குள்ள காவலிலிருக்கவேண்டிய நாளைத்தள்ளி, உடனே அபராதம் போடப்பட்டவன் காவலிலிருந்து விடுதலை செய்யப்படுவான். (இ. பி. கோடு, பிரிவு 69).

உதாரணம்:—ஏ, என்பவனுக்கு நூறு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு அபராதஞ் செலுத்தத்தவறினால் மூன்றுமாதம் காவலிலிருக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. தீர்ப்புத் தெய்தியிலிருந்து 15-வது தினத்தில் ரூ. 50 வசூல் செய்யப்பட்டது. செலுத்தப்பட்ட ரூபாய் 50-க்கு வஜாக்கிடைக்கவேண்டியது ஒன்னரை மாதக்காவல் தண்டனை. ரூ. 50 வசூலாகும்போது யிருந்து தீர்ந்த மாதம் ½ போகபாக்கி ஒரு மாதம் காவலிலிருந்து தீர்ந்த உடன் காவலிலிருந்து விடுதலை செய்யப்படுவான்.

39. விதிக்கப்பட்ட அபராதத் தொகையில் கொஞ்சங்கூட வசூலாகாமல் பூராவும் பாக்கி யிருந்தாலுமே, சொல்பத்தொகை வசூலாகி மீதம் வசூலாகாமல் பாக்கி யிருந்தாலுமே, வசூலாகாமல் பாக்கியிருக்கிற தொகையை அபராதம் விதிக்கப்பட்ட தெய்தி முதல் 6 வருஷங்களுக்குள் எப்போதாவது வசூல் செய்யலாம். (இ. பி. கோடு, பிரிவு. 70.)

6 வருஷத்திற்கு மேற்பட்டு எப்போது வசூல் செய்யலாமென்பது.

40. அபராதம் விதிக்கப்பட்டு, டை அபராதத்தொகை பூராவையும் செலுத்தாமல் பாக்கிவைத்திருக்கிற நபருக்கு, வசூலாகாமல் பாக்கி யிருக்கிற அபராதத்தொகை எந்தக் குற்றத்திற்காக விதிக்கப்பட்டதோ அதே குற்றத்திற்காக 6-வருஷங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அபராதம் விதித்த தெய்தி முதல் 6 வருஷ வாயிதாக்கழிந்து போய்விட்டாலும் விதிக்கப்பட்டிருக்கிற 6 வருஷத்துக்கு மேற்பட்ட காவல் தண்டனை கழியுமுன் எப்போதாவது, செலுத்தப்படாமல் பாக்கி யிருக்கிற அபராதத்தை வசூல் செய்துகொள்ளலாம். (இ. பி. கோடு, பிரிவு 170.)

அபராதம் விதிக்கப்பட்டவன் இறந்துபோய்விட்டாலும் அபராதஞ்செலுத்த வேண்டிய கடமை நீங்கிவிடாது.

41. அபராதம் விதிக்கப்பட்ட நபர் அபராதம் விதிக்கப்பட்ட தெய்தி முதல் 6 வருஷங்களுக்கு முன்னமேயே இறந்துபோய்விட்டாலும் அபராதத்தொகை செலுத்தவேண்டிய கடமை அவனை விட்டு நீங்கி விடாது. அவன் உயிருடனிருக்கும்போது அவன் பட்ட கடன், அவனிறந்தபின் சட்டப்படி எந்த சொத்தின்பேரில் வசூல் செய்யப்படுமோ அந்த சொத்தின்பேரில் அபராதத்தை வசூல் செய்யலாம். (இ. பி. கோடு, பிரிவு 70.)

இறந்துபோனவனிடமிருந்து அபராதத்தை எப்படி வசூல் செய்வதென்பது.

42. அபராதம் விதிக்கப்பட்டவன் அபராதம் விதிக்கப்பட்ட 6 வருஷங்களுக்குள் இறந்துபோய்விட்டால் அவனுடைய கடன்களுக்காக ஜவாப்தாரியாக்கக்கூடிய அவனுடைய சொத்துக்களிலிருந்து, வசூலாகாத அபராதத்திற்கு ஈடு செய்யலாமென்று இ. பி. கோடின் நிபந்தனைகளிருந்தாலும், அவனிறந்தபிறகு, வசூலாகாத அபராதத்தொகைக்கு ஈடு செய்வதற்காக அவனுடைய ஸ்தாவர சொத்துக்களை ஜப்தி செய்வதாவது, ஏலம் போடுவதாவது கூடாது. அந்தச் சொத்துக்களின்பேரில் ஸிவில் வியாச்சியம் போட்டு அபராதத்தை வசூல் செய்யலாம். (இந்தியன் லா ரிப்போர்ட்டு கல்கத்தா ஸீரீஸ் 20-வது வாலம் 278-ம் பக்கத்தைப் பார்க்க.)

*அபராதஞ்செலுத்தாவிட்டால் காவலிலிருக்கும்படி விதிக்கப்பட்ட காவல்தண்டனையை அனுபவித்துத் தீர்ந்தாலும் அபராதஞ் செலுத்தவேண்டிய கடமை நீங்காதென்பது.*

43. அபராதஞ் செலுத்தத்தவறினால் அனுபவிக்கும்படி விதிக்கப்பட்ட காவல்தண்டனைக்காலம் பூராவும் ஒருவன் காவலிலிருந்து தீர்ந்துவிட்டாலும், செலுத்தாமல் பாக்கியிருக்கிற அபராதத்தைச் செலுத்தவேண்டிய கடமை அவனைவிட்டு நீங்கிவிடாது. ஏனென்றால், அபராதஞ் செலுத்தத் தவறினால் விதிக்கப்படுங் காவல்தண்டனையானது அபராதஞ் செலுத்துவதற்குப்பதிலாக விதிக்கப்பட்டதல்ல. ஆனால், அந்தக்காவல் தண்டனையானது விதிக்கப்பட்ட அபராதத்தைக் கோர்ட்டு உத்தரவுப்படி உடனே செலுத்தாததின் மூலமாக கோர்ட்டு உத்தரவை அலக்ஷியம் செய்வதற்காகவும், அபராதத்தை வசூல் செய்யவொட்டாமல் பிடிவாதமாய் இடஞ்சல் செய்வதற்காகவும் அபராதம் விதிக்கப்பட்டவனுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையே யல்லது வேறில்லை. (வீக்லி ரிப்போர்ட்டர் 3-வது வாலம் 61-ம் பக்கம்) இந்தவிஷயத்தைப்பற்றி பினல் கோடு எழுதியவர்கள் (கிரந்த கர்த்தாக்கள்) பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள்:—

"அபராதஞ் செலுத்தத் தவறுகிறதற்காக விதிக்கப்படுகிற காவல் தண்டனையை ஒருவன் அனுபவித்துத் தீர்த்துவிட்டாலும், அப்படிக் காவலிலிருந்ததை அபராதஞ் செலுத்துவதற்குப்பதிலாக நினைத்து அவன் அபராதத்தைச்செலுத்திவிட்டதாக நாம் எண்ணமாட்டோம். குற்றஞ்செய்த ஒருவன் சரீரதண்டனையை அடையச் சம்மதிக்கிறனு அல்லது பொருளை இழப்பதானதுஅபராதத்தண்டனையை அடையச்சம்மதிக்கிறனு வென்று அவன் சம்மதத்தைக்கேழ்க்க நாம் சம்மதிக்கமாட்டோம். அப்படி அவர்கள் சம்மதத்தைக் கேட்டு நாம் செய்கிறதாயிருந்தால் அபராதங் கொடுக்க மனமில்லாதவர்களெல்லோரும் காவல் தண்டனையை அனுபவிப்பதே தங்களுக்குச் சம்மதமென்று சொல்லிவிடுவார்கள். அபராதங் கொடுக்கச் சம்மதமில்லாதவர்களெல்லோரையும், அபராதத் தண்டனையிலிருந்து விலக்கிவிடவேண்டியதாகவே யிருக்கும். காவல் தண்டனையை இலேசானதாகவும், அபராதத்தண்டனையை அதிகக் கடினமானதாகவும் நினைத்து, அபராதத் தண்டனைக்குப் பயந்து குற்றச்செய்கைகளைச் செய்யத்துணியாமலிருக்கக் கூடியவர்களையே அபராதத் தண்டனையிலிருந்து விலக்கவேண்டியதாகயிருக்கும். ஆகையால், அபராதஞ் செலுத்தத் தவறினால் விதிக்கப்படுகிற காவல் தண்டனையை ஒருவன் அனுபவித்துவிட்டதினால் அபராதஞ் செலுத்தவேண்டிய கடமை அவனை விட்டு நீங்கிவிடமாட்டாதென்று நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அபராதஞ் செலுத்தத்தவறினதற்கு அவன் சரீரம் ஜவாப்தாரியாக மாட்டாது. ஆனால், அவனுடைய சொத்து கொஞ்சகாலத்திற்கு அந்த அபராதத்தொகைக்கு ஜவாப்தாரியாக யிருக்கும்."

## அபராதம் விதிக்கப்பட்டவுடன், அபராதம் செலுத்தப்படாத கேசுகளில் நடத்தப்படும் நடவடிக்கைகள்.

44. அபராதங் கொடுக்கத்தவறினால் காவலிலிருக்கும்படி தீர்ப்புச்செய்யப்பட்டிருந்தாலும், அந்தக்கோர்ட்டாருக்கு அப்படிச்செய்வது யுக்தமென்று தோன்றினால், அபராதம் போடப்பட்டவனுக்குச் சொந்தமான ஜங்கம சொத்துக்களை தீர்ப்புத்தெய்தி முதல் 15 நாளைக்குள் ஜப்தி செய்து ஏலம்போட்டு அபராதத் தொகையை வசூல் செய்யும்படி ஜப்தி வாறண்டு பிறப்பிக்கலாம். (இ. ப. கோடு. பிரிவு 367).



45. காவல் தண்டனையில்லாமல் அபராதம் மாத்திரம் விதிக்கப்பட்டு அபராதம் வசூலாகாத கேசுகளில், அபராதத்தொகையை வசூல்செய்யும்படி இ. பு. கோடு, 386-வது பிரிவுப்படி ஜப்திவாறண்டு பிறப்பித்துவிட்டு, தண்டனைவிதித்த கோர்ட்டாருக்கு அப்படிச்செய்வது உசிதமென்றுதோன்றினால், அபராதஞ் செலுத்தத்தவறினால் விதிக்கப்பட்டிருக்கிற காவல் தண்டனையை நிறைவேற்றாமல், நிறுத்திவைத்து, ஜப்தி வாறண்டை நிறைவேற்றி தன்கு வாப்ஸ் செய்யும்படிக்காகப் போடப்பட்டிருக்கிற 15-வது நாள் வாயிதாவன்று ஆஜராகும்படி அபராதம் விதிக்கப்பட்டவனைத்தன் சொந்த முச்சலிக்காவின்பேரிலாவது, ஜாமீன்பேரிலாவது விடுதலை செய்யலாம். அந்த வாயிதாவுக்குள் அபராதம் செலுத்தப்படாவிட்டாலும், அல்லது ஜப்தி வாறண்டின் மூலமாக வசூலாகாவிட்டாலும், அபராதம் விதிக்கப்பட்டவனை தீர்ப்பில் கண்ட காலத்திற்குக்காவலில் வைக்கலாம். (இ. பு. கோடு, பிரிவு 388).

*காவல் தண்டனையை நிறைவேற்றுதைத் நிறுத்தி வைப்பது.*

46. அபராதம் போடப்பட்டவுடன், அபராதத்தொகைசெலுத்தப்படாத கேசுகளில், கோர்ட்டாருக்கு அப்படிச்செய்வது யுக்தமென்று தோன்றினால் அபராதம் போடப்பட்டவனை உடனே காவலில்வைத்துவிட்டு, இ. பு. கோடு 386-வது பிரிவுப்படி ஜப்தி வாறண்டும் பிறப்பித்து விடலாம். (பெங்கால் லாரிப்போர்ட்டு அனுபந்தம் 49-வது பக்கத்தைப்பார்க்க.)

*ஜப்தி வாறண்டு பிறப்பித்த ஜெயிலில் வைப்பது.*

தவிர, அபராதம் போடப்பட்டவன் தக்க ஐவேசுக்காரனென்றாவது, அல்லது அபராதத்தைச் செலுத்திவிடக்கூடியவனென்றாவது, அபராதம் விதித்த கோர்ட்டாருக்கு அபிப்பிராயமிருக்குங் கேசுகளில், உடனே ஜப்தி வாறண்டைப்பிறப்பிக்காமல், ஒரு சமீபமான தினத்துக்குள் அபராதத்தைச் செலுத்துவதாக வாய்தாக்குறிப்பிட்டு அவனிடம் ஒரு முச்சலிக்கா வாங்கிக்கொண்டு அவனை விட்டுவிடுவது வழக்கமாயிருந்து கொண்டிருக்கிறது. முச்சலிக்காவில் குறிப்பிட்ட வாய்தாவில் அவன் அபராதத்தைச் செலுத்தாவிட்டால், மேலே கண்டபடி ஜப்தி வாறண்டு பிறப்பிக்கலாம். ஜப்தி வாறண்டை நிறைவேற்றி வாப்ஸ் செய்வதற்குக்குறிப்பிடப்படுகிற 15-ம் நாள் வாயிதாவில் ஆஜராகும்படி முச்சலிக்காவோ, ஜாமீனோ அவனிடம் வாங்கிக்கொண்டு அவனை விடுவாவது, அல்லது காவலில் வைக்கவாவது செய்யலாம் இவ்விதம் செய்வதும் சட்ட விரோதமானதில்லை. ஏனென்றால், இ. பி. கோடு 70-வது பிரிவில் வசூலாகாத அபராதத்தை அபராதம் போடப்பட்ட தெய்தி முதல் 6 வருஷங்களுக்குள் எப்போதாவது வசூல் செய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

47. விதிக்கப்பட்ட உடன் அபராதஞ் செலுத்தப்படாத கேசுகளில் தொகையை வசூல்செய்யும்பொருட்டு உடனே ஜப்திவாறண்டு பிறப்பியாமல், டை. கேசில் எதிரி அப்பீல் செய்கிறதாயிருந்தால், அப்பீல் முடிவு தெரிகிற வரை ஜப்தி வாறண்டு பிறப்பிப்பதை நிறுத்திவைக்கக்கூடாது. ஜப்தி வாறண்டு பிறப்பிப்பதை நிறுத்தி வைக்கும்படி உத்தரவு செய்ய அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமுமில்லை. (வீக்லி ரிப்போர்ட்டு 22-வது வாலம் 13-வது பக்கத்தைப்பார்க்க.)

*அப்பீல் செய்த அப்பீல் முடிவாகும் வரை வாறண்டு பிறப்பிப்பதை நிறுத்தக் கூடாதென்பது.*

48. வசூலாகாமல் பாக்கியிருக்கிற அபராதத்தை வசூல் செய்வதற்காகப் பிறப்பிக்கப்படும் ஜப்தி வாறண்டை, டை. அபராத தண்டனை விதித்த அதே ஜட்ஜ் அல்லது மாஜிஸ்திரேட்டாவது அல்லது அவருக்குப்பின் அந்த உத்தியோகத்துக்கு வருகிற ஜட்ஜ் அல்லது மாஜிஸ்திரேட்டாவது பிறப்பிக்கலாம். (இ. பு. கோடு. பிரிவு 389)

*இன்னார் வாறண்டு பிறப்பிக்கலாமென்பது.*

வாறண்டு நிறைவேற்றவேண்டிய இடம் அன்னிய ஜில்லாவிலிருந்தால் என்ன செய்யவேண்டுமென்பது.

49. ஜப்தி வாறண்டு பிறப்பிவிக்கிற கோர்ட்டு அதிகார எல்லைக்குள், ஜப்தி செய்து யேலம் போடப்படவேண்டிய ஜங்கம சொத்துக்களிருந்தால், அந்த ஜப்தி வாறண்டை நேரில் உடனே நிறைவேற்றிவிடலாம். ஜப்தி செய்து எலம் போடவேண்டிய சொத்தானது வாறண்டு பிறப்பிவித்தகோர்ட்டாரின் அதிகார எல்லைக்குள்ளில்லாமல் வேறு இலாகாவிலிருந்தால் யாருடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கிறதோ அந்த டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு அல்லது பிரதான ராஜதானி மாஜிஸ்திரேட்டினுடைய மூலமாக அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டுபோனால் ஷை வாறண்டை நிறைவேற்றிவிடலாம். (கி. பு. கோடு, பிரிவு 387).

குறிப்பு. பிரிட்டிஷ் ராஜாங்கத்திலில்லாமல் அன்னிய ராஜாங்கத்திலிருக்கிற ஜங்கம சொத்தை ஜப்தி செய்ய வாறண்டு பிறப்பிவிக்க கிரிமினல் புரொஸீடியூர் கோடினால் அதிகாரம் ஏற்படமாட்டாது. (1879-ம் வருஷம் ஜூலை மாதம் 28உ போட்ட சென்னை ஹைகோர்ட்டு புரோஸிடிங்ஸைப்பார்க்க.)

வாறண்டில் வாயிதாக் குறிப்பிடப்பட்டு போலீஸார் பேருக்கிருக்கவேண்டுமென்பது.

ஜப்தி வாறண்டை, ஒருபோலீஸ் ஆபீஸர்பேருக்குப் பிறப்பிவிக்கவேண்டும். ஜங்கம சொத்துக்களை ஜப்திசெய்து எலம்போடவேண்டியதற்கும் ஷை வாறண்டை நிறைவேற்றி, வாப்ஸ் செய்யவேண்டியதற்கும், மேற்படி வாறண்டில் வாயிதாக் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

## 50. ஜப்தி வாறண்டை நிறைவேற்றுவதில் போலீஸாருக்குள்ள அதிகாரங்கள்.

கி. பு. கோடு 3?-வது பிரிவுப்படி பிறப்பிவிக்கப்படும் ஜப்தி வாறண்டுகளை இன்னவிதமாக நிறைவேற்றுகிறதென்ற நிபந்தனைகள் கி. பு. கோடில் எங்கும் சொல்லப்படவில்லை. ஆகிலும் ஆளைப்பிடிப்பதற்கு பிறப்பிவிக்கப்பட்ட பிடி வாறண்டுகள் விஷயமாயும், வீடுகள் முதலியதை சோதனை போடுவதற்காகப்பிறப்பிவிக்கப்படும் வாறண்டுகள் விஷயமாயும் போலீஸாருக்குள்ள சகல அதிகாரங்களையும், அதாவது வீட்டுக்குடையவன் வீட்டைப் பூட்டிவைத்துக்கொண்டு திறக்கமாட்டேனென்று சொல்லுகிற கேசுகளில் கதவுகளை உடைத்து வீட்டிற்குள் பிரவேசிப்பது முதலிய அதிகாரங்களை எல்லாம் போலீஸார் செலுத்தலாம்.

## 51. ஜப்தி செய்யக்கூடிய ஜங்கம சொத்துக்களின் விபரம்.

என்ன சொத்தை ஜப்தி செய்யலாமென்பது.

ஜங்கம சொத்தைத்தான் ஜப்தி செய்யலாம். ஜப்தி செய்யப்பட்ட சொத்தானது வேறே யாருக்கும் யாதொரு எவ்வித பாத்தியதையுமில்லாததாகவும், அபராதம் விதிக்கப்பட்டிருக்கிற நபருக்கே பூராவும் சொந்தமானதாகவும் பாத்தியதையுள்ளதாகவு மிருக்கவேண்டும்.

ஹிந்து குடும்பத்தில் பொது சொத்தை ஜப்திசெய்யக்கூடாதென்பது.

52. அபராதம் விதிக்கப்படப்பட்டவன் பாகமாகாத ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்தவனாயிருந்தால், அந்தக்குடும்பத்தைச்சேர்ந்த மற்றவர்களுக்குப் பாத்தியதையில்லாதவும், அபராதம் விதிக்கப்படப்பட்டவன் தன்சொந்த சம்பாத்தியத்தைக்கொண்டு வாங்கியும் அவைகளை குடும்ப சொத்தாகப்பாவியாமல் தன் சொத்தாகவேயே பாவித்துக்கொண்டு மிருக்கிற ஜங்கம சொத்து



க்களாவதிருக்கிறதாவென்று தெரிந்து அப்பேர்ப்பட்ட ஜங்கம சொத்தை மட்டிலுந்தான் ஜப்தி செய்யலாம். அந்தக்குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்குமிருக்கிற பாத்தியதையோடு அபராதம் போடப்பட்ட நபருக்கும் கூட்டாகப் பாத்தியதையுள்ள ஜங்கமசொத்துக்களை ஜப்தி செய்யக்கூடாது. அப்பேர்ப்பட்ட சொத்துக்களை ஜப்திசெய்கிறதாயிருந்தால் அந்தச்சொத்தில் மற்றவர்களுக்கிருக்கிற பாத்தியதையையும் பிடுங்கிக்கொள்ளுவதாகும்.

53. அபராதம் போடப்பட்டிருக்கிற நபருக்கு மாத்திரம் தனிமையாகப் பாத்தியதை யில்லாத ஜங்கம சொத்துக்கள் யேதுமில்லாவிட்டால், அது விபரங்கண்டு குறிப்பிட்ட வாயிதாவுக்குள், வாறண்டு பிறப்பிவித்த கோர்ட்டுக்கு வாறண்டை வாப்சுசெய்துவிடவேண்டும்.

சொத்தில்லாவிட்டால் வாறண்டை வாயிதாவுக்குள் வாப்சு செய்யவேண்டுமென்பது.

54. அபராதம் போடப்பட்டவனுடையதென்று எண்ணி ஜப்தி செய்யப்பட்ட ஜங்கமசொத்துக்களில் எதையாவது, அந்த சொத்தானது, அபராதம் போடப்பட்டவனுடையதல்லவென்றும், தன்னுடையதென்றும்சொல்லி யாராவது ஆக்ஷேபனை செய்கிறதாயிருந்தால் அப்பேர்ப்பட்ட சொத்துக்களை போலீஸார் யேலம் போட்டுவிடக்கூடாது.

தாவாவிலிருக்கிற சொத்தை எலம்போடக்கூடாது.

55. அப்படி தாவாச்செய்யப்படுகிற சொத்தானது, அபராதம் போடப்பட்டவனுக்குச்சொந்தமா, அல்லது தன்னுடையதென்று பாத்தியதைகொண்டாடி ஆக்ஷேபனை செய்கிறவனுக்குச் சொந்தமாவென்று விசாரணை செய்யும் அதிகாரம் போலீஸாருக்கில்லை. இப்பேர்ப்பட்ட ஆக்ஷேபனை வந்திருக்கிற சொத்துக்களை எலம் போடாமல் வைத்துக்கொண்டு, தன் சொத்தென்றும் எலம் போடக்கூடாதென்றும் ஆக்ஷேபனைசெய்கிறவனை ஜப்தி வாறண்டு பிறப்பிவித்த மாஜிஸ்திரேட்டாரிடம் அனுப்பிவிடவேண்டும்.

தாவாவை விசாரிக்க போலீசாருக்கு அதிகாரமில்லை.

56. இப்பேர்ப்பட்ட தாவாக்களை விசாரிக்க அந்த மாஜிஸ்திரேட்டு அல்லது ஜட்ஜானவர் சட்டப்படி கடமைப்பட்டிராவிட்டாலும், இஷ்டமுண்டானால் விசாரித்து பைசல் செய்யலாம். (இ. லா. ரி. கல். வா. 22, பக். 935 ; மதிராஸ் வா. 20, பக்கம் 88.)

மாஜிஸ்திரேட்டு விசாரிக்கலாமென்பது.

57. தாவாவை ஜட்ஜி அல்லது மாஜிஸ்திரேட்டு விசாரித்து பைசல் செய்துவிட்டாலும், அந்தத்தாவாவிலிருக்கிற ஜங்கம சொத்துக்களை எலம் போடும்படி உத்தரவு செய்யுமுன், தன்னுடையதென்று பாத்தியதைகொண்டாடுகிறவனை, தன் பாத்தியதையை ஸிவில் கோர்ட்டில் ஸ்தாபித்துக்கொள்ளும்படி அவனை அனுப்பிவிடவேண்டியது. (1881-ம் வருஷம் செப்டம்பர் 15உ போட்ட சென்னை ஹைகோர்ட்டாரவர்களுடைய புரோஸீடிங்ஸைப்பார்க்க.)

மாஜிஸ்திரேட்டு தாவாவை பைசல்செய்துவிட்டாலும் சொத்தை எலம் போடக்கூடாதென்பது.

58. ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் விஷயமாய் யாதொரு தாவாவும் வராத விஷயத்தில் மாஜிஸ்திரேட்டிடம் யாதொருதகவலும் கேட்காமலேயே, வாறண்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற தேதிக்குள் ஷை சொத்துக்களை எலம் போட்டுவிடப் போலீஸாருக்கு அதிகாரமுண்டு.

தாவாவில்லாவிட்டால் எலம் போட்டுவிடலாம்.

## 59. ஜப்தி வாறண்டு பிறப்பிவிப்பதில் கோர்ட்டார் ஸமயோசிதமாய் தன் யுக்தத்தை உபயோகிப்பதற்கு சட்டம் இடங்கொடுக்குமென்பது.

போடப்பட்ட அபராதத்தை வசூல்செய்வதற்காகவேண்டும் ஏற்பாடுகளைச் செய்வதில், அந்தந்தக்கேசின் தன்மையையும் அபராதம் போடப்பட்டிருக்கிற நபரின் நிலைமைமுதலியதுகளையும் நன்றாய் ஆலோசித்து மாஜிஸ்திரேட்டுகள்

தங்கள் யுக்தத்தைச் செலுத்தவேண்டும். அபராதம் போடப்பட்டிருக்கிற நப ருக்கு அபராதத்தைச் செலுத்திவிடப்போதுமான ஐவேஜிருக்கையில் அபராதத் தைச்செலுத்தாமலேயே ஜெயிலிலிருந்து விடுவோமென்று அவன் நினைக்கிற தாகத்தெரியவருகிற கேசுகளில் அபராதத்தை உடனே வசூல் செய்வதற்குச் சட்டப்படிக்குள்ள சகல நடவடிக்கைகளையும் நடத்திவிடவேண்டும். அப் படிக்கில்லாமல், அபராதம் விதிக்கப்பட்டவனுக்கு ஐவேஜில்லாத காரணத்தால் மட்டும் அபராதஞ் செலுத்தப்படவில்லையென்றும், அவனுக்கிருக்கிற ஸில ஜங்கம சொத்துக்களையும் ஜப்தி செய்து அபராதத்துகையை வசூல்செய்து விடுவதாயிருந்தால் அபராதம் போடப்பட்டவனும் அவனுடைய குடும்பத்தா ரும் ஓடியோட்டு கெட்டுப்போய் விடுவார்களென்றும் அபராதம் விதித்த கோர்ட்டாருக்குத் தோன்றுமிடத்தில், அவனை அபராதம் செலுத்தத் தவறினதற்காக காவலில் வைக்கிறதற்குமேல், அபராதத்தை வசூல்செய்ய ஜப்தி வாரண்டு முதலியது பிறப்பிக்காமலிருக்கவேண்டியது உசிதம். (பஞ் சாப் ஸர்க்கியுலர் 264-ம் பக்கம்.) இப்படிப் போடப்பட்ட அபராதத்தை வசூல் செய்யாமலிருக்க சட்டமும் இடங்கொடுக்கவே செய்கிறது. எப்படியென்றால் இ. பி. கோடு 70-வது பிரிவில் அபராதம் போடப்பட்ட 6-வருஷங்களுக்குள் அபராதத்தை வசூல் செய்யவேண்டுமென்றிருக்கிறதே யல்லது வசூல்செய்து தீர வேண்டுமென்றில்லை. ஆனால், இப்பொழுது அனுஷ்டானத்தில் நடக்கிறது இவ்விதமல்ல. அபராதம் விதிக்கப்படப்பட்டவன் எவ்வளவு ஏழையாக யிருந்தாலுமே, அபராதத்தை அவன் உடனே செலுத்தாத விஷயத்தில், கொஞ்சமேனும் தாமதமின்றி வசூல் செய்வதற்குவேண்டிய நடவடிக்கைகள் யாவதும் உடனே நடத்தப்படுகிறது. இப்படிச்செய்வதும் அடியில்கண்ட ஆதாரவுக்கு ஒத்துமையாகவேயே யிருக்கிறது. (பெங்கால் லா ரிப்போர்ட்டு அனுபந்தம் 8-வது வாலம், பக்கம் 49)

## 60. விதிக்கப்பட்டு வசூல் செய்யப்படுகிற அபராதம் எப்படி உபயோகப்படுத்தப்படுகிறதென்பது.

முனிஸிபல், யூனியன் இந்த இலாகாவிலிருந்து சார்ஜ் செய்யப்படுகிற கேசுகளில் எதிரிக்கு விதிக்கப்படுகிற அபராதத்தை அந்தந்த டிபார்ட்டுமென் டுக்கே கொடுத்துவிடப்படும். பினல்கோடு முதலிய மற்றச் சட்டங்களின் படி விதிக்கப்பட்ட அபராதத்துகையை அடியில் கண்டபடி உபயோகப்படுத்த லாம். போடப்பட்ட அபராதத்துகை பூராவையுமாவது, அந்தத்துகையில் ஒரு பாகத்தையாவது,

(1) வாதி, எதிரி பேரில் கேசு நடத்தினதில் வாதிக்குண்டாயிருக்கிற நியாயமான செலவுகளுக்கு ஈடு செய்வதற்காகவும்,

(2) எதிரி வாதிக்குச்செய்த குற்றச்செய்கையினால் வாதிக்கு நேரிட்ட நஷ்ட கஷ்டங்களுக்குப் பரிகாரம் செய்வதற்காகவும் உபயோகப்படுத்தலாம். (கி.பு. கோடு பிரிவு, 545.)

(3) பாக்கி யிருக்கும் துகையை மாஜிஸ்திரேட்டின் சம்பளம் முதலியது களுக்காக உபயோகப்படுத்தப்படும்.

குறிப்பு. வாதிக்கு நேரிட்ட நியாயமான செலவுகள் என்பது சாட்சிப்படி முதலியது கட்டின துகைகள், மெடிகல் ஆபீசருக்கு கொடுத்த பீசு துகைகள் முதலியவைகள்.



## கிரிமினல் கேசுகளுக்காகப் போடப்படும் அபராதங்கள் நீங்கலாக, சில்லரை கிரிமினல் நடவடிக்கைகளில் எதிரி, வாதி, சாக்ஷிகள் வகையராக்களுக்கு விதிக்கப்படக்கூடிய அபராதங்களைப்பற்றி.

61. ஒருகேசைவிசாரித்து பைசல்செய்யும்பொழுது எதிரி அல்லது எதி ரிகளின்பேரில், வாதி கொடுத்தபிராதானது எதிரி அல்லது எதிரிகளைவீணில் அலைக்கழிவு செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் வம்பாய்க்கொடுக்கப்பட்ட தென்று பைசல்செய்யுங் கோர்ட்டார் தீர்மானித்தால், அந்த ஒவ்வொரு எதிரி களில் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50 - க்கு மேற்போகாமல் நஷ்ட ஈடு வாதி தானங் கொடுக்கும்படி உத்தரவு செய்யலாம். (கி.பு. கோடு, பிரிவு 250.)

வீணையாவது அலைக்கழிக்கும்படியாவது செய்யப்பட்ட பிராதுகள்.

62. ராஜதானிப் பட்டணத்தில் ஒருவன் மற்றொருவன்பேரில் வீணைக் குற்றஞ் சாட்டி ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரைக்கொண்டு பிடிக்கும்படி செய்தால், கேஸ் பைசல் செய்யும் மாஜிஸ்திரேட்டு போலீஸாபீஸரைக் கொண்டு அக்கிரமமாகப் பிடிக்கும்படி செய்தவனை வீணில் பிடிக்கப்பட்டவர் களுக்கு நஷ்டபரிகாரமாக நபர் 1-க்கு ரூ. 50-க்கு மேல்போகாமல் கொடுக் கும்படி உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு 553.)

இராஜதானி பட்டணங்களில் போலீசாரைக்கொண்டு வீணில் பிடிக்கும்படி செய்வது.

63. கி.பு. கோடு 250, 553-வதுபிரிவுகளின்படி வாதியைக்கொடுக்கும் படி உத்தரவு செய்யப்பட்ட துகையை உத்தரவுசெய்தவுடன் செலுத்தத்தவறி னால் கிரிமினல் கேசுகளில் குற்றஞ் செய்த எதிரிகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை வசூல் செய்வதற்கு நடத்தப்படும் நடவடிக்கைகளை எல்லாம் நடத்தி துகையை வசூல் செய்யலாம். வாதியிடம் ஒரு குறிப்பிட்ட வாயிதா வுக்குள் துகையைக் கொண்டுவந்து செலுத்துவதாக முச்சலிக்கா வாங்கிக் கொண்டு அவனை அனுப்பிவிடலாம். முச்சலிக்கா வாயிதாவுக்குள் துகை செலுத்தப்படாத விஷயத்தில் 30 நாளுக்கு மேற்படாத காலத்திற்கு வெறுங் காவலிலிருக்கும்படி உத்தரவு செய்யலாம்.

கி. பு. கோடு 250-553 - வது பிரிவுப்படி விதிக்கப்பட்ட துகையை வசூல் செய்ய நடவடிக்கை.

64. கி.பு. கோடு 488-வது பிரிவுப்படி அன்னவஸ்திரங் கொடுக்கும் படி செய்யப்படும் உத்தரவுகள், மாதம் 1-க்கு ரூ. 50-க்குமேல் போகாமல் கொடுக்கும்படி செய்யப்படலாம். இந்த உத்தரவுப்படி துகையைச் செலுத் தாமல் தவறி வைத்துக்கொண்டிருந்தால் செலுத்தப்படாமல் பாக்கியிருக்கிற துகை விஷயமாகவும், அபராதத்துகை வசூலுக்கு எப்படியோ அப்படி ஜப்தி வாரண்டு பிறப்பிக்கப்படும். வாரண்டு நிறைவேற்றப்பட்டதின் பேரிலும் துகை பாக்கியிருந்தால், பாக்கி செலுத்தப்படுகிறவரை ஒரு மாதம்வரை காவ லில் வைக்கும்படி உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு பிரிவு, 488 ல் 3.)

அன்னவஸ்திரத் துகையை வசூல்செய்ய நடவடிக்கை.

65. கி.பு. கோடு 480-வது பிரிவுப்படி கோர்ட்டாரை அலக்ஷியஞ்செய்த தற்காக ரூ. 200-க்கு மேற்போகாமல் அபராதம் விதிக்கலாம். செலுத்தத் தவறினால் ஒரு மாதம்வரை வெறுங்காவலில் வைக்கலாம். போடப்பட்ட அபராதத்தை மன்னிப்புச்செய்துவிடவுங் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. போடப்பட்ட அபராதத்தை கி. பு. கோடு 484 - வது பிரிவுப்படி மன்னிப் புச்செய்யாத விஷயத்தில், கிரிமினல் கேசுகளில் விதிக்கப்பட்ட அபராதத் துகையை வசூல் செய்யவேண்டியதற்காக என்னென்ன நடவடிக்கைகள் நடத்தப்படுமோ அந்த நடவடிக்கைகளை எல்லாம் நடத்தலாம்.

அலக்ஷியஞ் செய்வதாகிய சில விஷயங்களிலே நடவடிக்கை.

66. ஜாமீன், முச்சலிக்கா, இவைகளின் நிபந்தனைகளின்படி நடவாமல் போய்விட்டதற்காக கி. பு. கோடு 514-வது பிரிவின்படிமுச்சலிக்காவில்கண்ட

முச்சலிக்காத் தண்டத்தை வஸூல் செய்ய நடவடிக்கை.

துகை பூராவையுமாவது அதில் சிலபாகத்தையாவது வசூல் செய்யலாம். துகையை வசூல் செய்வதற்கு, அபராத வசூலுக்கு எப்படியோ அப்படியே ஜங்கம சொத்துக்களை ஜப்திசெய்து ஏலம்போடும்படி வாறண்டு பிறப்பிக்கலாம். ஜாமின், முச்சலிக்கா இவைகளின்படி நடவாததிற்காக தண்டஞ் செலுத்தவேண்டிய நபர் இறந்துபோய்விட்டால் அவனுடைய ஸ்தாவரசொத்துக்களையும் ஜப்திசெய்து ஏலம்போடும்படி உத்தரவுசெய்யலாம். (கி. ப. கோ. பி. 514 ல் 2.) வாறண்டு நிறைவேற்றப்பட்டதின்பேரிலும் துகை வசூலாகாவிட்டால் அவனை 6 மாதம் வரை வழியில் ஜெயிலில்வைக்கலாம். (கி. பு. கோ. பி. 514 ல் 4.)

67. போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாதகேசுகளில் எதிரியைத் தண்டிக்கும்பொழுது, பிராதில் ஒட்டப்பட்ட லேபில், படிக்கட்டின துகை, இவைகளைக் கணக்கிட்டு எதிரிக்குப்போடுகிற அபராதந்தவிர, மேற்கண்ட துகையையும் கொடுக்கும்படி உத்தரவு செய்யலாம். இந்தத் துகையையும் அபராத வசூல்போலவேயே வசூல் செய்யலாம். (கோர்ட்டுபீசு ஆக்ட்டு, பிரிவு 31.)

குறிப்பு. ஒரு நபருக்கு மேற்பட்ட எதிரிகள் சம்பந்தப்பட்ட கேசுகளில் மொத்தத்தில் செலுத்தும்படி கோர்ட்டுபீசு ஆக்ட்டு 31-வது பிரிவுப்படி உத்தரவு செய்யப்பட்ட துகை ஒரே நபரிடமிருந்து வசூலாகி, அந்த நபரின் தண்டனை அப்பீலில் மாறிவிட்டால், அந்தக்கேசில் சேர்ந்தவும் அப்பீலில் தண்டனை உறுதியடையப் பெற்றிருக்கிறவர்களுமான மற்ற எதிரிகளிடமிருந்து ஷை துகையை வசூல் செய்யலாம்.

68. கிரிமினல் கேசுகளின் எதிரிகளுக்கு விதிக்கப்படும் அபராதத்தைத் தவிர கி. பு. கோடுப்படி செலுத்தும்படி உத்தரவுசெய்யப்படுகிற மற்ற எல்லாத் துகைகளையும் அபராதம் போலவேயே பாவித்து வசூல் செய்யவேண்டும் (கி.பு. கோடு, பிரிவு 547.)

69. கி. பு. கோடு 250-வது பிரிவுப்படிக்கும், கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு 31-வது பிரிவுப்படிக்கும் வசூல் செய்யப்படுகிறதுகைகளையும், கி. பு. கோடு 545-வது பிரிவுப்படி வாதிக்குக்கொடுக்கும்படி உத்தரவுசெய்திருக்கிற நஷ்டஸமாதானத்துகைகளையும், அப்பீல்வாய்தாக்கழியும் வரையிலும், அப்பீல்செய்யப்பட்டிருந்தால் அப்பீலில் ஷை தண்டனை உறுதிசெய்யப்படும் வரையிலும் ஷை துகைகளை பட்டுவாடாச் செய்யக்கூடாது. அப்படித்தவறுதலாய்ப் பட்டுவாடாச்செய்து விடப்பட்ட கேசுகளில், அப்பீல் கோர்ட்டார் அந்தத்துகையை அப்பீல் வாதிக்குத் திரும்பக்கோர்ட்டில் செலுத்தும்படிக்கு உத்தரவு செய்யலாம். உத்தரவுப்படி திரும்பக்கோர்ட்டில் செலுத்தாத விஷயத்தில் அபராதம் வசூல் செய்வதுபோலவேயே வசூல் செய்யலாம்.

## 70. அபராதம் போடும் விஷயத்தில் பற்பல வகுப்பு கிரிமினல் கோர்ட்டுகளுக்கு மிருக்கும் அதிகாரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஹைக்கோர்ட்டார் எவ்வளவு துகையும் அபராதம் விதிக்கலாம். | | |
| 2. | ஸெஷஷன் கோர்ட்டார் | | ஷை |
| 3. | 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு | ரூ. 1000 வரை | ஷை. |
| 4. | 2-வது ஷை. | ரூ. 200. | ஷை. |
| 5. | 3-வது ஷை. | ரூ. 50. | ஷை. |



## 71. கிரிமினல் கோர்ட்டுகளில் விதிக்கப்பட்ட அபராதங்களில் அப்பீலில்லாத கேசுகள்.

71. ஒரு ஸெஷஷன் கோர்ட்டார், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு அல்லது மற்ற 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள், ரூ. 50-க்கு மேல் போகாத அபராத தண்டனை மட்டும் விதித்தால் அதற்கு அப்பீலில்லை.

72. அபராத தண்டனை மாத்திரம் மேல்கண்ட கோர்ட்டுகள் விதிக்கிற கேசுகளில், அபராதஞ் செலுத்தத்தவறினால் விதிக்கிற காவல் தண்டனைக்கு அப்பீலில்லை. (கி.பு. கோடு, பிரிவு 413.)

73. கி.பு. கோடு 260-வது பிரிவுப்படி சுருக்கமாக விசாரித்துப் பைசல் செய்ய அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிற மாஜிஸ்திரேட்டுகள், சுருக்கமாக விசாரித்த கேசுகளில் ரூ. 200-க்கு மேற்படாமல் அபராத தண்டனை மட்டும் விதித்தால் அதற்கு அப்பீலில்லை. (கி.பு. கோடு, பிரிவு 414.)

74. 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு கி. பு. கோடு 250-வது பிரிவுப்படி எதிரிக்கு வாதியைக்கொண்டு அலக்கழிவு நஷ்ட ஸமாதானத்தைகொடுக்கும்படி உத்தரவு செய்தால் அதற்கு அப்பீலில்லை.

75. கி.பு. கோடு 106,107-வது பிரிவுகளின்படி சமைசமாதானத்துக்கு விரோதமாகக் கலகம் செய்யாமலிருக்கும்பொருட்டு ஜாமீன் வாங்கப்படுகிற கேசுகளில் அப்பீலில்லை. ஆனால் கி.பு. கோடு 123-வது பிரிவுப்படி அந்த ஜாமீன் பத்திரங்களை டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு ரத்துசெய்துவிடலாம்.

76. ராஜதானி மாஜிஸ்திரேட்டு வேறு தண்டனை யாதொன்றும் விதிக்காமல் ரூ. 20 மட்டும் அபராதம் விதித்தால் அதற்கு அப்பீலில்லை. (கி. பு. கோடு, பிரிவு 411.)

## 72. காவல் தண்டனையுடன் சேர்ந்தாவது அல்லது தனிமையாகவாவது விதிக்கப்பட்ட அபராத வசூலைப்பற்றிய மற்றும் விஷயங்கள்.

குற்றத்திற்காக காவல் தண்டனையுடன் அபராத தண்டனையுஞ்சேர்த்து விதிக்கப்பட்ட கேசுகளில், தண்டனை விதிக்கப்பட்டவன்காவல் தண்டனையை அனுபவிக்கும் பொழுதாவது, அபராதம் மட்டும் விதிக்கப்பட்ட கேசுகளில், அபராதஞ்செலுத்தாததற்காக அபராதம் விதிக்கப்பட்டவன் ஜெயிலிலிருக்கும்பொழுதாவது, விதிக்கப்பட்ட அபராதத்துகை பூராவையுமாவது அல்லது அபராதத்தில் கொஞ்சத் துகையையாவது ஜெயிலில் கொண்டுபோய் அபராதம் விதிக்கப்பட்டவனுக்காகச் செலுத்தப்பட்டால், ஜெயில் சூப்பிரின்டெண்டாண்டாவது, அல்லது ஜெயிலராவது அபராதத் துகையை பெற்றுக்கொள்ளுகிறதற்கு அதிகாரமுண்டு. வேலை பார்க்கிறதற்கேற்பட்ட நேரங்களில்மாத்திரந்தான் வாங்கிக்கொள்ளுவார்கள். அபராதம் விதித்த கோர்ட்டிருக்கும் ஊரிலேயே ஜெயிலிருந்தால் அந்தத்துகையை அந்த கோர்ட்டுக்கு அனுப்பிவிடவேண்டும். அந்தக் கோர்ட்டு வேறு இடத்திலிருந்தால் கஜானாவில் துகையைச் செலுத்திவிட்டு அந்த ரசீதை அபராதம் போட்ட கோர்ட்டுக்கு அனுப்பிவிடவேண்டும். (ஜெயில் ரூல், 954.)

காவல் தண்டனையும் அபராததண்டனையும் விதிக்கப்பட்ட கேசுகளிலாவது, அபராததண்டனைமட்டும் விதிக்கப்பட்ட கேசுகளிலாவது, தண்டனை

விதித்த கோர்ட்டில் அபராதஞ் செலுத்தப்பட்டால், செலுத்தப்பட்ட அபராதத்தைப்பற்றி ஜெயில் சூப்பிரிண்டெண்டாண்டுக்கு அபராதம் வசூல் செய்த கோர்ட்டார் தெரிவிக்கவேண்டும். தந்திமூலமாகத் தெரிவிப்பதில் பிரயோசனமில்லை. கடிதமூலமாகவேயே தெரிவிக்கவேண்டும். (ஜெயில் ரூல், 956.)

74. பூரா அபராதத்தொகையாவது, அல்லது அபராதத்தில் ஒரு பாகமாவது செலுத்தப்பட்டால் அபராதம் போடப்பட்டு ஜெயிலிலிருக்கும் கைதிக்கு சூப்பிரிண்டெண்டாண்டு தெரிவிக்கவேண்டும். (ஜெயில் ரூல், 957.)

காவல் தண்டனையுடன்சேர்ந்தாவது, அல்லது தனிமையாகவாவது ஒருவனுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை, அந்த அபராதம் விதிக்கப்பட்டவன், அபராதத்துடன் சேர்ந்து விதிக்கப்பட்ட காவல் தண்டனையையாவது, அல்லது அபராதஞ் செலுத்தத்தவறினதற்காக விதிக்கப்பட்டிருக்கிற காவல் தண்டனையையாவது அநுபவித்துக்கொண்டிருக்கும்பொழுது அவனுக்காக ஜெயில் சூப்பிரிண்டெண்டாண்டினிடம் அபராதங்கொண்டுபோய் செலுத்தப்பட்டால் அவர் அதை சாயந்திரம் 5-மணிக்கு மேற்பட்டாவது அல்லது ஞாயிற்றுக்கிழமைகளிலாவது வாங்கவேண்டியதில்லை. (ஜெயில் ரூல், 673.)

# அத்தியாயம் 3.

## அடி தண்டனையைப்பற்றிய விஷயங்கள்.

இரெண்டாவது அத்தியாயத்தில் அபராததண்டனை ஸம்மந்தமானவிஷயங்களைப்பற்றி ஸவிஸ்தாரமாகச் சொல்லியாய்விட்டது. இந்த அத்தியாயத்தில் அடிதண்டனையைப்பற்றிச் சொல்லப்படும்.

அடிதண்டனையானது, காவல்தண்டனையைப் பார்க்கிலும் குறைந்தவும், அபராததண்டனையைப் பார்க்கிலும் மேற்பட்டவும் கோரமானதாக நினைக்கப்படக்கூடியதாயிருக்கிறது. இருந்தாலும் இந்த தண்டனையானது, ஜனங்களில் சிலருக்குப்பாருக்கு மிகவும் அவமானமானதாயிருக்கிறது. ஆகையால் அடிதண்டனை தனிப்படவாவது, அல்லது வேறு மற்றத்தண்டனைகளுடன் சேர்ந்தாவது விதிக்கப்படக்கூடிய ஒரு கேஸில் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட ஒருவன், அந்தக்கேஸில் அப்படித் தீர்மானிக்கப்படும்வரை கொஞ்சம் [illegible]ருவமான நிலைமையிலிருந்து வந்தவனாயிருந்தால், அவன் விஷயத்தில் அடிதண்டனை விதிப்பது சரியில்லை. இந்தத்தண்டனையானது பொதுவாக சில்லரை [illegible] முதலிய குற்றங்கள் செய்கிற மிகவுந் தாழ்ந்த வகுப்பு ஜனங்களுக்குத்தான் விதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அடியில் விவரிக்கப்பட்டிருக்கிற குற்றங்களில் எதையாவது அடிக்கடி செய்துவருகிற குற்றவாளிகளுக்கும் இந்த தண்டனையை விதிக்கலாம். இந்ததண்டனையானது இந்தியன் பினல்கோடுப்படிக்குள்ள குற்றங்களுக்குத்தான் விதிக்கப்படலாம். மற்றவேறு எந்த விசேஷ ஆக்ட்டுப்படிக்குள்ள குற்றத்திற்கும், அந்த ஆக்ட்டில் இந்ததண்டனையும் விதிக்கலாமென்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருந்தாலொழிய, அடித்தண்டனை விதிக்கக்கூடாது. [illegible] மரணதண்டனையாவது, காவல்தண்டனையாவது விதிக்கப்படக்கூடிய யாதொரு குற்றஞ்செய்ததற்காக குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிற 15-வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு, ஜில்லா ஜெயிலில் அவர்களைச் சீர்திருத்துவதற்கான பள்ளிக்கூடம் (Reformatory Schools.) முதலியதுகளை வைத்து தக்க ஏற்பாடுகள் செய்யப்படாதிருந்தால், அடிதண்டனை விதிப்பதுதான் சரியானது.

### 77. இந்தியன் பினல்கோடின்படி தண்டனை விதிப்பதற்குப் பதிலாக அடிதண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றங்கள்.

அடிதண்டனை ஆக்ட்டு 2-வது பிரிவு.

A. (எ.) தொகுப்பு.

(1) இந்தியன் பினல்கோட் 378-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, திருடுவது ;

(2) ஷை கோட் 380-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, யாதொரு கட்டடம், கூடாரம் அல்லது மரக்கலத்தில் திருடுவது ; இந்தியன் பினல்கோடில் நிர்ணயிக்க

ப்பட்டிருக்கிற வேறே தண்டனைக்குப் பதிலாக அடிதண்டனை விதிக்கத்தக்க குற்றங்கள்.

(3) இ. பி. கோட் 381-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, கிளர்க்கு (குமாஸ்தா) அல்லது ஊழியக்காரனா யிருப்பவன் திருடுவது ;

(4) ஷை கோட் 382-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, மரணம் அல்லது துன்பம் உண்டுபண்ணுவதற்காக ஆயத்தஞ் செய்துகொண்டு பின்பு திருடுவது ;

B. (பி.) தொகுப்பு.

(5) ஷை கோட் 388-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, வெருட்டி வாங்குவது ;

(6) ஷை கோட் 389-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி வெருட்டி வாங்கும்பொருட்டு எவனையாவது குற்றஞ் சாட்டுவதாகப் பயப்படுத்துவது ;

C. (ஸி) தொகுப்பு.

(7) ஷை கோட் 411-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி திருட்டுச்சொத்தை அயோக்கியமாய் வாங்குவது ;

(8) ஷை கோட் 412-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, பலர்கூடிக் கொள்ளையடித்துத் திருடினசொத்தை அயோக்கியமாய் வாங்குவது ;

D. (டி.) தொகுப்பு.

(9) 1864-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்டாகிய-அடிதண்டனை ஆக்ட்டின் 2-வது பிரிவின்படி அடிதண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றத்தைச் செய்யும்பொருட்டு இந்தியன் பினல் கோட் 443-வது, 445-வது, பிரிவுகளில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, பதுங்கியிருந்து வீட்டினிடமாய் நுழைவது அல்லது கன்னமிடுவது ;

(10) இந்த அடிதண்டனை ஆக்ட்டு 2-வது பிரிவின்படி அடிதண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றத்தைச்செய்யும்பொருட்டு, இந்தியன் பினல்கோட் 444-வது, 446-வது, பிரிவுகளில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, இராக்காலத்தில் பதுங்கியிருந்து வீட்டினிடமாய் நுழைவது, அல்லது இராக்காலத்தில் கன்னமிடுவது.

குறிப்பு. இந்த அடிதண்டனை ஆக்ட்டு 2-வது பிரிவுப்படி அடிதண்டனை கொடுக்கப்படுகிற கேசுகளில், அடிதண்டனையைத்தவிர வேறு ஒரு தண்டனையும் அடி தண்டனையோடு சேர்த்து விதிக்கக்கூடாது.

78. இந்த அடிதண்டனை ஆக்ட்டு 2-வதுபிரிவின், ஏ-பி-ஸி-டி, தொகுப்புகளில்கண்ட குற்றங்களுக்கு இந்தியன் பினல்கோடில்கண்ட தண்டனை கொடுப்பதற்குப் பதிலாக அடிதண்டனை விதித்தால் அடிதண்டனையோடுகூட வேறு ஒரு தண்டனையும் விதிக்கக்கூடாது. ஏனென்றால், அடிதண்டனை விதிக்கப்படாவிட்டால், இந்தியன் பினல்கோடின்படி என்ன, எவ்வளவு தண்டனை விதிக்கப்படுமோ அதற்குப்பதிலாகத்தான் அடிதண்டனை விதிக்கப்படுகிறது. (இந்தியன் லா ரிப்போர்ட்டு - பம்பாய் ஸீரிஸ், 16-வது வாலம் 357-வது பக்கத்தைப்பார்க்க.)



2-வது பிரிவில் சொல்லியிருக்கிற குற்றத்தை ஒருவன் மறுபடி செய்ததாகத் தீர்மானிக்கப்பட்டால் வேறே தண்டனையோடுங்கூட அடி தண்டனையைச் சேர்த்து அவனுக்கு விதிக்கலாம்.

79. மேலே அடிதண்டனை ஆக்ட்டு 2-வது பிரிவில்கண்டிருக்கிற குற்றங்களில் எதையாவது செய்ததாகமுன்னொரு தடவையில் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற ஒருவன் அதே குற்றத்தையாவது, அந்தக் குற்றத் தொகுப்பிலடங்கிய யாதொரு குற்றத்தையாவது மறுபடி செய்ததாகத் தீர்மானிக்கப்படுவானாகில், அந்தக்குற்றத்திற்காக அவனுக்கு இந்தியன் பினல் கோடின்படி விதிக்கக்கூடிய வேறே யாதொரு தண்டனைக்குப்பதிலாக வாகிலும், அல்லது, இந்தியன் பினல்கோடின்படி விதிக்கப்படுகிற தண்டனையோடு சேர்ந்தாகிலும் அடிதண்டனை விதிக்கலாம். (அடி-த-ஆக்ட்டு. 3-வது பிரிவு.)

குறிப்பு. அடிதண்டனை மட்டுமாவது அல்லது, காவல்தண்டனையோடு அடி தண்டனையும் சேர்ந்தாவது கொடுக்கலாம்.

## இந்தியன் பினல்கோடில்கண்ட தண்டனையோடுகூட அடிதண்டனையும் சேர்த்து விதிக்கக்கூடிய கேசுகள்.

80. அடியில்கண்ட குற்றங்களில் எதையாவது செய்ததாக முன்னொரு தடவை குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற ஒருவன், அதே குற்றத்தையாவது, அந்தக் குற்றத்தொகுப்பிலடங்கிய யாதொரு குற்றத்தையாவது மறுபடிசெய்ததாகத் தீர்மானிக்கப்படுவானேயாகில் அவனுக்கு, இ-பி-கோடின்படி விதிக்கக்கூடிய வேறே யாதொருதண்டனையோடு அடிதண்டனையும் விதிக்கலாம்.

இரண்டாவது முறை அதே குற்றஞ் செய்ததாகத் தீர்மானிக்கப்படுகிற பட்சத்தில் வேறே தண்டனையோடும் அடி தண்டனையும் விதிக்கத்தக்க குற்றங்கள்.

A. (எ.) தொகுப்பு.

(1) எவ்விதமாய்ப் பொய்ச்சாட்சி சொன்னாலும் உண்டு பண்ணினாலும் இந்தியன் பினல்கோட் 193-வது பிரிவின்படி தண்டனை விதிக்கப்படத் தக்கதாயிருக்குமோ, அவ்விதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லுவது ;

(2) ஷை கோட் 194-வது, பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி. ஒருவனை மரண தண்டனைக்குள்ளான குற்றத்தைச் செய்தவனென்று தீர்மானிக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு பொய்ச்சாட்சி சொல்லுவது, அல்லது உண்டுபண்ணுவது ;

(3) ஷை கோட் 195-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, ஒருவனைத் தண்ணீர் மேலேற்றும்படியான அல்லது, காவலில் வைக்கும்படியான குற்றஞ் செய்தவனென்று தீர்மானிக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடு பொய்ச்சாட்சி சொல்லுவது ;

B. (பி.) தொகுப்பு.

(4) ஷை கோட் 211-வது, 377-வது, பிரிவுகளில் விவரித்துச்சொல்லியிருக்கிறபடி, சுபாவத்துக்குவிரோதமான புணர்ச்சியென்னும் குற்றத்தைச்செய்ததாக எவன்மேலாவது பொய்யாய் குற்றஞ் சாட்டுவது ;

## C. (ஸி.) தொகுப்பு.

(5) இ. பி. கோட் 354-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, ஒரு ஸ்திரீயின் கற்பை அழிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு அவளைத்தாக்குவது அல்லது அந்யாயமாய்ப் பலவந்தஞ்செய்வது ;

(6) ஹைகோட் 375-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, துராகிருதமாய்ப் புணர்வது ;

(7) ஹைகோட் 377-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, சுபாவத்திற்கு விரோதமாய்ப் புணர்வது ;

## D. (டி.) தொகுப்பு.

(8) இந்தியன் பினல்கோட் 390-வது, 391-வது, பிரிவுகளில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, கொள்ளையடிப்பது அல்லது பலர்கூடிக் கொள்ளையடிப்பது ;

(9) ஹைகோட் 393-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, கொள்ளையடிக்க எத்தனப்படுவது ;

(10) ஹைகோட் 394-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, கொள்ளையடிக்கையில் மனோபூர்வமாய்த் துன்பமுண்டுபண்ணுவது ;

## E. (இ.) தொகுப்பு.

(11) ஹைகோட் 413-வது, பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, திருட்டுச்சொத்தை வழக்கமாய் வாங்குவது அல்லது கொள்வனை விற்பனை செய்வது ;

## F. (எப்.) தொகுப்பு.

(12) ஹைகோட் 463-வது, பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, சிருஷ்டனை செய்வது ;

(13) ஹைகோட் 466-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, யாதொரு தஸ்தவேஜை சிருஷ்டனை செய்வது ;

(14) ஹைகோட் 467-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, யாதொரு தஸ்தவேஜை சிருஷ்டனை செய்வது ;

(15) ஹைகோட் 468-வது, பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, மோசஞ் செய்யும்பொருட்டு சிருஷ்டனை செய்வது ;

(16) ஹைகோட் 469-வது பிரிவில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி, யாவனொருவனுடைய பெயருக்குக் கெடுதி செய்யும்பொருட்டுச் சிருஷ்டனை செய்வது ;

## G. (ஜீ.) தொகுப்பு.

(17) இந்தப்பிரிவின்படி அடிதண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றத்தைச் செய்யும்பொருட்டு ஹை கோட் 443-வது, 445-வது பிரிவுகளில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி இராக்காலத்தில் பதுங்கியிருந்து வீட்டினிடமாய் நுழைவது அல்லது கன்னமிடுவது ;



(18) இந்தப் பிரிவின்படி அடி தண்டனை விதிக்கத்தக்க யாதொரு குற்றத்தைச் செய்யும் பொருட்டு, இந்தியன் பினல்கோடு 444-வது, 446-வது, பிரிவுகளில் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி இராக்காலத்தில் பதுங்கியிருந்து வீட்டினிடமாய் நுழைவது அல்லது இராக்காலத்தில் கன்னமிடுவது ;

### அடிதண்டனை ஆக்ட்டு 4-வது பிரிவு.

81. 16-வயதுக்குட்பட்ட சிறுவனாயிருக்கிறயாரும் இந்தியன்பினல்கோடின்படி மரணதண்டனைக் குட்படாத வேறு எந்தக்குற்றத்தையாவது செய்வானேயாகில், அது முதல்தடவையாயிருந்தாலும், மறுதடவையாயிருந்தாலும் அந்தக் குற்றத்திற்காக இ. பி. கோடின்படி அவனுக்கு விதிக்கப்படக்கூடிய வேறுதண்டனைக்குப் பதிலாக அடிதண்டனை விதிக்கலாம்.

குற்றஞ் செய்யும் சிறுவர்களுக்குமரண தண்டனைக்குட்படாத குற்றங்களுக்காக அடிதண்டனை விதிக்கலாம்.

விவரணம்:—இந்தப்பிரிவில் "குற்றஞ் செய்த சிறுவன்" என்பது கோர்ட்டார் அபிப்பிராயத்தில் 16-வயதுக்குட்பட்ட சிறுவன் என்று அர்த்தம். வயது விஷயத்தில் கோர்ட்டாருடைய தீர்மானந்தான் கடைசியான முடிவு. (அடி. த. ஆ. 5-வது பிரிவு.)

82. யாதொரு பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட எல்லைக்குள்ளிருக்கிற டிஸ்டிரிக்கட்டிலாவது, யாதொரு காட்டுப் பிரதேசத்திலாவது, இந்தப்பிரிவிலுள்ள விஷயங்கள் வழங்கிவரும்படி ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாய் நிர்ணயித்திருந்தால், அதற்குப்பிறகு எவனாகிலும் அந்தஜில்லா அல்லது காட்டுப்பிரதேசத்தில் இந்த ஆக்ட்டு 4-வது, பிரிவில்கண்டிருக்கிற குற்றங்களையாவது செய்கிறபக்ஷத்திலே, இந்தியன் பினல்கோடின்படி அவனுக்குக் கொடுக்கக்கூடிய வேறேயாதொரு தண்டனைக்குப்பதிலாக அவனுக்கு அடிதண்டனை விதிக்கலாம். (அடி. த. ஆக்ட்டு 6-வது, பிரிவு.)

இந்த ஆக்ட்டு 4 வது பிரிவில் கண்டிருக்கிற குற்றங்களுக்காக எல்லைக்கடையில் இருக்கிற டிஸ்ட்ரிக்ட்டுகளில் அடிதண்டனை விதிக்கலாமென்பது.

## அடிதண்டனை விதிப்பதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

83. (1) 30-அடிகளுக்குமேல் அடிக்கும்படி ஒருபோதும் தண்டனை விதிக்கக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு 392—2.)

(2) 3–மாதம் அல்லது அதற்கு மேற்பட்டகாலத்திற்கு காவல்தண்டனை விதிக்கப்பட்டாலொழிய காவல் தண்டனையுடன் சேர்ந்து அடிதண்டனை விதிக்கக்கூடாது. (கி.பு.கோ. பிரிவு 394.)

(3) மூன்றாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கு அடி தண்டனை விதிக்கும் அதிகாரமில்லை. 2-வதுவகுப்பு, மாஜிஸ்திரேட்டுகளுக்கு விசேஷித்து, பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பட்டாலொழிய, அடி தண்டனை விதிக்க அதிகாரமில்லை. ஆனால், சென்னைராஜதானியில், எல்லா 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும் அடிதண்டனை விதிக்கலாமென்று அதிகாரங்கொடுத்து 1883-ம் வருஷம் ஜனவரி 1வ, 4-ம். நெ. கெஜெட் நொடிபிகேஷன் போடப்பட்டிருக்கிறது.

(4) பெண்பிள்ளைகள், (கி.பு. கோ. 393—எ), மரணதண்டனையாவது தீவாந்தரத்துக்கு அனுப்புந் தண்டனையாவது, அல்லது சிக்ஷை, ஊழிய தண்டனையாவது அல்லது 5-வருஷங்களுக்கு மேற்பட்ட காவல் தண்டனையாவது

அடிதண்டனையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறவர்கள்.

விதிக்கப்பட்டிருக்கிறவர்கள், (கி.பு.கோ. 393—பி.) 45 வயதுக்கு மேற்பட்டவர்களாயிருக்கலாமென்று கேசை விசாரிக்குங் கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிற ஆண்பிள்ளைகள், (கி. பு. கோ. 393 வி.) 3-மாதத்திற்குக் குறைந்தகாலத்திற்கு காவல்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறவர்கள், (கி. பு. கோ. 391-3) இவர்களுக்கு அடிதண்டனை ஒரு போதும் விதிக்கக்கூடாது.

## விதிக்கப்பட்ட அடிதண்டனையை நிறைவேற்றுவதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

84. (1) அடிதண்டனை விதிக்கிறகோர்ட்டார் ஷை தண்டனையை தன் முன்புக்கு நிறைவேற்றவேண்டுமென்று உத்தரவு செய்தாலொழிய, ஜெயில் ஆபீஸருடைய முன்னிலையில்தான் நிறைவேற்றப்படும். (கி. பு. கோ. 391—2-ம் பாகம்.)

(2) காவல் தண்டனையுடன் சேர்ந்து விதிக்கப்பட்ட அடிதண்டனையை, தண்டனை விதிக்கப்பட்ட தெய்திமுதல் 15-நாள் வரை நிறைவேற்றக்கூடாது. அந்த 15-நாள்களுக்குள் அப்பீல் செய்யப்பட்டால், அப்பீலில் ஷை தண்டனை உறுதி செய்யப்படும்வரை, அடிதண்டனையை நிறைவேற்றக்கூடாது. (கி. பு. கோ. பிரிவு 391—1-ம் பாகம்.)

(3) விதிக்கப்பட்ட அடிதண்டனையை ஒரே மொத்தமாகத்தான் நிறைவேற்றவேண்டும். சில்லரை சில்லரையாய் நிறைவேற்றக்கூடாது. அதாவது, ஒருவனுக்கு எத்தனை அடி அடிக்கும்படி தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறதோ அத்தனை அடிகளையும் ஒரே மொத்தமாய் அடித்துவிடவேண்டும். (கி.பு. கோ. பிரிவு 393.)

(4) அடிதண்டனை விதிக்கப்படப்பட்டவன், ஷை தண்டனையைத்தாங்கும்படியான சரியான தேக சுகத்துடனிருந்தால்தான் அடி தண்டனையை உடனே நிறைவேற்றலாம். அடிதண்டனை நிறைவேற்றப்படுங் காலத்தில் மெடிகல் ஆபீசர் பக்கத்தில் ஆஜரிலிருந்தால், தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறவன் அடி தாங்கக்கூடிய சரியான தேகசுகத்துடனிருப்பதாக அபிப்பிராயங் கொடுக்கவேண்டும். மெடிகல் ஆபீசர் பக்கத்திலில்லாவிட்டால், தண்டனையை நிறைவேற்றுகிற கோர்ட்டார், அல்லது ஜெயில் உத்தியோகஸ்தர் தண்டனை விதிக்கப்படப்பட்டவன் அடி தாங்கும்படி சரியான சரீர சுகத்துடனிருப்பதாக அபிப்பிராயப்பட்டால் தான் அடி தண்டனையை நிறைவேற்றலாம். (கி. பு. கோ. பிரிவு, 394—1-ம் பாகம்.)

(5) ஒருவனுக்கு விதிக்கப்பட்டிருக்கிற அடிதண்டனையை நிறைவேற்றிக்கொண்டிருக்கையில், அடித்த அடிபோக அடியாமல் பாக்கியிருக்கிற அடியைத் தாங்கும்படியான சரியான தேகசுகமில்லாதவனாக ஆய்விட்டானென்று மெடிகல் ஆபீசர் அபிப்பிராயங் கொடுத்தாலும், தண்டனையை நிறைவேற்றிக்கொண்டிருக்கிற கோர்ட்டார் அல்லது ஜெயில் ஆபீசருக்குத்தெரிய வந்தாலும், அடிக்கப்படாமல் பாக்கியிருக்கிற அடிகளைக் கடாசியாக நிறுத்திவிடவேண்டும். பாக்கி அடியைப்பின்னிடு எப்பவும் நிறைவேற்றவேகூடாது. (கி.பு. கோடு பிரிவு 394—2-ம் பாகம்.)

(6) மறுபடியுங் கோர்ட்டார் ஆலோசித்துப் பைசல்செய்யும்வரை தண்டனைப்பட்டவனை காவலில் வைத்திருக்கவேண்டியது. (கி. பு. கோடு பிரிவு, 395—1-ம் பாகம்.)



(7) பூராவும் நிறைவேற்றப்படாமலாவது, அல்லது கொஞ்சம் நிறைவேற்றிக் கொஞ்சம் நிறைவேற்றப்படாமல் பாக்கியிருக்கிறவாவது, அடி தண்டனையை பூராவுமே ரத்துச்செய்துவிடவாவது, அல்லது நிறைவேற்றப்படாமல் நிறுத்திவிடப்பட்ட தண்டனைக்குப்பதிலாக 12 - மாதங்களுக்குமேல் போகாமல் காவலிலிருக்கும்படியாவது உத்தரவுசெய்யக் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. நிறைவேற்றப்படாமல் பாக்கியிருக்கிற அடிதண்டனைக்குப் பதிலாக விதிக்கப்படுகிற காவல் தண்டனையானது அடி தண்டனை விதிக்கப்பட்ட குற்றத்துக்காகவேயே குற்றவாளிக்கு ஏதாவது காவல்தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அதோடுசேர்ந்து விதிக்கப்படலாம். (கி.பு. கோ பிரிவு, 395-1-ம் பாகம்.)

**விவரணம்:**—நிறைவேற்றப்படாமல் பாக்கி கிடந்துபோன அடி தண்டனைக்குப் பதிலாக விதிக்கப்படுகிற காவல் தண்டனையானது 12—மாதங்களுக்குமேல் போகக்கூடாதென்று இந்தப்பிரிவில் சொல்லப்பட்டிருந்தாலும் அந்தந்த மாஜிஸ்திரேட்டுகள் அவரவர்கள் அதிகாரத்துக்குமேல் தண்டிக்கப்படாது. அதாவது 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு 6 - மாதத்துக்குமேல் தண்டிக்கக்கூடாது.

(8) 16-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு $\frac{1}{2}$ அங்குலச் சுற்றளவுக் குறையாத பிரம்பினால், பின்பக்கம் பிட்டத்தில் தான் அடிக்கவேண்டும். (கி. பு. கோடு பிரிவு. 392—1-ம் பாகம்). 16-வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கு $\frac{1}{2}$ அங்குலச் சுற்றளவுக்குக் குறைந்தபிரம்பினால் பின்பக்கம் பிட்டத்திலேயே அடிக்கவேண்டும். (1888-ம்வருஷம் ஜனவரிமீ 20உ போட்ட 142-ம் நெ. கவர்ன்மெண்டு உத்தரவைப் பார்க்க.)

(9) அடிக்கப்பட்ட அடிகள் பின்பக்கம் பிட்டத்தைத்தவிர உடம்பில் வேறு இடங்களில் விழுந்து விடாதபடி அடிக்கப்படவேண்டியவனை முக்காலியிலாவது அல்லது வேறு எதிலாவது அசையாமல் நன்றாகக்கட்டி வைத்துக்கொண்டு அடிக்கவேண்டும். (1883-ம் வருஷம் ஜனவரிமீ 1உ போடப்பட்ட 4-ம் நெ. கெஜட்டு நோட்டீசைப்பார்க்க.)

(10) ஒருவனுக்கு ஒரு கேசில் 6-மாதங் காவல்தண்டனையும், மற்றொரு கேசில் 6-மாதங் காவல்தண்டனையும் அடிதண்டனையும் விதிக்கப்பட்டிருந்தால், 2-வது கேசில் விதிக்கப்பட்ட அடி தண்டனையை அது விதிக்கப்பட்ட 15 நாள் கழித்தவுடனாவது, அல்லது அப்பீல் செய்யப்பட்டிருந்தால் அப்பீலில் அந்த அடி தண்டனை உறுதியானவுடனாவது, ஷை அடி தண்டனையை நிறைவேற்றிவிடவேண்டும். ஆனால் 2-வது கேசில் விதிக்கப்பட்ட காவல்தண்டனையானது, 1-வது கேசில் விதிக்கப்பட்ட காவல்தண்டனையை அனுபவித்துத் தீரும்வரை கி. பு. கோடு 397-வது பிரிவுப்படி நிறுத்திவைக்கப்படும். (ஜெயில் மானியூல் 986-வது ரூலைப்பார்க்க.)

(11) ஒரே நாளில் 2-கேசுகளில் ஒவ்வொரு கேசிலும் 30 அடிகள் விதிக்கப்பட்டால் 2 - வது கேசில் விதிக்கப்பட்ட அடிதண்டனை ரத்தாகிவிடும். அவனுக்கு ஒரு கேசில் விதிக்கப்பட்ட 30 அடிகளைத்தான் அடிக்கலாம். முன்னமேயே ஒரு கேசில் அடிதண்டனைப்பட்ட பிறகு வேறொரு கேசில் பின்னிடு அடிதண்டனை விதிக்கப்பட்டால் பின் கேசில் அடிதண்டனையை நிறைவேற்றுவதில் யாதொரு தடையுமில்லை. (ஜெயில் மானியூல் 987-வது ரூலைப்பார்க்க.)

(12) கி.பு. கோடு 391-வது பிரிவில் என்ன சொல்லி யிருந்தபோதிலும் ஒருவனுக்கு அடி தண்டனைத் தீர்ப்புச்சொல்லுங்காலத்தில் அவன் தேகத்திலாவது தோலின் பேரில் யேதாவது வியாதியிருந்தால் அந்த வியாதி தீர்ந்து அடி தண்டனையைப்பெற அவன் லாயக்காகும்வரை அடி தண்டனையை நிறுத்தி வைத்து லாயக்கானவுடன் தண்டனையை நிறைவேற்றவேண்டும். (ஜெயில் மானியூல், 988-வது ரூலைப்பார்க்க.)

(13) ஞாயிற்றுக்கிழமை, கிருஸ்து பிறந்தநாள், பெரிய வெள்ளிக்கிழமை (Good Friday) இந்த நாட்களில் அடிதண்டனையை நிறைவேற்றக்கூடாது. அதற்கு மறுநாள் நிறைவேற்றவேண்டியது.

## 85. அடி தண்டனை விதிக்கும்படி செய்யப்பட்ட தீர்மானத்தின்பேரில் அப்பீலில்லாத கேசுகள்.

ஒரு டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு, கேசுகளை கி.பு. கோடு 260-வது பிரிவுப்படி சுருக்கமாய் விசாரணை செய்யும்படி கவர்ன்மெண்டாரால் விசேஷமாய் அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிற 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள், மேற் கண்டபடியே செய்ய விசேஷ அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிற 1-வது வகுப்பு அதிகாரஞ் செலுத்துகிற பெஞ்சு மாஜிஸ்திரேட்டுகள், இவர்கள் கி.பு. கோடு 260-வது பிரிவுப்படி சுருக்கமாக விசாரித்து அடி தண்டனை மட்டும் விதிக்கிற கேசுகளில் அப்பீல் கிடையாது. (கி. பு. கோடு. பிரிவு 414.)

ஸெஷஷன்கோர்ட்டார், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு அல்லது வேறு 1-வது வகுப்பு மாஜிஸ்டிரேட்டு, இவர்கள் அடி தண்டனைமட்டும் விதிக்கிற கேசுகளில் அப்பீல் கிடையாது. (கி. பு. கோடு பிரிவு, 413.)

அடிதண்டனை விதிக்கப்பட்ட ஒரு கேசில், நல் நடத்தைக்கு ஜாமீன் வாங்கும்படி உத்தரவுசெய்யப்பட்டாலும் அடி தண்டனைக்கு அப்பீல் கிடையாது. ஏனென்றால் நல் நடத்தைக்கு ஜாமீன் கொடுக்கும்படி செய்யப்பட்ட உத்தரவானது ஒரு தண்டனை யல்ல. ஆகையால் நல் நடத்தைக்கு ஜாமீன் கொடுக்கும்படி செய்யப்பட்ட உத்தரவுடன் விதிக்கப்பட்ட அடி தண்டனையை அடி தண்டனை மட்டும் தனிமையாக விதிக்கப்பட்டதாகவேயே, எண்ணவேண்டும். (கி.பு. கோடு பிரிவு, 415.)

---

# குறிப்பு.

அடியில்கண்ட ஜெயில்ரூல் ஸம்மந்தமான விஷயங்களில் சிலது பூராவும் ரத்துச் செய்யப்பட்டும், சிலது சீர்திருத்தப்பட்டும், ரத்துச் செய்யப்பட்ட விஷயங்களுக்குப் பதில் ரூல்கள் பிறப்பிக்கப்பட்டுமிருக்கின்றன. நண்பர்கள் தயவுசெய்து அடியிற் கண்டவைகளை அந்தந்த விஷயத்திற்கு நேராக உடனே குறித்து வைத்துக்கொள்ளும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## விஷயங்கள்.

விஷயம் 95 (1) ல் "பெனிடென்ஷியரி என்னும் கிரிமினல் ஜெயிலும்" என்பதை அடித்துவிட்டு "குஷ்டரோக ஆஸ்பத்திரியில் கிரிமினல் கைதிகளை வைக்குமிடமுந்தான்" என்று படிக்கவும்.

விஷயத்தின் எண்ணம் 110-க்குப்பின், 111-போடுவதற்குப் பதிலாக 110-என்றே மறுபடி போடப்பட்டிருக்கிறது. 2-வது போடப்பட்டிருக்கிற 110-என்பதை 111-ஆக மாற்றிக்கொள்ளவும்.

### பூராவும் ரத்தாய்விட்ட விஷயங்கள்.

விஷயம் 84-ல் (12) 112, 203, 119, முதல் 138-வது விஷயம் முடிய, 150, 158, 210-வது விஷயம்.

இதற்குப்பதில் ரூல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் இந்தப் புஸ்தகத்தின் 149-முதல் 153-வது பக்கத்தில் 21-வது விதிவரை அடங்கியிருக்கின்றன. 390-வது விஷயத்தையும் படிக்க. 154, 155, 156-வது பக்கங்களையும் பார்க்க. இவைகளிலுள்ள சீர்திருத்தங்களுக்கு அடியில்கண்ட சீர்திருத்தங்களைக் கவனிக்க. விஷயம் 87, 38, 9-4ல் (2, 4,) 141, 142, 143, 145, சீர்திருத்தங்களுக்கு இந்தப் புஸ்தகத்தின் 156-வது பக்கத்தைப் பார்க்க.

# அத்தியாயம் 4.

## காவல் தண்டனையைப்பற்றிய விதிகள்.

2-வது, 3-வது அத்தியாயங்களில் அபராத தண்டனை, பிடி தண்டனை இவைகளைப்பற்றிச் சொல்லியாகிவிட்டது. இந்த அத்தியாயத்தில் காவல் தண்டனையைப் பற்றியும் அந்தத்தண்டனை நிறைவேற்றப்படுகிற விதத்தைப்பற்றியுஞ் சொல்லப்படும்.

தண்ணீர்மேலேற்றுந்தண்டனையென்பது தண்டிக்கப்பட்டப்பட்ட கைதிகளை ஆண்டமன் தீவுக்கனுப்பி அங்கே அவர்களைக் கடினமான வேலைகள் செய்யும்படிக்குட்படுத்திக் காவலில் வைப்பதுதான். ஆகையால் தண்ணீர் மேலேற்றுந் தண்டனையையும் கடினகாவல் தண்டனையாகவே பாவித்து அதைப்பற்றியும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சுதேசக்கைதிகளுக்கு தண்ணீர்மேலேற்றுந் தண்டனை விதிப்பதுபோல ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் இவர்களுக்கு சிக்ஷை ஊழியத்தண்டனை விதிக்கப்படுகிறது. சிக்ஷை ஊழியத்தண்டனை விதிக்கப்பட்டவர்களை தண்ணீர்மேலேற்றுகிறதில்லை. அவர்களை சென்னப்பட்டணம் பெனிடென்ஷியரியென்னுஞ் சிறைச்சாலையில் வைத்துக்கடினகாவல் வேலை வாங்கப்படுகிறது. ஆகையால் சிக்ஷை ஊழியத்தண்டனையையுங் கடின காவலாகவே எடுத்து அதைப்பற்றியும் இதே அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தண்ணீர்மேலேற்றுகிற அநேக கேசுகளில் சொத்தையும் பறி முதல் செய்யக்கூடியதாக யிருப்பதால், சொத்தைப் பறி முதல் செய்வதையும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தண்டிக்கப்பட்டப்பட்டவனுடைய சுவாதந்திரத்தைப்பிடுங்கி அவனைக் கண்டிப்பான நிபந்தனைகளுக்குள்ளாக்கி காவற்படுத்தி அடைத்துவைக்கும் இடத்திற்கு ஜெயில் (சிறைச்சாலை) யென்று பெயர். அப்பேர்ப்பட்ட சிறைச்சாலைகளின் விஷயத்தைப்பற்றி அடியில் சொல்லப்பட்டிருக்கிறது.

## ஜெயில்களின் வகுப்பு.

86. சென்னை ராஜதானியில் அடியிற்கண்ட விதமான ஜெயில்கள்தானிருக்கின்றன.

1. செண்ட்ரல் ஜெயில்கள். (Central Jails.) மத்தியிலுள்ள ஜெயில்கள்.
2. ஜில்லா ஜெயில்கள். (District J

3. விசேஷ ஜெயில்கள். (Special Jails.)

4. ஸப் ஜெயில்கள். (Sub-Jails.)—(ஜெயில் ரூல், 1)

1-2-வது ஸெண்ட்ரல் ஜெயிலின்னதென்பது.

87. ஸெண்ட்ரல் ஜெயில்களில் 1-வது, 2-வது வகுப்பு ஜெயில்களென்று இரெண்டு உண்டு. 1,000 கைதிகளாவது அதற்குமேற்பட்டாவது வைக்கும்படியான பெரியதாகக் கட்டப்பட்டவைகள் 1-வது வகுப்பு ஸெண்ட்ரல் ஜெயில்களென்றும், 1,000 கைதிகளுக்குக்குறைந்து வைக்கும்படி கட்டப்பட்டவைகளுக்கு 2-வது வகுப்பு ஸெண்ட்ரல ஜெயில்களென்றுஞ் சொல்லப்படும். 1-வது வகுப்பு ஸெண்ட்ரல் ஜெயில்கள் :—

| | |
|---|---|
| கோதாவரிஜில்லா ராஜமஹேந்திரத்திலும் | திருச்சினாப்பள்ளியிலும் |
| வட ஆற்காடுஜில்லா வேலூரிலும், | கோயம்புத்தூரிலுமாகிய |

4 இடங்களிலுமிருக்கின்றன.—(ஜெயில் ரூல், 2.)

ஸெண்ட்ரல் ஜெயில்களில் வைக்கப்படவேண்டியவர் யாரென்பது.

88. ஒரு வருஷத்திற்காவது அல்லது அதற்குமேற்பட்ட காலத்திற்காவது, காவல்தண்டனை விதிக்கப்பட்டவர்களையும், தண்ணீர்மேலேற்றுந் தண்டனையென்று சொல்லப்பட்ட தீவாந்தரத்திற்கு அனுப்பும் தண்டனைவிதிக்கப்பட்டவர்களையும் ஸெண்ட்ரல் ஜெயில்களில் வைக்கப்படும். ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரலினுடைய உத்தரவின்பேரில் ஒருவருஷத்திற்குக் குறைந்த காலத்துக்குத் தண்டனைப் பட்டவர்களையும் இந்த ஜெயிலில் வைக்கலாம். (ஜெயில் ரூல், 3.)

ஜில்லா ஜெயில்களில் 4-வகுப்புண்டு.

1-வகுப்பு ஜில்லாஜெயிலின்னதென்பது.

89. 500-அல்லது அதற்கு மேற்பட்ட கைதிகளிருக்கிற ஜெயில்கள்தான் 1-வது வகுப்பு ஜில்லா ஜெயிலென்று சொல்லப்படும். சென்னை இராஜதானியில் 1-வது வகுப்பு ஜில்லா ஜெயிலேயில்லை.

2-வது வகுப்பு ஜில்லா ஜெயில்கள்.

90. 300-க்கு மேற்பட்டு 500-க்குக் கீழ்ப்பட்ட தொகையுள்ள கைதிகளிருக்கிற ஜெயில், 2-வது வகுப்பு ஜில்லா ஜெயிலென்று சொல்லப்படுகிறது.

இவைகள் :—

| | |
|---|---|
| மதுரை, | பெல்லாரி, |
| தஞ்சாவூர், | விசாகபட்டணம். |

இந்த இடங்களிலிருக்கின்றன.

3-வது வகுப்பு ஜில்லா ஜெயில்கள்.

91. 150-க்குமேல் 300-க்குக் கீழ்ப்பட்ட தொகையுள்ள கைதிகளிருக்கிற ஜெயில்கள்தான் 3-வது வகுப்பு ஜில்லா ஜெயிலாகும்.

இவைகள் :—

தென் ஆற்காடு ஜில்லா கூடலூரிலும்
திருநெல்வேலி ஜில்லா, பாளையங்கோட்டையிலும்,
கஞ்சம் ஜில்லா பர்ஹாம்பூரிலும், இருக்கின்றன.

92. 50 பேர்களுக்கு மேற்பட்டும் 150-க்குட்பட்டும் தொகையுள்ள கைதிகளிருக்கும் ஜெயில் 4-வது வகுப்பு ஜில்லா ஜெயிலென்று சொல்லப்படு



4-வது வகுப்பு ஜில்லா ஜெயில்கள்.

இவைகள்:—

தென்கன்னடம் ஜில்லா மங்களூரிலும், நெல்லூரிலும்,
கஞ்சம் ஜில்லா ரஸல்கொண்டாவிலும்
இருக்கின்றன. (ஜெயில் ரூல், 4)

93. மேலேகண்ட ஜெயில்கள் எந்த ஜில்லாவிலிருக்கிறதோ அந்தஜில்லாக்கு அதுதான் ஜில்லா ஜெயிலாகவுமிருக்கிறது. (ஜெயில் ரூல், 5)

ஜில்லா ஜெயில்களில் வைக்கப்படவேண்டிய கைதிகள்.

94. ஜில்லா ஜெயில்களில், அந்தந்தஜெயில் எந்தெந்த ஜில்லாவிலிருக்கிறதோ அந்த ஜில்லாவுக்குள் ஒரு மாதத்திற்கு மேற்பட்டு 12-மாதங்களுக்குட்பட்டும் காவல் தண்டனை விதிக்கப்படுகிற கைதிகளும், ஸிவில் கைதிகளும், ஸெஷன்கோர்ட்டுக்குக் கமிட்டுச்செய்யப்படுகிற கைதிகளும் வைக்கப்படுவார்கள். (ஜெயில் ரூல், 6)

95. (1) இந்த ராஜதானியிலுள்ள விசேஷ ஜெயில்கள் சென்னப்பட்டணத்திலுள்ள பெனிடென்ஷியரி என்றும் ஸிரிமினல் ஜெயிலும், ஸிவில் ஜெயிலுந்தான். (ஜெயில் ரூல், 7)

பெனிடென்ஷியரியில் வைக்கப்படுங் கைதிகள்.

(2) சென்னப்பட்டணத்திற்குள் எவ்வளவு காலத்திற்காவது காவல் தண்டனை விதிக்கப்பட்டவர்களும், செங்கற்பட்டு ஜில்லா ஸைதாப்பேட்டை, பொன்னேரி, இந்தத்தாலூகாக்களில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குக் காவல் தண்டனை விதிக்கப்பட்டவர்களும், தண்ணீர் மேலேற்றுந் தண்டனை விதிக்கப்பட்டவர்களும், சென்னப்பட்டணத்துக்குள்ளிருக்கிற விசாரணைக்கைதிகளும், இந்த பெனிடென்ஷியரி யென்னுமிடத்தில் வைக்கப்படுவார்கள். தண்ணீர்மேலேற்றுந் தண்டனையை நிறைவேற்றும் பொருட்டு அண்டமன்தீவுக்கு அனுப்பப்படவேண்டிய கைதிகளும், இந்த ராஜதானியில் தண்டனையை அனுபவிக்கும்படி மாற்றப்படுகிற அன்னியதேசத்துக் கைதிகளும் இந்த ஜெயிலுக்குத்தான் வரவேண்டும். (ஜெயில் ரூல், 8.)

(3) சென்னப்பட்டணத்திலும், செங்கற்பட்டு ஜில்லாவிலுமுள்ள எல்லா ஸிவில் கடன்காரர்களும், மற்ற ஸிவில் கைதிகளும் இந்தப் பெனிடென்ஷியரியில்தான் வைக்கப்படுவார்கள். (ஜெயில் ரூல், 9.)

(4) தண்ணீர்மேலேற்றுந் தண்டனை விதிக்கப்பட்டவர்களில் வேறெரையும் ஸெண்ட்ரல் ஜெயில்களுக்காவது, பெனிடென்ஷியரிக்காவது அனுப்பவேண்டுமென்று ஹோம் டிபார்ட்டுமெண்டு 1868-ம் வருஷம் ஜுன் மீ 11வ போட்ட 953-ம் நெ. கோர்ட்டரின் மூலமாக இந்தியா கவர்ன்மெண்டாரவர்கள் உத்தரவு செய்திருக்கிறார்கள். (ஜெயில் ரூல், 14.)

(5) சென்னை ராஜதானியில் எந்தக் கோர்ட்டாராலேயாவது சிறைக் காழிய தண்டனை விதிக்கப்பட்டயாரையும், பெனிடென்ஷியரியில் தான் வைக்கவேண்டுமென்று ஹோம் டிபார்ட்டுமெண்டு 1857-ம் வருஷம் ஜன வரிமீ 10உ போட்ட 47-ம் செ. கோட்டின் மூலமாக இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். (ஜெயில் ரூல், 15.)

(6) இந்தியாதேசத்து சுதேசியில்லாதவும், கோர்ட்டு மார்ஷியல் என்னும் அதிகாரிகளால் தண்டிக்கப்பட்டவர்களு மான பட்டாளத்துக் கைதிகளை சென்னப்பட்டணம் பெனிடென்ஷியரியில் வைக்கும்படி 1881 - ம் வரு மார்ச்சுமீ உ போட்ட 163 - ம் செ. உத்திரவின் மூலமாக இந்தியா கவர்ன்மெண்டாரவர்கள் உத்தரவு செய்திருக்கிறார்கள். (ஜெயில் ரூல், 17)

96. ஒரு மாஜிஸ்திரேட்டின்முன் நடக்கப்போகிறகேசில் விசாரணைக் காகஜெயிலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறவர்களும், ஸெஷன் கேசுகளில் பிர தம விசாரணைக்காக கைதிசெய்யப்பட்டு ஜெயிலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறவர் களும், ஒரு மாதத்திற்காவது அல்லது அதற்குட்பட்ட காலத்திற்காவது காவல் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளும், போலீஸ் விசாரணைக் கைதிகளை அடைப்பதற்காகவே பிரத்தியேகமான கொட்டடிகளிருக்குமிடங்களில் போலீ சார் பந்தோபஸ்தில் 1[illegible] - மணிநேரத்திற்கு மேற்பட்டிருந்தவர்களையும், மற்ற மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுகளிலிருந்து ஸப் ஜெயிலிருக்கிற ஊரின் வழி யாக மற்ற இடங்களுக்குக் கொண்டுபோகப்படும் கைதிகளும், ஸப் ஜெயில் களில் வைக்கப்படுவார்கள். ஸெண்ட்ரல் ஜெயில், டிஸ்டிரிக்ட்டு ஜெயிலிரு க்கிற இடங்களில் ஸப் ஜெயில்இல்லாவிட்டால் மேற்கண்டவர்கள் ஸெண்ட் ரல் ஜெயில், டிஸ்டிரிக்கட்டு ஜெயில் இவைகளில் தான் வைக்கப்படுவார்கள். ஜெயில் ரூல், 12.)

97. கிரிமினல் புரொஸீடியூர்கோடில் ஐரோப்பிய பிரிட்டிஷ் குடிக ளென்று சொல்லப்பட்டிருப்பவர்கள் தண்டனை யடைந்தவர்களை அடியிற் கண்ட ஜெயில்களில் வைக்கலாம்.

| | |
|---|---|
| ராஜமஹேந்திரம், வேலூர், சேலம், | கோயம்புத்தூர், திருச்சினாப்பள்ளி. |

இந்த இடங்களிலுள்ள ஸெண்ட்ரல் ஜெயில்களிலும், பெனிடென் ஷியரியிலும்.

| | |
|---|---|
| பர்ஹாம்பூர், விசாகப்பட்டணம், பெல்லாரி, கடலூர், | தஞ்சாவூர், மதுரை, பாளையங்கோட்டை, மங்களூர். |

இந்த இடங்களிலுள்ள ஜில்லா ஜெயில்களிலும், கொச்சியிலுள்ள ஸப் ஜெயிலிலும் வைக்கலாம். (ஜெயில் ரூல், 16.)



98. காவல் தண்டனையானது (1) வெறுங்காவலென்றும் (2) கடின காவ லென்றும் இருவகைப்பட்டதாக யிருக்கிறது.

கைதிக்கு யாதொரு வேலையுங் கொடுக்காமல், அவனை ஜெயில் சிப்பந்தி களுக்குட்படுத்தி இரவும் பகலும் ஜெயிலில் அடைத்து வைத்திருப்பது தான் வெறுங்காவலென்பது.

## 99. வெறுங்காவல் தண்டனைமட்டும் விதிக்கக்கூடிய குற்றங்கள்.

24 - மணிநேரம் வரை—இ. பி. கோடு 510-வது பிரிவு.

1 - மாதம் வரை—இ. பி. கோடு 172, 173, 174, 175, 176, 187-வது பிரிவில் முதற்பாகம், 188, 341, 358-வது பிரிவுகள்.

3 - மாதம் வரை—இ. பி. கோடு 180-வது பிரிவு.

6 - மாதம் வரை—இ. பி. கோடு 172, 173, 174, 175, 176, 187-வது பிரிவில் 2-ம் பாகம், 228, 291-வது பிரிவுகள்.

1 - வருஷம் வரை—இ. பி. கோடு 163, 166, 168, 309, 509-பிரிவுகள்.

2 - வருஷம் வரை—இ. பி. கோடு, 165, 169, 223, 225-A, 500, 501, 502-வது பிரிவுகள்.

3 - வருஷம் வரை—இ. பி. கோடு, 129-வது பிரிவு.

## வெறுங்காவல் தண்டனையை நிறைவேற்றும் விதம்.

100. (1) வெறுங்காவல் கைதிகளை, மற்றவிதமான காவல்தண்டனை யடைந்த கைதிகளோடு வைக்காமல் பிரத்தியேகமாக வைக்கவேண்டும். (ஜெயில் ரூல், 966.)

(2) கடின காவல் தண்டனைக் கைதிகளுக்கு காலில்போடும் இரும்புக்காப்பு, இவர்களுக்குப் போடப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 964.)

(3) இவர்கள் ஜெயில் உடை தரித்துக்கொள்ளவேண்டியதில்லை, தங்கள் வழக்கமான சொந்த உடையை தரித்துக்கொண் டிருக்கலாம். இவர்களுக்குப் போதுமானபடி சொந்த உடை கொடுக்கப்படாத விஷயத்தில் [illegible] உடை யைக் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 964.)

(4) இவர்களுக்குக் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்ட வர்களுக்குக் கொடுக்கப்படுகிற சாப்பாடு கொடுக்கப் படமாட்டாது. வேறு தாரதம்மியமான சாப்பாடு கொடுக் கப்படும். (ஜெயில் ரூல், 965.)

(5) இவர்கள் ஜெயிலுக்குவரும்போது குடுமி வைத்துக்கொண்டிருந்தால் அதை யெடுத்துவிடும்படி இவர்களைக் கட்டாயஞ் செய்யக்கூடாது. ஆனால் கைதிகளின் தேக சுகத்தை உத்தேசித்து, க்ஷௌரஞ்செய்துகொள்ளும் விஷயத்திலும், மயிர் கத்தரித்துக்கொள்ளும் விஷயத்திலும் அப்போதைக்கப்போது செய்யப்படுகிற ரூல்களின்படி இவர்கள் நடக்கவேண்டும். (ஜெயில் ரூல், 964.)

(6) இவர்களுக்கு யாதொருவேலையுங் கொடுக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 958–59.)

(7) இவர்களுக்குக் கடினகாவல்தண்டனைக் கைதிகள்செய்கிற வேலைகளைச்செய்ய இஷ்டமிருந்தால், ஜெயில் ஆக்ட்டு 56–வது பிரிவில் கண்டபடி ஜெயில் சூப்பிரின்டெண்டாண்டு வேலை கொடுக்கவேண்டும். அப்படி வேலை கொடுக்கப்படுகிற வெறுங்காவல் தண்டனைக் கைதிகளுக்கு, அவர்கள் தண்டனையின் நீடித்த காலத்திற்கு வஜாக் [illegible]க்கூடியதாயிருந்தால், தண்டனை வஜாவும், கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிற உத்தியோகங்களும் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 959.)

(8) இவர்கள் வைக்கப்பட்டிருக்கிற ஜெயில் கட்டடங்களையும் உடைகளையும் இவர்களே சுத்தி செய்துகொள்ளவேண்டும். தங்களுடைய உடைகளையும் படுக்கைகளையும் உத்தரவுப்படி துப்புறவாக மடித்து அடுக்கிவைத்துக் கொள்ளவேண்டும். இவர்களுடைய சாப்பாட்டை இவர்களையே சமயல் செய்துகொள்ளும்படி இவர்களைக் கட்டாயப்படுத்தலாம். ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிற மற்ற வெறுங்காவல் கைதிகளுடைய சாப்பாட்டையும் இவர்களையே முறைபோட்டுச்சமயல் செய்யும்படி உத்தரவு செய்யலாம். இவர்கள் வீட்டிலிருக்கும்போது சமயல் வேலை செய்யக்கூடிய வகுப்பாரைச் சேர்ந்தவர்களாகயிருந்தால் மாத்திரந்தான் இப்படிச்செய்யும்படி சொல்லலாம். (ஜெயில் ரூல், 960.)

(9) மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்யும்படியாவது, அல்லது இழிவான வேலைகளைச் செய்யும்படியாவது இவர்களைக் கட்டாயஞ்செய்யக்கூடாது. (ஜெயில் ரூல், 961.)

(10) பகல் காலங்களில் ஜெயிலில் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இடத்திலேயே இவர்கள் இருக்கவேண்டும். ஜெயிலில் அங்குமிங்கும் திரியவாவது அல்லது வேலை செய்யும் இடங்கள் அல்லது வேலைக்கூடங்கள் இவைகளில் போகவாவது கூடாது. (ஜெயில் ரூல், 962.) [illegible]ப்பரிண்டெண்டாண்டும், மெடிக்கல் ஆபீஸரும், அப்படிச் செய்வது உசிதமென்று நினைத்தால், காலையில் ஒருமணி நேரமும், மாலையில் ஒருமணிநேரமும், தேகாப்பியாஸத்திற்காக, இந்தக் கைதிகளை வெளியில் உலாவும்படி கட்டாயஞ் செய்யலாம். (ஜெயில் ரூல், 962.)

101. ஜெயில் நிபந்தனைகளுக்குட்படுத்தி கைதியை பகல் காலத்தில் வேலைவாங்கி இராக்காலத்தில் ஜெயிலில் அடைத்து வைப்பதுதான் கடினகாவலென்பது.

கடினகாவலாவதென்ன?

102. காவல் தண்டனை விதிப்பதில் விதிக்கப்படுகிற காவல் தண்டனையில் சிலபாகம் கடினமான காவலாகவும், சிலபாகம் வெறுங்காவலாகவு மிருக்கலாம். (இ. பி. கோ. பிரிவு 60.)

## கடினகாவல் தண்டனையைப்பற்றிய விஷயங்கள்.

103. கடினகாவல் தண்டனை விதிக்கக்கூடிய கேசுகள்.

2-வது அத்தியாயம் 27-வது பாராவில் அபராத தண்டனைமட்டும் விதிக்கக்கூடிய தென்றும், 4-வது அதியாயம். 99-வது பாராவில் வெறுங்காவல் தண்டனைமட்டும் விதிக்கக்கூடிய தென்றுஞ்சொல்லப்பட்ட பிரிவுகளில் கண்டதும், இதற்குப்பின்னால் தண்ணீர்மேலேற்றுகிற தண்டனை விதிக்கக்கூடியதாயும், மரண தண்டனை விதிக்கக்கூடியதாயுஞ் சொல்லப்பட்ட குற்றங்களைத்தவிர இ. பி. கோடின் மற்றெல்லாப் பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்களுக்கும் கடினகாவல் தண்டனை விதிக்கலாம்.

கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிற கைதிகளுக்கு அடியில் கண்ட வேலைகள் கொடுக்கப்படுகிறது. அந்த வேலைகள் கடினமான வேலைகளென்றும், மத்தியமான வேலைகளென்றும், எளிதான வேலைகளென்றும் மூன்று பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

104. கடினகாவல் தீர்ப்படைந்திருக்கிற கைதியானவன், மேழே கடினமானதென்றும், மத்தியமமானதென்றும், லேசானதென்றுஞ் சொல்லப்பட்ட வேலைகளில் எதைச்செய்யலாயக்கானவ னென்பதையும், அவனுக்கு என்ன வேலை கொடுக்கலாமென்பதையும்பற்றிமெடிகலாபீசர் அபிப்பிராயங்கொடுக்க வேண்டும். கைதிக்குக் கொடுக்கவேண்டிய வேலை இன்ன வகுப்பைச் சேர்ந்த தென்பதைப்பற்றி மெடிகல் ஆபீஸர் கொடுக்கும் அபிப்பிராயத்தை ஜெயில் சூப்பிரின்டெண்டாண்டு ஆக்ஷேபித்தால், அதைப்பற்றி சூப்பிரின்டெண்டாண்டு, ஜெயில் இனிஸ்பெக்ட்டர் ஜெனரலுக்கு எழுதிக்கேட்டுக் கொள்ளலாம். (ஜெயில் ரூல், 332.)

கைதி இன்னவேலை செய்ய லாயக்கென்பதை மெடிகல் ஆபீசர் செயல்வேண்டும்.

105. இன்ன வகுப்பைச்சேர்ந்த வேலையைச்செய்ய கைதி லாயக்கானவனென்று [illegible]ப்பிரின்டெண்டாண்டு அபிப்பிராயங்கொடுத்த பிற்பாடு, கைதிக்கு இன்னவேலை கொடுப்பதென்பதைத் தீர்மானிப்பது சூப்பிரின்டெண்டாண்டைச் சேர்ந்தவிஷயம். இப்படி கைதிக்கு வேலைகொடுப்பதில், கைதியின் தேகபலத்திற்கு மிஞ்சினதாக யிருக்கிற வேலையைக் கொடுத்துவிடாமல் ஜாக்கிரதையாக யிருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 503.)

[illegible]

106. பொதுவாய் கடினகாவல்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிற கைதிகளின் தண்டனையை நிறைவேற்றப்படுகிற [illegible] தண்ணீரிறைப்பது, தண்ணீர் சுமந்துகொண்டுபோவது, [illegible] விதித்த [illegible]டவேண்டிய யந்திரங்களில் வேலைசெய்வது, கல்லுடைப்பது முதலிய [illegible] மிகவும் கஷ்டமாயுள்ள வேலைகள் கொடுக்கப்படவேண்டும். (ஜெயில் ரூல், 504.)

கடினகாவல்தண்டனை ஆரம்பத்தில் கைதிக்குக் கொடுக்கப்[illegible] [illegible]வேண்டிய [illegible]கைகள்.

17. ஜெயிலில் கடினகாவல் கைதிகளை அடியிற்கண்ட விதமாகவெல்லாம் வேலை வாங்குகிறார்கள்.

**கடினமானதாக எடுத்திருக்கும் வேலைகள் :**

1} 2} காலால் மிதித்து ஓட்டும் எந்திரங்களில் வேலை செய்வது.
3 மருமத்துவேலைகள் செய்வது.
4 ரோட்டுப்போடுகிற வேலை.
5 மண்வெட்டு.
6 கொத்தன் வேலை. (கட்டட வேலை).
7 கல் தோண்டுவது, உடைப்பது, அல்லது பிளப்பது.
8 மண், தண்ணீர், மற்ற சாமான்கள் சுமப்பது.
9 தண்ணீர் இறைப்பது.
10 விறகு பிளப்பது.
11 சுண்ணாம்பு அரைப்பது.
12 செங்கல் போட செய்வது.
13 கற்றாழை, தென்னம்மட்டை இவைகளை அடித்து நார்எடுப்பது
14 செக்கு இழுத்து எண்ணை ஆட்டுவது
15 தானியங்களைத் திரிப்பது.
16 தானியங்களை குத்தி துப்புரவு செய்வது
17 செங்கல், ஓடு, இவை செய்வது.
18 மரம் அறுப்பு, மோட்டாதச்சு வேலை இவை செய்வது.
19 கொல்வேலை.
20 அச்சியந்திரவேலை.
21 அச்சடிப்பது.
22 மத்தியமமான வேலை தர்ஜாவில் சேர்க்கப்படாத எல்லா நெசவு வேலையுஞ் செய்வது.
23 கை நெசவு.
24 நூல் நூற்பது.
25 கம்பிளி நெசவு.
26 உரோமம் அல்லது பஞ்சு இவைகளை அடிப்பது.
27 கம்பளி அடித்துச் சுருக்குவது.
28 கயர் திரிப்பது.
29 குயவன் வேலை.
30 காயித அட்டைகள் செய்வது.
31 தோட்டிவேலை, துப்புவேலை, கக்குசுசுத்தி செய்வது முதலிய வேலைகள் செய்வது.
32 சமையல் வேலை.

**மத்தியமமான வேலைகள்.**

1 ஜமக்காளம் நெசவு.
2 நாடா, பணப்பை நெசவு.
3 அச்சடித்துணி செய்வது.
4 கூடை முடைவது, மூங்கில் பிரம்பு இவைகளில் வேலைசெய்வது.
5 சாதாரணமான தச்சு வேலை.
6 தோல் வேலை.
7 தகர வேலை.
8 புஸ்தகம் பைண்டு செய்வது (கட்டுவது).
9 சாயங்காய்ச்சுகிற வேலை.
10 பானுன் வேலை (தையல் வேலை).
11 கூடாரம் உண்டுபண்ணுவது.
12 சாக்குத் தையல் வேலை.
13 தானியங்களை குத்துவது.
14 தானியங்களை குப்பைபோக வீசுவது.
15 மாத்தென்னுவது.
16 தானியங்களை வெட்டுவது அல்லது சிறுப்பது.
17 லாந்தல்கள், பாத்திரங்கள் இவைகளை சுத்திசெய்வது.
18 ஜெயிலில் கொட்டடிகளை வர்ண மடிப்பது அல்லது துப்புறவு செய்வது.
19 தட்டுமுட்டுச் சாமான்களுக்கு வர்ணம் பூசுவது.
20 தோட்டவேலை பார்ப்பது.
21 வெளுப்பு வேலை.
22 உரோமம் கத்தரிப்பு (க்ஷௌர வேலை).

**இலேசான வேலைகள்.**

1 நூல் அல்லது நார் கயறு முறுக்குவது.
2 நார், உரோமம், அல்லது நூல் பன்னுதல்.
3 நூல் சுற்றும் தடிகள் செய்வது.
4 பிரம்பு பிளந்து இழைப்பது.
5 பாத்திரங்களில் வர்ணம் பூசுவது.
6 கடிதாசு மடித்தல்.
7 காகிதக்கவர் (கூடுகள்) செய்தல்.
8 கடிதாசுகளை உலர்த்துதல்.
9 காய்கறி நறுக்குவது.
10 தானிய வகையராவைப் புடைப்பது அல்லது தூற்றுவது.
11 துப்பு வேலை.
12 தோட்டத்தில் களை எடுப்பது முதலிய இலேசான வேலைகள்.

தண்டனைப் பருவம் (The Penal Stage.)

10) கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்ட ஒவ்வொருகைதியும் வேலை செய்ய ஆரம்பித்த முதல்மூன்றுமாதங்களில் தண்டனை யனுபவிக்கிறபருவத்தில் (The Penal stage) வேலைசெய்கிறனென்று சொல்லப்படுவான். (ஜெயில் ரூல், 341.)

இந்த மூன்றுமாதமும் கைதி இராக்காலத்தில் பிரத்தியேகமான ஒரு அறையில் அடைக்கப்பட்டுத் தனிமையாகத் தூங்கவேண்டும். (ஜெயில் ரூல், 342.)

(3) இப்படித் தண்டனைப்பருவத்தை அனுபவிக்கிற கைதிகளின் எண்ணிக்கைக்குத் தக்கபடி தனிக்கொட்டடிகளில்லாத விஷயத்தில், இருக்கும் தனிக்கொட்டடிகளை அடியிற்கண்ட வரிசைப்படி உபயோகப்படுத்தவேண்டும்.

(4) முதலாவது, இ. பி. கோடு 12-வது அத்தியாயப்படி நாணயங்கள், சர்க்கார் முத்திரைகள், (லேபில்கள்) இவைகள் சம்மந்தமான குற்றங்களைச் செய்ததற்காகவாவது, அல்லது சொத்துகள் சம்மந்தமான குற்றங்களைச் செய்ததற்காகவாவது, கடினகாவல்தண்டனை விதிக்கப்படப்பட்டவர்களை காலியிருக்கப்பட்ட தனிக்கொட்டடிகளில் அடைத்துவிடவேண்டும்.

(5) அவர்களுக்குப்போக மீதியிருக்குங் கொட்டடிகளில் இந்தியன் பினல்கோடின் மற்ற அத்தியாயங்களின்படி தண்டனை விதிக்கப்பட்டவர்களை அடைக்கவேண்டும். அவர்களுக்கும்போக மீதமிருந்தால்தான் அவைகளில் மற்ற ஆக்ட்டுகளின்படி தண்டிக்கப்பட்டவர்களை அடைக்கவேண்டும். (ஜெயில் ரூல், 343.)

தண்டனைப் பருவத்தை அனுபவிப்பவர்கள் செய்ய வேண்டிய வேலைகள்

109. தண்டனைப்பருவத்தை அனுபவிக்கிறவர்களுக்கு அடியிற்கண்ட வேலைகளைக் கொடுக்கவேண்டும்.

1. காலினுல் மிதித்து ஓட்டவேண்டிய யந்திரங்களில் வேலைசெய்வது.
2. தண்ணீர் இறைப்பது, தண்ணீர் சுமந்துகொண்டு போவது.
3. விறகு கீறுவது.
4. கல் தோண்டுவது, கல் உடைப்பது.
5. கொத்த வேலை.
6. மண் வேலை.
7. தேங்காய் மட்டை, அல்லது சத்தாழையிலிருந்து நார் எடுப்பது.
8. கம்பளி உரோமம் அடித்துத் தயார்செய்வது.
9. கம்பளி அடித்துச்சுருக்குவது அல்லது நெய்யச்செய்வது.
10. செக்கு இழுத்து எண்ணெ எடுப்பது.
11. தானியங்களைத் திரிகைகளில் மாவாக அரைப்பது, அல்லது உரல்களில் இடிப்பது.
12. சுக்கான் எடுப்பது.

குறிப்பு:—ஜெயில்குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கும் மேற்கண்ட வேலைகளைக் கொடுக்கலாம், தண்டனைப்பருவத்தை



அனுபவிக்கிற கைதிகளில் மேற்கண்ட வேலைகளைச் செய்யப் போதுமான எண்ணமுள்ளவர்களில்லாவிட்டால், மற்றக் கைதிகளையும் மேற்கண்ட வேலைகளில் போடலாம். (ஜெயில் ரூல், 344.)

110. தண்டனைப்பருவத்தை அனுபவிக்கிற கைதி, மேற்கண்ட வேலைகளைச்செய்ய லாயக்குள்ளவனென்று மெடிகல் ஆபீசர் அபிப்பிராயங்கொடுத்தால்தான் மேற்கண்டவேலையில் எதையும் அவனுக்குக் கொடுக்கலாம். (ஜெயில் ரூல், 345.)

110. மேற்கண்ட வேலைகளைச்செய்ய லாயக்கில்லாதவனென்று மெடிகலாபீஸரால் அபிப்பிராயங் கொடுக்கப்படுகிற தண்டனைப்பருவத்தை அனுபவிக்கிற கைதியை, பகலும் இரவும் ஒரு அறையில் அடைத்து வைத்து அவனுக்குத்தக்க வேலைகொடுத்து வேலைவாங்கவேண்டும். (ஜெயில் ரூல், 346.)

தண்டனைப் பருவத்தை அனுபவிக்கிறவன் கோணியல் உடைதான் தரித்துக்கொள்ளவேண்டும்

112. தண்டனைப்பருவத்தை யனுபவிக்கிற ஒவ்வொரு ஆண்பிள்ளைக் கைதியும், சாக்கு (கோணியல்) உடைதான் தரித்துக்கொள்ளவேண்டும், லங்கோட்டி, (கோவணம்) மாத்திரம் துணியினுல் கொடுக்கப்படும். அடிக்கடி குற்றஞ்செய்து தண்டனைப்பட்டு ஜெயிலுக்கு வழக்கமாக வருகிற கைதிகளுக்கு நீலக்குல்லாக் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 347.)

113. பகலும், இரவும் ஜெயிலிலேயே வைக்கப்பட்டிருக்கிற தண்டனைப்பருவத்தை அனுபவிக்கிற கைதிகளை, தினஸரி சூப்பிரிண்டெண்டாண்டும் மெடிகல் ஆபீஸரும் பார்த்துவரவேண்டும். அப்படி பகலும் இரவும் ஜெயிலில் வைத்திருப்பதினுல் ஒரு கைதியின் தேகசுகங்கெட்டுப்போவதாக மெடிகல் ஆபீஸர் அபிப்பிராயங்கொடுத்தால் அவனை பகல்கால[illegible] வைத்தே வேலை வாங்கவேண்டும். (ஜெயில் ரூல், 348.)

114. கைதிகளுக்குவேலை கொடுப்பதில் கூடியவ[illegible] வேலைதான் கொடுக்கவேண்டும். (உதாரணம்) ஒரு பி[illegible] அல்லது உயர்ந்த ஜாதிக்காரனையாவது சக்கிலியவேலை[illegible] செய்யும்படிசெய்யக்கூடாது. ஆனால் [illegible]மானவேலை செ[illegible] உயர்ந்த ஜாதியாயிருப்பதை ஒரு காரணமாக வைத்துக்[illegible] (ஜெயில் ரூல், 505.)

115. ஒவ்வொரு கைதியும் நாளொன்றுக்கு 8-[illegible] குறையாமலும் 9-மணிநேரத்திற்கு மேற்போகாமலும் வே[illegible]டும். (ஜெயில் ரூல், 507.)

கைதிகள் இன்னின்ன வேலையை இவ்வளவு காலத்தில் கற்றுக்கொள்ளவேண்டுமென்பது.

116. கைதிகளுக்கு ஒவ்வொருவேலையையும் கற்றுக்கொள்ளுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் வாயிதா இவ்வளவென்பன அடியிற் சொல்லப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| நூல் சுற்றுவதைக் கற்றுக்கொள்ளுவதற்கு | | 7-நாள். |
| கயர் முறுக்குவதை | ஷை | 7-நாள். |
| பாவோட்டுகிறதை | ஷை | 7-நாள். |
| பாவுக்கு கஞ்சி போடுகிறது | ஷை | 7-நாள். |
| கைதிகள் உடுப்புத்துணி நெசவு | ஷை | 1½-மாதம். |
| செக்குத்துணிகள், மஸ்லின், மெல்லிய துணிகள், இவைகளை நெசவு செய்யக் கற்றுக்கொள்ள | | 3-மாதம். |

சேவகன் டவாலி செய்யக் கற்றுக்கொள்ள 1-மாதம்.
...ஜயில் நாடா ,, 7-நாள்.
கூடாரத்து நாடா, சிக்கார்கள் கட்டுகிற ஆய்ஸ் நாடா, இவைகள் செய்யக் கற்றுக்கொள்ள 15-நாள்.
பகுதாக்கள், ஜமக்காளங்கள் இவை நெசவு செய்யக் கற்றுக்கொள்ள 1-மாதம்.

## தையல் வேலை.

கைதிகளின் உடுப்புத் தைக்கக் கற்றுக்கொள்ள 1-மாதம்.

## உரோம வேலை.

உரோமத்தை நெசவுக்காக அடித்துத் தயார்செய்யக் கற்றுக்கொள்ள 21 நாள்.
உரோமம் நூர்ப்பதைக் கற்றுக்கொள்ள 15-நாள்.
கம்பளி நெசவுசெய்யக் கற்றுக்கொள்ள 1-மாதம்.

## தோல் வேலை.

மிதியடிகள் செய்யக் கற்றுக்கொள்ள 1-மாதம்.

## கயர் வேலை.

மட்டைகளை அடித்துக் கயராக முறுக்குவதற்குக்கற்றுக்கொள்ள 7-நாள்.
தென்னைக்கயிற்றினால் பாய் நெசவுசெய்யக் கற்றுக்கொள்ள 15-நாள்.

## சில்லறை வேலைகள்.

கற்றாழை நார்க்கயிற்றினால்பாய் நெசவுசெய்யக் கற்றுக்கொள்ள 15-நாள்.
கேப்பை, சோளம் இவைகள் அரைத்து மாவாக்கக்கற்றுக்கொள்ள 7-நாள்.
கல் உடைக்கக் கற்றுக்கொள்ள 7-நாள்.
கோரம்பாய் நெசவுசெய்யக்கற்றுக்கொள்ள 15-நாள். (ஜெயில் ரூல்,519.)

ஒரு கைதி ஒரு நாளைக்குச் செய்யவேண்டிய வேலையின் அளவு.

117. (1) மேலேகண்ட வாயிதாவுக்குள் ஒவ்வொரு வேலையையுங் கற்றுக்கொண்டு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தினுசு வேலையிலும் ஒவ்வொரு கைதியும் செய்யவேண்டுமென்று யேர்ப்படுத்தப்பட்டிருக்கிற அளவுசெய்து முடிக்க வேண்டும். ஒரு தினுசு வேலையில் ஒரு நாளுக்கு ஒரு கைதி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிற வேலையானது, அந்தந்தவேலையில் நன்றாய்த் தேர்ச்சியடைந்த சுறு சுறுப்புள்ள ஒரு மனிதன் ஒரு நிமிஷங்கூட வீண்போக்காமல் ஜாக்கிரதையாகச் செய்தால் எவ்வளவு வேலை செய்து முடிக்கலாமோ அவ்வளவு வேலை கடுத்தமாக யேர்ப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஏற்பட்ட வேலையை சரியாய்ச் செய்து முடிப்பதனால் கிடைப்பதென்ன?

(2) ஏற்படுத்தப்பட்ட அளவுக்கு வேலையைச்செய்து முடித்த ஒவ்வொரு கைதிக்கும் தினசரிமார்க்குகள் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 520.)



ஏற்பட்ட வேலையை சரியானபடி செய்யாவிட்டால் என்ன?

118. வேலை செய்யமாட்டேனென்று சொல்வது, சோம்பேரித்தனமாக யிருப்பது, வேலையைக் கெடுதலான மாதிரியாகச் செய்வது, இவைகளெல்லாம் ஜெயில் ஆக்ட்டு 45-வது பிரிவுப்படி குற்றமாகிறது. அவைகளுக்கெல்லாம் ஜெயில் தண்டனை கிடைக்கும். (ஜெயில் ரூல், 521.)

## ஜெயிலில் கொடுக்கப்படும்வேலைகளை நன்றாய்ச்செய்து நல் நடத்தையுடன் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் மார்க்குகளையும் தண்டனை வஜாவையும் பற்றிய விஷயங்கள்.

119. வஜா யேர்ப்பாட்டிற்காகத் தண்டனைக் கைதிகளை மூன்று வகுப்பாக விருக்கப்பட்டிருக்கிறது. அவைகளாவன:—

(1) கந்தித்திருடர்கள், விஷபதார்த்தங்களைக்கொடுத்துக் கொள்ளை செய்பவர்கள், கொள்ளை செய்வதையே தொழிலாகக் கைக்கொண்டிருப்பவர்கள், பரம்பரைக்கொள்ளைக்காரர்கள், அல்லது கொள்ளைபோலொத்த விசேஷமாக அபாயகரமாயுள்ள கொடிய குற்றங்களை வழக்கமாய்ச்செய்து தண்டனைப்படுகிறவர்கள்.

(2) அதே தொழிலாகக் கைக்கொள்ளாமலேயாவது, அல்லது பரம்பரையாகவாவது யில்லாமல் கொடிய குற்றச்செய்கைகளைச் செய்ததற்காக தண்டிக்கப்பட்டவர்கள்.

(3) மற்றக்குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட கைதிகளென்கிற வகுப்புகள்.

ஜாமீன் கேசுகளில் தண்டிக்கப்பட்டவர்களும் கிரிமினல் கைதிகள் தான்.

120. நல்நடத்தைக்காக அல்லது சீமை சமாதானத்திற்கு விரோதமாகக்கலகஞ் செய்யாமலிருப்பதற்காக, ஜாமீன் வாங்குகிறகேசுகளில் தண்டிக்கப்பட்டவர்களும் கிரிமினல் கைதிகளென்று தான் சொல்லப்படுவார்கள். அவர்களுக்கும், ஜெயில் தண்டனைகள், தண்டனை வஜா விதிகள், இவைகள் சம்மந்தப்படும். (ஜெயில் ரூல், 418.)

வெறுங்காவல் ...ளும் ...செய்தால் ...குகள் கொடுக்கப்படும்.

121. அபராதஞ் செலுத்தத் தவறினால் விதிக்கப்படுகிற காவல்தண்டனை நீங்கலாக, குற்றத்திற்காக கொடுக்கப்பட்ட தண்டனை அல்லது மொத்தத் தண்டனை ஒரு வருஷமாவது அல்லது அதற்குமேற்பட்டாவதிருந்தால், அவர்கள் செய்கிற நல்லவேலைகளுக்கு மார்க்குகள் கொடுக்கப்படும். வெறுங்காவல்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தங்கள் தண்டனைக்காலம் பூராவும் வேலை செய்வதாகத் தாங்களாகக் கேட்டுக்கொண்டு அவ்விதமே திருப்திகரமாக வேலை செய்தால் அவர்கள்செய்கிற வேலைகளுக்கும் மார்க்குகள் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 419.)

122. மார்க்குக்கொடுப்பது, தண்டனை வஜாச் செய்வதுமுதலிய விஷயங்களுக்காக ஆயுசுபரியந்தந் தண்டனையென்பது அடியிற்கண்டபடி அர்த்தமாகும்.

மேலே ஜெயில் ரூல், 418-ல்க்கண்ட 1, 2-வது வகுப்புக் கைதிகள் விஷயத்தில் ஆயுசுபரியந்தந் தண்டனை என்பது 25-வருஷமாகவும், மற்ற கைதிகள் விஷயத்தில் 20-வருஷமாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (ஜெயில் ரூல், 420.)

## 123. மார்க்குகள் கொடுக்கப்படும் விதம்.

(எ) மிகவும் நல் நடத்தையாய் ஜெயில் ரூல்களையெல்லாம் நன்றாகக் கவனித்து அவைகளின்படி நடப்பவர்களுக்கு தினவரி 1-மார்க்கும்.

(பி) தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைப் பாக்கியில்லாமல் திருப்திகரமாகச் செய்வதற்குத் தினஸரி 1-மார்க்கும்.

(ஸி) விசேஷமாக யுக்தி புத்திகளைக் காட்டி நல்லமாதிரியான வேலை செய்த தினங்களில் அப்பேர்பட்ட வேலைக்காக அதிகமான மார்க்குகளும் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 423.)

124. ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்ற விடுமுறை (ரஜா) நாட்களிலும் வேலை நிறுத்தப்படும். அந்த நாட்களில் கைதிகளுக்கு நல் நடத்தைக்காக மட்டுந்தான் மார்க்குக் கொடுக்கப்படும். ஆனால் சமயல்வேலை, துப்புவேலை தோட்டிவேலை, முதலிய கட்டாயமாகச்செய்து தீரவேண்டிய வேலையில் போடப்பட்டிருப்பவர்களுக்கு விடுமுறை நாட்களிலும் வேலைக்குமார்க்குண்டு (ஜெயில் ரூல், 425.)

125. வியாதியாக ஜெயில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கிற கைதிகளுக்கும், நல் நடத்தைக்காகக் கொடுக்கப்படும் மார்க்கு, ஆஸ்பத்திரியிலிருக்குங்காலத்திலுங் கொடுக்கப்படும். ஆனால் ஆஸ்பத்திரியிலிருக்குங்காலத்தில் தப்பான சங்கதிகளைச் செய்வதினால் வியாதியைக் குணப்பட வொட்டாமலாவது அல்லது அதிகரிக்கும்படிக்காவது செய்பவர்களுக்கு நல் நடத்தைக்காக தினஸரியாகக் கொடுக்கப்படும் மார்க்குகள் கொடுக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 426.)

126. கைதி ஆக்ட்டின்படி கோர்ட்டுகளுக்குச் சாட்சி சொல்லும்பொருட்டு அனுப்பப்பட்டிருக்கிற கைதிகளுக்கு ஜெயிலைவிட்டுப் போனதுமுதல் கோர்ட்டிலிருந்து திரும்பவந்து சேரும்வரை நல் நடத்தைக்காக தினஸரி மார்க்குக் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 427.)

127. அடியிற் கண்டதுபோலொத்த விசேஷமான செய்கைகளைச் செய்வதற்காக அதிக மார்க்குகள் கொடுக்கப்படும்:—

விசேஷ மார்க்குகளைச் சம்பாதிக்கக்கூடிய செய்கைகள்.

(1) ஜெயில் ஒழுங்கு அல்லது ஜெயில் விதிகளை மீறி நடப்பதைத்தடுப்பது, அல்லது மீறி நடந்ததைக் கண்டுபிடிப்பது, அல்லது அப்படிச்செய்வதற்கு உதவிசெய்வது.

ஏதும் கைத்தொழில்களை மற்றக்கைதிகளுக்கு எளிதில் தெரியும்படி சொல்லிக்கொடுப்பதில் தேர்ச்சியடைவது.

) விசேஷமான விதமாகத் தனக்குக்கொடுத்த வேலையைச் செய்து முடிப்பது.

ஜெயில் உத்தியோகஸ்தர் யாரையாவது மற்ற யாரும் தாக்க வரும்பொழுது அவரைக்காப்பாற்றுவது.

ஜெயிலில் கலகம் நேரிடுவது, நெருப்புப்பற்றிக்கொள்வது முதலிய சங்கதிகள் நேரிடுங்காலத்தில், அவைகளை நிறுத்துவதற்கு ஜெயில் உத்தியோகஸ்தருக்கு உதவிசெய்வது.



(6) தனக்குக் கொடுக்கப்பட்ட உடுப்புகளை அழுக்கில்லாமலும், கிழிந்து போகாமலும் துப்புறவாக அதிகக் காலத்திற்கு வைத்துக் கொள்ளுவது. (ஜெயில் ரூல், 428.)

ஜில்லா ஜெயில் சூப். ஸெண்டரல் ஜெயில் சூப். இனிஸ்பெக்டர் ஜெனரல் இவர்களுக்கு மார்க்குகொடுக்கும் அதிகாரங்கள்.

128. அதே கைதிக்கு, மூன்று மாதத்திற்கு ஒரு தடவலாவது, அல்லது மேற்கண்ட எந்தவேலைகளைச்செய்ததற்காகவாவது விசேஷமார்க்குகளில் 100-க்குமேல் போகாமல் ஒரு ஜில்லா ஜெயில் சூப்பிரிண்டெண்டாண்டு கொடுக்கலாம். ஸெண்ட்ரல் ஜெயில் சூப்பிரிண்டெண்டாண்டு 500 மார்க்குக்குமேல் போகாமல் கொடுக்கலாம். இந்த ரூல்படி விசேஷமார்க்குகள் ஏதுங்கொடுக்கப்பட்டால், இன்னின்ன சங்கதிகளுக்காக இந்த விசேஷ மார்க்குகள் கொடுக்கப்பட்டதென்பதைக்கண்டு ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும். மேற்கண்ட மார்க்குகளுக்கு அதிகமாய்க்கொடுக்கவேண்டுமானால் இனிஸ்பெக்டர் ஜெனரலுக்கெழுதி அவர்களுடைய அனுமதிபெற்றுக்கொண்டுதான் கொடுக்கவேண்டும். அவர்கள் 1,000 மார்க்குகள் வரை கொடுக்க உத்தரவு செய்யலாம். 1,000 - மார்க்குகளுக்குமேல், கொடுக்கவேண்டுமானால் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பிரதேசக் கவர்ன்மெண்டாரவர்களுக்கெழுதி அவர்களுடைய அனுமதி பெற்றுக்கொண்டு செய்யவேண்டியது. (ஜெயில் ரூல், 429.)

129. ஜெயிலில் குற்றம் நடந்த தினத்தில் மார்க்கொன்றும் கொடுக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 430.)

130. தினஸரி கொடுக்கப்படுகிற சாதாரண மார்க்குகள் சூப்பிரிண்டெண்டாண்டு தானே நேரிலாவது, அல்லது அவர் மேல்பார்வையின்பேரில் ஜெயிலராவது, டிப்டி ஜெயிலராவது அல்லது இன்ஸ்பெக்டர் ஜெனரலால் விசேஷமாக அதிகாரங்கொடுப்பட்ட வேறு எந்த உத்தியோகஸ்தராவது கொடுக்கலாம். விசேஷமான மார்க்குகளை சூப்பிரிண்டெண்டாண்டுகள் மாத்திரந்தான் கொடுக்கலாம். (ஜெயில் ரூல், 431.)

131. மார்க்குக் கொடுக்குமுன் கைதியின் மார்க்குப் புஸ்தகத்தையும், சரித்திரட்டிக்கட்டையும் பார்த்துக்கொள்ளவேண்டும். கைதிசெய்ததாக ருஜுவாகிற ஒவ்வொரு குற்றத்தையும் அவைகளில் ஜாக்கிரதையாக எழுதவேண்டும். அந்த ரிக்கார்டுகளில் கைதி குற்றஞ்செய்ததாக யாதொரு பதிவுமில்லாத விஷயத்தில் அன்றைக்குள்ள சாதாரண மார்க்குகள் கைதிக்குக்கிடைக்க வேண்டுமென்று வைத்துக்கொள்ளவேண்டியது. சாதாரண மார்க்குகளை கைதியின் முன்னிலையில், சமயத்திற்குத் தக்கபடி நாள்தோறுமாவது, வாரத்திற்கு ஒருதடவலாவது, இரெண்டுவாரத்திற்கொரு தடவலாவது, அல்லது மாதத்திற்கொருதடவலாவது பதிவுசெய்யவேண்டும். விசேஷ மார்க்குகள் கைதிகளால் சம்பாதியஞ்செய்யப்பட்ட கேசுகளில் அவைகள் சம்பாதியஞ் செய்யப்பட்டவுடன் கூடிய சீக்கிரத்தில் பதிவுசெய்யப்படும். (ஜெயில் ரூல், 432.)

132. [illegible] வஜா சிபந்தனைக்குட்பட்ட கைதிகளுக்கு, அவர்கள் சம்பாதிக்கிற ஒவ்வொரு 24 மார்க்குக்கும், ஒவ்வொருநாள் தண்டனை வஜாக் கிடைக்கும். மார்க்குகளை எல்லாம் வஜாவாக மாற்ற[illegible] புஸ்தகங்களில் மூன்று மாதத்திற் கொருதடவல் பதிவுசெய்யப்படும். மூன்று மாதங்களுக்குள் ஒவ்வொரு கைதியும் சம்பாதித்திருக்கிற வஜா இவ்வளவு

என்பதை மூன்று மாதங்கழிந்தவுடன் ஒவ்வொரு கைதிக்கும் சூப்பிரின்டென்டான்டு சொல்லவேண்டும். (ஜெயில் ரூல், 433.)

133. இவ்விதம் சம்பாதிக்கப்பட்ட வஜா நாட்களை, வஜாப்புஸ்தகத்தில் நாட்களாகவேயே எழுதிக்கொள்ளப்படும். இந்நாட்களை மாதங்களாகவாவது, வருஷங்களாகவாவது மாற்றிக்கொள்ளப்படமாட்டாது. நமது இந்தியா சக்ரவர்த்தி அவர்களுக்குப் பட்டமளிக்கப்பட்ட உத்ஸவக்கொண்டாட்டத்திற்காகவாவது அல்லது சக்கிரவர்த்தியவர்களின் அரசாட்சியின் 50-வது வருஷத்தில் கொண்டாடுகிற உத்ஸவத்திற்காகவாவது கொடுக்கப்படுகிற வஜாக்கள் மாதங்களாகக்கொடுக்கப்படுகிறவைகளை நாட்களாக மாற்றப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 434.)

134. மூன்று மாதத்திற் கொருதரம், சேர்ந்த மார்க்குகளை வஜா நாட்களாகமாற்றுவதில், மார்க்குகளை இருபத்திநாலைப்போட்டு வகுத்ததில் பூரா நாட்களாகவந்த மார்க்குகள் போக மீதமிருக்கிற மார்க்குகளை, அடுத்த மூன்று மாத மார்க்குக் கணக்குடன் சேர்த்துக்கொள்ளப்படும். கைதியினுடைய தண்டனையின் முடிவில் மார்க்குகளை வஜா நாட்களாக மாற்றும்பொழுது பூரா நாட்கள் போக 12-அல்லது அதற்கதிகப்பட்ட மார்க்குகள் மீந்தால், அந்த மீந்ததை ஒரு பூரா நாளாக கணக்கிடப்படும். 12-மார்க்குக்கு குறைந்தால் அதைக் கணக்கைவிட்டுத் தள்ளிவிடப்படும். (ஜெயில் ரூல், 435.)

135. தினசரி யேர்ப்பட்ட மார்க்குகளைச் சம்பாதிப்பார்களென்றும், அப்படி சம்பாதித்தால் அடுத்தமாதத்தில் ஜெயிலிலிருந்து விடுதலையாகிப் போய்விடுவார்களென்றும் நினைக்கப்படக்கூடிய கைதிகளுக்கு, முதல் மாதத்தில் முதல்வாரத்தில் ஒரு ஜாபிதாத்தயார்செய்யப்படும். இந்தத் ஜாபிதாவை சூப்பிரின்டென்டான்டுக்கு அனுப்பி அதில் அவர் கையெழுத்துச்செய்து ஆபீசில் வைக்கப்படும். ஜாபிதாத் தயார்செய்த தெய்திமுதல், சரியானபடி ஏற்பட்ட மார்க்குகளைச் சம்பாதித்தால் விடுதலையாகி விடக்கூடிய தெய்தி வரையுள்ள மார்க்குகளைச் சம்பாதிக்க கைதி தவறி விட்டாலுமே, முந்திச் சம்பாதிக்கப்பட்ட மார்க்குகளை கெட்ட நடவடிக்கைக்காக இழந்துவிட்டாலுமே, விடுதலைத்தெய்தியானது இதற்குத் தக்கப்படி நீடித்துப் போய்விடும். இப்படிக்கில்லாமல் தினசரி யேர்ப்பட்ட மார்க்குகளைத்தவிர விசேஷமான செய்கைகளுக்காக மேலே 423 (லி) 428-வது ரூல்களில் சொல்லப்பட்டபடி அதிக மார்க்குகளை கைதி சம்பாதித்துவிட்டால் அதற்குத்தக்கபடி, விடுதலை செய்யப்பட வேண்டியதற்குத் தெய்தி குறிப்பிட்டு தயார் செய்யப்பட்ட ஜாபிதாவிற்கண்ட தெய்திக்கு முன்னமேயே விடுதலைசெய்துவிடப்படுவான். (ஜெயில் ரூல், 436.)

136. ஒரு கைதியை ஒரு ஜெயிலிலிருந்து மற்றொரு ஜெயிலுக்கு மாற்றப்பட்டால் கைதிக்குக்கிடைத்திருக்கிற வஜாநாள், வஜாநாளுக்கு மாற்றப்படாமலிருக்கிறமார்க்குகள், இவைகளுக்கு ஜாபிதாத் தயார்செய்து அந்தக் கைதியுடன் அனுப்பப்படும். ஒரு ஜெயிலிலிருந்து மற்றொரு ஜெயிலுக்குக் கொண்டுபோவதற்குப் பிடிக்கும் நாட்களுக்கு, நல் நடத்தைக்காக யேர்ப்பட்ட மார்க்குகள்படியுங் கொடுக்கப்படும். அந்த நாட்களில் கைதி வேலை செய்யாதபடியால் வேலைக்கு யேர்ப்பட்ட மார்க்குக் கொடுக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 437.)



137. தப்பித்து ஓடிப்போகிற அல்லது தப்பித்து ஓடிப்போக முயற்சி செய்கிற கைதி, அதற்குமுன் அவன் சம்பாதித்த வஜா நாட்கள் பூராவையும் இழந்து விடுவான். (ஜெயில் ரூல், 438.)

## 138. சம்பாதித்த மார்க்குகளைப் பறிமுதல் செய்வதற்கு அடியிற்கண்ட தாரணை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**மார்க்குகளைப்பறிமுதல் செய்வதற்குத்தாரணை.**

ஜெயில் குற்றம், 1-வது குற்றத்திற்கு 24-மார்க்குகளும்;

மறுபடி, முதல் குற்றஞ்செய்த மூன்று மாதங்களுக்குள் குற்றஞ் செய்தால் 48-மார்க்குகளும்;

2-வது தடவல் திரும்பக் குற்றஞ்செய்தால் 72-மார்க்குகளும்;

3-வது தடவல் திரும்பக் குற்றஞ்செய்தால் 96-மார்க்குகளும்;

4-வது தடவல் குற்றஞ்செய்தால் 120-மார்க்குகளும்;

5-வது தடவல் குற்றஞ்செய்தால் 150-மார்க்குகளும் பறிமுதல் செய்யப்படும்.

விசேஷமான பெரிய குற்றங்கள் செய்யப்பட்டால் ஜாஸ்தியானமார்க்குகளையோ அவ்வளவு மார்க்குகளைப் பறிமுதல் செய்ய சூப்பிரின்டென்டான்டுக்கு அதிகாரமுண்டு. (ஜெயில் ரூல், 439.)

139. கைதிகள் ஜெயிலில்நல்லநடத்தையுடனிருந்து கொடுக்கப்பட்ட வேலைகளைச் சுறுசுறுப்பாகவும் நல்ல மாதிரியாகவும் செய்யும் நோக்கத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு கைதிகளை மேல்வகுப்பில் சேர்த்துக்கொண்டு அவர்களை ஜெயிலில் கைதிஉத்தியோகஸ்தர்களாக நியமித்துக்கொள்வதற்காக, அடியிற்கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த விதிகள் வஜாச் சம்பாதிக்கும் ஆண்பிள்ளைக் கைதிகளுக்கும் பெண்பிள்ளைக் கைதிகளுக்கும் சம்மந்தப்படும். ஆனால் பெண்பிள்ளைக் கைதிகளுக்கு கைதி ஓவர்சியர் வேலைக்குமேல் கொடுக்கப்படமாட்டாது. ஜெயிலில் வேலைகள் சரியாக நடந்து வரும்பொருட்டு கைதி உத்தியோகஸ்தர்களை நியமிக்கப்படுகிறபடியால், மார்க்குச் சம்பாதித்த எல்லாக் கைதிகளும் தனக்கு அந்த உத்தியோகங் கிடைக்கவேண்டுமென்று பாத்தியதை கொண்டாடக்கூடாது. கைதி உத்தியோகம், அந்தந்த உத்தியோகத்துக்கேற்பட்ட வேலைகளைச் சரியானபடி நடத்திவருவதற்கு வேண்டிய தேக பலமுடனிருக்கிற கைதிகளுக்குத்தான் கொடுக்கப்படும். கைதி உத்தியோகஸ்தனாகயிருக்கிறவன் தனக்கேற்பட்ட வேலையைச் சரியானபடி செய்வதற்கு சாகுவதமாக லாயக்குக்குறைவாகப் போய்விட்டால் அவனை அந்த உத்தியோகத்திலிருந்து கீழே தள்ளிவிடப்படும். ஜெயிலிலிருக்கிற கைதிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவிருக்கிறதோ அதில் 10-ல் ஒரு பங்குக்கு மேற்பட்ட தொகையுள்ள கைதிஉத்தியோகஸ்தர்களிருக்கக்கூடாது. வழக்கமாகக் குற்றச்செய்கைகளைச்செய்து அடிக்கடி ஜெயிலுக்குவந்து கொண்டிருக்குங் கைதிகளை,கைதி உத்தியோகஸ்தர்களாக நியமிக்கக்கூடாது. அப்படி நியமிக்கவேண்டுமானால் ஜெயில் இனிஸ்பெக்டர் ஜெனரலினுடைய எழுத்துமூலமான அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும். மிகவும் விசேஷக்

**கைதிகளை உத்தியோகஸ்தர்களாக நியமிக்கும் நோக்கமின்னதென்பது.**

கேசுகளாக யிருந்தாலொழிய இனிஸ்பெக்டர் ஜெனரலினுடைய அனுமதி கிடைக்கமாட்டாது. (ஜெயில் ரூல், 440.)

140. அடியில்கண்ட விதிகளின்படி கைதிகளுக்குக் கிடைக்கக்கூடிய பாத்தியதைகளெல்லாம், அவர்கள் நல்நடத்தையுடனிருக்கும்வரை தான் கிடைக்கும். நடவடிக்கைப் பிசகாக நடந்துவிட்டவுடன் அந்தப்பாத்தியதைகளெல்லாம் பறி முதல் செய்துவிடப்படும். ஒவ்வொரு வகுப்பிலிருக்கிற கைதியும், கைதி உத்தியோகஸ்தனும், குற்றஞ்செய்துவிட்டால், 3-வதுவகுப்புக் கைதியாகவாவது அல்லதுவேறு கீழ்த்தரமான வகுப்புஉத்தியோகஸ்தனாகவாவது கீழே தள்ளிவிடப்படுவான். ஜெயில் 442-வது ரூலில் சொல்லப்பட்ட விதத்தாலல்லது வேறுவிதத்தில் அப்படிக் கீழே தள்ளப்பட்டவனை மறுபடியும் மேல் வகுப்பில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 441.)

3-வது வகுப்புக்கைதி, 2-வகுப்புக் கைதியாவதற்கு ஏற்ற நிபந்தனைகள்.

141. மார்க்குச் சம்பாதிக்க ஆரம்பிக்கிற ஒவ்வொரு கைதியும் முதலில் 3-வது வகுப்பில் வைக்கப்படுவான். அவனுக்கு அடையாளம் (Badge) யாதொன்றுங் கிடையாது. ஆனால் நல்ல நடத்தையுடனிருந்தால் அவனுக்கு மாதத்திற்குக்கால் அணா வீதம் எனும் கொடுக்கப்படும். அவன் 6-மாதத்திற்கொருதரம் தன் சினேகிதர்களுக்கு ஒரு கடிதம் எழுதவும், அவர்களிடமிருந்து ஒரு கடிதம் பெற்றுக்கொள்ளவும், அவர்களை ஒருதரங்கண்டுபேசிக்கொள்ளவும் இடங்கொடுக்கப்படுவான். மூன்றாவது வகுப்புக் கைதியிலிருந்து மேல் வகுப்பில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு 500 மார்க்குகள் சம்பாதிக்கவேண்டும். அவ்வளவு மார்க்குச் சம்பாதித்துவிட்டால் 2-வது வகுப்பு கைதியாக எடுத்துக் கொள்ளப்படுவான். (ஜெயில் ரூல், 442.)

2-வது வகுப்புக் கைதிக்கு அடையாளம்; 1-வது வகுப்புக் கைதியாவதற்குள்ள நிபந்தனைகள்.

142. 2-வது வகுப்பு கைதியானவுடன், 2 அங்குல நீளம், ஒரு அங்குல அகலத்தில் ஒரு நீல நாடாவினால்செய்த அடையாளம் கொடுக்கப்படும். அதை அவன் தன் உடுப்பின் இடது மார்புப் பக்கத்தில் தரித்துக்கொள்ளவேண்டும். 2-வது வகுப்புக் கைதி நல்லநடத்தையுடனிருந்தால், 1 மாதத்திற்கு அவனுக்கு அரையணா வீதம் கொடுக்கப்படும், அவன் 4 மாதத்திற்கொருதரம், தன் சிநேகிதர்களுக்கு, கடிதமெழுதவும், அவர்களிடத்திலிருந்து 1 கடிதம் பெற்றுக் கொள்ளவும், அவர்களைப்பார்த்து அவர்களுடன் பேசிக்கொள்ளவுஞ் செய்யலாம். 2-வது வகுப்புக்கு மேல்போவதற்கு 800 மார்க்குகள் சம்பாதித்திருக்க வேண்டும். அதைச் சம்பாதித்துவிட்டால் 1-வது வகுப்புக் கைதியாகச் செய்துவிடப்படுவான். (ஜெயில் ரூல், 443.)

1-வது வகுப்புக்கைதிக்கு அடையாளமும், கைதி உத்தியோகஸ்தனாவதற்கு நிபந்தனைகளும்.

143. 1-வது வகுப்புக் கைதி, மேற்கண்ட அளவுள்ள சிகப்பு நாடாவை மேற்குறித்தபடி தரித்துக்கொள்ளவேண்டும். நல் நடத்தையுடனிருந்தால், 1 மாதத்திற்கு முக்கால் அணா வீதம் அவனுக்குக் கொடுக்கப்படும். 3 மாதத்திற்கொருதரம்சிநேகிதர்களுக்கு,கடிதமெழுதவும், அவர்களிடமிருந்து 1 கடிதம்பெற்றுக்கொள்ளவும், அவர்களை ஒருதரங்கண்டு பேசிக்கொள்ளவுஞ் செய்யலாம். முதல்வகுப்பு கைதிக்குமேல்போவதற்கு 1,000 மார்க்குகள் சம்பாதித்திருக்கவேண்டும். அதைச் சம்பாதித்துவிட்டால் அவன் கைதி உத்தியோகஸ்தனாக்கப்படுவதற்கு லாயக்காயிவிடுகிறான். (ஜெயில் ரூல், 444.)

144. கைதி உத்தியோகஸ்தர்களில்

(1) இராத்திரிக் காவல்காரர்கள்.
(2) ஓவர்ஸியர்கள்.
(3) வார்டர்கள்.—என்று மூன்று வகுப்புண்டு. (ஜெயில் ரூல், 445.)



கைதி ராத்திரிக் காவற்காரனுக்குஅடையாளமும், அவனுக் கேற்பட்ட வேலைகளும்.

145. 1-வது வகுப்புக் கைதியிலிருந்து மேலே எடுத்துக்கொள்ள லாயக்காயிருக்கிற கைதிகளிலிருந்து கைதி ராத்திரிக்காவற்காரர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். கைதி ராத்திரிக்காவற்காரர்களுக்கு மற்றக்கைதிகள் தினசரி சம்பாதிக்கக்கூடிய மூன்றுமார்க்குகள்தவிர, ஜாஸ்தியாக தினசரி 1-மார்க்குக் கொடுக்கப்படும். தரித்துக்கொள்ளும் அடையாளம், கடிதம் எழுதுவது, பெற்றுக்கொள்ளுவது, சிநேகிதர்களைக்கண்டு பேசுவது முதலிய மற்றவிஷயங்களிலெல்லாம், ராத்திரிக்காவற்காரர்கள் 1-வது வகுப்புக் கைதிகள் எப்படியோ அப்படிதான். கைதிஇராத்திரி காவற்காரர்களும் மற்றக்கைதிகள்போல காலில் இரும்பு வளையம் போட்டுக்கொள்ளவேண்டியதுதான். ஆனால், வலதுகையில் ஒரு பித்தளைத்தகடு கட்டிக்கொள்ளவேண்டும். அவர்கள் வைக்கப்பட்டிருக்கிற வார்டுக்குள் இராக்காலத்தில் காத்துக் கொள்ளவும், அவர்கள் காத்துக்கொண்டிருக்குங் காலத்தில் கைதிகளுக்குள் யாதொரு சண்டை சச்சரவாவது, மற்ற ஒழுங்குத்தப்பான சங்கதியாவது நடவாமலும், கைதிகள் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விடாமலும், பார்த்துக் கொள்ளவும், ஜெயிலில் போடப்பட்டிருக்கிற வெளிச்சம் அணைந்துபோனது, எந்தக் கைதியாவது சுகக்குறைவாக யிருப்பது, அல்லது எந்தக் கைதியாவது தனக்கு ஏற்பட்ட திரணையை விட்டு இறங்கிப்போவது, அல்லது அக்கிருத்தியங்களைச் செய்வது முதலிய சங்கதிகளை நேரிடுகிற உத்தியோகஸ்தர்கள், காவற்காரர்கள் இவர்களிடந் தெரிவிப்பதுமாகிய வேலைகள் தான் கைதி ராத்திரிக் காவற்காரர்களுக்கு ஏற்பட்டவேலைகள். (ஜெயில் ரூல், 446.)

ஓவர்ஸியர்கள் தெரிந்தெடுக்கப்படும் விதம்.

கைதி ஓவர்ஸியருக்கேற்பட்ட உடை முதலியது.

146. மேல் வகுப்புக்குப்போக லாயக்காயிருக்கிற 1-வது வகுப்புக் கைதிகளிலிருந்தாவது அல்லது கைதி ராத்திரிக் காவர்காரர்களிலிருந்தாவது கைதி ஓவர்ஸியர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். கைதிகள் தினசரி சம்பாதிக்கக்கூடிய 3-மார்க்குகள்தவிர, கைதி ஓவர்ஸியர்களுக்கு ஜாஸ்தியாக தினசரி 2-மார்க்குகள் கொடுக்கப்படும். இவர்களுக்குக் கைதிகளுக்குக் கொடுக்கிற குல்லாவுக்குப் பதில் தலைக்குட்டையும், கட்டையான கால்சட்டைக்கு பதில் நீளமாயுள்ள கால்சட்டையும், வலது கையில் தரித்துக்கொள்ளும் பொருட்டு ஒரு பித்தளை வில்லையுங் கொடுக்கப்படும். இவர்கள் காலில் மற்றக் கைதிகளைப்போல் இரும்புவளையம் போட்டுக்கொள்ள வேண்டியதில்லை. அவர்களுக்கு 1-மாதத்திற்கு, 1-அணா வீதம் எனுங்கொடுக்கப்படும். அவர்கள் 2-மாதத்திற்கொருதடவல் சிநேகிதர்களுக்கு கடிதமெழுதவும் அவர்களிடமிருந்து கடிதம் பெற்றுக்கொள்ளவும், அவர்களைக்கண்டு பேசிக்கொள்ளவுஞ் செய்யலாம். சூப்பிரின்டெண்டாண்டு அப்படி உத்தரவு செய்தாலொழிய அவர்களும் வேலைசெய்ய வேண்டியதுதான். (ஜெயில் ரூல், 447.)

147. கைதி ஓவர்ஸியருக்கு அடியிற்கண்ட வேலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன:—

(1) கைதிராத்திரிக் காவர்க்காரன் போல, வார்டுக்குள் காவல் காக்க வேண்டியது.

(2) தனக்கு ஏற்பட்ட வார்டுகளிலும், தங்களுடைய [illegible] ருக்குள்ளும், வேலைக்கூடங்களிலும் ஒழுங்கு, தவறுதல் நடக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது.

கைதி ஓவர்ஸியர்களுக்கு ஏற்பட்ட வேலைகளின்னதென்பது.

(3) தன் கூட்டத்தாரின் வேலையை மேல்பார்க்கவும், அவர்களில் ஒவ்வொருவரும் தனக்கு ஏற்பட்ட வேலையைச் சரியானபடி செய்கிறானென்றும் வேலைக்காகக் கொடுக்கப்பட்ட சாமான்களை வீண் போக்காமலும், திருடிக்கொள்ளாமலும், வேலையைக் கெடுத்துவிடாமலும், வேலைக் கருவிகளையாவது, யந்திரங்களையாவது கெடுத்துவிடாமலும், எல்லாக்கருவிகளையும் சரியானபடி உபயோகப்படுத்தி ஜாக்கிரதையாகத் திரும்ப ஒப்புவிப்பதையும் மேல்பார்க்கவேண்டியது.

(4) கைதிகள் தங்கள் தேகங்களையும், உடைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுகிறார்களா வென்பதைப்பற்றி விசேஷக் கவனத்துடன் பார்த்துவரவேண்டும். உத்திரவுப்படி குறிப்பிட்ட காலங்களிலும் நேரங்களிலும் குளிக்கிறார்களாவென்றும் பார்த்துவரவேண்டும்.

(5) எந்தக் கைதிக்காவது வியாதியஸ்தனுக்குள்ள அடையாளமேதாவதிருந்தால் அதை மேலான கோட்டைசுக்குக் கொண்டுபோக வேண்டியது.

(6) அவசியமானபோது வேறு நிகளில் யாரையாவது அல்லது கைதிகளின் கூட்டத்தையாவது ஜெயிலுக்குள் எங்குங்கூட்டிப் போக வேண்டியது.

(7) தடுக்கப்பட்ட வஸ்துக்களை எந்தக் கைதியாவது வைத்திருக்கிறானாவென்று கண்டுபிடித்துத்தெரியப்படுத்தவும், கைதிகள் ஜெயில் ரூல்களை நிராகரித்து நடவாமல் தடுக்கவும் வேண்டும்.

(8) வேலைக்கூடங்களை மிகவும் சுத்தமாகவும், ஒழுங்காகவும், துப்புறவாகவும் [illegible]கொள்ளும்படி மேல் பார்த்துவரவேண்டியது.

(9) கைதிகள் செய்கிற ஒழுங்கீனங்களையும், வேலைக்கம்மிகளையும், வேறுவிதமான நடவடிக்கைப் பிசகுகளையும் பற்றி ஜெயிலருக்குத் தகவல் கொடுக்கவேண்டும். (ஜெயில் ரூல், 448.)

148. கைதி ராத்திரிக்காவற்காரர்களிலிருந்தும், கைதி ஓவர்ஸியர்களிலிருந்தும், கைதி வார்டர்கள் அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டுத் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

கைதிவார்டராக நியமிக்கப் படுவதற்கு நிபந்தனைகள்.

(1) வார்டராக நியமிக்கப்படு முன், ஒரு வருஷ காலத்திற்காவது, கைதிராத்திரிக் காவற்காரனாகவாவது, அல்லது கைதிஓவர்ஸியராகவாவதிருந்திருக்கவேண்டும்.

(2) சம்பாதித்த வஜா உள்பட அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் பாதி அனுபவித்துத் தீர்த்திருக்கவேண்டும். ஆயுசபரியந்தம் தீர்ப்புச்செய்யப்பட்டிருக்கிற கைதிகளாயிருந்தால் 10 வருஷத்தண்டனையை அனுபவித்துத் தீர்த்திருக்கவேண்டும்.

(3) நல்ல நடத்தை யோடிருப்பவர்களாயிருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 449.)

149. கைதி வார்டர்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். கைதிவார்டராக முதல் முதல் மூன்றாவதுவகுப்பில் நியமிக்கப்படுகிறான்



தண்டனைப் புஸ்தகத்தில் அவனுக்கு விரோதமாக யாதொரு பதிவுமில்லாமல் மிகவும் நல்ல நடத்தையோடு 12-மாதம் வார்டராகயிருந்தபிறகு, அவன் 2-வது வகுப்பு வார்டராக நியமிக்கப்படுகிறான். அதேவிதமாக 12-மாதம் கழிந்தபிறகு, 1-வது வகுப்பில் நியமிக்கப்படுகிறான். ஆனால் விசேஷமான வேலை செய்ததற்காக இந்த 12-மாதங்களுக்குமுன்னமேயே எப்போதாகிலும், 2-வது அல்லது 1-வது வகுப்பில் நியமிக்கப்படலாம். (ஜெயில் ரூல், 451.)

150. கைதி வார்டர்களுக்கு, மற்ற கைதிகளுக்கு தினசரி கொடுக்கப்படுகிற மார்க்குகளைத் தவிர, ஜாஸ்தியாக நான்கு மார்க்குகள் கொடுக்கப்படும். கைதி வார்டர்களுக்கு அடியிற்கண்டபடி எனும் கொடுக்கப்படும்.

1-வது வகுப்புக்கைதி வார்டருக்கு மாதம் [illegible]க்கு அணா 8.
2-வது வகுப்பு ஷை ஷை அணா 6.
3-வது வகுப்பு ஷை ஷை அணா 4.

இதில் பாதியை, கைதிவார்டருக்கு அப்படிச்செய்ய இஷ்டமுண்டானால், சாருயம், புகையிலை, மருந்துச்சாமான்கள் முதலியது தவிர தனக்குவேண்டிய மற்றச் சாமான்களேதேனும் வாங்கிக்கொள்ளலாம். பாக்கியுள்ள பாதியை ஒன்றுசேர்த்து வைத்து அவனை விடுதலைசெய்யும்பொழுது அவனுக்குக்கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 452.)

151. கைதி வார்டர்களுக்கு அரிசிச் சாப்பாடுபோடப்படும். தன் சாப்பாட்டைத் தானே சமைத்துக்கொள்ளலாம். இப்படிச் செய்வதினால்ஏதேனும் ஒழுங்குத்தப்பு நேரிடுகிற விஷயத்தில் அப்படிச்செய்வதை நிறுத்திவிடப்படும். மற்றக் கைதிகளிருக்கும் இடத்தைவிட்டு பிரத்தியேகமான இடம் ஜெயில் வளைவுக்குள் கொடுக்கப்படும். அவர்களுடைய கட்டடங்களுக்கு மற்ற கைதிகள் யாரும் போகக்கூடாது. கைதி வார்டர்கள் தங்களுடைய முற்றத்திற்குள்ளேயே சாப்பிடவும், குளிக்கவும், க்ஷௌரம் பண்ணிக்கொள்ளவும் செய்யலாம். அங்கேயே குளிப்பது ஸாத்தியப்படாவிட்டால் மற்ற கைதிகள் குளிக்கிற நேரத்திலில்லாமல் வேறு நேரங்களில் குளிக்கலாம். அவர்கள் உடுப்புகளை கைதி வண்ணார்கள் வெளுப்பார்கள். அவர்களுடைய முற்றத்திலேயே நிறுத்தி அவர்களைச் சரிப்பார்க்கப்படும். அவர்கள் குற்றஞ்செய்தால் அவர்களுக்கு அடிதண்டனை கிடையாது. அவர்கள் காலில் இரும்பு வளையம் போட்டுக்கொள்ளவேண்டியதில்லை. தலைமயிர் கத்தரித்துக்கொள்ளவேண்டியதில்லை. 1 மாதத்திற்கு ஒருதடவை சிநேகிதர்களுக்கு கடிதமெழுதவும், அவர்களிடமிருந்து, கடிதம் பெற்றுக்கொள்ளவும், அவர்களைக்கண்டு பேசிக்கொள்ளவுஞ் செய்யலாம். (ஜெயில் ரூல், 453.)

152. ஜெயிலுக்குள் உத்தரவு செய்யப்பட்டமட்டிலும், இரவும் பகலும் பார்த்துக்கொள்ள வேண்டியது அவர்களுடைய கடமையாகயிருக்கிறது. அவர்கள் ஜெயில் பிரதானகேட்டுக்கு வெளியில் போகக்கூடாது. (ஜெயில் ரூல், 454.)

153. கைதி வார்டர்களுக்கு அடியிற்கண்ட உடுப்புகள்கொடுக்கப்படும்:—

(1) மற்றக் கைதிகளுக்கு உடுப்புத்தைக்கிறதுணியைப்பார்க்கிலும் நல்லதாயிருக்கிற துணியில் தைக்கப்பட்ட 2 வெள்ளை உடுப்புகளும்.

கைதி வார்டர்களின் உடுப்புகள்.

(2) குளிர்காலத்திலும், ராத்திரிவேலை பார்க்குங் காலத்திலும் உபயோகப்படுத்திக்கொள்ளும்பொருட்டு ஒரு கம்பிளி உடுப்பும்,

(3) ஒருஜோடி மிதியடியும்.

(4) மூன்று அங்குல நீளத்தில் நுணியில் நீலக்குஞ்சலம் வைத்த ஒரு வெள்ளைத் தலைக்குட்டையும் கொடுக்கப்படும்.

கைதி வார்டர்களின் அடையாளங்கள்.

ஒவ்வொரு கைதி வார்டரும் தன்னுடைய தலைக்குட்டைமேல் வைத்திருக்கும் நீலக்குஞ்சலத்தின் பேரில் தன்னுடைய நம்பரைத் தரித்துக்கொள்ளவேண்டும். கோழிமுட்டை வடிவுள்ள பித்தளை வில்லைபோட்ட தோல்பெல்ட்டு 1-ம், பிகில் 1-ம், பாட்டன் கம்பு 1-ம் கொடுக்கப்படும். 1-வது வகுப்பு வார்டர்கள் நீங்கள் உடுப்பின் வலதுகையில் 2-நீல நாடாத் துண்டுகளையும், 2-வதுவகுப்பு வார்டர்கள் 1 துண்டையும் தரித்திருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 455.)

154. கைதி வார்டர்கள் தங்களுடைய அலுவல்களை மிகவும் உறுதிப்பாடுடன்பார்க்கவேண்டுமாதலால் அவர்கள்பேரில் வரும்குற்றப்பிராதுகளை விசேஷ கவனத்தோடு விசாரிக்கவேண்டும். அவர்கள்பேரில் சாட்டப்படுங் குற்றங்கள் திருப்திகரமாக ருஜுவாச்செய்யப்பட்டால் அவர்களுக்கு விசேஷமான தண்டனை கொடுக்கவேண்டியது அவசியமாகயிருக்கிறது. அவர்களுக்குத் தண்டனை விதிக்கும் விஷயத்தில் சூப்பிரின்டெண்டாண்டுகளினுடைய தகவலுக்காக அடியிற்கண்ட தாரணைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன:—

கைதி வார்டர்கள் குற்றஞ்செய்ததாக ருஜுவானால் விதிக்கப்படக்கூடிய தண்டனைகள்.

(1) தாக்குதல் முதலிய துராகிருதத்துடன் கூடின அகந்தை, கீழ்ப்படியாமை, இவைகளுக்கு 3-வது வகுப்புக் கைதியாகத் தள்ளிவிடப்படும். ஜெயிலி லிருக்கும்பொழுது சம்பாதித்த பூரா வஜாவையும், வார்டராக யிருக்கும்போது சம்பாதித்த பணம் முழுமையையும், பறிமுதல்செய்யப்படும். மறுபடி கைதி உத்தியோகஸ்தன் வேலையே கொடுக்கப்படமாட்டாது.

(2) தாக்குதல முதலிய துராகிருத மில்லாத அகந்தை, கீழ்ப்படியாமை இவைகளுக்கு, கைதிவார்டர் வகுப்பில், தணிக்கப்படும். வஜாவையும் சம்பாதித்த பணத்தையும் பறிமுதல் செய்தாலும் செய்யப்படும். வஜாவைப் பறிமுதல் செய்கிறதாயிருந்தால் கைதி சம்பாதித்திருக்கிற வஜாவில் மூன்றில் ஒரு பங்கைப் பறிமுதல்செய்யப்படும். பணத்தை அபராதம்போடுவது, கைதி வார்டராக 6-மாதத்தில் சம்பாத்தியஞ் செய்த தொகை எவ்வளவுண்டோ அதைத்தான் அபராதம்போடலாம்.

(3) வேலையில் அசட்டையாயிருப்பது, அதாவது காவல் காக்கும் பொழுது தூங்குவது, தன்னுடைய இடத்தைவிட்டு அனுமதியில்லாமல் போவது, உத்தரவுக்குக் கீழ்ப்படியாமை வகையரா இவைகளுக்கு, வார்டர்வேலையில் கிரேடு தணிக்கப்படும், மார்க்கு அபராதமும், பண அபராதமும் போடலாம். அபராதம் போடுவதும் போடாமலிருப்பதும் குற்றத்தின் மாதிரிக்குத்தக்கபடி செய்யலாம். மார்க்கு அபராதம் போடுகிறதாயிருந்தால் 240-மார்க்குக்குமேல் போகக்கூடாது. பண அபராதம் போடுகிறதாயிருந்தால் கைதிவார்டராக சம்பாதித்த ஒருமாதப் பணத்திற்குமேல் அபராதம் போடக்கூடாது.



(4) தடுக்கப்பட்ட வஸ்துக்களை வைத்துக்கொண்டிருப்பது, அல்லது அதுகளை வாங்கிக்கொடுக்க மத்தியஸ்தம் செய்வது, இவைகளுக்கு 240 மார்க்குகளுக்கு மேற்போகாமல் அபராதம் போடலாம். 1 மாதத்து வார்டர் சம்பாத்தியத்தை அபராதம் போட்டாலும் போடலாம், போடாமலிருந்தாலு மிருக்கலாம்.

(5) சில்லரைக்குற்றங்கள்:—இவைகளுக்கு 150 மார்க்குகளுக்குமேல் போகாமல் அபராதம் போடலாம்; வார்டர் சம்பாத்தியத்தில் 1 மாதத்துச் சம்பாத்தியத்திற்குமேல் போகாமல் அபராதம் போட்டாலும் போடலாம் போடாமலிருந்தாலு மிருக்கலாம்.

(6) **குற்றஞ்செய்த 6 மாதங்களுக்குள் குற்றத்தைத் திரும்பச்செய்வது.** இதற்கு முன் போட்ட மார்க்கு அபராதத்தையாவது அல்லது பண அபராதத்தையாவது அல்லது இரெண்டையுமாவது இரெட்டித்து அபராதம் போடலாம்.

**மறுபடி குற்றத்தை 2-வது தடவல் திரும்பச்செய்வது.** இந்தக்குற்றத்திற்கு 3-வது வகுப்புக் கைதியாகத் தள்ளிவிடப்படும். சம்பாதித்திருந்த பூரா வஜாவையும், பணத்தையும் பறிமுதல் செய்யப்படும். (ஜெயில் ரூல். 456.)

**குறிப்பு**:—3 மாதத்திற்கு மேற்பட்ட வஜாவைப்பறிமுதல் செய்வதற்கு ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரலினுடைய அனுமதி வேண்டும்.

## 155. கைதிகள் அடியிற்கண்ட செய்கைகளைச் செய்தால் அவைகள் ஜெயிலில் குற்றங்களாகும்.

ஜெயில் குற்றங்கள்.

(1) வேலை செய்ய ஏற்பட்டிருக்கும் நேரத்தில் பேசுவதும், உறக்கப் பேசுவதும், ஜெயில் உத்தியோகஸ்தர்கள் அப்படிச்செய்யாதே யென்று சொல்லியிருக்க எப்போதாவது சிரிப்பதும், பாடுவதும்.

(2) வேறு கைதியோடு சண்டை போடுவது.

(3) எந்தச் சாமானையாவது ஒளிப்பது.

(4) ஜெயிலைப்பார்க்க வருவதற்கு அதிகாரமுள்ள எந்த அதிகாரிகளுக்காவது அல்லது ஜெயில் உத்தியோகஸ்தர் யாருக்காவது மரியாதைக்குறைவாக நடந்துகொள்ளுவது.

(5) சரியான முகாந்திரமில்லாமல் யார்பேரிலும் பிராது சொல்வது.

(6) ஜெயிலைப்பார்க்க வந்த அதிகாரிகள் அல்லது ஜெயில் உத்தியோகஸ்தர்கள் கேழ்க்கிற கேழ்விகளுக்குப் பொய்யான ஜவாப்பைச்சொல்லுவது.

ஜெயில் குற்றங்கள்.

(8) ஜெயில் குற்றம்யேதும் மற்ற யாரும் செய்வதற்கு உடந்தையாயிருப்பது.

(9) ஜெயில் குற்றம் எதையாவது கைதிகளில் யாராவது செய்தது தனக்குத்தெரிந்திருந்தால் அதை ரிப்போர்ட்டுச் செய்யாமலிருப்பது, அல்லது ஜெயில் உத்தியோகஸ்தர்கள் கேட்டுக்கொள்ளும்போது அவர்களுக்கு உதவிசெய்யாமலிருப்பது.

(10) கூடயிருக்கும் கைதிகளுக்கு மனவருத்தம் உண்டாகக்கூடிய விதமாக யேதும் ஒரு செய்கையைச்செய்வது அல்லது எதையும் சொல்வது.

(11) கைதிகளுடையவாவது அல்லது ஜெயில் உத்தியோகஸ்தர்களுடையவாவது மனதில் அனுவசியமான பயம் உண்டாகும்படியான யேதும் செய்கையைச் செய்வது.

(12) தான் எந்தக்கூட்டத்திற் சேர்ந்தவனோ, அந்தக்கூட்டத்தை விட்டாவது, அல்லது தான் வைக்கப்பட்டிருக்கிற ஜெயிலில் தானிருக்கவேண்டியபாகத்தைவிட்டாவது, ஜெயில் உத்தியோகஸ்தரிடம் அனுமதி கேளாமற் போவது.

(13) தன்னுடைய வார்டு, யார்டு அல்லது தனக்குக்கொடுக்கப்பட்டிருக்கிற இருப்பிடம், அல்லது படுக்குமிடம், இவைகளைவிட்டு ஜெயில் உத்தியோகஸ்தர்களிடம் அனுமதி கேளாமற்போவது.

(14) வார்டுகளும், யார்டுகளும், துறந்திருக்கும்பொழுது சோம்பேறித்தனமாக அங்குமிங்குந்திரிவது.

(15) கைதிகள் ஜோடி ஜோடியாகப் நடந்துகொண்டிருக்கும்போது நடக்கமாட்டேனென்பது அல்லது நடவாமலிருப்பது.

(16) கக்கூசுகளுக்காவது, குளிக்குமிடத்திற்காவது குறிப்பிட்ட நேரங்களைத்தவிர மற்ற நேரங்களில் உத்திரவில்லாமற்போவது, அனுவசியமாய் இராக் கக்கூசை உபயோகிப்பது, ஜெயில் ஏர்ப்பாடுகளின்படிக் கக்கூசில் உலர்ந்த மண்ணை உபயோகப்படுத்தாமலிருப்பது, அல்லது உபயோகிக்க மாட்டேனென்று சொல்வது.

(17) ஜெயில் ஏர்ப்பாட்டின்படி கொடுக்கப்படும் சாப்பாட்டைச் சாப்பிட மாட்டேனென்பது.

(18) தனக்குப் போடப்படாத சாப்பாட்டைச் சாப்பிடுவது அல்லது எடுத்துக்கொள்ளுவது, அல்லது மற்றக் கைதிகளுக்குப் போடப்பட்டிருக்கிற சாப்பாட்டிலிருந்து எடுப்பது அல்லது தன் சாப்பாட்டிலிருந்து அவர்களுக்குக்கொடுப்பது.

(19) ஜெயில் உத்தியோகஸ்தர்களின் அனுமதியில்லாமல் சமயலறையிலிருந்தாவது, அல்லது கிட்டங்கிகளிலிருந்தாவது, அல்லது சாப்பாடு போடுமிடங்களிலிருந்தாவது, சாப்பாட்டை அப்புறப்படுத்துவது.

(20) வேணுமென்று சாப்பாட்டைக்கெடுப்பது, அல்லது உத்திரவில்லாமல் அதை எறிந்துவிடுவது.



(21) ருசியைக் கெடுக்கக்கூடிய அல்லது சுகக்குறைவை உண்டாக்கக்கூடிய யேதாவது வஸ்துவை ஆகாரத்திலாவது தண்ணீரிலாவது கொண்டுவந்துபோடுவது.

(22) தனக்குக் கொடுக்கப்பட்ட உடுப்பைத் தரித்துக்கொள்ளமாட்டேனென்பது, அல்லது உடுப்பில் சிலதை மற்றக்கைதிகள் யாருக்காவது கொடுத்து அவர்களுடைய உடுப்பைத்தான் வாங்கிக்கொள்வது, உடுப்பைப் போக்கடிப்பது, உடுப்பின் தையலைப்பிரித்துக்கெடுப்பது அல்லது அதில் எந்தப்பாகத்தையுமாவது மாறுபாடுசெய்வது.

(23) உடுப்பின்பேரில் வைக்கப்பட்டிருக்கிற அல்லது கைதிகளைப் பகுத்தறியும் பொருட்டு கைதிகளின் பேரில் தரித்துக்கொள்ளும்படி கொடுக்கப்பட்டிருக்கிற நம்பர், அடையாளம் இவைகளை எடுத்துவிடுவது அல்லது அழித்துவிடுவது அல்லது மாறுபாடுசெய்வது.

(24) கைதிகள் தங்கள் தேகங்களைச் சுத்தியாகவைத்துக்கொள்ளும் விஷயத்திலாவது, அல்லது மயிரைக்கத்தரித்துக் கொள்ளும் விஷயத்திலாவது, நகத்தைக் கத்தரித்துக்கொள்ளும் விஷயத்திலாவது செய்யப்பட்டிருக்கிற உத்தரவுகளின்படி நடவாமலிருப்பது அல்லது நடக்கமாட்டேனென்பது.

(25) உடுப்புகள், கம்பளிகள், படுக்கை, விலங்குகள், கழுத்துவளையங்கள், கழுத்தில் போட்டிருக்கும் டிக்கட்டுகள், இரும்புக்கோப்பைகள், இவைகளைச் சுத்தமாகவைத்துக் கொள்ளாமலிருப்பது, வைத்துக்கொள்ள மாட்டேனென்று சொல்வது, அல்லது அந்தவஸ்துக்களை வைத்துக்கொள்ளவேண்டிய விஷயமாய்ச் செய்யப்பட்டிருக்கும் உத்தரவுகளை மீறி நடப்பது.

(26) கைதிகளுக்கு யாதொரு தகவலுமில்லாத ஜெயில் பூட்டுகள், விளக்குகள், வெளிச்சங்கள் அல்லது வேறு சொத்துக்கள் இவைகளுடன் எவ்விதயாவது ஊடாடுவது.

(27) ஜெயில் உடுப்பை அல்லது வேறு கைதியின் உடுப்பைத் திருடுவது.

(28) ஜெயிலின் எந்தப்பாகத்தையாவது ஆபாசஞ் செய்வது.

(29) துப்பியாவது அல்லது வேறு எவ்விதமாகவாவது, ஜெயிலின் தரையையாவது, கதவுகளையாவது, சுவரையாவது அல்லது ஜெயில் கட்டடத்தின் வேறு எந்தப்பாகத்தையாவது அல்லது ஜெயிலிலுள்ள வேறு எந்த வஸ்துவையாவது ஈரமாக்குவது.

(30) கிணர்கள், கக்கூசுகள், வெளுக்கும் இடம், குளிக்கும் இடம் இவைகளை வேணுமென்று ஆபாசஞ்செய்வது.

(31) ஜெயில் தோட்டத்திலுள்ள மரங்களைக் கெடுப்பது அல்லது ஜெயில் ஆடுமாடுகளை அடிப்பது.

(32) தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஜெயில் சொத்துக்களை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளாமலிருப்பது அல்லது வைத்துக்கொள்ளமாட்டேனென்பது.

(33) வேலைக்காகத்தன்னிடம் கொடுத்த சாமான்களையும் கருவிகளையும் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளாமலிருப்பது, அல்லது வைத்துக்கொள்ளமாட்டேனென்று சொல்வது, அல்லது அவைகளைக்கெடுப்பது அல்லது அழிப்பது.

(34) ஜெயில் சாமான்கள் அல்லது கருவிகள் இவைகளை தான் தற்செயலாய் போக்கடித்துவிட்டாலும், ஒடித்துவிட்டாலும், கெடுத்துவிட்டாலும் அதைப்பற்றி உடனே தெரிவிக்காமலிருப்பது.

(35) ஜெயில் உத்தியோகஸ்தரின் அனுமதியில்லாமல் எந்தச்சாமானையும் உண்டாக்குவது.

(36) மற்றொரு கைதிக்கு யேர்ப்பட்ட வேலையைத்தான்செய்வது, அல்லது தன் வேலைக்கு மற்றொரு கைதியின் உதவியைப்பெற்றுக்கொள்வது.

(37) மற்றொரு கைதி செய்த வேலையைத்தான் செய்ததாக வைத்துக்கொள்வது.

(38) வேலைக்கு உபயோகிக்கும் சாமான்களில் வேறு சாமான்களைக் கலப்பது.

(39) வேணுமென்று வியாதியையாவது, காய முதலிய கெடுதலையாவது அசக்தியையாவது தானாகவே தனக்கு உண்டுபண்ணிக்கொள்வது.

(40) எவ்விதமான தாக்குதல், அல்லது உத்தரவை மீறி நடத்தல் இவைகளை உண்டுபண்ணுவது, அல்லது அப்பேர்ப்பட்ட செய்கைகளை அடக்குவதற்கு உதவி செய்யாமலிருப்பது.

(41) எந்தக்கைதியாவது ஜெயில் உத்தியோகஸ்தனை எதிர்க்கும்பொழுது அவனுக்கு உதவியாகத்தானும் சேர்ந்து எதிர்ப்பது.

(42) கைதி, தப்பி ஓடிப்போவதற்கு முயற்சிசெய்வதைத் தடுப்பதற்காவது, அல்லது ஜெயில் உத்தியோகஸ்தனையாவது வேறு கைதியையாவது எதிர்க்கும்போது அதைத்தடுப்பதற்காவது ஜெயில் உத்தியோகஸ்தருக்கு உதவி செய்யாமலிருப்பது அல்லது உதவி செய்யமாட்டேனென்பது.

(43) ஜெயில் உத்தியோகஸ்தரின் நியாயமான உத்தரவுக்குக் கீழ்ப்படியாமலிருப்பது அல்லது கீழ்ப்படிய மாட்டேனென்பது.

மேற்கண்ட குற்றங்களை எந்தக்கைதியாவது செய்தால் ஜெயில் ஏர்பாடுகளை வேண்டுமென்று மனதார மீறினதாகவும், ஜெயில் ஆக்ட்டு 45-வது பிரிவுப்படி ஜெயில் குற்றம் செய்ததாகவும் எண்ணப்படுவான். (ஜெயில் ரூல் 395



156. ஜெயில் ஆக்ட்டு 42-45-(12) இந்தப்பிரிவுகளின்படி தடுக்கப்பட்ட வஸ்துக்கள்:—

விஷபதார்த்தங்கள், எந்த ரூபமாக வாகிலும் சாராயத்தின் ஸாரம், புகையிலை, புகைக்குடிக்கிற கருவிகள், பொடி, அபின், கஞ்சா, அல்லது சணவில் செய்யப்பட்ட மருந்துகள், வெத்திலை, பாக்கு, சாப்பாடு, வஸ்திரங்கள், பணம், நகைகள், கத்திகள், அல்லது மற்ற ஆயுதங்கள், மரத்திலாவது உலோகங்களிலாவது வேலை செய்யக்கூடிய கருவிகள், வெடிக்கத்தக்க சாமான்கள், தீக்குச்சிகள், புஸ்தகங்கள், அல்லது எழுத்து வேலைக்குவேண்டிய கருவிகளாகிய மைக்கூடு, பேனா, கடிதாசு இவைகள், எழுதியகடிதங்கள், தபால்முத்திரைகள், விளையாடுகிற சீட்டுகள், உத்தரவில்லாமல் பெற்றுக்கொண்ட அல்லது வைத்துக்கொண்டிருக்கிற அல்லது கொடுத்துவிடப்பட்ட வேறு எந்த சாமான்களுமே யாகும். (ஜெயில் ரூல், 396.) தடுக்கப்பட்டவஸ்துக்கள்.

## 157 மேற்கண்ட ஜெயில் குற்றங்களுக்கு ஏர்ப்படுத்தப்பட்டிருக்கிற தண்டனைகள்.

**அடியிற்கண்ட தண்டனைகளைச் சொற்ப தண்டனைகளாக எண்ணப்பட்டிருக்கிறது.**

1. எச்சரிப்பு. ஜெயில் குற்றங்களுக்கு ஜெயில் தண்டனைகள்.
2. அதிகமான கஷ்டமுள்ள வேலைக்கு மாற்றுவது.
3. வஜாவுக்கு மாற்றப்படாத மார்க்குகளை இழக்கும்படி செய்வது.
4. இனிமேல் கிடைக்கக்கூடிய மார்க்குகளை இழக்கும்படி செய்வது.
5. மார்க்குச்சம்பாதிக்கவொட்டாமலே தற்காலத்துக்குவிலக்கிவைப்பது
6. 1-வது வகுப்பு, கிரேட் இவைகளிலிருந்து அல்லது ஜெயில் சுவாதந்திரங்களிலிருந்து தற்காலத்துக்கு விலக்கிவைப்பது.
7. மேல்வகுப்பு அல்லது கிரேடிலிருந்து தற்காலத்துக்குக் கீழ் வகுப்பு அல்லது கிரேட்டுக்குத் தள்ளுவது.
8. தண்டனைச்சாப்பாடு போடுவது.
9. 48-மணிநேரத்திற்கு மேற்படாத காலத்திற்கு இருட்டுக்கொட்டடியில் வைப்பது.
10. 7-நாளைக்கு மேற்படாத காலத்திற்கு தனிக்கொட்டடியில் வைப்பது.
11. 14-நாளைக்கு மேற்படாத காலத்திற்குத் தனிமையாக அடைப்பது.
12. கைகளைப் பின்னுல் வைத்தாவது அல்லது கொண்டியுடன் சேர்த்தாவது வைத்துக்கைவிலங்கு போடாமல் சாதாரணமான கைவிலங்கு போடுவது.
13. 30-நாளைக்கு மேற்போகாத காலத்திற்கு (Link fetters) போடுவது.

## 158 அடியிற்கண்ட தண்டனைகளைப்பெரியதண்டனைகளென்று எண்ணப்பட்டிருக்கின்றன.

ஜெயில் தண்டனையில், பெரிய தண்டனைகள்.

1. கடினகாவல்தண்டனை விதிக்கப்படாதவர்களை கடினமான வேலை செய்யச்சொல்வது.
2. (ஏ.) சம்பாதித்த வஜாவை இழக்கும்படி செய்வது.
   (பி.) உயர்ந்த வகுப்பு அல்லது ஜிரேடிலிருந்து சாசுவதமாகத் தணிந்த வகுப்புக்கு மாற்றுவது.
   (ஸி.) வஜா ஏர்ப்பாட்டிலிருந்து சாசுவதமாக விலக்குவது.
3. 48-மணி நேரத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு தனிக்காவலென்ற இருட்டுக்கொட்டடியில் வைப்பது.
4. 7-நாளைக்கு மேற்பட்ட காலத்திற்கு தனிக் கொட்டடியில் வைப்பது.
5. 14-நாளைக்கு மேற்பட்டுத் தனியாய் அடைப்பது.
6. 30-நாளைக்கு மேற்பட்டு சங்கிலிக்கால் விலங்குபோடுவது.
7. கம்பி விலங்கு (Bar fetter) போடுவது.
8. குறுக்கு கம்பி விலங்கு (Cross-bar Fetter) போடுவது.
9. கையைப் பின்னால் வைத்தாவது, கொண்டியுடன் மாட்டியாவது கைவிலங்கு போடுவது.
10. 48-மணி நேரத்திற்கு மேற்பட்டு தனிக்காவலும் தண்டனைச்சாப்பாடும் போடும்படி செய்வது.
11. அடிதண்டனை.
12. ஜெயில் ஆக்ட்டு 47-வது, பிரிவுப்படிக்குக் கொடுக்கக்கூடிய சொற்ப தண்டனைகளும் பெரியதண்டனைகளுடன் சேர்த்து விதிப்பது. (ஜெயில் ரூல், 392.)

கைதிகளால் செய்யப்படும் குற்றங்களில், விசாரணைக்குக் கிரிமினல் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டிய குற்றங்கள்.

159. எந்தக் கைதியாவது அடியிற்கண்ட குற்றங்களில் லதையாவது செய்துவிட்டானென்று ருஜுவாகிவிட்டதாக சூப்பிரிண்டெண்டாண்டு நினைத்தால் ஜெயில்தண்டனை மேற்கண்டபடி விதிப்பது போதாதென்று அவனை இ. பு. கோடுப்படி அதிகாரஞ் செலுத்துகிற மாஜிஸ்திரேட்டண்டை விசாரணைக்கு அனுப்பப்படும்.

1. இ. பி. கோடு 147, 148-வது பிரிவுகளின்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள்.
2. இ. பி. கோடு 222, 223, 224-வது பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்கள்.

(3.) இ. பி. கோடு 304 - A, 309, 325, 326-வது பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்கள்.

(4.) ஸெஷன் கோர்ட்டாராலேயே விசாரிக்கப்படக்கூடிய குற்றங்கள்.

குறிப்பு.-இ. பி. கோடுப்படி குற்றமாகவும், ஜெயில் குற்றமாகவும் ஏற்படுகிற கேசுகளில், தானே விசாரித்துப் பைசல் செய்யவோ அல்லது மாஜிஸ்திரேட்டுகளுக்கு அனுப்பவோ சூப்பிரிண்டெண்டாண்டு தன்யுக்தத்தை உபயோகிக்கலாம். (ஜெயில் ரூல், 393.)



## 160. கால்விலங்கு போடுவதைப்பற்றிய விசேஷ விதிகள்.

சங்கிலியும் இரும்பு வளையங்களுஞ் சேர்ந்த சங்கிலிவிலங்கு. (Link fetter) சங்கிலியும் இரும்பு வளையங்களுஞ்சேர்ந்து 3-ராத்தல் கனத்திற்குமேலிருக்கக்கூடாது. சங்கிலியின் நீளம் 2-அடிக்குக் குறைவாக யிருக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 400-a.)



இந்தச் சங்கிலி விலங்குகளை கைதிக்கு 12-மாதம் [illegible] போட்டிருக்கலாம். (ஜெயில் ரூல், 401-a.)

இந்தச் சங்கிலி விலங்கு போடும்பொழுது கைதியின் வலது காலில்போட்டிருக்கும் இரும்புக்காப்புடன்தான் சேர்த்து விலங்கின் வலது பக்கம் சங்கிலியை மாட்டிவிடப்படும். இடது பக்கத்துக்கால்விலங்கை சங்கிலியுடன் சேர்ந்த வளையத்தோடு இடதுகாலில்மாட்டிவிடப்படும். இந்த விலங்கைப் போட்டுக்கொண்டே நடக்கவும், கைதிக்கு யேர்ப்படுத்தப்பட்டிருக்கிற வேலைகளை அந்த விலங்கு போடாமலிருந்தா லெப்படிச் செய்யவேண்டுமோ, அப்படியே செய்யவும் வேண்டும். நடக்குங்காலத்தில் லை விலங்கின் நுனிகீழே தொங்குவதி[illegible]த்தில் கயிறுபோட்டு, கீழே கம்பிவிலங்கு கைதி செய்கிறபடி அதைக் கையில் பிடித்துக்கொண்டாவது அல்லது இடுப்பில் மாட்டிக்கொண்டாவது நடக்கலாம்.

161. இரண்டு இரும்புக்கம்பிகளை ஒரு வளையத்தில் ஒன்று சேர்த்து, காலில் போடக்கூடிய 2-வளையங்களுடன் சேர்த்திருக்கிற கம்பி விலங்கு. (Bar fetter) கம்பிகளும் வளையங்களுஞ் சேர்ந்து 5-ராத்தலிடைக்குமேலிருக்கக்கூடாது. ஒவ்வொரு கம்பியும் 20-அங்குல நீளத்துக்குக்குறைந் திருக்கக்கூடாது.

(b) கம்பி விலங்குகளை 6-மாதம் துயர்ந்து போட்டிருக்கலாம். (ஜெயில் ரூல், 401-b.)



இந்தக்கம்பி விலங்கை மேலே சங்கிலி விலங்குக்குச்சொன்ன பிரகாரமாகவேயே கைதியின் கால்களில் மாட்டப்படும். இந்தக் கனத்த விலங்குகளைப்போட்டுக்கொண்டிருக்கிற காலங்களிலும், கைதிக்கு யேர்ப்பட்ட வேலைகளை வழக்கம்போலவேயே செய்யவேண்டும். விலங்கின் வளையத்தை கையில் தூக்கிப் பிடித்துக்கொள்ளாவிட்டால் சங்கிலிவிலங்கைப்போல் கீழே தொங்கிக்கொண்டுதானிருக்கும்.

162. கைதியின் கால்களைச் சேரவொட்டாமல் வைக்கும்படியாக 2 கால்வளையங்களுடன் சேர்க்கப்பட்ட ஒரேகம்பியுள்ள குறுக்கு விலங்கு (Cross-bar fetter) கால்வளையங்களுடன் சேர்ந்து இந்தவிலங்கு 2½-ராத்தலுக்குமேலிருக்கக்கூடாது. 5-அடி 6-அங்குல உயரமுள்ள கைதிகளுக்குப் போடப்படுகிற இந்தக் குறுக்குவிலங்குகள் 16-அங்குலத்திற்குமேலிருக்கக்கூடாது. இந்தஉயரத்திற்குக் குறைந்திருக்கிற கைதிகளுக்குப் போடப்படுகிற இந்த விலங்குகள் 14-அங்குல நீளத்திற்கு மேற்பட்டிருக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 400-c.)



குறுக்கு விலங்குகளை 240 மணி நேரத்திற்குத் தூயர்ந்துப் போட்டிருக்கலாம். (ஜெயில் ரூல், 401-c.)

இந்தக் குறுக்குக்கம்பி விலங்கு போடுவதுதான் கால்விலங்கு போடும் தண்டனைகளிலெல்லாம் கொடூரமானது. மேலேமற்ற 2 விலங்குகளும் போடப்படுகிறதாய்ச்சொல்லப்பட்ட மாதிரியாகவே இந்த விலங்கும் போடப்படும். இந்த விலங்கோடு கைதி தனக்கேற்பட்ட வேலைகளை வழக்கம்போல குறைவின்றி செய்தே தீரவேண்டும்.

ஒரு ஜெயில் குற்றத்திற்காக மேற்கண்ட விலங்குகள் போடப்பட்ட 10 தினத்திற்கு மேற்பட்டுத்தான் வேறு ஜெயில் குற்றத்திற்காக விலங்குபோடலாம். (ஜெயில் ரூல், 402.)

## கை விலங்குகள் போடுவதைப்பற்றிய விசேஷ விதிகள்.



163. கைதியின் இரு கைகளையும் கைதிக்கு முன் பக்கமாக வைத்து 2 - மணிக்கட்டுகளையும் சேர்த்து கைவிலங்கு போடுவது. இப்படி 12-மணி நேரத்திற்குத்துயர்ந்து பகற்காலத்திலாவது ராக்காலத்திலாவது போட்டிருக்கலாம். 12-மணிநேரம் இடைவிட்டு மறுபடி போடவேண்டும். இப்படித் தூயர்ந்து 4 - பகலாவது, ராத்திரியாவது விலங்குபோடலாம்.

கைதியின் இரு கைகளையும் கைதியின் பின் பக்கமாக வைத்து 2 - மணிக்கட்டுகளையும் சேர்த்து விலங்கு போடுவது. இப்படி, 24-மணி நேரங்கொண்ட ஒரு நாளில் பகல்காலத்தில் மட்டும் 6 - மணிநேரம் போட்டு வைக்கலாம். 4-நாள் இவ்விதம் தூயர்ந்து விலங்குபோடலாம். (ஜெயில் ரூல், 399-b.)



இப்படி மேலே படத்தில் காட்டியிருக்கிறபடி விலங்கு போடுவது கைவிலங்கு போடுகிற தெண்டனைக்குள் மிகவும் கொடியதானது.

குறிப்பு :—இந்தக் கைவிலங்கு போட்டிருக்குங் காலத்திலும், கால்வில் சங்கிலி விலங்கும் சேர்த்துப்போடலாம். சாக்கு (கோணி) உடை தரித்துக் கொள்ளும்படிக்காவது, தண்டனைச் சாப்பாடு போடும்படிக்காவது, தனிக்காவலில் வைக்கும்படிக்காவது செய்யலாம்.

164. கைதியின் இருகைகளையும் சேர்த்துப் போடப்பட்டிருக்கிற விலங்குகளை, கைதிக்கு முன்னால் சுவரிலாவது, அல்லது ஒரு ஸ்தம்பத்திலாவது அடித்திருக்கிற கொண்டியுடன் சேர்த்து மாட்டிவிடுவது. இப்படி ஒரு



...னைக்கு 9-மணி நேரம் மாட்டியிருக்கலாம். இவ்விதம் மாட்டிவைத்து 3 - ...ணி நேரத்திற்கு மேற்பட்டும் 5 - மணி நேரத்திற்குட்பட்டும், இடையில் ... மணிநேரம் விலங்கை எடுத்துவிட்டு மறுபடி மாட்டவேண்டும். இப்படி ...யர்ந்து 7—நாள் விலங்கு போடலாம்.

விலங்கு மாட்டப்படுகிற கொண்டியானது, கைதியின் தோள்பட்...க்கு மேற்பட்டாவது, கைதியின் இடுப்புக்குக் கீழ்ப்பட்டாவது உள்ள ...ரத்தில் அடித்திருக்கக்கூடாது. இப்படி கொண்டியில் சேர்த்துமாட்டுவது ...றக்கைதிகள் பார்க்கும் இடத்திலிருக்கவேண்டும். இப்படி மாட்டப்பட்...ருப்பது வெயிலேயில்லாத நிழலான இடத்திலிருக்கவேண்டும். (ஜெயில் ...), 399.)

கைதிக்கு இந்தப்படி தண்டனை விதிக்கப்பட்டிருக்கும்பொழுது மேலே பின்னால் கையை வைத்துப் போடப்பட்ட விலங்கு தண்டனை விஷயமாகச் சொல்லப்பட்டது போலவேயே, மற்றதண்டனைகளையும் சேர்த்து விதிக்கலாம். படத்தில் அச்சுக்கூடத்திலிருந்து புஸ்தகங்களைக் கொண்டுபோகும் கைதி இந்தத் தண்டனைக்கைதியைப் பார்க்கிறான்.

## 165. கைதிகளின் சமயல் சாப்பாடு விஷயமான சங்கதிகள்.



தானியங்களைத்திரிகையில் பொடிசெய்து மாவாக்குவது கடினமானவைகளாக எண்ணப்பட்டிருக்கிறவேலைகளிலொன்று. இது தண்டனைப்பருவத்தையனுபவிக்கும் கைதிகளுக்குக் கொடுக்கவேண்டிய மிகவும் கடினமான வேலைகளிலொன்றாகவுமிருக்கிறது. 717, 719-ம் நம்பர் கைதிகள் திருகையில் கேப்பை திரிக்கிறார்கள். 771-ம் நம்பர் கைதி கோணியிலிருக்கும் கேப்பையை முறத்தில் அள்ளிக்கொண்டிருக்கிறான். ஒவ்வொரு கைதியும் நாள் 1-க்கு 100-ராத்தல் இடையுள்ள மூட்டையில் 1-மூட்டை அரைக்கவேண்டும். திரிகையை திரணையில் வைத்து, கைதிகள் நின்று கொண்டு அரைக்கவேண்டும். திரிகையின் கைபிடி முனையில், துவாரமடிக்கப்பட்ட 4-மரப்பாளங்களைக்கோர்த்து அதை 4-பக்கங்களில் 4-கைதிகள் நின்றுகொண்டு பிடித்து இழுத்தும் அரைப்பார்கள்.



கடினமானதாக எடுக்கப்பட்டிருக்கும் வேலைகளில் ஒன்றாகிய சமயல் வேலையைச் செய்யும் கைதியும், சமயல் புறையும் கீழே படத்தில் போடப்பட்டிருக்கிறது. வட்டமான திரணைபோன்ற கட்டடம் அடுப்புக்காகக் கட்டப்பட்டிருக்கிறது. அதின்மத்தியில் A அடையாளமிடப்பட்டிருப்பது, புகைப்போக்கி.



B, C, D, E, F, அடையாளமிட்டதுகள் சமயல்செய்கிற பாத்திரங்கள். அவைகளை அடுப்பில் வைக்கப்பட்டிருக்கின்றன. F என்னும் பாத்திரத்தில் 821-ம் நம்பர் கைதி சமயல்செய்கிறபதார்த்தத்தைத் துடுப்புப்போட்டு கிளறிக்கொண்டிருக்கிறான்.

அடுப்புக்கட்டடத்தின் அடிப்பக்கத்தில் இருபக்கங்களிலும் a அடையாளமிடப்பட்ட இடங்களுக்குமேலுள்ள காலி இடங்கள் நெருப்பு, விறகு இவைகள் போட்டு எரியுமிடம். அவைகளுக்கு இரும்புக்கதவுகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சாத்திவிட்டால் அடுப்பு எரிச்சலாவது, தெருக்கையாவது, புகையாவது வெளியில் வீசாது. புகைப்போக்கி வழியாக வெளியில் போய்விடும்.

121-ம் நம்பர் கைதி, முன்பக்கத்திலுள்ள 321-ம் நம்பர் கைதியெ கூடச் சமயல் செய்கிறான். கேப்பைக்களியை அதற்காகச் செய்யப்பட் ருக்கும் அச்சுக்களில் ஊற்றி செங்கல்போன்றவைகளாக எடுத்துவைத்திரு கிறான். அச்சுக்களில் ஊற்றிய களியை 121-ம் நம்பர் கைதி முறத்தை கொண்டு வீசி குளிரச்செய்கிறான்.



கேப்பை முதலிய தானியங்களின் மாவைக்களியாக்க 30-நிமிஷம் முத 60 நிமிஷம்வரை நிதானித்துக் கிண்டி வேகவைக்கவேண்டும். அப்படி வே வைத்தால் 1-ஔன்ஸ் மாவுக்கு 4-ஔன்ஸ் முதல் 5-ஔன்ஸ் வரையுள் களியிருக்கும். 12—மாதத்திற்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் கடி காவல் தண்டனையடைந்தவர்களுக்கு சுமார் 3½, 4 ராத்தல் இடையுள்ள க ஒருவேளை சாப்பாட்டுக்குக் கிடைக்கும். இது பூரா ஆகாரமாகிவிடுமே ய வது குறைவிராது.





121, 321-ம் நம்பர் கைதிகளுடனே, 21-ம் நம்பர் கைதி, இலேச வேலைகளில் ஒன்றாக எண்ணப்பட்டிருக்கிற காய்கறி நறுக்கும் வேலை ெ ிறான்.



இந்தக்கைதியும் சமயல்வேலை பார்க்கும் 121, 321—ம் நம்பர் கைதி ளுக்கு சமயலுக்காகத் தண்ணீர் சுமந்துகொண்டுபோகிறான். தண்ணீர் மப்பது கடினமாக எண்ணப்பட்டிருக்கும் வேலைகளிலொன்று.

## 166. கைதிகளின் சாப்பாட்டுக்காக கொடுக்கப்படும் தானியம் முதலியவைகளைப்பற்றிய விஷயங்கள்.

(1) சுதேசிக்கைதிகளுக்கு, கேப்பை, சோளம், கம்பம்புல்லு இந்த மூன்றுவகைத் தானியங்களில் ஒன்று சாப்பாட்டுக்காக உப யோகிக்கப்படும். 25-ஔன்ஸ் சோளம் அல்லது கேப்பை, 26-ஔன்ஸ் கம்புக்குச்சரியானது. எந்ததானியம் அதிக

கைதிகளி சாப்பாட்டு க்கு உபயோ கிக்கும் தா யங்களின் தென்பது.

மலிவாகக்கிடைக்கிறதோ அந்தத்தானியத்தை உபயோகிக்கப்படும். இந்தத் தானியங்களை மாவாக்கிக் கொடுக்கப்படுமே யல்லது, குத்தினதாகவாவது அல்லது குத்தாததாகவாவது தானியமாகக் கொடுக்கப்படமாட்டாது.

(2) மலிவாகக் கிடைத்தால் புளிக்குப்பதில் அதே யிடையுள்ள மாங்காய் வத்தல் கொடுக்கப்படும்.

கறிப்பொடி தயார் செய்யும் விதம்.

(3) கறிப்பொடி அடியிற்கண்டபடி தயார் செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| மிளகாய் வத்தல்... | 3-ஔன்ஸ் | 8-டிராம். | |
| கொத்தமல்லி | ...3 | ,, | 0-டிராம். |
| மஞ்சள் | ... 0 | ,, | 8-டிராம். |

இவைகளைப் பொடிசெய்து பொடியாகவே கைதிச் சமயற்காரர்களிடம் கொடுக்கப்படுமே யல்லது பிரத்தியேகமான சாமான்களாகக் கொடுக்கப்படமாட்டாது."

கைதிகளுக்கு காய்கறிகள் கொடுக்கும் விதம்.

(4) கைதிகளுக்குக் கொடுக்கப்படுங் காய்கறியைக் கணக்கிடுவதில், காம்பு, தொலி, நல்ல தில்லாத பாகங்களிதை யெல்லாம் பிரித்தெடுத்த பிற்பாடு நல்லதாயுள்ள காய்கறியையே கணக்குப்படி நிறுத்துக்கொடுக்கப்படும். புளியும் அவ்விதமாகவே கொட்டை, தோடு இவைகளை யெல்லாம் எடுத்துவிட்டு நிறுத்துக்கொடுக்கப்படும்.

கைதிகளுக்கு மாம்ஸமுதலியது கொடுக்கும் விதம்.

(5) மாம்ஸமும் எலும்பு நீக்கியே கணக்கிடப்படும். பக்ஷல மேய்ந்த ஆட்டின் மாம்ஸமாவது அல்லது வெள்ளாட்டின் மாம்ஸமாவது கொடுக்கப்படும். மாம்ஸத்தை எலும்புடன் சேர்ந்து தெரிந்தால், நூற்றுக்கு 25-சேர்த்து, அதாவது ஒன்றுடன் கால் பங்கு சேர்த்துக் கொடுக்கப்படும். உலர்ந்த மீனாவது, கருவாடாவது கொடுத்தால் அதில் இரண்டரை ஔன்ஸ் இடையுள்ளதை 5-ஔன்ஸ் பச்சை மீன் அல்லது மாம்ஸத்துக்குச் சரியாகக் கணக்கிடப்படும். சுவாஸாசயம், ஈரல், குடல் முதலியதுகளைக் கைதிகளுக்குக் கொடுக்கக்கூடாது.

மாம்ஸம் சாப்பிடாதவர்களுக்கு மாம்ஸத்துக்குப்பதில் எண்ணை கொடுப்பது.

(6) பிராம்மணர்களுக்கும், மாம்ஸம் சாப்பிடாத மற்ற சைவமாக யிருக்கிற கைதிகளுக்கும், மாம்ஸம் கொடுக்கிற நாட்களில் மாம்ஸத்திற்குப்பதிலாக, அதிகமாக ஒரு ஔவுன்ஸ் நல்லெண்ணை கொடுத்துவிடப்படும். (ஜெயில் ரூல், 459.)

167. ஒரே சமயற் புரையில் தான் பிரத்தியேகமான இடத்தில் பிராம்மணக்கைதிகள் சமயல் செய்துகொள்ளவேண்டும். (ஜெயில் ரூல், 461.)

கைதிகளுக்கு சமயற்காரர்கள் நியமிக்கும் விதம்.

168. ஸிவில் கைதிகளும், துரைத்தனத்துக்கு விரோதமாய் குற்றஞ்செய்கிறவர்களும், (State Prisoners) கைதி வார்டர்களும் தங்கள் சாப்பாட்டைத் தாங்களே சமைத்துக்கொள்ளவேண்டும். மற்றக்கைதிகளெல்லோருக்கும் ஜில்லா ஜெயிலில் 25-கைதிகளுக்கு ஒரு சமயற்காரன் வீதமும், ஸெண்ட்ரல் ஜெயில், பெனிடென்ஷியரியென்னும் ஜெயில் இவைகளில் 50-கைதிகளுக்கு ஒரு சமயற்காரன் வீதமும், கைதிச் சமயற்காரர்கள் நியமிக்கப்படுவார்கள். (ஜெயில் ரூல், 462.)



169. சமயல் செய்ய நியமிக்கப்பட்ட கைதிகள் உயர்ந்த ஜாதிக்காரராக யிருக்கவேண்டும். பிராம்மணர்களுக்குப் பிராம்மணக்கைதியே சமயல் செய்வான். ஒரே பிராம்மண கைதியிருந்தால் அவன் தானேசமயல் செய்து கொள்ளவேண்டும். (ஜெயில் ரூல், 463.)

கைதிகளுக்குப் பாத்திரம் கொடுப்பதின் விவரம்.

170. ஒவ்வொருகைதியும் சாப்பிடவும், தண்ணீர்குடிக்கவும், ஒவ்வொரு தகரப்பாத்திரம் அல்லது மண் பாத்திரங் கொடுக்கப்படும். எல்லாக் கைதிகளுக்கும் கொடுக்கப்படுகிற பாத்திரங்களெல்லாம் ஒரேமாதிரியானதாக யிருக்கவேண்டும். ஒரு வருஷத்திற்குக் கீழ்ப்பட்ட தண்டனை யடைந்திருக்கிற கைதிகளுக்கு மண் பாத்திரங்களைக் கொடுக்கலாம். மேல் ஜாதியில்லாத கைதிகளால் உபயோகப் படுத்தப்பட்ட பாத்திரங்களை பின்னிட்டு மேல் ஜாதிக்காரர்களுக்குக் கொடுக்கக்கூடாது. பிராம்மணக் கைதிகளுக்கு பித்தளைப் பாத்திரங்கொடுக்கலாம். (ஜெயில் ரூல், 469.)

கைதிகளுக்கு கொடுக்கும் உணவு

171. ஒவ்வொரு ஜெயிலிலும் ஜெயிலைவிட்டு காலையில் வெளியில் வேலைக்குப்போகுமுன் 4-ஔன்ஸ் இடையுள்ள 1-கேப்பை அடை அல்லது 3-ஔன்ஸ் இடையுள்ள ஒரு அரிசி அடை, அல்லது 4-ஔன்ஸ் இடையுள்ள சுடுகூழ் இவைகளில் எதுவாவது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கைதிக்கும் கொடுக்கப்படும்; அடையைப் பார்க்கிலும் கூழ் கொடுப்பதே நலம். 2-வது சாப்பாடு பத்தேமுக்கால் (10-45) மணிக்கு சுடுகிற சாப்பாடாகக் கொடுக்கப்படும். சாயங்காலம் குளித்தபிறகு சுடு சாப்பாடு கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 470.)

172. ஆகாரத்தைச் சமைக்கும் விஷயமாக யேர்ப்படுத்தப்பட்டிருக்கிற படியில்கண்ட விதிகளைக் கவனிக்கவேண்டும்.

(1) கேப்பை, சோளம், கம்பு இவைகளைக் கீழே சொல்லியிருக்கிறபடி துப்புரவு செய்து சமயல் செய்யவேண்டும்.

(2) ஆறுமாதம் பழகாத அரிசியை சமைக்கக்கூடாது. ஏனென்றால் ஒரு ஔன்ஸ் அரிசியைச் சமயல்செய்தால் மூன்று ஔன்ஸ் சாதம் காணவேண்டும்.

(3) பருப்பைக் கூடியமட்டிலும் உமியில்லாமல் குத்தவேண்டும். பருப்பைக் கறியுடன் போட்டுச் சமயல் செய்யவேண்டுமே யல்லது, தனிமையாகச் சமயல் செய்து உருண்டையாகக் கைதிகளுக்குப் போடக்கூடாது.

(4) எண்ணையின் ஸத்தைக்குறைத்து கறியில் சேர்த்துவிடவேண்டும். (ஜெயில் ரூல், 460.)

## 173. ஆகாரம் தயார்செய்வதில் கவனிக்கவேண்டிய விதிகள்.

கேப்பையை கல், தூசி, முதலியவைகளில்லாமல் புடைத்துக்கொண்டு, உமியை அப்புறப்படுத்திக்கொள்ள வேண்டும். கேப்பையை சுத்தமானதாகச் செய்வதற்கு மூன்று சங்கதிகள் செய்யவேண்டும். அவைகளில், ஒன்றை யாவது செய்யாமலிருந்துவிடக்கூடாது அவைகளாவன:—

A. (1) **கேப்பையைக்குத்துவது:**—கேப்பையை வியாபாரிகளிடமிருந்து வாங்கிவந்தவுடன் அது நன்றாகக் காயாததாக யிருந்தால் அதை நன்றாக உலரச்செய்து உரலில்போட்டு கனத்த உலக்கைகளைக்கொண்டு குத்தவேண்டும். இப்படிச் செய்வதனால் கேப்பையின்மேல் உமிபோய்விடும். ஒவ்வொரு கைதியும் நாளொன்றுக்கு 160-ராத்தல் இடையுள்ள ஒருமூட்டை கேப்பை குத்தவேண்டும்.

(2) **முறத்தால் வீசுவது:**—கேப்பையை ஒரு கூடையிலிருந்து மெதுவாய் கீழேவிட்டு தூத்தி முறத்தால் வீசினால் உமியும் தூசியும் போய்விடும்.

(3) **தண்ணீரில்போட்டு அலம்புவது அல்லது களைவது:**—அப்பால் இந்தக் கேப்பையை சுத்த ஜலத்தால் [illegible] நிறைந்திருக்கிற ஒரு தொட்டிக்குக் கொண்டுபோகவேண்டும். மற்றொரு பாத்திரத்தில் நிறைய தண்ணீர் எடுத்து அந்தப்பாத்திரத்தின் அடியில் சிறிய கல்களைப் போட்டுக்கொண்டு அந்தப் பாத்திரத்தை ஒருவன் இரு கைகளிலும் பிடித்துக்கொண்டு பாத்திரத்தைச் சுழட்டிச் சுற்றிக்கொண்டிருக்கவேண்டும். மற்றொருவன் கேப்பையை தாரையாக சுழட்டிக்கொண்டிருக்கிற பாத்திரத்தில் கொட்டிக்கொண்டேயிருக்கவேண்டும். பாத்திரத்தை தொட்டியிலிருக்கிற தண்ணீரின்பேரில்வைத்துச் சுழட்டுவதினால் தண்ணீரில் அலையுண்டாகும். அந்த அலையினால் தாரையாகக் கொட்டிக்கொண்டிருக்கிற கேப்பையிலுள்ள கல்கள்மட்டும் அந்தப் பாத்திரத்துக்குள்ளும், கேப்பை தொட்டிக்குள்ளும் விழுந்துவிடும். அப்பால் ஒரு மரத்துடுப்பைப்போட்டு தொட்டியிலுள்ள கேப்பையைக் கிளறிக்கொண்டே யிருக்கவேண்டும். இப்படிக் கிளறுவதினால் தொட்டியிலுள்ள கேப்பையிலிருக்கிறசாவி, அழுக்கு, உமி முதலியவைகள் வெளியே வந்துவிடும். பின்பு தொட்டியிலுள்ள ஜலம் முழுமையையும் கொட்டிவிட்டு மறுபடியும் சுத்த ஜலத்தை அதில் நிறம்பவிட்டு திரும்ப மரத்துடுப்பைப்போட்டு தொட்டிஜலம் அழுக்காகும்வரை கிளறிக்கொண்டேயிருக்கவேண்டும். மறுபடி தொட்டி ஜலத்தைக் கீழேகொட்டிவிடவேண்டும். இவ்விதமாக, என்னகிண்டினாலும் தொட்டி ஜலம் அழுக்காகாமல் கேப்பை சுத்தமானதாக ஜலத்திற்கு வெளியில் தெரியும்வரையிலும் 5, 6 தடவல் திரும்பத்திரும்பத் தண்ணீர்விட்டுக் கிளறிக்கொண்டும், அழுக்குத் தண்ணீரைக் கொட்டிவிட்டு மறுபடிசுத்த தண்ணீர்விட்டுக் கிளறிக்கொண்டுமிருக்கவேண்டும். கேப்பை நல்ல சுத்தமானபிறகு தொட்டியிலிருந்து மூங்கில் கூடைகளில் அதை எடுக்கவேண்டும். அப்படிச் செய்வதினால் கொஞ்சங்கூட தண்ணீர் கேப்பையில் தங்காமல் கீழேவடிந்துவிடும். அப்பால் அந்தக்கேப்பையை அதற்கென்று கட்டப்பட்டும், சிமிட்டிச் சுண்ணாம்பினால் ஸன்னகாரைபோட்டு இழைக்கப்பட்டுமிருக்கிறதிறணைமேல் போட்டு அதை வெயிலில் உலர்த்தவேண்டும். இப்படி சுத்தஞ்செய்து வைக்கப்பட்டதானியத்தில் மண், மணல் முதலியது காற்றில் வந்து விழுந்துவிடாமல் தடுக்கும் பொருட்டாக டை திரணையைச்சுற்றி 2 - அல்லது 2½ - அடி உயரத்தில் சுற்றுச்சுவர் கட்டியிருக்கவேண்டும்.

B. **யந்திரத்தில் (திரிகையில்) அரைப்பது:**—இப்படிச் சுத்தஞ்செய்த பிறகு கேப்பையை பண்டகசாலை அறைக்குக் கொண்டுபோகவேண்டும். கொண்டுபோன உடனே அதை நிறுத்து கடையில் வாங்கின கேப்பையின் நிறை எவ்வளவு, சுத்தஞ்செய்தபிறகு அதிருக்கிற நிறை எவ்வளவு என்று கண்டுபிடித்து இருக்கும் நிறையை கையிருப்புச் சாமான்களின் ஜாப்தாவில்



எழுதிக்கொண்டு அப்பால் அதை அரைக்கக் கொடுக்கவேண்டும். கேப்பையை சாதாரணமாக நாட்டுத்திரிகைகளில் தான் போட்டு திரிக்கப்படும். இந்தத் திரிகைகளைக் கீழே வைத்துத் திரிக்கக்கூடாது. தூசி மண் மணல் மாவில் சேர்ந்துவிடாமலிருக்கும்பொருட்டாக இந்தத் திரிகைகளை பீடங்களின்பேரில் வைக்கப்பட்டிருக்கிற பலகைகளின்பேரில் வைத்துக்கொண்டுதான் அரைக்கவேண்டும்.

C. **கேப்பை மாவைத் தெள்ளியெடுப்பது:**—மாவை நன்றாகத்தெள்ளியெடுப்பதுதான் முக்கியமாய் கவனித்துச்செய்யவேண்டிய வேலை. எவ்வளவுக்கெவ்வளவு மா நன்றாகத் தெள்ளி ஸன்னமான பொடியாக யெடுக்கப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு களி நன்றுபோல நன்றாகச் சமயலாகும். கேப்பையின் மேல்பாகமானது நன்றாக எளிதில் சமயலாகவாவது அல்லது ஜீர்ணஸ்திக்ருவா (செமிக்கவாவது) மாட்டாது. ஆகையால் அந்தப் பாகத்தை கூடிய மட்டிலும் ஸன்னமாகத் திரித்துவிடவேண்டும். ஆனால் அந்த மேல்பாகத்தில் தேக சுகத்திற்கு நன்மை செய்யக்கூடிய குணமுள்ள வஸ்துக்களிருக்கின்றன. ஆகையால் அவைகளைப் பூராவும் தள்ளிவிடக்கூடாது. அதை மிகவும் ஸன்னமானதாகத் திரித்து எடுத்துக்கொள்ளவேண்டும். மிகவும் மெல்லிசான துவாரங்களையுடைய சல்லடைகளில் போட்டு மாவைச் சலிக்கவேண்டும். கப்பியாக யிருப்பவைகளை மறுபடியும் திருகையில் போட்டு மறுபடியுந்திரிக்கவேண்டும். இப்படி 3, 4 தடவல் செய்யவேண்டும்.

D. **சமயல் செய்வது:**—மாவை அடையாகவாவது, கூழாகவாவது, அல்லது களியாகவாவது சமையல் செய்யப்படுகிறது. காலையில் கொடுக்கப்படும் [illegible] கூழாகவும், மத்தியானம் சாயங்காலச் சாப்பாடுகள் களியாகவும் கொடுக்கப்படும்.

கேப்பைக்கஞ்சி அதாவது கேப்பைக்கூழ் செய்வதற்கு, கேப்பைமாவில் முதலாவது கொஞ்சம் தண்ணீரைவிட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு அப்பால் அதைக் கொதித்துக்கொண்டிருக்கிற தண்ணீரில் போட்டு 15-நிமிஷம் முதல் 30 நமிஷம் வரை வேகவைக்கவேண்டும். கூழைக்கீழே அடுப்பைவிட்டு இறக்கிவைத்த பிறகு, அதில் தண்ணீரைச் சேர்க்கக்கூடாது. ஒரு ஔன்ஸ் மாவுக்கு, தண்ணீராகத்தோற்றப்படாத விதமாகக் கனமாயுள்ள கெட்டியான 8-ஔன்ஸ் கஞ்சி காணவேண்டும். அந்த கஞ்சியானது நன்றாகக்குளிர்ந்தபொழுது கட்டியாக உரைந்துபோய் விடும்படி யிருக்கவேண்டும்.

மத்தியானம் சாயங்காலம் இந்தச் சாப்பாடுகளுக்கும் இதேவிதமாகத்தான் சமைக்கவேண்டும். ஆனால் தண்ணீர் மாத்திரம் குறைவாகவிட்டுச சமைக்கவேண்டும். ஒரு ராத்தல் மாவுக்கு 60 ஔன்ஸ் தண்ணீர் விட்டு வேகவைக்கவேண்டும். சரியானபடி நன்றாகச் சமயல்செய்ய வேண்டியதற்கு ஓயாமல் நன்றாகக் கிளறிக்கொண்டேயிருக்கவேண்டும். இதற்காக களி கிண்டுகிற பாத்திரங்கள் நிறம்ப ஜலத்தை விட்டுவிடக்கூடாது. அப்படி ஜலத்தைவிட்டு நிறப்பிவிட்டால் நன்றாகக்கிளற முடியாது. சாதாரண கொம்புகளைப்போட்டுக்கிளறாமல் 2-அகப்பைகளைப்போட்டுக் கிளறவேண்டும். தண்ணீர்கொதித்துக்கொண்டிருக்கும் பானையில் ஒருவன் கேப்பை மாவை மெள்ளக்கொட்டிக்கொண்டேயிருக்கவேண்டும். மற்றொருவன் மா தண்ணீரில் விழவிழ அது தண்ணீருடன் நன்றாகச் சேரும்படி கிண்டிக்கொண்டேயிருக்கவேண்டும்.

மாவை மொத்தமாகக் கொட்டிவிட்டால் களியில் வேகாதமாவாகவேயிருந்துவிடும். போதுமானபடி விறகு போட்டு எரியும்படிசெய்து, 30 நிமிஷம் முதல் 60 நிமிஷம்வரை களியை வேகவைக்கவேண்டும். நன்றாக வேகவைத்தபிறகு, அதை இரும்புத்தகடு, அல்லது மெதுவாக இழைக்கப்பட்ட கல்லு அல்லது அலுமினியம்தகடு இவைகள் எதின்பேரிலாவது வைக்கப்பட்டிருக்கிற செங்கல் செய்வதற்கான அச்சுகள் போன்றவைகளில் களி சூடாகயிருக்கும்பொழுதே கொட்டிவிடவேண்டும். மரப்பலகையின்பேரில் இந்த அச்சுகளை வைக்கக்கூடாது. அச்சில் களி கொட்டுகிற அறைகளெல்லாம் ஒரே அளவுள்ளவைகளாகயிருக்கவேண்டும். ஒரு ஔன்ஸ் மாவுக்குக் குறைந்தது 4 ஔன்ஸ் களியாவதிருக்கவேண்டும். சரியானபடி வேகவைத்தால் 1 ஔன்ஸ் மாவுக்கு $4\frac{1}{2}$ ஔன்ஸ் களி முதல் 5 ஔன்ஸ் களி வரை இருக்கும். இந்தப்படி அச்சில் கொட்டப்பட்ட களித்துண்டுகள் உறுதியாக யிருக்கவேண்டும். தண்ணீர் கசிந்துகொண்டிருக்கக்கூடாது.

A. **சோளம் துப்புறவு செய்வது:**—இது பெரியதாயுள்ள தானியமாகையால், கேப்பையிலிருப்பதைவிட மணலும், கல்லும் அதிகக்கொஞ்சமாகத் தானிருக்கும். ஆகையால் அதைத் துப்புறவுசெய்வது எளிதாகவேயிருக்கும்.

(1) **குத்துவது:**—கேப்பையைப்போலவேயே சோளத்தையும் உரலில்தான் குத்தவேண்டும். குத்துவதில் சோளம் நொறுங்கிவிடக்கூடாது. உமியை அப்புறப்படுத்தும் பொருட்டு குத்தும்பொழுது சோளத்தில் தண்ணீர் தெளித்து ஈரமாக்கியிருந்தால், அப்பால் அதை நன்றாக உலர்த்திவிடவேண்டும்.

(2) **முறத்தில்போட்டுப் புடைப்பது**—குத்தப்பட்ட சோளத்தை முறத்தில்போட்டுப் புடைப்பதனால் உமி வேறாகிவிடுகிறது. சோளத்தை நனைத்துவிட்டால் அது எளிதில் ஊறிப்போகக்கூடிய தானியமாகையால் ஊறிவிடும், ஆகையால் அதைத் தண்ணீரில்போட்டுக் கழுவக்கூடாது.

B. **தயார்செய்து சமையல்செய்வது:**—கேப்பையைப்போல சோளத்தை எந்திரத்தில்போட்டு அரைக்கிறதில்லை. உரலில்போட்டு கனத்த உலக்கையைப்போட்டு இடிப்பதினால் பொடியாய்விடும். அதை நன்றாய் இடித்துப் பொடி செய்துவிடவேண்டும். பொடிசெய்த மாவில், சுதேசிகள் வழக்கமாகச் செய்கிறபடி தண்ணீரை ஊற்றி ஈரமாக்கிவிடக்கூடாது. நனைத்துவிட்டால் ஊசின நாற்றம் அதில் வந்துவிடுகிறது.

கேப்பைமாவைச் சமயல்செய்வது எப்படியோ அதுபோலவேயேதான் சோளமாவையும் சமயல் செய்யவேண்டும். கேப்பைக் கஞ்சியில் தண்ணீர் விட்டுக்கலந்தால் எப்படி எளிதில் கண்டுபிடிக்கலாமோ, அவ்வளவு எளிதில் சோளக்கஞ்சியில் தண்ணீரைவிட்டுக் கலந்தால் கண்டுபிடிக்கமுடியாது. ஆகையால், தண்ணீரைக்கலந்துவிடாதபடி ஜாக்கிரதையாகப்பார்த்துக்கொள்ளவேண்டும். கேப்பையைப்பார்க்கிலும் சோளம் அதிகஜாஸ்தியாகக் களிகாணும். 1-ஔன்ஸ் மாவுக்கு 5-ஔன்ஸ் களி தாராளமாகக் காணும்.

பருப்பு:-பருப்பில் அநேக வகைகளிருக்கின்றன. ஜெயிலில் உபயோகிப்பதற்கு எந்தப்பருப்பும் உதவும். சில பருப்புகள் வேகிறதற்குமட்டும் அதிகநேரஞ் செல்லும். கைதிகளின் சுகத்திற்குப் பருப்புத்தான் மிகவும் முக்கியமான வஸ்துவாகயிருக்கிறது. இருந்தயிருப்பில் வேலைசெய்கிற ஒரு கைதிக்கு ஒரு நாளைக்கு 4-ஔன்ஸ் பருப்புக்கொடுப்பது மிகவும் ஜாஸ்தியான



அளவுதான். பருப்பு ஜீர்ணஸ்திக்குவர (செரிக்க) நன்றாய் வேகவைக்கப்பட்டிருக்கவேண்டும். அநேகப்பருப்புகளில் அதிகமணலும், புழுதியுமிருக்கிறது. அவைகளை நன்றாய் முறத்தில்போட்டுப் புடைத்துக்கொழித்து எடுத்துவிடவேண்டும். பருப்பில் கொஞ்சங்கூட உமியில்லாமல் எடுப்பது [illegible] கஷ்டமானவேலை. தொலிபோகாத பருப்புகளைக் கையினால் பொறுக்கி எறிந்துவிட்டால்தான் துப்புறவாகும். ஆனால், பருப்பை உரலில்போட்டுக் குத்திப் புடைத்தாலும் அநேகமாகத் துப்புறவாகிவிடும்.

பருப்பைக் கறியோடுசேர்த்துச் சமைக்கவேண்டுமே யல்லாது, அதைப் பிரத்தியேகமாகச் சமயல்செய்து உருண்டையாகக் கொடுக்கக்கூடாது.

எண்ணெய்:—எண்ணெய் அதிகமாகத் திருட்டுப்போகக்கூடிய வஸ்துவாகையால், அதைச் சமையற் புரைக்கு, அது கடாசியாக எப்பொழுது தேவையாகயிருக்குமோ அப்பொழுதுதான், அனுப்பவேண்டும். அதைச் சமயல் புரைவார்டரிடத்திலும், சமயற்காரனிடத்திலுங் கொடுத்துவிடக்கூடாது. எண்ணெயைக்கொண்டுபோன உடன் தாளிதத்தில் கொட்டிக்கறியில் சேர்த்துவிடவேண்டும்.

**விசேஷக்குறிப்புகள்:**—மேலே, கேப்பை, சோளம் இந்தத்தானியங்களைப்பற்றிய எல்லா விஷயங்களையும் மாட்சிமை தங்கிய நமது [illegible] ராஜாங்கத்தார் விசாரித்து அறிந்தும், அவைகளைச் சமயலுக்குத் தயார்செய்ய வேண்டிய விதங்களையும், தயார்செய்த பின் தேகசுகத்திற்கு அனுகூலமானவும், லாபகரமானவுமான விதமாக அவைகளைச் சமயல்செய்யவேண்டிய மா[illegible]களையும் தெரிந்துகொண்டிருப்பது மிகவும் ஆச்சரியப்படத்தக்[illegible]கவேயிருக்கிறது. ஏனென்றால், துரைமார் சாப்பிடுவதோ, கோ[illegible]ம்பை ரொட்டியையும், சிறு அளவில், முதல்தரமான நெல் அரிசிச் சாதத்தையுந் தவிர வேறில்லை. அப்படியிருக்க அவர்கள் கண்ணால் யேரிட்டுப்[illegible]ர்ப்பதற்குக்கூட அவகாசமில்லாத இந்தத்தானியங்களைப்பற்றி இவ்வளவு தூர[illegible] தெரிந்துவைத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும்பொழுது அவர்க[illegible] யாதொன்றுமேயில்லையென்று[illegible]வகையிலும் ஏமாற்றிவிடமுடியாதென்றும் ஏற்படுகிறது. இவ்வளவு [illegible]வுக்கு இவ்வளவு கூழ்காணுமென்றும், களிகாணுமென்றுங்கூட துல்லியமாகக் கண்டு பிடித்துக் கணக்கு யேர்ப்படுத்தியிருக்கிறார்கள். கொடுக்கும் சாமான்களை வீண்போக்காமல் அவைகளை யேர்ப்பட்ட காரியத்திலேயே செலவழிக்கவேண்டுமென்றும், திருடுவதற்கு அவகாசமே கொடுக்கக்கூடாதென்றும், அவர்கள் ஜாக்கிரதையாக யிருப்பதும் அடியில் கண்ட சங்கதியினால் தெளிவாக வெளியாகிறது. அதாவது கைதிகளின் சமயல் சம்மந்தமாகக்கொடுக்கப்படும் எண்ணெயை சமயல் புரைக்கு அனுப்புவதின் விஷயமாகவும், அந்த எண்ணெயை சமயல் செய்த வஸ்துக்களில் சேர்த்துவிடும் விஷயமாகவும் எப்பேர்ப்பட்ட ஏர்ப்பாடுகள் செய்திருக்கிறார்களென்பதைப்பார்க்கும்பொழுதே தெரியவருகிறது.

(1) மாட்சிமை தங்கிய நமது கவர்ன்மெண்டாரவர்கள் இப்பேர்ப்பட்ட அல்ப சங்கதியைக்கூடத்தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்களென்பதையும், (2) கைதிகளின் சாப்பாட்டைப்பற்றி விசேஷ ஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளப்படுகிறதென்பதையும், (3) கேப்பை, சோளம் முதலிய தானியங்களைச் சாதாரணமாக உபயோகிக்கும் ஜனங்கள் இதேவிதமாக ஆகாரம் தயார்செய்து கொண்டால் அவர்கள் தேகங்களுக்கு மிகவும் ஆரோக்கியத்தை உண்டாக்கக் கூடியதாக யிருக்குமே என்பதையும் உத்தேசித்துத்தான் அவைகளையும் இதில் எழுதப்பட்டிருக்கிறது.

### 174. பற்பல வகுப்புக் கைதிகளுக்குப் போடப்படும் சாப்பாட்டின் நிறக்கு.

| | வகுப்பு-1. | வகுப்பு-2. | வகுப்பு-3. | வகுப்பு-[illegible] | |
|---|---|---|---|---|---|
| சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்கள். | விசாரணைக் கைதிகள், 12 மாதங்களுக்குக் குறைந்த வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட சுதேச ஆண்பிள்ளைக் கைதிகள், பெண்பிள்ளைக் கைதிகள் இவர்களுக்கு நாளொன்றுக்கு, நபர் 1-க்கு. | 12 மாதங்களுக்குக் குறைந்தகாலத்திற்குக் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிற ஆண்பிள்ளைக் கைதிகள். | 12 மாதங்களுக்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டப்பட்ட சுதேச பெண்பிள்ளைக் கைதிகள். ஆண்பிள்ளைக் கைதிகள், | 12 மாதங்களுக்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டப்பட்ட ஆண்பிள்ளைக் கைதிகள். | ஷரா. |
| கேப்பை, சோளம், அல்லது கம்பு (தெள்ளினமாவு.) | நாள் ஒன்றுக்கு நபர் 1-க்கு 21-ஔன்ஸ். | இவைகளில் எந்தத் தானியத்திலாவது நாளொன்றுக்கு நபர் 1-க்கு 25-ஔன்ஸ். | வாரத்தில் 5-நாள் இந்தத் தானியங்களி லெதிலாவது நாளொன்றுக்கு 21-ஔன்ஸ். புதன்கிழமை ஞாயிற்றுக்கிழமை இவைகளில் நபர் 1-க்கு 12-ஔன்ஸ். | வாரத்தில் 5-நாள் இந்தத் தானியங்களி லெதிலாவது நாளொன்றுக்கு நபர் 1-க்கு 25-ஔன்ஸ். புதன்கிழமை ஞாயிற்றுக்கிழமை இவைகளில் நபர் 1-க்கு இந்தத் தானியங்களி லெதிலாவது 14-ஔன்ஸ். | ஜெயிலில் குற்றம் செய்த கைதிகளுக்குப் போடப்படும் தண்டனைச் சாப்பாட்டின் தாரணை. |
| பருப்பு. | வாரத்தில் 6-நாள் நபர் 1-க்கு நாளொன்றுக்கு 4-ஔன்ஸ். மாம்ஸம் போடுகிற நாளாகிய புதன்கிழமையன்று நபர் 1-க்கு 2-ஔன்ஸ். | வாரத்தில் 6-நாள் நபர் 1-க்கு நாளொன்றுக்கு 4-ஔன்ஸ். மாம்ஸம் போடுகிற நாளாகிய புதன்கிழமையன்று நபர் 1-க்கு 2-ஔன்ஸ். | வாரத்தில் 6-நாள் நபர் 1-க்கு நாளொன்றுக்கு 4-ஔன்ஸ். மாம்ஸம் போடுகிற நாளாகிய புதனன்று நபர் 1-க்கு 2-ஔன்ஸ். | வாரத்தில் 6-நாள் நபர் 1-க்கு நாளொன்றுக்கு 4-ஔன்ஸ். மாம்ஸம் போடுகிற நாளாகிய புதன்கிழமையன்று நபர் 1-க்கு 2-ஔ. | சுதேசிகளுக்கும் அன்னிய தேசத்துக்காரர்கள் தண்டனைபட்ட கைதிகளுக்கும், தெள்ளின கேப்பை அல்லது சோளமாவில் நாளொன்றுக்கு நபர் 1-க்கு 12-ஔன்ஸும், ¼-ஔன்ஸ் உப்பும் தண்ணீரும் கொடுக்கப்படும். |
| அரிசி. | இல்லை. | இல்லை. | புதன், ஞாயிறு. நபர் 1-க்கு 10-ஔன்ஸ். | புதன், ஞாயிறு. நபர் 1-க்கு [illegible]-ஔன்ஸ். | |
| தேங்காயெண்ணை அல்லது நல்லெண்ணை. | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | |
| புளி. | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | குறிப்பு:-6 ஔன்ஸ் மாவும், ¼ ஔன்ஸ் உப்புஞ்சேர்ந்து காலைச்சாப்பாட்டுக்குக் கூழும், 6-ஔன்ஸ் மாவும், ¼-ஔன்ஸ் உப்பும் சேர்த்து புளிப்பில்லாத கடுத்த அடை 1-ம் சாயங்காலத்திற்கும் கொடுக்கப்படும். |
| உப்பு. | நாளொன்றுக்கு நபர் 1-க்கு 1-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு 1-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு 1-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு 1-ஔன்ஸ். | |
| கறிப்பொடி. | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | |
| காய்கறி. | நாளொன்றுக்கு நபர் 1-க்கு 6-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு 6-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு 6-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு 6-ஔன்ஸ். | |
| வெங்காயம். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | நாளொன்றுக்கு நபர் 1-க்கு ½-ஔன்ஸ். | (ஜெ. ரு. 403.) |
| வெள்ளுள்ளி. | மாம்ஸம் அல்லது மீன் போடப்படுகிற தினமாகிய புதன்கிழமையன்று நபரொன்றுக்கு 1-டிராம். | மாம்ஸம் அல்லது மீன் போடப்படுகிற தினமாகிய புதன்கிழமையன்று நபரொன்றுக்கு 1-டிராம். | மாம்ஸம் அல்லது மீன் போடப்படுகிற தினமாகிய புதன்கிழமையன்று நபரொன்றுக்கு 1-டிராம். | மாம்ஸம் அல்லது மீன் போடப்படுகிற தினமாகிய புதன்கிழமையன்று நபரொன்றுக்கு 1-டிராம். | |
| ம[illegible]ம் அல்லது பச்சை [illegible]ன். | புதன்கிழமைகளில் எலும்புதள்ளி நபர் 1-க்கு 4-ஔன்ஸ். | புதன்கிழமைகளில் எலும்புதள்ளி நபர் 1-க்கு 5-ஔன்ஸ். | புதன் கிழமைகளில் எலும்புதள்ளி நபர் 1-க்கு 4-ஔன்ஸ். | புதன்கிழமைகளில் எலும்புதள்ளி நபர் 1-க்கு 5-ஔன்ஸ். | |
| [illegible]ப்புக்கறுவாடு. | புதன் கிழமைகளில் எலும்பில்லாமல் நபர் 1-க்கு 2-ஔன்ஸ். | புதன்கிழமைகளில் எலும்பில்லாமல் நபர் 1-க்கு 2½-ஔன்ஸ். | புதன்கிழமைகளில் எலும்பில்லாமல் நபர் 1க்கு 2-ஔன்ஸ். | புதன்கிழமைகளில் எலும்பில்லாமல் நபர் 1-க்கு 2½-ஔன்ஸ். | |

(ஜெயில் ரூல், 458.)

தண்டனைச் சாப்பாடு போடப்படும் கைதிகள் வைக்கப்படத்தக்க விஷயங்கள்.

175. தண்டனைச்சாப்பாடு போடப்படுங் கைதிகளை பிரத்தியேகமான அறையில் அடைக்கவேண்டும். தண்டனைச்சாப்பாடு போடப்படுகிற தினத்தில் அந்தக் கைதியை வேலை செய்யச்சொல்லி கட்டாயஞ் செய்யக்கூடாது. ஆனால், அவன் பொழுது போக்குக்காக அவனுக்கு ஏதும் வேலை கொடுக்கலாம். தண்டனைச்சாப்பாடு போடப்பட்டு வருகிற காலத்தில் அந்தக்கைதியின் தேகசுகத்தை சூப்பிரின்டெண்டாண்டும், மெடிகல் ஆபீசரும் கவனித்துவரவேண்டும். அந்தச் சாப்பாட்டினால் கைதியினுடைய சுகம் மிகவுங் கெட்டுப்போய்விட்டால் உடனே அந்தச்சாப்பாட்டை நிறுத்திவிட்டு வழக்கமான சாப்பாடு போடவேண்டும். தண்டனைச்சாப்பாட்டை நிறுத்திவிட வேண்டுமென்று மெடிகல் ஆபீஸர் சிபார்சு செய்தால் சூப்பிரின்டென்டண்டு தண்டனைச் சாப்பாட்டை நிறுத்திவிடவேண்டும். (ஜெயில் ரூல், 404.)

## 176. நாடா நிசவுசெய்யும் கைதி.

கைதிகளுக்கு ஜெயிலில் கொடுக்கப்படும், வேலைகளில் நாடா நிசவு வேலையானது மத்தியமான கடினமாயுள்ளதாக எண்ணப்பட்டிருக்கும் வேலைகளிலொன்று. ஒருகைதி ஒருநாளைக்கு ஆபீஸ் நாடாவில் 100 - கஜமும், ஜெயில் நாடாவில் 40-கஜமும், கூடார நாடாவில் 40-கஜமும் செய்யவேண்டும்.





## 177. நிசவுசெய்த நாடாவை யந்திரத்தில் கொடுத்து மெதுப்படுத்தும் கைதி.



## தனிக்காவல் அல்லது இருட்டுக்கொட்டடிக் காவலென்று சொல்லப்பட்ட தண்டனையைப்பற்றிய விஷயங்கள்.

தனிக்காவலாவதென்னவென்பது.

178. கடினகாவலிலேயே, தனிக்காவல் அல்லது இருட்டுக்கொட்டடிக் காவலென்று சொல்லப்பட்ட ஓர்வகைக் காவலுண்டு. (Solitary Confinement) வெளியில் நடக்கிற சங்கதி இன்னதென்று பார்க்கவாவது கேழ்க்கவாவது கூடாத பிரத்தியேகமான இடத்திலிருக்கப்பட்ட அறையில் கைதியைத் தனிமையாக அடைத்துவைப்பதுதான் தனிக்காவலாகும். (ஜெயில் ரூல், 967.)

179. தனிக்காவல் தண்டனை அனுபவிக்கிற கைதிகளை இ. பி. கோடு 74-வது பிரிவில்கண்டவும் இதன்கீழே 181, 182-வது விஷயங்களில் சொல்லப்பட்டிருக்கிறவுமான காலத்திற்கு தனி அறைகளில் அடைத்துவைக்க வேண்டும். அதற்கு மத்தியில் தனிக்காவல் தண்டனையை முறிவுதல் செய்ய வேண்டுமானால், மெடிகல் ஆபீஸர் அப்படி அபிப்பிராயங் கொடுக்கவேண்டும். (ஜெ. ரூல், 968.)

தனிக்காவல் எப்போது விதிக்கலாமென்பது.

180. எந்தக்கேசுகளில் குற்றவாளிக்குக் கடினகாவல் தண்டனை விதிக்கப்படுகிறதோ, அந்தக் கேசுகளில்தான் தனிக்காவல் தண்டனை விதிக்கலாம். 3-மாதத்திற்கு மேல்பட்டு ஒருபோதும் தனிக்காவல் தண்டனை விதிக்கக் கூடாது. (இ. பி. கோடு, பிரிவு 73.)

தனிக்காவலை நிறைவேற்றும் விதம்.

181. மூன்று மாதத்திற்கு மேற்போகாத காலத்திற்கு விதிக்கப்பட்ட காவல் தண்டனையுடன் விதிக்கப்பட்ட தனிக்காவல் தண்டனையை நிறைவேற்றுவதில், ஒரே தடவையில் 14 நாளைக்கு மேற்பட்டு ஒரு காலத்திலும் தனிக்காவலில் வைக்கக்கூடாது. மறுபடி 14 நாள் இடைவிட்டு பின்னும் 14 நாள் தனிக்காவலில் வைக்கலாம். (இ. பி. கோடு, பிரிவு 74.)

3-மாசத்திற்குமேற்பட்ட காவலுடன் விதிக்கப்பட்ட தனிக்காவலை நிறைவேற்றும் விதம்.

182. மூன்று மாதத்திற்கு மேற்பட்ட கடினகாவல் தண்டனையுடன் சேர்த்துத் தனிக்காவல் தண்டனையும் விதிக்கப்படப்பட்ட கேசுகளில், ஒரு மாதத்தில் 7-நாளைக்கு மேற்பட்ட காலத்திற்குத் தனிக்காவலில் வைக்கக்கூடாது. 7-நாள் தனிக்காவலிலிருந்து தீர்ந்தபிறகு 7-நாள் இடைவிட்டு மறுபடி 7-நாள் தனிக்காவலில் வைக்கவேண்டும். (இ. பி. கோடு, பிரிவு-74.)

183. இ. பி. கோடு 73, 74-வது பிரிவுகளில் மாதமென்று சொல்லியிருப்பது காலண்டர் மாதமென்று வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது; செப்டம்பர், ஏப்பிரல், ஜூன், நவம்பர், இந்தமாதங்களுக்கு 30-நாட்களாகவும் மற்ற மாதங்களுக்கு 31 - நாட்களாகவும், பிப்பரவரி மாதத்திற்கு 28-நாட்களாகவும், நான்கு வருஷத்திற்கு ஒருதரம் வருகிற பிப்பரவரி மாதத்திற்கு மட்டும் 29-நாட்களாகவும், வைத்துக்கொள்ளவேண்டிய மாதங்களென்று அர்த்தம். (ஜெயில் ரூல்-969.)

(உதாரணம்.) ஒரு கைதிக்கு ஒரு வருஷமும் 1-நாளும் காவல் தண்டனை விதிக்கப்பட்டு அதில் மூன்றுமாதங் கடினகாவலிலிருக்கும்படி உத்தரவு செய்யப்படுகிறது. இந்தத் தண்டனையானது இ. பி. கோடு. 73-வது பிரிவுப்படி சரியானதாகத்தானிருக்கிறது. ஆனால் இந்த தண்டனையை இ. பி. கோடின் 74-வது பிரிவுப்படி நிறைவேற்றக்கூடாமலிருக்கிறது. ஏனென்றால் ஒரு மாதத்திற்கு 7-நாள் வீதம் 12-மாதங்களாகிய ஒரு வருஷத்தில் 84-நாள் தான் தனிக்காவலில் வைக்கலாம். விதிக்கப்பட்டிருக்கிற 3-மாதத் தனிக்காவல் தண்டனையில் நிறைவேற்றக்கூடிய 84-நாள்போக மீதத்தண்டனையை நிறைவேற்ற முடியாது. ஆகையால் இது விபரத்தை ஜெயில் சூப்பரிண்டெண்டாண்டு 3 மாதத் தனிகாவலிலிருக்கும்படி உத்தரவு செய்த கோர்ட்டாருக்குத் தெரிவித்துவிடவேண்டும். இவ்விதமாகவே சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டாரவர்கள் 1879-ம் டிசம்பர் மாதம் 15௳ பைசல் செய்திருக்கிறார்கள். நான்கு மாதக்காவல் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதிக்கு, அதில் ஒரு மாதத்தனிக்காவல் விதிப்பதும் மேற்கண்டபடி நிறைவேற்றக்கூடாத தண்டனையாகவேயிருக்கிறது. 7 மாதக்காவல் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவனுக்கு அதில் 2 மாதம் தனிக்காவல் தண்டனை விதிப்பதும் நிறைவேற்றக்கூடாத தண்டனையாகவே யிருக்கிறது. (ஜெயில் ரூல், 970.)

184. ஒரு கைதிக்கு இரண்டு பிரத்தியேகமான கேசுகளில் காவல் தண்டனை விதிக்கப்படுகிறது. அதில் பிந்திய கேசில்மட்டும் தனிக்காவல் தண்டனைக்கு உத்தரவு செய்யப்படுகிறது. இப்பேர்ப்பட்ட கேசுகளில் பிந்தியகாவல் தண்டனையை நிறைவேற்றும்பொழுதுதான் தனிக்காவல் தண்டனையைநிறைவேற்றவேண்டுமே யல்லது 1-வது தண்டனையை நிறைவேற்றும்பொழுது தனிக்காவல் தண்டனையை நிறைவேற்றக்கூடாது. இதேவிதமாக ஒரு கேசுக்காக விதிக்கப்பட்ட தனிக்காவல் தண்டனையானது இ. பி. கோடு 74-வது பிரிவின்படி நிறைவேற்ற முடியாத விதமாக அதிகமானதாக யிருந்தால், நிறைவேற்ற முடியாமல் அதிகமாக யிருக்கிற தனிக்காவல் தண்டனையை, வேறு கேசுக்காக விதிக்கப்பட்டிருக்கிற காவல் தண்டனையை நிறைவேற்றுங்காலத்தில் அனுபவிக்கும்படி செய்யக்கூடாது. (ஜெயில் ரூல், 971.)

(உதாரணம்) ஒருவனுக்கு ஒரு கேசில் 4 மாதங்கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டு அதில் ஒரு மாதம் தனிக்காவலிலிருக்கும்படி உத்தரவு செய்யப்படுகிறது. மற்றொரு கேசுக்காக 3 மாதங் கடினகாவல் தண்டனை அதே தினத்தில் விதிக்கப்படுகிறது. முதலாவது கேசில் விதிக்கப்பட்ட தனிக்காவல் தண்டனையில் மாதம் ஒன்றுக்கு 7 நாட்கள் வீதம் 4 மாதங்களில் 28 நாள் தனிக்காவல் தண்டனை தான் நிறைவேற்ற முடியும். ஒரு மாதத்தனிக்காவலில், நிறைவேற்றப்பட்ட 28நாள் தனிக்காவல் போகப்பாக்கியிருப்பதை நிறைவேற்றாமல் தள்ளுபடி செய்துவிடவேண்டுமே யல்லது, 2-வது தண்டனை 3 மாதம் அனுபவிக்கும்பொழுது நிறைவேற்றக்கூடாது.



185. தனிக்காவல் தண்டனையை அனுபவிக்கிறதற்கு லாயக்கானவன் தானென்று மெடிகல் ஆபீசர் அபிப்பிராயம் கொடுத்தாலொழிய ஒரு கைதியையும் தனிக்காவலில் வைக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 973.)

186. தனிக்காவலில் வைக்கப்படும் கொட்டடி ஒவ்வொன்றிலும், கைதிக்கு வேண்டும்பொழுது ஜெயில் உத்தியோகஸ்தரை கூப்பிடும்படியாக, மணி ஒன்று வைக்கப்பட்டிருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 975.)

187. தனிக்காவல் தண்டனை அனுபவிக்கும் ஒவ்வொரு கைதியையும், பிரதிதினமும், சூப்பிரிண்டெண்டாண்டும் மெடிகல் ஆபீஸரும் போய்ப்பார்க்கவேண்டும். (ஜெயில் ரூல், 977.)

188. தனிக்காவல் தண்டனையை அனுபவிக்கிற கைதிகளுக்குக் கடினகாவல் தண்டனை அனுபவிப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் ஜெயில் சாப்பாடு போடப்படும். (ஜெயில் ரூல், 978.)

189. தனிக்காவலில் வைக்கப்பட்டிருக்கிற கைதிகளும் அவர்களுக்கு ஏற்பட்ட வேலையைச் செய்யத்தான்வேண்டும். (ஜெயில் ரூல், 979.)

190. கிரிமினல் கோர்ட்டுகளினால் விதிக்கப்பட்ட தனிக்காவல் (Solitary Confinement) தண்டனையோடு தவிர்ந்து, ஜெயில் குற்றங்களுக்காக விதிக்கப்படும் தனிக்காவல் தண்டனையை நிறைவேற்றிவிடக்கூடாது. (ஜெயில் ரூல், 972.)

191. கைதிகளுடையவும், ஜெயில் உத்தியோகஸ்தர்களுடையவும், பந்தோபஸ்தை உத்தேசித்து, தனிக்காவலில் வைக்கப்படப்போகிற ஒவ்வொரு கைதியையும், தனிக்காவல் அறையில் அடைக்கப்படுமுன் தேக சோதனை போட்டு, அவனிடத்தில் அகப்படுகிற அபாயகரமான அல்லது அவன் வைத்துக்கொண்டிருப்பது உசிதமில்லையென்று நினைக்கப்படுகிற எந்த வஸ்துவையும் அப்புறப்படுத்திவிடவேண்டும். கைதி தனிக்காவலிலிருக்குங் காலம் பூராவும், ஒவ்வொருதினமும் அந்த அறையையும் கைதியையும் சோதனை செய்யவேண்டும். (ஜெயில் ரூல், 974.)

192. தனிக்காவல் அறையின் கதவிற்கு வெளியில் ஒரு டிக்கட்டுப்போட்டு அதில்கைதியின், நம்பரையும், பெயரையும், அவனைத்தனிக்காவலில் போட்ட தேதியையும், அவன் தனிக்காவலில் வைக்கப்படவேண்டிய நாளின் தொகை இவ்வளவென்பதையும், அவன் கடாசியாகத் தனிக்காவலில் வைக்கப்பட்ட தெய்தி இன்னதென்பதையும் எழுதிவைக்கவேண்டும். (ஜெயில் ரூல், 976.)

193. கைதிகளின் தேகசுகத்திற்கு அவசியமென்று மெடிகல் ஆபீசருக்குத் தோன்றினால் தனிக்காவல் கைதிகளை வெளியில் கொண்டுவந்து தேகாப்பியாசஞ் செய்யச்சொல்லவேண்டும். (ஜெயில் ரூல், 980.)



194. தனிக்காவல் அறைக்கு இரும்பு அழிகள் போட்ட கதவுகளும், மரத்தினால் பூராவும் அடைக்கப்பட்ட கதவுகளும் இருக்கின்றன. இந்த அறையின் பின்பக்கத்துச் சுவரின் மேல்கீழ்பாகங்களில் காத்தோட்டத்திற்காக சிறியஜன்னல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. மரக்கதவில் சுமார் 6 அங்குலச் சதுரமுள்ள ஒரு துவாரமட்டும் விடப்பட்டிருக்கிறது. அந்தத்துவாரத்தையும் கைதியின் மூர்க்கத்தனத்துக்குத் தக்கபடி மூடிவிடப்படும். இப்பேர்ப்பட்ட அறைகள் பாளையங்கோட்டை ஜில்லா ஜெயிலிலிருக்கின்றன.

195. ஆனால் சென்னப்பட்டணத்திலுள்ள பெனிடென்ஷியரி என்னும் ஜெயிலில் இந்த அறைகள் வேறுமாதிரியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அறைகளுக்கு இரும்பு அழிக்கதவுகள் மட்டும் போடப்பட்டிருக்கின்றன. அறைக்குள் போதுமான வெளிச்சமிருக்கிறது. ஆனால் இந்த அறைகளுக்குமுன்னால் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருக்கிறது. அந்தச் சுற்றுச்சுவர் கடந்து உள்ளேயாரும் போனாலொழிய கைதி யாரையும் பார்க்க முடியாது.

## தனிக்காவல் தண்டனை விதிப்பதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

196. (1) கடினகாவல் தண்டனை விதித்தால்தான் தனிக்காவல் தண்டனை விதிக்கலாம்.



(2) 3-மாதங்களுக்கு மேற்பட்ட தனிக்காவல் தண்டனை விதிக்கக்கூடாது.

(3) 6-மாதங்களுக்கு மேற்போகாமல் கடினகாவல் தண்டனை விதித்தால் 1-மாதத்திற்கு மேற்படாத தனிக்காவல் தண்டனையும்;

(4) 6-மாதங்களுக்கு மேற்பட்டு 1-வருஷத்திற்கு மேற்போகாத கடினகாவல் தண்டனை விதித்தால் 2-மாதங்களுக்கு மேற்போகாத தனிக்காவல் தண்டனையும்;

(5) 1-வருஷத்திற்கு மேற்பட்ட கடினகாவல் தண்டனை விதித்தால் 3-மாதங்களுக்கு மேற்போகாத தனிக்காவல் தண்டனையும் விதிக்கலாம். (இ. பி. கோடு, பிரிவு 73.)

## 197. கைதிகளினுடைய உடையைப்பற்றிய விஷயங்கள்.

கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உடைகளைத்தவிர மற்றதைத் தரித்துக்கொள்ளக்கூடாது.

கடினகாவல் தண்டனையாவது தண்ணீர்மேலேற்றுந் தண்டனையாவது விதிக்கப்பட்ட ஒவ்வொரு கைதியும், இந்த விதிகளில் கண்ட பிரகாரம் ஜெயில் உடுப்புத்தான் தரித்துக்கொள்ளவேண்டும். ஜெயில் படுக்கை கொடுக்கப்படுவார்கள். அவர்களுடைய சொந்த உடையாவது, கழுத்தில் போட்டுக்கொள்ளக்கூடிய கொடி முதலிய நகைகளையாவது, பிராம்மணர்கள் தரித்துக்கொள்ளுகிற பூணூல் தவிரவும், பெண்பிள்ளையின் தாலிக்கயிற்றைத்தவிரவும் வேறு யாதொன்றையுமாவது வைத்துக்கொண்டிருக்க இடங்கொடுக்கப்படமாட்டார்கள். இந்தக் கடினகாவல் கைதிகளைத் தவிர மற்ற வகுப்புக் கைதிகளும் ஜெயில் உடுப்பு, படுக்கை இவைகளை அபேக்ஷித்தால் அவர்களுக்குங் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 477.)

198. ஜெயில் உடைகள், படுக்கைகள் இவைகளெல்லாம் ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தரவு செய்கிறபடி ஒரே மாதிரியானதாகயிருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 478.)

கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உடையின் விவரங்கள்.

199. கைதி வார்டராகவாவது அல்லது கைதி ஒவர்சீயராகவாவதில்லாத மற்ற ஆண்பிள்ளைக் கைதிக்கு ஒரு கட்டையான உடுப்பும், கட்டையான கால் சட்டையும், குல்லாவும், கோவணமுங் கொடுக்கப்படும். இதுதான் ஒரு ஜதை உடுப்பென்பது. உடுப்பில் எந்தப்பாகத்திலும் பையாவது வேறு சாமான் வைத்துக்கொள்ளும்படியான இடமாவது வைக்கக்கூடாது. 6 கெஜ நீளம், 1 கெஜ அகலத்தில் ஒரு புடவை பெண்பிள்ளைக் கைதிக்குக் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 479.)

பற்பல வகுப்புக் கைதிகளின் உடுப்பின் வித்தியாசமின்னதென்பது.

200. சுதேச ஆண்பிள்ளைக் கைதிகளுக்கும், ஷை பெண்பிள்ளைக் கைதிகளுக்கும், சாதாரணமாகக் கொடுக்கப்பட்ட உடையானது வெள்ளைப்பருத்தி நூலால் செய்யப்பட்டதாகயிருக்கும். தண்டனைப் பருவத்தை அனுபவிக்கிற முதல் மூன்று மாதங்களில், ஆண்பிள்ளைக் கைதி சாக்கு (கோணி) உடையைத்தரித்துக்கொள்ளவேண்டும். வழக்கமாகக் குற்றஞ்செய்து அடிக்கடி ஜெயிலுக்குவருகிற ஆண்பிள்ளைக் கைதிகள் நீல குல்லாத் தரித்துகொள்ளவேண்டும். அப்பேர்ப்பட்ட பெண்பிள்ளைக் கைதிகள் சேலைகளின் விளிம்பில்

நீலக்கரை போடப்பட்டிருக்கும். ஆயுசுபரியந்தம் தண்டிக்கப்பட்டிருக்கிற ஆண்பிள்ளைக் கைதிகள் சிகப்புக்குல்லாத் தரித்துக்கொள்ளவேண்டும், அப்பேர்ப்பட்ட பெண்பிள்ளைக்கைதிகளுடைய சேலைகளின் விளும்பில் சிகப்புக்கரை போடப்பட்டிருக்கும். கோவணம் மாத்திரம் எப்பொழுதும் துணிக் கோவணந்தான். சாக்குக்கோவணமில்லை. (ஜெயில் ரூல், 480.)

12-மாதத்திற்குக் குறைந்த தண்டனைக்கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உடுப்புகளின் தாரானை.

201. சுதேச ஆண்பிள்ளைக் கைதிகளில் ஒவ்வொருவருக்கும் ஜெயிலுக்குப்போனவுடன் மற்றக்கைதிகள் போட்டுக்கொண்ட பழைய உடுப்பு ஜதை 1-ம், புது உடுப்பு ஜதை 1-ம் கொடுக்கப்படும். 12 மாதங்களுக்குக்குறைந்தகாலத்திற்குத்தண்டனை யடைந்தவர்களுக்கு ஒரு ஜதை தான் கொடுக்கப்படும். பெண்பிள்ளைக் கைதிகளுக்கு 2 [illegible]கள் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 481.)

சில கைதிகள் வேலைசெய்யும் நேரத்தில் உடை தரித்துக்கொள்ள வேண்டியதில்லையென்பது.

202. தோட்டவேலை முதல் கடினமானவேலைசெய்கிற ஆண்பிள்ளைக் கைதிகள் வேலை செய்யும்பொழுது உடுப்பாவது கால்சட்டையாவது போட்டுக்கொள்ளவேண்டியதில்லை. அடைப்பான வேலைக்கூடங்களிலும், சமயற்புரைகளிலும் வேலை செய்கிறவர்கள் வேலை செய்யுங்காலத்தில் உடுப்புப்போட்டுக்கொள்ளவேண்டியதில்லை. சாப்பிடுகிற காலங்களிலும், மேல் அதிகாரிகள் பார்க்கவரும் காலங்களிலும், குளிர் காலங்களிலும் கைதிகள் உடுப்புத் தரித்துக்கொள்ளவேண்டும். ஈர உடைகளைக் கைதிகள் தரித்துக்கொள்ள இடங்கொடுக்கக்கூடாது. குளிரான காலை நேரத்தில் கைதிகள் வெளியில் நிற்கும்படி நேரிட்டால் கம்பளியை உடம்பில் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். (ஜெயில் ரூல், 483.)

உடையை பந்தோபஸ்தாக வைத்துக்கொள்ளாதவர்களுக்குத் தண்டனையுண்டு.

203. தங்களுடைய உடைகளை வேணுமென்று அழித்துவிடுகிற அல்லது கெடுத்துக்கொள்ளுகிறகைதிகளுக்கும், உடுப்புவிஷயத்தில் சரியானபடி ஜாக்கிரதையாக யிருக்கவில்லையென்று நினைக்கும்படியான மாதிரியாக உடுப்புகளை சீக்கிரத்தில் கிழித்துப்போடுகிறவர்களுக்கும் தண்டனை கிடைக்கும். (ஜெயில் ரூல், 484.)

உடையை பந்தோபஸ்தாக வைத்துக்கொள்ளுவதினால் கிடைக்கும் பிரயோஜனமின்னதென்பது.

204. ஏற்பட்டகாலத்திற்கு மேற்பட்டு தங்களுடைய உடைகளை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டிருக்கிற கைதிகளுக்கு சூப்பிரிண்டெண்டாண்டுகள் தங்களுடைய அதிகாரத்திற்கு மேல் போய்விடாமல் விசேஷமார்க்குகள் கொடுப்பார்கள். இப்படி விசேஷ மார்க்குக் கொடுப்பது ஒரு கைதிக்கு 9 மாதத்திற்கொரு தடவல் தான் கொடுக்கலாம். இந்தக்காலத்திற்குத் தன் உடையை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டிருக்கிற கைதிகளுக்கு விசேஷ மார்க்குகளும் புது உடுப்புங்கொடுக்கப்படும். நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டிருந்த பழைய உடையை வாங்கி, புதிதாய் வருகிற கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிற பழைய உடுப்பு ஜதைக்காக உபயோகிக்கப்படும். (ஜெயில் ரூல், 485.)

கீழ்க்கண்ட தண்டனைக்கைதிகளுக்கு உடை கொடுப்பதின் தாரானை.

205. கைதிகளுக்கு உடைகள் அடியிற்கண்டபடி கொடுக்கப்படும். ஆண்பிள்ளைக்கைதிகளுக்கு 9-மாதத்திற்கொருதரம் 1-புதுக்குல்லாவும், 1-புதுக்கோட்டும், 6-மாதத்திற்கொருதரம் 1-ஜோடி கால்சட்டைகளும் கொடுக்கப்படும். பெண்பிள்ளைக் கைதிகளுக்கு 9 - மாதத்திற்கு கொருதடவல் 1-புதுப்புடவை கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 486.)



206. நவம்பர் முதல் மார்ச்சு வரையிலுள்ள குளிர் காலத்தில் உபயோகிக்கும்பொருட்டு கம்பிளி உடுப்புகள் கொடுக்கலாம். (ஜெயில் ரூல், 488.)

207. சுதேசிக்கைதிகளுக்கு ஒரு கம்பிளியும், கொச்சக்கயிறு அல்லது கத்தாழை நார் கயிற்றால் செய்யப்பட்ட [illegible]யொன்றும், படுக்கைக்காகக்கொடுக்கப்படும். 8-அடி நீளம் $2\frac{1}{2}$-அடி அகலமுள்ள பாய் கொடுக்கப்படும். பாயில் வேண்டிய நீளத்தை விரித்துக்கொண்டு மீதி நீளத்தைத்தலையணைக்காகச் சுற்றி வைத்துக்கொள்ளும் பொருட்டு, 8-அடி நீளத்தில் பாய் கொடுக்கப்படுகிறது. திரணையில் தலையணை கட்டப்பட்டிருந்தால், 6-அடி நீளத்திற்கு மேற்பட்ட பாய் கொடுக்கப்படமாட்டாது. கொடுக்கப்படுகிற கம்பிளிகள் 2-வருஷமும், பாய்கள் 5-வருஷமுமிருக்கவேண்டும். வேலை செய்துகொண்டிருக்கிற காலத்தில் ஒரு கைதியும் கம்பளியை உபயோகிக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 489.)

கைதிகளுக்குக் கொடுக்கப்படும் படுக்கைகளின் விவரம்.

208. மேலே படுக்கைக்காகக் கொடுக்கப்படுகிறதாகச் சொல்லப்பட்ட கம்பிளி நீங்கலாக அக்டோபர்மாதம் 15-ம் தெய்தி வாக்கில் மற்றொருகம்பிளி போர்வைக்காகக் கொடுக்கப்படும். அதை பிப்ரவரி மாதக்கடைசியில் திரும்ப வாங்கிக்கொள்ளப்படும். (ஜெயில் ரூல், 490.)

போர்த்திக்கொள்ள கம்பளிகள்.

209. மெடிகல் ஆபீஸர்சிபார்சு செய்தால், வியாதியஸ்தனாகவாவது, விருத்தாப்பியனாகவாவது அல்லது அசக்தியாகவாவது இருக்கிற கைதிக்கு ஜாஸ்தியான உடை படுக்கை முதலியது கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 492.)

மெடிகல் ஆபீசர் சிபார்சு செய்தால், அதிகமான படுக்கை உடைகள் கொடுக்கப்படும்.

குறிப்பு:—மேலே கண்ட விதிகள், வெறுங்காவல் கைதிகளுக்காவது, ஸிவில் கைதிகளுக்காவது சம்பந்தப்படமாட்டாது. அவர்களுக்குச்சொந்த உடைகள் சரியானபடி இல்லாவிட்டால் அவர்களுக்கும் ஜெயில் உடுப்பு, படுக்கை முதலியதுகள் கொடுக்கப்படும்.

## வஜா யேர்ப்பாட்டின்படி கிடைக்கக்கூடிய பாத்தியதைகளை இழந்துவிடும்படியான விஷயங்களைப்பற்றிய விசேஷ விதிகள்.

210. ஜெயில் குற்றத்திற்காக, வஜா யேர்ப்பாடின்படி கிடைக்கக்கூடிய பாத்தியதைகளை இழந்து விடும்படி செய்வதற்காக அடியிற்கண்ட தண்டனைகள் விதிக்கப்படும்.

(a) சம்பாதிக்கப்பட்டதாயும் ஆனால் வஜா நாட்களாக மாற்றப்படாமலுமிருக்கிற மார்க்குகளைப் பறிமுதல் செய்வது.

(b) இனிச் சம்பாதிக்கக்கூடிய மார்க்குகளைப்பறி முதல் செய்வது.

(c) தற்காலத்திற்கு, கைதியின் வகுப்பு, கைதி உத்தியோகஸ்தரின் வகுப்பு அல்லது ஜெயில் பாத்தியதை இவைகளைப்பறி முதல் செய்வது.

(d) சம்பாதித்த வஜாவைப் பறிமுதல் செய்வது.

(e) கைதி வகுப்பிலிருந்தாவது, கைதி உத்தியோகஸ்தன் வகுப்பிலிருந்தாவது, தற்காலத்திற்காவது அல்லது சாசுவதமாகவாவது கீழ்வகுப்புக்குத் தள்ளிவிடுவது.

(f) தற்காலத்துக்காவது அல்லது சாசுவதமாகவாவது வஜா ஏர்ப்பாட்டிலிருந்தே தள்ளிவிடுவது.

குறிப்பு:-(1) மேலே (a.) அல்லது (b.) ப் பிரகாரம் பறிமுதல் செய்வதற்கு முந்தியாவது பிந்தியாவது மூன்று மாதங்களில் கைதி சம்பாத்தியஞ் செய்திருக்கிற அல்லது சம்பாத்தியஞ் செய்யக்கூடிய மார்க்குகளின் எண்ணிக்கைக்கு மேற்பட்டுப்பறிமுதல் செய்துவிடக்கூடாது.

(2) (d)ப்படி பறிமுதல் செய்யப்படுகிற வஜாவானது பறிமுதல் செய்யப்படுகிற காலத்திற்கு மூன்று மாதத்திற்குள் சம்பாதித்ததாக யிருக்கவேண்டும். மூன்று மாதத்திற்கு மேற்பட்ட வஜாவைப்பறிமுதல் செய்வதற்கு ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரலினுடைய அனுமதிவேண்டும்.

(3) (f)ப்படி வஜா யேர்ப்பாட்டிலிருந்து ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரலினுடைய அனுமதியில்லாமல் தள்ளிவிடக்கூடாது. (ஜெயில் ரூல், 397.)

## 211. பெண்பிள்ளைக் கைதிகளைப்பற்றிய விஷயங்கள்.

*பெண்பிள்ளைக் கைதிகளை அடைக்கும் விதம்.*

பெண்பிள்ளைக் கைதிகளை, அவர்கள் ஆண்பிள்ளைக் கைதிகளைப் பார்க்கவாவது, பேசவாவது, வேறு எவ்விதமான தகவலும் வைத்துக்கொள்ளவாவது கூடாத விதமாக, பிரத்தியேகமாக வைக்கவேண்டும். இதேவிதமாக, தண்டனைப்பட்ட பெண்பிள்ளைக் கைதிகளை தண்டனைப்படாத பெண்பிள்ளைக் கைதிகளைவிட்டுப் பிரித்துப் பிரத்தியேகமாக வைக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1058.)

*பெண்பிள்ளை ஜெயில்களின், பூட்டு சாவி வகையராவைப் பற்றி.*

212. பெண்பிள்ளைக் கைதிகள் வைக்கப்பட்டிருக்கிற கட்டடங்களிலிருக்கும் வார்டுகளுடைய பூட்டுகள், ஜெயிலில் மற்ற இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் பூட்டு-மாதிரியாயில்லாமல் வேறு மாதிரியானவைகளாக யிருக்கவேண்டும். ஒரே சாவியை (துறவுகோலை)க் கொண்டு 2 - வகை பூட்டுகளையும் துறந்துவிடக் கூடியதாக யிருக்கக்கூடாது. (ஜெயில் ரூல் 1059.)

213. பெண்பிள்ளைக் கைதிகளில் ஒருவரும் தன்னுடைய யார்டைவிட்டு சூப்பிரிண்டெண்டாண்டினுடைய அனுமதியில்லாமல் போகக்கூடாது அப்படி அனுமதி பெற்றுக்கொண்டு போகும்பொழுதும் வார்டர் அல்லது வேறு பெண்பிள்ளை ஜெயில் உத்தியோகஸ்தர் கூடவேதான் போகவேண்டும் (ஜெயில் ரூல், 1060.)

*பெண்பிள்ளைக் கைதிகளிருக்கு மிடத்திற்கு ஆண்பிள்ளைக் கைதிகள் போகக்கூடாது.*

214. அங்கே போவதற்கு அதிகாரமுள்ள ஜெயில் உத்தியோகஸ்தர்களில் யாரும் தன்கூட வராமலிருக்கும்பொழுது, ஆண்பிள்ளைக் கைதிகளில் யாரும் பெண்பிள்ளைக் கைதிகளிருக்கும் யார்டுக்குள்ளாவது அல்லது அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கும் இடத்திற்காவது போகக்கூடாது (ஜெயில் ரூல், 1061.)



215. பெண்பிள்ளைக் கைதிகளுக்குச் சாப்பாடு பிரத்தியேகமான தாரணையுள்ளது. அதைப்பற்றி ஜெயில் ரூல், 458-ல் சொல்லப்பட்டிருக்கிறது. பெண்பிள்ளைக்கைதிகளுக்கு காலில் இரும்புக்காப்புப் போடப்படமாட்டாது. அவர்களுடைய சம்மதமில்லாமல் அவர்களுடைய தலைமயிர் கத்தரிக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 1062.)

*பெண்பிள்ளைக்கைதிகளுக்கு எப்போது கைவிலங்கு போடலாமென்பது.*

216. பெண்பிள்ளைக் கைதிகளுக்கு ஜெயில் குற்றத்திற்காக விதிக்கப்படும் தண்டனை ரூபமாக, அடிதண்டனைவிதிக்கவாவது, கைவிலங்குகளாவது, கால்விலங்குகளாவது போடவாவதுகூடாது. ஆனால், அதிகமும்மரமும், அபாயகரமுமான குணத்துடனிருக்கப்பட்ட பெண்பிள்ளைக் கைதிகளுக்குக் கைவிலங்கு போடலாம். பெண்பிள்ளைக் கைதிகளுக்குக் கால்விலங்கு போடவே கூடாது. (ஜெயில் ரூல், 1063.)

*கைவிலங்கு எவ்வளவு நேரம் போடலாமென்பது.*

217. பெண்பிள்ளைக் கைதிகளுக்குக் கைவிலங்கு போடுகிறதாயிருந்தால், ஒரேகாலத்தில் 72-மணி நேரத்திற்கு மேற்பட்டு விலங்குடன் கைதியை வைத்திருக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 701.)

218. ஜெயிலுக்குள் செய்யவேண்டிய கக்கூசு எடுப்பதுமுதலிய இழிவான வேலைகளை பெண்பிள்ளைக் கைதிகளே செய்துகொள்ள வேண்டும். அவர்கள் குப்பை முதலியதுகளை எடுத்துக் குறிப்பிடப்பட்ட நேரத்தில் யார்டுக்கு வெளியில் வைத்துவிடவேண்டும். அதை ஆண்பிள்ளைக்கைதிகள் எடுத்துக்கொண்டுபோய் விடுவார்கள். (ஜெயில் ரூல், 1065.)

219. ஒரு பெண்பிள்ளைக் கைதி, தண்டனையடைந்த ஜில்லாவைவிட்டு வேறு ஜில்லாவிலிருக்கும் ஜெயிலில் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தால், அப்படிச் செய்வதற்குப் போதுமான காரணங்களிலிருக்கும்பக்ஷத்தில், எந்த ஜில்லாவில் அவளுடைய சிநேகிதர்களும் பந்துக்களுமிருக்கிறார்களோ அந்த ஜில்லா ஜெயிலுக்கு விடுதலைக்காலத்தில், அனுப்பப்படுவாள். (ஜெயில் ரூல், 1066.)

*பெண்பிள்ளைக் கைதியை விடுதலை செய்யும் விதம்.*

220. ஒரு பெண்பிள்ளைக் கைதியை விடுதலை செய்யும் தினத்துக்கு முன்கூடியே, விடுதலைக்காலத்தில் அவள் வைக்கப்பட்டிருக்கிற ஜெயிலின் சூப்பிரிண்டெண்டாண்டு,ஸாத்தியப்பட்டால்,விடுதலைத் தினத்தில் ஜெயிலுக்குவந்து அந்தப்பெண் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போகும்படிக்கான விதமாக, அவளுடைய சிநேகிதர்களுக்காவது, பந்துக்களுக்காவது, தெரிவிக்கவேண்டும். விடுதலைத்தினத்தில் அந்த பெண்பிள்ளையினுடைய சிநேகிதனாவது, பந்துவாவது யாரும் வராதவிஷயத்தில், ஒரு பெண்பிள்ளை வார்டரை; அவள்கூட அவளுடைய வீட்டிற்கனுப்பலாம். விடுதலைசெய்யப்படும் பெண்பிள்ளைக்கைதியானவள் மிகவும்பாலியமாக விருக்குங்காரணத்தினலாவது அல்லது வேறு காரணத்தினலாவது இப்படிச் செய்வது உசிதமென்று சூப்பிரிண்டெண்டாண்டுக்குத்தோன்றினல் மட்டுந்தானிப்படிச்செய்யப்படும்.(ஜெயில் ரூல், 1067.)

*பெண்பிள்ளைக் கைதிகளின் கைக்குழந்தைகளின் விஷயமான சங்கதிகள்.*

221. பெண்பிள்ளைக் கைதிக்கு, அவளுடைய பந்துக்களிடம் ஒப்புவிக்க முடியாத, அல்லது வேறுவிதமாக சௌகரியமான ஏற்பாட்டைச் செய்யமுடியாத விதமாக குழந்தை அல்லது குழந்தைகளிருக்கும் பக்ஷத்தில், அந்தக் குழந்தை 2-வயதிற்கு மேற்படாததாகவும், இன்னும் பால்குடித்துக் கொண்டிருக்கிறதாகவு மிருந்தால் அதையும் ஜெயிலில் வைத்துக்கொள்ளப்படும். அதேவிதமாக ஜெயிலிலேயே பிறந்த குழந்தைகளை அதேவிதமான நிபந்தனைகளுக்கு

உட்படுத்தி வைத்துக்கொள்ளப்படும். ஜெயிலில் பிறந்த குழந்தைகள்தவிர மற்றக் குழந்தைகளின் வயது விஷயத்தில் மெடிகல் ஆபீஸர் அபிப்பிராயங் கொடுக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1068.)

222. இரண்டு வயதாய்விட்ட அல்லது பால் குடி மாறிவிட்ட குழந்தையை ஜெயிலில் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. ஜெயிலில் வைத்துக் கொண்டிருக்கப்பட்ட குழந்தைகளுக்கு 2-வயதாய் விட்டாலுமே, பால்குடி மாறிவிட்டாலுமே, அந்தக்குழந்தையை, அதின் தாய்தண்டனை அனுபவித்துக் கொண்டிருங்காலத்தில், ஸாத்தியப்பட்டால் பந்துக்கள் வசம் ஒப்பிவிப்பதற்கு வேண்டும் ஏற்பாடுகளைச் செய்யும்பொருட்டாக அந்த ஜில்லா டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படும். அந்தக்குழந்தையைக் காப்பாற்றுவதற்குப்பந்துக்கள் அசக்தர்களாயிருந்தாலுமே, அல்லது பந்துக்களே யிருப்பதைக்கண்டு பிடிக்கமுடியாவிட்டாலுமே, அந்தக்குழந்தையைச் சரியான படி காப்பாற்றிவரக்கூடிய ஆள்களை நியமித்து, அதின்ஜீவனும்சத்திற்காக மாதமொன்றுக்கு இன்னதென்று தொகை கொடுக்க டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட் ஏற்பாடுசெய்வார், அந்தக் குழந்தையை சரியானபடி காப்பாற்றி வருகிறார்களாவென்று மேல் பார்த்தும்வருவார். (ஜெயில் ரூல், 1069.)

223. தங்களுடைய தாய்களுடன் ஜெயிலிலிருக்கிற குழந்தைகளுக்கு மெடிகல் ஆபீசர் உத்தரவு செய்கிற ஆகாரங் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 1070.)

## வயதுவராத பையன்களைத் தண்டிக்கும் விஷயம்.

*எப்போர்ப்பட்டவனை வயதுவராத சிறுவனென்று சொல்வதென்பது.*

224. ஜெயில் ஆக்ட்டு 27-வதுபிரிவில் 18-வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்பிள்ளைக் கைதிகளை, மற்றக் கைதிகளைவிட்டு பிரத்தியேகமாகப் பிரித்துவைக்கவேண்டுமென்றும், ஆண்பிள்ளைப் பருவமடைந்த சிறுவர்களை, ஆண்பிள்ளைப் பருவமடையாதவர்களை விட்டுப் பிரித்துவைக்கவேண்டுமென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. வயதாகாத சிறுவனென்றால் 18-வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்பிள்ளையென்று அர்த்தம். (ஜெயில் ரூல். 1071.)

*வயதுவராத சிறுவர்கள் தண்டிக்கப்பட்டவர்களை வைக்கும் ஜெயில்களைப்பற்றி.*

225. ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காவல் தண்டனை யடைந்த சிறுவர்களை அடியிற்கண்ட ஜெயில்களுக்கு அனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி. | இந்த ஜில்லாக்களில் தண்டிக்கப்பட்டவர்களை | தஞ்சாவூர் ஜில்லா ஜெயிலுக்கும், |
| கோயம்பத்தூர், சேலம், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு. | இந்த ஜில்லாக்களில் தண்டிக்கப்பட்டவர்களை | சென்னப்பட்டணம் பெனிடென்ஷியரிக்கும், |
| கடப்பை, நெல்லூர், கர்னூல், பெல்லாரி. | இந்த ஜில்லாக்களில் தண்டிக்கப்பட்டவர்களை | பெல்லாரி ஜில்லா ஜெயிலுக்கும், |



| | | |
|---|---|---|
| விசாகப்பட்டணம், கோதாவரி, கிஷ்ணா, | இந்த ஜில்லாக்களில் தண்டிக்கப்பட்டவர்களை | ராஜமஹேந்திரம் ஸெண்ட்ரல் ஜெயிலுக்கும், |

அனுப்பவேண்டும். (ஜெயில் ரூல், 1072.)

*சிறு கைதிகளை வைத்திருக்கவேண்டிய விதம்.*

226. ஆண்பிள்ளைப் பருவமடைந்த சிறுவர்களை, அப்படிப் பருவமடையாத சிறுவர்களை விட்டுப் பிரித்துவைப்பதற்கு வேண்டிய சௌகரியங்களில்லாத ஜெயில்களில், பகல்காலங்களில் இந்த இருவகுப்புக்கைதிகளும் ஒருவர்க்கொருவர் ஸரஸ முதலியதுசெய்து தகவல்வைத்துக்கொள்ளாமலிருக்கும்படி ஜாக்கிரதையாகப் பார்த்துவரும்படி ஒரு ஜெயில் உத்தியோகஸ்தரை ஏற்படுத்தவேண்டும். ராக்காலங்களில் 1-வது வகுப்புச் சிறுவர்களில் ஒவ்வொருவரையும் தனித்தனியாக பிரத்தியேகமான அறைகளில் அடைக்கவேண்டும். 2-வது வகுப்புச் சிறுவர்களையும் அதேவிதமாக அடைப்பதற்குப் போதுமான இடமில்லாத விஷயத்தில் எல்லோரையும் சேர்த்தே ஒரே அறையில் அடைக்கலாம். (ஜெயில் ரூல், 1073.)

227. இந்தச் சிறுவர்களை ஒவ்வொரு நாள் காலையிலும் $\frac{1}{2}$-மணி நேரம் கபாத்துச் செய்யச் சொல்லவேண்டும். (ஜெயில் ரூல், 1074.)

*சிறு கைதிகளின் சாப்பாட்டின் விஷயம்.*

228. ஆண்பிள்ளைப் பருவமடைந்த சிறுவர்களுக்கு, கடினகாவல் தண்டனை யடைந்த கைதிகளுக்கேற்பட்ட பூராச்சாப்பாடும், ஆண்பிள்ளைப்பருவமடையாத சிறுவர்களுக்கு வெறுங்காவல் தண்டனை யடைந்தவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சாப்பாடும், ஜெயில் ரூல், 45-ல்ச் சொல்லப்பட்ட நிபந்தனையின் பிரகாரம், தண்டனைக்காலத்திற்குத் தக்கபடி கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 1075.)

*சிறு கைதிகளை விடுதலை செய்யும் விதம்.*

229. சிறுவனாக யிருக்கிற கைதியின் விடுதலை வாயிதாவுக்கு முன் ஜெயில் சூப்பிரிண்டெண்டாண்டு அந்தக்கைதியின் பெற்றோர்கள், அல்லது சிநேகிதர்கள், விடுதலை வாயிதாவன்று ஜெயிலில்வந்து அந்தச்சிறுவனைக்கூட்டிக்கொண்டு போகக்கூடிய விதமாக, ஸாத்தியப்பட்டால்அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1076.)

230. மேலேகண்ட விஷயங்களுக்குப் பொருத்தமாக யில்லாமலிருந்தாலொழிய, ஜெயில் விதிகளெல்லாம் கைதிச்சிறுவர்களுக்கும் ஸம்மந்தப்படும். தன் பாடத்தைப் படிக்கமாட்டேனென்று சொல்லுகிற, அல்லது படியாமல் அசட்டை செய்கிற அல்லது தனக்கு ஏற்பட்ட வேலையைச் செய்யமாட்டேனென்று சொல்லுகிற சிறுவன், ஜெயில் ஆக்ட்டு 45-வது பிரிவின்படி ஜெயில் குற்றம் செய்தவனாகத் தீர்மானிக்கப்படுவான். (ஜெயில் ரூல், 1077.)

231. சிறுவர்களை ஜெயிலில் வைத்திருப்பது அநேக விதமாக ஆக்ஷேபணைக்கிடமானதாயிருப்பதால், அவர்களை சீர்திருத்துவதற்கான பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதற்குரிய யேர்ப்பாடுகளைச்செய்ய சூப்பிரிண்டெண்டாண்டுகளுக் கதிகாரமுண்டு (ஜெயில் ரூல், 1078.)

*சீர் சாலைக்குத்தான் அனுப்பலாமென்பது.*

232. தண்டனையடைந்த சிறுவர்களை சீர்திருத்துவதற்கான பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவாவது, அனுப்பாமலாவதிருக்கவேண்டியதற்காக அடியிற்கண்ட விதிகளை யேர்ப்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளாவன:—

(1) அதிபாலியமாக யிருக்கும்பொழுதல்லாது வழக்கமாகக்குற்றச் செய்கைகளை அடிக்கடி செய்துவருகிற கைதிப்பய்யன்களை சீர்திருத்துவதற்கான பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பக்கூடாது.

(2) கைத்தொழில்களை கற்றுக்கொள்ளக்கூடாத விதமாக சரீர பலமில்லாத அல்லது சரியான புத்தியுடனில்லாத சிறுவனையும் ஷை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பக்கூடாது.

(3) சுபாவத்திற்கு விரோதமான புணர்ச்சி செய்ததற்காகத்தண்டிக்கப்பட்ட அல்லது வழக்கமாக நடத்தைப் பிசகாகவே யிருப்பானென்று அனுமானிக்கப்படக்கூடிய கெட்ட செய்கைகளைச்செய்கிற பய்யன்களையும் ஷை பள்ளிக்கூடத்திற்கனுப்பக்கூடாது.

(4) சொத்து விஷயமாகத் திருட்டு நம்பிக்கை மோசம் முதலிய, குற்றங்களைச்செய்ததற்காகத் தண்டனை யடைந்தும், அவைகளைப் பற்றிச் சரியான கவலை யெடுத்து முன்னுக்குக் கொண்டுவரக்கூடிய பெற்றோர் முதலியவர்களில்லாமலுமிருக்கிற பையன்களை ஷை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதுதான் சரியாக யிருக்கும். (ஜெயில், 1079.)

233. செங்கற்பட்டிலிருக்கிற சீர்திருத்துவதற்கான பள்ளிக்கூடங்களுக்கு கைதிப் பையன்களை அனுப்புவதற்கு முன்னடி, ஷை பள்ளிக்கூடத்து ஸுப்பிரின்டெண்டாண்டினிடமிருந்து அந்தப் பள்ளிக்கூடத்தில் பையனைச் சேர்த்துக்கொள்ள இடமிருக்கிறதாவென்று தெரிந்துகொள்ளவேண்டும். (ஜெயில் ரூல், 1080.)

குறிப்பு:—இந்தப்பள்ளிக்கூடத்திற்கனுப்பப்பட்ட சிறுவர்களுக்கும் ஜெயில் ஆக்ட்டுப்படிக்குள்ள தண்டனைகள் கொடுக்கலாம். ஆண்பிள்ளைப் பருவத்தை யடையாத ஆண்பிள்ளை சிறுவர்களுக்காவது, பெண்பிள்ளைப்பருவத்தை யடையாத சிறுமிகளுக்காவது ஜெயில் தண்டனைக்காக சாப்பாட்டைக் குறைக்கக்கூடாது. பெண்பிள்ளைச்சிறுமிகளுக்கு அடி தண்டனை விதிக்கவாவது, கால்விலங்கு கைவிலங்கு இவைகள் போடவாவது கூடாது.

234. ஒருவருஷத்திற்காவது, அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்காவது தண்டனை யடைந்த சிறுவர்களுக்குப் படிக்கவும், எழுதவும் கற்றுக் கொடுக்கவேண்டும். கூடுமானல் எளிதாகவுள்ள யேதும் கைத்தொழில்களையுங்கற்றுக்கொடுக்கலாம். (ஜெயில் ரூல், 1081.)

235. எழுதப்படிக்கச் சொல்லிக்கொடுப்பது:—1-வது 2-வதுஸ்டாண்டர்டு வரைக்குஞ் சொல்லிக்கொடுக்கப்படும். சொல்லிக்கொடுப்பதற்கு பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்ட உபாத்தியாயர்களில்லாத ஜெயில்களில், நல் நடத்தையாகவும், நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்தவனாகவுமுள்ள ஒரு கைதியை நியமிக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1082.)

236. கைதிப்பையன்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்பட்ட விஷயங்களை, கல்விலாகாவைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தர் வருஷத்திற்கொருதடவை ஷை பையன்களைப் பரிக்ஷை செய்து, அது விபரத்தை ஜெயில் இனிஸ்பெக்ட்டர் ஜெனரலுக்குத் தெரிவிக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1083.)



## கொஞ்ச வயதுள்ள பையன்கள் குற்றஞ் செய்து தண்டிக்கப்பட்டவர்களைச் சீர்திருத்துஞ் சாலைகளைக்குறித்த ஆக்ட்டு.

### 1897-ம் ஷை 8-வது ஆக்ட்டு.

237. இந்த ஆக்ட்டுப்படி "சிறுவனாகிய குற்றவாளி" என்பது தண்ணீர் மேலேற்றும்படியான தண்டனைக்காவது, காவல்தண்டனைக்காவது, உள்ளாகத்தக்க யாதொரு குற்றத்திற்காகக் குற்றவாளி யென்று தீர்மானிக்கப்பட்டு அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட காலத்திலே பதினைந்து வயதிற்குட்பட்டிருக்கிற யாதொரு சிறுவனென்று அர்த்தமாகும். (சீர்திருத்துஞ்சாலை ஆக்ட்டு, 4-வது பிரிவு.) சிறுவனாகிய குற்றவாளி யென்றுலென்ன.

238. சிறுவனாகிய யாதொரு குற்றவாளிக்குத் தண்ணீர்மேலேற்றும்படியானதண்டனையாவது காவல் தண்டனையாவது விதிக்கப்பட்டு, அவனுக்குத் தண்டனை விதித்தகோர்ட்டார் அவன் சீர்திருத்துஞ் சாலையிலிருக்கத்தகுந்தவனென்று அபிப்பிராயப்பட்டால், அந்தக்கோர்ட்டார் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் எவ்வித விதிகளுக்குட்பட்டு, அவனை அவனுடைய சிட்சையை அனுபவிக்கவொட்டாமல், சீர்திருத்துஞ் சாலைக்கு அனுப்பும்படிக்கும், மூன்று வருஷக்காலத்திற்குக் குறையாமலாவது, ஏழுவருஷத்திற்கு மேற்படாமலாவது அந்தச்சாலையில் அவனை மறியல் செய்து வைத்திருக்கும்படிக்கும் உத்தரவு செய்யலாம். (சீ. தி. சா. ஆக்ட், 8-வது பிரிவில் 1.) சிறுவர்களான குற்றவாளிகளைச்சீர்திருத்துஞ் சாலைகளுக்கு அனுப்பும்படி உத்தரவு செய்யக் கோர்ட்டாருக்கு அதிகாரம்.

239. கோர்ட்டாருக்கு இந்தப்பிரிவின்படி மேற்கண்ட பிரகாரம் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை (எ) ஹைக்கோர்ட்டாரும் (பி) ஸெஷ்ஷன்கோர்ட்டாரும் (ஸி) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டும் (டி) இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டும் மாத்திரம் செலுத்தவேண்டும். அப்படிப்பட்ட கேசு ஷை கோர்ட்டார்களுக்கு முன் அஸல் வியாச்சியமாக வந்தாலுஞ் சரி அப்பீல் வியாச்சியமாக வந்தாலுஞ் சரி அந்தக்கோர்ட்டார்கள் அந்த, அதிகாரங்களைச்செலுத்தலாம். (சீர்-தி-சா-ஆ. பிரிவு 8-ல் 2.)

240. மேலேகண்ட 8-வது பிரிவின்படி உத்தரவு செய்ய அதிகாரங் கொடுக்கப்பெற்றிராத யாதொரு மாஜிஸ்திரேட்டானவா, அவரால் குற்றவாளி யென்று தீர்மானிக்கப்பட்ட சிறுவனாகிய ஒரு குற்றவாளி சீர்திருத்துஞ் சாலையிலிருக்கத்தகுந்தவனென்று அபிப்பிராயப்படுவாராகில், அவர் சிக்ஷை விதிக்காமல் தம்முடைய அபிப்பிராயத்தை யெழுதி தம்முடைய நடவடிக்கை அடங்கிய ரிக்கார்டுகள் ஸஹிதம் அந்தக் குற்றவாளியை தன்னுடைய டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பலாம். (சீர்-தி-சா-ஆ. 9-வது பிரிவில் 1.) வேறுபிரிவின்படி உத்தரவு செய்ய அதிகாரமில்லாத மாஜிஸ்ட்ரேட்டுகள் இந்த விஷயத்தில் செய்வது என்பது.

241. அந்தப்படி நடவடிக்கைகள் யாருக்கு அனுப்பப்படுகின்றனவோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் தனக்கு யுக்தமாகத்தோற்றுகிற இன்னும்விசாரணை ஏதாவதிருந்தால் அதைச்செய்து, சிறுவனாகிய அந்தக்குற்றவாளியின் கேசை தானே விசாரித்திருந்தால் எப்படிச்செய்திருப்பாரோ அப்படியே சிறுவனாகிய அந்தக்குற்றவாளியைச் சீர்திருத்துஞ் சாலைக்கு அனுப்பிவைப்பதற்காவதுமற்றப்படி செய்வதற்காகவாவது சிக்ஷை விதித்து உத்தரவு பண்ணலாம். (சீர்-தி-சா-ஆ. பிரிவு 9-எ, 2.)

*சிறைச்சாலையின் விசாரணை உத்தியோகஸ்தர்களுடைய பொறுப்பின்பேரிலும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டுகள் சீ. தி. சாலைகளுக்கு அனுப்பலாம்.*

242. மேற்கண்ட 8, 9-வது பிரிவுகளின்படி மாஜிஸ்திரேட்டுகள் சிறுவனாகிய குற்றவாளியைச் சீர்திருத்துஞ் சாலைக்கு அனுப்பாமல் காவல் தண்டனை விதித்து சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிற கேசுகளில், அந்தச்சிறுவனாகிய குற்றவாளி வைக்கப்பட்டிருக்கிற சிறைச்சாலையின் விசாரணை உத்தியோகஸ்தரானவர் காவல் தண்டனையை நிறைவேற்றுகையிலே, அந்தக்குற்றவாளிக்கு 15 வயதாகாவிட்டால், யாருடைய அதிகார எல்லைக்குள் அந்த சிறைச்சாலையிருக்கிறதோ அந்த டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டுக்கு முன்பாக அவனைக்கொண்டு போகலாம். அந்த டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டானவர், அந்தக்குற்றவாளி சீர்திருத்துஞ் சாலையிலிருக்கத்தகுந்தவனென்று தமக்குத் தோன்றினால், அவனுடைய சிக்ஷையின் மிகுதியான பாகத்தை அனுபவிப்பதற்குப்பர்த்தியாய், சீர்திருத்துஞ் சாலைக்கு அவனை அனுப்பும்படிக்கும், அவ்விடத்திலே அவனை 8-வது பிரிவினால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற மறியல் காலத்தைக்குறித்து ஷை பிரிவினாலாவது அதை அனுஸரித்தாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிற வரையறைகளுக்குட்பட்டு ஓர் காலத்திற்கு வைத்திருக்கும்படிக்கும் உத்தரவு செய்யலாம். (சீ-தி-சா-ஆ. 10-வது பிரிவு.)

*சிறுவனாகிய குற்றவாளியின் வயதைக்குறித்துப் பிரதம விசாரணையும் தீர்மானமும்.*

243. மேலே 8-வது 9-வது அல்லது 10-வது பிரிவில் சொல்லப்பட்டபடி சிறுவனாகிய யாதொரு குற்றவாளியைச் சீர்திருத்துஞ் சாலைக்கு அனுப்பும்படி உத்தரவு செய்வதற்கு முன்னே கோர்ட்டாராவது மாஜிஸ்ட்ரேட்டாவது அவனுடைய வயதைக்குறித்த அம்சத்தைப் பற்றி விசாரணைசெய்வது அவசியமாகத் தோற்றுகிற சாக்ஷியம் ஏதாவதிருக்குமானால் அதைக்கேட்டபிறகு அதைக்குறித்துத் தீர்மானம் எழுதவேண்டியதுமன்றி கூடியவரையில் அவனுடைய வயதையுங் காணவேண்டும். (சீர்-தி-சா-ஆ. 11-வது பிரிவில் 1.)

244. 8-வதுபிரிவின்படி உத்தரவுசெய்ய அதிகாரமில்லாத ஒவ்வொரு மாஜிஸ்திரேட்டும், குற்றவாளியின் வயது விஷயமாக வேண்டும் விசாரணை செய்து அந்த ரிக்கார்ட்டையும் வயது விஷயமாகத்தன் அபிப்பிராயத்தையும் எழுதி அதையும், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு, குற்றவாளியை அனுப்பும் பொழுது, அனுப்பவேண்டும். (சீர்-தி-சா-ஆ. 11-வது பிரிவில் 2.)

*சீர்திருத்துஞ்சாலையிலுடனே இடங்கிடைக்காவிட்டால் நடவடிக்கை.*

245. சீர்திருத்துஞ் சாலையில் சிறுவனாகியகுற்றவாளியை வைப்பதற்கு உடனே இடம் கிடைப்பில்லாவிட்டால், அவனைச்சீர்திருத்துஞ் சாலைக்குக்கொண்டுபோகும் காலம், அல்லது அவனுடைய தண்டனைக் காலம் இந்த இரெண்டில் எதுமுன்னதாகநேரிடுகிறதோ அந்தக்காலம்வரையிலே, சிறைச்சாலையில் ஜூவினைல் வார்டென்னும் வாலிபர்களை அடைத்துவைக்கும் காவல் அறையிலாகிலும், பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயித்திருக்கிற வேறே தகுந்த இடத்திலாகிலும் அவனைக்காவற்படுத்தி வைக்கலாம். அவனுடைய தண்டனைக் காலம், அவனுக்குச் சீர்திருத்துஞ்சாலையில் இடங்கிடைக்குமுன் கழியுமாகில் அவனை விடுதலை செய்துவிடவேண்டும். ஆனால் அவனைச் சீர்திருத்துஞ் சாலைக்கு அனுப்பினால், அப்போது, அதற்கு முன்னதாக அனுபவித்த மறியல் காலமானது சீர்திருத்துஞ் சாலையில் மறியல் செய்து வைக்கப்பட்ட காலமாகப் பாவிக்கப்படும். (சீர்-தி-சா-ஆ. 12-வது பிரிவு.)

*பதினெட்டு வயதுக்குமேற்பட்டவர்களைக் காணப்ப...*

246. சிறுவனாகிய குற்றவாளி யொருவன் சீர்திருத்துஞ் சாலைக்கு அனுப்பப்பட்ட பிறகு எப்போதாவது, அந்தக் குற்றவாளியின் வயது, அந்தக் குற்றவாளியைச் சீர்திருத்துஞ் சாலைக்கு அனுப்பியதற் கெழுதிய உத்தரவில் குறைத்துப்போடப்பட்டிருப்பதாகவும் அவனை வைத்திருக்கும்படி உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கிற காலம் கழிவதற்கு முன்னே அவனுக்கு 18-வயது ஆய்விடுமென்றும், கண்காணிகளாகிய கம்மிட்டியாருக்காவது, நிர்வாக சபையாருக்காவது தோற்றுமாகில், அவர்கள் அந்த விஷயத்தைக் குறித்துப் பிரதேச கவர்ன்மெண்டாருடைய உத்தரவுக்காக ரிப்போர்ட்டுச் செய்யவேண்டும். 18 வயதான பிறகு ஒரு காலமும் சீர்திருத்துஞ் சாலையில் வைக்கக் கூடாது. (சீ-தி-சா-ஆ. பிரிவு 13.)



*...ட்டவர்களை சீர்திருத்துஞ் சாலைகளில் வைத்திருக்கக் கூடாது.*

247. சிறுவனான குற்றவாளியின் வயதைக்குறித்தாவது, தீவாந்திர சிக்ஷை அல்லது காவலில் வைக்கும் சிக்ஷை விதிப்பதற்குப் பர்த்தியாகச் சீர்திருத்துஞ் சாலையில் மறியல் செய்து வைத்திருக்கும்படி செய்யப்பட்ட உத்தரவைப் பிறப்பித்ததைக்குறித்தாவது, அப்பீலிலாவது, புனராலோசனையிலாவது, திருத்த அல்லது மாற்ற யாதொரு கோர்ட்டார் அல்லது மாஜிஸ்ட்ரேட்டாருக்கு, கிரிமினல் புரொஸீடியூர் கோடு அதிகாரங்கொடுத்திருப்பதாக எண்ணக்கூடாது. (சீ-தி சா-ஆ. பிரிவு 16.)

*சூப்பிரிண்டெண்டென்டானவர் சி... வர்களானகுற்றவாளிகளை வேலையில் வைத்துக் கொள்... ஆகிற வர்களுடத்திலிருக்கும்படி லைசென்ஸ் கொடுக்கலாம்*

248. சீர்திருத்துஞ் சாலையை மேல் விசாரணை செய்துகொண்டு காரிய நிர்வாகம் பண்ணுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும், சூப்பிரிண்டெண்டாண்டு அந்தச்சாலையில் மறியல் செய்து வைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு சிறுவனாகிய குற்றவாளிக்கும் கார்டியனாக எண்ணப்படுவார். (சீ-தி-சா-ஆக்ட்டு 22-வது பிரிவில் 1.)

சீர்திருத்துஞ் சாலை சூப்பிரிண்டெண்டாண்டானவர், சீர்திருத்துஞ் சாலைக்கு அனுப்பப்பட்ட 14 வயதான சிறுவனாகிய யாதொரு குற்றவாளியை, நம்பிக்கையும் கௌரவமுமுள்ள ஒரு மனிதன் வசத்திலாவது, அல்லது வேலை நடத்திவருகிறவும், இந்த குற்றவாளியைத் தன்னிடம் வைத்துக்கொண்டு வேலை வாங்க இஷ்டமுள்ளவனாகவுமிருக்கிற யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தர் அல்லது மியூனிஸிபல் உத்தியோகஸ்தர் வசத்திலாவது, சிறுவனாகிய அப்படிப்பட்ட குற்றவாளியை ஏதாவது வர்த்தகம், தொழில் அல்லது வேலையில் அமர்த்தி வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்கிற திட்டத்தின் பேரில் கம்மிட்டியாருடைய அனுமதியைப்பெற்றுக்கொண்டு லைசென்ஸின் பேரில் ஒப்புவித்துவிடலாம்.

249. இந்தலைசென்ஸானது மூன்று மாத்திரத்திற்குத்தான் வர்ஜிதத்திலிருக்கும். மூன்றுமாதங்கழிந்தவுடன், குற்றவாளி ஷை சாலையிலிருக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிற காலம் முடிகிறவரை திரும்பத் திரும்பமூன்று மாதத்திற் கொருதரம் லைசென்ஸை புதுப்பித்துக்கொண்டே யிருக்கலாம். (சீர்-தி-சா. ஆ. பிரிவு, 18.)

*லைசென்ஸை ரத்துச் செய்வது.*

250. லைசென்ஸில் கண்டிருப்பவனாகிய வேலையில் வைத்துக்கொள்பவன் கேட்டுக்கொண்டால் அந்த லைசென்ஸை ரத்துச்செய்துவிடவேண்டும். (சீர்-தி-சா-ஆ. பிரிவு, 19.)

*லைசென்ஸ் அற்றுப்போவது.*

251. லைசென்ஸ் கெடுவு காலத்திலே அதிற்கண்டிருப்பவனாகியவேலையில் வைத்துக்கொள்பவன் இறந்துபோனாலும், வேலையை விட்டுவிட்டாலும் வேலைக்கு வைத்துக்கொள்ளாவிட்டாலும், சிறுவனாகிய குற்றவாளி சீர்திருத்துஞ்சாலையில் எவ்வளவு காலம் மறியல்செய்து வைத்திருக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறானோ அந்தக்காலம் கழிந்துபோனாலும், அதற்குமேல், அந்த லைசென்ஸ் முடிவாய் அற்றுப்போகவேண்டும். (சீர்-தி-சா-ஆ. பிரி

*அக்கிரமமாய் நடத்துகிற விஷயத்திற்கு லைசென்ஸை ரத்துச்செய்வது.*

252. வேலையில் வைத்துக்கொள்ளுகிறவன் சிறுவனுகிய அந்தக்குற்றவாளியை அக்கிரமமாய் நடத்தினுனென்ருவது அவன் வாஸஞ்செய்வதற்கும் சாப்பாட்டுக்கும் தகுதியாய் ஏற்பாடு செய்யவில்லையென்ருவது சூப்பிரின்டெண்டாண்டுக்குத் தோற்றினுல், அவர் அந்த லைசென்ஸை ரத்துப்பண்ணலாம். (சீ. தி. சா. ஆக்ட்டுபிரிவு, 21.)

*சிறுவனுகிய குற்றவாளியை வேலைகற்றுக்கொள்ள விடுவதற்கு அதிகாரம்.*

253. மேலே 18-வதுபிரிவின்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்டயாதொரு சிறுவனுகிய குற்றவாளி அவனுடைய லைசென்ஸிலுள்ள ஓர்காலம் அல்லது பல காலங்கள்வரையிலே சீராய் நடந்துகொண்டானென்று சூப்பிரின்டெண்டாண்டுக்குத் தோற்றினுல், அவர் கம்மிட்டியாருடைய அனுமதியை பெற்றுக்கொண்டு வேலை கற்றுக்கொள்ள அமருகிறவர்களை உடன்படுத்துவதைக் குறித்த 1850-ஞுத்து 19-வது ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின்படி அவனை வேலை கற்றுக்கொள்ளவிடலாம்; அப்படி விடுவதன்மேல் அப்படிப்பட்ட சிறுவனுகிய குற்றவாளியைச் சீர்திருத்துஞ் சாலையில் மறியல் செய்து வைத்துக்கொண்டிருக்கும் அதிகாரம் அற்றுப்போக வேண்டியதுமல்லாமல், அவனுடைய சிக்ஷையில் கழியாமல் எவ்வளவாவது மிகுதிகாலமிருந்தால் அதுவும் ரத்துச்செய்யப்படும்.

*சிறுமிகள் உள்பட சிறுவர்களாகிய குற்றவாளிகள் விஷயத்தில் வேறே வகைகளினுல் விவகரிக்க அதிகாரம்.*

254. இந்த ஆக்ட்டிலாவது அந்தந்தக் காலத்தில் ஊர்ஜிதத்திலிருந்துகொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்திலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றினுல், யாதொரு சிறுவனுகிய குற்றவாளிக்குத் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையையோ, அல்லது காவல் தண்டனையையோ அல்லது சீர்திருத்துஞ் சாலையில் மறியல்செய்து வைக்கும்படியான தண்டனையையோ கொடுப்பதற்குப்பதிலாக,

(ஏ) அவனைச் சரியானபடி எச்சரித்து விட்டுவிடும்படிக்காவது,

(பி) 12-மாதத்திற்கு மேற்படாமல் யாதொருகாலம் வரையில் சிறுவனுகிய குற்றவாளியின் நல்லநடத்தைக்காக உத்தரவாதஞ் செய்யும்பொருட்டு அவனுடைய பெற்றேராவது, ஸம்ரக்ஷகராவது, அதிகச்சமீபமான வயதுவந்த பந்துவாவது, கோர்ட்டார் கேழ்க்கிறபடி, ஜாமீனோடாவது பத்திரம் எழுதிக் கொடுப்பதன்மேல் அந்தப் பெற்றேர் அல்லது ஸம்ரக்ஷகர் அல்லது பந்துவினிடத்தில் அவனை ஒப்புவித்து விடும்படிக்காவது உத்தரவு செய்யலாம்.

(2) இந்தப்பிரிவின் காரியங்களுக்காக "சிறுவனுகிய குற்றவாளி" என்னும் சொல் தொடரிலே 'சிறுமி' என்பதும் அடங்கும்.

(3) இந்தப்பிரிவினுல் கோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை, 8-வது பிரிவினுலாவது அதை அனுஸரித்தாவது அதிகாரம் கொடுக்கப்பெற்ற கோர்ட்டார்கள் மாத்திரம் செலுத்தவேண்டும்.

(4) இந்தப்பிரிவின்படி பிரவர்த்திக்க அதிகாரங் கொடுக்கப்பெருத கோர்ட்டாரால் யாதொரு சிறுவனுகிய குற்றவாளி குற்றஞ்செய்தானென்று தீர்மானிக்கப்பட்டு அவன் விஷயமாக இந்தப் பிரிவினுல் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்த



வேண்டுமென்று அந்தக்கோர்ட்டார் அபிப்பிராயப் படுவார்களாகில், அவர்கள் அந்த அபிப்பிராயத்தை எழுதி, தாங்கள் யாருக்குக் கீழ்ப்பட்டிருக்கிருர்களோ அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட்டுக்கு நடவடிக்கைகளையும் அந்த சிறுவனுகிய குற்றவாளியையும் அனுப்பலாம்.

(5) நடவடிக்கைகள்யாருக்கு அந்தப்படி அனுப்பப்படுகின்றனவோ அந்த டிஸ்திரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர், அதன்மேல் அந்தகேஸ் அவரால் ஆரம்பத்திலேயே விசாரிக்கப்பட்டிருந்தால் அவர் என்ன சிக்ஷை விதிப்பாரோ அல்லது என்ன உத்தரவு செய்திருப்பாரோ அந்தசிக்ஷையை விதிக்கலாம். அல்லது உத்தரவைச் செய்யலாம். (சீ. தி. சா. ஆ. பிரிவு, 31.)

*சீர்திருத்துஞ்சாலையில் மறியல் செய்து வைக்கப்படும் குற்றவாளி மறுபடியும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டால் இன்னசெய்வது.*

255. சிறுவனுகிய குற்றவாளி யொருவன் சீர்திருத்துஞ் சாலையில் மறியல் செய்துவைக்கப்பட்டிருக்குங் காலத்திலே மறுபடியும் கிரிமினல் கோர்ட்டாரால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவானுகில், 1898-ம் வருஷத்து கிரிமினல் புரொஸீஜர் கோட் 397-வது பிரிவில் இதற்கு விரோதமாக என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, அந்தக் கோர்ட்டாருடைய சிக்ஷை உடனே ஆரம்பமாகவேண்டும்; ஆனுல் கோர்ட்டார் உடனே அந்த விஷயத்தைக் குறித்துப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு ரிப்போர்ட்டுப் பண்ணவேண்டும். அவர்கள் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற எந்த விதத்திலாவது அந்த விஷயத்தைக்குறித்து விவகரிக்க அதிகாரமுடையவர்களாவார்கள். (சீ. தி. சா. ஆ. பிரிவு, 32.)

*சிறுவயதுள்ள அல்லது முதல் தடவலாக குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவர்களை தண்டிப்பதற்குப் பதிலாக ஜாமீன்வாங்கிக்கொண்டு விட்டுவிடலாம்.*

256. இதேவிதமான யேர்ப்பாட்டை 1898-ம் வருஷத்து கிரிமினல் புரொஸீஜர் கோடு, 562-வது பிரிவிலும் செய்யப்பட்டிருக்கிறது.

இரெண்டு வருஷங்களுக்கு மேற்படாதகாலத்திற்கு காவல் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றங்களாகிய-களவு, கட்டடத்தில் களவு, அயோக்கியமான எண்ணத்துடன் அக்கிரமமான அபகரிப்பு, ஏமாற்றுவது, இந்தக் குற்றங்களுக்காகவாவது அல்லது இந்தியன் பீனல்கோடின்படிக்குள்ள வேறு எந்தக் குற்றத்திற்காகவாவது ஒருவனைத் தண்டித்து, அவன் அதற்கு முன் தண்டனைப் படாதவனுகயிருந்தால், குற்றவாளியினுடைய வாலிபமான வயதையும், அவனுடைய முன் நடவடிக்கையையும், செய்யப்பட்ட குற்றத்தினுடைய சுபாபவம் இலேசானதாக யிருப்பதையும், குற்றஞ்செய்யப்பட்ட சந்தர்பங்களையும், யோசிக்கையில், கோர்ட்டாருக்கு அப்படிச்செய்வது உசிதமென்று தோன்றினுல், அவனுக்கு உடனே யாதொரு தீர்ப்பும் சொல்லாமல், ஜாமீனுடன் கூடினதாகவாவது, அல்லதுஜாமீனில்லாமலாவது அவன் நல்லநடத்தையுடனிருப்பதற்காக வேண்டும்போது அந்தக் கோர்ட்டார் முன் ஆஜராவதாகவும், ஒரு வருஷத்திற்குமேல்போகாத காலத்திற்குஜாமீன் பத்திரம் வாங்கிக்கொண்டு விட்டுவிடலாம். இப்பேர்ப்பட்ட கேசுகளில், ஒரு 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டாவது, அல்லது அப்படிச் செய்ய விசேஷமாக அதிகாரங் கொடுக்கப்படாத ஒரு 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டாவது, முதலாவது தடவலாகக் குற்றஞ்செய்த ஒருவனைத் தண்டித்து மேலேகண்டபடி நடவடிக்கை நடத்தவேண்டியது உசிதமென்று நினைத்தால் அது விபரத்திற்குதன் அபிப்பிராயத்தைக் கண்டெழுதி அந்த மாஜிஸ்திரேட்டு எந்த 1-வது வகுப்பு அல்லது ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுக்குக்

ஷிழ்ப்பட்டவரோ அவருக்கு ரிக்கார்டுகளை அனுப்பிவிடலாம். கைதியையுங்கூட அனுப்பவாவது, அல்லது கைதியை அந்த மாஜிஸ்திரேட்டின்முன் ஆஜராகும்படி முச்சலிக்காவாங்கிக் கொண்டுவிடவாவது செய்யலாம். அந்த மாஜிஸ்திரேட்டு தானே அந்தக்கேசை விசாரித்திருந்தால் எப்படி பைசல்செய்வார் அப்படிப் பைசல்செய்யலாம். (கி. பு. கோடு பிரிவு, 562.)

257. ஜாமீன்பத்திரப்படி நடக்கத் தவறினால் குற்றவாளியை மறுபடி வாறண்டு போட்டுப் பிடித்து கேசை மறுபடி பைசல் செய்யலாம். (கி. பு. கோடு பிரிவு, 563.)

## கைதிகளைக்கண்டு பேசுவது, கைதிகளுக்கு கடிதம் எழுதுவது முதலிய விஷயங்களைப்பற்றி.

புதிதாய்த் தண்டனையடைந்த கைதிகள் பந்துக்கள் சிநேகிதர்களைக்கண்டு பேசிக் கொள்வது.

258. புதிதாய் தண்டனையடைந்த ஒவ்வொருகைதியையும், அப்பீல்செய்யும் விஷயமாயும், வக்காலத்துக்கொடுக்கும்விஷயமாகவும், அல்லது தன்சொத்துக்களை மேல்பார்க்கும்விஷயமாய் வேண்டும் ஏற்பாடுகளைச்செய்துகொள்ளும் பொருட்டும் தன் சிநேகிதர்களுக்கு ஒரு கடிதமெழுதவும், அவர்களை ஒன்று அல்லது இரெண்டு தடவல் கண்டுபேசிக்கொள்ளவும் இடங்கொடுக்கப்படவேண்டும். (ஜெயில் ரூல், 555.)

தீபாந்தர தண்டனைக் கைதிகள்.

259. தீவாந்தரதண்டனை யடைந்திருக்கிற ஒவ்வொரு கைதியும் அவன் தண்டிக்கப்படப்பட்ட ஜில்லா ஜெயிலிலிருந்து கொண்டுபோகப்படுமுன், அவனுடைய சிநேகிதர்களையும் பந்துக்களையும் ஒரு தடவல் கண்டுபேசிக் கொள்ள இடம் கொடுக்கப்படவேண்டும். (ஜெயில் ரூல், 556.)

அபராதஞ் செலுத்தாததினதற்காக ஜெயிலில் வைக்கப்பட்ட கைதிகள்.

260. அபராதஞ்செலுத்தாததற்காக ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு கைதியும், அபராதத்தைச் செலுத்துவதற்கு வேண்டும் ஏர்ப்பாடுகளைச் செய்யும்பொருட்டு, தன் சிநேகிதர்களில் யாருக்கும் கடிதமெழுதவாவது அல்லது அவர்களில் யாரையும் கண்டுபேசிக்கொள்ளவாவது இடங்கொடுக்கப்படவேண்டும். (ஜெயில் ரூல், 557.)

வெறுங் காவல் கைதிகள்.

261. வெறுங்காவல் தண்டனையடைந்திருக்கிற ஒவ்வொருகைதியும், 3 மாதத்திற்கொருதடவலாவது, அல்லது சூப்பிரிண்டெண்டாண்டுக்கு அப்படிச் செய்வது யுக்தமாகத்தோன்றினால் அதைவிட சமீபமான காலங்களிலாவது, தன் சிநேகிதர்களைக்கண்டு பேசிக்கொள்ள இடங்கொடுக்கப்படுவான். இப்படி இடங்கொடுக்கப்படுவது கைதியின் நல்ல நடத்தையைப் பொறுத்திருக்கும். (ஜெயில் ரூல், 558.)

இது சங்கதியில் பொதுவான விஷயம்.

262. மேலே சொல்லப்பட்டவிதமாகக் கைதிகள் தங்கள்சிநேகிதர்களைக் கண்டு பேசுவதும், அவர்களுக்குக்கடிதமெழுதுவதும் நீங்கலாக, அடியிற்கண்ட காலங்களிலும் சிநேகிதர்களைக்கண்டு பேசிக்கொள்ளவும் அவர்களுக்குக்கடிதமெழுதிக்கொள்ளவுஞ்செய்யலாம். கைதியானவன் ஜா ஏர்ப்பாட்டில் வராவிட்டால், ஜெயிலில் ஆறுமாதமிருந்த பிற்பாடு தன் சிநேகிதர்களை ஒரு தடவல் கண்டுபேசிக்கொள்ளவும், அவர்களுக்கு ஒரு கடிதமெழுதவும், அவர்களிடமிருந்து ஒரு கடிதம் பெற்றுக்கொள்ளவுஞ்செய்யலாம். அதற்குப்பிறகு சூப்பிரிண்டெண்டாண்டு செய்யும் ஏர்ப்பாட்டின் பிரகாரம், 4 மாதத்திற்குக் குறையாத காலங்களிலும் மேற்கண்டபடி செய்யலாம். இந்த சங்கதிகளெல்லாம் கைதியின் நல்லநடத்தையைப் பொறுத்திருக்கிறது. ஜெயில் ரூல்களை



அநுசரித்து நடந்துவிட்டால் இப்படி சிநேகிதர்களைக்கண்டு பேசுவதற்கும், அவர்களுக்குக் கடிதமெழுதுவதற்கும், அவர்களிடமிருந்து கடிதம் பெற்றுக் கொள்ளுவதற்கு இடங்கொடுக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 560.)

263. (a) ஒரு கைதிக்கு அபாயகரமான வியாதி நேரிட்டால், அவன் மெடிகல் ஆபீசருடைய சம்மதத்தின்பேரில், தன் சிநேகிதர்களைக்கண்டு கொள்ள இடங்கொடுக்கப்படலாம். மரணமடைகிற நிலைமையிலிருக்கிற ஒவ்வொரு கைதியும் தன் சொத்து விஷயமாகச் செய்யவேண்டுமென்று சொல்லுகிற ஏற்பாடுகளைப்பற்றிய விஷயங்களை அவசியமானால் சூப்பிரிண்டெண்டாண்டு அதுவிஷயமாய் எழுதிவைத்து அவனுடைய பந்துக்கள் முதலியவர்களுக்கு அதைப்பற்றித் தகவல் கொடுக்கவும் அல்லது வேண்டிய ஏற்பாடுகள்செய்யவும் வேண்டும்.

(b) ஜெயில் கைதி மரணதண்டனை யடைந்திருக்கவேண்டும்.

(c) இனிஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்து விசேஷமான உத்தரவுபெற வேண்டும். (ஜெயில் ரூல். 561.)

கைதிகளைக் கண்டு பேசுவதற்கு மனு எப்படி போடுவதென்பது.

264. சூப்பிரிண்டெண்டாண்டினிடமிருந்து எழுத்துமூலமான உத்தரவு பெற்றுக்கொண்டாலொழிய, ஒரு கைதியையுங் கண்டுபேசிக்கொள்ள இடங் கொடுக்கப்படமாட்டாது. ஜெயிலின் சுற்றுக்கட்டடத்தின் வாசலிலாவது, அல்லது ஜெயிலின் பிரதான வாசலிலாவது, எல்லோருக்குக் தெரியும்படியான இடத்தில், கைதிகளைக்கண்டு பேசிக்கொள்ளுவதற்கு இடங்கொடுக்க உத்தரவுகேட்கும் மனுக்களைப் போடும்படிக்காக ஒரு பெட்டி வைக்கப்பட்டிருக்கும். இந்தப்பெட்டியைப் பூட்டி ஜெயிலர் அதின் சாவியைத் தன்வசம் வைத்திருப்பார். ஜெயிலர் ஷை பெட்டியை ஒவ்வொருநாளும் திறந்து அதிலிருக்கப்பட்ட மனுக்களை சூப்பிரிண்டெண்டாண்டினுடைய உத்தரவுக் கனுப்புவார். (ஜெயில் ரூல், 562.)

கைதிகளைக் கண்டு பேசக்கூடிய நாள்கள்.

265. கைதிகளைக்கண்டு பேசுவதற்காக ஒவ்வொரு வாரத்திலும் நாட்களும், அவைகளில் நேரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும். கைதியின் சிநேகிதர்கள் அல்லது பந்துக்கள் தூரமானஇடங்களிலிருந்து வந்திருந்தால், குறிப்பிட்ட நாட்களை தவிர மற்ற நாட்களிலும் கண்டுபேச இடங்கொடுக்கலாம். ஞாயிற்றுக்கிழமை, பெரிய வெள்ளிக்கிழமை (கிறிஸ்து இறந்தநாள்) அல்லது கிறிஸ்து பிறந்தநாள் இவைகளில் மிகவும் அபாயகரமான சங்கதியாயிருந்தாலொழிய கைதியைப் பார்க்க இடங்கொடுக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 563.)

கைதிகளுடன் யார் முன்னிலையில் பேசவேணும் எவ்வளவு நேரம் பேசலாமென்பது.

266. கைதிகளுடைய சிநேகிதர்களும் பந்துக்களும் பேசுவது, ஒரு ஜெயில்உத்தியோகஸ்தனுடைய முன்னிலையிலிருக்கவேண்டும். சாதாரணமாக அரைமணி நேரத்திற்குமேற்பட்டு பேசிக்கொண்டிருக்கக்கூடாது. ஆனால் விசேஷ கேசுகளில் விசேஷ முகாந்திரங்களுக்காக அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் பேசிக்கொண்டிருக்க இடங்கொடுக்கலாம். பெண்பிள்ளைக் கைதியுடன் பேசவேண்டியதிருந்து அந்த ஜெயிலில் பெண்பிள்ளை உத்தியோகஸ்தையுமிருக்கும்பக்ஷத்தில் அவள் முன்னிலையில் தான் கைதியுடன் பேசவேண்டும். (ஜெயில் ரூல், 564.)

கைதிகளிடம் பேசவேண்டிய இடம்.

267. கைதிகளைக்கண்டு பேசுவது ஜெயிலின் பிரதான வாசலிலாவது அல்லது அதற்குச் சமீபமாக அதற்கென்று ஏர்ப்பாடுசெய்யப்பட்டிருக்கும்

இடத்திலாவதிருக்கவேண்டும். கூடயிருக்கும்ஜெயில் உத்தியோகஸ்தர், கைதியுடன் பேசிக்கொண்டிருக்கிறவர், கடிதம் யெதையுமாவது அல்லது வேறு எந்த வஸ்துவையுமாவது கைதிக்குக்கொடுத்துவிடாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். இப்படிப் பேசுவதற்கு முந்தியும் பிந்தியும் கைதியை நன்றாய் தேகசோதனை போடவேண்டும். சோதனையில் அவனிடம் யேதாவது அகப்பட்டால் அதன் தண்டிக்கப்படுவான். (ஜெயில் ரூல், 565.)

*கைதியைக் கண்டு பேசப் போகிறவர்கள் தேக சோதனை கொடுக்க வேண்டும்.*

268. கைதியைக்கண்டு பேசப்போகும் பந்து அல்லது சிநேகிதனிடம் 396-வது ஜெயில் ரூல்படி தடுக்கப்பட்ட வஸ்துக்களேதுமிருப்பதாக ஜெயிலருக்கு சந்தேகிக்க இடமிருக்கும்பக்ஷத்தில், அவரை தேகசோதனை போட்டுப் பார்க்கலாம். அப்படிச்சோதிப்பது வேறு மனிதர்களாவது, கைதிகளாவது பார்க்குமிடத்தில் செய்யப்படமாட்டாது. தேகசோதனை செய்யப்படுவதற்குச் சம்மதிக்கமாட்டேனென்றால் அவருக்கு, கைதியுடன் கண்டுபேசுவதற் கிடங் கொடுக்கப்படமாட்டாது. அந்த விபரத்தை ஜெயில் ரிப்போர்ட்டுப் புஸ்தகத்தில் யெழுதிவைக்கப்படும். (சிறைச்சாலை ஆக்ட்டு, 1894-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்டு 41-வது பிரிவு).

*கைதியைக் கண்டு பேச இடங்கொடாமலிருக்கலாம்.*

269. கைதியைக்கண்டு பேசிக்கொள்ளுவதற்காக மனுச்செய்துகொள்ளும் ஒருவருக்கு, அப்படிச்செய்ய இடங்கொடாமலிருப்பதற்குப் போதுமான காரணங்களிருப்பதாக சூப்பிரின்டெண்டாண்டுக்குத் தெரியவந்தால், அவனுக்கு இடங்கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிடலாம். அது விபரத்தை தன் ஜர்னலில் எழுதிக்கொள்வார். (ஜெயில் ரூல், 566.)

*கைதிகளால் எழுதப்படுகிறவும், கைதிகள் பேருக்கு வருகிறமான கடிதங்களைப் பற்றி.*

270. கைதிகள் எழுதி அனுப்பும் கடிதங்களையும், கைதிகளுக்கு வரும் கடிதங்களையும் சூப்பிரின்டெண்டாண்டு படித்துப்பார்ப்பார். அதில் எழுதக்கூடாதசங்கதிகளை எழுதியிருப்பதாகஅவர்அபிப்பிராயப்பட்டால், அந்த லெட்டரை அனுப்பாமல் அல்லது கைதிக்குக்கொடாமல் வைத்துக்கொள்வார். கடிதமெழுதுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட எந்தக்கைதிக்கும் நியாயமானமட்டில் கடிதாசு மைக்கூடு பேனா இவைகள் கொடுக்கப்படும். சூப்பிரின்டெண்டாண்டால் உத்தரவு செய்யப்பட்டிருக்கிற நேரத்திலும் இடத்திலுந்தான் கடிதங்கள் கைதிகள் எழுதலாம். (ஜெயில் ரூல், 567.)

## கைதிகளின் விடுதலையைப்பற்றிய விஷயங்கள்.

271. கைதியை விடுதலை செய்யவேண்டிய நாள் ஞாயிற்றுக்கிழமையாக யேர்ப்படும் விஷயத்தில் அதற்கு முதல் நாளே விடுதலை செய்துவிடவேண்டும். (ஜெயில் ரூல், 631.)

272. கைதியை விடுதலை செய்யும்பொழுது அவன் கைதி உத்தியோகஸ்தனுக சம்பாத்தியஞ் செய்த பொருளையும், அவனுக்கு வழிப்படி சாப்பாடுப்படி முதலியதுண்டானால் அவைகளையும், அவனை ஜெயிலுக்குக் கொண்டுவரும்பொழுது அவனிடமிருந்து யேதும் சாமான்களெடுக்கப்பட்டிருந்தால் அவைகளையும் அவனுக்குக்கொடுத்துவிடவேண்டும். (ஜெயில் ரூல், 634.)

*விடுதலைக்கு முன் கைதி செய்யவேண்டிய வேலைகள்.*

273. கடினகாவல் தண்டனை யடைந்த ஒவ்வொரு கைதியும் தான் விடுதலையாகிற தினம் காலையில், தான் ஜெயிலில் போட்டுக்கொண்டிருந்த உடுப்புகளைத் துவைத்துவைக்கவேண்டும். கைதியை விடுதலை செய்யுமுன் அவனுக்கு வழக்கமாகப்போடப்படும் சாப்பாடு போடப்படும். சாதாரணமாக் கைதிகளை மத்தியானச்சாப்பாடானவுடன் விடுதலை செய்யவேண்டு[illegible] ஜெயிலிருக்க



இருக்குமிடத்திலிருந்து அதற்கு முன்னமேயே ரெயில் புறப்பட்டுப்போகும் விஷயத்தில் மத்தியானச் சாப்பாட்டிற்கு முன்னமேயே விடுதலைசெய்துவிடலாம். எல்லாக்கைதிகளையும், ஜெயில் வாசலில் விடுதலை செய்யப்படும். (ஜெயில் ரூல், 635.)

*கைதியை விடுதலை வாயிதாத் தீர்ந்த பிறகு ஜெயிலில் வைத்திருப்பது.*

274. கைதி, விடுதலை செய்யப்படவேண்டிய காலத்தில் அபாயகரமான வியாதியுடனிருந்தாலும், மெடிகல் ஆபீஸரும் அப்பொழுது அவனை விடுதலை செய்வது சாவதானக்குறைவென்று அபிப்பிராயங் கொடுத்தாலும், அல்லது மிகவும் கஷ்டமான வியாதியினால் வருத்தத்துடனிருக்கிற கைதிக்கு அப்பொழுது விடுதலை செய்யப்படுவதில் சம்மதமில்லாமலிருந்தாலும். விடுதலை வாயிதாவில் விடுதலை செய்யப்படமாட்டான். (ஜெயில் ரூல், 626.)

275. ஒரு கைதியை விடுதலைசெய்யும்படி செய்யப்படும் உத்தரவானது 5-மணிக்கு மேலாவது, அல்லது ஞாயிற்றுக்கிழமையிலாவது கிடைத்தால், அடுத்த வேலை நாள், அதாவது ரஜாவில்லாத நாள் வரும்வரை அந்த உத்தரவின்பேரில் யாதொரு நடவடிக்கையும் நடத்தப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 637.)

*ஜெயிலைவிட்டு விடுதலை செய்யப்படும் கைதிகளுக்கு ஊர்போய்ச் சேர செலவுக்குக் கொடுப்பதைப்பற்றி.*

276. ஒவ்வொருகைதியும் விடுதலைசெய்யப்பட்டவுடன் தன்னூர்போய்ச் சேரவேண்டியதற்கு வேண்டிய செலவுக்குக்கொடுக்கப்படுவான். சூப்பிரின்டெண்டாண்டுக்கு அப்படிச்செய்வது யுக்தமென்று தோன்றினால் கைதிதண்டிக்கப்படப்பட்ட ஊர்போய்ச் சேரவேண்டியதற்குள்ள செலவுக்குக் கொடுக்கப்படுவான். கைதிபோய்ச்சேரவேண்டிய ஊரானது 20-மயிலுக்கு மேற்பட்டிருந்தால் அவனுக்கு ரெயில்வே வாறண்டுரூபமாக ஒரு 3-வதுவகுப்புடிக்கட்டும், நாளொன்றுக்கு 2 அணாவீதம் சாப்பாட்டுச் செலவிற்கும் கொடுத்தனுப்பப்படுவான். கைதியின் ஊருக்கு புகைக்கப்பலிலாவது அல்லது படகிலாவது பிரயாணஞ் செய்யவேண்டியதாயிருந்தால், அதின்மூலமாகப்போவது செலவுக்குறைவாகயிருக்குமோ அதற்குள்ள பணமும், சாப்பாட்டுக்காக நாளொன்றுக்கு 2 அணா வீதமுங் கொடுத்தனுப்பப்படுவான். போகவேண்டிய ஊருக்கு ரஸ்தா வழியாகப்போகவேண்டியதாயிருந்தால், 10 மயிலுக்கு மேல்பட்ட ஊருக்குப் போவதற்கு, ஒவ்வொரு 10 மயிலுக்கும் அணா ஒன்று வீதம் சாப்பாட்டுச்செலவிற்குக்கொடுத்தனுப்பப்படுவான். கைதி வீடுபோய்ச்சேரவேண்டிய செலவுக்கு அவனுக்கு வீட்டில் போதுமான ஐவேசிருந்தால், இந்தச்செலவுகளுக்காக அவனுக்குப் பணங்கொடுக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 641.)

*விடுதலைக் கைதிக்கு வண்டி வாடகை கொடுப்பது.*

277. வியாதியஸ்தர்களாக யிருக்கிற கைதிகள் விடுதலை செய்யப்பட்ட காலத்தில் நடந்து ஊர்போய்ச்சேருவதற்கு லாயக்காயில்லையென்று சூப்பிரின்டெண்டாண்டு அபிப்பிராயப்பட்டால், அவர்களுக்கு வண்டி வாடகை கொடுத்தனுப்பலாம். (ஜெயில் ரூல், 642.)

*விடுதலைக் கைதிக்கு ஜீவனாம்சம் கொடுத்தனுப்புவது.*

278. 12 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு ஜெயிலிலிருந்துவிட்டுப்போகிற கைதிகளுக்கு சூப்பிரின்டெண்டாண்டுக்கு அப்படிச் செய்வது அவசியமென்று தோன்றினால், ஒருமாத ஜீவனாம்சத்துக்காக சுதேசக் கைதிகளுக்கு ரூ. 2-ம், ஐரோப்பிய அல்லது யூரேஷியக் கைதிகளுக்கு ரூ. 10-ம் கொடுத்தனுப்பலாம். (ஜெயில் ரூல், 643.)

279. ஜெயிலைவிட்டு விடுதலையாய் போய்விடலாமென்றநோக்கத்துடன் கைதியால் செய்துகொள்ளப்பட்ட செய்கைகளினாலுண்டான குறுடில்லாமல்

குருடு சொஸ்தஞ் செய்யக்கூடாத வியாதி முதலியதுவரடைவிட்ட கைதிகளை வாயிதாக் கழியுமுன் விடுதலைசெய்வது, விஷயஸம்மந்தமானங்கள்.

தற்செய்லாக, சொஸ்தஞ்செய்யக்கூடாத விதமாகக் குருடாகப்போனவர்களையும், எந்தக்குற்றத்திற்காக கைதி ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறானோ அப்பேர்ப்பட்ட குற்றச்செய்கைகளை மறுபடி செய்யமுடியாத விதமான விருத்தாப்பியம், அல்லது தீராத அசக்தியாகயிருக்கிறவர்களையும், விடுதலைசெய்யவேண்டுமென்று சிபார்சுசெய்து இனிஸ்பெக்டர் ஜெனராலுக்கு சூப்பிரின்டெண்டான்டு ரிப்போர்ட்டு அனுப்பலாம். இந்த ரிப்போர்ட்டில், கைதி சம்பாதித்திருக்கிற வஜா இவ்வளவென்பதையும், சரியானபடி விடுதலை செய்யப்படவேண்டிய வாயிதாவின்னதென்பதையும், கைதி ஜெயிலிலிருக்கும்பொழுது அவனுடைய நடத்தை இன்னவிதமிருந்ததென்பதையும், கைதி எவ்வளவு காலம் ஆஸ்பத்திரியிலும் வேலை செய்ய அசக்தியாக உள்ளவர்கள் கூட்டத்திலும் வைக்கப்பட்டானென்பதையும், கைதியின் ஊர் இன்னதென்பதையும், அவனை அழைத்து வைத்துக்கொள்ளக்கூடியவர்கள்யாராவதிருந்தால் அவர்களின்னாரென்பதையும் பற்றித்தெரிவிக்கவேண்டும். கைதியை விடுதலை செய்யும் விஷயமாய் சூப்பிரின்டெண்டாண்டுக்குத் தோனுகிற அபிப்பிராயத்தையும் பற்றி ரிப்போர்ட்டுச்செய்ய வேண்டியது. கைதியின் விபர ஜாபிதாவையும், கைதியின் வியாதியைப்பற்றி மெடிகல் ஆபிசருடைய ரிப்போர்ட்டையும் இந்த ரிப்போர்ட்டுடன் அனுப்பவேண்டும். (ஜெயில் ரூல், 652.)

280. இந்த விதிப்படி கவர்ன்மெண்டாரவர்களுக்கு அனுப்புகிறதற்கு லாயக்கானவிஷயமாக இனிஸ்பெக்டர் ஜெனரல் அபிப்பிராயப்பட்டால், சூப்பிரின்டெண்டான்டினுடைய ரிப்போர்ட்டையும் அதோடுவந்த அடக்கம் ரிக்கார்டுகளையும், கைதியின் ஊரிருக்கிற அல்லது கைதியின் பந்துக்களிருக்கிற ஊர் எந்த டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டினுடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கிறதோ அந்த டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பி, அந்தக் கைதியை சில நிபந்தனைகளின்பேரில் விடுதலை செய்வதில் ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் தெரிவிக்கும்படி அவரைக்கேட்கப்படும். டிஸ்டிரிக்ட் மாமாஜிஸ்திரேட்டிடமிருந்து பதில் கிடைத்தபிறகு, இனிஸ்பெக்டர் ஜெனரல் அப்படி அபிப்பிராயப்படுவாரேயாகில், கவர்ன்மெண்டாரவர்களுடைய உத்தரவுக்காக அனுப்பப்படும். கைதி சென்னப்பட்டணம் கஸ்பாவைச்சேர்ந்தவனாகயிருந்தால், பட்டணம் போலீஸ் கம்மிஷனருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்படும். (ஜெயில் ரூல், 653.)

281. எந்தக்கைதியாவது, (1) வேணுமென்றாவது அல்லது தன்னுடைய செய்கைகளினாலாவது அதிகப்படுத்திக்கொண்டதல்லாத அபாயகரமானவியாதியினால்வருத்தப்படுவதாகவும், (2) அந்த வியாதியானது, கைதியைக்காவலில் வைக்கப்பட்டதனால் உண்டானதாக விருந்தாலுமே அல்லது எப்படியிருந்தாலுமே, கைதியை உடனே விடுதலை செய்யாமல் இன்னும் ஜெயிலில் வைத்திருந்தால் கைதி சீக்கிரம் இறந்துபோய் விடுவானென்பதாகவும் (3) கைதியை விடுதலை செய்துவிட்டால் அவன் சாகாமல் பிழைப்பதற்கு ஹேதுவாயிருக்குமென்பதாகவும் மெடிகல் ஆபீஸர் அபிப்பிராயப்பட்டால் அது சங்கதியைப் பற்றி ஸர்டிபிகேட்டு (நற்சாட்சிபத்திரம்) கொடுக்கவேண்டும். கைதியின் வியாதியைப்பற்றிய பூராச்சரித்திரத்தையும், தான் அப்படி அபிப்பிராயப்பட்டதற்குக் காரணங்களின்னதென்பதையும்பற்றித் தெரிவிக்கவேண்டும். (ஜெயில் ரூல், 654.)

282. மெடிகல் ஆபீஸரால் கொடுக்கப்பட்ட இந்த ரிக்கார்டுகளை, கவர்ன்மெண்டாருக்கு அனுப்பும்படிக்காக ஜெயில் இனிஸ்பெக்டர் ஜெனரலுக்கு சூப்பிரின்டெண்டான்டு அனுப்பவேண்டும். கைதியினுடைய விபரஜாப்தாவை அனுப்புவதில் கைதி இன்ன குற்றத்திற்காக இவ்வளவு காலத்திற்குத் தண்டிக்கப்பட்டிருக்கிறானென்பதையும், கைதியின் நடத்தையையும், கைதியின் வயதையும், கைதி இவ்வளவு தண்டனையை அனுபவித்துத்தீர்ந்துபோய்விட்டதென்பதையும், கைதியால் சம்பாதிக்கப்பட்ட வஜா இவ்வளவென்பதையும்பற்றித் தெரிவிக்கவேண்டும். இப்படி சிபார்சு செய்யபபட்ட கைதியை விடுதலை செய்ததின்பேரில் அவனுடைய பந்துக்களாலும் சிநேகிதர்களாலும் ஆதரவாகப் போஷிக்கப்படுவானென்று தனக்குத் தோன்றுவதாக சர்டிபிகேட்டையும் அனுப்புவதோடு கைதியை விடுதலை செய்வதிலிருக்கும் ஸாதக பாதகங்களைப்பற்றியும் தன் அபிப்பிராயத்தைத்தெரிவிக்கலாம். (ஜெயில் ரூல், 655.)



நிபந்தனைப் பத்திரம் வாங்கிக்கொண்டு கைதியை விடுதலைசெய்வது.

283. அடியிற்கண்ட பாராவில் சொல்லப்பட்ட நிபந்தனைகளடங்கிய ஏற்பாடுகளுக்கு ஒப்புக்கொண்டு கையெழுத்துவைக்க கைதி சம்மதித்தால் கைதியை விடுதலை செய்யலாம். அந்த நிபந்தனைகளை இங்கிலீஷிலும், கைதியின் வாஸஸ்தலமிருக்கும் ஜில்லாவின் சுதேசபாஷையிலும் அச்சடிக்க வேண்டியது. கைதி இந்த இரெண்டிலும் கையெழுத்துச்செய்யவேண்டியது. இங்கிலீஷ் பிரதியை ஜெயிலில் வைத்துக்கொண்டு சுதேசபாஷையிலிருக்கும் பிரதியைக் கைதியிடங்கொடுத்துவிடவேண்டியது. கைதி போலீஸ் அதிகாரிகளிடம் ஆஜராகும்பொழுது அதை அவர்களிடம் கொடுக்கும்படிக்கும், அப்பால் அதை அவர்களிடமிருந்து திரும்ப வாங்கிவைத்துக் கொள்ளும்படிக்கும் கைதிக்குச் சொல்லிவைக்கவேண்டியது. கைதி எந்த ஜெயிலிலிருந்து விடுதலை செய்யப்படுகிறானோ அந்த ஜெயிலானது, கைதி வசிக்க விரும்புகிற ஜில்லாவிலில்லாமல் வேறு ஜில்லாவிலிருந்தால், கைதி வசிக்க விரும்புகிற ஜில்லாவில் கொண்டுபோய் விடும்படி, ஜெயிலிருக்கிற ஜில்லா போலீசாரிடம் கைதியை ஒப்புவிக்கப்படும். (ஜெயில் ரூல், 656.)

**284. கி. பு. கோடு 401-வது பிரிவின்படி தேக சுகமில்லாமைக்காக விடுதலை செய்யப்படுவதற்குமுன் கைதி ஒப்புக்கோள்ளவேண்டிய நிபந்தனைகள் ஸம்மந்தமான விஷயங்கள்.**

கி. பு. கோடு 401-வது பிரிவுப்படி கைதியை விடுதலைசெய்வதற்கு நிபந்தனை பாரம்.

கைதியின் பெயரும் ஜாதியும்.
கைதியின் தகப்பன் பெயர்.
கைதியின் கிராமமும் ஜில்லாவும்.
கைதிசெய்த குற்றம்.
கைதிக்குச் செய்யப்பட்ட தீர்ப்பு.
கைதி அனுபவித்துத் தீர்ந்ததண்டனை இவ்வளவென்பது.
கைதி அனுபவியாமல் பாக்கியாயிருக்கிற தண்டனை இவ்வளவென்பது.

கைதியை நிபந்தனைகளின்பேரில் விடுதலை செய்யும்படிக்கு உத்தரவு செய்த கவர்ன்மெண்டு உத்தரவின் நம்பரும் தெய்தியும்.

## நிபந்தனைப்பத்திரம்.

ஜில்லா கிராமத்திலிருக்கும் மகனும் ஜெயிலிலிருக்கும் கைதியுமான ஆகிய நான் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிற தண்டனையை, நான் அடியிற்கண்ட நிபந்தனைகளின்படி நடப்பதாக ஒப்புக்கொண்டதின்பேரில், மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்கள் என்னுடைய பாக்கி தண்டனையை நிறுத்திவைக்கும்படிக்கு உத்தரவு செய்திருப்பதாக எனக்குத் தெரியவருகிறபடியால் நான் அடியிற்கண்ட நிபந்தனைகளின்படி நடப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன்.

(1) இன்றுமுதல் நாளுக்குள் ஜில்லாபோலீஸ்சூப்பிரின்டெண்டாண்டு அவர்களிடத்திலாவது, அவர்கள் ஸ்தலத்தில் ஆஜரில்லாவிட்டால் அந்தஜில்லா போலீஸ் ஹெட்குவாட்டர் இனிஸ்பெக்டரவர்களிடத்திலாவது ஆஜராய் இந்த நிபந்தனைக்குட்பட்டு விடுதலை செய்திருக்கிற உத்தரவை அவர்களிடம் ஆஜர் செய்வேனாகவும்.

ஜாமீன் பத்திரத்தின் ஷரத்துகள்

(2) அந்த சூப்பிரின்டெண்டெண்டாவது அல்லது போலீஸ் ஹெட்குவாட்டர் இனிஸ்பெக்டராவது பின்னிட்டு எக்தெந்தத் தெய்திகளில் எந்த உத்தியோகஸ்தர் முன்பாக ஆஜரிருக்கச் சொல்லுகிறார்களோ அந்தத் தெய்திகளிலெல்லாம் ஒவ்வொரு மாதமும் அந்த உத்தியோகஸ்தர் முன்புக்குத் தவறாமல் ஆஜரிருப்பேனாகவும்.

(3) அந்த ஜில்லா சூப்பிரின்டெண்டாண்டினுடையவாவது அல்லது ஹெட்குவாட்டர் இனிஸ்பெக்டருடையவாவது எழுத்துமூலமான உத்தரவன்னியில் அந்த ஜில்லாவைவிட்டு வேறு எங்கும் போகாமலிருப்பேனாகவும்.

(4) அந்த ஜில்லாவைவிட்டு வெளியில் போவதற்கு எனக்கு அனுமதி கொடுக்கப்பட்டால், எந்த நிபந்தனைகளின்பேரில் அந்த அனுமதி கொடுக்கப்பட்டதோ அந்த நிபந்தனைகளை இந்தப் பத்திரத்தில் நான் ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்ததாக நினைத்து அந்த நிபந்தனைகளின்படி தவறாமல் நடந்து வருவேனாகவும்.

(5) பிரிட்டிஷ் இந்தியாவில் இப்போது ஜாரிநத்திலிருக்கிற சட்டத்தின்படிக்கு குற்றமாகக்கூடிய செய்கையாதொன்றையும், செய்யாமலிருப்பேனாகவும்.

(6) கெட்ட நடத்தையாயிருப்பவர்களுடன் ஸஹவாஸஞ் செய்யவாவது கெட்டவகையில்க் காலக்ஷேபஞ் செய்யவாவது, செய்யாமலிருப்பேனாகவும்.

(7) அமரிக்கையாகவும், சத்திய ஸந்தனாகவுமிருந்து ஸரியான வழியில் காலக்ஷேபஞ் செய்து வருவேனாகவும்.



மேற்கண்ட நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு அந்தப்படி நடப்பதாகச் சம்மதிக்கிறேன். மேற்கண்ட நிபந்தனைகளில் எதையாவது நான் வேணுமென்று மீறிநடந்தால், நான் அனுபவியாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற மீதமுள்ள தண்டனையை அனுபவிக்கும்படி கி.பு. கோடு. 401-வது பிரிவுப் பிரகாரம் சிபார்சு செய்வதற்கு இதன் மூலமாகச் சம்மதிக்கிறேன்.

(ஒப்பம்.)

---

கைதி.

மேற்கண்ட நிபந்தனைகளை கி. பு. கோடு. 401-வது பிரிவின்படி கைதிக்குப் படித்துக்காட்டி அவ்விதம் நடப்பதாகக் கைதி ஒப்புக்கொண்டிருப்பதாக இதன் மூலமாக நான் சொல்லுகிறேன்.

1 }
2 } சாக்ஷிகள்.

தெய்தி. ஜெயில் சூப்பிரின்டெண்டு.

285. எந்த நிபந்தனைகளின்பேரில் ஒரு கைதியை விடுதலை செய்யப்பட்டதோ அந்த நிபந்தனைகளைக் கைதி மீறிவிட்டதாகத் தெரியவந்தால் கைதியிருக்கிற டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டுக்கு அதைப்பற்றித் தெரிவிக்கவேண்டும். அவர் அதைப்பற்றிக் கவர்ன்மெண்டாருக்குத்தெரிவிப்பார். (ஜெயில் ரூல், 657.)

286. காவல் தண்டனைக்காலத்தை, தண்டனை செய்த நாளிலிருந்து கணக்கிடவேண்டும். கி. பு. கோடு. 35 (1), 396 (3), 397 இந்தப் பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளின்படி கைதியைத் தண்டித்தால், அப்போது கோர்ட்டார் உத்தரவுப்படி நடத்தப்படவேண்டும்.

குறிப்பு.—ஜாமீன் கொடுக்கத் தவறினதற்காக ஒருவன் காவலில் வைக்கப்பட்டிருக்கும்பொழுது, ஒரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு காவல்தண்டனை விதிக்கப்பட்டால், அந்தக்காவல் தண்டனையைத் தீர்ப்புத்தெய்திமுதல் அனுபவிக்கவேண்டும். அந்தக் காவல் தண்டனையானது கி. பு. கோடு. 123-வது பிரிவுப்படி ஜாமீன் கொடாததற்காக விதிக்கப்பட்ட காவல் தண்டனை வாயிதாவுக்குமுந்திக் கழிந்துவிட்டால் அந்தப்பிரிவுப்படி பாக்கி காவல் தண்டனையை அனுபவிக்குப்பொருட்டு அவனை காவலில் வைத்திருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 305.)

287. கைதியின் தண்டனைக்காலமானது இத்தனை வாரமென்றாவது நாளென்றாவது தீர்ப்பில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டாலொழிய, காலெண்டர் வருஷம் அல்லது மாதக்கணக்காகக் கணக்கிடப்படும். (ஜெயில் ரூல், 306.)

288. காவல் தண்டனை முடிந்து விடுதலைநாளைக் கணக்கிடுவதில், தண்டனைத் தீர்ப்புச்சொன்ன நாளையும், விடுதலைசெய்கிற நாளையும், ஜெயிலிலிருக்கிற நாளாகவே கணக்கிடப்படும். அதேவிதமாக அப்பீலின் முடிவை எதிர்பார்த்து ஒரு கைதியை ஜாமீன்பேரில் விடுதலை செய்கிற கேசுகளிலும், கைதி

காவல்தண்டனை கழிந்து விடுதலைநாளைக் கணக்கிடும் விதம்.

ஜெயிலைவிட்டுத் தப்பி ஓடிப்போய்விடுகிற கேசுகளிலும், ஜாமீன்பேரில் விடுதலை செய்யப்பட்ட அல்லது தப்பிவித்து ஓடிப்போகப்பட்ட நாளையும், ஜாமீன் பேரில் விடப்பட்ட கைதியின் தண்டனை அப்பீலில் உறுதியாகிவிட்டால் அவனை மறுபடி ஜெயிலில் அடைக்கிற நாளையும், அல்லது தப்பி ஓடிப்போன கைதியைத் திரும்பப் பிடிக்கபட்டிருக்கிற நாளையும் கைதி ஜெயிலிலிருந்த நாளாகவே கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். (ஜெயில் ரூல், 307.)

**உதாரணம்.**-ஜனவரி மாதம் முதல் தெய்தியன்று ஒரு மாதக்காவல் தண்டனை விதிக்கப்படப்பட்ட ஒரு கைதியை அந்த ஜனவரி மாதம் 31உ யன்று விடுதலை செய்யவேண்டுமே யல்லது பிப்பிரவரிமாதம் முதல் தெய்தியன்று விடுதலை செய்யக்கூடாது.

**உதாரணம் 2.**-பிப்பரவரி மாதம் 28-ம் தெய்தியன்று ஒரு மாதக்காவல் தண்டனை விதிக்கப்படப்பட்ட ஒரு கைதியை மார்ச்சு மாதம் 27-ம் தெய்தியன்று விடுதலை செய்துவிடவேண்டும்.

**உதாரணம் 3.**-ஜனவரிமாதம் முதல் தெய்தியன்று ஒரு மாதக்காவல் தண்டனை விதிக்கப்படப்பட்ட ஒரு கைதி அதே ஜனவரி மாதம் 15-ம் தெய்தியன்று தப்பித்து ஓடிப்போய் மறுபடி 16-ம் தெய்தியன்று திரும்பப் பிடிக்கப்படுகிறான். இந்தக்கேசில் முன் ஜெயில் வாறண்டில் கண்டபடி ஜெனவரி மாதம் 31-ம் தெய்தியே விடுதலை செய்யப்படுவான். ஏனென்றால் கைதி தப்பித்து ஓடிப்போன 15-ம் தெய்தியையும் கைதி திரும்பப்பிடிக்கப்பட்ட 16-ம் தெய்தியையும் கைதி ஜெயிலிலிருந்த நாட்களாகவேயே கணக்கிடப்படுகின்றன.

**உதாரணம் 4.**-ஜனவரிமாதம் முதல் தெய்தியன்று ஒருநாள் காவல் தண்டனை விதிக்கப்படப்பட்ட ஒரு கைதியை அன்றையத்தினமே விடுதலை செய்துவிடவேண்டும். ஆனால் அவனை 24-மணி நேரத்திற்குத் தண்டித்தால் 24-மணிநேரத்திற்கு அவனைக்காவலில் வைத்திருந்து 2-ம் தேய்தியன்று தான் விடுதலை செய்யவேண்டும்.

289. கி. பு. கோடு. 106, 108 அல்லது 118-வது பிரிவுகளின்படி ஜாமீன்கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்ட ஒருவனுக்குக் காவல்தண்டனைத்தீர்ப்பு விதிக்கப்பட்டாலுமே, அல்லது அவன் அப்போது காவல் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தாலுமே, அந்தத் தண்டனைக் காலம் முடிந்தபிறகு தான் ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்ட காலம் ஆரம்பிக்கும். அனுபவித்துக்கொண்டிருக்கிற காவல்தண்டனைக் காலம் கழியுமுன் ஜாமீன் கொடுக்காவிட்டால் எவ்வளவு காலத்திற்கு ஜாமீன் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டதோ அந்தக்காலம் கழியும்வரையிலுமாவது அல்லது, ஜாமீன் கொடுக்கும்வரையிலுமாவது ஜெயிலைவிட்டு விடுதலை செய்யப்படமாட்டான். இப்பேர்ப்பட்ட கேசுகளில் அப்படி ஜெயிலில்வைப்பதற்காக வேறு வாறண்டு பிறப்பிக்கவேண்டியது அவசியமில்லை.

**உதாரணம்:**—ஒரு கைதி 3-மாதக் காவல்தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கையில், கி. பு. கோடு 106-வது பிரிவுப்படி, சமை சமாதானத்திற்கு விரோதமாகக் கலக முதலியது செய்யாமலிருக்கும்படிக்காக 6-மாதத்திற்கு ரூபா 25-க்கு ஜாமீன் கொடுக்கும்படிக் குத்தரவு செய்யப்படுகிறான். அவனனுபவித்துக்கொண்டிருந்த 3-மாதக் காவல்தண்டனைக் கழியுமுன் ஜாமீன் கொடுக்கத் தவறிவிடுகிறான். இந்தக்கேஸில் ஜாமீன் கொடுக்கும்வரை அல்லது ஜாமீன் காலம் 6-மாதம் கழியும்வரை அவனை ஜெயிலில் வைக்கவேண்டும். அப்படி ஜெயிலில் வைத்திருப்பதற்குப் பிரத்தியேகமான வேறு வாறண்டு பிறப்பிக்கவேண்டிய தவசியமில்லை. (ஜெயில் ரூல், 307-A.)



290. (1) ஒரு கைதி செய்த அப்பீலின்பேரில், கைதிக்கு விதிக்கப்பட்டிருக்கிற தண்டனையை நிறுத்திவைக்கும்படி அப்பீல் கோர்ட்டார் உத்திரவுசெய்து, அப்பீல் கோர்ட்டாரின் மறு உத்திரவை எதிர்பார்த்து அந்தக் கைதியும் ஜெயிலிலேயே வைக்கப்பட்டிருந்தால் அந்தக் கைதியை விசாரணை கைதிபோலவேயே பாவிக்கவேண்டும்.

(2) அப்பீல் கோர்ட்டார் கடாசியில் அந்தக் கைதிக்கு காவல்தண்டனையாவது, சிக்ஷை ஊழியத்தண்டனையாவது, அல்லது தண்ணீர்மேலேற்றுப் தண்டனையாவது விதித்தல் ;

(a) அந்தக் கைதியை அப்பீல் முடிவுவரை ஜெயிலிலேயே வைக்கப்பட்டிருந்தால், அப்படியிருந்த காலத்தையும் அப்பீல் கோர்ட்டார் விதித்த தண்டனையை அனுபவித்த காலத்தோடு சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(b) ஜாமீன் பேரிலிருந்தால் அப்படியிருந்த நாளைத் தண்டனைக் காலத்தைவிட்டுக் கழித்துவிடவேண்டும். ஜெயில் ரூல், 315-A.

291. ஒரே கைதிக்கு இரெண்டு அல்லது அதற்கதிகமான தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தால், எல்லாத்தண்டனைகளினுடைய மொத்தக்காலமானது ஒரே கேசில் தண்டனையாக விதிக்கப்பட்டிருந்தாலெப்படியோ அப்படி வைத்துக்கொண்டு விடுதலைக்காலத்தைத் தீர்மானிக்கவேண்டும். (ஜெயில் ரூல், 308.)

**உதாரணம் 1.**-1898-ம்௵ நவம்பர்௴ 21உ யன்று ஒரு கைதிக்கு இரெண்டு கேசுகளில் கேசொன்றுக்கு 1 வருஷம் வீதம் காவல் தண்டனை விதிக்கப்படுகிறது. இந்தக்கைதியை 1900-ம்௵ நவம்பர்௴ 20உ யன்று விடுதலை செய்யவேண்டுமே யல்லது 19உ யன்று விடுதலை செய்துவிடக்கூடாது.

**உதாரணம் 2.**-ஜனவரி௴ 1உ யன்று ஒரு கைதிக்கு 2 மாதக்காவல் தண்டனையும் ரூ. 20 அபராதமும், அபராதஞ் செலுத்தத்தவறினால் 1௴க் காவலும் விதிக்கப்படுகிறது. அபராதஞ் செலுத்தப்படாவிட்டால் அவனை மார்ச்சு௴ 31உ யன்று விடுதலை செய்யவேண்டும். அபராதஞ் செலுத்தப்பட்டுவிட்டால் பிப்பரவரி௴ 28உ யன்று விடுதலை செய்துவிடவேண்டும்.

292. ஒரு கைதிக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் ஒரு மாதத்திற்குக் குறைந்து மாதத்தினுடைய பின்னம் யேர்ப்பட்டால், விடுதலைக் காலத்தைத் தீர்மானிப்பதற்கு மாதத்தை நாளாக்கிக்கொண்டு கணக்கிடவேண்டும். இந்த விஷயத்தில் மாதமென்பதை 30 நாளாகக் கணக்கிடவேண்டும். (ஜெயில் ரூல், 309.)

**உதாரணம்:**-பிப்பரவரி மாதம் 2-ம் தெய்தியன்று ஒரு கைதிக்கு ஒண்ணரை மாதக்காவல் தண்டனை விதிக்கப்படுகிறது. அவனை விடுதலை செய்யவேண்டிய நாள் மார்ச்சு மாதம் 16-ம் தெய்தியாக யேர்ப்படுகிறது.

293. ஒரு கைதிக்கு ஒரு தண்டனைக்கு மேற்பட்டதண்டனைகள் விதிக்கப்பட்டு, அவைகளில் 1-வதுதண்டனை அப்பீலில் மாறிவிட்டால், 2-வது தண்டனையை தண்டனைத்தெய்தி முதலிலேயே அனுபவித்ததாகக் கணக்கிடவேண்டியதுதான். (ஜெயில் ரூல், 310.)

உதாரணம் 1.-ஜூலைமீ 1உ யன்று ஒரு கைதிக்கு 2 குற்றங்களுக்காக 6-மாதக் காவல்தண்டனை பிரத்தியேகம், பிரத்தியேகமாக விதிக்கப்படுகிறது. அப்பீலில் ஆகஸ்ட்டுமீ 31உ யன்று 1-வது தண்டனை மாறிவிடுகிறது. கைதியை டிசம்பர்மீ 31உ விடுதலை செய்யவேண்டியது.

உதாரணம் 2.-ஒரு கைதிக்கு ஜூலைமீ 1உ ஆறுமாதக்காவல் தண்டனையும், ஆகஸ்ட்டுமீ 1உ ஆறுமாதக்காவல் தண்டனையும் விதிக்கப்படுகிறது. அப்பீலில் ஆகஸ்ட்டுமீ 31உ முதலாவது தண்டனை மாறிப்போய்விடுகிறது. கைதியை ஜனவரிமீ 31உ விடுதலை செய்யவேண்டியது.

294. காவல் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியை அப்பீல் கோர்ட்டார், அப்பீலின் முடிவை எதிர்பார்த்து ஜாமீன்பேரில் விட்டு, அப்பால் அவனுடைய தண்டனை அப்பீலில் உறுதிசெய்யப்பட்டதனால் அவனை மறுபடி ஜெயிலுக்கு அனுப்பும் கேசுகளிலும், கைதி ஜெயிலைவிட்டுத் தப்பித்து ஓடிப்போய் மறுபடி பிடிக்கப்பட்டு ஜெயிலுக்குக் கொண்டுவரப்படுகிற கேசுகளிலும், அந்தக் கைதியை விடுதலை செய்யவேண்டிய தெய்தியைக்கண்டு பிடிப்பதற்கு, அடியிற்கண்டபடி கணக்கிடவேண்டியது. தண்டனைக் காலத்தோடு, கைதியை ஜாமீனில்விட்டநாளையும், தண்டனை உறுதி செய்யப்பட்டதின்பேரில் திரும்ப ஜெயிலுக்கு அனுப்பப்பட்ட நாளையும் கணக்கில் கூட்டாமலும், ஓடிப்போன நாளையும் திரும்பப் பிடிக்கப்பட்ட நாளையும்கணக்கில், கூட்டாமலும், ஜாமீன்பேரிலிருந்த அல்லது ஓடிப்போயிருந்த காலத்தை மட்டும், சேர்த்துக்கூட்டிக்கொள்ளவேண்டியது. இது இரண்டையும் கூட்டிவருகிற நாளில்தான், கைதியை விடுதலைசெய்ய வேண்டியது. (ஜெ. ரூ, 311.)

295. மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதிக்கு, மரணதண்டனையை ரத்துச்செய்து அதற்குப் பதிலாக தீவாந்தர தண்டனையாவது, காவல் தண்டனையாவது விதிக்கப்பட்டால், ஹைகோர்ட்டாரவர்கள் அப்படி மரணதண்டனையை ரத்துச்செய்து அதற்குப்பதில் தண்டனை விதித்த தெய்திமுதல்தான் விதிக்கப்பட்ட தீவாந்தர தண்டனை அல்லது காவல் தண்டனையைக் கணக்கிடவேண்டும். (ஜெயில் ரூல், 315.)

296. அபராதஞ் செலுத்தத் தவறினதற்காக மாத்திரம் விதிக்கப்பட்ட காவல்தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிற ஒருவனுக்கு, வேறு ஒரு கேசுக்காக காவல்தண்டனை விதிக்கப்பட்டால், அபராதம் செலுத்தாதற்காக விதிக்கப்பட்டிருக்கிற காவல் தண்டனையை அனுபவித்துத் தீர்ந்த பிறகு அல்லது அபராதம் செலுத்தப்பட்ட பிறகுதான் 2-வது விதிக்கப்பட்ட காவல் தண்டனையை நிறைவேற்றலாம். (ஜெயில் ரூல், 316.)

## கைதிகள் சம்மந்தமான பொதுவிஷயங்கள்

297. ஒவ்வொரு கைதியும்கழுத்தில் போட்டிருக்கும் டிக்கட்டில், கைதியின் நம்பரும், அவன் தண்டிக்கப்பட்ட தெய்தியும், அவன் விடுதலையாக வேண்டிய தெய்தியும் கண்டிருக்கும். (ஜெயில் ரூல், 334.)



298. கடின காவல் தண்டனை யடைந்த ஒவ்வொரு ஆண்பிள்ளைக் கைதிக்கும் வலது காலில் இரும்புவளையம் ஒன்று போடப்பட்டிருக்கும். (ஜெ. ரூல், 336.)

299. கடினகாவல் தண்டனையடைந்திருக்கிற ஹிந்துக் கைதிகளுக்கு, ... -அங்குல நீளம், 3-அங்குலச் சுற்றளவில் அவர்களுடைய குடுமியை வைத்துக்கொண்டிருக்க இடங்கொடுக்கப்படவேண்டும். அவர்களுடைய மீசை, ...ருதா இவைகளை குட்டையாகக்கத்தரித்து அல்லது வெட்டிவிடவேண்டும். ...லுக்கக்கைதிகளுடைய தாடிகளை, 1 அங்குல நீளம் மட்டும்விட்டுக் கத்தரித்து விடவேண்டும். (ஜெயில் ரூல், 337.)

கைதிகளுடைய ரோமம் முதலியது கத்தரிக்கும் விஷயம்.

300. மேலேகண்டபடி செய்வதினால் எந்தக்கைதிக்காவது நியாயமாக ...னவருத்த மூண்டாகுமானால், அவர்கள் சம்மந்தப்பட்டமட்டிலும் சூப்பிரிண்டெண்டண்டு தன் யுக்தத்தை உபயோகித்து, அவர்கள் விஷயத்தில் மேற்கண்டபடி செய்யாமலிருக்கலாம். கைதியை விடுதலை செய்கிறகாலத்திற்கு ...ரு மாதத்திற்கு முன் முதலே ரோமத்தைக்கத்தரியாமலும், க்ஷவரஞ் செய்யாமலும் வளர விட்டுவிடவேண்டும். (ஜெயில் ரூல், 338.)

ரோமம் கத்தரிப்பதிலிருந்து விலக்குவது.

301. ஒரு மாதத்திற்காவது அல்லது அதற்குக் குறைந்த காலத்திற்காவது கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டகைதிகளுக்கு, ரோமம் கத்தரிப்பது அல்லது தலையை மழுங்க க்ஷவரம் செய்வது, இது விஷயமான விதி...ன் சம்மந்தப்படமாட்டாது. கைதிகளுடைய தேகசுகத்தை உத்தேசித்தாவது, பேன் முதலியதுகளை நிவிர்த்தி செய்வதற்காவது, மெடிகல் ஆபீசர் ...ந்தக் கைதிகளுக்கும் க்ஷவரம் செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால் அப்படிச் செய்யப்படும். (ஜெயில் ரூல், 339.)

மாதத்தண்டனைக் கைதிகள் ரோமம் கத்தரித்துக் கொள்ளவேண்டியதில்லை.

## விசாரணைக் கைதிகள் விஷயமான சங்கதிகள்.

302. ஸெஷ்ஷன் கோர்ட்டாராலாவது, அல்லது ஒரு மாஜிஸ்திரேட்டாராலாவது விசாரணை செய்யப்படுவதற்காக காத்திருக்கும் கைதிகளுக்கு ...ரணைக் கைதிகளென்று சொல்லப்படும்.

விசாரணைக் கைதி யென்றுலென்ன?

303. ஜாமீன் கொடாத காரணத்தால்மட்டும் ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கிற விசாரணைக் கைதிக்கு, ஜாமீன் கொடுக்கும் விஷயமாக ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் அவனுடைய சிநேகிதர்களைக் கண்டு பேசிக்கொள்வதற்கு இடம் கொடுக்கவேண்டும். (ஜெயில் ரூல், 942.)

304. விசாரணைக் கைதிகளுக்கு அவர்களுடைய வக்கீல் முதலிய ...நியாயவாதிகளைக்கண்டு பேசிக்கொள்வதற்கு, நியாயமான சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும். கைதிகளுக்கு, வேறுயாரும் கூடயில்லாமல் தனிமையாக வக்கீல்களுடன் பேச இடங் கொடுக்கப்படவேண்டும். வேலைக்குப் பாதகமில்லாதபடி அப்படிப்பேசுவதற்கு சூப்பிரிண்டெண்டண்டு நேரம் ...குறிப்பிடவேண்டும். (ஜெயில் ரூல், 943.)

விசாரணைக் கைதிகள் தங்கள் வக்கீலிடம் பேசும் விஷயம்.

305. மேற்கண்ட சங்கதிகளுக்காக விருந்தாலொழிய விசாரணைக் கைதிகள் தங்கள் சிநேகிதர்களைக்கண்டு ஒருவாரத்திற் கொருதரந்தான்பேசிக் கொள்ளலாம். அதற்கு மேற்பட்டு இடங் கொடுக்கிறதாயிருந்தால் அதுவிப...

ரத்தை சூப்பிரிண்டெண்டாண்டு தன் ஜர்னலில் தாக்கல் செய்துகொள்ள வேண்டும். (ஜெயில் ரூல், 944.)

*விசாரணைக் கைதிகளுக்கு எழுதுவதற்கு வேண்டிய ஸாதனங்கள் கொடுக்கும் விஷயம்.*

306. கைதிகள் தங்களுடைய சிநேகிதர்களுக்குக் கடித மெழுதுவதற்காகவாவது, அல்லது தன் டிபென்ஸ் எழுதுவதற்காகவாவது தேவையாயுள்ள கடிதம், மை, பேனா இவைகளை நியாயமான மட்டில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். 1879-ம் வருஷத்து 18-வது ஆக்டுப்படிக்குள்ள அதிகாரம் பெற்ற தன்னுடைய வக்கீல் பார்வைக்காக வேண்டும் தகவல்களை இரகஸ்யமாக எழுதி அந்த வக்கீல்களிடமாவது, அவருடைய குமாஸ்தாக்களிடமாவது, கைதியே நேரில் கொடுக்கலாம். இப்பேர்ப்பட்ட கடிதங்களை சூப்பிரிண்டெண்டாண்டு படித்துப் பார்க்காமலேயே கொடுக்கப்படலாம். ஆனால் கைதிகளா லெழுதப்பட்ட மற்றக் கடிதமுதலியதை சூப்பிரிண்டெண்டாண்டு படித்துபார்க்காமல் வெளியில் அனுப்பமாட்டார். (ஜெ. ரூல், 945.)

*விசாரணைக் கைதிகள் வேலைசெய்ய வேண்டிய தில்லை.*

307. விசாரணைக் கைதிகளை, பந்தோபஸ்தாக வைத்திருக்கவேண்டியதற்காகவும், ஜெயில் ஒழுங்குப்படி நடக்கவேண்டியதற்காகவும்மட்டும் தேவையுள்ள மட்டில்தான் கட்டுப்படுத்தலாம். அவர்களுக்கு இஷ்டமுண்டானால் அவர்களிருக்கும் ஜெயில் வளைவுக்குள் அவர்களை வேலைசெய்யச் சொல்லலாம். ஜெயில் கட்டடத்திற்கு வெளியில் வேலைசெய்யச் சொல்லக்கூடாது. (ஜெயில் ரூல், 946.)

308. தங்களுடைய முற்றங்களையும், அறைகளையும், படுக்கை முதலியவற்றையும் துப்புறவாக அவர்கள் வைத்துக்கொள்ளவேண்டும். இழிவான வேலைகளைச் செய்யச்சொல்லி அவர்களைக் கட்டாயஞ் செய்யக்கூடாது. இழிவாயுள்ள வேலைகளைச் செய்வதற்காக, விசாரணைக்கைதிகளின் அறைகளுக்கு, தண்டனைப்பட்ட கைதிகளைக் கூட்டிக்கொண்டுபோய் அவர்களை அந்த வேலைகளைச் செய்யச்சொல்லலாம். விசாரணைக் கைதிகளும், தண்டனையடைந்த கைதிகளும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளவேண்டும், (ஜெயில் ரூல், 947.)

309. ஜெயிலிலிருந்து, கோர்ட்டுகளுக்கு விசாரணைக்குக்கொண்டுபோவதற்காகப்போலீசாரிடம் ஒப்புவிக்கப்பட்ட கைதிகளுக்குக்கைவிலங்கு போடவேண்டுமா அல்லது வேண்டாமா வென்று தீர்மானித்துக்கொள்ளவேண்டிய விஷயம் போலீஸாரைச் சேர்ந்ததாக யிருக்கிறது. (ஜெயில் ரூல், 949.)

## ஸப் ஜெயில்களில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் ஸம்மந்தமான விதிகள்.

*விசாரணைக் கைதிகளுக்கு சொந்த சாப்பாட்டுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.*

310. ஸப்ஜெயில்களில் வைக்கப்பட்டிருக்கிற விசாரணைக்கைதிகள் தங்களுக்குச் சொந்தச் சாப்பாட்டைப்போட இடங்கொடுக்க வேண்டுமென்று அனுமதி கேட்டுக்கொண்டால், ஸப்ஜெயில் சூப்பிரிண்டெண்டாண்டு குறிப்பிடுகிற நிபந்தனைகளுக்குட்பட்டு, சொந்தச் சாப்பாடு போடும்படி அனுமதி கொடுத்து உத்தரவு செய்யவேண்டும்.





3-வது வகுப்புக் கைதி.



2-வது வகுப்புக் கைதி.

உடுப்பின் இடது பக்கத்து மார்பில் 2-அங்குல நீளம் 1-அங்குல அகலத்தில் நீல நாடாத் துண்டை தரித்துக்கொண்டிருப்பான்.



வழக்கமாகக் குற்றஞ்செய்து அடிக்கடி ஜெயிலுக்கு வருகிற ஆண்பிள்ளை கைதி நீலக்குல்லா தரித்திருப்பான்.



வழக்கமாகக் குற்றஞ்செய்து அடிக்கடி ஜெயிலுக்கு வருகிற பெண்பிள்ளைக் கைதிக்கு புடவையில் நீலக்கறைபோடப்பட்டிருக்கும்.



ஆயுசுபரியந்தம் தண்டனை யடைந்த ஆண்பிள்ளைக்கைதி சிகப்புக் குல்லாத் தரித்திருப்பான்.



ஆயுசுபரியந்தம் தண்டனை யடைந்த பெண்பிள்ளைக் கைதி சேலையில் சிகப்புச்கரை போடப்பட்டிருக்கும்.



1 வது வகுப்புக் கைதியின் உடுப்பில் வலது மார்பில் 1-அங்குல நீளம் 2-அங்குல அகலத்தில் ஒரு சிகப்பு நாடாத் துண்டு வைக்கப்பட்டிருக்கும்.



கைதி ராத்திரிக் காவற்காரனுடைய உடை, அடையாளம், முதலியதுகளைப் பற்றி இந்தப் புஸ்தகத்தின் 124வது பக்கத்தில் 319 வது விஷயத்தைப் பார்க்க.



## 311. ஸப்ஜெயில்களில் வைக்கப்பட்டிருக்கிற தண்டனைப்பட்ட கைதிகள் அல்லது விசாரணைக்கைதிகள் இவர்களின் சாப்பாட்டின் திறக்குநாமா.

ஸப்ஜெயிலில் வைக்கப்படும் கைதிகளின் சாப்பாட்டுத்தாரணை.

| | | | | |
|---|---|---|---|---|
| கேப்பை, கம்பு, சோளம், இவைகள் எதினுடையவாவது தெள்ளினமாவு, நாளொன்றுக்கு | ... | ... | 24-ஔன்ஸ். | |
| பருப்பு | ... | ... | 4 | ,, |
| நல்லெண்ணை அல்லது தேங்காயெண்ணை | ... | ... | ½ | ,, |
| புளி | ... | ... | ½ | ,, |
| உப்பு | ... | ... | ¾ | ,, |
| கறிப்பொடி | ... | ... | ½ | ,, |
| காய்கறி | ... | ... | 6 | ,, |
| வெங்காயம் | ... | ... | ½ | ,, |

(ஸப் ஜெயில் ரூல், 84.)

குறிப்பு:—ஸப் ஜெயில்களில் வைக்கப்பட்டிருக்கிற கைதிகளுக்கும், ஜில்லா ஜெயில்முதலிய பெரியஜெயில்களில் வைக்கப்பட்டிருக்கிற கைதிகள் விஷயமாகச் சொல்லப்பட்டிருக்கும், ஜெயில் குற்றங்கள், ஜெயில் தண்டனைகள், முதலியவைக ளெல்லாம் சம்மந்தப்படும்.

## பற்பல வகுப்புக் கைதிகளுக்கு அடையாளங்கள்.

இன்ன வகுப்புக் கைதிகளென்பதையும் பற்பல வகுப்புக் கைதி உத்தியோகஸ்தர்களையும் பகுத்தறியக்கூடிய அடையாளங்கள்.—

3-வகுப்புக் கைதிக்கு அடையாளமொன்றுங் கிடையாது.

பற்பல வகுப்புக் கைதிகளைப் பகுத்தறியக் கூடிய அடையாளங்கள்.

312. 2-வது வகுப்புக்கைதி, 2-அங்குல நீளம் 1-அங்குல அகலத்தில் ஒரு நீல நாடாத்துண்டை, அவனுடைய உடுப்பில் இடது மார்புப் பக்கத்தில், அடையாளமாகத் தரித்துக்கொண்டிருப்பான். (ஜெயில் ரூல், 443.)

313. 1—வது வகுப்புக்கைதி, 2-அங்குல நீளம் 1-அங்குல அகலத்தில் ஒரு சிகப்பு நாடாத்துண்டை, அவனுடைய உடுப்பில் இடது மார்புப்பக்கத்தில், அடயாளமாகத் தரித்துக்கொண்டிருப்பான். (ஜெயில் ரூல், 444.)

314. தண்டனைப்பருவத்தை யனுபவிக்கிற ஆண்பிள்ளைக் கைதிகள், சாக்கு) கோணிவுடையை தரித்திருப்பார்கள்.

315. வழக்கமாகக் குற்றஞ்செய்து அடிக்கடி ஜெயிலுக்கு வருகிற ஆண்பிள்ளைக் கைதிகள் நீலக்குல்லாத் தரித்திருப்பார்கள்.

316. வழக்கமாகக்குற்றஞ்செய்து அடிக்கடி ஜெயிலுக்குவருகிற பெண்பிள்ளைக்கைதிகள், துணியில் நீலக்கரைபோட்ட சேலை தரித்துக்கொண்டிருப்பார்கள். (ஜெயில் ரூல், 480).

317. ஆயுசு பரியந்தம் தண்டனை யடைந்திருக்கிற ஆண்பிள்ளைக் கைதிகள் சிகப்புக்குல்லாத் தரித்திருப்பார்கள். (ஜெயில் ரூல், 480.)



கைதி 1-வது வகுப்பு வார்டருக்குள்ள அடையாளங்களைப்பற்றி இந்தப் புஸ்தகத்தின் 124-வது பக்கம் 321,322 வது விஷயங்களைப் பார்த்துக்கொள்ளவும்.



கைதி, 2-வது வகுப்பு வார்டருக்குள்ள அடையாளங்களைப்பற்றி இந்தப் புஸ்தகத்தின் 124-வது பக்கம் 321, 322-வது விஷயங்களைப்பார்த்துக்கொள்ளவும்.



கைதி, ஐரோப்பியர். குல்லாவுக்குப் பதில் வெள்ளைத் தலைக்குட்டையும், நீளக் காலுச்சட்டை, நீள உடுப்பு, உடுப்பின் வலது கையில் பித்தளை வில்லையும் தரித்திருப்பான்.



325. பிரேதங்களைப் புதைக்கிறதற்காக வெட்டப்படும் குழிகள் 6-அடி ஆழத்திற்குக் குறைந்திருக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 859.)

326. பிரேதங்களைக் குழிகளில் புதைப்பதில் அவைகளை காய்நரிகள் தோண்டிக்கொண்டு போய்விடாத விதமாக, குழியில் போட்டு அதன்மேல் போடப்பட்ட மண்ணைச்சரியானபடி மொங்கான்வைக்க, அதாவது, கெட்டிப் படுத்தவேண்டும். தரை மட்டத்துக்கு மேல் 1-அடி மண்ணை மூடப்பட்ட குழிமேல் குவித்து வைக்கவேண்டும். (ஜெயில் ரூல், 860.)

## சிக்ஷை ஊழியதண்டனையைப்பற்றிய விஷயங்கள்.

### சிக்ஷை ஊழியதண்டனை ஆக்ட்டு 1855-ம் வருஷத்து 25-வது ஆக்ட்டு.

327. பீடிகை:—தேசசுகத்திற்குக் குறைவில்லாமல் ஐரோப்பியர்களையும், அமெரிக்கர்களையும், தீவாந்தர தண்டனையை அனுபவிக்கும்பொருட்டு அனுப்பிவைக்கும்படியான சரியாயுள்ள இடம் கிடைக்காதபடியால் தண்ணீர் மேலேற்றுந் தண்டனைக்குப்பதிலாக சிக்ஷை ஊழிய தண்டனையை யேற்படுத்துவது அவசியமாக நேரிட்டிருக்கிறது.

குறிப்பு:—சிக்ஷை ஊழிய தண்டனை யென்பது ஐரோப்பியர்கள் அமெரிக்கர்கள் இவர்களுக்கு தீவாந்தரத்திற்கு அனுப்புவதற்குப் பதிலாக சென்னப்பட்டணம் பெனிடென்ஷியரி யென்னுஞ் சிறைச்சாலையில் வைத்துக்கடினகாவல் தண்டனையை நிறைவேற்றுவது தான்.

## சிக்ஷை ஊழியதண்டனை விதிக்கவேண்டிய தாரணை.

328. 7 வருஷம் அல்லது அதற்கு மேற்படாத காலத்திற்கு தண்ணீர் மேலேற்றுவதற்குப்பதிலாக 4 வருஷத்திற்கும்;

7 வருஷத்திற்கு மேற்பட்டும், 10 வருஷத்திற்கு மேல்போகாதவுமான காலத்திற்கு தண்ணீர்மேலேற்றுவதற்குப்பதிலாக, 4 வருஷத்திற்குக் குறையாதவும், 7 வருஷத்திற்கு மேல்போகாதவுமான காலத்திற்கும்;

10 வருஷத்திற்கு மேற்பட்டும் 15 வருஷத்திற்குமேல்போகாதவுமான காலத்திற்கு தண்ணீர்மேலேற்றுவதற்குப் பதிலாக, 6 வருஷத்திற்குக் குறையாதவும், 8 வருஷத்திற்குமேல்போகாதவுமான காலத்திற்கும்;

ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுவதற்குப் பதிலாக, ஆயுசுபரியந்தமும் சிக்ஷை ஊழியத்தண்டனை விதிக்கலாம். (சி. ஊ. த. ஆக்ட்டு பிரிவு, 2.)

## சொத்தைப் பறிமுதல் செய்வதைப்பற்றிய விஷயங்கள்.

329. தண்டிக்கப்பட்டவனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யுந் தண்டனையை, மிகவும் கொரோமாயுள்ள குற்றங்களைச் செய்தவர்களுக்குத் தான் விதிக்கலாம்.

## குற்றஞ்செய்தவனுடைய எல்லாச் சொத்துக்களையும் பறிமுதல் செய்யவேண்டிய கேசுகள்.

*மகாராஜா அவர்கள் பேரில் யுத்தஞ் செய்தாலும் யுத்தஞ் செய்ய எத்தனப்பட்டாலும் உடந்தையாயிருந்தாலும் இன்ன தண்டனையென்பது.*

(1) மகாராஜா அவர்களுக்கு விரோதமாக யுத்தஞ் செய்கிற, அல்லது யுத்தஞ்செய்யப் பிரயத்தனஞ் செய்கிற, அல்லது அப்படி யுத்தஞ்செய்கிறவர்களுக்கு உடந்தையாயிருக்கிற. எவனுக்கும், மரண தண்டனையாவது அல்லது, ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுகிற தண்டனையாவது விதிப்பதோடு அவனுடைய எல்லாச் சொத்துக்களையும் பறிமுதல் செய்துவிடும்படி தீர்ப்புச் செய்யவேண்டும். (இ. பி. கோடு. பிரிவு, 121.)

*மகாராஜா அவர்கள் பேரில் யுத்தஞ் செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு ஆயுத முதலானவைகளைச் சேர்த்தால் இன்ன தண்டனையென்பது.*

330. மகாராஜா அவர்கள்பேரில் யுத்தஞ் செய்யவேணுமென்றாவது, யுத்தஞ்செய்யத் தயாராக வேணுமென்றாவது எண்ணங்கொண்டு எவனாகிலும் மனிதர்களையாவது ஆயுதமுதலிய யுத்தசாமான்களையாவது சேர்த்தாலும், யுத்தஞ்செய்ய வேறே எவ்வகைத் தயார்செய்தாலும், அவன் ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனைக்காவது, பத்துவருஷத்திற்கு அதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காகிலும் இரண்டுவகைக் காவலொன்றில் வைக்கும்படியான தண்டனைக்காவது உள்ளாவது மல்லாமல், அவனுடைய சொத்துமுழுவதும் பறிமுதல் செய்யப்படும். (இ. பி. கோடு பிரிவு, 122.)

## குற்றஞ் செய்தவனுடைய எல்லாச்சொத்துக்களையும் பறிமுதல் செய்யக்கூடிய கேசுகள்.

331. எவனாவது மரணதண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றத்தைச் செய்தானென்று தீர்மானஞ் செய்யப்பட்டால், அவனுடைய அசையும்பொருள் அசையாப்பொருள் இவைகள் முழுவதையும் பறிமுதல் செய்யும்படி உத்தரவுசெய்யலாம். இ. பி. கோடு 62-ல் 1-ம் பாகம்.)

## குற்றஞ்செய்தவனுடைய எல்லாச் சொத்துக்களிலும் கிடைக்கிற வாடகை லாபம் இவைகள் முழுமையையும் குற்றஞ் செய்தவன் தீவாந்தரத்தண்டனையையாவது அல்லது காவல் தண்டனையையாவது அநுபவித்துக் கொண்டிருக்கிற காலம்வரை பறிமுதல்செய்யும்படி உத்தர செய்யக்கூடிய கேசுகள்.

*தீவாந்தர தண்டனை மரண தண்டனை இவைகள் விதிக்கப்படக்கூடிய குற்றங்களை செய்தவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்வது.*

332. ஏழுவருஷத்திற்காகிலும், அதற்கு மேல்பட்டாகிலும், தீவாந்திரத்திற்கு தண்ணீர்மேலேற்றும்படிக்காவது, சிறச்சாலையில் வைக்கும்படிக்காவது சிக்ஷை விதிக்கும்படியான யாதொரு குற்றத்தைச் செய்தவனென்று தீர்மானஞ் செய்யப்பட்டால், அவனுக்கு எவ்வளவு காலத்திற்கு அந்த சிட்சை விதிக்கப்படுகிறதோ அந்தக்கால வரையிலே அவனுடைய அசையும்பொருள் அசையாப்பொருள் முழுமையினாலும் வருகிற வாடகையிலும், லாபத்திலும் அவனுடைய குடும்பத்தாருக்கும், அவனை நம்பின பேர்களுக்கும் ஜீவனார்த்தத்திற்காக அந்தக்கால வரையிலே எவ்வளவு கொடுக்கலாமென்று கவர்ன்மெண்டாரவர்களுக்குத் தோற்றுகிறதோ அதுபோகமற்றதை சர்க்காரில் சேர்த்துக்கொள்ளப்படுமென்று கோர்ட்டார் உத்தரவு செய்யலாம். (இ.பி. கோடு. பிரிவு, 62-ல் 2-ம் பாகம்.)



## குற்றஞ்செய்தவனுடைய குறிப்பிட்டச் சொத்தைப் பறிமுதல் செய்யவேண்டிய கேசுகள்.

333. மகாராஜா அவர்களோடு தனதாகவாகிலும், ஸமாதானமாக வாகிலுமிருக்கிற எந்த ஸம்ஸ்தானத்தினுடைய ராச்சியத்திலாகிலும் எவனாவது கொள்ளையடித்தாலும், கொள்ளையடிக்க எத்தனஞ்செய்தாலும், அவன் ஏழு வருஷத்திற்கு அதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது இருவகைக்காவலிலெதிலாகிலும் வைக்கப்பட்டு, அபராதம் போடப்படுவதுமல்லாமல், அப்படிக் கொள்ளையடிப்பதற்கு உபயோகித்ததாகவாவது, எத்தனிக்கப்பட்டதாகவாவது, அந்தக்கொள்ளையில் சம்பாதித்ததாகவாவதிருக்கிற யாதொரு பொருளையும் பறிமுதல் செய்யப்படும். (இ. பி. கோடு. பிரிவு, 126.)

334. இ. பி. கோடு 126-வது பிரிவில் கண்டபடி மகாராஜா அவர்களுடன் தனதாகிலும், சமாதானமாகிலுஞ் செய்துகொண்டு ஏஷியா கண்டத்திற்குள்ளிருக்கிற எந்த ஸமஸ்தானத்தின்பேரிலாகிலும் யுத்தஞ்செய்கிற, அல்லது யுத்தஞ்செய்ய எத்தனப்படுகிற அல்லது உடந்தையாயிருக்கிற, குற்றவாளியும், இ.பி. கோடு,25, 26-வது பிரிவுகளில்கண்டிருக்கிற குற்றங்களிலெதையாவது செய்கையில் எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்தென்று தெரிந்திருந்து அதை வாங்கிக்கொள்ளுகிறவனும், ஏழுவருஷத்திற் கதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது இரெண்டுவகைக் காவலிலெதிலாகிலும் வைக்கப்பட்டு, அபராதம் போடப்படுவதுமல்லாமல், அப்படி வாங்கிக்கொள்ளப்பட்ட சொத்தும் பறிமுதல் செய்யப்படும். (இ. பி. கோடு பிரிவு, 127.)

335. இன்னபொருளை விலைக்கு வாங்கக்கூடாதென்றாவது, ஏலத்தில் விலைக்குக் கேழ்கக்கூடா தென்றாவது சட்டத்தினால் தடுக்கப்பட்டிருக்கிற யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தன், தன் பெயருக்காவது, வேறொருவன் பெயருக்காவது மற்றவர்களோடு கூட்டாகவாவது, பங்காகவாவது அந்தப் பொருளை விலைக்கு வாங்கினாலும், ஏலத்தில் விலைக்குக்கேட்டாலும், அப்படிப் பட்டவன் இரண்டு வருஷத்திற்கதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது வெறுங்காவலில் வைக்கப்படுவான், அல்லது அபராதத்திற்குள்ளாவான், அல்லது இரண்டு தண்டனைக்கும் உட்படுவான்; அந்தப்பொருள் வாங்கப்பட்டிருந்தால், அது பறிமுதல் செய்யப்படும். (இ. பி. கோடு. பிரிவு, 169.)

## தீவாந்தர தண்டனையைப்பற்றிய விஷயங்கள்.

தீவாந்திர தண்டனை விதிப்பது விஷயமாகப் பீனல்கோடு எழுதியவர்கள் (கிருந்தகர்த்தாக்கள்) பின் வருமாறு சொல்லியிருக்கிறார்கள்.

336. "இப்போர்ப்பட்ட தண்டனையை வைத்துக்கொண்டிருப்பதின் காரணம், இந்த தண்டனையைப்பற்றி இந்துதேசத்துச் சுதேசிகள், அதிலும் சமுத்திரத்திலிருந்து கொஞ்சதூரமுள்ள இடங்களில் வாசஞ்செய்கிறவர்கள், விசேஷமாய்ப் பயப்படுவதுதான். இந்தத் தண்டனையானது அவர்களுக்குப் பூராவும் துக்கத்தையே விளைவிக்கிறது. இந்தப் பயத்தினால்தான் நன்மை, ஸம்பவிக்கிறது. (அதாவது தண்ணீர்மேலேற்றுந் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களைச் செய்யப்பயப்படுகிறார்களென்ற கருத்து) தண்ணீர்மே லேற்றப்படுகிறவனுக்கு யேற்படும் கஷ்டத்துக்கு மேற்பட்டு, அந்த தண்டனை விஷய

மாக ஜனங்கள் பயப்படுகிறார்கள். நீடித்தநாள் ஒருவனைக் காவலில் வைப்பது இன்னும் அதிக கஷ்டமாயுள்ளது. ஆனால், அப்படிக் காவல்தண்டனை விதிக்கப்படக்கூடிய கேசுகளில் தீர்ப்புச் சொல்லுவதற்கு முன்கூடியே ஜனங்கள் பயப்படுகிறதில்லை. காவல்தண்டனை விதித்த உடன் தண்டனை விதிக்கப்பட்டவனுக்கும் தண்டனை விதிக்குங்காலத்தில் அங்கேயிருக்கிறவர்களுக்கும் அவ்வளவுபயம் உண்டாகிறதில்லை. ஆனால் கருங்கடலென்று சொல்லப்படுகிறதற்கப்பாலுள்ள தீவாந்தரத்துக்கு அனுப்புவதற்காகச் சொல்லப்பட்ட தண்ணீர்மேலேற்றும் தண்டனை விதிக்கப்பட்டவுடன் தண்டனை விதிக்கப்பட்டவனும், அப்போது அங்கேயுள்ளவர்களும், நடுக்கமடைந்துவிடுகிறார்கள். இப்படிப்பயப்படுவதற்குக்காரணமெல்லாங்கூட்டி, தண்டிக்கப்படப்பட்டவன் தண்டனை யனுபவித்துவிட்டுத்திரும்பவருவதும், தீவாந்தரத்திலேயேயிறந்துபோவதும் நிச்சயமில்லாமலிருப்பதையிட்டுத்தான். ஒருவன் இறந்துபோகிறகாலத்தில் எவ்வளவுதுக்கம் உண்டாகுமோ அவ்வளவுதுக்கம் ஒருவனை தீவாந்தரத்துக்கு அனுப்புங்காலத்தில் உண்டாகிறது. தண்டனையடைகிறவனை, பந்துக்களுடையவும் சிநேகிதர்களுடையவும் மத்தியிலிருந்து அவனை ஒருபோதும் திரும்ப பார்க்கமுடியாத விதமாக, முகமறியாதவும், அந்த இடத்தின் தன்மை இன்னதென்று தெரியாதவுமான தூரதேசத்திற்குக் கொண்டுபோவதனாலும், அவன் திரும்பவரப் போகிறதில்லை என்ற பயத்தினாலும் இவ்வளவு பயமும் உண்டாகிறது. அவனுக்கு நேர்ந்த விபத்தினால் ஜனங்களுக்கெல்லாம் நடுக்கமுண்டாவது மனிதரின் இயற்கையான குணந்தான். இந்தப் பயத்தினால்தான் அவ்விதத்தண்டனை யேர்ப்படுத்தியிருப்பதில் பிரயோசனமிருக்கிறது. தீவாந்தரதண்டனை விதிக்கப்பட்டவர்கள், 7-அல்லது 14-வருஷக்காலம் தீவாந்தர தண்டனையை அனுபவித்துவிட்டு, அவர்கள் குற்றஞ்செய்த இடத்திற்கே அவர்களுடைய சிநேகிதர்களுடையவும், பந்துக்களுடையவும் மத்தியிலிருக்கும்படி அடிக்கடி திரும்பி விடுகிறதாகயிருந்தால் இந்த தண்டனையில் ஜனங்களுக்குள்ள பயம் போய்விடும்."

தீவாந்தர தண்டனை யேர்ப்படுத்தியதின்நோக்கம்.

## ஆண்டமன் தீவு என்னும் தண்டனைக் குடியேற்ற நாட்டின் வறலாறு.

தண்டனைக்குடியேற்ற நாட்டின் வறலாறு.

337. இந்தியா கவர்ன்மெண்டாருக்குள்ளிருந்த, சுமத்திரா தீவிலுள்ள பெங்கூலன் என்னுமிடத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு, 1787-ம்வருஷத்தில் இந்துதேசத்துக் கைதிகளை முதல் முதல் கப்பலேற்றி அனுப்பப்பட்டது. பெங்கூலன் என்னுமிடத்தில் லெப்டினெண்டு கவர்னராக விருந்த ஸர். ஸ்டாம்போர்ட் ராபின்ஸ் (Sir Sfamford Raffles) என்பவர் கைதிகளை ஸரியானபடி நடத்திமேல்பார்த்து வரும் விஷயமாகத்தான் செய்திருக்கும் யேர்ப்பாடுகளைப்பற்றி, 1818-ம்வருஷத்தில் கவர்ன்மெண்டாரவர்களுக்கு எழுதினார். 1823-ம்வருஷத்தில் அது விஷயமாய் தான் உண்டாக்கியிருக்கும் சட்டதிட்டங்களுக்கு கவர்ன்மெண்டாரவர்களுக்கு ஒரு நகல் அனுப்பினார். 1825-ம்வருஷத்தில் பெங்கூலன் என்னுமிடத்தை டச்சுக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆகையால் அங்கே யிருந்த கைதிகளை பீனங்கு, சிங்கப்பூர் இவைகளுக்கு அனுப்பப்பட்டது. பீனங்கில் இங்கிலீஷ்காரர் போனது 1785-ம் வருஷத்தில். கைதிகளை அவ்விடத்திற்கு அனுப்பியது 1796-ம் வருஷத்தில். பெங்கூலனிலிருந்த கைதிகளை அங்கே அனுப்பும்பொழுது அவர்கள் கூடவேயே ஸர். ஸ்டாம்போர்டு ராபின்ஸினுடையசட்டதிட்டங்களையும் அனுப்பப்பட்



டது. அதை வைத்துக்கொண்டே 1827-ம்வருஷத்தில் பீனங்கு ரூல்கள் யேர்ப்படுத்தப்பட்டது. மலாக்காத்தீவில் 1824-ம்வருஷம் குடியேறினது. உடனே பீனங்கிலிருந்து கைதிகள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் விஷயமாகவும் பீனங் விதியையேதான் ஊர்ஜிதத்துக்குக்கொண்டுவரப்பட்டது. 1819-ம் வருஷத்தில் சிங்கப்பூர் என்னுமிடத்தை ஸர். ஸ்டாம்போர்ட் ராபின்ஸ் என்பவர் தானே நேரில் கண்டுபிடித்தார். 1825-ம்வருஷத்தில் அந்த இடத்திற்கு பெங்கூலன் என்னுமிடத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கைதிகள் அனுப்பப்பட்டார்கள். 1826-ம்வருஷத்தில் பீனங்கிலிருந்து கைதிகள் அனுப்பப்பட்டார்கள். சிங்கப்பூரில் முதலாவது பெங்கூலன் ரூல்களும், அப்பால் 1827 வருஷத்தில் தயார் செய்யப்பட்ட பீனங் ரூல்களும் ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 1845-ம்வருஷத்தில், சிங்கப்பூர் கவர்னர், கர்னல் பட்டர்வர்த் (Colonel Butterworth) என்பவரால், இந்துதேசத்துக் கைதிகளுக்காகச் செய்யப்பட்ட விதிகள் ஊர்ஜிதத்திற்கு வரும்வரை மேற்கண்ட விதிகளே ஊர்ஜிதத்திலிருந்துவந்தன. இந்த விதிகள் 1858-ம் வருஷத்தில், சூப்பிரிண்டெண்டாண்டாக்யிருந்த மேஜர்மக்னீர் துரையால் சீர்திருத்தப்பட்டன. 1858-ம் வருஷத்தில் ஆண்டமன் தீவில் இந்த தண்டனைக்குடியேற்ற இடத்திற்கு கைதிகளை அனுப்ப ஆரம்பிக்கப்பட்டது. 1790-ம்வருஷத்தில் ப்ளேர் (Blair) என்னும் துரை, போயிருந்து ஒரு துரைமுகத்தைக் கட்டினார். அதை அவர் பெயரால் ப்ளேர் துரைமுகம் (Port Blair) என்று அழைக்கப்படுகிறது.

ப்ளேர் துரைமுகத்தின் வரலாறு.

## கைதிகளைத் தண்டித்தவுடனும், தீவாந்தரத்திற்கு அனுப்பு முன்னும் நடத்தப்படும் நடவடிக்கைகள்.

338. இ. பு. கோடு 383-வது பிரிவின்படி தண்ணீர்மேலேற்றும் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியை அவனிருக்கிற அல்லது அவன் வைக்கப்படவேண்டிய ஜெயிலுக்கு ஒரு வாரண்டுடன் அனுப்பப்படும். இ. பி. கோடு 58-வது பிரிவின்படி கைதியை தீவாந்தரத்துக்கு அனுப்பும்வரை கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டவனை நடத்துவதுபோல நடத்தவேண்டியது. அப்படி நடத்தப்படும் காலத்தை தண்ணீர்மேலேற்றிய தீர்ப்பை அவன் அனுபவிப்பதாகவேயே எண்ணப்படும். (ஜெயில் ரூல், 995.)

தீவாந்தரம் அனுப்பும் வரை கடின காவல் கைதியைப்போல நடத்துவது.

339. 23-12-99 போட்ட, 2102ம் நெ. ஜுடிஷியல், கவர்ன்மெண்டு உத்தரவில் ரிக்கார்டு செய்யப்பட்ட 1899-ம்வருஷ டிசம்பர்மீ போட்ட நெ 537-நோட்டிபிகேஷனால், (ஹோம் டிபார்ட்மெண்டு நோட்டிபிகேஷனால்) எல்லா [illegible]ண்ட்ரல் ஜெயில்களும், தண்ணீர்மேலேற்றுகிற தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை அனுப்பக்கூடிய இடங்களாக இந்தியா கவர்ன்மெண்டாரவர்கள் நியமித்திருக்கிறார்கள். தண்ணீர்மேலேற்றுகிற தண்டனை விதிக்கப்பட்டவர்களை தண்டனைவிதிக்கப்பட்டவுடன் கூடியசீக்கிரத்தில் இந்த ஜெயில்களில் ஏதாவதொன்றுக்கு அனுப்பி அவிடத்தில் வைக்கவேண்டும். (ஜெயில் ரூல், 996.)

தீவாந்தரம் அனுப்பும் வரை செண்ட்ரல் ஜெயிலில் வைப்பது.

340. ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது அல்லது ஆயுசு பரியந்தமாவது தண்ணீர்மேலேற்றும் தண்டனை விதிக்கப்பட்டு, அனுபவிக்க வேண்டிய மீத தண்டனையானது 6 வருஷங்களுக்குக் குறையாமலிருக்கிற ஆண்பிள்ளைக் கைதிகளையும், ஆயுசு பரியந்தம் தண்ணீர் மேலேற்றுந் தண்டனை விதிக்கப்

தீவாந்தரம் அனுப்புவதற்கு லாயக்காயுள்ள கைதியின் விபரம்.

பட்ட பெண்பிள்ளைகளையும் அடியில் கண்ட நிபந்தனைகளின்படிக்குள்ளவர்களை தண்ணீர்மேலேற்றி அனுப்பப்படும். 18-வயதுக்குக் குறையாதவும், அல்லது 40-வயதுக்கு மேல்போகாதவும், அல்லது சரியான தேகசுகத்துடனிருப்பவர்கள் ஜெயிலில் சாதாரணமாகச் செய்துவருகிற வேலைகளைச் செய்யும்படியான பலமுடையவர்களாகவுமிருந்து திவீபாந்தர தண்டனை விதிக்கப்படுகிற எல்லா சுதேச ஆண் பெண்கைதிகளையும் ஆண்டமான் தீவுக்கு தண்ணீர்மேலேற்றி அனுப்பப்படும். அடியிற்கண்ட வியாதிகளில் எதுவாவதுள்ளவர்களை எந்தக்காரணத்தினாலும் அங்கே அனுப்பப்படமாட்டாது.

(1) சாதாரணமாக ஏற்பட்ட வேலையைக்கூடச் செய்யக்கூடாத விதமாக இரண்டு கண்ணும் குருடாயிருக்கிறவர்கள், (2) பயித்தியம் பிடித்தவர்கள், அல்லது பைத்தியம் பிடிக்குமென்று நினைக்கக்கூடிய விதமாக புத்தி சுவாதீனமில்லாமலிருப்பவர்கள், (3) சித்தப்பிரமை பிடித்தவர்கள், (4) குஷ்டரோகிகள், (5) க்ஷயரோகிகள், (6) காக்காவலிப்புடையவர்கள், (7) ஒரு காலிலாவது அல்லது 2-காலிலுமாவது பார்சுவாய்வு உபத்திரவமுள்ளவர்கள், (8) இரண்டு கால்களும் யானைக்காலாயிருப்பவர்கள், (9) இருதய வியாதியுள்ளவர்கள் இவர்களை தண்ணீர்மேலேற்றக்கூடாது. ஒரு கைதிக்குச் சித்தப்பிரமை வருமென்ற ஸந்தேகம் யேர்ப்பட்டாலுமே அப்பேர்ப்பட்ட கைதியைத் தண்ணீர்மே லேற்றிவிடக்கூடாது. சுரம், வயிற்றுளைச்சல், அல்லது நீடித்த வியாதி இவைகளால் மெலிந்து அசக்தியாகிப்போயிருக்கிற கைதிகளை அவர்களுடைய வியாதிகளுக்குப்பிறகு அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட வேலைகளைச் சரியானபடி 3-மாதக்காலமாவது செய்துகொண்டு நல்ல தேகசுகத்துடனிருக்கும் வரை, ப்ளேர் துறைமுகத்துக்கு தண்ணீர்மேலேற்றி அனுப்பக்கூடாது.

இந்த ரூல்படி தண்ணீர்மேலேற்றி அனுப்பப்படாத ஆண்பிள்ளைக் கைதிகளை மேலே 995-வது ரூலில் சொல்லியபடி செய்யவேண்டும். (ஜெயில் ரூல், 997.)

தீவாந்தரம் அனுப்பப்படக்கூடிய பெண்பிள்ளைக் கைதியின் விபரம்.

341. ஏழுவருஷங்களுக்கும் அதற்கு மேற்பட்ட காலத்துக்கும் தண்டிக்கப்பட்ட அடியிற்கண்ட நிபந்தனைக்குள்ளடங்கிய பெண்பிள்ளைக் கைதிகளை தண்ணீர்மே லேற்றிவிடவேண்டும்.

(1) கல்லியாணமாகாதவர்களாக அல்லது விதவைகளாக அல்லது புருஷனால் விலக்கிவைத்து விடப்பட்டவர்களாகவிருக்குங்காரணங்களால் கலியாணஞ்செய்துகொள்ளத் தடையில்லாதவர்களாக யிருக்கவேண்டும்.

(2) வயது விஷயத்திலும் தேகபல விஷயத்திலும் 997-வது ரூலில் சொல்லப்பட்டபடி யிருக்கவேண்டும். (ஜெ. ரூல், 998.)

342. தூப்புக்காரச் சாதியைச்சேர்ந்த ஆண்பிள்ளைகள் கடினமான வேலை செய்ய லாயக்காயிருப்பதைக்குறித்த ரூலைவிட்டு விலக்கப்படுகிறார்கள். வயது விஷயமாகவும் தேகபல விஷயமாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ரூல்களை அவர்கள் விஷயத்தில் கண்டிப்பாக அனுஷ்டிக்கவேண்டியதில்லை. ஆனால் தீவாந்தரத்துக்கு அனுப்பத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் 18-வயதுக்கு மேற்பட்டவர்களாயும் தூப்பு வேலை செய்வதற்கு லாயக்கானவர்களாகவும் மட்டு மிருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 999.)



கைதிகளைத் தீவாந்தரத்துக்கு அனுப்பும் வாயிதாக்கள்.

343. வருஷத்தில் எக்காலமும், திவீபாந்தரத்துக்கு (ஆண்டமான் தீவுக்கு) அனுப்புகிறவர்களை 6-வாரத்திற்கு ஒருதரம் அனுப்பப்படும். இராஜதானிப்பட்டணத்துக்கு வெளியூரிலுள்ள ஜெயில்களிலிருந்து, (Madras Penitentiary)க்கு அப்பேர்ப்பட்ட கைதிகளைக் கொண்டுவருவது, மேற்கண்ட 6-வார வாயிதாவுக்குத் தக்கபடி யேர்ப்பாடு செய்யப்படும். ஜெயில்களின் சூப்பிரிண்டெண்டாண்டு மற்ற ஒவ்வொரு ஜெயில் சூப்பிரிண்டெண்டாண்டுக்கும் அந்தந்த வருஷத்தில் பட்டணத்தைவிட்டு ஆண்டமன் தீவுக்கு மெயில்ஸ்டீமர்கள் புறப்படுகிற தெய்திகளைக் குறிப்பிட்டு வருஷாந்தர ஸ்டேட்மெண்டு அனுப்புவார். அந்த வாயிதாக்களின்படி, தீவாந்தரத்துக்கு அனுப்பவேண்டிய கைதிகளிருந்தால் அவர்களை மெயில் ஸ்டீமர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்படுகிற வாயிதாத் தினத்துக்கு சில நாளைக்கு முன்னதாகவேயே பட்டணம் போய்ச் சேரும்படி, ஒழுங்காக அனுப்பிவிடவேண்டும். (ஜெயில் ரூல், 1000.)

கைதிகளைத் தீவாந்தரத்துக்கு அனுப்புவதில் செய்யும் நடவடிக்கை.

344. 6-வருஷத்திற்குக் குறையாமல் தீவாந்தர தண்டனையை அனுபவிக்கவேண்டிய எல்லா ஆண் கைதிகளையும், 7-வருஷங்களுக்கும் அதற்கு மேற்பட்ட காலத்துக்கும் ஷை தண்டனை விதிக்கப்பட்ட எல்லா பெண்பிள்ளைக் கைதிகளையும், மாதத்திற்கு ஒருதரம் சூப்பிரிண்டெண்டாண்டு வரிசையாக நிறுத்தியிருப்பார்கள். தீவாந்தரத்துக்கனுப்ப சாசுவதமாக லாயக்கில்லை என்று தீர்மானிக்கப்பட்டு இவ்விடத்து ஜெயிலிலேயே வைக்கும்படி கவர்ன்மெண்டார் அவர்கள் உத்தரவு செய்திருக்கிறவர்களை அப்படி நிறுத்தவேண்டியதில்லை. அப்பீல் செய்யக் காலாவதி ஆய்விடாத அல்லது அப்பீல் செய்து அப்பீல் பைசலாகாத கைதிகளை இவ்விதம் நிறுத்தவேண்டியதில்லை. தீவாந்தரத்துக்கு சாசுவதமாக அனுப்ப லாயக்கில்லாதவர்களென்று தப்பிதமாக அபிப்பிராயங் கொடுக்கப்பட்டு விட்டதாக இனிஸ்பெக்டர் ஜெனரலால் நினைக்கப்படுகிற கேசுகளில், அப்பேர்ப்பட்ட கைதிகளை அந்த அபிப்பிராயங் கொடுக்கப்பட்ட 6-மாதங்களுக்குள் பட்டணம் பெனிடென்ஷியரியில் வைத்து, கைதிகளைத் தீவாந்தரத்துக் கனுப்புவதற்காக யேர்ப்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டியாரைக்கொண்டு பரிசோதனைச்செய்யச் சொல்லப்படும். (ஜெ. ரூல், 1001.)

345. இப்படி நிறுத்தப்பட்டவர்களை மெடிகல் ஆபீஸர் பரிக்ஷித்துப் பார்த்து ஒவ்வொரு கைதியும் தீவாந்தரத்துக்கு அனுப்ப 997-வது ரூலில்கண்டபடி லாயக்கான நிலைமையிலிருக்கிறானு அல்லவாவென்ற விபரத்துக்கு ஸர்டிபிகேட்டுக் கொடுக்கவேண்டும். லாயக்கில்லையென்று தாத்பரியப்பட்டால், சாசுவதமாக லாயக்கில்லையா? அல்லது தாத்காலியமாகத் தானாவென்ற விபரத்துக்கும் ஸர்டிபிகேட்டுக் கொடுக்கவேண்டும். மேலே 999-வது ரூலில் கண்டபடி தீவாந்தரத்திற்கு அனுப்ப லாயக்கென்று சொல்லப்பட்டவனை லாயக்கில்லையென்று அபிப்பிராயப்படுவதாகயிருந்தால்விசேஷமுகாந்திரங்கள் கொடுக்கவேண்டும். இப்படி பரிக்ஷிக்கப்படாத கைதிகளை தீவாந்தரத்திற்கு அனுப்புவதற்காக சென்னைக்கு அனுப்பவேண்டாது. (ஜெயில் ரூல், 1002.)

346. அப்பால் கைதிகளை மெடிகல் ஆபீஸர் பரிக்ஷித்துப்பார்த்த விபரத்தைப்பற்றியும், அடுத்தவாயிதாவில் தீவாந்தரம் அனுப்பத தயாராயிருக்கிற ஆண், பெண் கைதிகளின் எண்ணத்தையுங் கண்டு சூப்பிரிண்டெண்டாண்டு இனிஸ்பெக்டர் ஜெனராலுக்கு ரிப்போர்ட்டுச் செய்யவேண்டும். தீவாந்தரத்துக்கு அனுப்ப லாயக்கென்று தீர்மானிக்கப்பட்ட கைதிகளை உடனே பட்டணம் அனுப்பும்படிக்கும், தற்காலத்துக்கு அல்லது சாசுவதமாக தீவாந்தரம்

அனுப்ப லாயக்கில்லையென்று தீர்மானிக்கப்பட்ட கைதிகளை அந்தந்த ஜெயிலில் வைத்துவைக்கும்படிக்கோ அல்லது வேறுவிதமாகவோ செய்யும்படிக்கு சூப்பிரிண்டெண்டாண்டுக்கு இனிஸ்பெக்டர்-ஜெனரல் உத்தரவு அனுப்புவார். (ஜெயில் ரூல்,1003.)

347. தீவாந்தரத்துக்கு அனுப்பப்படும் கைதிகள் தண்டிக்கப்பட்ட ஜில்லா ஜெயிலிலிருந்து அனுபப்படுமுன், தங்கள் சிநேகிதர்களையும் இஷ்டர்களையும் ஒருதடவல் பார்த்துப் பேசிக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட வேண்டும். (ஜெயில் ரூல், 1004.)

348. பட்டணம் பெனிடென்ஷியரியில் கைதிகள் வந்தவுடன் அவர்களை வரிசையாய் நிறுத்தி மெடிகல் ஆபீஸர் பரிக்ஷித்துப்பார்த்து மேலே 1002-வது ரூலில் கண்டபடி நடவடிக்கை நடத்துவார். (ஜெயில் ரூல், 1009.)

349. அனுப்ப லாயக்காயிருக்கிறவர்களை அடுத்த மெயில் ஸ்டீமரில் அனுப்பப்படும். (ஜெயில் ரூல், 1010.)

தீவாந்தரத்துக்கு அனுப்பப்படுங் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உடை முதலியதுகள்.

350. தீவாந்தரத்துக்கு அனுப்பப்படுகிற ஒவ்வொரு கைதிக்கும் அடியிற்கண்டபடி போர்ட் பிளேர் ஜெயிலில் தரித்துக்கொள்ளும் உடைகள் கொடுக்கப்படும். 2 அரை வேஷ்டிகள், 2 கோட்டுகள், 2 தலைகுட்டைகள், 1 காட்டுக்கம்பிளிக் கோட்டு, 2 காட்டுக்கம்பிளிகள், 1 கயிற்றினுலாவது புல்லினுலாவதுசெய்யப்பட்டபாய் அல்லதுஜமக்காளம், 1 பித்தளைத்தகட்டுபில்லை, 1 தண்ணீர் குடிக்கிற பாத்திரம். (கோப்பை) வெள்ளிப்புறத்து ஜெயிலிலிருந்து வந்த கைதிகளின் உடுப்புகள் வகையறுக்களை கைதிகொண்டுவந்த உத்தியோகஸ்தர்கள் வசம் திரும்ப அனுப்பிவிடப்படும். (ஜெயில் ரூல், 1013.)

351. தீவாந்தரத் தீர்ப்போடு அபராதமும் போடப்பட்டிருந்து, அபராதத்தில் ஒருபாகம் அல்லது பூராவும் பின்னீடு வசூலானல் போர்ட்ப்ளேர் அதிகாரிகளுக்கு அது விபரத்தைத் தெரிவிக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1014.)

## தண்ணீர்மேலேற்றுவதென்னும் தண்டனை விதிக்கப் பட்டவர்களின் தீர்ப்பை அடியிற்கண்டபடி நிறைவேற்றப்படுகிறது.

தீவாந்தர தண்டனையை நிறைவேற்றப்படும் விதம்.

352. ஆயுசுபரியந்தம் தீர்ப்புச்செய்யப்பட்ட கைதி தீவாந்தரம் போனவுடன், முதல் 6-மாதங்களுக்கு தனிக்கொட்டடியில் வைக்கப்படுகிருன். இந்தக்காலத்தில் அவன் செய்யவேண்டிய வேலை கடினமானதல்ல. ஆனல், கண்டிப்புத்தான் மிகவும் கொடூரமாயுள்ளது. அந்த ஆறுமாதங் கழிந்தவுடன், கைதிகளைச் சேர்த்து ஒன்ருகவைக்கப்படும் கொட்டடியில் 18 மாதங்களுக்கு வைக்கப்படுகிருன். இங்கே வேலைகடினமானதாயும், கண்டிப்புலேசாகவுமிருக்கும். அப்பால் மூன்று வருஷங்களுக்கு பாரக்ஸ் என்னும் (Barracks) ஜெயிலில்வைக்கப்படுகிருன். இந்தக்காலத்தில் பகல் காலங்களில் வெளியே கொண்டுபோய் வேலைவாங்கப்படுகிருன். ராக்காலங்களில்மட்டும் அடைத்துவைக்கப்படுகிருன். இந்தவேலைக்குகைதிக்கு ஏனும் ஒன்றுங்கொடுக்கப்படுகிறதில்லை. ஆனல், கைதியின் வேலைத்திறமையைத் தெரிந்துகொள்ளப்படுகிறது. அடுத்த 5-வருஷங்களுக்கு அவன் வேலை செய்கிற கைதியாகவே யிருக்கவேண்டும். அந்தக்காலத்தில் மற்றக்கைதிகள்செய்கிற வேலைகளை மேல்பார்க்கும் உத்தியோகங்களில்நியமிக்கப்படுவதற்கு லாயக்காகிவிடுகிருன். அல்லாமலும், அவன் லேசாக உள்ள வேலைகளை மட்டுந்தான் செய்யவேண்டியது. அப்போது அவனுக்கு வேண்டுவதை வாங்கிக்கொள்ளவாவது, அல்லது கைதிகளுக்கென்றேவைக்கப்பட்டிருக்கிற ஸேவிங்ஸ்பாங்கில் போட்டு மீதம் வைத்துக்கொள்ளவாவதுசெய்யும்பொருட்டு, அப்போதைக்கப்போதுகொஞ்சம்பணம் கொடுக்கப்படுகிறது. தண்டனையில் 10 வருஷங்கழிந்துவிட்டால், தானே வேலைசெய்து பிழைத்துக்கொள்ளும்படி அவனுக்கு அனுமதி கிடைக்கக்கூடும். இப்பேர்ப்பட்ட நிலைமையில், அவன் ஒரு கிராமத்தில் போய் தன் காலக்ஷேபத்திற்குச் சம்பாதித்துக்கொள்ளுகிருன். அவன் பயிரிடலாம். ஆடுமாடு வைத்துக்கொள்ளலாம். கல்லியாணஞ் செய்துகொள்ளவாவது அல்லது தன் ஸம்ஸாரத்தைத் தருவித்துக்கொள்ளவாவது செய்யலாம். ஆனல் அவனுக்குச் சுயாதீனம் கிடையாது. அந்தக்குடியேற்றத்தை விட்டுப்போகவாவது, சோம்பேரித்தனமாக யிருக்கவாவது கூடாது.



தீவாந்தரத்திற்கனுப்பப்பட்ட 10-வருஷங்களுக்குப் பின் கைதியின் நிலைமை.

353. மேலே 119, 122-வது விஷயங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஜெ. ரூல், 418, 420-ன்படி, 20 வருஷமோ 25 வருஷமோ இந்தக்குடியேற்ற நாட்டிலிருந்து தீர்ந்தபிறகு, அவனைப் பூராவும் விடுதலை செய்யப்படும். தானகச் சம்பாதித்துக் காலக்ஷேபஞ்செய்ய ஆரம்பித்தவுடன் அவனுக்கு வீடு, சாப்பாடு, வேலை செய்வதற்குவேண்டிய கருவிகள், முதலியதுகொடுத்து உதவி செய்யப்படும். அவன் சர்க்காருக்குத் தீர்வை முதலியது யாதொன்றுஞ் செலுத்தவேண்டியதில்லை. அப்பால், மூன்று வருஷங்களுக்கு மேல், நாலு வருஷங்களுக்குள் அவனுக்குச் செய்துவந்த உதவிகளை நிறுத்திவிடப்படும். அவன் சுயாதீனத்துடனிருந்தால் எப்படித்தீர்வை செலுத்துவானே அப்படி தீர்வைகளை யெல்லாஞ் செலுத்தவேண்டும்.

ஆயுசுபரியந்தந் தண்டிக்கப்பட்ட பெண்பிள்ளைக் கைதிகளின் தண்டனை நிறைவேற்றப்படும் விதம்.

354. ஆயுசுபரியந்தம் தண்டிக்கப்பட்டபெண்பிள்ளைக்கைதிகள் விஷயத்தில் அநேகமாதிரியான ஏற்பாடுகள்செய்யப்பட்டிருந்தாலும், மிகவும் லேசான விதத்தில் நடத்தப்படுகிருர்கள். அவர்கள் ஜெயிலுக்குள்ளிருக்கிறவர்களென்றும், ஜெயிலுக்கு வெளியிலிருக்கிறவர்களென்றும் 2 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்கள், அனுமதியின்பேரில் ஒருவீட்டில் வேலைக்கு அமர்ந்துகொள்ளலாம், அல்லது கல்லியாணஞ் செய்துகொண்டு புருஷனுடனிருக்கலாம். இவ்விதஞ் செய்யாத ஒவ்வொரு பெண்பிள்ளைக் கைதியும் பெண்பிள்ளை ஜெயிலுக்குள் வைக்கப்படுவாள். இந்தக்குடியேறின நாட்டிற்குப்போய் 5 வருஷமிருந்தபின்பு ஒவ்வொரு பெண்கைதியும் கல்லியாணஞ் செய்துகொள்ளலாம். கல்லியாணஞ் செய்துகொண்டுவிட்டால், 15 வருஷங்களுக்குப் பிற்பாடு தன் புருஷனேடு அந்த நாட்டைவிட்டுப் போய்விடலாம். கல்லியாணஞ் செய்துகொண்ட புருஷன்பெண்சாதி இவர்களில் யாருடைய தண்டனைக்காலம் கடாசியில்முடிகிறதோ, அதுவரை ஒருவர் மற்றொருவருக்காகக் காத்திருந்து இரெண்டுபேரும் ஒன்ருகத்தான் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகவேண்டும். அவ்விடத்தில் கல்லியாணஞ் செய்துகொள்ளாத பெண்பிள்ளைகள் அங்கே 20 வருஷமிருக்கவேண்டும். ஆண்பிள்ளைக் கைதிகள் எப்படியோ அப்படியே பெண்பிள்ளைக்கைதிகளும், ஜெயிலில் கைதி வகுப்பில்படிப்படியாய் மேல்போய் கைதி உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படலாம்.

கள் விடுதலையானபிறகு அவ்விடத்திலேயே யிருந்துவிடுகிறவர்களின் ஸந்ததியாரும் தான் அவ்விடத்திலிருக்குங் குடிகள்.

358. **பாஷை:**—இந்தியாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் அநேகவிதமான பற்பல பாஷைகளைப்பேசும் ஜனங்கள் அவ்விடத்தில் போய் குடியேறியிருக்கிறபடியால் அவ்விடத்திலுள்ள ஜனங்களுடைய சுய பாஷையும் பற்பல வகுப்பா யிருக்கின்றன. ஆனால் அந்தக்குடியேற்ற நாட்டின் சுய பாஷையானது, உர்டு என்னும் பாஷையாக யிருக்கிறது. இந்தப்பாஷையைத் தோன்றினபடி மிகவும் கொச்சையாகவும், தோன்றின உச்சரிப்புடனும் பேசுகிறார்கள். அங்கே அனுப்பப்பட்ட கைதிகள் எல்லோரும் இந்தப்பாஷையைத்தான் கற்றுக்கொள்ளுகிறார்கள். எந்த ஜாதியில் பிறந்தவர்களாக யிருந்தாலுமே அவ்விடத்திற் பிறந்தவர்களுக்கு அதே, சுயபாஷையாகயிருக்கிறது. அது துலுக்கர்கள் பேசும் ஹிந்துஸ்தானி போலுள்ளபாஷை.

359. **படிப்பு:**—இந்தக்குடியேற்ற நாட்டிலேயேபிறந்தவர்கள், படிப்பு விஷயத்தில், ஸாதாரணமாக இந்தியாவிலுள்ள ஜனங்களைப் பார்க்கிலும்நல்ல ஸ்திதியிலிருக்கிறார்கள். ஏனென்றால், தானே சம்பாதித்துக் காலக்ஷேபஞ் செய்துகொள்ளும்படிக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறவர்களுடைய குழந்தைகளுக்கெல்லாம், படிப்புக்கட்டாயமானதாக யேர்ப்படுத்தப்பட்டிருக்கிறது. பெண் குழந்தைகள் 10 வயதாகும் வரையிலும், ஆண் 14-வயது வரையிலும் படித்துத்தான் தீரவேண்டும். அங்கே யிருக்கும் மற்றச்சுயாதீனக் குடிகளுடைய குழந்தைகளையும், அவ்விடத்திலேயே பிறந்த கைதிகளின் குழந்தைகளையும், தாராளமாய் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள். சுயதேசப்பாஷையைப்படிக்கவும் எழுதவுந்தெரியாத குழந்தைகளே கிடையாது. அவர்களில் அநேகர் ஸர்க்காரில்குமாஸ்தா வேலைகொடுப்பதற்கு லாயக்காக இங்கிலீஷிலுந் தேர்ந்திருக்கிறார்கள்.

## தீவாந்தர தண்டனையை நிறைவேற்றப்படும் இடமாகிய ஆண்டமன் தீவிலுள்ள, ப்ளேர் துறைமுகத்தைக் குறித்த விஷயங்கள்

360. **பூகோளம்:**—ப்ளேர் துறைமுகம் (Port Blair) என்னும் இடமாகிய, தீவாந்தர தண்டனையை நிறைவேற்றப்படும் இடமானது, தென் ஆண்டமான் தீவையும் அதைச்சேர்ந்த தீவுகளையும் அடக்கிக்கொண்டிருக்கிறது. அதின் விஸ்தீரணம் 473-சதுரமயில். இந்த விஸ்தீரணத்தில் 327-சதுரமயிலில் குடியேறப்பட்டிருக்கிறது.

361. **குடியேறப்பட்டிருக்கிற இடமும்குடியேறப்படாமலிருக்கிற இடமும்:**—குடியேறப்படாமலிருக்கும் இடமானது மனிதரே நுழையக்கூடாதபடிக்குள்ள அடர்ந்த காடாகயிருக்கிறது. காடாகயிருந்தஇடங்களைத்தான் வியவஸாயத்திற்காகவும், ஆடுமாடுகளுக்குமேய்ச்சல் தரைக்காவும், குடியிருப்புக்காகவும் திருத்தப்பட்டிருக்கிறது. சில இடங்களை கையாட்சியிலிருக்கிற காடுகளாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

362. **கடல்கறைகள்:**—கீழ்பக்கத்தில், மெடோஸ் துறைமுகம், (Port Meadows) ப்ளேர் துறை முகம் (Port Blair)இவைகளும், தெற்குக்கரையில், மாக்பர் ஸன்ஸ்ட்ரெயிட்டும் (Macpherson's strait) மேல்கரையில்



மௌவாட்துறைமுகம் (Port Mouat) காம்பெல் துறைமுகம் (Port Campbell ஆன்ஸன் துறைமுகமும் (Port Anson) இவைகளிருக்கின்றன. இவைகளில் எந்தத்துறை முகத்திலும் எந்தக்காலத்திலும் எப்பேர்ப்பட்ட கப்பல்களையும் நிறுத்தி நிர்ணயமாகவும் அபாயமில்லாமலும் வியாபாரங்களை நடத்தலாம்.

படகுகள் முதலியவைகளை நிறுத்திக்கொண்டு வியாபாரம் செய்வதற்குறிய துறைமுகங்களு மிருக்கிறன.

363. **காடுகள்:**—காடுகளுக்கு ஸமீபமான இடங்களிலேயே துறைமுகங்களிருக்கிறபடியால் காட்டு விளைவுகள் சம்மந்தமான வியாபாரங்கள் மிகவும் சௌகரியமாக நடத்தப்படுகிறது.

364. **குன்றுகள்:**—தீவுமுழுவதும் குன்றுகளும் பள்ளத்தாக்குகளுமாகவேயே நிறைந்திருக்கிறது.

365. **ஜலம்:**—நதிகளென்று சொல்லக்கூடிய நீரோட்டம் கிடையாது. குடிதண்ணீர் கிணறுகளிலே லேசாகக்கிடைக்கிறது. மானுமாரிக்குளங்களும் அநேகமுண்டு. மழை அநேக மாதங்களில் ஜாஸ்தியாகப்பெய்யும்.

## அரசாட்சி விஷயம்.

366. ஆண்டமன், நெக்கபார் இந்தத்தீவுகள் இரெண்டும், சீப் கம்மிஷனர் (Chief Commissioner) என்று உத்தியோகப்பெயர் வகித்த ஒருவரால் ஆளுகை செய்யப்பட்டுவருகிறது. இவர்தான் போர்ட்ப்ளேரி (Port Blair) விருக்கிற ஜெயிலுக்கும் சூப்பிரிண்டெண்டாண்டாகயிருக்கிறார். இவருக்குக் கீழ் ஒரு டிப்டி சூப்பிரிண்டெண்டாண்டும், உதவிச் சூப்பிரிண்டெண்டாண்டுகளும், ஓவர்சியர்களும், ஸப் ஓவர்சியர்களுமிருக்கிறார்கள். இந்தஉத்தியோகஸ்தர்களெல்லாம் அநேகமாக ஐரோப்பியர்கள்தான். ஸப் ஓவர்சியர்கள்மட்டும் இந்தியாதேசத்துச்சுதேசிகள். அல்பச்சங்கதிகளைமேல்பார்ப்பதற்கு கைதிகளிலேயே சிலரை உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறது. ஜெயில் இலாகாவைத்தவிர இன்னும் அநேக இலாகாக் (Department) களு மிருக்கின்றன. போலீஸ், மெடிகல் (வைத்தியம்) காரியக்காரர்ஸபை (Commissariat) காட்டிலாகா, தேயிலை, சமுத்திரலாகா (Marine) முதலியதுகளு மிருக்கின்றன.

367. **இராஜாங்கம் நடக்குமிடம்:**—ப்ளேர் துறை முகத்துக்குப் பக்கத்தில் கால் சதுர மைல் விஸ்தீரணமுள்ள ராஸ்தீவு (Ross Island) என்னுமிடத்தில் தான் ஆபீசுகளிருக்கின்றன.

368. **பிரிவுகள்:**—அரசாட்சி விஷயங்களுக்காக இதை 2 ஜில்லாக்களாகவும், 6-உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அவ்விடத்திலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், கைதிகளுக்கும் வேண்டிய எல்லாச்சாமான்களையும் சவுதரித்துக்கொடுக்கவேண்டியது காரியக்காரச்சபையாரின் வேலையாகயிருக்கிறது. ஸிவில், கிரிமினல் கேசுகள் விசாரிக்க பற்பல வகுப்புள்ள அநேகம் கோர்ட்டுகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக்கோர்ட்டுத் தீர்மானங்களின்பேரில் அப்பீல் அதிகாரமுடையவர்கள், சீப் கம்மிஷனரும், டிப்டி கம்மிஷனருந்தான். சீப் கம்மிஷனர் தான் பிரதானமான ரிவினியூ அதிகாரியாகவுமிருக்கிறார். 140 வெள்ளைக்கார சிப்பாய்களும், 300 இந்திய சிப்பாய்களும் அடங்கிய பட்டாளமும் அங்கே யிருக்கிறது. போலீசு உத்தியோகஸ்தர்களே இராணுவ பட்டாளத்

தைப்போலவேயே தர்ப்பித்துச் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட போலீசுக்காரர்களில் 8 ம் 43 பேர்களிருக்கிறார்கள்.

4 ஜில்லா ஆஸ்பத்திரிகளும், 3 ஜெயில் ஆஸ்பத்திரிகளு மிருக்கின்றன. எல்லா ஜனங்களுக்கும் ஆஸ்பத்திரியில் ஏனுமாகவே மருந்து முதலியதுகள் கொடுக்கப்படுகிறது.

369. ஜனத்தொகையின்விபரம் :—இந்தத் தண்டனைக்குடியேற்றநாட்டில், தண்டனைக் கைதிகளும், அவர்களைப் பந்தோபஸ்துச் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களும், அவர்களை மேல்பார்த்து வரும் உத்தியோகஸ்தர்களும், குமாஸ்தாக்களும், அந்தந்த இலாகாவைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களும், இந்த உத்தியோகஸ்தர்களைச் சேர்ந்த ஸம்ஸாரங்களும் வஸிக்கிறார்கள். முன் தண்டனைப்பட்டு விடுதலையானவர்களும், வியாபாரத்திற்காகப் போயிருப்பவர்களும் அவர்களைச்சேர்ந்த ஸம்ஸாரங்களு மிருக்கிறார்கள்.

மேலேகண்ட சங்கதிகளெல்லாம் 1901-ம் வருஷத்திலிருந்த சங்கதிகள். இப்போது ஏறக்குறைய அப்படியே யிருக்கலாம்.

370. ஸ்டேஷன்களும் கிராமங்களும் :—உட்பிரிவுகளுக்குள் ஸ்டேஷன்களிருக்கின்றன. இந்தஸ்டேஷன்களில் தான் வேலைசெய்கிற கைதிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கிராமங்களில், கைதிகளில்லாதவர்களும் கைதிகளில் அனுமதிபெற்றுத் தானே வேலைசெய்வதனால் காலக்ஷேபஞ்செய்கிறவர்களும் வஸிக்கிறார்கள்.

371. சுயேச்சையா யிருப்பவர்களும், கைதிகளும் :—இந்தக்குடியேறின நாடு, சுயேச்சையாக யிருப்பவர்களிருக்குமிடமென்றும், கைதிகள்வஸிக்குமிடமென்றும் இரெண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, சுயேச்சையுடன் கிராமங்களில் வஸிப்பவர்களைத், தாங்களே வேலை செய்துசம்பாத்தியம் பண்ணிப் பிழைத்துக்கொள்ளும்படிக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற கைதிகள், கிராமங்களில் வஸிப்பவர்களைவிட்டுப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இருவகுப்பாரும் ஒருவருக்கொருவர் அனுவசியமாகத் தகவல் வைத்துக்கொள்ளாமலிருப்பதற்கு வேண்டும் யேர்ப்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. ராஸ், (Ross) அபெர்டீன், (Aberdeen) ஹாட்டோ,(Haddo) காராச்செராமா, (Gara Cherama) என்னும் உள் வகுப்புகளிலுள்ள கிராமங்களில் சுயாதீனத்துடனிருப்பவர்களும், வைபர், (Viper) விம்பர் லேகஞ்ஜ்(Wimberley Ganj) டென்னும் உட்பிரிவுகளில், கைதிகள் சம்பாத்தியஞ்செய்து பிழைக்கிறவர்களும் வஸிக்கிறார்கள். ராஸ் என்னும் உட்பிரிவில், 2 கிராமங்களும், ஹாட்டோவென்னும் உட்பிரிவில், 8 கிராமங்களும், காராச்செராமாவென்னும் உட்பிரிவில், 18 கிராமங்களும், வைபர் என்னும் உட்பிரிவில், 12 கிராமங்களும், விம்பர்லெகன்ஜ் என்னும் உட்பிரிவில், 14 கிராமங்களுமிருக்கிறன்றன. இவ்விதமாக உட்பிரிவுகளில், சுயாதீனத்துடனிருப்பவர்கள் வஸிக்கும் கிராமங்கள் 28 என்றும், தானே வேலை செய்து பிழைத்துக்கொள்ளும்படிக்கு அனுமதி கொடுக்கப்பட்ட கைதிகள் வஸிக்கும் கிராமங்கள் 26 என்றும் துலங்குகிறது.

372. போக்குவரத்துக்கு சௌகரியங்கள் :—துறை முகப்பக்கத்தில், போக்குவரத்து தண்ணீர் மூலமாகவும், தரைவழியாகவுமிருக்கிறது. போக்குவரத்துச்சௌகரியம் இங்கே யிருக்கிறதுபோல் எங்குமிராது. தண்ணீர்



வழியாகப்போவதற்கு 8 பெரிய புகைப்படகுகளும், 2 சிறு புகைப்படகுகளும் (Steam Launches) ஏராளமான தோணிகளும், படகுகளும், உருக்களு மிருக்கின்றன. இவைகளில் அந்தக்குடியேறின நாட்டுக்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போகலாமே யல்லது அதைவிட்டு வெளியூர்களுக்குப்போக முடியாது. இதைத்தவிர நல்ல ரோட்டுகளும், டிராம் வண்டிகளு மிருக்கின்றன. குதிரைபோட்டிழுக்கிற டிராம் வண்டிகளும், புகை டிராம் வண்டிகளு மிருக்கின்றன. ரோட்டுகளில் அநேகமிருக்கிறன, எப்பொழுதும் கைதிகளை விட்டு கல், சரல் இவைகள் போட்டு வேலைசெய்துகொண்டே யிருக்கிறபடியால் ரோட்டுகள் மிகவும் நல்ல நிலமையிலிருக்கின்றன. இந்தியாவிலுள்ள எந்த ஜில்லாவிலும் இப்பேர்ப்பட்ட நல்ல ரோட்டுக்களிருக்கவேமாட்டாது. உட்பிரிவிலுள்ள கிராமங்களில், தானே சம்பாதித்துப் பிழைத்துக் கொள்ளும்படிக்கு உத்திரவு கொடுத்தனுப்பப்பட்ட கைதிகள் வஸிக்கிறபடியால், ஏதும் சங்கதிகளைப்பற்றி அவர்களிருக்கும் கிராமங்களுக்குத் திடீரென்று நினைத்தவுடன் போகவேண்டியிருக்குமென்பதையுத்தேசித்து ரஸ்தாக்கள் இவ்வளவு நல்ல ஸ்திதியில் வைக்கப்பட்டிருக்கின்றன. கல்லும் சரலும் போட்டிருக்கிற ரஸ்தா 50-மைல் தூரமிருக்கிறது.

373. தண்டனைக் குடியேற்றநாட்டின் ஜனத்தொகை கம்பி ஜாஸ்திக் கணக்கு.

1874 - 1901.

சுயாதீனத்துடனிருக்கிற ஜனங்களின் தொகை.

| வருஷம். | அரசாட்சி விபத்திகள். | | | | | சுயாதீனத்துடனிருக்கிற ஜனங்களுடையவும், நிபந்தனைகளின் பேரில் விடுதலைசெய்யப்பட்டிருப்பவர்களுடையவும் ஜனத்தொகை. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கொலை. | ராஜ துவேஷம். | கடல் சம்மந்தம். | [illegible] | மொத்தம். | ஆண். | பெண். | மொத்தம். |
| 1874 | 50 | 426 | 19 | 330 | 825 | 466 | 372 | 838 |
| 1881 | 45 | 336 | 19 | 736 | 1,136 | 941 | 669 | 1,610 |
| 1891 | 85 | 460 | 39 | 541 | 1,125 | 1,357 | 1,340 | 2,697 |
| 1901 | 100 | 466 | 70 | 532 | 1,168 | 1,623 | 1,368 | 2,991 |

374. தண்டனைக் குடியேற்ற நாட்டின் ஜனத்தொகை கம்மி ஜாஸ்திக் கணக்கு

1874 - 1901.

| வருஷம். | தண்டனைப்பட்டவர்களின் ஜனத்தொகை. | | | மொத்த ஜனத்தொகை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வயதானவர்கள். | | குழந்தைகள். | | மொத்தம். |
| | ஆண். | பெண். | மொத்தம். | ஆண். | பெண். | ஆண். | பெண். | |
| 1874 | 6,733 | 836 | 7,569 | 7,654 | 907 | 370 | 301 | 9,232 |
| 1881 | 10,325 | 1,127 | 11,452 | 11,766 | 1,329 | 636 | 467 | 14,198 |
| 1891 | 10,874 | 864 | 11,738 | 12,532 | 1,439 | 824 | 765 | 15,560 |
| 1901 | 11,217 | 730 | 11,947 | 13,285 | 1,477 | 773 | 621 | 16,106 |

375. இந்த கணக்குகள் அர்த்தமாகும்பொருட்டு அடியிற்கண்டபடி விவரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலே கண்ட இரண்டு ஸ்டேட்டுமெண்டுகளில், 2-வது கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்டுமெண்டில் 1901-ம் வருஷத்திலிருந்த மொத்த ஜனத்தொகையில் வயதுவந்த ஆண்பிள்ளைகள் 13,235 - பேர்களிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைக் கண்டுபிடிப்பதின் வழி:—முதலாவது ஸ்டேட்டுமெண்டில் கண்ட உத்தியோகஸ்த ஆண்பிள்ளைகள் 1,168, சுவாதீனத்துடனிருக்கிற ஆண்பிள்ளைகள் 1,623, இந்த இரண்டு தொகைகளையும் 2 - வது ஸ்டேட்டுமெண்டின் 1 - வது கலத்தில் கண்ட ஆண்பிள்ளைக்கைதிகளின் தொகை 11,217, இதையும் கூட்டி, 2 - வது ஸ்டேட்டுமெண்டில் கண்ட ஆண்குழந்தைகளின் மொத்தத்தொகை 773 - ஐக் கழித்துவிட்டால், 2 - வது ஸ்டேட்டுமெண்டில் கண்டபடி வயதுவந்த ஆண்பிள்ளைகளின் மொத்தம் 13235-வந்துவிடும்.

```
          1,168              14,008
          1,623                 773
கூட்ட.   11,217    கழிக்க.  ------
         ------              13,235
         14,008              ------
         ------
```

வயதுவந்த பெண்பிள்ளைகளின் மொத்தம் 1477-சரியாவென்று பார்க்க 1 - வது ஸ்டேட்டுமெண்டில் காட்டிய சுயாதீனப் பெண்பிள்ளைகள் 1368, 2-வது ஸ்டேட்டுமெண்டில் காட்டிய கைதிப் பெண்பிள்ளைகள் 730 — இது



இரண்டையும் கூட்டி. 2-வது ஸ்டேட்டுமெண்டில் கண்ட கைதி பெண்பிள்ளைக்குழந்தைகள் 621—ஐக் கழித்துவிடவேண்டும். 2-வது ஸ்டேட்டுமெண்டில் கண்டபடி வயதுவந்த பெண்பிள்ளைக்கைதிகளின் எண்ணம் 1477-வந்துவிடும்.

```
          1368              2098
           730               621
கூட்ட.    ----    கழிக்க.   ----
          2098              1477
          ----              ----
```

மொத்தம் ஜனத்தொகை 16,106—கண்டுபிடிக்க.

1-வது ஸ்டேட்டுமெண்டில் கண்டபடி உத்தியோகஸ்தர்களின் மொத்த எண்ணம் 1168, சுயாதீனத்துடனிருக்கிற ஜனங்களின் மொத்த எண்ணம் 2991, 2-வது ஸ்டேட்டுமெண்டில் கண்டபடி கைதிகளின் மொத்த எண்ணம் 11,947, இவ்வளவையும் கூட்டினால் 16,106-வந்துவிடும்.

```
          1168
          2991
கூட்ட.  11,947
        ------
        16,106
        ------
```

தண்டனைக் குடியேற்ற நாட்டின் வரவு, செலவுக் கம்மி ஜாஸ்திக் கணக்கு.

| | 1874 | 1881 | 1891 | 1901 |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| மொத்த வரவு. | 2,71,895 | 3,26,035 | 4,83,153 | 5,70,997 |
| மொத்தச் செலவு. | 10,89,321 | 14,96,513 | 12,87,308 | 17,34,265 |
| குடியேற்ற நாட்டினால் கைப்பொறுப்புத்தொகை. | 8,17,426 | 11,70,478 | 8,04,155 | 11,63,268 |
| ஒவ்வொரு கைதிக்கும் வருஷத்தில், செலவாகும் தொகை. | 105·60 | 97·19 | 69·89 | 99·28 |

போர்ட் ப்ளேர் (Port Blair) தண்டனைக் குடியேற்ற நாட்டில் 1901-ம் வருஷத்தில் தானுகச் சம்புரத்தியஞ்செய்து காலக்ஷேபஞ்செய்துவந்த கைதிகளின் இருப்பிடங்களினுடையவும், எண்ணிக்கையினுடையவும் விபர ஜாப்தா.

| பாபத்து. உள் பாபத்து. | வயது வந்தவர்கள். ஆண். | வயது வந்தவர்கள். பெண். | குழந்தைகள். ஆண். | குழந்தைகள். பெண். |
|---|---|---|---|---|
| ஷெடியூல் (தபசில்) A. கிராமங்கள். வடஜில்லா. | | | | |
| (1) பாம்பு பிளாட் (Bamboo Flat) ... | 81 | 21 | 10 | 18 |
| (2) ஸ்டுவார்ட் கஞ்ஜ் (Stewart Ganj) ... | 59 | 20 | 13 | 4 |
| (2) விம்பர்லே கஞ்ஜ் (Wimberley Ganj) ... | 69 | 22 | 24 | 4 |
| (4) கடக் காச்சாங் (Kadakachang) ... | 30 | 11 | 7 | 5 |
| (5) மத்ரா (Mathra) ... | 17 | 1 | 2 | ... |
| (6) அனிகெட் (Anikhet) ... | 149 | 36 | 9 | 20 |
| (7) பிந்தராபன் (Bindraban) ... | 59 | 14 | 14 | 8 |
| (8) ஜங்கிலி காட் (Jangli Ghat) | 4 | ... | ... | ... |
| (9) அபர்டீன் (Aberdeen) ... | 41 | 6 | 4 | 5 |
| (10) தென் முனை (South Point). | 21 | 7 | 1 | 6 |
| (11) டட்லைன் (Dudh Line) ... | 1 | ... | ... | ... |
| | 531 | 138 | 84 | 70 |

| பாபத்து. உள் பாபத்து. | வயது வந்தவர்கள். ஆண். | வயது வந்தவர்கள். பெண். | குழந்தைகள். ஆண். | குழந்தைகள். பெண். |
|---|---|---|---|---|
| ஷெடியூல் A. கிராமங்கள். தென்ஜில்லா. | | | | |
| (1) லம்பா லைன் (Lamba Line). | 7 | 1 | 3 | 3 |
| (2) ஆஸ்டெனா பாட் (Austena bad) ... | 2 | 1 | 2 | 1 |
| (3) ப்ரோதெரோ போர் (Protheroepore) ... | 7 | 2 | 1 | 1 |
| (4) பாஹர் கான் (Pahargaon). | 2 | ... | ... | ... |
| (5) ஸ்கூல் லைன் (School Line). | 3 | 1 | ... | ... |
| (6) காரச்செராமா (Garachcrama) | 12 | 4 | 2 | 2 |
| (7) பெர்ச் கஞ்ஜ் (Berch Ganj). | 1 | ... | ... | ... |
| (8) பும்லிடான் (Bumlitan) ... | 33 | 4 | 1 | ... |
| (9) டேலரபாட் (Taylerabad). | 18 | 2 | 1 | 1 |
| (10) பாகேல் சிங்புரா (Bhagel-singpura) ... | 29 | 2 | 2 | 2 |
| (11) மங்க்ளுடன் (Manglutan). | 36 | 11 | 6 | 7 |
| (12) ஹாம்ப்ரே கஞ்ஜ் (Homfray Ganj) ... | 27 | 5 | 6 | 5 |
| (13) தாணிக்காரி (Dhani khari). | 38 | 9 | 3 | 4 |



| பாபத்து. உள் பாபத்து. | வயது வந்தவர்கள். ஆண். | வயது வந்தவர்கள். பெண். | குழந்தைகள். ஆண். | குழந்தைகள். பெண். |
|---|---|---|---|---|
| ஷெடியூல் (தபசில்) B. ஸ்டேஷன்கள். வடஜில்லா. | | | | |
| (1) ராஸ் (Ross) ... | 92 | 9 | ... | ... |
| (2) சேதாம் (Chatham) ... | 10 | ... | ... | ... |
| (3) ஹோப் டௌன் (Hope Town) ... | ... | .. | ... | ... |
| (4) பாம்பு ப்ளாட் (Bamboo Flat) ... | 3 | 1 | 1 | ... |
| (5) வடகுடா (North Bay) ... | ... | .. | ... | ... |
| (6) ஸ்டெவார்ட் கஞ்ஜ் (Stewart Ganj) ... | 1 | ... | ... | ... |
| (7) விம்பர்லே கஞ்ஜ் Wimberley Ganj) ... | 37 | 1 | ... | ... |
| (8) அனிகெட் Anikhet / மத்ரா Mathra ... | 34 | ... | ... | ... |
| (9) போனுக்ஸ்பே (Phanix Bay) | 25 | ... | ... | ... |
| (10) ஹாட்டோ (Haddo) ... | 22 | ... | ... | ... |
| (11) அபெர்டீன் (Aberdeen) ... | 31 | 6 | ... | ... |
| (12) மௌண்ட் ஹரியெட் (Mount Harriett) ... | 7 | ... | ... | ... |
| (13) தென்முனை (South Pout). | ... | ... | ... | ... |
| | 262 | 17 | 1 | ... |

| பாபத்து. உள் பாபத்து. | வயது வந்தவர்கள். ஆண். | வயது வந்தவர்கள். பெண். | குழந்தைகள். ஆண். | குழந்தைகள். பெண். |
|---|---|---|---|---|
| (14) சால்தாரி (Chauldhari)... | 59 | 16 | 13 | 10 |
| (15) மௌவாட் துறைமுகம் (Port Mouat) ... | 44 | 15 | 4 | 5 |
| (16) ஆக்ராபாரேஜ் (Ogra baraij) | 59 | 16 | 4 | 5 |
| (17) மிதகாரி (Mitha Khari) ... | 73 | 15 | 12 | 13 |
| (18) ஹாப்டேபூர் (Hobdaypur). | 55 | 13 | 10 | 11 |
| (19) மான்பூர் (Manpur) ... | 51 | 10 | 3 | 6 |
| (20) டுசோனபாட் (Tusonabad). | 74 | 19 | 13 | 12 |
| (21) காடெல்கஞ்ஜ் (Cadell Ganj) | 101 | 22 | 20 | 10 |
| (22) நாமூனகர் (Namunaghar). | 65 | 22 | 24 | 21 |
| (23) டெம்பிள் கஞ்ஜ் (Temple Ganj) ... | 126 | 3 | ... | ... |
| | 922 | 193 | 130 | 119 |
| ஷெடியூல் B. ஸ்டேஷன்கள். தென்ஜில்லா. | | | | |
| (1) வைபர் (Viper) ... | 12 | 1 | ... | ... |
| (2) தேயிலைத்தோட்டம், நேவிபே (Tee Garden, Navy Bay) | 41 | ... | ... | ... |
| (3) காராச்செராமா (Gara cherama) ... | ... | ... | ... | ... |
| (4) பும்லிட்டன் (Bumlitan) ... | ... | ... | ... | ... |
| | 53 | 1 | ... | ... |

போர்ட் ப்ளேரில் 1901-ம் வருஷத்தில் தானகச் சம்பாதித்துக் காலக்ஷேபஞ் செய்துவந்த கைதிகளின் வேலைகளின் விவர ஜாப்தா.

| பாபத்து. | வடஜில்லா. | | | தென்ஜில்லா. | | |
|---|---|---|---|---|---|---|
| உள் பாபத்து. | தானகச் சம்பாதித்துக் காலக்ஷேபஞ் செய்கிற ஆண்பிள்ளைகள். | பெண்சாதிகள். | குழந்தைகள். | தானகச் சம்பாதித்துக் காலக்ஷேபஞ் செய்கிற ஆண்பிள்ளைகள். | பெண்சாதிகள். | குழந்தைகள். |
| (1) பயிரிடுகிறவர்கள் ... | 336 | 102 | 114 | 781 | 152 | 201 |
| (2) வான்க்காரர்கள் ... | ... | ... | ... | 4 | 1 | ... |
| (3) தச்சுவேலை செய்பவர்கள். | 2 | 1 | 2 | 3 | 1 | ... |
| (4) சில்லரைக்குத்தகை எடுப்பவர்கள் ... | 14 | 3 | 3 | 1 | ... | ... |
| (5) கொல்வேலை செய்பவர்கள் ... | 2 | 1 | ... | 2 | 1 | 2 |
| (6) தகரவேலை செய்பவர்கள். | 1 | .. | ... | 3 | 1 | ... |
| (7) குயவர்கள் ... | 1 | ... | ... | 1 | 1 | 1 |
| (8) தையல்காரர்கள் ... | 4 | 1 | 1 | 3 | ... | ... |
| (9) மொச்சிவேலை செய்பவர்கள் ... | 4 | 1 | 1 | 2 | .. | ... |
| (10) ஆடுமாடு வளர்த்து விற்று ஜீவனஞ் செய்பவர்கள். | 3 | ... | ... | ... | ... | ... |
| (11) பால் விற்பவர்கள் | 31 | 1 | 5 | 17 | 2 | 2 |
| (12) கோழி விற்கிறவர்கள் ... | 4 | 1 | ... | 10 | ... | ... |
| (13) கசாப்புக்காரர்கள் ... | 3 | 2 | ... | 1 | ... | ... |
| (14) மீன் பிடிக்கிறவர்கள் ... | 16 | 5 | 4 | 6 | ... | ... |
| (15) பணியர்கள் ... | 6 | 1 | 1 | 16 | 1 | 2 |
| (16) கடைவியாபாரஞ் செய்கிறவர்கள் ... | ... | ... | ... | 23 | 7 | 12 |
| (17) அலுவல்களில் அமர்ந்திருப்பவர்கள் .. | | | | | | |
| (a) ரைக்கார் வேலை ... | 209 | 9 | 9 | 48 | 13 | 14 |
| (b) குடித்தனக்காரர்களுக்குள் வேலை ... | 136 | 6 | 7 | 9 | 1 | ... |
| (c) தானகச் சம்பாதித்துக் காலக்ஷேபஞ் செய்பவர்களுக்குள் வேலை. | 6 | ... | ... | 15 | ... | ... |
| (d) ஆயா வேலை செய்கிறவர்கள் ... | ... | 17 | 1 | ... | 3 | ... |
| (18) சமயல்வேலை செய்பவர்கள் | ... | ... | ... | 2 | ... | ... |
| (19) தணி வெளுக்கிற வேலை செய்பவர்கள் ... | 6 | 2 | 4 | 9 | 2 | ... |
| (20) க்ஷவரவேலை செய்கிறவர்கள் ... | 6 | 2 | 3 | 14 | 6 | 14 |
| (21) தாப்புவேலை செய்பவர்கள் | 3 | .. | ... | 5 | 2 | 1 |
| | 793 | 155 | 155 | 975 | 194 | 249 |



376. தானகச் சம்பாத்தியஞ்செய்து காலக்ஷேபஞ்செய்கிற கைதிகளின் கணக்கு.

| | வயது வந்தவர்கள். | | குழந்தைகள். | |
|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | ஆண். | பெண் |
| இராமாந்தரங்களிலிருக்கும், தானகச் சம்பாதித்துக் காலக்ஷேபஞ் செய்யும் கைதிகள். | 1,453 | 331 | 214 | 189 |
| ஸ்டேஷன்களிலிருக்கும், தானகச் சம்பாதித்து காலக்ஷேபஞ் செய்யும் கைதிகள்... | 315 | 18 | 1 | ... |
| | 1,768 | 349 | 215 | 189 |

இந்தக் கணக்கினால் 1,768-ஆண்பிள்ளைகளுக்கு 349 - பெண்பிள்ளைகளும், 404-குழந்தைகளுந்தானிருக்கிறார்களென்று அறிகிறோம்.

377. இந்தத் தண்டனைக் குடியேற்ற நாட்டில், காடுகளாக யிருந், இடத்தை, 24, 708-ஏக்கர் விஸ்தீரணமுள்ளதை வெட்டித் திருத்தப்பட்டிருக்கிறது. இந்த விஸ்தீரணத்தில் 11, 456-ஏக்கர் சாகுபடியாகி வருகிறது. இவை களில், தானகச் சம்பாத்தியம் செய்து காலக்ஷேபஞ் செய்துவருங் கைதிகள் சாகுபடிசெய்து விளைந்த மாகுலில் 106, 744, ரூபாய்க்கு கவர்ன்மெண்டாரவர்களே கைதிகளின் உபயோகத்திற்காக 1901-ம் வருஷத்தில் வாங்கியிருக்கிறார்கள்.

## கைதிகள் செய்யும் வேலைகளென்னென்னவென்பது.

378. அடியில் காட்டப்பட்டிருக்கிறபடி அநேக விதமாயுள்ள வேலைகள் இந்தக்குடியேற்ற நாட்டில் நடத்திவரப்படுகின்றன.

காட்டை அபிவிருத்திசெய்வது, பயிரிடுவது, மீன் பிடிப்பது, சமயல் வேலை, வீட்டுக்குறிய பாத்திரங்கள் செய்வது, ஆடு மாடுகள், கோழிகள் முதலியதுகள் வளர்ப்பது, மரம் வெட்டுவது, உப்பு உண்டாக்குவது, கரைவழியாகவும் சமுத்திரவழியாகவும் சாமான்களைக் கொண்டுபோவது, கப்பல் உண்டு பண்ணுவது, வீடு கட்டுவது, தட்டு முட்டுச் சாமான்கள் செய்வது, உலோகங்களிற் பற்பலவிதமான வேலைகள் செய்வது, தச்சுவேலை, கொத்தவேலை, கல் வேலை, கல் தோண்டுவது, ராஸ்தாப்போடுவது, மண்வேலை, குயவன்வேலை, சுண்ணாம்புக்கல் செய்வது, செங்கல் செய்வது, மரம் அறுப்புவேலை, வர்ணம்

பூசுவது, கயர் முறுக்குவது, கூடை முடைவது, தோல் பதமிடுவது, நூல் நூர்ப்பது, துணிகள் நிசவுசெய்வது, எல்லாவிதமான யந்திரங்களையும் ஓட்டுவது, இன்னும் அநேகவிதமான மேல் போனவேலைகள் செய்வது, எழுத்து வேலை, கணக்குவேலை, மருந்துகள் சேர்த்துக்கொடுக்கும் வேலை, புஸ்தகங்கள் பைண்டு செய்கிறவேலை, அச்சடிக்கும்வேலை, வீட்டுக்குறிய மற்ற வேலை, துப்புவேலைமுதலிய எல்லா வேலைகளுஞ் செய்கிறார்கள்.

379. வேலைக் கூடங்கள் :—போனிக்ஸ் பே, (Phœnix Bay) என்னுமிடத்திலுள்ள வேலைக்கூடங்களில் அநேகவிதமாயுள்ள வேலைகள் செய்யப்படுகின்றன. யந்திரங்களின்வேலை, மரவேலை, தோல் வேலை, வெள்ளிவேலை, பித்தளை வேலை, செம்புவேலைகளும் நடக்கின்றன. செங்கல் சுண்ணாம்புக்காளவாசல்களும் போடப்படுகின்றன. போனிக்ஸ் பே, என்னுமிடத்திலிருக்கும் வேலைக்கூட்டங்களில் மாத்திரம் நாளொன்றுக்கு 687-கைதிகள் வேலை செய்கிறார்கள். டண்டாஸ் பாயிண்ட் (Dundas Point) என்னுமிடத்தில் நாளொன்றுக்கு 72,000 செங்கல்கள் சுடுகிறார்கள்.

## கைதிகளை வேலைவாங்கும் விஷயங்கள்.

380. 1901-ம் வருஷத்தில் நடந்த ஜனசங்கியைக் கணக்கின்படி வருஷாந்தர தினசரி ஸரா-ஸரிக்கணக்கு.

| வருஷம். | மேல் பார்வை. | சாமான்கள் சுமந்து திரிப்பு. | தைத்தியல் சாலை. | கடல் சம்பந்தமானது. | கூடிலைசா. | வியவசாயம். | சாமான்கள் உண்டு பண்ணுவது. | துணி நெசவு. | மற்றப்படி மராமத்து வேலைகளிலும் மற்ற வேலைகளிலும் அமர்ந்திருக்கும் கூலிகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1874 | 566 | தகவல் தெரிய மார்கமில்லை. | | | | 190 | 150 | 415 | 4,577 |
| 1881 | 701 | 207 | 124 | 562 | 56 | 144 | 797 | 631 | 3,954 |
| 1891 | 688 | 186 | 203 | 744 | 438 | 562 | 941 | 242 | 4,083 |
| 1901 | 1118 | 162 | 125 | 290 | 706 | 666 | 1,098 | 252 | 3,642 |

381. போர்ப்ளேடர் தண்டனைக்குடியேற்ற நாட்டில் காட்டு இலாகாவில் கைதிகள் வேலைசெல்து, கிடைத்த ரொக்கப்பண வசூல் ஜாபிதா.

| | | | | |
|---|---|---|---|---|
| 1874 | ... | ... | ... | காட்டு இலாகா ஏற்படவில்லை |
| 1884 | ... | ... | ... | தாக்கல் தெரிய மார்கமில்லை. |
| 1894 | ... | ... | ... | 1, 56, 325 ரூ. |
| 1901 | ... | ... | ... | 2, 77, 886 ரூ. |



382. ஆயுசுபரியந்தம் தீவாந்தர தண்டனை விதிக்ககூடிய கேசுகள்.

இ. பி. கோடு பிரிவுகள், 75, 121, 121-A, 122, 124-A, 125, 128, 130, 131, 132, 194, 222, 225, 232, 238, 255, 302, 304, 305, 307, 313, 314, 326, 329, 364, 371, 376, 377, 388, 389, 394, 395, 396, 400, 409, 412, 413, 436, 438, 449, 459, 460, 467, 472, 474, 475, 477, 477-A. இந்தப் பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்களெல்லாம்.

ஆயுசுபரியந்தம் தீவாந்தர தண்டனைகள் விதிக்கவேண்டிய கேசுகள்.

இ. பி. கோடு பிரிவுகள் :—226, 311. இந்த பிரிவுகளின் படிக்குள்ள குற்றங்கள்.

தீவாந்தர தண்டனை எவ்வளவுகாலத்திற்காவது விதிக்ககூடிய கேசுகள்.

இ. பி. கோடு பிரிவுகள் :—121-A, 124-A. இந்தப் பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்கள்.

ஏழு வருஷங்களுக்கு குறையாமல், குற்றவாளிக்கு எவ்வளவுகாலத்திற்குக் காவல் தண்டனை விதிக்கலாமோ அவ்வளவு காலத்திற்கு தீவாந்தர தண்டனை விதிக்கக்கூடிய கேசு. இ. பி. கோடு 59-வது பிரிவுப்படிக்குள்ள குற்றம்.

383. இந்தப் போர்ட் ப்ளேர் தண்டனைக்குடியேற்ற நாட்டைப்பற்றிய விஷயங்கள் அவ்விடத்தில் சூப்பிரின்டெண்டெண்டாக இருந்த லெப்டினெண்ட் கர்னல் ஸர் ரிச்சார்டு - ஸி - டெம்பிள் (Lieut-col. Sir., Richard Temple, Bart. C-I-E.) துரை அவர்களால் எழுதப்பட்ட 1901-ம் வருஷத்திய ஜனஸங்கியை ரிப்போர்ட்டிலிருந்து எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

384. அடி தண்டனை.

இந்தப் புஸ்தகத்தின் 3-வது அத்தியாயம் 85-வது விஷயத்திற்கு அடுத்துப் படிக்கவேண்டிய சில விஷயங்கள்.

அடி தண்டனை விதிக்கப்பட்ட கைதியை, தீர்ப்புச் செய்தது முதல் 15 நாள் கழிந்த உடன் கூடிய சீக்கிரத்திலாவது, அப்பீல் செய்திருந்தால் அப்பீலில் அந்த தண்டனை உறுதி செய்யப்பட்ட உடன் கூடிய சீக்கிரத்திலாவது அடித்துவிடவேண்டும். எந்தக் காரணத்தினாலாவது கைதி அடிக்கத் தகுதியற்றவனாகக் காணப்பட்டால் அடிதண்டனையை நிறைவேற்றக்கூடாது. தீர்ப்புச்செய்யப்பட்ட பூரா அடிகளையும் தாங்குவதற்குத் தகுதியான தேகசுகத்துடனில்லாவிட்டால், அடிதாங்க வாய்க்கில்லாதவனென்று தாக்கல் செய்து கொள்ளவேண்டும். ஒரேகாலத்தில் 2-அல்லது 3-கேசுகளில் அடிதண்டனை விதிக்கப்பட்டால் முன்கேசில் அடிதண்டனையை நிறைவேற்றி முடிந்த உடன் அடுத்த கேசின் தண்டனையை கைதி தாங்குவானென்று யோசிக்கவேண்டும். அடிதண்டனையை நிறைவேற்றிக்கொண்டிருக்குங்காலத்தில்

பாக்கி அடியைக் கைதி தாங்கமாட்டானென்று தோன்றினால், பாக்கி அடியை அடிக்காமல் டாசியாய் நிறுத்திவிடவேண்டும். 1907 - ம்௵ ஜூலை௴ 10௳ போட்ட 1237-ம் நெ. கவர்ன்மெண்டு ஜுடிஷியல் உத்தரவு. (ஜெயில் ரூல், 988.)

385. (1) ஒரு கிரிமினல் கோர்ட்டாரின் உத்தரவின்படிக்கோ அல்லது சூப்பிரின்டெண்டாண்டின் உத்தரவின்படிக்கோ விதிக்கப்படுகிற ஒவ்வொரு அடிதண்டனையையும், ஜெயில் வளைவுக்குள் சூபிப்ரின்டெண்டாண்டினுடையவும், மெடிகல் ஆபீசருடையவும், மெடிகல் ஆபீசருடையவாவது அல்லது அவருக்குக் கீழ்ப்பட்டவருடையவாவது முன்னிலையில் நிறைவேற்றப்படவேண்டும்.

(2) பிரம்பினால் குண்டியின்பேரில் அடிக்கவேண்டும். 16-வயதிற்கு மேல்பட்டவர்களுக்கு பிரம்பு ½-அங்குலக் கனத்திற்கும் 3-அடி நீளத்திற்குக் குறையாமலும், 3½-அடி நீளத்திற்கு மேல்போகாமலு மிருக்கவேண்டும். 16 வயதுக்குட்பட்டவர்களுக்கு, பிரம்பு ¼-அங்குலச் சுற்றளவிற்கு குறைந்தும், 3-அடி நீளத்திற்கு மேல்போகாமலு மிருக்கவேண்டும்.

(3) அடி தண்டனையை நிறைவேற்றுங்காலத்தில் அடிக்கப்படுகிறவனை சரியானபடி பிடித்துக்கொள்ள அல்லது கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். அவன் குண்டியின் பேரில் திராவகத்தில் நனைத்த மெல்லிசான துணியை போட்டிருக்கவேண்டும்.

(4) அடிதண்டனையை சில்லரை சில்லரையாக நிறைவேற்றக் கூடாது.

குறிப்பு:—(1) குண்டியின்பேரில் போடவேண்டிய துணியை, 40-பங்கு ஜலமும் கார்பாலிக் ஆஸிட் (Corbolic acid) ஒருபங்குமாகச் சேர்த்துச் செய்ய வேண்டும்.

(2) கிரிமினல் கோர்ட்டாரால் தண்டனை விதிக்கப்பட்ட 16-வயதிற்குட்பட்ட ஒரு சிறுவனுக்கு 15-அடிக்கு மேல் அடிக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 990.)

386. 16-வயதுக்குக் கீழ்ப்பட்ட பையன்களுக்கு அடிகளைக் கைகளில் அடிக்கக்கூடாது. பெரிய ஆள்களை அடிக்கிற பிரம்பைப்பார்க்கிலும் பொடியாயுள்ள பிரம்பினால் குண்டியிலேயே அடிக்கவேண்டும். பெரிய அடிக்கிறதுபோல சிறுவர்களை அவ்வளவு வலுவாக அடிக்கவேண் அவனுக்கு 3 - அடிகளுக்கு மேற்பட்டு அடிக்கவேண்டியிருந்தாலெ னைக் கட்டிவைத்துக்கொள்ளவேண்டியதில்லை. (ஜெயில் ரூல், 4

## 387. காவல் தண்டனை.

**இந்தப் புஸ்தகத்தின் 4-வது அத்தியாயத்தில் 86-வது விஷ 159-வது விஷயம் வரையில் கண்ட ஜெயில் ரூல்கள் ரத்தாகியும் பட்டும் இருப்பவைகளை இதனடியில் போடப்பட்டிருக்கிறது.**

. ஹைகோர்ட்டு அல்லது ஸெஷஷன் கோர்ட்டில் வி னிலையில் விசாரணை செய்யப்படுவதற்காக போலீசார் பந்தோபஸ் பப்படுகிற தண்டனையடைந்த வ்யக்திகளுக்கு, ஜெயில் உடைபோட பக்கூடாது அவன்சொந்த உடைபோட்டு அனுப்பவேண்டும். அவ



தில் போடப்பட்டிருக்கிற டிக்கட்டுகளையும், காலில் போடப்பட்டிருக்கிற இரும்பு வளையங்களையும் அப்புறப்படுத்தி அனுப்பவேண்டும். இதற்காக ஜெயிலில் வாங்கி வைக்கப்பட்டிருக்கிற அல்லது கைதியின்பந்து அல்லது சிநேகிதர்களால் கொடுக்கப்பட்ட உடையைப்போட்டு அனுப்பிவிட்டு, கோர்ட்டிலிருந்து திரும்பவந்த உடன் அவைகளை எடுத்துவிடவேண்டும். மற்றக் கேசுகளில், கைதியின் ஜாதிக்குத்தகுந்த உடுப்பைப்போட்டு அனுப்பப்படும். (ஜெயில் ரூல், 477.)

388. சூப்பிரின்டெண்டாண்டினுடைய மனதிற்குத் திருப்தியாக தன்வேலையைச் செய்கிற ஒவ்வொரு கைதி வார்டருக்கும் அடியில்கண்ட தாரணைப்படி மாதந்தோறும் எனும் கொடுக்கப்படும். சூப்பிரின்டெண்டாண்டுக்கு அப்படிச்செய்யப் போதுமான முகாந்திரக்களிருப்பதாகத் தோன்றினால், அந்தத்தொகையை குறிப்பிடப்பட்ட ஒரு காலத்திற்குக் குறைத்துவிடவாவது, இந்த ரூல்படி சம்பாதித்து வைக்கப்பட்ட தொகை பூராவையுமாவது அல்லது ஒரு பாகத்தையாவது பறிமுதல் செய்துவிடலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வது வகுப்பு வார்டருக்கு | ... | ... | 0 | 8 | 0 |
| 2-வது வகுப்பு வார்டருக்கு | ... | ... | 0 | 6 | 0 |
| 3-வது வகுப்பு வார்டருக்கு | ... | ... | 0 | 4 | 0 |

அந்தக்கைதி, விடுதலை செய்யப்பட்டு ஜெயிலைவிட்டுப் போகும்பொழுது இந்த ரூல்படி அவனுக்குக்கிடைக்கவேண்டிய மற்றத்தொகை யேதும்யிருந்தால் அதோடு, மேலேகண்டபடி சம்பாதியஞ் செய்துவைத்த தொகையையும் கொடுத்து விடப்படும். (ஜெயில் ரூல், 452)

**இந்தப் புஸ்தகத்தில் 61. 62. 63. 64. 65-ல் முன்பார்தி, இந்தப் பக்கங்களில் கண்ட ஜெயில் ரூல்கள் 418 முதல் 439 வரையுள்ளவைகளை ரத்துச்செய்து அடியில்க்கண்ட ரூல்கள் பிறப்பிவிக்கப்பட்டிருக்கின்றன.**

## 389. தண்டனை வஜாச் சம்பாதிப்பதைப் பற்றிய விவரங்கள்.

2. (a) கலகஞ் செய்யாமலிருப்பதற்காகவாவது அல்லது கஷ்டத்தைக்காகவாவது ஜாமீன் கொடுக்கத்தவறினதற்காக ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறவர்களும் கைதிகள் தான்.

(b) தந்தித்திருடர்கள், விஷபதார்த்தங்களைக்கொடுத்துக் கொள்ளை செய்பவர்கள், கொள்ளை செய்வதையே தொழிலாகக் கைக்கொண்டிருப்பவர்கள், பரம்பரைக்கொள்ளைக்காரர்கள், அல்லது கூட்டக்கொள்ளைபோலொத்த விசேஷமாக அபாயகரமாயுள்ள கொடிய குற்றங்களை வழக்கமாய்ச்செய்து தண்டனைப்படுகிறவர்கள், 1-வது வகுப்புக் கைதிகள் என்றும்;

(c) அதே தொழிலாகக் கைக்கொள்ளாமலேயாவது, அல்லது பரம்பரையாகவாவது யில்லாமல் கொடிய குற்றச்செய்கைகளைச் செய்ததற்காக தண்டிக்கப்பட்டவர்கள். 2-வது வகுப்புக்கைதி என்றும்;

(*d*) 1, 2-வது வகுப்புக் கைதிகளில் சேராதவர்கள் 3-வது வகுப்புக் கைதிகளென்றும் சொல்லப்படுவார்கள்.

(*e*) அப்பீலிலாவது புனராலோசனையிலாவது, மற்றப்படிக்காவது கடாசியாக எப்படித்தீர்மானம் செய்யப்படுகிறதோ அது தான் தீர்ப்பென்று சொல்லப்படும். அதில் ஒரு தண்டனைக்கு மேல்பட்ட தண்டனைகள் சேர்ந்து மொத்தமாக யிருக்கலாம். நல் நடத்தைக்காவது, கலகஞ் செய்யாமலிருக்கும்படிக்காகவது ஜாமீன் கொடுக்கும்படி செய்யப்படுகிற உத்தரவுக்கும் தீர்ப்பென்று தான் சொல்லப்படும்.

(*f*) (1) மேலேகண்ட 1-2-வது வகுப்புக்கைதிகளுக்கு ஜன்மத் தீர்ப்பென்பது, 25 வருஷம் மென்றும் ;

(2) 3-வது வகுப்புக்கைதிக்கு 20 வருஷ மென்றும் அர்த்தமாகும்.

4. அடியில்கண்ட கேசுகளில் வஜாச் சம்பாதிக்க முடியாது:—

(1) அபராதஞ் செலுத்தாததற்காக விதிக்கப்பட்டிருக்கிற காவல்தண்டனை நீங்கலாக, ஒரு வருஷத்திற்குக்குறைந்த காவல் தண்டனை விதிக்கப்படப்பட்ட கேசுகளிலும்,

ஜெயிலுக்குப்போன பிறகு இ. பி. கோடு 147, 148, 152 அல்லது 224-வது பிரிவுகளின்படிக்காவது, அல்லது 1894-ளுத்துக் கைதி ஆக்ட்டு 52-வது பிரிவுப்படிக்காவது தண்டனை விதிக்கப்படப்பட்ட கேசுகளிலும், வஜாச் சம்பாதிக்க முடியாது.

5. வஜா யேர்ப்பாட்டிலிருந்து தள்ளிவிடப்பட்ட ஒரு கைதியை இன்ஸ்பெக்ட்டர் ஜெனரலினுடைய அனுமதியின்பேரில் சூப்பிரின்டெண்டாண்டு அவனை மறுபடியும் வஜா யேர்ப்பாட்டில் தாக்கல் செய்துகொள்ளலாம். அப்படி தாக்கல் செய்துகொள்ளப்பட்ட மாதத்திற்கு மறுமாதம் முதற்கொண்டு வஜாச்சம்பாதிக்க ஆரம்பிக்கலாம்.

6. அடியிற்கண்ட தாரணைப்படி வஜாக்கொடுக்கப்படும்.

(*a*) பூராவும் நல் நடத்தையாகவும், ஜெயில் யேர்ப்பாடுகளை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்து நடந்துகொண்டும் வந்திருந்தால், மாதத்தில் ஒரு நாளும்.

(*b*) வேலைசெய்வதற்காகவும், அன்றூடம் கொடுத்த வேலையைப் பாக்கியில்லாமல் செய்வதற்காகவும் மாதத்தில் இரெண்டு நாட்களும், வஜாக்கொடுக்கப்படும்.

விவரணம்:—ஒரு கைதியானவன், கோர்ட்டுக்குப் போவதனுலாவது அல்லது ஆஸ்பத்திரியிலிருப்பதனுலாவது, அல்லது ஒரு ஜெயிலிலிருந்து மற்றொரு ஜெயிலுக்குக்கொண்டுபோகப்படுவதனுலாவது, அன்றூடம் வேலையைச்செய்ய அசக்தனுயிருக்கிறவர்கள்கூட்டத்திலிருப்பதனுலாவது, அல்லது மேற்கண்ட காரணங்களில் 2 அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களினுலாவது, ஒரு மாதம் பூராவும் வேலை செய்யாமலிருந்துவிட்டால் அந்த மாதத்திற்கு, மேலே (*b*)யில் சொல்லப்பட்டபடி அவனுக்கு வஜாக்கிடையாது



ஆனுல் அந்தக்காலத்தில் அவன் நல் நடத்தையாக யிருந்தால் (*a*) ப்படி வஜாக் கிடைக்கும்.

7. மேலே 6-வது ரூல்ப்படிக்குள்ள வஜாவுக்குப்பதில், கைதி வார்டர்களுக்கு மாதத்தில் 8 நாளும், கைதி ஓவர்சியர்களுக்கு 6 நாளும், கைதி ராத்திரிக் காவர்க்காரர்ளுக்கு 4 நாளும், வஜாக்கொடுக்கப்படும்.

8. 5-வது ரூலின் நிபந்தனைகளுக்குட்பட்டு, 6-வது ரூல்ப்படிக்குள்ள வஜாவானது கைதியின் தீர்ப்புத்தெய்திக்கு அடுத்த மாதம் முதல் தெய்தி முதல் வஜாச்சம்பாதிக்கலாம். ஜாமீன்பேரில் இருந்தவாவது, அல்லது தற காலத்திற்குத் தண்டனையை நிறுத்திவைக்கப்பட்டிருந்தவாவது கைதி மறுபடியும் ஜெயிலுக்கு வந்தால் அப்படி வந்ததற்கு அடுத்த மாதம் முதல் வஜா யேர்ப்பாட்டில் சேர்த்துக்கொள்ளப்படுவான். ஜாமீன்பேரில் விடுவதற்காவது, அல்லது தண்டனை நிறுத்திவைக்கப்படுவதற்காவது முன் சம்பாதித்திருந்த வஜா நாட்களைக்கணக்கில்ச் சேர்த்துக்கொள்ளப்படும். 7-வது ரூல்ப்படிக்குள்ள வஜாவானது, கைதி, வார்டராகவாவது, ஓவர்சியராகவாவது அல்லது ராத்திரிக்காவற்காரனுகவாவது நியமிக்கப்பட்டதற்கு அடுத்த மாதம் முதல் தெய்தி முதல் கணக்கிடப்படும்.

9. சமையர்க்காரர்களாகவும், தூப்புக்காரர்களாகவும், ஜெயில் வேலைகளில் நியமிக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற ரஜாநாட்களிலும் வேலை செய்கிற கைதிகளுக்கு, இந்த ரூல்களின்படி அவர்களுக்குக்கொடுக்கப்படுகிற வஜாக்கள் தவிர அதிகமாக, மூன்று மாதத்தில், 2 நாள் வீதம் சேர்த்துக் கொடுக்கப்படும்.

10. இந்த ரூல்களின்படி வஜாச்சம்பாதிக்க லாயக்காயிருக்கிற எந்தக் கைதியாவது, அவனுடைய தண்டனைத்தெய்திக்கு அடுத்த குவார்டர் 1-வது நாள் முதலாவது, அல்லது அவன் ஜெயில் குற்றத்திற்காக கடாசியாகத் தண்டிக்கப்பட்ட நாள் முதலாவது 1 வருஷ காலத்துக்கு யாதொரு குற்றமும் செய்யாமலிருந்தால் இந்த ரூல்களின்படி சம்பாதிக்கிற மற்ற வஜாவோடு 15 நாள் வஜாவும் கொடுக்கப்படுவான்.

11. சாதாரணமான வஜாவை, சூப்பிரின்டெண்டெண்டாண்டாவது அல்லது அவருடைய மேல்ப்பார்வைக்குட்பட்டும், 12-வது ரூலின் நிபந்தனைகளுக்குட்பட்டும், டிப்ட்டி சூப்பிரின்டெண்டாண்டாவது, ஜெயிலராவது, டிப்டி ஜெயிலராவது அல்லது அவரால் அதிகாரங் கொடுக்கபபடுகிற வேறு உத்தியோகஸ்தராவதுக் கொடுக்கலாம்.

12. சாதாரண வஜாக்கொடுக்கிற உத்தியோகஸ்தர் வஜாவைத் தாக்கல் செய்யு முன், சரித்திர டிக்கட்டைப் பார்த்துக்கொள்ளவேண்டும். அதில் கைதி பேரில் ருஜுவான ஒவ்வொரு குற்றத்தையும் ஜாக்கிரதையாகத் தாக்கல் செய்திருக்கவேண்டும்.

எச்சரிப்புச் செய்யப்பட்டிருப்பதைத் தவிர ஒரு கைதி அந்தக் குவார்டரில் தண்டனை யாதென்றும் அடைந்திராத விஷயத்தில், 6-வது விதிப்படி அந்த அந்த குவார்ட்டருக்குள்ள சாதாரண வஜாவை அவனுக்குக்கொடுத்து விடப்படும். கைதி உத்தியோகஸ்தனுக யிருந்தால் 7-வது ரூல்ப்படிக்குள்ள வஜாவைக் கொடுத்துவிடப்படும்.

அந்தக் குவார்டருக்குள். யேதாவது குற்றஞ் செய்திருந்தால், இதைப் பற்றி சூப்பிரின்டெண்டாண்டுக்குத் தெரிவித்துவிடவேண்டும். அவர் கைதி என்ன தண்டனை அடைந்தானென்பதைக் கவனித்து 6-வது ரூல்படிக்கு எவ்வளவு வஜாக்கொடுக்கலாமென்பதைத் தீர்மானிப்பார். கைதி உத்தியோகஸ்தனாகயிருந்தால் 7-வது ரூல்ப்படிக்கு எவ்வளவு வஜாக்கொடுக்கலாமென்பதைத் தீர்மானிப்பார். கைதியின் சத்திர டிக்கட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற வஜா நாட்களை மூன்று மாதத்திற்கொருதரம் வஜா ரிஜிஸ்டர் [illegible] சீட்டில் தாக்கல் செய்யப்படும்.

13. சாதாரண வஜாவை, ஜனவரி ௴ 1ட-யிலும், எப்பிரல் ௴ 1ட-யிலும், ஜூலை ௴ 1ட-யிலும், அக்டோபர் ௴ 1ட-யிலும் தாக்கல் செய்யப்படும். கொடுக்கப்பட்ட வஜாவைப்பற்றி கைதிக்கு சொல்லிவிட்டு சரித்திர டிக்கட்டில் தாக்கல் செய்யவேண்டும். 10-வது ரூல்ப்படி ஒரு கைதிக்கு வஜாக் கொடுத்தால், அதைக்கூடிய சீக்கிரத்தில் சரித்திரட்டிக்கட்டில் தாக்கல்செய்து விடவேண்டும்.

14. விடுதலை செய்யப்படுகிற மாதத்திற்குக் கைதிக்குச் சாதாரண வஜாக்கொடுக்கப்படமாட்டாது.

15. அடியில்க்கண்ட செய்கைகளைப்போலொற்ற விசேஷமான வேலைகள் செய்ததற்காக எந்தக்கைதிக்கும் விசேஷ வஜாக்கொடுக்கலாம்.

(1) ஜெயில் ஒழுக்கு அல்லது ஜெயில் விதிகளை மீறி நடப்பதைக் கண்டு பிடிப்பது அல்லது தடுப்பதற்கு உதவிசெய்வது ;

(2) ஏதும் கைத்தொழில்களை மற்றக்கைதிகளுக்கு எளிதாகத் தெரியும்படி சொல்லிக்கொடுப்பதில் தேர்ச்சியடைந்திருப்பது.

(3) நல்ல வேலைகளை, விசேஷமான விதமாகச்செய்வது, அல்லது மிகவும் ஜாஸ்தியான அளவில் செய்வது, இவைகளுக்கும்

(4) ஜெயில் உத்தியோகஸ்தர் யாரையாவது மற்ற யாரும் தாக்க வரும்பொழுது அவரைக்காப்பாற்றுவது.

(5) ஜெயிலில் கலகம் நேரிடுவது, நெருப்புப்பற்றிக்கொள்வது முதலிய சங்கதிகள் நேரிடுங்காலத்தில் அவைகளை க[illegible]த்துவதற்கு ஜெயில் உத்தியோகஸ்தருக்கு உதவிசெய்வது.

(6) தனக்குக் கொடுக்கப்பட்ட உடுப்புகளை அழுக்கில்லாமலும் கிழிந்து போகாமலும் துப்புறவாக அதிகக் காலத்திற்கு வைத்துக்கொள்ளுவது

16. விசேஷ வஜா,

(*a*) ஒரு வருஷத்தில் 30 நாளைக்கு மேற்போகாமல் சூப்பிரின்டெண்டாண்டும்.

(*b*) ஒரு வருஷத்தில் 60 நாளைக்கு மேற்போகாமல் இனிஸ்பெக்டர் ஜெனரலும் கொடுக்கலாம்.

**விவரணம்:**—இந்த விஷயத்திற்காக வருஷமென்பது தண்டனைத் தேதியிலிருந்து கணக்கிடப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்தகாலத்தையும், முழு வருஷமாகவேயே கணக்கிட்டுக்கொள்ளப்படும்.



17. விசேஷ வஜாக்கொடுக்கப்பட்டால் அதைக்கொடுத்த உடன் கூடியசீக்கிரத்தில் சரித்திர டிக்கட்டில் எழுதிக்கொள்ளவேண்டும். சூப்பிரின்டெண்டாண்டு கொடுக்கிற ஒவ்வொரு விசேஷ வஜாவுக்கும் காரணங்களை எழுதி வைக்கவேண்டும்.

18. இந்த எல்லா ரூல்களின்படிக்குங் கொடுக்கப்பட்ட வஜாவெல்லாஞ்சேர்ந்து கைதி தண்டனையின் மொத்தக்காலத்தில் கால் பங்குக்கு மேல் போய் விடக்கூடாது. அப்படி மேல்போகவேண்டுமானால் கவர்ன்மெண்டாரவர்களுடைய உத்தரவுவேண்டும்.

19. கைதியின் விடுதலைக்காலத்தைக் கணக்கிடுவதற்கு, சம்பாதித்திருக்கிற வஜா நாட்களை, மாதமொன்றுக்கு 30 நாளாக வைத்துக்கொண்டு, மாதங்களாகவும் நாட்களாகவும் மாத்திக் கணக்கிடவேண்டும்.

20. 1-வது வகுப்புக் கைதியைச்சேர்ந்த ஆயுசபரியந்தம் தண்டிக்கப்பட்டவனால் சம்பாதிக்கப்பட்ட வஜாவினால் அவன் விடுதலைக் காலம் வந்து விட்டபொழுது, 1898-ம் வருத்து கி. பு. கோடு 401-வது பிரிவுப்படி உத்தரவு பிறப்பிவிக்கவேண்டியதற்காக சூப்பிரின்டெண்டாண்டு பிரதேச கவர்ன்மெண்டாரவர்களுக்கு அந்தக் கேசைப்பற்றித் தெரிவிக்கவேண்டும்.

**குறிப்பு:**—1-அல்லது 2-வது வகுப்புக் கைதியால் சம்பாதிக்கப்பட்ட வஜாக்காலத்தை தண்டனைக்காலத்திலிருந்து கழித்துக்கொண்டு பிரதேச கவர்ன்மெண்டாரவர்கள் உத்தரவு செய்கிறபடி அந்த வஜாக்காலத்தைப் போலீசாருடைய மேல்பார்வையில் கைதி, கழிக்கவேண்டும்.

21. 20-வது விதியில் சொல்லப்பட்ட கேசுகளைத்தவிர மற்றக் கேசுகளில், விடுதலை செய்துவிடும்படியான வஜாவை ஒரு கைதி சம்பாதித்துவிட்டால், விடுதலை வாயிதாவில் சூப்பிரின்டெண்டாண்டே விடுதலை செய்துவிடலாம்.

வஜா யேர்ப்பாட்டின்படி கிடைக்கக்கூடிய பாத்தியதைகளை இழந்துவிடும்படியான விஷயங்களைப்பற்றிய விசேஷ விதிகள்.

**இந்தப் புஸ்தகத்தின் 99-வது பக்கத்தில், 210-வது விஷயத்தில் சொல்லப்பட்டவைகள் அடியிற்கண்டபடி மாற்றப்பட்டிருக்கின்றன.**

390. ஜெயில் குற்றத்திற்காக, வஜா யேர்ப்பாடின்படி கிடைக்கக்கூடிய பாத்தியதைகளை இழந்து விடும்படி செய்வதற்காக அடியிற்கண்ட தண்டனைகள் விதிக்கப்படும்.

(*a*) சம்பாதித்த வஜாவைப் பறிமுதல் செய்வது.

(*b*) தற்காலத்திற்கு, கைதியின் வகுப்பு, கைதி உத்தியோகஸ்தரின் வகுப்பு அல்லது ஜெயில் பாத்தியதைகள் இவைகளைப்பறிமுதல் செய்வது.

(*c*) கைதி வகுப்பிலிருந்தாவது, கைதி உத்தியோகஸ்தன் வகுப்பிலிருந்தாவது, தற்காலத்திற்காவது அல்லது சாசுவதமாகவாவது கீழ்வகுப்புக்குத் தள்ளிவிடுவது.

(*d*) தற்காலத்துக்காவது அல்லது சாசுவதமாகவாவது வஜா ஏர்ப்பாட்டிலிருந்தே தள்ளிவிடுவது.

9-நாளைக்கு மேற்பட்ட வஜாவைப்பறி முதல் செய்வதற்காவது, அல்லது 3-மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குக் கைதியை வஜா ஏற்பாட்டில்

யிருந்து விலக்கிவைப்பதற்காவது இனிஸ்பெக்டர் ஜெனரலினுடைய அநுமதிவேண்டும். (ஜெயில் ரூல், 397.)

## மேற்கண்ட ஜெயில் குற்றங்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற தண்டனைகள்.

இந்தப் புஸ்தகத்தின் 75, 76-வது பக்கங்களில் 157, 158-வது விஷயங்களில் சொல்லப்பட்டவைகள் அடியிற்கண்டபடி மாற்றப்பட்டிருக்கின்றன.

391. அடியிற்கண்ட தண்டனைகளைச் சொற்ப தண்டனைகளாக எண்ணப்பட்டிருக்கின்றது.

1. எச்சரிப்பு.
2. அதிகமான கஷ்டமுள்ள வேலைக்கு மாற்றுவது.
3. சம்பாதித்த வஜா நாட்களில், 3-நாட்களுக்குமேல் போகாமல் இழக்கும்படி செய்வது.
4. 3 - மாதங்களுக்கு மேற்போகாத காலத்திற்கு வகுப்பு, கிரேட் இவைகளிலிருந்து அல்லது ஜெயில் சுவாதந்திரங்களிலிருந்து 3-மாதத்திற்கு மேற்போகாத காலத்துக்கு விலக்கிவைப்பது.
5. மேல்வகுப்பு அல்லது கிரேடிலிருந்து தற்காலத்துக்குக் கீழ் வகுப்பு அல்லது கிரேட்டுக்குத் தள்ளுவது.
6. தண்டனைச்சாப்பாடு போடுவது.
7. 48-மணிநேரத்திற்கு மேற்படாத காலத்திற்கு இருட்டுக்கொட்டடியில் வைப்பது.
8. 7-நாளைக்கு மேற்படாத காலத்தித்கு தனிக்கொட்டடியில் வைப்பது.
9. 14-நாளைக்கு மேற்படாத காலத்திற்குத் தனிமையாக அடைப்பது.
10. கைகளைப் பின்னால் வைத்தாவது அல்லது கொண்டியுடன் சேர்த்தாவது வைத்துக்கைவிலங்கு போடாமல் சாதாரணமான கைவிலங்கு போடுவது.
11. 30 - நாளைக்கு மேற்போகாத காலத்திற்கு சங்கிலிவிலங்கு (Link fetters) போடுவது.
12. சாக்கு (கோணி) அல்லது சாக்குப்போன்ற வஸ்துவை உடுத்திக் கொள்ளச்செய்வது. (ஜெயில் ரூல், 391.)

## 392. அடியிற்கண்ட தண்டனைகளைப் பெரியதண்டனைகளென்று எண்ணப்பட்டிருக்கின்றது.

1. கடினகாவல்தண்டனை விதிக்கப்படாதவர்களைக் கடினமான வேலை செய்யச்சொல்வது.
2. (ஏ.) சம்பாதித்த வஜாவில் 3-நாளைக்கு மேற்பட்டும் 9-நாளைக்கு மேல்போகாமலும் இழக்கும்படி செய்வது.

   (பி.) 9-நாளைக்கு மேற்பட்ட வஜாநாளைப் பறிமுதல் செய்வது

   (ஸி.) 3-மாதத்திற்கு மேற்பட்ட காலத்துக்கு வகுப்பு, கிரேட் அல்லது ஜெயில் சுதந்திரங்களைப் பறிமுதல் செய்வது.

   (டி) 3-மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு வஜா ஏற்பாட்டிலிருந்து விலக்கிவைப்பது.



   (இ.) 3 - மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு வஜா ஏற்பாட்டிலிருந்து விலக்கிவைப்பது.

   (எப்.) உயர்ந்த வகுப்பு அல்லது கிரேடிலிருந்து சாசுவதமாகத் தணிந்த வகுப்புக்கு மாற்றுவது.

3. 48-மணி நேரத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு தனிக்காவலென்ற இருட்டுக்கொட்டடியில் வைப்பது.
4. 7 - நாளைக்கு மேற்பட்ட காலத்திற்கு தனிக் கொட்டடியில் வைப்பது.
5. 14-நாளைக்கு மேற்பட்டுத் தனியாய் அடைப்பது.
6. 30-நாளைக்கு மேற்பட்டு சங்கிலிக்கால் விலங்கு (Link-fetters) போடுவது.
7. கம்பி விலங்கு (Bar-fetters) போடுவது.
8. குறுக்கு கம்பி விலங்கு (Crossbar-Fetters) போடுவது.
9. கையைப் பின்னால் வைத்தாவது, கொண்டியுடன் மாட்டியாவது கைவிலங்கு போடுவது.
10. 48-மணி நேரத்திற்கு மேற்பட்டு தனிக்காவலும் தண்டனைச்சாப்பாடும் போடும்படி செய்வது.
11. அடிதண்டனை.
12. ஜெயில் ஆக்ட்டு 47-வது, பிரிவுப்படிக்குக் கொடுக்கக்கூடிய சொற்ப தண்டனைகளும் பெரிய தண்டனைகளுடன் சேர்த்து விதிப்பது. (ஜெயில் ரூல், 392.)

குறிப்பு:—ஜெயில் இனிஸ்பெக்டர் ஜெனரலினுடைய அநுமதி யில்லாமல் 2 (பி) 2 (ஸி) 2 (இ) யில்க்கண்ட பெரிய தண்டனைகளையாவது அல்லது பெரிய தண்டனைகளைக் கலந்தாவது சூப்பிரிண்டெண்டாண்டுகள் தண்டனை விதிக்கக்கூடாது.

393. எந்தக் கைதியையுமாவது ஜெயில் சுவர்களுக்கு வெளியில் கொண்டுபோய் வேலை வாங்கக்கூடாது. அடியிற்கண்டபடி யிருந்தாலொழிய அப்படி வேலைவாங்குவதற்காக வெளியே கொண்டுபோகவே கூடாது.

(a) கைதிக்கு விதிக்கப்படப்பட்ட தண்டனையில் கால் பாகத்திற்குக்குறையாமல் அனுபவித்துத் தீர்ந்திருக்கவேண்டும்.

(b) கைதிக்குக் குற்றத்திற்காக விதிக்கப்படப்பட்ட காவல் தண்டனையும், அபராதஞ் செலுத்தப்படாததற்காக ஏதாவது காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அதுவுஞ்சேர்ந்து, இன்னும் அனுபவிக்கவேண்டிய தண்டனையானது 2 வருஷத்திற்கு மேல்ப்பட்டிருந்தால், இனிஸ்பெக்டர் ஜெனரலினுடைய அநுமதியில்லாமல் வெளியே வேலை வாங்குவதற்காகக் கொண்டுபோகக்கூடாது.

(c) அடி தண்டனை அடிக்கப்படாமல் பாக்கி யிருந்தாலுமே, கைதி அப்பீல் செய்து அது பைசல் செய்யப்படாமல் பாக்கியிருந்தாலுமே வெளியில் கொண்டுபோகக்கூடாது.

(d) இன்னும் அவன் பேரில் விசாரிக்கப்படவேண்டிய பிராதுகள் பாக்கியிருந்தாலுமே, அல்லது அவன் தண்டனை யனுபவித்துத்தீர்ந்த மேல். சில காலத்திற்குப் போலீசாருடைய மேல்ப்பார்வையிலிருக்கவேண்டு மென்று தீர்ப்புச் செய்யப்பட்டிருந்தாலுமே அப்பேர்ப்பட்டவர்களை வெளியில் கொண்டுபோகக்கூடாது.

(e) கைதி அன்னிய ராஜாங்கத்துக்காரனுக இருப்பவனையும், அல்லது சுதேச அரசர்களின் ராச்சியங்களைச் சேர்ந்த வனுகயிருப்பவனையும் வெளியில் கொண்டுபோகக் கூடாது.

(f) அலைந்து திரிந்துகொண்டிருக்கிற நாடோடிகளையாவது, அல்லது பிரபல துஷ்டர்களையாவது, காவலிலிருந்து எப்போதாவது ஓடிப்போனவர்கள் அல்லது ஓடிப்போகப் பிரயத்தனப்பட்டவர்களையாவது, வெளியில் கொண்டுபோகக்கூடாது.

(g) வெளியில் கொண்டுபோய் வேலைவாங்கும்படி சூப்பிரின்டெண்டாண்டு உத்தரவு செய்து அது சங்கதியை கைதியின் சரித்திரப்படிக் கட்டில் எழுதியிருந்தாலொழிய வெளியில் கொண்டுபோய் வேலைவாங்கக் கூடாது (ஜெயில் ரூல், 514.)

394. பெண்பிள்ளைக் கைதிகளை எந்தகாரணத்தைவிட்டும், அவர்கள் ஜெயிலுக்கு அல்லது வார்டுக்கு வெளியில் கொண்டுபோய் வேலை வாங்கக் கூடாது. (ஜெயில் ரூல், 515.)

---

## 4-வது அத்தியாயத்தில் சீர்திருத்தங்கள்.

1. இந்தப் புஸ்தகத்தின் 50-வது பக்கத்தில், 2-வது ஜெயில் ரூலில், கோயம்பத்தூரென்பதற்குக்குப் பின் "சென்னப்பட்டணம் பெனிடென்ஷியரி" யென்று சேர்த்துக்கொண்டு, 4-இடங்களென்பதை 5-இடங்களென்று படிக்கவும்.

2. பக்கம் 50, விஷயம் 88 ல், 4-வதுவரியில் "ஸெண்ட்ரல் ஜெயில்களிலும்" என்பதை, "எல்லா ஸெண்ட்ரல்ஜெயில்களிலும்" என்று படிக்கவும்.

3. பக்கம் 51, விஷயம் 95 ல் (2-வது) ஐ எடுத்து 88-வது விஷயத்தின் முடிவுடன் சேர்த்துப் படிக்கவும்.

4. பக்கம் 51, விஷயம் 95 (1) ஐ ரத்துச்செய்துவிட்டு "இந்த ராஜதானியிலுள்ள விசேஷ ஜெயில்கள், சென்னப்பட்டணத்திலுள்ள ஸிவில் ஜெயிலும், குஷ்டரோக ஆஸ்பத்திரியில் கிரிமினல் கைதிகளை வைக்குமிடமுந்தானின் விசேஷ ஜெயில்கள்" என்று படிக்கவும்.

5. ஷை பக்கம் 95 (4) வது விஷயத்தின் 4-வது வரியில், 1868 என்பதை 1899 என்றும், ஜூன்மீ 11உ என்பதை டிசம்பர்மீ 13உ என்றும், 5-வது வரியில் 953 என்பதை 537 என்றும் படிக்கவும்.

6. பக்கம் 66, விஷயம் 141, வரி 1. "மார்க்கு" என்பதை "வஜா" என்றும், வரி 8 ல் "500 மார்க்குகள்" என்பதை "30 நாட்கள்" என்றும்;

7. விஷயம் 142, வரி 8 ல் "800 மார்க்குகள்" என்பதை "45 நாட்கள்" என்றும்;

8. விஷயம் 143, வரி 6 ல், "1000 மார்க்குகள்" என்பதை "60 நாட்கள்" என்றும் படிக்கவும்

9. பக்கம் 67, விஷயம் 145, வரி 8ன் கடசியிலிருந்து, 10-வது வரியில் ஆறுல் என்பதற்குமுன், அடியிற்கண்டபடி படிக்கவும். "கைதி ராத்திரிக்காவற்காரர்கள் மற்றக் கைதிகள்போல காலில் இரும்பு வளையம் போட்டுக்கொள்ளவாவது, கழுத்தில் டிக்கட்டுப் போட்டுக்கொள்ளவாவது வேண்டியதில்லை".

# அத்தியாயம் 5.

---

## மரண தண்டனையைப்பற்றிய விஷயங்கள்.

4-வது அத்தியாயத்தில் வெறுங்காவல், கடினகாவல் தண்டனைகளைப்பற்றியும், அந்த தண்டனைகளை ஜெயிலில் நிறைவேற்றுகிற விதத்தைப்பற்றியும், சிக்ஷை ஊழியத்தண்டனை, தண்ணீர்மேலேற்றுந் தண்டனை, சொத்தைப் பறிமுதல் செய்கிற தண்டனை இவைகளைப்பற்றியும் விவரமாய்ச் சொல்லியாய்விட்டது. இந்த அத்தியாயத்தில் மரண தண்டனையைப்பற்றிச்சொல்லப்படும்.

மரணதண்டனையைப்பார்க்கிலும் பெரிய தண்டனை ஏதுமில்லாமலிருக்கிறபடியால், இந்தத் தண்டனை விதிக்கப்படப்பட்டவர்கள் விஷயமாய், மரண தண்டனைத் தீர்ப்புச்சொல்லப்பட்டது முதல், முடிவுவரை நடத்தப்படுகிற எல்லா நடவடிக்கைகளையும் படிப்படியாய் விபரமாக இந்த அத்தியாயத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

395. ஸெஷ்ஷன் கோர்ட்டாரால் மரணதண்டனை விதிக்கப்பட்ட கேசுகளில், ஷை தண்டனையை ஹைகோர்ட்டார் உறுதிசெய்தாலொழிய, தண்டனை நிறைவேற்றப்படமாட்டாது. (கி. பு. கோடு, பிரிவு 374.) ஷை தண்டனை ஹைகோர்ட்டாரால் உறுதிசெய்யப்பட்டவுடன் தண்டனை செய்யப்பட்ட கைதியிருக்கும் ஜெயில் சூப்பிரின்டெண்டாண்டுக்கு ஷை தண்டனையை நிறைவேற்றிவிடும்படி, ஸெஷ்ஷன் கோர்ட்டார் கட்டளை அனுப்புவார்கள். (கி. பு. கோடு, பிரிவு 381.) (ஜெயில் ரூல், 1015.)

396. மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதி, ஸெஷ்ஷன் கோர்ட்டிலிருந்து ஜெயில் போய்ச்சேர்ந்தவுடன், நன்றாய் தேகசோதனை செய்யப்படுவான். தண்டனை விதிக்கப்படும்பொழுது தன் சொந்த உடை தரித்திருந்தால் அவைகளை எல்லாவற்றையும் எடுத்துவிடுவதுமல்லாமல், அவனிடத்திலிருக்கப்பட்ட ரூபாய் முதலிய நாணயங்கள், நகைவகையரா சாமான்கள் இவைகளையும் எடுத்துவிட்டு தண்டிக்கப்படப்பட்டவர்களுக்கு ஸர்க்காரில் கொடுக்கப்படப்பட்ட உடுப்பு வகையராக்கள் கொடுக்கப்படும், (ஜெயில் ரூல், 1016.)

397. அப்பால் விசாரணைக் கைதிகளிருக்கப்பட்ட ஜெயில் அறையை விட்டு தண்டனையடைந்த கைதிகளை வைக்கப்படுகிற அறைக்குக் கொண்டு போகப்படுவான். (ஜெயில் ரூல், 1017.)

398. இந்தத் தண்டனைப்பட்டவனை, ஒரு அறைக்குக் கொண்டுபோய் வைக்குமுன், அந்த அறைப்பந்தோபஸ்தாயும், அவனைவைக்கிறதற்கு லாயக்காயுமுள்ளதாக யிருக்கிறதாவென்று சூப்பிரின்டெண்டாண்டு பரிசோதித்துப் பார்ப்பார். மரக்கதவுமாத்திரம் போடப்பட்டிருக்கிற அறைக்குள் மரணதண்

டனை யடைந்தவனை வைக்கப்படமாட்டாது. இரும்பு அழிக்கதவு இருப்ப தோடு, வெளியில் மரக்கதவுமிருந்தால், அந்த மரக்கதவைத்திறந்துவைத்திருக்கவேண்டும். தண்டனைப்பட்டவனுக்கு கை அறைக்குள்ளிருக்கும்பொழுது கைவிலங்காவது, கால்விலங்காவது போடப்படமாட்டாது. ஆனால்தண்டனைப் பட்டவன் தனக்காவது, காவற்காரனுக்காவது மூர்க்கத்தனஞ் செய்து துன்பஞ்செய்வான், அபாய முண்டுபண்ணுவா னென்று சூப்பிரின்டென்டாண்டுக்குத் தோன்றினால் கைவிலங்குமாத்திரமாவது, அல்லது கால்விலங்கு மாத்திரமாவது அல்லது இரண்டுமாவது போடும்படி செய்யலாம். (ஜெயில் ரூல், 1018.)

399. தண்டனை யடைந்தவனை அறைக்குள் போட்டவுடன் இரவும் பகலுமாக, மரணதண்டனையை நிறைவேற்றும்வரை, கையானைக் கார்த்துக் கொள்ளும்படி பிரத்தியேகமான காவல் ஏற்படுத்தப்படும். (ஜெயில் ரூல், 1019.)

400. ஏகதேசங்களில் வருகிற மரணதண்டனை யடைந்தவர்களைக் கார்த்துக்கொள்ளுகிறதற்கு, வார்டர் சிப்பந்தியே போதுமானது. ஒவ்வொரு கேசிலும் இனிஸ்பெக்டர் ஜெனரலுடைய அநுமதி பெற்றுக்கொண்டால் அதிகமான காவற்காரர்களும் நியமித்துக்கொள்ளலாம். இப்படி ஜாஸ்தியாக ஆள்கள் நியமிக்கப்படுகிற கேசுகளில், அதிகமாக நியமிக்கப்படுகிற ஆட்களை குறைந்த ஜவாப்தாரியுள்ள அலுவல்களில் போட்டுவிட்டு காயம் வார்டர்களை, தண்டனைப்பட்டபேரைக் கார்த்துக்கொள்ளுகிறபொறுப்பை வைத்துக் கொள்ளவேண்டியது. (ஜெயில் ரூல், 1020.)

401. மரணதண்டனை யடைந்தவர்களைக் கார்க்கும்பொருட்டு, ஒரு ஹெட்வார்டரும், மூன்று வார்டர்களுமடங்கிய சிப்பந்தியை, தாத்காலியமாக நியமித்துக்கொள்ளும்படி (இனிஸ்பெக்டர் ஜெனரல்) அனுமதிகொடுக்கலாம். ஒரேகாலத்தில் ஒரு ஜெயிலுக்குள் ஒருவருக்கு மேற்பட்ட அப்பேர்க்கொத்த தண்டனைப்பட்டவர்களிருந்தால் ஒரு ஹெட்வார்டரே போதுமானது. (ஜெயில் ரூல், 260.)

402. சூப்பிரின்டென்டான்டையும், மெடிகல் ஆபீசரையும், ஜெயிலரையும், ஜெயில் பார்க்க சட்டப்படி வந்திருப்பவர்களையும், கைதிக்கு சாப்பாடு கொண்டுபோகிற தண்டனைப்பட்ட கைதியையும், தூப்புத்தூக்கிற தண்டனைப்பட்ட கைதியும், கீழே 1030-வது ரூலில் சொல்லப்பட்டிருக்கிற சூப்பிரின்டென்டென்டினால் எழுத்துமூலமாக பிரத்தியேகமாக அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறவர்களையுந் தவிர அந்த அறைப்பக்கத்தில் போகவாவது, தண்டனையடைந்தவனிடம் பேசவாவது, இந்த விசேஷகாவற்காரர்கள், யாருக்கும் இடங்கொடுக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 1021.)

403. இரவும் பகலும், தன் பார்வையிலேயே கைதியை வைத்திருக்க வேண்டியது, இந்தக்காவற்காரர்களின் வேலை. ராக்காலத்திலும் இப்படி வைக்கும்பொருட்டு, அந்த அறை பூராவும் வெளிச்சம் கொடுக்கக்கூடியவிதமாக ஒரு லாந்தலைப் போடவேண்டும். வழக்கமான மாதிரியாக கதவைச்சாத்தி பூட்ட வேண்டும். கைதிக்கு கைவிலங்கு யேதாவது போட்டிருந்தால், அதின் சாவி ஜெயிலரிட மிருக்கவேண்டும். கைதி யிருந்தாப்போலிருந்து தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துவிட்டாலும், உடனே அறைக்குள் போகும்படியாக ஸ்பெஷியல் கார்டின் ஹெட்வார்டரிடம் அந்த அறைக் கதவின்



திறவுகோல் கொடுக்கப்படவேண்டும். ஜெயிலிலிருக்கிற மற்றக் கதவுகளின் பூட்டுகளைத் திறக்கக்கூடிய திறவுகோல்களை யுடைய பூட்டுகளை மரணதண்டனையடைந்த கைதிகள் அடைக்கப்பட்டிருக்கிற அறைகளுக்குப் பூட்டக் கூடாது. (ஜெயில் ரூல், 1022.)

404. மரணதண்டனை யடைந்த கைதிகள் அடைக்கப்பட்டிருக்கிற அறைகளைக் காவல் காக்கிறவர்களை, குறிப்பிடப்படாத காலங்களிலும், ராக்காலத்திலும், பகற்காலத்திலும், கார்டு ஆபீஸர் மேல்பார்த்துக்கொள்ள வேண்டும். ஸ்பெஷியல்கார்டுக்குத் தலைவராக யிருக்கப்பட்ட ஹெட்வார்டர், இருக்கப்பட்ட ஒழுங்குக் குறைவுகளையும், கைதி ஏதாவது சந்தேகிக்கக்கூடியவிதமாக நடந்துகொண்டால் அவைகளையும்பற்றிப் சூப்பிரின்டென்டாண்டுக்கு ரிப்போர்ட்டுச் செய்யும்படிக்காக ஜெயிலருக்கு உடனே ரிப்போர்ட்டுச் செய்யவேண்டும். (ஜெயில் ரூல், 1023.)

405. மரணதண்டனை அடைந்த கைதிகள் 2-அல்லது அதற்கு மேற்பட்டவர்களை ஒன்றுக்கொன்று கொஞ்சத்தூரத்திலிருக்கிற அறைகளில் அடைத்துவைத்திருந்தால், ஒவ்வொரு அறைக்கும் பிரத்தியேகமான காவற்காரர்களை வைக்கவேண்டும். தண்டனைக்கைதிகள் அடைக்கப்பட்டிருக்கிற அறைகள் சேர்ந்திருந்தால், 3-அறைக்கு ஒரே காவல் போதுமானது. தன் காவலிலிருக்கிற 3-தண்டனைப்பட்ட கைதிகளுக்கும் அந்தக் காவற்காரர்களே ஜவாப்தாரியாக யிருக்கவேண்டியது. ஒன்றாகச் சேர்ந்திருந்தாலும், 3-அறைகளுக்கு மேலிருந்தால் அதிகமாகவேறு காவல் வைக்கப்படவேண்டும். (ஜெயில் ரூல், 1024.)

406. ஒவ்வொருநாள் காலையிலும், மாலையிலும், கைதியையும் அவன் வைக்கப்பட்டிருக்கிற அறையையும், கைவிலங்கு கால்விலங்கு போடப்பட்டிருந்தால் அவைகளையும் ஜெயிலர், தானே நேரில் ஜாக்கிரதையாகச் சோதித்துப்பார்த்து, அவைகள் பலமாயும் பந்தோபஸ்தாயு மிருப்பதாகவும், அபாயமான ஆயுதமுதலியதுகள்யாதொன்றும் கைதியிடமில்லையென்றும் திருப்தி செய்துகொள்ளவேண்டும். அப்படிப் பரிக்ஷித்த சங்கதியை தன்னுடைய ரிப்போர்ட்டு புஸ்தகத்தில் பதிந்துகொள்ளவேண்டும். (ஜெயில் ரூல், 1025.)

407. மரணதண்டனை யடைந்த கைதிகள் தண்டனை விதிக்கப்பட்ட தெய்திமுதல் 12-மாதம்வரை அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றப்படாமலிருந்தாலும், வெறுங் காவல் தண்டனையை யடைந்தவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற சாப்பாடு போடப்படுவார்கள். ஏழுதப்படுகிற முகாந்திரங்களுக்காக மெடிகல் ஆபீசரால் சிபார்சு செய்யப்பட்டாலொழிய, அவர்களுக்கு வேறு விசேஷ சாப்பாடு கொடுக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 1026.)

408. மரணதண்டனை யடைந்தவனுக்குக் கொடுக்கப்படப்படும் சாப்பாடு ஜெயிலருக்கு முன்னிலையில் கொடுக்கப்படவேண்டும். அவர் அந்த ஆகாரத்தைக் கைதிக்குப் போடுமுன் நன்றாய் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். (ஜெயில் ரூல், 1027.)

409. மெடிகல் ஆபீசர் அவசியமென்று நினைக்கிறபடிக்குள்ள, வெளியரங்கமான காத்துள்ள இடத்தில் வைத்து, போதுமானபடி கண்டிப்பாயும் ஜாக்கிரதையாயுமுள்ள காவல்கார்ப்பில், மரணதண்டனை யடைந்தவனுக்குத் தேகாப்பியாசஞ்செய்ய இடங்கொடுக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1028.)

410. மேலேகண்ட விதிகள் அடியிற்கண்ட விலக்குகளுக்கு உட்படுத்தப்பட்டு மரணதண்டனை விதிக்கப்படப்பட்ட பெண்பிள்ளைகளுக்கும் சம்மந்தப்படும்.

(a) கைவிலங்காவது கால்விலங்காவது போடப்பட்டாலொழிய, தனக்கு மிகவும் கெடுதி செய்துகொள்வாளென்று, சூப்பிரிண்டெண்டாண்டு அபிப்பிராயப்பட்டாலொழிய, மரணதண்டனை விதிக்கப்படப்பட்ட பெண்பிள்ளைகளுக்குக் கைவிலங்காவது கால்விலங்காவது போடக்கூடாது.

(b) அந்தக் கைதிகளை சோதனைசெய்வது பெண்பிள்ளை வார்டர்கள் செய்யவேண்டும்.

411. மரணதண்டனை விதிக்கப்படப்பட்டவன் கேட்டுக்கொண்டால், அவனுடைய பந்துக்களும், சிநேகிதர்களும், வக்கீல் முதலியவர்களும், அவன் மதத்தைச்சேர்ந்த குருமாரும், சூப்பிரிண்டெண்டாண்டிடம் எழுத்துமூலமான உத்தரவு பெற்றுக்கொண்டு அவனைப் போய்ப்பார்க்கலாம். (ஜெயில் ரூல், 1030.)

412. மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவன் ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்வானேயாகில், அதைப்பற்றி சூப்பிரிண்டெண்டாண்டு டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்குத் தகவல் கொடுக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1031.)

413. கி. பு. கோடு 381-வது பிரிவுப்படி ஸெஷன்ஸ் கோர்ட்டிலிருந்து அனுப்பப்படுகிற வாறண்டும், மரணதண்டனையை உறுதிசெய்து ஹைக்கோர்ட்டிலிருந்து அனுப்பப்படுகிற தீர்ப்பும் கிடைத்தபிறகு, தண்டனையை நிறைவேற்றுவதற்காக சூப்பிரிண்டெண்டாண்டு உடனே ஒருநாள் குறிப்பிடுவார். மேலே கண்ட ரிக்கார்டுகள் கிடைத்த 11-வது நாள்தான் குறிப்பிடப்படும். அந்த 11-வது நாளானது ஞாயிற்றுக்கிழமை, கிறிஸ்து பிறந்த அல்லது இறந்த நாள் இவைகளில் எதுவாவதாகயிருந்தால், அதற்கு மறுநாள் குறிப்பிடப்படும். அடியில் 1034-வது ரூலில் சொல்லியிருக்கிறபடி கைதி கவர்ன்மெண்டாருக்கு மனுச்செய்துகொள்ள விரும்பாத விஷயத்தில், சூப்பிரிண்டெண்டாண்டினால் குறிப்பிடப்பட்ட தினத்தில் கைதியைத் தூக்கிவிடப்படும். (ஜெயில் ரூல், 1032.)

414. தீர்ப்பை நிறைவேற்றிவிடும்படி ஸெஷன்ஸ் கோர்ட்டிலிருந்து உத்தரவும், தீர்ப்பை உறுதிசெய்து ஹைக்கோர்ட்டிலிருந்து தீர்ப்பும் கிடைத்தவுடன், அவனுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை ஹைக்கோர்ட்டார் உறுதிசெய்துவிட்டதாயும், கைதிக்கு இஷ்டமுண்டானால், தன் விஷயமாய் இரக்கத்தைக்காட்டும்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களுக்கு மனுச்செய்துகொள்ளலாமென்றும், சூப்பிரிண்டெண்டாண்டு கைதிக்குநேரில் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லப்பட்டதுமுதல் 7-நாளைக்குள், இப்படிச் செய்ய இஷ்டமுண்டானால், தெரிவிக்கும்படி அவனுக்குச்சொல்லவேண்டும். ஹைக்கோர்ட்டுத் தீர்ப்புக்கு நகலையும், கைதி அப்படி விரும்பினால், அந்தத்தீர்ப்புக்கு தர்ஜிமாசெய்து அதையும் அவனுக்குக்கொடுக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1033.)

415. கைதி 7-நாளைக்குள் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்கு மனுச்செய்ய விருப்பமிருப்பதாகத் தெரிவித்தாலும், மனுச்செய்ய விரும்பினாலும், சூப்பிரிண்டெண்டாண்டு தண்டனையை நிறைவேற்றாமல்



நிறுத்திவிட்டு, கூடியசீக்கிரத்தில் கவர்ன்மெண்டு சீப் செக்ரெடெரிக்கு அந்த மனுவை அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். (ஜெயில் ரூல், 1034.)

416. மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிற கைதியால் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படுகிற ஒவ்வொரு மனுவும், கவர்ன்மெண்டு சீப் செக்ரெடெரிக்கே நேரில் சூப்பிரிண்டெண்டினால் அனுப்பப்படவேண்டும். மனுவின் பேரில் எழுதப்பட்டிருக்கும் சுருக்கமும், அந்த மனுவடக்கம் செய்யப்பட்டிருக்கிற கூட்டின் மேல்புறமும், "தயாளத்தைக்காட்டுவதற்காக அப்பீல்" என்று சிகப்பு மையினால் எழுதப்பட்டு, "அவசரம்" என்றும் எழுதப்படவேண்டும். இப்பேர்ப்பட்ட மனுக்கள் விஷயமாக 580-முதல் 586-வது ரூல் வரையில் கீழே சொல்லப்பட்டிருக்கிற ரூல்களைக் கவனித்து, ஸெஷன் ஜட்ஜி இந்தக்கேஸில் ரிக்கார்டு செய்துவைத்திருக்கும் சாக்ஷியத்தையும் மனுவுடன் அனுப்பவேண்டியது. (ஜெயில் ரூல், 1035.)

417. தண்டனையடைந்த ஒவ்வொரு கைதியும் தன்னை மன்னிக்கும்படி கவர்ன்மெண்டாருக்கு மனுத் தயார்செய்ய இடங்கொடுக்கப்படுவான். கைதிக்கே மனு எழுத நேரில் தெரியும்விஷயத்தில், எழுதுவதற்குக் கடிதாசி, மை, பேனா முதலிய அவசியமான எல்லாம் கொடுக்கப்படும். தண்டிக்கப்பட்ட ஒவ்வொரு கைதியும் தனக்கு மன்னிப்புக்கொடுக்கும்படி கவர்ன்மெண்டாருக்கு மனுத்தயார்செய்யும்பொருட்டு, தன் சிநேகிதர்களுக்குக் கடிதம் எழுதும்படிக்கும் அவர்கள் தயார்செய்கிற மனுவை அனுசரித்து மனுத் தயார்செய்யும்படிக்கும் இடங்கொடுக்கப்படுவான். ஒரு தண்டனைப்பட்ட கைதிக்கு மரணதண்டனையாவது, அல்லது தண்ணீர்மேலேற்றுந் தண்டனையாவது விதிக்கப்பட்டிருந்தாலொழிய, அல்லது சூப்பிரிண்டெண்டெண்டாவது அல்லது சட்டப்படி ஜெயிலைச்சுற்றிப்பார்க்க அதிகாரமுள்ள ஒரு உத்தியோகஸ்தராவது, அல்லது இன்ஸ்பெக்டர் ஜெனரலாவது, சில விசேஷ முகாந்திரத்தைவைத்து இந்தக் கைதி விஷயமாக விலக்குச் செய்யத்தான்வேண்டுமென்று நினைத்து உத்தரவு செய்தாலொழிய, தன்னை மன்னிக்கும்படி கவர்ன்மெண்டுக்கு எழுதப்படும் மனுக்களை கைதி சொல்லுகிற வாசகப்படிக்குக்கூட ஜெயில் உத்தியோகஸ்தர்களை எழுதும்படி சொல்லக் கைதிக்குப் பாத்தியதையில்லை. (ஜெ. ரூல், 580.)

418. ஒரு தண்டனைப்பட்ட கைதிக்காக ஜெயிலில் எழுதப்படுகிற ஒவ்வொரு மனுவும், சூப்பிரிண்டெண்டாண்டு அல்லது ஜெயிலர் முன்னிலையில் கைதிக்குப்படித்துக்காட்டப்பட்டு கைதியினால் கையெழுத்துச் செய்யப்படவேண்டும். கைதியினால் தனக்காக ஜெயிலில் எழுதப்படுகிற ஒவ்வொரு மனுவும், அல்லது அவன் சிநேகிதர்களால் அல்லது வக்கீல்களால் தயார்செய்யப்பட்டு அனுப்பப்படுகிற மனுக்களும், அல்லது அந்த மனுக்களை அனுசரித்து எழுதி அல்லது அதில் ஏதாவது சேர்த்து எழுதி கைதியினால் ஜெயிலில் தயார்செய்யப்படுகிற ஒவ்வொருமனுவும், ஜெயிலர் அல்லது சூப்பிரிண்டெண்டாண்டுக்கு முன்னிலையில் கைதியினால் கையெழுத்துச் செய்யப்படவேண்டும். அதே கேஸில் தண்டிக்கப்பட்டிருக்கிற கைதிகள் அந்த மனுவைப்போலவேயே தயாரித்துக் கூட அனுப்பலாம். (ஜெயில் ரூல், 581.)

419. ஜெயிலிலிருக்கிற தண்டனைப்பட்ட கைதியினால் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படுகிற ஒவ்வொரு மனுவும், (மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிற கைதிகளைத்தவிர மற்றக் கைதிகளால் அனுப்பப்படுகிற மனுவும்)

இனிஸ்பெக்டர் ஜெனரல் மூலமாக அனுப்பப்படவேண்டும். ஒரு கைதிக்காக ஜெயிலுக்கு வெளியிலிருக்கப்பட்ட அவன் சிநேகிதர்களால் தயார்செய்து அனுப்பப்பட்ட மனுக்களை கைதி ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்துச் செய்துவிட்டால், அந்த மனுவை ஏற்பட்ட ரிக்கார்டுகள் சகிதம் சரியான விதமாய் சூப்பிரின்டெண்டெண்டே கவர்ன்மெண்டாரவர்களுக்கு அனுப்புவார்களேயல்லது, அந்த மனுவைத் தயாரித்தனுப்பிய சிநேகிதர்களுக்கு திரும்ப அனுப்பப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 582.)

420. மனுதாருடைய கேசின் சங்கதிகளை விவரமாகக் காட்டக்கூடிய டை. கேசின் தீர்ப்பு சகிதம் ஒவ்வொரு மனுவும் அனுப்பப்படவேண்டும். தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கிற கைதி அப்பீல் செய்திருந்தால், அப்பீல் கோர்ட்டு தீர்ப்பின் நகலையும் சேர்த்து அனுப்பவேண்டும். ஸம்மன் கேசுகள் தவிர மற்றக் கேசுகளில் இந்த ரிக்கார்டுகள் யாதொரு செலவுமில்லாமல் எனுமாகக் கொடுக்கப்படும். (ஜெயில் ரூல், 583.)

421. கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படுகிற மனுக்களை எழுதினாலுமே, அச்சிட்டாலுமே 13-அங்குலம் நீளம், $8\frac{1}{2}$-அங்குல அகலமுள்ள காகிதத்தில் முடித்திருக்கவேண்டும். அவைகளை நீளத்தில் மடிக்கவேண்டுமேயல்லது, குறுக்கே மடிக்கக்கூடாது. போதுமான நீளம், அகலமுள்ள கவர்களில் அனுப்பப்படவேண்டும். வைத்திருக்கும் ரிக்கார்டுகளுக்குச் சரியானபடி நம்பர்போட்டு, சுருக்கம் முதலியதுகள் எழுதப்பட்டிருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 584.)

422. தண்டனைப்பட்ட கைதியினால் கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்படுகிற ஒவ்வொரு மனுவும், தனிப்படவாவது அல்லது தனிப்பட எழுதப்பட்ட லெட்டருடன் சேர்த்தாவது அனுப்பப்படும். இதனால் அதே கேசில் தண்டனை யடைந்திருக்கிற கைதிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் அனுப்பப்படுகிற மனுக்களை ஒரே லெட்டருடன் சேர்த்து அனுப்பிவிடலாம். ஒரே லெட்டருடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மனுக்கள் அனுப்பப்பட்டால் அவைகளின்கூட ஒரு ஜாபிதாவும் அனுப்பவேண்டும். மனுவுடன் அனுப்புகிற தஸ்தாவேசுகளை ட்வைன் கயர் போட்டுத்தைக்கவேண்டியது. (ஜெயில் ரூல், 585.)

423. தமிழில் எழுதப்பட்ட ஒவ்வொரு மனுவுக்கும், இங்கிலீஷில் தர்ஜிமாச் செய்துவைக்கப்படவேண்டும். டிம்மி காகிதத்திலேயே எழுதப்பட்டிருக்கவேண்டும். கைதியின் விபரஜாபிதா ஒன்று கூட அனுப்பவேண்டும். கைதியால் கொடுக்கப்பட்ட மனுவிலும், இங்கிலீஷ் தர்ஜிமாவிலும், சூப்பிரின்டெண்டாண்டும் கையெழுத்துப்போடவேண்டும். தண்டிக்கப்பட்டவனுடைய சொந்த வார்த்தையில் யெழுதப்பட்டிருக்கிற சுதேச பாஷையிலுள்ள மனுவையும், இங்கிலீஷ் தர்ஜிமாவையுஞ் சேர்த்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பவேண்டும். (ஜெயில் ரூல், 586.)

424. பின் வருகிற 1038 - 1039 - வது ரூல்களில் சொல்லப்பட்ட கேஸ்கள் தவிர மற்றக் கேசுகளில், கவர்ன்மெண்டிலிருந்து தெளிவான பதில் வருகிறவரை, கைதியின் தீர்ப்பை நிறைவேற்றப்படமாட்டாதென்ற ஸர்டிபிகேட்டையும், தயானத்தைச் செலுத்தும்படி அனுப்புகிற அப்பீலுடன்போகிற லெட்டருடன், சூப்பிரின்டெண்டாண்டு சேர்க்கவேண்டும். டை மனு



அனுப்பின தெய்திமுதல் ஒரு மாஸத்துக்குள் யாதொருபதிலும் கிடைக்காவிட்டால், இதுவிஷயத்தை ஞாபகப்படுத்தி கவர்ன்மெண்டு சீப் செக்ரெடெரிக்கு சூப்பிரின்டெண்டாண்டு லெட்டர் எழுதவேண்டும். (ஜெயில் ரூல், 1036.)

425. கைதிக்குச் செய்திருக்கிற தீர்ப்பு விஷயத்தில் கவர்ன்மெண்டாரவர்கள் பிரவேசிக்கமாட்டார்களென்ற விபரத்துக்கு உத்திரவு வந்துவிட்டால், அந்த கைதியின் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு உத்தரவு கிடைத்தது முதல் 7 - நாளைக்குக் குறையாமலும், 14 - நாளைக்கு மேற்படாமலும் ஒரு நாளைக் குறிப்பிட்டு அது விபரத்தையும், இந்தியா கவர்ன்மெண்டாரவர்களுக்காவது அல்லது மகிமைதங்கிய சக்கிரவர்த்தியவர்களுக்காவது அப்பீல் செய்ய இஷ்டமிருந்தால் அப்படிச் செய்யலாமென்றும், அது விபரத்தை 5-நாளைக்குள் தெரிவிக்கவேண்டுமென்றும் சூப்பிரின்டெண்டாண்டு கைதிக்குச் சொல்லவேண்டியது. (ஜெயில் ரூல், 1037.)

426-A. (1) 5-நாளைக்குள், இந்தியா கவர்ன்மெண்டாரவர்களுக்காவது அல்லது மாகுமைதங்கிய சக்கரவர்த்தி யவர்களுக்காவது அல்லது இருவருக்குமாவது அப்பீல் செய்யத்தனக்கு இஷ்டமிருப்பதாகக் கைதிதெரிவித்தால், சூப்பிரின்டெண்டாண்டு, தண்டனை நிறைவேற்றுவதை நிறுத்திவிட்டுக் கூடியசீக்கிரத்தில் கவர்ன்மெண்டு சீப் செக்ரெடெரிக்கு டை மனுவை அனுப்புவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டாருக்காவது, சக்கிரவர்த்தியவர்களுக்காவது, அல்லது இருவர்களுக்குமாவது மனு அனுப்பின தெய்திமுதல் 10-நாளைக்குக்குறையாமலும், 14-நாளைக்கு மேற்போகாமலும் [illegible] தண்டனையை நிறைவேற்ற வேறு ஒரு நாளைக் குறிப்பிட்டுவிடவேண்டியது.

(2) தீர்ப்புக்களின் நகல்கள் டை மனுக்களுடன் அனுப்பப்படவேண்டியதில்லை. மனுக்களை மட்டும் சீப் செக்ரெடெரிக்கு உடனே அனுப்பிவிட்டு, தண்டனை நிறைவேற்றுவதற்கு இன்னதெய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறதென்பதையும் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

(3) இந்தியா கவர்ன்மெண்டாராவது, அல்லது சக்கிரவர்த்தியவர்களாவது பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளாமல் கைதிக்கு அனுகூலமான விதமாய் யோசிக்கும்படியான சங்கதிகள் ஏதும் மனுவில் காணப்படவில்லை யென்றாவது, அல்லதுதீர்ப்பை நிறைவேற்றக் குறிப்பிட்டிருக்கும் வாயிதாவுக்குள் யோசனை செய்து பைசல் செய்யக்கூடியவிதமாய் மனுவை அனுப்பச் சாவகாசமில்லையென்றாவது பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படும் விஷயத்தில், இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு டை மனுக்களை அனுப்பாமலேயே வைத்துக்கொண்டு அது விபரத்தை சூப்பிரின்டெண்டாண்டுக்குத் தெரிவித்துவிடலாம். அவர் குறிப்பிட்ட மேற்

கண்ட தினத்தில் தீர்ப்பை நிறைவேற்றிவிடலாம். பிரதேசகவர்ன்மெண்டார் மனுவை இந்தியா கவர்ன்மெண்டுக்கும் சக்கிரவர்த்தி அவர்களுக்கும் அனுப்ப இசையும் விஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டிலிருந்தும் சக்கிரவர்த்தியவர்களிடத்திலிருந்தும் அதுவிஷயமாய் உத்தரவுகிடைக்கும்வரை தீர்ப்பை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கும்படி பிரதேச கவர்ன்மெண்டார் சூப்பிரின்டெண்டாண்டுக்கு உத்தரவு செய்வார்கள்.

(4) தண்டனையை நிறைவேற்றுவதற்குக் குறிப்பிடப்பட்டிருக்கிற தினத்துக்கு 2-தினத்திற்குமுன் வரை இந்தியா கவர்ன்மெண்டாருக்கும், சக்கிரவர்த்தியவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிற மனுவிஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரவர்களிடத்திலிருந்து யாதொரு உத்தரவும் கிடைக்காத விஷயத்தில், இதுசங்கதியை ஞாபகப்படுத்தி சூப்பிரின்டெண்டாண்டு ஒரு தந்தி சீப் செக்ரெடெரிக்குக் கொடுக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1038.)

426. மேலே 1033-வது ரூலில் கண்டபடி 7-நாளைக்குள், தயாளத்தைச் செலுத்துவதற்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களுக்கு மனுச்செய்வதில் தனக்கிஷ்டமிருப்பதைத் தெரிவிக்காமலாவது, அல்லது 1037-வது ரூலில் கண்டபடி இந்தியா கவர்ன்மெண்டாருக்காவது, அல்லது சக்கிரவர்த்தியாரவர்களுக்காவது மனு அனுப்ப தனக்கு இஷ்டமிருக்கும் விபரத்தை 5-நாளைக்குள் தெரிவிக்காமலாவது யிருந்துவிட்டு அப்பால் அப்படிச் செய்யத் தனக் கிஷ்டமிருப்பதாகத் தெரிவித்தால், கொஞ்சமும் தாமதமின்றி சூப்பிரின்டெண்டாண்டு மனுவை சீப் செக்ரெடெரிக்கு அனுப்பவேண்டும். தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு குறிப்பிட்டிருக்கிற தினத்துக்கு 24-மணிநேரத்துக்குமுன்னாடி, ஷை மனு சீப் செக்ரெடெரிக்குக் கிடைப்பதற்கு மார்க்கமில்லாதவிஷயத்தில், மனுவின்சங்கதியைதந்திமூலமாய் சூப்பிரின்டெண்டாண்டு தெரிவிக்கவேண்டும். கவர்ன்மெண்டார் அவர்களால் அப்படிச் செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டாலொழிய வாயிதாவில் தீர்ப்பை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கப்படமாட்டாது. (ஜெயில் ரூல், 1039.)

427. பிரதேச கவர்ன்மெண்டார் தீர்ப்பை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கும்படி உத்திரவு செய்யும்விஷயத்தில், இரக்கத்தைச் செலுத்தும்படி அனுப்பப்பட்ட மனுவை கவர்ன்மெண்டார் நிராகரித்துவிட்டதாகக் கடாசியாக பைசல் வந்தவுடன் 1037-வது ரூலில் கண்ட நிபந்தனையின்படி தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக சூப்பிரின்டெண்டாண்டு வேறு நாளை குறிப்பிடுவார். (ஜெயில் ரூல், 1040.)

428. தீர்ப்பைக் கடாசியாக நிறைவேற்றுமுன் எப்பொழுதாவது, கைதிக்குச் செய்யப்பட்ட தீர்ப்பைப்பற்றி புனராலோசனை செய்யவேண்டுவது அவசியமென்று காட்டக்கூடிய புதிதாயும் முக்கியமாயுமுள்ள சாட்சியம் கிடைத்திருப்பதாகவாவது, அல்லது கைதியைத் தண்டனையிலிருந்து விலக்கக்கூடிய விசேஷ ஸங்கதிகளிருப்பதாகவாவது சூப்பிரின்டெண்டாண்டுக்குத் தெரியவந்தால், மேற்கண்ட ரூல்களில் எப்படிச் சொல்லப்பட்டிருந்தாலும் அதுவிஷயத்தை கவர்ன்மெண்டாருக்குத் தந்திமூலமாகத் தெரிவிக்கவும், கவர்ன்மெ



ண்டார் உத்தரவு வரும்வரை தீர்ப்பை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கவும் சூப்பிரின்டெண்டாக்கு சுவாதந்திரமுண்டு. (ஜெயில் ரூல், 1041.)

429. மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிற ஒரு பெண்பிள்ளைக் கைதி கர்ப்பமாக யிருப்பதாக மெடிகல் ஆபீஸரால் ஸர்டிபை செய்யப்பட்டால், அது விபரத்தை சூப்பிரின்டெண்டாண்டு வாறண்டில் குறித்து அந்த வாறண்டை ஸெஷன் ஜட்ஜிக்கு வாப்ஸ் செய்யவேண்டியது. அப்பால் ஹைகோர்ட்டார் கி. பு. கோடு 382-வது பிரிவுப்படி தீர்ப்பை நிறைவேற்றாமல் நிறுத்திவிடும்படி உத்திரவு செய்துவிட்டு, அந்தத் தீர்ப்பை ஆயுசபரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படி தீர்ப்பாக மாற்றினாலும் மாற்றிவிடலாம். (ஜெயில் ரூல், 1042.)

430. மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிற ஒரு பெண்பிள்ளைக் கைதியானவள் தான் கர்ப்பமாயிருப்பதாகச் சொல்லிக்கொண்டும், மெடிகல் ஆபீசர் ஷை பெண்பிள்ளை கர்ப்பமாயிருப்பதாகவாவது அல்லது கர்ப்பமில்லையென்றாவது தெளிவான அபிப்பிராயத்தை அப்போது சொல்லமுடியாதென்றுஞ் சொல்லப்படுகிற கேசுகளில், இது சங்கதியையும், அந்தப் பெண்பிள்ளை கர்பமாகயிருக்கிறான் அல்லது இல்லை என்று நிதானிக்க இவ்வளவுகாலம் வேண்டுமென்ற விபரத்தையும் மெடிகல் ஆபீசர் யெழுத்து மூலமாகச் சொல்லவேண்டும். இந்த ரிக்கார்டை வாறண்டுடன்கோர்த்து ஸெஷன் ஜட்ஜிக்கு சூப்பிரின்டெண்டாண்டு அனுப்பவேண்டும். அப்பால் கர்ப்பமாயிருப்பது வாஸ்தவமென்று தெரியவந்தால், மேல்கண்ட ரூலில் சொல்லப்பட்டபடி நடவடிக்கைகள் நடத்தப்படும். (ஜெயில் ரூல், 1043.)

431. மேல்கண்ட இரெண்டு ரூல்களில் எதின்படிக்காவது ஒரு பெண்பிள்ளைக்கைதிக்கு விதிக்கப்பட்ட மரண தெண்டனையானது நிறுத்திவைக்கப்பட்டால் பின்னீடு கவர்ன்மெண்டாருடைய தெளிவான உத்தரவில்லாமல் அந்தப்பெண்பிள்ளைவிஷயமாய் மரணதெண்டனையை நிறைவேற்றப்படாது. இந்த கைதிவிஷயமாய் என்னசெய்கிறதென்ற விஷயத்தைப் பற்றி சூப்பிரின்டெண்டாண்டு, இன்ஸ்பெக்டர் ஜெனரல்மூலமாக கவர்ன்மெண்டாரைக் கேழ்க்கவேண்டியது. (ஜெயில் ரூல், 1044.)

432. மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியினுடைய சாட்சியமானது எதாவது கேஸில் தேவையாயிருந்தால், அந்த சாக்ஷியத்தை ரிக்கார்டு செய்யும்படிக்காக ஷை சாட்சியம் தேவையாயிருக்கிற கோர்ட்டார் ஷை கைதி வைக்கப்பட்டிருக்கிற ஜெயிலுக்குப் போகவேண்டியதேயல்லாமல், 1900-ம் வருஷத்திய 3-வது ஆக்டாகிய கைதிகளின் ஆக்டுப்படி ஷை கைதியைத் தன்முன் கொண்டுவரும்படி உத்தரவு செய்யக்கூடாது. அதே சேக் விஷயமாய், கி. பு. கோடு 428-வது பிரிவுப்படி எடுக்கப்படுகிற ஜாஸ்தி சாட்சியத்திற்காக ஷை கைதியின் சாக்ஷியமானது ஒரு செஷன் கோர்ட்டாருக்காவது, ஹைகோர்ட்டாருக்காவது தேவையாகயிருந்தால் ஷை கைதியை கைதி ஆக்ட்டுப்படிக்கு அந்தக் கைதியைக் கோர்ட்டுக்குக் கொண்டுவரும்படி உத்தரவு செய்யலாம். (ஜெயில் ரூல், 1045.)

குறிப்பு:—ராஜாங்கத்துக்கு விரோதமாகக் குற்றஞ்செய்த கைதிகளையாவது, மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியையாவது, கவர்ன்மெண்டாருடைய விசேஷ உத்தரவில்லாமல் கைதி ஆக்ட்டுப்படி கோர்ட்டுக்கு கொண்டு போகக்கூடாது. ஆனால் கி. பு. கோடு 428-வது பிரிவுப்படி அதிகச்சாட்சியம்

எடுப்பதற்காக கைதியை ஷெஷ்ஷன் ஜட்ஜி ஹைகோர்ட்டார் அவர்கள் முன் அபேக்ஷித்தால் கொண்டுபோகலாம்.

433. தீர்ப்பு நிறைவேற்றுவதற்காக அனுப்பப்படும் வாறண்டில் வியக்தமாக வேறுவிதமாக உத்தரவு செய்யப்பட்டாலொழிய, எந்த ஆபீசருக்கு அந்த வாறண்டு அனுப்பப்பட்டிருக்கிறதோ அவரிருக்கும் இடத்திலும், ஷை கைதி வைக்கப்பட்டிருக்கிற அந்த ஜெயில் இலாகாவுக்குள்ளும் தான் தண்டனை நிறைவேற்றப்படும். ஜெயில் கட்டடத்துக்குள்ளில்லாமல், ஜெயிலைச் சேர்ந்ததும் இதற்காகவே அமைக்கப்பட்டிருக்கிறதுமான வளைவுக்குள் தீர்ப்பை நிறைவேற்றப்படும். குற்றம் நடந்த இடத்திலேயே வைத்துக் கைதிக்கு தண்டனையை நிறைவேற்றவேண்டுவது முக்கியமென்று டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டு நினைத்தால், அந்தப்படி செய்யும்படி கவர்ன்மெண்டாரிடமிருந்து டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டு உத்தரவு பெறும்வரை தண்டனையை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கப்படும். (ஜெயில் ரூல், 1046.)

434. ஜெயில் இலாகாவிலேயே தண்டனை நிறைவேற்றப்படும் விஷயத்தில், சிலர் இருந்து ஷை தண்டனை நிறைவேற்றுவதை பார்ப்பதற்குப் போதுமான இடம் அமைத்து ஒரு வளைவு உண்டாக்கவேண்டும். இந்த இடத்துக்குள் தகுந்த வயதுவந்த கண்ணியமுள்ள ஆண்பிள்ளைகளை மாத்திரம் டிக்கட்டின்பேரில் வரவழைக்கலாம். இந்த டிக்கட்டுகளை சூப்பிரின்டெண்டாண்டுக்கு எழுத்துமூலமாகக்கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஜெயிலிலிருக்கிற கைதிகளுக்குத் தூக்குத்தீர்ப்பு நிறைவேற்றுவதைப் பார்க்கும்படி இடங்கொடுக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 1047.)

435. தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு முதல்நாள் சாயந்திரமே தூக்குமரத்தை கட்டு, தூக்குக்கயிற்றை சூப்பிரின்டெண்டாண்டுக்கு முன்னிலையில் பரிக்ஷித்துப்பார்க்கவேண்டும். இந்த ஏற்பாடுகள் ஒழுங்கான விதமாகச் செய்யவேண்டிய விஷயத்தில், அவரே நேரில் ஜவாப்தாரியாகயிருக்கிறார். கயிற்றைப் பரிசோதித்துப்பார்ப்பதில், தூக்குப்போடவேண்டிய நபரின் இடைக்குக் கால்பங்கு அதிக இடையுள்ள ஒருவஸ்துவைச் சாதாரணமாகத் தாங்கக்கூடியதாக உள்ள கயிற்றை உபயோகப் படுத்தவேண்டியது. ஒவ்வொரு தூக்குத்தண்டனை நிறைவேற்றுவதற்கும் சென்னபட்டணம் பெனிடென்ஷியரியிலிருந்து வாங்கிக்கொள்ளப்படுகிற புதிதான கயிற்றையே உபயோகிக்கவேண்டும். 12 மாதங்களுக்கு இருப்பு வைக்கப்பட்ட கயிர்களை உபயோகிக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 1048.)

436. தூக்கில் போடவேண்டிய நபரின் இடைக்குத்தக்கபடி கணக்குப்பார்த்து யேற்படுத்தியிருக்கிற அடியிற்கண்ட நீளமுள்ள கயிர் உபயோகப்படுத்தப்படவேண்டும். (ஜெயில் ரூல், 1049.)

| | |
|---|---|
| 98-ராத்தல் இடைக்குள்ளிருக்கிற கைதிக்கு | 6½ அடி. |
| 126-ராத்தலுக்குள்ளிருக்கிற கைதிக்கு | 6 அடி. |
| 154-ராத்தலுக்குள்ளிருக்கிற கைதிக்கு | 5½ அடி. |
| 154-ராத்தலும் அதற்கு மேற்பட்டு மிருக்கிற கைதிக்கு | 5 அடி. நீள |

முள்ள கயிற்றை உபயோகிக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1049.)

437. ஒவ்வொரு தூக்குத்தண்டனையும், பொழுது விடிந்த பிறகு கூடிய சீக்கிரத்தில் அதிகாலையில் நிறைவேற்றப்படும். சூப்பிரின்டெண்டாண்டும், மெடிகல் ஆபீசரும் இருவரும் ஆஜரிருக்கவேண்டும். தூக்குத் தண்டனை நிறைவேற்றும்பொழுது ஒரு மாஜிஸ்திரேட்டும் ஆஜரிருக்கவேண்டும். சென்னப்பட்டணம் பெனிடென்ஷியரியில் தூக்குத்தண்டனைத் தீர்ப்பு நிறைவேற்றப்பட்டால், போலீஸ் டிப்டி கமிஷனர் ஆஜரிருக்கவேண்டும். (ஜெயில் ரூல், 1051.)



438. தூக்குப்போடப்போகிறவனை ஜெயில் அறையை விட்டுக்கொண்டு போகுமுன், அவன் கைகளை பின்பக்கத்தில் வைத்து இரெண்டு கைகளின் மணிக்கட்டுகளையுஞ்சேர்த்துக் கைவிலங்கு போட்டுக்கொண்டுபோகவேண்டும். அவனைத் தூக்கு மரமிருக்கிற இடத்துக்கு ஒரு பொறுப்புள்ள அதிகாரியும் அவருக்குட்பட்ட 4 வார்டர்களுக்குக் குறையாத எண்ணிக்கையுள்ள வார்டர்களுமடங்கிய பந்தோபஸ்தின்பேரில் கொண்டுபோகவேண்டும். (ஜெயில் ரூல், 1051.)

439. தூக்குப்போடப்போகிற நபரைப்பிடித்து மீட்டுக்கொண்டு போய்விடுகிறதற்காக யேதாவது முயற்சை செய்யப்படும்பக்ஷத்தில், அதைத்தடுக்கும் பொருட்டு ஆயுத பாணிகளாக யிருக்கப்பட்ட 10 வார்டர்களுக்குக் குறைவில்லாத கார்டு தூக்குமரத்துக்கு முன் நிற்கவேண்டும். ஜெயில் சிப்பந்தி குறைவாகயிருந்தால் இந்தக்காவலைக்கொடுக்கும்படி ஜில்லாசூப்பிரின்டெண்டாண்டைக் கேட்டுக்கொள்ளலாம். (ஜெயில் ரூல், 1052.)

440. தூக்குப்போடவேண்டிய நபர் தூக்குமரம் போய்ச்சேர்ந்தவுடன், தூக்குவதற்காகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிற வாறண்டை சூப்பிரின்டெண்டாண்டு, உறக்க இங்கிலீஷில் படிக்கவேண்டியது. அதை ஜெயிலராவது வேறு ஜெயில் உத்தியோகஸ்தராவது கைதி சுதேசபாஷையில் தர்ஜிமாச் செய்யவேண்டியது. அப்பால் சூப்பிரின்டெண்டாண்டும், ஜெயிலரும், ஜெயில் ரிஜிஸ்டர்களைப் பார்வையிட்டு, தூக்கு வாறண்டில்க்கண்ட நபர் இவன்தானென்று அடயாளங்காட்டவேண்டியது. (ஜெயில் ரூல், 1053.)

441. தூக்கப்படவேண்டிய நபருடைய கைகளை பிற்பாடு உடம்போடு சேர்த்துக்கட்டியும் கணுக்கால்களை சேர்த்துக்கட்டியும் விடவேண்டியது. (ஜெயில் ரூல், 1054.)

442. தூக்குப்போடப்பட்ட கைதியின் உடம்பு ஒரு மணி நேரம் தொங்கிக்கொண்டிருக்கவேண்டும். அப்பால், மெடிகல் ஆபீசர் பரிக்ஷித்துப் பார்ப்பார். மெடிகல் ஆபீசர் அந்தக்கைதியின்பிராணன் போய்விட்டதென்று சொல்லும்வரை அந்தச் சரீரத்தைக் கீழே இறக்கிவைக்கக்கூடாது. (ஜெயில் ரூல், 1056.)

443. தூக்குப்போடப் பட்டவர்களின் பிரேதத்தை தூக்குப்போட்ட பிறகு தூக்குமரத்தில் வைக்கப்படமாட்டாது. சில குறிப்பிட்ட கேசுகளில் அப்படிச்செய்யக்கூடாதென்பதற்கு விசேஷ முகாந்திரங்களிருந்தாலொழிய, அப்படிக்கேட்டுக்கொண்டால் பிரேதத்தின் இஷ்டர்கள் வசம் பிரேதத்தைக் கொடுத்துவிடப்படும். (ஜெயில் ரூல், 1056.)

444. தூக்குத்தண்டனையைப் பூராவும் நிறைவேற்றிய பிறகு அடியிற்கண்ட பிரகாரம் ஷை தண்டனை நிறைவேற்றப்பட்டதென்று வாறண்டில் குறித்து அதை அது எந்த கோர்ட்டாரால் அனுப்பப்பட்டதோ, அந்தக்கோர்ட்டுக்கு சூப்பிரின்டெண்டாண்டு வாப்ஸ் செய்துவிடவேண்டும். (ஜெயில் ரூல், 1057.)

பேரில் செஷன் கோர்ட்டாரால் விதிக்கப்பட்டு ஹைகோர்ட்டாரால் உறுதி செய்யப்பட்ட தூக்குத்தண்டனையை முறையே நிறைவேற்றப்பட்டது. டை னை இடத்தில்

௦ கழுத்தில் கயிர் போட்டு அவன் உயிர்போகும் வரை தூக்கப்பட்டது.

டை னுடைய சரீரத்தை ஒருமணி நேரம் தொங்கிக்கொண்டிருக்கும்படி வைத்து, கூடயிருந்த மெடிகல் ஆபீசர் டை சரீரத்தை விட்டு உயிர் ஜாடாவாகப் பிரிந்துபோய் விட்டதாக அபிப்பிராயம் கொடுத்ததின் பேரில் தான் டை சரீரத்தை கீழே இறக்கிப்போடப்பட்டதென்றும், அப்பால் பிரேதத்தை ஜெயிலைச்சேர்ந்த பிரேதம் புதைக்கிற இடத்தில் புதைக்கப்பட்டது அல்லது பிரேதத்தின் இஷ்டர்கள் வசம் ஒப்பிவைக்கப்பட்டதென்றுவது, என்றும் தண்டனை நிறைவேற்றுங்காலத்தில், துரிதம் ஒன்றும் நேரவில்லையென்றும் இதனுல் நான் சொல்லுகிறேன்.

ஸூப்பிரின்டெண்டெண்டு.

# அத்தியாயம் 6.

445. இந்தச் சென்னை ராஜதானியில், குற்றச்செய்கைகள் ஸம்மந்தமான கேசுக்களைப்பற்றி விசாரித்து, குற்றஞ்செய்தவர்களென்று குற்றஞ் சாட்டப்பட்டவர்களை அவர்கள்பேரில் குற்றம் ருசுவானுல் தண்டனை செய்யவும், குற்றம் ருசுவாகாவிட்டால் விடுதலை செய்யவும், பின்னும் வேறு விதமான தக்க நியாயமானபடிக்குள்ள பைசலைச்செய்யவும் அதிகாரமுள்ள கிரிமினல் கோர்ட்டுகள் எவைகளென்று அசேஷ ஜனங்களுக்குந் தெரிந்திருக்கவேண்டியது அவசியம். ஆகையால் அவைகளை அடியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

## 446. குற்றச்செய்கைகளைப்பற்றி விசாரிக்க அதிகாரமுள்ள கிரிமினல் கோர்ட்டுகள்.

(1) கிராம மாஜிஸ்திரேட்டு.

(2) 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு.

(3) 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு.

(4) 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு.

(5) ராஜதானி மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுகள். இவை சென்னப்பட்டணம் நீஸ்பாவுக்கு மாத்திரம் வெளியூர்களில் 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுகளெப்படியோ, அப்படியிருக்கின்றன.

(6) ஸெஷன் கோர்ட்டு.

(7) ஹைகோர்ட்டு. இது கி. பு. கோடினுல் ஏற்படுத்தப்பட்ட கிரிமினல் கோர்ட்டல்ல. ராயல் சார்ட்டரினுல் ஏற்படுத்தப்பட்டது இது சென்னப்பட்டணத்துக்கு மாத்திரம் ஸெஷஷன் கோர்ட்டாக யிருக்கிறது.

### மேற்கண்ட கிரிமினல்கோர்ட்டு ஒவ்வொன்றையும் பற்றிய விஷயங்கள்.

447. (1) **கிராம மாஜிஸ்திரேட்டு:**—இவர் கிரிமினல் புரொஸீஜர் கோடினுல் நியமிக்கப்பட்ட மாஜிஸ்திரேட்டு அல்ல. இவர், குற்றச்செய்கைகள் விஷயமாய் விசாரணை செய்யுங் கேசுகளுடைய நடவடிக்கைகளுக்குக் கிரிமினல் புரொஸீஜர் கோடின் நிபந்தனைகள் ஸம்மந்தப்படமாட்டாது. இவர் தனிந்த வகுப்பு மாஜிஸ்திரேட்டாக யிருந்தாலும், இவரைக்கொண்டே கவர்ன்மெண்டாருக்கும், இவர் அதிகார எல்லைக்குளிருக்கப்பட்ட எல்லா ஜனங்களுக்கும், முக்கியமாயுள்ள சகல அலுவல்களும் நடந்தேற வேண்டியதாகயிருக்கிறது.

(2) இவர் எந்தக் கிராமத்திற்கு மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டிருக்கிறாரோ, அந்தக்கிராமத்திலுள்ள சகல ஜனங்களுடையவும் தேகம், சொத்து முதலியவற்றிற்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் பந்தோபஸ்துச் செய்துகொடுக்கும் விஷயத்தில் சகல பிரதம அதிகாரமும் உள்ளவர். ஆகையால் அந்தக் கிராமத்திற்கும் இவர் பெரியதனக்காரராக யிருக்கிறார். இவர் தன் கிராமத்தில் கவர்மெண்டாருடைய பிரதிநிதியாக யிருக்கிறார். தன் கிராமத்திற்குப் போலீஸ்தலைவராயுமிருக்கிறார்.

(3) இவர், தான் மாஜிஸ்திரேட்டாகயிருக்கும் கிராமத்திற்கு, கிராமமுனிசிபு அதிகாரமும் வகிப்பவர். இவர் கிராமத்திலுள்ள குடித்தனக்காரர்கள் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய நிலத்தீர்வை, வருமானவரி முதலிய சகலத்தையும் வசூல் செய்து செலுத்தவேண்டிய கடமையும் அதிகாரமும் இவருக்கு உண்டு. கவர்ன்மெண்டு எந்த டிபார்ட்டுமெண்டைச்சேர்ந்த அலுவல்கள் இவர் கிராமத்தில் நடந்தாலுமே, இவர் தகவலில்லாமலும், இவர் உதவியை அபேக்ஷிக்காமலும் நடத்தப்படுகிற அலுவல்கள் யாதொன்றுமே இடையாது.

(4) பெரும்பாலும் கிராமமுனிசிபுகளே கிராம மாஜிஸ்திரேட்டுகளாக யிருக்கிறார்கள். கிராம முனிசிபுகள் 1889-ம் வருஷத்து 1-வது ஆக்ட்டின்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

448. சென்னை ராஜதானியில் கிராம மாஜிஸ்ரேட்டு 1816-ம் வருஷத்திய 11-வது ரெகுலேஷன் என்னும் சட்டம் 10-வது பிரிவுப்படி சொற்பத் தாக்குதல், வாய்ச்சச்சரவு (அதாவது ஒருவருக்கொருவர் திட்டிக்கொள்ளுதல், சண்டை போடுதல்) முதலிய குற்றங்களையும், 1821-ம் வருஷத்து 4-வது ரெகுலேஷன் என்னுஞ் சட்டம் 6-வது பிரிவின்படி அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்ட அல்பக்களவு கேசுகளையும் விசாரிக்கலாம்.

(1) ஒரு கட்டடம் முதலியவற்றிலிருந்து திருடப்படாமலிருக்கவேண்டும். (2) திருடினவன் திருட்டுக்கொடுத்தவனுடைய வேலைக்காரனாகவாவது, சம்பளக்காரனாகவாவது, கூலிக்காரனாகவாவது இல்லாமலிருக்கவேண்டும் (1864-ம் வருஷம் ஆகஸ்டு 17உ போட்ட சென்னை ஹைக்கோர்ட்டு புரொஸீடிங்ஸைப் பார்க்க.) (3) களவு செய்யப்பட்ட சொத்தின் கிரயம் ஒரு ரூபாய்க்கு மேற்படாமலிருக்கவேண்டும். (4) திருடப்பட்ட சொத்தானது எவனுடைய வசத்திலிருக்கும் பலாத்கார முதலியதுகள் செய்யப்பட்டு எடுத்துக்கொள்ளப்படாமலிருக்கவேண்டும்; (5) திருடிய மனிதன் முன் திருட்டுக் குற்றத்திற்காக தண்டனை யடைந்த பழைய குற்றவாளியாகவாவது பிரபல துஷ்டனாகவாவது, இல்லாமலிருக்கவேண்டும். இந்த நிபந்தனைகளுக்குட்பட்ட அல்பக்களவு கேசுகளை கிராமமுனிசிபு மாஜிஸ்திரேட்டுகள் விசாரித்துப் பைசல் செய்யலாம்.

## கிராம மாஜிஸ்திரேட்டுகளின் முன் விசாரணை செய்யப்படுங் கேசுகளின் விஷயமாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய சங்கதிகள்.

449. 1. அற்பக் குற்றங்களைப்பற்றித் தனக்குத் தெரியவந்தபொழுதாவது, [குற்ற]ம் செய்யப்பட்டபொழுதாவது, அல்லது குற்றம் செய்யப்படுவதைத்தான் நேரில் பார்த்தபொழுதாவது, கிராம முனிசிபு மாஜிஸ்திரேட்டுகள் விசாரித்துப் பைசல் செய்யலாம்.



2. தன் அதிகார எல்லைக்கு வெளியில் நடக்கிற குற்றச் சங்கதிகளை விசாரிக்கக் கிராம முனிசிபு மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரமில்லை. (மதராஸ் ஹைக்கோர்ட்டு 1882-ம் வருஷத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 21; 1885-ம் வருஷத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 198, இவைகளைப் பார்க்க.)

3. தன் அதிகார எல்லைக்கு வெளியிலிருக்கப்பட்ட சாக்ஷிகளுக்கு ஸம்மன் அனுப்ப, கிராம மாஜிஸ்திரேட்டுகளுக்கு அதிகாரமில்லை. (இந்தியன் லா ரிப்போர்ட்டு மத்ராஸ் ஸீரிஸ் 5-வது வால்யூம் 230-வது பக்கம்; 1881-ம் வருஷத்து கிரிமினல் ரிவிஷன் கேசு நெ. 13[illegible] இவைகளைப் பார்க்க.)

4. ஸ்வல்ப கேஸுகளைப் பிடிக்கக் கிராமப் பெரியதனக்காரரல்லாத மணியக்காரருக்கு அதிகாரமில்லை.

5. கிராமப் பெரியதனக்காரர் தம்முடைய கிராமம் தவிர வேறே எந்த கிராமத்திலுஞ் செய்யப்பட்ட குற்றத்தைப் பரிசிலனைபண்ண அவருக்கு அதிகார வரம்பு இடையாது. (சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டு 1882 வருஷத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 201.)

6. கிராமப்பெரியதனக்காரர்களால் பிறப்பிக்கப்பட்ட ஸம்மன் முதலிய கட்டளைகளைச்சேர்ப்பிப்பதும், ஸ்வல்ப கேஸுகள் பரிசிலனையாகுங்காலத்திலே கிராமப் பெரியதனக்காரரிடத்தில் ஹாஜராயிருப்பதும், கிராமச் சாவடியில் மறியல் செய்துவைக்கப்பட்டவர்களைக்காவல் காப்பதும் (தலையாரிகள்) கிராமக் காவற்காரர்களுடைய கடமையாகும்.

7. கிராமப் பெரியதனக்காரர்கள் பரிசிலனைசெய்ய அதிகாரங்கொடுக்கப்பெற்[illegible]களிலே, தங்களுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள்ளிருக்கிற எவர்கள் ஹாஜராகவேண்டியதாயிருக்கலாமோ அவர்களுக்கு வாய்மொழியாகவாவது எழுத்துமூலமாகவாவது ஸம்மன் அனுப்ப கிரிமினல் கேஸுகளில் அந்தக் கிராமப் பெரியதனக்காரர்களுக்கு அதிகாரமுண்டு. தங்களுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்கு வெளியிலிருப்பவர்களுக்கு ஸம்மன் அனுப்ப டை கிராமப் பெரியதனக்காரர்களுக்கு அதிகாரம் இடையாது.

8. எவனாவது ஸம்மன் சேர்ப்பிப்பதை விலக்கும்பொருட்டு ஒளித்துக்கொண்டாலும் தனக்கோ அல்லது வேறே [illegible]க்கோ ஸம்மன் சேர்ப்பிப்பதை வேண்டுமென்று தடுத்தாலும், கிராமப் பெரியதனக்காரர் பரிசிலனை செய்ய அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கிற யாதொரு கேஸிலே வாய்மொழியாகவேனும், எழுத்துமூலமாகவேனும் அந்தக் கிராமப் பெரியதனக்காரரால் கொடுக்கப்பட்ட சம்மன்படி வந்து ஹாஜராகத் தவறினாலும், அதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட கிராமப் பெரியதனக்காரரால் ரிபோர்ட் செய்யப்படுவதன்மேல் இந்தியன் பினல்கோட் 172, 173, 174-வது பிரிவுகளின்படி பிராது தொடரப்படுவதற்குள்ளாவான்.

9. கிராமப் பெரியதனக்காரர்கள் ஸ்வல்ப கேஸுகளின் பரிசிலனைக் காலத்தில் தாங்கள் விமரிசைசெய்யும் சாட்சிகளை அடியிற்கண்ட விதமாகப் பிரமாணம் செய்விக்கவாவது உறுதிமொழி சொல்லுவிக்கவாவது வேண்டும்:—

## கிறிஸ்தவ சாட்சியைப் பிரமாணம் செய்விக்க வேண்டிய விதம்.

"இப்போது கோர்ட்டார் முன்னிலையிலிருக்கிற விஷயத்தைக்குறித்து நீர் கொடுக்கவேண்டிய சாட்சியம் எதார்த்தமாகவும், முழுமையும் எதார்த்தமாகவும், எதார்த்தம் தவிர வேறே எதுவுமாயிராததாகவும் இருக்கவேண்டும்; இந்தப்படியிருக்கக் கடவுள் உமக்குச் சகாயம் செய்வாராக."

யாதொரு சாட்சியைப் பிரமாணம் செய்விக்கும்போது அவருடைய கையில் பைபில் என்னும் விவிலிய வேதபுஸ்தகத்தை யெடுத்துக்கொண்டு, "இந்தப்படியிருக்கக் கடவுள் எனக்குச் சகாயம் செய்வாராக" என்னும் வார்த்தைகளைச்சொல்லி, அப்போதே அந்தப் புஸ்தகத்தை முத்தமிடும்படி அவரைச் செய்யவேண்டும்.

## மஹம்மதிய அல்லது ஹிந்து சாட்சியை உறுதிமொழி சொல்லுவிக்க வேண்டிய விதம்.

"ஸர்வ சக்தியுள்ள கடவுள் முன்னிலையில் நான் பயபக்தியாய் உறுதி மொழி கூறுவதென்னவென்றால், நான்சொல்லப்போகும் விஷயம் எதார்த்தம், முழுமையும் எதார்த்தம், எதார்த்தம் தவிர வேறொன்றுமில்லை."

10. சாக்ஷி குழந்தையாயிருந்து, தான்சாக்ஷி சொல்லுவதற்குமுன்னே சத்தியம் செய்விக்கவேண்டிய கடமையிலிருந்து நிவர்த்தியாகாவிட்டால் அடியிற்கண்டபடி அந்த சாட்சியை பிரமாணம் செய்விக்கலாம்.

"நான் எதார்த்தத்தைப் பேசவேனென்று சத்தியம்பண்ணுகிறேன்."

11. குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பிரமாணம் செய்விக்கவாவது உறுதி மொழி சொல்லுவிக்கவாவது கூடாது.

450. (1) கிராம மாஜிஸ்திரேட்டுகளிடம் கொடுக்கப்படும் [illegible] மூலமான பிராதுகளுக்கு கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு ஒட்டவேண்டியதில்லை. (கோர்ட்டு பீஸ் ஆக்ட் 1870-ம்வருஷத்து 7-வது ஆக்ட்டு 19 - வது உட்பிரிவைப்பார்க்க.)

(2) ஏழு வயதுக்குள்பட்ட குழந்தையினால் செய்யப்படுகிற செய்கையானது குற்றச்செய்கையாக யிருந்தாலும் அந்தக்குற்றச் செய்கை செய்ததற்காகக் குழந்தையை தெண்டிக்கக்கூடாது.

(3) ஏழுவயதுக்கு மேற்பட்டுச் 12 - வயதுக்கு உட்பட்டு யிருக்கிற குழந்தை யாதொரு செய்கையைச் செய்யும்போது தான் செய்யும் செய்கையின் தன்மையின்னதென்றும் தான் செய்யும் செய்கையினால் இன்ன முடிவு நேரிடுமென்றும் தெரிந்துகொள்ளுவதற்குப் போதுமான புத்திக்கூர்மை யில்லாமலிருந்து ஒரு குற்றச்செய்கையைச் செய்துவிட்டால் குற்றச் செய்கை செய்துவிட்டதற்காக அந்தக் குழந்தையைத் தண்டிக்கக்கூடாது.

(4) பிசகான அல்லது சட்டவிரோதமான ஒரு காரியத்தை ஒருவன் செய்யும்பொழுது அவன் புத்திமாருட்டமாக யிருப்பதனால் தான் செய்யும் செய்கையின் தன்மை இன்னதென்பதையும் அதின் முடிவையும் அறிந்துகொள்ளக்கூடாத நிலைமையிலிருந்து ஒரு குற்றச்செய்கையைச் செய்துவிட்டால் அப்பேர்ப்பட்ட ஒருவனை தண்டிக்கக்கூடாது.



(5) ஒருவன் செய்யும் ஒரு செய்கையானது சட்டப்படி குற்றச்செய்கையாக யிருந்தாலும், அந்தச் செய்கையை ஸாமான்னிய பெருந்தன்மை, புத்தி, இவைகளையுடையவர்கள் ஒரு குற்றச் செய்கையாகப் பாவித்து மேல்படி குற்றம் செய்தவன்பேரில் கேஸ் நடத்த எண்ணங்கொள்ளாத விதமாக அவ்வளவு அற்பமான கஷ்ட நஷ்டங்களை உண்டாக்கக்கூடியதாக யிருந்தால குற்றச் செய்கைகளுக்காக குற்றஞ்செய்தவனை தண்டிக்கக் கூடாது.

உதாரணம்:—தெருவிலே வைக்கோல்போட்டு நிறைக்கப்பட்ட ஒரு வண்டியை A என்பவன் நிறுத்தியிருக்கிறான். B என்பவன் A என்பவனுடைய அனுமதி யில்லாமலும் A என்பவனுக்குத் தெரியாமலும் 1-தம்பிடி பெறுமான் வைக்கோலை அக்கிரமமாக எடுத்துக்கொள்ளுகிறான். பி. என்பவனுடைய செய்கையானது சட்டப்படி திருட்டுக்குற்றமாகிறது. இருந்தாலும், ஒரு வண்டிவைக்கோல் பாரத்தில் 1-தம்பிடி வைக்கோலை எடுத்ததற்காக சாமானியமான பெருந்தன்மைக்குணமும் புத்தியுமுள்ள யாரும் வைக்கோலை எடுத்துக் கொண்டு போனவன்பேரில் நடவடிக்கை நடத்தமாட்டார்கள்.

(6) தன் தேசத்தையாவது அல்லது ஒரு சொத்தில் தனக்கிருக்கும் பாத்தியதையை யாவது காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு செய்யப்படும் செய்கையானது குற்றச்செய்கையாக யேற்பட்டாலும் அந்தச்செய்கை செய்யப்பட்டவனை தண்டிக்கக் கூடாது.

## 1816-ம் வருஷத்து 11-வது ரெகுலேஷன், 1821-ம் வருஷத்து 4-வது ரெகுலேஷன் இவைகளின்படிக்குள்ள அல்பக் குற்றக் கேசுகளை கிராம மாஜிஸ்திரேட்டுகள் பரிசீலனை செய்யும் விதம்.

451. பிராதின் கக்ஷிக்காரர்களையும், சாக்ஷிக்காரர்களையும் வாய் மொழியாகவேயே, (அதாவது வாக்குமூலம் வகையராக்களை எழுதிக்கொள்ளாமலேயே) விசாரித்து, கேசு ருஜுவாகாவிட்டால், கக்ஷிக்காரர்களை அனுப்பிவிடலாம். அல்லது எதிரி குற்றஞ்செய்தது ருஜுவாகி, குற்றஞ்செய்தவனை தண்டிக்கவேண்டியது அவசியமென்று தோற்றும் பக்ஷத்தில் எதிரியைத் தண்டிக்கவும் அதிகாரமுண்டு.

452. கிராம மாஜிஸ்திரேட்டுகளால் மேல்கண்ட குற்றங்களுக்கு விதிக்கப்படக்கூடிய தண்டனைகள்.

(1) 12-மணி நேரத்திற்கு மேற்படாமல் ஒரு காலத்திற்கு குற்றவாளியைக் கிராமச்சாவடியில் காவற்படுத்தி வைக்கலாம்.

(2) குற்றஞ் செய்தவன் ஈன ஜாதியைச் சேர்ந்தவனாக, அதாவது தொழு மரத்தில்மாட்டும் தண்டனை கொடுப்பதைக் கேவலமாக நினைக்காத அவ்வளவு தணிந்த ஜாதிக்காரனாக யிருக்கும்பக்ஷத்தில், அவனை 6—மணி நேரத்திற்கு மேல்போகாமல் தொழு மரத்தில் மாட்டிவைக்கலாம்.

குறிப்பு 1:—குற்றவாளிகளை, கிராமச்சாவடியில் 12-மணி நேரத்திற்கு மேல்படாமல் காவல் படுத்திவைக்கும்படிக் குத்தரவு செய்யப்படுகிற தீர்ப்பை கிராமச்சாவடியில் தான் நிறைவேற்றவேண்டும். அப்படிக்கில்லாமல் வேறு இடங்களில் அத் தண்டனையை நிறைவேற்றினால், அப்படிப்பட்ட காவலிலிருந்து குற்றவாளி ஓடிப்போவது இ. பி. கோடு 224-வது பிரிவுப்படி குற்றமாகமாட்டாது. ஒரு குற்றவாளியை ஒரு மரத்தடியில் காவல்படுத்தி வைக்கும்படிக் குத்தரவு செய்யப்பட்டு அப்படி மரத்தடியில் வைக்கப்பட்டிருக்கும்பொழுது குற்றவாளி ஓடிப்போய்விட்டான். அது இ. பி. கோடு 224-வது பிரிவுப்படி குற்றமாக மாட்டாதென்று சென்னைப்பட்டணம் ஹைக்கோர்ட்டாரவர்கள் உத்தரவு செய்திருக்கிறார்கள். (1863-ம் வருஷம் கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 693.)

குறிப்பு 2:—பள்ளர் பறையர்போலொத்த ஈன ஜாதிக்காரர்களுக்குத் தான் தொழுத்தண்டனை விதிப்பது ஞாயமாக யிருக்கும். தச்சுவேலை, கொல்வேலை, தட்டாரவேலை, முதலியதுகளைச்செய்யும் கம்மாளச்சாதியைச்சேர்ந்தவர்களுக்காவது, துலுக்கர், காப்பு இந்த ஜாதிகளைச் சேர்ந்தவர்களுக்காவது தொழுமாத்தில் மாட்டும் தண்டனை விதிப்பது சரியல்ல. ஈன குலத்தைச் சேர்ந்தவனாக யிருந்தாலுமே அந்த ஜாதிக்காரர்களுக்குள் மதிப்புடையவனாக யிருப்பதுபோலொத்த காரணங்களிருந்தால், அப்பேர்ப்பட்டவனைத் தொழுமாத்தில் மாட்ட வைக்காமலிருப்பது உசிதமானது. (இந்தியன் லா ரிப்போர்ட்டு மதிராஸ் ஸிரீஸ் 6-வது வால்யம் 247-ம் பக்கம்; 1882-ம் வருஷம் கிரிமினல் ரிவிஷன்கேஸ் நெ. 460; 1882-ம் வருஷம் எப்பிரல்மீ 19உ போட்ட 732-ம் நெ. புரொஸீடிங்ஸ்; 1879-ம் வருஷம் அக்டோபர் 10மீ 9உ போட்ட 1732 புரொஸீடிங்ஸ் இவைகளைப்பார்க்க.)

453. திருடப்பட்ட சொத்தின் மதிப்பு ஒரு ரூபாய்க்கு மேற்படாவிட்டால், ஆடுகள், வெட்டுமரம், அல்லது காட்டுச்சம்பத்தி, அல்லது புறம்போக்கு நிலங்களிலிருந்து மரங்கள், ஆகிய இவைகளைப்பற்றிய ஸ்வல்பக் களவுகளைக் குறித்துப் பரிசிலனை செய்யக் கிராமப் பெரியதனக்காரர்களுக்கு அதிகாரமுண்டு. அப்படிப்பட்ட கேஸுகளைப் பரிசிலனை செய்வதற்காகக் கலெக்டரிடத்திலிருந்து முன்னதாய் அநுமதி பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. கிராமமுனிசீபுகளுக்கு எதிரிக்கு அபராதம்போட அதிகாரமில்லை. (இந்தியன் லா ரிப்போர்ட்டு மதராஸ் ஸிரீஸ் 5-வது வால்யம் 268-வது பக்கம்; 1882-ம் வருஷத்திய சென்னைப்பட்டணம் ஹைக்கோர்ட்டு கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெம்பர் 274; 1885-ம் வருஷத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெம்பர் 231, இவைகளைப் பார்க்க.)

454. திருட்டுச்சொத்தின் மதிப்பு ஒரு ரூபாய்க்கு மேற்படுமாகில், ஸ்வல்பத் திருட்டுகளைப்பற்றிக் கிராமப் பெரியதனக்காரர்கள் அதிகாரஞ் செலுத்தவது கூடாது. (மதராஸ் ஹைக்கோர்ட்டு 1880 வருஷம் டிசம்பர்மீ 14உ போட்ட புரொஸீடிங்ஸ்.) கேஸைத் தங்களுடைய அதிகார வரம்புக்குள் கொண்டுவரும்பொருட்டு, திருட்டுச்சொத்தின் மதிப்பை அவர்கள் தங்களுக்கு இஷ்டப்படி ஏற்படுத்திக்கொள்ளுவது கூடாது.

455. பிரஸ்தாப சொத்தின் மதிப்பு ஒரு ரூபாய்க்கு மேற்படாமலிருந்தபோதிலும் திருட்டுச்சொத்தை வாங்கிக்கொள்வதென்னும் கேஸுகளைப் பரிசிலனை செய்யக் கிராமப் பெரியதனக்காரர்களுக்கு அதிகாரமில்லை.



1862-ம் வருஷம் நவம்பர்மீ 17உ போட்ட சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டு புரோஸிடிங்ஸைப் பார்க்க.

456. வீட்டின்மேலாவது, புழக்கடையிலாவது, வீட்டிற்கு வெளியே தாழ்வாரத்திலாவது இருந்த ஒரு ரூபாய்க்குட்பட்ட அசையும்பொருளைத் திருடப்பட்ட கேசுகளில் கிராம மாஜிஸ்திரேட்டு விசாரிக்கலாம். (1866 வருஷம் மார்ச்சுமீ 17உயும், 1870-ம் வருஷம் அக்டோபர்மீ 20உயும் போடப்பட்ட சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு புரொஸிடிங்ஸ்களை பார்க்க.)

457. மாஜிஸ்திரேட்டாகவாவது ஸிவில் ஜட்ஜாகவாவது பிரவர்த்திக்கிற கிராமப் பெரியதனக்காரருடைய ஸம்மனை அசட்டைசெய்தாகிலும், காவலிலிருந்து ஓடிப்போயாகிலும், அவரை அவமதித்தாகிலும், அவருடைய அலுவலைச் செய்யவொட்டாதபடி அவரைத் தடுக்கப் பலாத்காரம்செய்தாகிலும், இந்தியன் பினல்கோட் 172-வது முதல் 188-வது வரையிலுள்ள பிரிவுகளிலும், 193-வது முதல் 196-வது வரையிலுள்ள பிரிவுகளிலும், 199-வது, 200-வது பிரிவுகளிலும், 205-வது முதல் 211-வது வரையிலுள்ள பிரிவுகளிலும், 228-வது, 463-வது, 471-வது, 475-வது, 476-வது பிரிவுகளிலும் சொல்லப்பட்டிருக்கிற மற்றக் குற்றங்களைச்செய்தாகிலும் நபர்கள் அந்த கிராமப் பெரியதனக்காரருடைய அதிகாரத்தை அலட்சியம் செய்யும்போதெல்லாம், அக்குற்றத்தைப் பரிசிலனைசெய்ய அதிகார வரம்புள்ள மாஜிஸ்திரேட்டினால் அக்குற்றவாளி தண்டிக்கப்படும்பொருட்டு அந்த கிராமப் பெரியதனக்காரர் அவ்விஷயத்தைக்குறித்து தாலூக்கா மாஜிஸ்திரேட்டுக்குரிப்போர்ட்செய்யலாம்.

458. கிராமப் பெரியதனக்காரர்களால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவர்களைப் போலீஸ் காவலுக்கு அனுப்பக்கூடாது. அவர்களை கிராமச்சாவடியில் காவற்படுத்தி வைக்கவேண்டும். குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டவர்களைக் கிராமச்சாவடி தவிர வேறு இடங்களில் மறியல் செய்து வைப்பது சட்டவிரோதம்.

459 கிராமப்பெரியதனக்காரர் தண்டனை ரூபமாக உத்தரவுசெய்திருக்கிற காவலிலிருந்து தப்பித்துக்கொண்டு போகிறவர்களும் அல்லது தப்பித்துக்கொண்டுபோக எத்தனப்படுகிறவர்களும் அதுவிஷயத்தில் சம்பந்தப்பட்டவர்களும் கிராமப் பெரியதனக்காரர் பிரேரணை செய்வதன்மேல் இந்தியன் பினல்கோட் 224-வது பிரிவின்படி பிராதுதொடரப்படுவதற்குள்ளாவார்கள்.

460. குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படும்போது அவன் வாஸ்தவத்தில் கையிலேயே பிடிக்கப்படுகிறானென்று ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும். அப்போது தன்னைப் பிடிக்கக்கூடாதென்று அவன் எதிர்த்தாலும் தப்பித்துக்கொண்டு ஓடிப்போனாலும், இந்தியன் பினல் கோட் 224-வது பிரிவின்படி அவன்மேல் குற்றங்கொண்டுவந்து அவனை கிரிமினல் கோடின்படி நியமிக்கப்பட்ட எந்த மாஜிஸ்திரேட்டும் பரிசிலனைசெய்து குற்றவாளி என்று தீர்மானிக்கலாம்.

ஆனால், அவனைப்பிடிக்க யாதொரு பிரயத்தனமும் செய்யப்படாமலிருக்குமானால் அவன் சும்மா நடந்துவிடுகிறபட்சத்திலே இந்தியன் பினல்கோட் 224-வது பிரிவின்படி யாதொரு குற்றமும் செய்தவனாகமாட்டான்.

461. குற்றவாளிகளுக்குக் கைவிலங்குபோடவாவது அல்லது அபராத தண்டனை விதிக்கவாவது அடிதண்டனை விதிக்கவாவது கிராமப் பெரியதனக் காரர்களுக்கு அதிகாரமில்லை.

462. கிராமமுனிசிபு மாஜிஸ்திரேட்டுகள் ஞாயிற்றுக்கிழமையத்தினம் சிவில் கிரிமினல் கேசுகளை விசாரிக்கக்கூடாது. (1887-ம் ஏப்ரல் 26 உ போட்ட சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டு 1240 (a) நெம்பர் ஸர்க்கியுலரைப்பார்க்க.)

463. சட்டம் இடம்கொடுக்காத விஷயங்களிலே யாரையாவது மறியல் செய்யாமலிருக்கும்படி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அந்தப்படி மறியல் செய்யும் பட்சத்திலே, தப்பிதமாய்க் காவற்படுத்திவைத்ததற்காகக் கிராம உத்தியோகஸ்தரைத் தண்டிக்கலாம்.

464. கிராமப் பெரியதனக்காரர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தண்டனை அதிகாரத்தைத் தாங்கள் செலுத்தியிருக்கிற எல்லா கேசுகளைப்பற்றியும் தாலூக்கா மாஜிஸ்திரேட்டுக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்.

465. கிராமப் பெரியதனக்காரர்கள் சட்டப்படி தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை லஞ்சம்வாங்குவது முதலிய கெட்டவிதமாகவாவது பகைமை பாராட்டியாவது சரியான ஜாக்கிரதையும் எச்சரிக்கையுமில்லாமல்செய்து உபயோகித்தால், பிராது தொடரப்படுவதற்கும் சில வருஷங்கள் வரையில் காவலில் வைக்கப்படுவதற்கும் தாங்கள் உள்ளாவார்களென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

466. தன் கிராமத்தில் நடக்கிற குற்றச்செய்கைகளைப்பற்றி மேலான அதிகாரிகளுக்கு ரிப்போர்ட்டுச்செய்ய கிராம மாஜிஸ்திரேட் கடமைப்பட்டிருக்கிறார். (மதிராஸ் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு 3-வது வால்யம் அனுபந்தம்-19.)

### ஒருகிராமமுனிசிபு மாஜிஸ்திரேட்டினுடைய கோர்ட்டிலிருந்து வேறு கோர்ட்டுக்குக் கேசை மாற்றிக்கொள்வதைப்பற்றிய விஷயங்கள்.

467. 1882-ம் வருஷத்திய 10-வது ஆக்ட்டில் ஒருகிராம மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டிலிருக்கிற ஒரு கிரிமினல் கேசை, மற்றொரு கிராம மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுக்காவது, வேறு எந்தக் கிரிமினல் கோர்ட்டுக்காவது, மாற்ற டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்காவது, அல்லது டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுக்காவது அதிகாரமில்லாமலிருந்தது. அப்படி ஒரு கிராம மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டிலிருந்து வேறு கோர்ட்டுகளுக்கு கேசை மாற்றிக்கொள்ளும்படி அவசியம் நேரிடுகிற கேசுகளில் ஹைக்கோர்ட்டில் மனுகொடுத்துத்தான் மாற்றிக்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஆனால், 1898-ம் வருஷத்திய 5-வது ஆக்டாகிய இப்போது அனுஷ்டானத்திலிருந்து வருகிற கிரிமினல் புரோஸீஜர் கோடின் 528 (4) வது உட்பிரிவினால், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுகளும் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுகளும் ஒரு கிராம மாஜிஸ்திரேட்டின் கோர்ட்டிலிருக்கிற 1821-ம் வருஷத்திய 4-வது ரெகுலேஷன்படிக்குள்ள கேசுகளை வேறுகோர்ட்டுகளுக்கு மாத்தலாமென்று அதிகாரங்கொடுக்கப்பட்டிருக்கிறது



468. 1821-ம் வருஷத்து 4-வது ரெகுலேஷன் 6-வது பிரிவின்படி, ஒரு கிராம மாஜிஸ்திரேட்டினால் விசாரிக்கப்படுகிற அற்பக் களவு கேசுகளை வேறு மாஜிஸ்திரேட்டினுடைய கோர்ட்டுக்கு மாத்திவிட, டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்கும், டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுக்கும் இப்போது அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

469. இதனால் 1816-ம் வருஷத்து 11-வது சட்டத்தின் 10-வது பிரிவுப்படிக்குள்ள திட்டுவது, அற்பசொற்பமான சண்டை, சச்சரவு முதலிய கேசுகளை ஒரு கிராம மாஜிஸ்திரேட்டினுடைய கோர்ட்டிலிருந்து மற்றொரு மாஜிஸ்திரேட்டின் கோர்ட்டுக்கு மாற்றுவதற்கு டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்காவது, டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுக்காவது அதிகாரமில்லையென்பது தெளிவாக யேற்படுகிறது. இப்பேர்ப்பட்ட கேசுகளை மாற்றவேண்டுமானால் ஹைக்கோர்ட்டில் மனுக் கொடுத்துத்தான் ஆகவேண்டியதாக யிருக்கிறது. ஹைக்கோர்ட்டாருக்கு லெட்டர்ஸ் பேடெண்டு 29-வது பிரிவுப்படி மேற்படி கேசுகளை மாற்றுவதற்கு அதிகாரமுண்டு. (இந்தியன் லா ரிப்போர்ட்டு மதிராஸ் ஸீரிஸ் 26-வது வாலம். பக்கம் 394.)

470. ஞாயிற்றுக்கிழமையத்தினம் கிராம மாஜிஸ்திரேட்டுகள், சிவில், கிரிமினல் கேசுகள் விசாரணைசெய்யக் கூடாது. (1887-ம் வருஷம் ஏப்ரல் 26 உ போட்ட சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டு ஸர்க்கியுலர் நெம்பர் 1240 (a) யைப் பார்க்க.)

### கிராம முனிசிபு மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்புகளின்பேரில் அப்பீல்கள்.

471. கிராமமுனிசிபு மாஜிஸ்திரேட்டு கிரிமினல் புரொஸீஜர்கோடின்படி ஏற்படுத்தப்படாத தனித்த வகுப்பு மாஜிஸ்திரேட்டாகயிருந்தாலும், அவர் 1816-ம் வருஷத்து 11-வது ரெகுலேஷன்படிக்காவது, அல்லது 1821-ம் வருஷத்திய 4-வது ரெகுலேஷன்படிக்காவது பைசல்செய்யுங் கேசுகளில் அப்பீலில்லை. (மதராஸ் ஹைக்கோர்ட்டு 1860-ம் வருஷம் செப்டம்பர் 13 உ போட்ட 2195-ம் நெம்பர் புரொஸீடிங்கைப் பார்க்க.)

### கிராம மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுகளிலிருந்து ரிகார்டுகளுக்கு நகல்கள் வாங்குவதைக் குறித்த விஷயங்கள்.

472. கிராம முனிசிபு மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டில் விசாரணையாகிற கிரிமினல் கேசுகளின் ரிக்கார்டுகளுக்கு நகல் வேண்டுமானால் கிராமமுனிசிபு மாஜிஸ்திரேட்டினிடம் நகலுக்காக மனுப்போடவேண்டும். அந்த மனுவையும் கேஸின் ரிக்கார்டுகளையும், கக்ஷிக்காரன் காட்பிக்காயிதங்கள் கொடுத்தால் அவைகளையும், அந்தத்தாலூகா ஸ்டேஷனெரி மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுக்கு நகல் தயாரிக்கும்பொருட்டு அனுப்பிவிட்டு அதுவிபரத்தைக் கக்ஷிக்காரர்களுக்குச் சொல்லிவிடப்படும். (சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு, 1896-ம் வருஷம் ஆகஸ்ட்டு மீ 21 உ போட்ட 382-ம் நெ. ஸர்க்கியுலர் உத்தரவு.)

## கிராம மாஜிஸ்திரேட் வகையரா மேலான ஆபீஸர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிற விஷயங்கள்.

473. பிரதி கிராமப் பெரியதனக்காரனும், கிராமக் காவற்காரனும் போலீசு உத்தியோகஸ்தனும், நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதை அனுபவிக்கிறவனும், அப்படிப்பட்ட யாதொரு சொந்தக்காரன் அல்லது அனுபவிப்பவனுடைய ஏஜெண்டும், கவர்ன்மெண்டார் பக்ஷத்திலாவது, கோர்ட்டாப் வார்ட்ஸாருடைய பக்ஷத்திலாவது ரிவினியூ அல்லது நில குத்தகைத்தொகையை வசூல் செய்வதில் அமர்த்தப்பட்ட பிரதி உத்தியோகஸ்தனும் அடியில் கண்டிருக்கிற விஷயங்களைக் குறித்து தனக்குத் தெரியவருகிற யாதொரு சங்கதியை, சமீபத்திலுள்ள மாஜிஸ்திரேட்டுக்காவது சமீபத்திலுள்ள போலீசு ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தருக்காவது இவர்களிலெவர் மிகவும் சமீபத்திலிருக்கிறாரோ அவருக்கு உடனே அறிக்கைசெய்யவேண்டியது. அவையாவன :—

(a) தான் எதற்குப் பெரியதனகாரனாகவாவது காவற்காரனாகவாவது போலீசு உத்தியோகஸ்தனாகவாவது, எந்த நிலத்தின் சொந்தக்காரனாகவாவது, அனுபவிக்கிறவனாகவாவது ஏஜெண்டாகவாவது, ரிவினியூ அல்லது குத்தகைத் தொகை வசூல் செய்கிறவனாகவாவதிருக்கிறானோ அந்தக் கிராமத்தில் திருட்டுசொத்தை பெற்றுக்கொள்ளுகிறவன் அல்லது விற்கிறவனென்று பேர்ப்போனவனெவனாவது நிலையாகவாகிலும், கொஞ்சகாலத்திற்காகிலும், வாசஞ் செய்வது;

(b) தக்கித்திருடனென்றாவது, கொள்ளை யடிக்கிறவனென்றாவது, தப்பித்துக்கொண்டோடிவிட்ட கைதியென்றாவது பிரசித்தஞ்செய்யப்பட்ட குற்றவாளி யென்றாவது, தான் அறிந்திருக்கிற அல்லது நியாயமாய் அனுமானிக்கிற யாதொரு நபர், அப்படிப்பட்ட கிராமத்திற்குள் யாதொரிடத்திற்கு வந்திருப்பது அல்லது அந்தக் கிராம வழியாய்ச் சென்றிருப்பது;

(c) அப்படிப்பட்ட கிராமத்திலாவது, அதற்குச் சமீபத்திலாவது, அஜர்ஜாமீன் வாங்கத்தகாத யாதொரு குற்றஞ்செய்யப்பட்டது அல்லது செய்ய எண்ணுவது;

(d) அவ்விடத்தில் யாதொரு சடுதி மரணமாவது, துர்மரணமாவது, அனுமானிப்பதற்கு முகாந்தரமுள்ள மரணமாவது நேரிடுவது ;

(e) ஒரு கிராமத்திற்குச் சமீபமாக, ஆனால், பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில், இ. பி. கோடு 302, 304, 382, 392, 393, 394, 395, 396, 397, 398, 399, 402, 435, 436, 449, 450, 457, 458, 459, 460 - வது பிரிவுகளின்படி தண்டிக்கப்படக்கூடிய ஏதுங் குற்றச்செய்கைகளைச் செய்யப்பட்டாலுமே, செய்ய எண்ணியிருந்தாலுமே அவைகளைப்பற்றியும்,



(f) பொதுப்படையான, அல்லது விசேஷமான உத்தரவின் மூலமாக, சமாதானத்திற்கு விரோதமாகச் செய்யப்படுகிற எந்தச் சங்கதியைப்பற்றியாவது, அல்லது குற்றச்செய்கையைத் தடுக்கும்பொருட்டாவது, அல்லது, ஒருவனுடைய சரீரத்தினுடையவாவது சொத்தினுடையவாவது பந்தோபஸ்தைக் குறித்தாகிலும் ரிப்போர்ட் செய்யும்படிக்காக டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டினால் உத்தரவு செய்யப்பட்டிருக்கிற எல்லாக் கேசுகளிலும் ரிப்போர்ட்டுச் செய்யவேண்டும்.

(2) கிராமமென்பது கிராமநிலங்க ளென்றும் அர்த்தமாகும் (கி. பு. கோடு, பிரிவு-45.)

## திருட்டுச்சொத்தைக்குறித்து சங்கதி தெரியவருவதன்பேரில் கிராம மாஜிஸ்திரேட்டுகள் இன்னது செய்யவேணுமென்பது.

474. திருட்டுச்சொத்து ஒளித்துவைக்கப்படுகிற தென்று கிராம மாஜிஸ்திரேட்டுகளுக்கு நம்பத்தக்க சங்கதி தெரியவந்து, அந்தச் சொத்தைக் கைப்பற்றுவதற்குடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யாவிட்டால் அது அப்புறங் கொண்டுபோய்விடப்படுமென்று எண்ணுவதற்கு முகாந்தரமிருக்குமாகில், அவர்கள் சோதனை போடுவித்து சொத்து அகப்பட்டால் அதைப் பத்திரப்படுத்தி, போலீசாரிடத்தில் அந்தக் குற்றவாளியோடுகூட அனுப்பவேண்டும். சொத்தை ஒளித்துவைத்திருக்கிற இடமானது குடியிருப்பு வீடாக யிருந்தால் சூரியோதயமுதல் சூரியாஸ்தமன வரையில் மாத்திரம் அப்படிச் சோதனை போடலாம்- (1816-ம்வருஷத்திய 11-வது ஆக்ட்டு 11-வது பிரிவு.)

## பிரேதங்கள் அகப்பட்டால் கிராம மாஜிஸ்திரேட்டுகள் இன்னது செய்யவேணுமென்பது.

(1) கொலையுண்டு இறந்தானென் றெண்ணப்படுகிற ஒருவனுடைய பிரேதம் அகப்பட்டதென்று சங்கதி தெரியவருவதின்பேரில், கிராம மாஜிஸ்திரேட், அந்தக் கிராமத்து கர்ணனையும், இரண்டு மூன்று பெரிய மனுஷர்களையுங் கூடக் கூட்டிக்கொண்டு உடனே அந்த இடத்திற்குப் போய், பிரேதம் அகப்பட்டதையும், அது அகப்பட்ட போது அது இருந்த நிலைமையையுங் குறித்தாவது, கொலையுண்டு அந்தப் பிரேதம் விழுந்துகிடக்கிறபக்ஷத்தில் கொலையுண்டவன் இன்னபடி மரணமடைந்தானென்பதைக்குறித்தாவது சங்கதி தெரிவிக்கக்கூடிய ஒவ்வொருவனையும் அவர்களுக் கெதிரிலே விசாரணை செய்யவேண்டும்.

அப்படிப் பிரேதம் அகப்பட்டதென்று சங்கதி தெரியவருவதன்பேரில், அதைக்குறித்து உடனே போலீசாருக்குத் தெரியப்படுத்தவேண்டும். போலீசார் உடனே வந்துவிட்டால் அவர்கள் கூட இருந்து வேண்டும் விசாரணையை நடத்தவேண்டும்.

(3) விசாரணை நடத்தும் போலீஸாபீஸர் வராதபக்ஷத்தில், கிராம மாஜிஸ்திரேட்டு, விசாரிக்கப்படுகிறவர்களுடைய சாக்ஷியத்தை எழுதிக்கொள்ளும்படிக்கும், பிரேத மிருந்த நிலைமையைப்பற்றி அவசியமான விபரங்களைக்குறித்து வைத்துக்கொள்ளும்படிக்கும், நடவடிக்கைகள் முடிமைக்கும் ரிப்போர்ட்டுத் தயார்செய்யும்படிக்கும் கர்ணனுக்குச் சொல்லவேண்டும். அந்த ரிப்போர்ட்டில் தானும், கர்ணனும் கையெழுத்துப்போடுவதோடு, விசாரணையின்போது ஆஜராயிருந்த குடியானவர்களில் இரண்டு அல்லது மேற்பட்டவர்களையும் அதில் கையெழுத்துப்போடச் சொல்லவேண்டும். அந்த ரிப்போர்ட்டை தயாரிக்கப்பட்ட சாக்ஷியத்தோடு போலீசாருக்கு அனுப்பவேண்டும். (1816-ம் வருஷத்து 11-வது ஆக்ட்டு 13-வது பிரிவு.)

குறிப்பு:—கி. பு. கோடு 45-வது பிரிவு (d) உட்பிரிவினால், கிராம மாஜிஸ்திரேட் தன்னுடைய கிராமத்தில் நேரிடுகிற தற்செயல் மரணங்கள், அனுமானிக்கப்படக்கூடிய மரணங்கள், துர்மரணங்கள் இவைகளைப்பற்றி தகவலை, மாஜிஸ்திரேட்டாருக்காவது அல்லது போலீஸ் ஸ்டேஷனுபீசருக்காவது—இவர்களில் யார் அதிகச் சமீபத்திலிருக்கிறார்களோ அவர்களுக்குத் தெரிவிக்கக் கட்டமைப்பட்டிருக்கிறார்.

## கிரிமினல் புரோஸீஜர் கோடினால் ஏற்படுத்தப்பட்ட மாஜிஸ்திரேட்டுகளைப்பற்றிய விஷயங்கள்.

476. ராஜதானிப் பட்டணங்களுக்கு வெளியே யிருக்கப்பட்ட ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் டிஸ்டிரிக்டு மாஜிஸ்திரேட்டு தவிர, பிரதேச கவர்ன்மெண்டாருக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி அத்தனை 1-வது, 2-வது, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளை நியமிக்கலாம். பிரதேச கவர்ன்மெண்டாராவது அல்லது அவர்களுடைய உத்தரவுக்குட்பட்டு டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டாவது, ஒவ்வொரு மாஜிஸ்திரேட்டும் இன்னின்ன எல்லைக்குள் அலுவல் பார்க்கவேண்டுமென்றும், அந்தந்த வகுப்பு மாஜிஸ்திரேட்டுக்கு கி. பு. கோடுப்படி கொடுக்கக்கூடிய எல்லா அதிகாரங்களையுமாவது, அல்லது சில அதிகாரங்களையாவது செலுத்தலாமென்றும் உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு பிரிவு, 12.)

## மூன்றாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள்.

477. சிவில் ஐ. ஸி. எஸ். (அதாவது, இந்தியன் ஸிவில் ஸர்வீஸ்) பரிக்ஷை தேறியாவது அல்லது இந்தியாவில் பி. ஸி. எஸ். (அதாவது புரொவின்ஷியல் ஸிவில் ஸர்வீஸ்) பரிக்ஷை தேறியாவது, அல்லது மாஜிஸ்திரேட் வேலையில் நியமிக்கப்படுவதற்குரிய பரிக்ஷைகள் தேறியாவது மாஜிஸ்திரேட்டு வேலையில் நியமனம்பெறுகிற ஒவ்வொருவரும் முதல்முதல் மூன்றாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்படுகிறார்கள்.



478. மூன்றாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் தான் கடாசி வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள். கடாசி வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளாகயிருந்தாலும் கிரிமினல் கோர்ட்டுகளின் முன்பாக பெரும்பாலும் சாதாரணமாகக் கொண்டுவரப்படுகிற கேசுகளெல்லாம் மூன்றாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய பரிசீலனைக்குள் அடங்கிய கேசுகளாகவேயிருக்கின்றன.

இந்த வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக் கிருக்கப்பட்ட அதிகாரங்கள் முதலியதுகளை அடியில் சொல்லப்பட்டிருக்கின்றது.

### கி.பு. கோடு, 3-வது ஷெடியூல்.

## 479. மூன்றாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளினுடைய சாதாரணமான அதிகாரங்கள்.

(1) தனக்கெதிரில் குற்றஞ்செய்கிற ஒருவனைப் பிடிக்கவும், அல்லது பிடிக்கும்படி உத்தரவு செய்யவும், காவலில் வைக்கும்படி உத்தரவு செய்யவும் அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 64.)

(2) குற்றஞ் செய்தவனைப் பிடிக்கவாவது, தனக்கெதிரில் பிடிக்கும்படி உத்தரவு செய்யவாவது அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 65.)

(3) வாறண்டை (மறியல் கட்டளையை) இண்டார்ஸ் பண்ணவாவது, வாறண்டின் மூலமாய் பிடிக்கப்பட்ட குற்றஞ் செய்தவனைக் கொண்டு போகும்படி உத்தரவு செய்யவாவது, அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவுகள் 83, 84, 86.)

(4) நீதி விசாரணைக்குத் தனக்கு முன்பாக வந்திருக்கும் கேசுகளில் இஸ்தியார் பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு, 87.)

(5) நீதி விசாரணைக்கு தனக்கு முன்பாக வந்திருக்கும் கேசுகளில் சொத்தை ஜப்திசெய்து விற்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 88.)

(6) ஜப்தி செய்யப்பட்ட சொத்தை மறுபடி கொடுத்துவிட அதிகாரம், (கி. பு. கோடு, பிரிவு 89.)

(7) தபால், தந்தி ஆபீசுகளிலிருக்கப்பட்ட, கடிதங்கள், தந்திகள் இவைகளைச்சோதனை போடும்படி சொல்ல அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 95.)

(8) சோதனை வாறண்டு பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 96.)

(9) சோதனை வாறண்டை இண்டார்சு பண்ணவும் சோதனையில் அகப்படுகிற பொருளை ஒப்பிக்கும்படி உத்தரவு செய்யவும் அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 99.)

(10) சட்ட விரோதமான கூட்டத்தைக் கலைந்துபோகும்படி உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 127.)

(11) சட்ட விரோதமான கூட்டத்தைக் கலைப்பதில் பலாத்காரத்தை பிரயோகிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 128.)

(12) சட்ட விரோதமான கூட்டத்தைக் கலைப்பதற்காக இராணுவத்தை ஏவிட அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 130.)

(13) போலீசு முதல் விசாரணை நடக்கையில், எதிரியினுடைய வாக்குமூலங்களையும், ஒப்புக்கொள்ளுதலையும் எழுதிக்கொள்ள அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 164.)

(14) போலீசு முதல் விசாரணை நடந்துகொண்டிருக்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவனைக் காவலில்வைத்து வைக்கும்படி உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 167.)

(15) குற்றஞ் செய்ததாகச் சொல்லப்பட்டவன், கோர்ட்டில் வந்திருந்தால், அவனைக் காவலில் வைக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 351.)

(16) குற்றஞ் செய்தவன் யூரோப்பியன் பிரிடிஷ் குடியாகயிருந்தாலும் அவன்பேரில் பிரியாது வாங்கவும், அந்தக்கேசை விசாரிக்க அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டுமுன் ஆஜராகும்படி ஸம்மன் பிறப்பிக்கவும் அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 445.)

(1) ஒரு சாக்ஷியை கம்மிஷன்பேரில் விசாரிப்பதற்காக கம்மிஷன் பிறப்பிக்கும்படி டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டைக் கேட்டுக் கொள்ள அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 506. (2))

(18) ஒரு மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டு முன்பாக ஆஜராவதாக முச்சலிக்கா கொடுத்துவிட்டு, அந்த முச்சலிக்காப்படி ஆஜராகாமல் அந்த முச்சலிக்கா அடிபட்டுப்போய்விட்டால், அந்த முச்சலிக்காவில் கண்ட தொகையை வசூல்செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 514.)

(19) ஒரு குற்றச்செய்கையில் சம்மந்தப்பட்டதாகச் சொல்லப்பட்டு கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்ட எந்தச் சாமானையும், இன்ன இவ்விதம் செய்கிறதென்று உத்தரவுசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 517.)

(20) வாறண்டின்பேரிலாவது வாறண்டில்லாமலாவது பிடிக்கப்பட்ட ஒருவனிடத்திலிருந்து எடுக்கப்பட்ட; அல்லது அனுமானத்தின்பேரில் ஒருவனிடத்திலிருந்து எடுக்கப்பட்ட சாமான்கள் எதாவாவது சீக்கிரத்தில் அழிந்துபோகக்கூடியதாக யிருந்தால், அதை உடனே விற்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 525.)

## மேற்கண்ட அதிகாரங்கள் நீங்கலாக, பின்னும் மூன்றாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய விசேஷ அதிகாரங்கள்.

480. டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டினுலாவது பிரதேச கவர்ன்மெண்டாராலாவது கொடுக்கப்படக்கூடிய அதிகாரங்கள்.

(1) பிறருக்கு இடஞ்சல் முதலியதை மேலும் மேலும் செய்யவொட்டாமல் தடுக்கும்படியான உத்தரவு பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 143.)



(2) பிறருக்கு இடஞ்சல், தடை முதலிய சங்கடங்கள் நேரிடுகிற அவசரமான விஷயங்களில் அவதியான உத்தரவு தட்சணம் பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு, 144.)

(3) மரண விசாரணை செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 174)

(4) பிராது செய்யப்படுவதின்பேரில் குற்றங்களைப்பற்றி விசாரணை செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 190. (எ).)

(5) போலீஸ் ரிப்போர்ட்டுகளின்பேரில், குற்றங்களைப்பற்றி விசாரணை செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 190. (பி).)

## 481. பிரதேச கவர்ன்மெண்டாரால் மட்டும் கொடுக்கப் படக்கூடிய அதிகாரம்.

(1) ஸெஷன் கோர்ட்டுக்கு, ஸெஷன் கோர்ட்டில் சம்பந்தப்பட்ட கைதிகளை விசாரணைக்கு கம்மிட்டு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 206.)

## 482. 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் விதிக்கக் கூடிய தண்டனைகள்.

(1) ஒரு மாதத்திற்குமேல் போகாமல் காவல்தண்டனை (வெறுங்காவல் அல்லது கடினகாவல்) விதிக்கலாம்.

(3) ரூ. 50-க்கு மேற்படாத அபராதம் விதிக்கலாம்.

**குறிப்பு:**—(1) தனிக்காவல் தண்டனை விதிக்கக்கூடாது.

(2) அடி தண்டனை விதிக்கக்கூடாது.

(3) ஒரு மனிதன் விஷயமாய் பல குற்றங்களைச் செய்ததாக விசாரிக்கப்படுகிற எதிரி அல்லது எதிரிகளுக்கு அவர்கள் செய்ததாக ருசுவாகிற ஒவ்வொரு வெவ்வேறான பிரத்தியேகக் குற்றத்திற்கும் பிரத்தியேகம் பிரத்தியேகமாய் தண்டனை செய்யலாம். அப்படிச் செய்யும்பொழுது மூன்றாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் 2-மாதங்களுக்கு மேற்படாமல் காவல் தண்டனையும், ரூ. 100-க்கு மேற்படாமல் அபராததண்டனையும் விதிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 35 (2) பார்.)

(4) மேற்கண்ட காவல் அபராத தண்டனைகள் இரண்டும் சேர்ந்தும் விதிக்கலாம்.

**உதாரணம்:**—ராமன் என்பவன் கிருஷ்ணன் என்பவனுடைய வேஷ்டியைத் திருடிவிடுகிறான். கிருஷ்ணன் தன் வேஷ்டியை இராமன் கொண்டு ஓடுவதை சாட்சிகளிடம் காட்டிவிட்டு வீட்டுக்குப் போய்விடுகிறான். அப்பால் அன்று சாயந்திரம் கிருஷ்ணன், ராமன் தன் வேஷ்டியைக் களவுசெய்துவிட்டதைப்பற்றி போலீஸ் ஸ்டேஷனில் தெரிவிக்கப்போகிறான். அப்போது ராமன், கிருஷ்ணனை சந்தித்து, நன்றாய் அடித்து ரத்தக்காயப்படுத்தித் துன்பம் செய்துவிடுகிறான். பின்பு, கிருஷ்ணன், ராமன் தன் வேஷ்டியைக் களவு செய்ததற்காகவும், தன்னை அடித்து ரத்தக்காயப்படுத்தித் துன்பம் செய்ததற்காகவும் ராமன்பேரில் பிராது கொடுக்கிறான். ஒரு 3-வது வகுப்

மாஜிஸ்திரேட் ராமன்பேரில் கேஸ் விசாரித்து, மேற்கண்ட 2-குற்றங்களை யும் ராமன் செய்ததாகத் தீர்மானித்தால் ராமனுக்கு களவு குற்றத்திற்காக ஒரு மாதம் கடின காவலும், 50-ரூ. அபராதமும், துன்பப்படுத்தின குற்றத்திற்காக ஒரு மாதம் கடினகாவலும், ரூ. 50 அபராதமும், ஆக இரண்டுமாசக் கடின காவலும், ரூ. 100, அபராதமும் விதிக்கலாம்.

## 483. 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டினால் விசாரிக்கப் படக்கூடிய கேசுகள்.

கி. பு. கோடு 2-வது ஷெட்யூல், 8-வது கலத்தில், எந்த மாஜிஸ்திரேட் டும் விசாரிக்கலாமென்று போடப்பட்டிருக்கிற கேசுகளை எல்லாம் விசாரிக்க லாம்.

குற்றச் சட்டப்படிக்குள்ளாகிற கேசுகளில் அபராத மாத்திரமாவது, அல்லது ஒருவருஷத்திற்குட்பட்ட காவல் தண்டனையாவது விதிக்கக்கூடிய கேசுகளை எல்லாம் விசாரிக்கலாம்.

## 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள்.

மூன்றுவது வகுப்பு மாஜிஸ்திரேட்டு வேலையை 6 - மாதம் யாதொரு குற்றம் குறைவின்றி மிகவும் திருப்திகரமாகப் பார்த்து வந்தபிறகு அவர்கள் 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்படுகிறார்கள்.

484. இவர்களுக்கு மூன்றுவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் விசாரிக் கக்கூடிய கேசுகளை எல்லாம் விசாரிப்பதற்கு அதிகாரமிருப்பதோடு, 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் விசாரிக்கவேண்டிய சில கேசுகளையும், ஸெஷ் ஷன் கோர்ட்டார் விசாரிக்கவேண்டிய சில கேசுகளையும் விசாரிக்கிறதற்கு அதிகாரமிருக்கிறது.

## 485. இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய சாதாரணமான அதிகாரங்கள்.

(1) மூன்றுவது வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய சாதாரணமான அதிகாரங்கள்.

(2) பரிசீலனைசெய்யவாவது பரிசீலனைக்குக் கமிட்டு பண்ணவாவது மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரமிருக்கிற கேசுகளிலே யாதொரு குற்றத்தை முதல் விசாரணை பண்ணும்படி போலீசாருக்கு உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 155.)

வாதியின் பிராதின்பேரில் எதிரிக்கு ஸம்மனனுப்புவதை நிறுத்திவைப் பதற்கு அதிகாரம். (கி. பு. கோடு பிரிவு, 202.)

அவதாருன் சங்கதிகளடங்கிய வஸ்துக்களைப்பரிஹரிக்கும்படி உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு பிரிவு, 521)



## 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுக்கு, டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டாவது பிரதேச கவர்ன் மெண்டாராவது கொடுக்கக்கூடிய அதிகாரங்கள்.

486. 1. 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுக்குக்கொடுக்கக்கூடிய அதிகார மெல்லாம்.

பிரதேச கவர்ன்மெண்டார்.

1. அடிதண்டனை விதிக்கும் அதிகாரம் (கி. பு. கோடு, பிரிவு 32.)
2. சங்கதி தெரிவிக்கப்படுவதின்பேரில் குற்றங்களை விசாரணைசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 190.)
3. ஸெஷ்ஷன்கோர்ட்டுக்கு ஸெஷ்ஷன் கேஸில் சம்பந்தப்பட்ட கைதி களைக்கமிட்டுச்செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 206.)

## 487. 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் விதிக்கக்கூடிய தண்டனைகள்.

(1) ஆறுமாதத்திற்குமேல் போகாத காலத்திற்கு இருவகைக்காவல் தண் டனை விதிக்கலாம்.
(2) தனிக்காவல் தண்டனை விதிக்கலாம்.
(3) அடிதண்டனை விதிக்கலாம்.
(4) ரூ. 200-க்குமேல் போகாத அபராதம் விதிக்கலாம்.

குறிப்பு:—(1) காவல், அபராத தண்டனைகள் இரண்டுஞ் சேர்ந்தே விதிக்கலாம்.

(2) ஒரே மனிதன் விஷயமாகப் பல குற்றங்களைச் செய்த தாக விசாரிக்கப்படுகிற எதிரி அல்லது எதிரிகளுக்கு அவர்கள் செய்ததாக ருஜுவாகிற ஒவ்வொரு தனி வான பிரத்தியேகக்குற்றத்திற்கும், பிரத்தியேகம் பிரத் தியேகமாய் தண்டனை செய்யலாம். அப்படிச் செய்யும் பொழுது 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் 1-வருஷத் திற்கு மேற்பட்ட காவல் தண்டனையும், ரூ. 400-க்கு மேல் போகாத அபராதமும் விதிக்கலாம். (கி.பு. கோடு, பிரிவு 35 (2) ல், பி).

## 488. 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள்.

மேலே சொல்லப்பட்ட ஐ. வி. எஸ். பரிக்ஷையாவது, அல்லது பி. லி. பரிக்ஷையாவது தேறி 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு வேலை பார்த்து வருகிறவர்கள், அவ்வேலையை குற்றம் குறைவின்றி 6 மாசம் பார்த்த உடன் 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளாக நியமிக்கப்பட்டு விடுகிறார்கள். அல்லாமல், டிப்டி கலெக்டர் வேலை கொடுப்பதற்குரிய பரிக்ஷைகள் தேறி 2-வது வகுப்புத்தாசில்தார் அல்லது உசூர் சிரஸ்தார் வேலை பார்த்துவருகிறவர் கள் 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளாக நியமிக்கப்படுகிறார்கள்.

கிரிமினல் புரொஸீடியூர் கோடுப்படி ஸ்பெஷியல் மாஜிஸ்ட்ரேட்டு பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்டு என்பதுபோலொற்ற பற்பல பெயர்களுடன் நியமிக்கப்படுகிற மாஜிஸ்திரேட்டுகளிலும் 1, 2, 3 - வது வகுப்பு உண்டு.

### 489. 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளின் ஸாதாரண அதிகாரங்கள்.

(1) இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய சாதாரணமான அதிகாரங்கள்.

(2) விசாரணை தோரணையில்லாமல் மற்றப்படி சோதனை வாறண்டு பிறப்பிக்க அதிகாரம், (கி. பு. கோடு, பிரிவு 98.)

(3) அக்கிரமமாய் அடைத்துவைக்கப்பட்ட நபர்களைக் கண்டுபிடிப்பதற்காக சோதனை வாறண்டு பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 100.)

(4) அமரிக்கையைக் கெடுக்காதிருக்கும்படி ஜாமீன் கேட்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 107.)

(5) நல்ல நடத்தைக்காக ஜாமீன்கேட்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 129.)

(6) நல்நடத்தையாக யிருக்கும்படிக்காகவாவது, சீமை சமாதானத்துக்கு விரோதமாகக் கலகஞ் செய்யாம லிருக்கும்படிக் காகவாவது ஜாமீன் கொடுத்திருக்கும் ஜாமீன்தாரர்களின் பொறுப்பை நிவர்த்தி செய்வது. (கி. பு. கோடு, பிரிவு 126.)

(7) பரிசீலனைக்குக் கமிட்டுபண்ண அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 206.)

(8) பிராதுக்காரனில்லாவிட்டால் நடவடிக்கைகளை நிறுத்த அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 249.)

(9) ஜீவனாம்சத்தைக்குறித்து உத்தரவுசெய்ய அதிகாரம். (கி.பு. கோடு, பிரிவுகள் 488, 489.)

(10) கம்மிஷன்பேரில் சாக்ஷி விசாரணைசெய்ய அதிகாரம். (கி.பு. கோடு பிரிவு 503.)

(11) ரத்தாய்ப்போன முச்சலிக்காவில் கண்ட தொகையை வசூல் செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-514.)

(12) முதல் தபாவாகக் குற்றஞ்செய்த குற்றவாளியின் விஷயமாக உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 562.)

### 490. 1-வகுப்பு மாஜிஸ்திரேட்டுக்கு டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு கொடுக்கக்கூடிய அதிகாரங்கள்.

(1) தடை முதலிய சங்கடத்தை மேலுமேலும் செய்யவொட்டாமல் தடுக்கும்படியான உத்தரவுபிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 143.)

(2) கி. பு. கோடு, 144-வது பிரிவின்படி உத்தரவுசெய்ய அதிகாரம்.

(3) பிரேத விசாரணைசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-174.)



(4) பிரியாது செய்யப்படுவதின்பேரில் குற்றங்களை விசாரிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-190.)

(5) போலீசு ரிபோர்ட்டுகளின்பேரில் குற்றங்களை விசாரணைசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-190.)

(6) கேசுகளை ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக்கு மாற்ற அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-192.)

### 491. கவர்ன்மெண்டாரவர்கள் கொடுக்கக்கூடிய அதிகாரங்கள்.

டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டினால் கொடுக்கப்படக்கூடிய 1-முதல் 5-வரையுள்ள அதிகாரங்கள்.

(1) ராஜநிந்தனை செய்யப்படுகிற கேசுகளில் நல் நடத்தையாகயிருப்பதற்கு ஜாமீன் வாங்குவது. (கி. பு. கோடு, பிரிவு-108.)

(2) நல்லநடத்தைக்காக ஜாமீன்கேட்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-110.)

(3) ஓரிடத்திலுண்டாகிற தடை முதலிய சங்கடத்தைக் குறித்து உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-133.)

(4) தடைமுதலிய சங்கடத்தை மேலுமேலும் செய்யவொட்டாமல் தடுக்கும்படியான உத்தரவு பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு பிரிவு-143.)

(5) கி. பு. கோடு. 144-வது பிரிவின்படி உத்தரவுசெய்ய அதிகாரம்.

(6) பிரேத விசாரணைசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு. பிரிவு-174.)

(7) அதிகாரப் பிரதேசத்துக்கு வெளியில் குற்றஞ்செய்துவிட்டு அந்த அதிகாரப்பிரதேசத்திற்குள் வந்திருக்கிறவனைக் குறித்து கட்டளை பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-186.)

(8) பிராது செய்யப்படுவதின்பேரில் குற்றங்களை விசாரணை செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-190.)

(9) போலீசு ரிபோர்ட்டுகளின்பேரில் குற்றங்களை விசாரணை செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-190.)

(10) சங்கதி தெரிவிக்கப்படுவதின்பேரில் குற்றங்களை விசாரணைசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-190.)

(11) சுருக்க வகையாய்ப் பரிசீலனை செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-260.)

(12) இரண்டாவது மூன்றாவதுவகுப்பு மாஜிஸ்திரேட்டுகளினால் செய்யப்பட்ட குற்ற ஸ்தாபனையின்பேரில் கொண்டுவரப்படும் அப்பீல்களை விசாரிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-407.)

(13) திருடப்பட்டதென்று சொல்லப்பட்ட அல்லது அனுமானிக்கப்பட்ட சொத்துமுதலானதை விற்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு-524.)

(14) தண்டனைப்பட்டவர்கள் விடுதலையான பிறகு அவர்களிருப்பிடத்தைத் தெரிவிக்கும்படி உத்தரவு செய்வது. (கி. பு. கோடு பிரிவு-565.)

(15) கி. பு. கோடு 124 A பிரிவின்படி கேசுகளை விசாரிக்க அதிகாரம்.

ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டாருக்குப் பிரதேச கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும்படியான அதிகாரம்.

ரிக்கார்டுகளை வரவழைக்க அதிகாரம். (கி. பு. கோடு பிரிவு-435.)

## 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டால் விதிக்கப்படக்கூடிய தண்டனைகள்.

(1) 2 - வருஷக் காவல் தண்டனை விதிக்கலாம்.

(2) 1000 - ரூ. அபராதம் போடலாம்.

குறிப்பு.—மேல்கண்ட இரண்டு தண்டனைகளும் சேர்ந்தும் விதிக்கலாம்.

[illegible]வது, 2-வதுவகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் விஷயத்தில் சொல்லப்பட்டபடி இந்தத் தண்டனையை இரட்டித்து உபயோகிக்கலாம்.

## ஸப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டு.

492. ஒரு ஜில்லாவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தாலூக்காக்கள் அடங்கிய இலாகாவான டிவிஷனுக்கு மாஜிஸ்திரேட்டாக நியமுகஞ்செய்யப்படுபவர்தான். அவர் அந்த இலாகாவுக்குள்ளிருக்கப்பட்ட ஸப் மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டுகள், ஸ்பெஷியல் மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டுகள், பெஞ்சு மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டுகள் இவைகளில் செய்யப்படுகிற விசாரணையை மேற்பார்த்துவரவேண்டியது. மேற்கண்ட கோர்ட்டுகளில் பைசல் செய்யப்படுகிற கேசுகளின் தீர்மானத்தின்பேரில் ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட் அப்பீல் வாங்கி அவருடைய யுக்தம்போல பைசல்செய்யும் அதிகாரமும் அவருக்குண்டு. (கி. பு. கோடு பிரிவு, 17ல் (2).)

493. அந்தந்த இடத்துக்குரிய கவர்ன்மெண்டார் யாதொரு ஸப் டிவிஷனை ஒரு முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய ஆளுகைக்குள் விட்டுவைக்கலாம். அவசியம் நேரிட்டால் அந்த ஸப் டிவிஷனை அவர் அதிகாரத்திலிருந்து எடுத்துவிடலாம்.

இப்பேர்ப்பட்ட மாஜிஸ்திரேட்டுகளுக்குத்தான் ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டென்று சொல்லுகிறது.

494. கவர்ன்மெண்டார் இந்தப் பிரிவுப்படி தங்களுக்குண்டான அதிகாரங்களை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டுக்குக் கொடுக்கலாம். (கி. பு. கோடு பிரிவு, 18.)

குறிப்பு:—பெரும்பாலும் முதலாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டு அதிகாரமுள்ள ஒருவரைத்தான் ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டாக நியமிப்பது



வழக்கம். ஸப்டிவிஷன் சார்ஜுக்கு 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு கைவசமில்லாத ஸந்தர்ப்பமாகயிருந்தால் ஒரு 2-வதுவகுப்பு மாஜிஸ்திரேட்டு, ஐ.ஸி.எஸ். அல்லது, பி. ஸி. எஸ். பாஸ் செய்தவரை ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டாக நியமிப்பார்கள்.

## 495. ஸப்டிவிஷன் மாஜிஸ்திரேட்டுகளின் சாதாரணமான அதிகாரங்கள்.

(1) முதல்வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய சாதாரணமான அதிகாரங்கள்.

(2) பூமிக்குடையவர்கள் பேருக்கு வாறண்டு அனுப்ப அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 78.)

(3) நல்நடத்தைக்காக ஜாமீன் வாங்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 110.)

(4) ஓரிடத்திலுண்டாகிற தடைமுதலிய சங்கடத்தைக்குறித்து உத்தரவுசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 133.)

(5) தடைமுதலிய சங்கடத்தை மேலுமேலும் செய்யவொட்டாமல் தடுக்கும்படியான உத்தரவு பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 143.)

(6) கி. பு. கோடு 144-வது பிரிவின்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

(7) தனக்குக் கீழ்ப்பட்ட மாஜிஸ்திரேட்டைக்கொண்டு ஒரு கேசைப் பற்றி ஸ்தல விசாரணை செய்யும்படிக்கனுப்ப அதிகாரம். (கி. கோடு, பிரிவு 148.)

(8) போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகளில், போலீசாரைக்கொண்டு பிரதம விசாரணை செய்யச்சொல்லும் அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 156.)

(9) போலீஸ் ஆபீசருடைய ரிப்போர்ட்டைப் பெற்றுக்கொண்டு அதன்பேரில் உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 173.)

(10) பிரேத விசாரணை செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 174.)

(11) அதிகாரப் பிரதேசத்துக்கு வெளியில் குற்றஞ்செய்துவிட்டு அந்த அதிகாரப் பிரதேசத்திற்குள் வந்திருக்கிறவனைக் [illegible] கட்டளை பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 186.)

(12) பிரியாதுகளைப்பிடிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 190.)

(13) போலீசு ரிப்போர்ட்டுகளை வரப்பற்ற அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 190.)

(14) பிராது செய்யப்படாமல் கேசுகளைப்பிடிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 190.)

(15) சபார்டினேட்டு மாஜிஸ்திரேட்டுக்கு கேசுகளை மாற்றுவதற்கு அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 192.)

(16) சபார்டினேட்டு மாஜிஸ்திரேட்டினால் ரிகார்டு செய்யப்பட்ட நடவடிக்கைகளின்பேரில் சிட்சை விதிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 349.)

(17) தனக்குக் கீழ்ப்பட்ட மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டு ரிக்கார்டுகளைத் தருவித்து, டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்ப அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 435 ல் (2).)

(18) திருடப்பட்டதென்று சொல்லப்பட்ட அல்லது அனுமானிக்கப்பட்ட சொத்து முதலானவைகளை விற்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 524.)

(19) அப்பீல்களல்லாத மற்றக் கேசுகளை வரவழைத்துக்கொள்ளவும், அதுகளைப் பரிசிலனைசெய்ய அல்லது பரிசிலனைக்கனுப்ப அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 528.)

(20) தண்டனைப்பட்டு விடுதலையாகிற கைதிகளை தங்கள் இருப்பிடத்தைத் தெரிவிக்கும்படிக்கு உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 565.)

## டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுகளைப்பற்றிய விஷயங்கள்.

496. பெரும்பான்மையும், சிலவருஷங்களாக 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு வேலைபார்த்துவரும் ஸப்கலெக்டர் ஒருவரை பிரதேச கவர்ன்மெண்டார், ஜில்லா மாஜிஸ்திரேட்டாக நியமிப்பார்கள். இவருக்குத்தான் டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு என்று பெயர் (கி. பு. கோடு, பிரிவு 10, (1).)

497. 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு அதிகாரத்தைச் செலுத்திவருகிற ஒருவரை, பிரதேச கவர்ன்மெண்டார் அடிஷனல் டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டாக நியமிக்கலாம். அடிஷனல் டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டாக ஒருவரையும் 6-மாசத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு நியமிக்கக்கூடாது. இந்த அடிஷனல் டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்கு, கி. பு. கோடுப்படி டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்குக் கொடுக்கக்கூடிய எல்லா அதிகாரங்களையுமாவது அல்லது அவற்றில் சில அதிகாரங்களையாவது கவர்ன்மெண்டார் யுக்தப்படி கொடுக்கலாம். (கி. பு. கோடு பிரிவு 10, (2).) டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்கு அந்த ஜில்லாவிலுள்ள மற்றெல்லா மாஜிஸ்திரேட்டுகளும் கீழ்ப்பட்டவர்கள்.

498. ஒவ்வொரு ஜில்லாவிலும், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு தவிர மற்றெல்லா 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளும், ஸ்பெஷியல் மாஜிஸ்திரேட்டுகளும், பெஞ்சு மாஜிஸ்திரேட்டுகளும் டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்குக் கீழ்ப்பட்டவர்கள்தான். டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு இந்த கி. பு. கோடின் நிபந்தனைகளுக்கிணங்க தனக்குக் கீழ்ப்பட்ட மாஜிஸ்திரேட்டுகளுக்குள் [illegible] வேலையைப் பங்கிட்டுக்கொடுக்கவும், சில மாஜிஸ்திரேட்டுகளுக்கு விசேஷ உத்தரவுகளைச் செய்யவும், அதிகாரமுள்ளவராயிருக்கிறார். (கி. பு. கோடு பிரிவு, 17, (1).)

## 499. டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுகளின் ஸாதாரண அதிகாரங்கள்.

(1) முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டாயிருக்கிற ஸப்டிவிஷன் மாஜிஸ்திரேட்டினுடைய ஸாதாரணமான அதிகாரங்கள்.



(2) தபாலாபீஸ், தந்தி ஆபீஸ் இவைகளிலிருக்கிற தபால்கள், தந்திகள் முதலியவற்றை [illegible] கொண்டுவந்து ஆஜர் செய்யும்படிக்கு உத்தரவு செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 95.)

(3) தபாலிலாகா அல்லது [illegible]லிகிராப் இலாகா அதிகாரிகளுடைய வசத்திலிரு[illegible] ஸ்தாவேஜுகளைக்குறித்து சோதனை வாறண்டு பிறப்பிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 96.)

(4) இராஜநிந்தனை செய்யப்படுகிற கேசுகளில் நல்நடத்தைக்காக ஜாமீன் வாங்க அதிகாரம். (கி. பு. கோடு பிரிவு, 108.)

(5) அமரிக்கையைக் காப்பாற்றுவதர்காகவாவது நல்நடத்தையாகயிருப்பதற்காகவாவது பிணைப்பட்டிருக்கிறவர்களை நிவர்த்திசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 124.)

(6) அமரிக்கையைக் கெடுக்காதிருக்கும்படி வாங்கப்பட்ட முச்சிலிக்காவை ரத்துசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 125.)

(7) சுருக்கவகையாய்ப் பரிசிலனைசெய்ய அதிகாரம். (கி. பு. கோடு பிரிவு, 260.)

(8) சில கேசுகளிலே குற்ற ஸ்தாபனையைத் தள்ளிப்போட அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 350.)

(9) நல்ல நடத்தைக்காக ஜாமீன் கொடுக்கவேணுமென்று செய்யப்பட்ட உத்தரவுகளின்பேரில் கொண்டுவரப்படும் அப்பீல்களை விசாரிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 406.)

(10) இரண்டாவது மூன்றுவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளினுல் செய்யப்பட்ட குற்ற ஸ்தாபனையின்பேரில் கொண்டுவரப்படும் அப்பீல்களை விசாரிக்கவாவது விசாரணைக்கு அனுப்பவாவது அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 407.)

(11) ரிகார்டுகளை வரவழைக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 435.)

(12) விடுதலை செய்யப்பட்டவர்களை விசாரணைக்காக கம்மிட்டுப் பண்ணச்சொல்ல அதிகாரம். (கி. [illegible] கோடு, பிரிவு 436.)

(13) கி. பு. கோடு 203-வது பிரிவுப்படி [illegible]ளுபடி செய்யப்பட்ட அல்லது விசாரணையின்பேரில் எ[illegible] பக்கம் விசாரியாமலேயே [illegible]திரியை விடுதலை செய்யப்[illegible] கேசுகளில், பிரா[illegible]மறுபடி விசாரிக்கச்சொல்ல அதி[illegible]ம். (கி.பு.கோடு, பிரிவு 437.)

(14) கேசுகளைப்பற்றி ஹைக்கோர்ட்டுக்[illegible]ப்போர்ட்டுச்செய்ய அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 438.)

(15) ஐரோப்பிய பிரிட்டிஷ் [illegible] பேரில் [illegible]ருகிற கேசுகளை விசாரிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 443.)

(16) ஐரோப்பிய பிரிட்டிஷ் குடிக[illegible]ன்பேரில் [illegible] விசாரித்துத் தண்டனை செய்தால் மூன்று [illegible]த்திற்கு மேற்பட்ட காவல்தண்டனையாவது, அல்லது [illegible]00-ரூ. அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்க அதிகாரம். (கி. பு. கோடு, பிரிவு 486.)

(17) சில குறிப்பிட்ட கேசுகளை நடத்துவதற்காக பப்ளிக்கு பிராஸிகியூட்டரை நியமிக்க அதிகாரம். (இ.பு. கோடு, பிரிவு 492 (2).)

(18) கம்மிஷன்பேரில் சாக்ஷி விசாரிக்க உத்தரவு செய்ய அதிகாரம். (இ. பு. கோடு, பிரிவு 503, 505.)

(19) இ. பு. கோடின் 514, 515 - வது பிரிவுகளின்படி செய்யப்பட்ட உத்தரவுகளின்பேரில் அப்பீல்களை விசாரிக்கவோ, அல்லது மேற்பரிசோதனை செய்யவோ அதிகாரம்.

(20) கடத்திக்கொண்டு போகப்பட்ட பெண்பிள்ளைகளை திரும்பக் கொடுத்துவிடும்படி கட்டாயம்பண்ணி உத்தரவு செய்ய அதிகாரம். (இ. பு. கோடு, பிரிவு 552.)

## அப்பீல்கள்.

500. சாதாரணமான 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுடையவும் 1-வது வகுப்பு ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுகளுடையவும், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டினுடையவும் தீர்மானங்களின்பேரில் செய்யப்படும் அப்பீல்கள், அந்த ஜில்லா ஸெஷன் கோர்ட்டில் செய்யப்படவேண்டும்.

501. எந்த வகுப்பு மாஜிஸ்திரேட்டும், அப்பீல்கள், கேசுகளை மேற்பரிசோதனை செய்யும் விஷயங்கள் இவைகளைத் தவிர மற்ற விஷயங்களில் ஸெஷன் ஜட்ஜிக்குட்பட்டவரல்ல.

502. ஸெஷன் ஜட்ஜி ஆஜரில்லாத அல்லது அவர் தேக அசௌகரியத்தினால் வேலைபார்க்க முடியாமலிருக்கிற காலங்களில், ஸெஷன் ஜட்ஜியினால் பைசல் செய்யப்படவேண்டிய அவசரமான மனுக்கள் முதலியவை டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு பைசல் செய்யலாம். (இ.பு.கோடு பிரிவு, 1'

## ஸ்பெஷியல் மாஜிஸ்திரேட்டுகளைப்பற்றிய விஷயங்கள்.

503. ராஜதானிப்பட்டணங்களுக்கு வெளியேயிருக்கிற இடங்களில் சில குறிப்பிட்ட கேசுகள் விஷயமாயாவது அல்லது சில குறிப்பிட்ட வகுப்புக் கேசுகள் விஷயமாயாவது, அல்லது பொதுவாய் எல்லாக் கேசுகள் விஷயமாயாவது, இ. பு. கோடுப்படி 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்குக் கொடுக்கக்கூடிய சகல அதிகாரங்களையுமாவது, அல்லது அவைகளில் எதையாவது, அந்தந்த இடத்திலுள்ள கவர்ன்மெண்டார் எந்த நபருக்குங் கொடுத்துவிடலாம்.

504. அப்படி அதிகாரம் கொடுக்கப்படுகிறவர்களுக்கு ஸ்பெஷியல் மாஜிஸ்திரேட்டுகளென்று பெயர். இவ்வளவு வருஷங்களுக்கென்று குறிப்பிட்டு இந்த அதிகாரம் கொடுக்கப்படும்.

505. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்களுடைய அனுமதியை முன்னதாகப்பெற்றுக்கொண்டு, அந்தந்த இடத்திலிருக்கப்பட்ட கவர்ன்மெண்டார், மேலே சொல்லப்பட்ட ஸ்பெஷியல் மாஜிஸ்திரேட் அதிகாரத்தைத் தங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டயாதொரு உத்தியோகஸ்தனுக்கு தங்கள் யுக்தம்போல பந்தனைக்குட்படுத்திக்கொண்டு கொடுத்துவிடலாம்.

506. அஸிஸ்டாண்டு டிஸ்டிரிக்கட்டு சூபரின்டெண்டாண்டு அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்ட யாதொரு போலீசு உத்தியோகஸ்தனுக்கு இ



பிரிவுப்படி ஸ்பெஷியல் மாஜிஸ்திரேட்டு அதிகாரங் கொடுக்கப்படமாட்டாது. சட்டப்படி ஸரியான அந்தஸ்துள்ள போலீசு உத்தியோகஸ்தர்களுக்கு ஸ்பெஷியல் மாஜிஸ்திரேட்டு அதிகாரங்கொடுப்பதிலும், சீமையின் அமரிக்கையைக் காப்பதற்கும், குற்றஞ்செய்வதைத் தடுப்பதற்கும், குற்றச்செய்கைகளைத் துலக்கி, குற்றஞ்செய்தவர்களைப் பிடித்து அவர்களை மாஜிஸ்திரேட்டுகளின் முன் கொண்டுபோய் ஆஜர்செய்யும்பொருட்டு காவலில் வைப்பதற்கும், அப்போது வழக்கத்திலிருந்து வருகிற சட்டத்தின்படி அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர் செய்துமுடிக்கக்கடமைப்பட்டிருக்கிற மற்ற அலுவல்களைச்செய்து முடித்துக்கொள்ளவும் மட்டும் வேண்டிய அளவுதான் அதிகாரங்கள் கொடுக்கப்படும். (இ. பு. கோடு பிரிவு, 14.)

## பெஞ்சு மாஜிஸ்திரேட்டுகளைப்பற்றிய விஷயங்கள்.

507. ராஜதானிப் பட்டணங்களுக்கு வெளியே, பெரும்பாலும், சர்க்கார் வேலையிலேயே இல்லாத பெரிய குடித்தனக்காரர் முதலியவர்களுக்கு யாதொரு சம்பளமுமில்லாமல் கௌரவத்துக்காகமட்டும் மாஜிஸ்திரேட்டு அதிகாரங்களை கொடுக்கப்படுகிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டென்று பெயர். இப்படி 2 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ள ஸ்பெஷியல் மாஜிஸ்திரேட்டுகளை ஒன்றாய்க்கூடி கேசுகளை விசாரித்து பைசல்செய்யும்படி உத்தரவு செய்யலாம். இவர்களுக்குப் பெயர் பெஞ்சு மாஜிஸ்திரேட்டு (அதாவது மாஜிஸ்திரேட்டுகளின் நியாயசபை) என்று பெயர். இப்படி நியமிக்கப்பட்ட பெஞ்சு மாஜிஸ்திரேட்டுகளுக்கு 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு இவைகளில் எந்த அதிகாரத்தையாவது கொடுக்கலாம். இந்தப் பெஞ்சு மாஜிஸ்திரேட்டுகளுக்குக் குறிப்பிட்டு இன்னவகுப்பு மாஜிஸ்திரேட்டு அதிகாரத்தைச் செலுத்தலாமென்று அதிகாரங் கொடுக்கப்படாமலிருந்தால், அவர்களில் குறிப்பிட்டு அதிகாரம் கொடுக்கப்பட்டு, அக்கிராஸனாதிபதியாக யிருந்து வேலை செய்கிறவர் எந்த வகுப்பு மாஜிஸ்திரேட்டோ அந்த வகுப்பு மாஜிஸ்திரேட்டு அதிகாரத்தை மற்றவர்கள் செலுத்தலாம்.

508. பெரும்பாலும், பெஞ்சு மாஜிஸ்திரேட்டாக யிருப்பவர்கள், சர்க்காரில் சம்பளத்தோடு மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்படுகிற ஒரு மாஜிஸ்திரேட்டு அக்கிராஸனாதிபதியாக யிருப்பவருடனிருந்து வேலைசெய்வது வழக்கமாக யிருந்துகொண்டிருக்கிறது. ஆகையால் அந்தச் சம்பளத்துடன் அலுவல் பார்க்கிற மாஜிஸ்திரேட்டுக்கு எந்த வகுப்பு மாஜிஸ்திரேட்டு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதே அதிகாரத்தைத்தான் அந்த சபையில் மெம்பராக யிருக்கப்பட்ட மற்றவர்களும் செலுத்துகிறார்கள். (இ. பு. கோடு பிரிவு, 15.)

## ராஜதானி மாஜிஸ்திரேட்டுகளைப்பற்றிய விஷயங்கள்.

509. ராஜதானிப்பட்டணத்திற்கு வெளியில் நடக்கிற குற்றங்களை விசாரிப்பதற்கு 1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் நியமிக்கப்பட்டிருப்பதுபோல், ராஜதானிப்பட்டணத்திற்குள்ளும், அந்தப்பட்டணத்தின் துரை

முகத்தைச்சேர்ந்த இடங்களிலும், அந்தப் பட்டணத்திற்குப்போகிற ஆறு அல்லது வாய்க்கால் முதலியதுகளிலும் நடக்கிற குற்றச்செய்கைகளை விசாரிப்பதற்காக ராஜதானி மாஜிஸ்திரேட்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

510. இவர்களும் 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு அதிகாரத்தைச் செலுத்துகிற மாஜிஸ்திரேட்டுகள்தான். டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுகள் செலுத்துகிற சில விசேஷ அதிகாரங்களும் அவர்களுக்குண்டு. அவசியமாக எத்தனைபேர்கள் வேண்டுமோ அத்தனை ராஜதானி மாஜிஸ்திரேட்டுகளை பிரதேச கவர்ன்மெண்டார் நியமிக்கலாம். அவர்களில் ஒருவர் முக்கியமான ராஜதானி மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்படுவார். அவர்கள் தனித்தனியாகவும், சில கேசுகளில் சேர்ந்தும் இருந்து கிரிமினல் கேசுகளை விசாரிக்க அதிகாரமுண்டு.

511. இவர்களால் விசாரிக்கப்படும் ஸெஷன் கேசுகளை ஹைக்கோர்ட்டுக்குத்தான் கமிட்டுச்செய்யவேண்டும். இவர்கள் தண்டனைசெய்கிற கேசுகளின்பேரில் அப்பீலும் ஹைக்கோர்ட்டில்தான் செய்யவேண்டியது. இவர்கள் 6மீ காவல் தண்டனை மட்டும் விதிக்கும் கேசுகளிலாவது அல்லது ரூ. 200-க்கு மேற்படாத அபராதம் மட்டும் விதிக்கும் கேசுகளிலாவது அப்பீல் கிடையாது.

512. ரூ. 200-க்கு மேற்பட்ட அபராதமாவது அல்லது 6மீத்துக்கு மேற்பட்ட காவல்தண்டனையாவது விதிக்கப்படுகிற ஒவ்வொரு கேசிலும் சாக்ஷி வாக்குமூலத்தைத் தானாக எழுதிக்கொள்ளவாவது, அல்லது தான் சொல்லுகிறபடி குமாஸ்தாவைக்கொண்டு எழுதிவிக்கவாவது வேண்டும். (கி. பு. கோடு, பிரிவு 364.)

குறிப்பு :—இக்குறிப்பட்ட கேசுகளில்லாத மற்றக்கேசுகளில் சாக்ஷிகளின் வாக்குமூலத்தை எழுதிக்கொள்ளவேண்டியதில்லை யென்பது வெளியாகிறது.

513. மற்ற மாஜிஸ்திரேட்டுகளைப்போல ராஜதானி மாஜிஸ்திரேட்டுகள் கேசுகளில் பைசலுக்குத் தீர்ப்பு எழுதவேண்டியதில்லை. தீர்ப்புக்குப் பதிலாக அடியிற்கண்ட விபரங்களை மட்டும் பதிவுசெய்யவேண்டியது.

(a) கேஸின் வரிசை நம்பர்.

(b) குற்றம் நடந்த தெய்தி.

(c) வாதி யாராவதிருந்தால் அவன் பெயர்.

(d) எதிரி ஐரோப்பியக்குடியாக யிருந்தாலொழிய மற்றக் கேசுகளில் எதிரியின் பெயரும் தகப்பன் பெயரும் இருப்பிடமும்.

(e) அவன் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது அவன்பேரில் ருஜுவான குற்றமின்னதென்பதும்.

(f) எதிரியின் கக்ஷி இன்னதென்பதும் அவனை விசாரிக்கப்பட்டிருந்தால் அந்த வாக்குமூலமும்.

(g) கேஸில் முடிவான உத்தரவு

(h) முடிவு உத்தரவின் (



(i) காவல்தண்டனை அல்லது 200-ரூபாய்க்கு மேற்பட்ட அபராததண்டனை, அல்லது இரண்டும் கொடுக்கப்படுகிற எல்லாக் கேசுகளிலும் தண்டித்ததற்குக் காரணங்களைச் சுருக்கமாகப் பதிவுசெய்யவேண்டும். (கி. பி. கோடு, பிரிவு 370.)

## ஸெஷன் கோர்ட்டுகளைப்பற்றிய விஷயங்கள்.

1. பிரதேச கவர்ன்மெண்டார், ஸெஷன் ஜட்ஜையும், அதிகமான ஸெஷன் கேசுள்ள இடங்களில், அடிஷனல் ஸெஷன் ஜட்ஜையும், அஸிஸ்டாண்டு ஸெஷன் ஜட்ஜையும் நியமிக்கலாம்.

## ஸெஷன் ஜட்ஜ் விதிக்கக்கூடிய தண்டனைகள்.

515. கேஸின் தன்மைக்குத்தக்கபடி சட்டத்திற்கு ஒத்துமையான விதமாக எவ்வளவு அபராதமும் விதிக்கலாம், எவ்வளவு காலத்திற்கும் தண்ணீர் மேலேற்றிவிடலாம். அடிதண்டனை விதிக்கலாம், மற்றுமுள்ள எல்லாத் தண்டனைகளும் விதிக்கலாம். ஒரு குற்றவாளியினுடைய சொத்துப் பூராவையும் பறிமுதல் செய்துவிடலாம். ஒருவனுக்கு மரண தண்டனை விதித்துவிடலாம்.

அடிஷனல் ஸெஷன் ஜட்ஜுக்கும், ஸெஷன் ஜட்ஜுக்குள்ள எல்லா அதிகாரங்களும் உண்டு. ஆனால், ஸெஷன் ஜட்ஜினால் அனுப்பப்படுகிற கேசுகளை மட்டுந்தான் விசாரிக்க அதிகாரமுண்டு. அஸிஸ்டாண்டு ஸெஷன் ஜட்ஜுகள், ஸெஷன் ஜட்ஜுகளுக் குட்பட்டவர்கள்தான்.

516. ஸெஷன் கோர்ட்டாரால் விசாரிக்கப்படும் கேசுகளை ஜூரர்களின் உதவியைக்கொண்டாவது, அல்லது அஸெஸ்ஸர்களின் உதவியைக் கொண்டாவது விசாரிக்கப்படும். இன்னவிதமான கேசுகளை ஜூரர்கள் உதவியைக்கொண்டும், இன்னவிதமான கேசுகளை அஸெஸ்ஸர்களின் உதவியைக்கொண்டும் விசாரிக்கவேண்டுமென்பதைப்பற்றி பிரதேச கவர்ன்மெண்டாரவர்கள் அந்தந்த இடத்தின் தன்மையைப்பொறுத்து உத்தரவு செய்வார்கள். ஹைக்கோர்ட்டில் விசாரணையாகும் ஸெஷன்ஸ் கேசுகளெல்லாம் ஜூரி கேசுகளாகவே விசாரணை செய்யப்படுகின்றன. ஆனால் ராஜதானிப்பட்டணத்திற்கு வெளியேயுள்ள ஜில்லாக்களில் அநேகமாய், உயிர்விஷயமான, அதாவது மனுஷனுடைய தேகசம்பந்தமாகச் செய்யப்படுகிற குற்றங்களைப்பற்றி விசாரிக்கப்படுகிற கேசுகளையெல்லாம் அஸெஸ்ஸர்கள் உதவியைக்கொண்டும், பொருள் விஷயமாகச் செய்யப்படுகிற குற்றங்களைப்பற்றி விசாரிக்கப்படுகிற கேசுகளையெல்லாம் ஜூரர்கள் உதவியைக்கொண்டும் விசாரித்து வருகிறார்கள்.

517. ஜூரிகளால் விசாரிக்கப்படும் கேசுகளுக்கும் அஸெஸ்ஸர்களால் விசாரிக்கப்படும் கேசுகளுக்குமிருக்கும் வித்தியாசம் அடியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—அஸெஸ்ஸர்கள் இன்னவிதம் பைசல் செய்யவேண்டுமென்பதைப்பற்றி எவ்வித அபிப்பிராயங்கொடுத்தாலும் அந்த அபிப்பிராயத்

ட்ப்படி பைசல் செய்துவிடலாம். ஆனால், ஜூரிகளில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயப்படி ஸெஷ்ஷன் ஜட்ஜ் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்; ஸெஷ்ஷன் ஜட்ஜ் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தில் கலந்துகொள்ளா விட்டால், கேஸின் பைசலை நிறுத்திவிட்டு, தன் அபிப்பிராயமின்னதென்பதையும், ஜூரர்கள் அபிப்பிராயமின்னதென்பதையும் ஹைகோர்ட்டாரவர்களுக் கெழுதி, அவர்களுடைய உத்தரவுபோல நடக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு 307.)

## அஸிஸ்டாண்டு ஸெஷ்ஷன் ஜட்ஜிகள் விதிக்கக்கூடிய தண்டனைகள்.

518. அஸிஸ்டாண்டு ஸெஷ்ஷன் ஜட்ஜிகள் 7-வருஷங்களுக்கு மேற்படாத தீவாந்தர தண்டனையாவது காவல் தண்டனையாவது விதிக்கலாம். குறிப்பிடப்படாத அபராதம் விதிக்கலாம். சொத்தைப் பறிமுதல் செய்யுந் தண்டனை விதிக்கலாம்.

## ஸெஷ்ஷன் கோர்ட்டாருக்குக் கேஸ்களை விசாரிப்பதற் கிருக்கும் அதிகாரங்களைப்பற்றி.

519. ஸெஷ்ஷன் ஜட்ஜுக்கு தானாக பிராது வாங்கி ஒரு கேஸையும் பைசல்பண்ணும் அதிகாரமில்லை. மாஜிஸ்திரேட்டுகளினால் கம்மிட்டுப்பண்ணப்பட்ட கேஸ்களை மட்டுந்தான் விசாரிக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு. தன் கோர்ட்டில் கேஸ் விசாரணையின்போது செய்யப்பட்ட குற்றங்களையும், கி. பு. கோடு, 477-வது பிரிவுப்படி கம்மிட்டு பண்ணும்படிக்கு உத்தரவு செய்யப்படுகிற கேஸ்களையும் அவர் விசாரிக்கலாம்.

## கம்மிட்டுப் பண்ணப்படாமலே தன் முன்பாக நடந்துகொண்டிருக்கும் கேஸ் விஷயமாய்ச் செய்யப்பட்ட குற்றங்களை விசாரிக்கும் அதிகாரத்திற் குள்ளடங்கிய கேஸ்கள்.

520. இ. பி. கோடு, 172-வது முதல் 188-வரையுள்ள பிரிவுகளின் படிக்குள்ளவும், இ. பி. கோடு, 193, 194, 195, 196, 199, 200, 205, 206, 207, 208, 209, 210, 211, அல்லது 228-வது பிரிவுகளின்படிக்குள்ளவும் குற்றங்களையும், இ. பி. கோ, 463-வது பிரிவில் சொல்லப்பட்ட அல்லது 471, 475, அல்லது 476-வது பிரிவின்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களை கேஸின் கக்ஷிக்காரர்களே செய்யும்பொழுதும் ஸெஷ்ஷன் ஜட்ஜ் கேஸ் தன் முன்புக்குக் கம்மிட்டுச் செய்யாமலேயே தானாகவே விசாரித்து தண்டிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 477.).

## அப்பீல்கள்.

521. ஸெஷ்ஷன் ஜட்ஜி, 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுடையவும், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டினுடையவும் பைசலின்பேரில் அப்பீல் விசாரித்து பைசல் செய்யலாம். 4-வருஷத்துக்கு மேல்பட்ட காவல்தண்டனையையாவது அல்லது எவ்வளவு காலத்துக்காவது தீவாந்தர தண்டனை



யாவது அஸிஸ்டாண்டு ஸெஷ்ஷன்ஸ் ஜட்ஜ் விதித்தால் அதன்பேரில் ஸெஷ்ஷன் ஜட்ஜ் அப்பீல் வாங்கி விசாரித்துப் பைசல்செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு 408.)

522. ஸெஷ்ஷன் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட அப்பீல்களை ஸெஷ்ஷன் ஜட்ஜாவது அல்லது அட்டிஷனல் ஸெஷ்ஷன் ஜட்ஜாவது விசாரிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 409.)

## ஹைகோர்ட்டைப்பற்றிய விஷயங்கள்.

523. ஹைகோர்ட்டுகள் கிரிமினல் புரொஸீஜர் கோடினால் யேற்படுத்தப்பட்ட கோர்ட்டுகளல்ல சீமையிலுள்ள ராயல் சார்ட்டர் என்னும் சட்டத்தினாலும் அதனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற லெட்டர் ஸ்பேடெண்டினாலும் யேற்படுத்தப்பட்டவைகள். ஹைகோர்ட்டுகள் கல்கத்தா, சென்னப்பட்டணம், பம்பாய், அலஹபாத் என்னும் இந்த நான்கு இடங்களிலும் யேற்படுத்தப்பட்டிருக்கின்றன.

524. ஹைகோர்ட் ஜட்ஜிகள் சீமையில் மகிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்களாலேயே நியமிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு ஹைகோர்ட்டிலும் ஒரு பிரதான ஜட்ஜியும் (Chief Justice) இன்னும் 15-க்கு மேற்போகாமல் மற்ற ஜட்ஜிகளும் யிருக்கவேண்டும். ஹைகோர்ட்டு ஜட்ஜிகளை அடியிற்கண்டபடி தெரிந்தெடுத்து நியமிக்கப்படும்.

(1) 5-வருஷங்களுக்குக்குறையாத அனுபோகமுள்ள பாரிஸ்டர்களிலிருந்தும்,

(2) ஐ. ஸி. எஸ். பரிக்ஷை தேறியும், 10-வருஷங்களுக்குக்குறையாத காலத்துக்கு வேலைபார்த்தும் ஜில்லா ஜட்ஜி வேலைபார்த்துமிருக்கிறவர்களிலிருந்தும், மேற்சொன்ன 10-வருஷத்தில் ஜில்லா ஜட்ஜி அதிகாரத்தைப்போலொத்ததை 3-வருஷங்களுக்காவது செலுத்திவந்தவர்களிலிருந்தும்,

(3) ப்ரின்ஸிபல் ஸதிர் அமீன் வேலை (இப்போதைய ஸப் ஜட்ஜ் வேலை) அல்லது ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜிக்குறையாத உத்தியோகத்தை 5-வருஷங்களுக்காவது பார்த்து வந்தவர்களிலிருந்தும்,

(4) ஸதர் கோர்ட்டு அல்லது ஹைகோர்ட்டில் 10-வருஷக்காலத்திற்குக்குறையாமல் வக்கீலாக யிருந்துவருகிறவர்களிலிருந்தும் தெரிந்தெடுத்து நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு கோர்ட்டுக்கும் ஏற்பட்ட ஜட்ஜிகளில் பிரதான ஜட்ஜி உள்பட மூன்றில் ஒரு பங்கு பாரிஸ்டராகவும், மூன்றில் ஒரு பங்கு ஸிவில் ஸர்விஸ் பரிக்ஷை பாஸ் செய்து கலெக்டர் ஜட்ஜி முதலிய வேலைகள் பார்த்துவருகிறவர்களாகவுமிருக்கவேண்டும்.

(ராயல் சார்டர் ஆக்ட்டு, 2-வது பிரிவு.)

525. பிரதான ஜட்ஜுக்குக் கீழ்ப்பட்ட ஜட்ஜிகள், பிரதான ஜட்ஜி செய்யும் யேற்பாடுகளின்படி வேலைபார்க்கவேண்டும்.

526. ஹைக்கோர்ட்டுகளுக்கு ஸிவில் கிரிமினல் வியவகாரங்களில் அஸல் அப்பீல் கேசுகள் பைசல் செய்யும் அதிகாரமுண்டு. கிரிமினல் விஷயங்களில், ராஜதானிப்பட்டணங்களின் எல்லைக்குள் நடக்கும் கேஸ்கள் ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டினுல் கம்மிட்டுச்செய்யப்படுகிறவைகளை விசாரிக்கும் அஸல் அதிகாரமுண்டு. ராஜதானியில் ஹைக்கோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட எந்தக்கோர்ட்டிலும் நடக்கும் நீதி விவகார நடவடிக்கைகளின் பேரில் அப்பீல்களை விசாரித்துப்பைசல் செய்யவும், அந்தக் கீழ்ப்பட்ட கோர்ட்டுகளில் நடக்கும் நடவடிக்கைகளை புனராலோசனை செய்து பைசல் செய்யவும் ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. ராஜதானியில் ஹைக்கோர்ட்டாருக்கிருக்கிற ஸிவில் அஸல் விசாரணை அதிகார எல்லைக்குள்ளிருக்கிற யாரையும் பிடித்து ஹைக்கோர்ட்டு அல்லது குறிப்பிடப்படுகிற அதிகாரி முன் ஆஜர்ப்படுத்தும் படிக்கும், அல்லது காவலில் வைக்கப்பட்டிருக்கிற யாரையும் விட்டுவிடும்படிக்கும் கி. பு. கோடு, 491-வது பிரிவிப்படிக்கு உத்தரவு பிறப்பிவிக்க ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

527. கீழ்க்கோர்ட்டுகளால் விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகளை தண்டிக்கவேண்டுமென்று செய்யப்படுகிற அப்பீல்களின்பேரிலும், ரிக்கார்டுகளைப்பார்வையிட்டே விடுதலை செய்யப்பட்ட நபருக்குத்தீர்ப்பு விதித்து அதை நிறைவேற்றும்படிக் குத்தரவுசெய்ய ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. செய்யப்பட்ட அப்பீலின் பேரிலாவது ரிவிஷன் மனுவின்பேரிலாவது, அஸல் கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட தண்டனை, செய்யப்பட்ட குற்றத்தின் தன்மைக்குப் போதாதென்று தண்டனையை ஜாஸ்தி பண்ணவும் ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

## ஹைக்கோர்ட்டு பைசலின்பேரில் அப்பீல்களைப்பற்றிய விஷயங்கள்.

528. மேற்பட்ட எந்தக்கோர்ட்டினுலும் உறுதிசெய்யப்பட வேண்டியதில்லாமலேயே எந்தத்தீர்ப்பும் செய்ய ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. ஹைக்கோர்ட்டாரால் செய்யப்படும் தீர்ப்புகள் அல்லது உத்தரவுகளின்பேரில் ஸாதாரணமாக அப்பீல் கிடையாது. சில அபூர்வக்கேசுகளில் சீமையிலிருக்கும் "பிரிவிகௌன்ஸல்" என்னும் நியாயஸபைக்கு அப்பீல் செய்யலாம். விசேஷமாய் முக்கியமான கேசென்றும், விசேஷமான சட்ட சங்கதிகள் அடங்கிய கேசென்றும் ஹைக்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு ப்ரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்யும்படிக்கு அனுமதி கொடுத்தாலொழிய அப்பீல் செய்யமுடியாது.



# அத்தியாயம் 7.

## 1870-ம் வருஷத்து 7-வது ஆக்ட்டு

## கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு.

அடியிற் கண்டவைகளுக்கு லேபில் ஒட்டவேண்டியதில்லை.

529. (1) போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகளில் மாஜிஸ்திரேட்டிடம் கொடுக்கும் பிராதுகளுக்கு லேபில் ஒட்டவேண்டியதில்லை.

(2) போலீசாரிடம் எழுதிவைக்கும் பிராதுக்குலேபில் ஒட்டவேண்டியதில்லை.

(3) கிராம மாஜிஸ்திரேட்டிடம் யெழுதிவைக்கும் பிராதுக்கு லேபில் ஒட்டவேண்டியதில்லை.

(4) ஜெயிலிலிருக்கும் கைதி பக்ஷத்தில் தாக்கல்செய்யப்படும் பெட்டிஷன், ஜாமீன் மனு இவைகளுக்கு லேபில் ஒட்டவேண்டியதில்லை.

(5) தண்டனைப்பட்டு ஜெயிலிலிருப்பவனுக்காக தாக்கல் செய்யப்படும் அப்பீல் பெடிஷனில் லேபில் ஒட்டவேண்டியதில்லை. அப்பீல் செய்யும்போது அப்பீலுடன் தாக்கல்செய்யும் கீழ்க்கோர்ட்டு தீர்ப்புக்களில் பொதுவாக 360-வார்த்தைகளுக்கு ஒரு 8-அணு லேபில் வீதம் ஒட்டவேண்டியபடி லேபில் ஒட்டவேண்டியதில்லை.

(6) கோர்ட்டுகளில் விசாரணையிருக்கும் கேசுகளின் சம்மந்தமாக தாக்கல் செய்யப்படும் தஸ்தாவேசுகளையாவது வேறு ஸாமான்களையாவது வாப்ஸ் கேட்டு தாக்கல் செய்யும் மனுக்களில் லேபில் ஒட்டவேண்டியதில்லை.

## கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 20-வது பிரிவுப்படி கிரிமினல் கோர்ட்டுகளிலிருந்து பிறப்பிவிக்கப்படும் சம்மன் வாறண்டு முதலியதுகளுக்காக கக்ஷிக்காரர்கள் செலுத்தவேண்டிய படியைப்பற்றிய விதிகள்.

530. (1) கோர்ட்டுக் கட்டடத்திலிருந்து 6-மைலுக்கு மேற்பட்ட தூரத்திலிருக்கும் ஊரிலுள்ள எதிரி அல்லது சாட்சி ஒவ்வொருவருக்கும் அணு 8, சம்மன் படி கட்டவேண்டும்.

அதே ஊரிலிருக்கப்பட்ட எதிரி அல்லது சாட்சிகள் பாக்கி எத்தனை பேர்களிருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அணு 4 வீதம் சம்மன்படி கட்டவேண்டும்.

(2) கோர்ட்டுக் கட்டடத்திலிருந்து 6 - மைலுக்குக் கீழ்பட்ட ஊரிலிருக்கும் எதிரி அல்லது சாக்ஷி ஒவ்வொருவருக்கும் அணு 4, சம்மன் படி கட்டவேண்டும். அதே ஊரிலிருக்கும் எதிரி அல்லது சாக்ஷிகள் பாக்கி எத்தனைபேர்களிருந்தாலும் நபர் 1 - க்கு அணு 2-வீதம் சேர்த்துக் கணக்கிட்டுப் படிகட்டவேண்டும்.

(3) கோர்ட்டுக் கட்டடத்திலிருந்து 6 - மைலுக்கு மேற்பட்ட ஊரிலிருக்கப்பட்ட எதிரி அல்லது சாட்சிக்கு பிடிவாறண்டு பிறப்பிவிக்க அணு 12, வாறண்டுப் படி கட்டவேண்டும். அதே ஊரில் எத்தனை எதிரிகள் சாக்ஷிகளிருந்தாலும் வாறண்டுப் படி மாத்திரம் நபர் 1-க்கு 12 - அணு வீதமே கட்டவேண்டும்.

(4) 6-மைலுக்குள்ப்பட்ட ஊரிலிருக்கப்பட்ட எதிரி அல்லது சாட்சிக்கு வாறண்டு பிறப்பிவிக்க நபர் 1-க்கு 6-அணு வீதம் படி கட்டவேண்டும். பாக்கி எத்தனைபேர்களிருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 6-அணு வீதமே படி கட்டவேண்டும்.

**குறிப்பு:**—ஒரு வாறண்டு பிறப்பித்த தெய்திமுதல் 15 – நாளைக்குள் அந்த வாறண்டு நிறைவேற்றப்படாமலிருந்து அந்த வாறண்டில்கண்ட சாக்ஷி அல்லது எதிரியைத் தரீவித்துத்தான் தீரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டால் அந்த வாறண்டு நிறைவேற்றப்படாமலிருக்கிற ஒவ்வொரு 15 - நாளைக்கும் அல்லது அதிற்குள்பட்ட காலத்துக்கும் மேற்கண்ட தாரணைப்படி வாறண்டுப் படி கட்டிக்கொண்டேயிருக்கவேண்டும்.

கோர்ட்டு கட்டடமிருக்கிற இடத்திலிருந்து 6 – மைலுக்கு உட்பட்ட கிராமங்கள் இன்னின்னதென்பதையும், 6 – மைலுக்கு மேற்பட்ட கிராமங்களின்னின்னதென்பதையும் கண்டு ஒரு ஜாப்தா ஒவ்வொரு கோர்ட்டு வாசலிலும் தொங்கவிட்டிருக்கும். அதைப்பார்த்துக்கொண்டு அல்லது கோர்ட்டு உத்தியோகஸ்தர்களிடமிருந்து தெரிந்துகொண்டு படி கட்டவேண்டும்.

### ஒரு அணு லேபில் ஒட்டவேண்டிய மனுக்கள்.

531. நகல் மனுவில் மட்டும் 1- அணு லேபில் ஒட்டவேண்டியது. (கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 2-வது ஷெடியூல் 1-வது விஷயம் (a).)

### 8-அணு லேபில் ஒட்டவேண்டிய மனுக்கள்.

532. போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகளில் மாஜிஸ்திரேட்டிடம் கொடுக்கும் பிராதில் 8-அணு லேபில் ஒட்டவேண்டும். (கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு பிரிவு 2-வது ஷெடியூல் 1-வது விஷயம் (b)).

533. வாய்மொழியாய்த் தெரிவிக்கப்பட்ட பிராதை மாஜிஸ்திரேட்டு எழுதிக்கொண்டால் கோர்ட்டார் அப்படி உத்திரவு செய்தால் அந்தப் பிராதில் 8-அணு லேபில் ஒட்டவேண்டும். (கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு பிரிவு 18.)

534. வக்காலத்தில் 8-அணுலேபில் ஒட்டவேண்டியது.

**குறிப்பு:**—ஹைக்கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டிய வக்காலத்துக்களில் 2-ரூ. லேபில் ஒட்டவேண்டும்.

535. கிரிமினல் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யும் வாக்குமூலம், பைஸல் இவைகளின் நகல்களின்பேரில் ஒவ்வொரு 360-வார்த்தைகளுக்கும்



அல்லது அவைகளின் பின்னங்களுக்கும் ஒரு 8-அணு லேபில் வீதம் ஒட்டவேணும்.

**விவரணம்:**—361 - வார்த்தைமுதல் 720 - வரை எத்தனை வார்த்தைகளிருந்தாலும் இரண்டு எட்டணு லேபில்களும், 721 - முதல் 1080-வரை எத்தனை வார்த்தைகளிருந்தாலும் மூன்று 8 - அணு லேபில்களும் இவ்விதம் கணக்கிட்டு ஒட்டவேண்டும்.

**குறிப்பு:**—ஸிவில்கோர்ட்டுத் தீர்ப்புநகலை கிரிமினல் கேஸில் ஆதாரமாக தாக்கல்செய்தால் ஷை தீர்ப்பில் எத்தனை வார்த்தைகளிருந்தாலுமே ஒரு 8 - அணு லேபில் மாத்திரம் ஒட்டினால் போதும்.

536. அதேவிதமாக ஸிவில்கோர்ட்டு டிக்கிரி நகலை தாக்கல்செய்யும் போதுஎத்தனை வார்த்தைகள் அதிலிருந்தாலுமே 2-ரூ. லேபில் அதில் ஒட்டவேண்டும்.

537. மேலே குறிப்பிடப்படாத நோட்டீஸ், உத்தரவு, மறியல்கள் வகையராக்களுக்கு 8-அணு லேபில் ஒட்டவேண்டியது.

538. ஸம்மன் படி ரூபாயாக ரொக்கம் கட்டக்கூடாது. கோர்ட்டு பீஸ் லேபில்கள் வாங்கி படி மனு எழுதி அதில் ஷை லேபில்களை ஒட்டிக் கோர்ட்டில்கொடுக்கவேண்டும். (படி மனு மாதிரி எழுதப்பட்டிருக்கிறதைப் பார்க்க.)

539. கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 18-வது பிரிவில் கண்டபடி வாய்மொழியாய்செய்த பிராதின்பேரில் ஒட்டிய கோர்ட்டு பீஸ் 8-அணுவையும் போலீசார்வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகளில் மாஜிஸ்திரேட்டிடம்கொடுத்தபிராதுகளில் ஒட்டிய கோர்ட்டு பீஸ் 8-அணுவையும், போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகளில் சாட்சிகளுக்காக கட்டின ஸம்மன் படியையும், எதிரியைத் தண்டிக்கிற கேசுகளில் எதிரியிடமிருந்து வசூல் செய்து வாதிக்குக் கொடுக்கவேண்டும். (கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு, பிரிவு 31.)

540. தாக்கல் செய்யவேண்டிய தஸ்தாவேசு நகல்களில் கோர்ட்டு பீஸ் ஆக்ட்டுப்படி செலுத்தவேண்டிய தொகைக்கு லேபில் ஒட்டாவிட்டாலும், அந்த தஸ்தாவேஜை தாக்கல் செய்வதானது நியாயம் தவறிப்போகாமலிருப்பதைத் தடுப்பதற்கு அவசியமானதென்று தோன்றினால் அந்தக்கோர்ட்டார் அந்தத் தஸ்தாவேசுக்கு கோர்ட்டு பீஸ் ஆக்ட்டுப்படி செலுத்தவேண்டிய பீஸ் இல்லாமலேயே அந்த தஸ்தாவேஜை தாக்கல்செய்வதை அங்கீகரிக்கலாம். (கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு, பிரிவு 34.)

# அத்தியாயம் 8.

## கிரிமினல் கோர்ட்டு நடவடிக்கைகள் ஸம்மந்தமான காலாவதியைப்பற்றி.

541. கிரிமினல் கோர்ட்டுகளில் குற்றச்செய்கை முதலியதுகளைப் பற்றிய பிராது கொடுக்க, சட்டப்படி காலாவதியுண்டென்று குறிப்பிட்டுச்சொல்லப்பட்டிருக்கிற கேசுகளைதவிர மற்றதுகளுக்குக் காலாவதி கிடையாது. குற்றச்செய்கை நடந்து எவ்வளவு காலத்துக்குப் பின்னிட்டாகிலும் பிராது கொடுக்கலாம். ஆனல், குற்றச்செய்கை நடந்த உடன் கூடிய சீக்கிரத்தில் பிராது கொடுக்காத விஷயத்தில், பிராது எந்தக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்படுகிறதோ அந்தக்கோர்ட்டார் பிராதின் உண்மையைப்பற்றி சந்தேகிக்கும்படி நேரிடும். ஆகையால், குற்றச்செய்கை நடந்த உடன் பிராது கொடுப்பதற்க்காகச் செய்யவேண்டிய நடபடிக்கைகளைக் கூடிய சீக்கிரத்தில் நடத்துவதுதான் நலம்.

542. கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் நடத்துவதற்குக் காலாவதி குறிப்பிடப்பட்டிருகிற சட்டமாகிய 1877-ம் வருஷத்து 15-வது ஆக்ட்டில், காலாவதியுள்ள ஸகல ஸங்கதிகளையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிரிமினல் அப்பீல்கள் செய்வதற்குக் காலாவதி யேர்ப்படுத்தப்பட்டிருக்கிறது. கிரிமினல் பிராதுகள் செய்ய காலாவதி குறிப்பிடப்படவில்லை, காலாவதியிருந்தால் சொல்லப்பட்டிருக்கும். கால நிர்ணயச் சட்டத்தில் சொல்லப்படாத சங்கதிகளுக்கும், அதிலும் விசேஷமாய் கிரிமினல் நடவடிக்கைகள் நடத்துவதற்கும் காலாவதியே கிடையாதென்று இந்தியன் லா ரிப்போர்ட்டு அலஹாபாத் ஸீரீஸ் 10-வது வால்யூம் 350-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

543. கி.பு. கோடு 203-204-(3)-வது உட்பிரிவு 245-247-253-258 இந்தப் பிரிவுகளின்படி தள்ளுபடி செய்யப்பட்ட பிராதுகளின்பேரில் மேற்பரிசோதனை (ரிவிஷன் மனு) தாக்கல் செய்யவும் காலாவதியில்லை. ஆனல், கூடிய சீக்கிரம் தாக்கல் செய்வது நலம்.

544. கி. பு. கோடு 192-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற பிரிவுகளில் கண்ட குற்றத்தை ஒரு கேஸில் ஸம்மந்தப்பட்ட கக்ஷிக்காரன் அல்லது சாக்ஷிகள் செய்ததற்காக பிராஸிகியூஷன் செய்ய ஸாங்கிஷன் கேழ்க்கக் காலாவதியில்லை. ஆனல் எந்தக்கேஸின் ஸம்மந்தமாக அந்தக் குற்றங்கள் செய்யப்பட்டதோ அந்தக் கேசு முடிந்த உடன் கூடிய சீக்கிரத்தில் சாங்கிஷன் மனு தாக்கல் செய்வது நலம்.



545. பிராது முதலியதுகள் கிரிமினல் கோர்ட்டுகளால் தள்ளுபடி செய்யப்பட்டாலுமே, அப்பீல் கோர்ட்டில் கீழ்கோர்ட்டு தண்டனை பூராவும் மாற்றப்பட்டாலுமே, அந்தத் தள்ளுபடி செய்யப்பட்ட பைஸலின்பேரில் அப்பீல்செய்ய கவர்ன்மெண்டாருக்குத் தான் பாத்தியதையுண்டு. மற்றப் பிரைவேட்டு கக்ஷிக்காரர்களுக்கு, அப்படி அப்பீல் செய்யும் பாத்தியதை கிடையாது. கி. பு. கோடுப்படி எதிரி விடுதலை செய்யப்படுவதின் மூலமாகப் பிராது தள்ளுபடிசெய்யப்பட்டால், பிரைவேட்டுக் கக்ஷிக்காரர்கள் அந்தத்தள்ளுபடி பைசலை ரத்துச்செய்து எதிரியைத் தண்டனைக்குக் கொண்டுவருவதற்காக ஹைக்கோர்ட்டில், அந்தக்கேசை மேற் பரிசோதனை செய்வதற்காக மனு (Revision Petition) கொடுக்கலாம். ஸெஷ்ஷன் கோர்ட்டிலும், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டிலும், ஸப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டிலும், ரிவிஷன் மனுக்கொடுக்கலாம். ஸெஷ்ஷன் கோர்ட்டிலாவது டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டிலாவது தாக்கல் செய்யப்பட்ட மனுவின்பேரில், அவர்கள் அந்தக் கேஸின் ரிக்கார்டுகளை கீழ்கோர்ட்டிலிருந்து தருவித்து பரிசோதனை செய்து பார்த்து அந்தக் கேசைத் தள்ளுபடி செய்தது அந்தக் கேஸின் ரிக்கார்டுகளுக்காவது நியாயத்துக்காவது சட்டத்துக்காவது விரோதமென்று தோன்றினல் அதைப்பற்றி அந்தக் கேஸின் ரிக்கார்டுகள் ஸகிதம் ஹைகோர்ட்டாரவர்களுடைய உத்திரவுக்காக நேரில் ரிப்போர்ட்டுச் செய்யலாம். ஸப்டிவிஷண் மாஜிஸ்திரேட்டிடம் மனுத்தாக்கல் செய்யப்பட்டால் அவர் மேல்கண்டபடி ரிக்கார்டுகளைத் தருவித்துப் பார்த்து அப்படிச் செய்வது யுக்தமென்று தோன்றினல் அந்த ரிக்கார்டுகளைத் தன் ரிப்போர்ட்டு ஸகிதம் டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பலாம்.

டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு அந்த விஷயத்தில் ஸப் டிவிஷணல் மாஜிஸ்டிரேட்டின் அபிப்பிராயத்துடன் கலந்துகொண்டால் ஹைகோர்ட்டுக்கு எழுதலாம்.

546. கி. பு. கோடு 203; 253-வது பிரிவுகளின் தள்ளுபடி செய்யப்பட்ட பிராதுகளை, ஸெஷன் கோர்ட்டாராவது டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டாவது மறுபடி விசாரிக்கும்படி தாங்களே உத்தரவு செய்யலாம்.

### 547. பிராது செய்யக் காலாவதியுள்ள கேசுகளும் அவைகளின் காலமும்.

#### 10-நாளைக்குள் பிராது செய்யவேண்டியது.

1. 1866-ம் வருஷத்து 2-வது ஆக்ட்டாகிய (Cattle disease Act) ஆடுமாடுகளுக்குத் தொத்துவியாதி ஆக்ட்டு, 16-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது.

#### 3-மாஸம் கலாவதிக்குள்.

2. பிராணிகள் விஷயத்தில் கொடூரமாயிருப்பதற்க்காகச் செய்யப்பட்ட 1890-ம் வருஷத்து 11 – வது ஆக்ட்டு (Cruelty to animals Act) 9-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது.
3. ஆயுத ஆக்ட்டு (Arms Act) 1878-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு 33-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது.

4. சென்னப்பட்டணம் போலீஸ் ஆக்ட் (Madras Police Act) 1859-ம் வருஷத்து 25-வது ஆக்ட் 53-வது பிரிவுப்படி பிராது கொடுத்து மேல் நடத்தவேண்டியது.

5. மேற்படி ஆக்ட் 1861-ம் வருத்து 5-ஆக்ட், 42-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது.

6. 1878-ம் வருத்து 8-வது ஆக்ட் (Sea customs) 198-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது.

### 6-மாசம் காலாவதிக்குள்.

7. சென்னப்பட்டணம் உப்பு ஆக்ட் (Salt Act) 1889 - ம் வருஷத்து [illegible] வது ஆக்ட், 87 - வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது.

8. சென்னப்பட்டணம் (Excise Act) 1886-வருஷத்து 1-வது ஆக்டில் 72-வது பிரிவுப்படி பிராது செய்யவேணும்.

### 3-வருஷ காலாவதிக்குள்.

1889-ம் வருத்து 4-வது ஆக்ட்டாகிய (Merchandise marks Act) 15-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது)

### 1-வருஷக் காலாவதிக்குள்.

10. 1847-ம் வரு 20-வது ஆக்டாகிய (Copy-right Act) 16-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது.

### 2-வருஷக் காலாவதிக்குள்

11. 1872-ம் வருத்து 15-வது ஆக்ட்டாகிய (Christian marriage Act) 76-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டியது.

## 548. அப்பீல் காலாவதியைக்குறித்து.

### 7-நாள் காலாவதிக்குள்.

12. மரணதண்டனைத் தீர்ப்பின்பேரில் ஹைக்கோர்ட்டில் அப்பீல்செய்யவேண்டியது. (காலநிர்ணய ஆக்ட் 2-வது ஷெடியூல் 150-வது விஷயம்.)

### 30-நாளைக் காலாவதிக்குள்.

13. 1, 2, 3 - வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுடைய தண்டனைத் தீர்ப்பின்பேரில் அப்பீல் செய்யவேணும். (காலநிர்ணய ஆக்ட் 2-வது ஷெடியூல் 154-வது விஷயம்.

### 60-நாள் காலாவதிக்குள்.

மரணதண்டனையின் பேரிலும் விடுதலையின்பேரிலும் செய்யப்படுகிற அப்பீல்களைத் தவிர ஹைகோர்ட்டில் செய்யப்படவேண்டிய மற்ற அப்பீல்கள் செய்யவேண்டியது. (காலநிர்ணய ஆக்ட் 2-வது ஷெடியூல் 155-வது விஷயம்.)



### 3-மாச காலாவதிக்குள்.

14. ஜீவனாம்சக் கேசுகளில் [illegible] ஆஜராகாமலிருக்கும்போது கோர்ட்டார் ஜீவனாம்சம் கொடுக்கும்படி செய்துவிடப்பட்ட உத்திரவை ரத்துச்செய்ய மனுக்கொடுக்கவேண்டியது. (கி.பு.கோடு, பிரிவு 488, (6.).)

### 6-மாதக் காலாவதிக்குள்.

15. விடுதலை செய்த பைசலின்பேரில், மேலே 545 - வது விஷயத்தில் சொல்லப்பட்டபடி கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் அப்பீல்களை செய்யவேண்டியது.

16. ஒருவன்பேரில் வாங்கின சாங்ஷன்பேரில் பிராஸிகியூஷன் செய்யவேண்டும்.

### 2-வருஷ காலாவதிக்குள்.

ஸம்மன் அல்லது வாரண்டுப்படி ஆஜராகாதவர்களை [illegible] ஜாத்துகள் [illegible]ப்தி செய்யப்பட்டவைகளை ஷை யார்கள் ஆஜராய் பெற்றுக்கொள்ளவேண்டியது.

### [illegible]றிப்புகள்.

(1) அப்பீல் செய்யவேண்டிய காலாவதி நாளைக்கணக்கிடுவதில், கேஸில் பைசல் சொன்ன தினத்தையும், கோர்ட்டில் நகல் கொடுப்பதற்குத் தாமதஞ் செய்கிற தினங்களையும் கழித்துக்கொண்டு கணக்கிடவேண்டும். ([illegible]நிர்ணய ஆக்ட் பிரிவு-12.)

(2) அப்பீல் வாயிதாக்கழிகிற தினம் ரஜா நாளாக யேற்பட்டுவிட்டால் கோர்ட்டுத் திறக்கிற தினத்தில் தாக்கல் செய்யவேண்டியது. (காலநிர்ணய ஆக்ட் பிரிவு-5.)

(3) போதுமான காரணங்களினால் அப்பீலைக் காலாவதிக்காலத்துக்குள் தாக்கல் செய்யாமல் போய்விட்டால், அப்பீல் அதிகாரி ஷை காரணங்களை திருப்திகரமானவைகளென்று ஒப்புக்கொண்டால் ஷை அப்பீலைக் காலாவதியாய் விட்டாலும், வாங்கி பைசல்செய்யலாம், (காலநிர்ணய ஆக்ட், பிரிவு-5.)

## கிரிமினல் கோர்ட்டு ரிகார்டுகளுக்கு நகல் வேண்டுமானால் எடுக்கவேண்டியதற்கும் ஷை கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜு முதலிய ரிக்கார்டுகளை வாபஸ் வாங்கவேண்டியதற்கும் காலாவதியைப்பற்றி.

### [illegible]-மாதக் காலாவதிக்குள்.

549. போலீஸாரால் எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்தை வாபஸ் கொடுக்கலாம்.

### 1-வருஷக் காலாவதிக்குள்.

கிராம மாஜிஸ்திரேட்டுகளால் விசாரிக்கப்பட்ட கேசுகளின் ரிஜிஸ்டர்,

3-வருஷ காலாவதிக்குள்.

லெஸ்ஷஷன் கேசுகள், வாறண்டு கேசுகள், சம்மன் கேசுகள், ஜீவனாம்ச கேசுகள், நல்லநடத்தைக்காவது அல்லது சமாதான அமரிக்கைக்கு விரோதமாய் கலகம் செய்யாமலிருக்கும்படிக்காவது ஜாமீன் வாங்குவதற்காக விசாரணையான கேசுகள், மற்ற சில்லறை நடவடிக்கைகள் சம்மந்தமான கேசுகள் இவைகளில் சம்மந்தப்பட்ட வாக்குமூலங்கள் இவைகளுக்கு நகல் வாங்கிக்கொள்ள வேண்டியது.

நகல்கள் சம்மந்தமான ரிஜிஸ்டர்கள், சம்மன், வாறண்டு முதலிய நடவடிக்கைகள் பிறப்பிவித்ததைக் காட்டக்கூடிய ரிஜிஸ்தர்கள், கோர்ட்டுகளில் தாக்கல்செய்த தஸ்தாவேஜுகள், சாக்ஷிக்காரர்கள், வாப்ஸ்கேட்ட மனுக்களின் பதிவு ரிஜிஸ்டர், அந்த மனுக்களில் கேட்டுக்கொண்டபடி தஸ்தாவேஜுகள் வாப்ஸ் கொடுத்து அவர்களிடம் கைபெழுத்து வாங்கின ரிஜிஸ்டர், அபராதம் விதிக்கப்பட்டதுகளையும் சொத்துப்பறிமுதல் செய்யப்பட்ட கேசுகளையும் தாக்கல் செய்யப்பட்ட ரிஜிஸ்டர், ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை ஜப்திசெய்த கேசுகளை பதிவுசெய்த ரிஜிஸ்டர், மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுகளின் கிரிமினல் டைரிகள், போலீஸ் அரெஸ்ட்டு சார்டுகள் முதலிய ரிக்கார்டுகள், போலீஸ் பியோக்கள், சுபாவத்துக்கு விரோதமானதும் திடீரென்றும் நேரிடுகிற மரணங்களைக்குறித்துப் போலீசார் அனுப்புகிற ரிப்போர்ட்டுகள், இவைகளுக்கெல்லாம் நகல் வேண்டுமானால் வாங்கிக்கொள்ளவேண்டியது.

தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளையும் இந்தக் காலத்துக்குள் தான் வாப்ஸ் வாங்கிக்கொள்ளவேண்டியது. தவறினால் அவைகளை அழித்து விடப்படும்.

5-வருஷ காலாவதிக்குள்.

கிரிமினல் கோர்ட்டுகளில் போக்குவரவு கரெஸ்பான்டென்ஸ்களுக்கு நகல் வாங்கிக்கொள்ளவேண்டியது.

ஸம்மன் கேசுகளில் பைசலுக்கு நகல்கள் வாங்கிக்கொள்ளவேண்டியது.

10-வருஷ காலாவதிக்குள்.

கி. பு. கோடு 264-வது பிரிவில் கண்டபடி சுருக்கமாக விசாரிக்கப்படுகிற கேசுகளின் பைசல், நல்லநடத்தைக்காகவும், கலகம் செய்யாமலிருப்பதற்காகவும் ஜாமீன் வாங்கும்படி விசாரிக்கப்படுகிற கேசுகளின் பைசல், இவைகளுக்கு நகல் வாங்கிக்கொள்ளவேண்டியது.

12-வருஷ காலாவதிக்குள்.

சப்பாப் பிரயரத்து, பெட்டிஷன் ரிஜிஸ்டர் இவைகளுக்கு நகல்கள் வாங்கிக்கொள்ளவேண்டியது.

20-வருஷ காலாவதிக்குள்.

லெஸ்ஷஷன் கேசுகளிலும் மற்ற வாறண்டுக் கேசுகளிலும் பைசலுக்கு நகல்கள் வேண்டுமானால் வாங்கிக்கொள்ளவேண்டியது.

ஜீவனாம்சக் கேசுகளில் பைசலுக்கு நகல் வாங்கிக்கொள்ளவேண்டியது.

குறிப்பு :—மேற்கண்ட ரிக்கார்டுகளில் பைசல்கள், வாக்குமூலங்கள் இவைகளுக்கு மட்டும் நகல் ஷை கேசில் சம்மந்தப்பட்ட கக்ஷிக்காரர்கள் கேட்டால் நகல் கொடுக்கப்படும், மற்ற ரிக்கார்டுகளுக்கு மாஜிஸ்திரேட்டுகளுக்கு நகல் கேட்கும் காரணம் சரியானதென்று தோன்றினால் நகல் கொடுக்கலாம் இல்லாவிட்டால் நகல் கொடுக்க மறுதலித்துவிடலாம்.



# அத்தியாயம் 9.

## செய்யப்பட்ட குற்றத்தின் விஷயமாய் பிராது கொடுத்து விசாரணையாகவேண்டிய கோர்ட்டு அல்லது இலாகா.

550. ஒவ்வொரு குற்றத்தையும்பற்றி எந்த மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டாருடைய அதிகார எல்லைக்குள் அந்தக்குற்றம் செய்யப்பட்டதோ அப்படிப்பட்ட கோர்ட்டார் சாதாரணமாய் விசாரிக்கவேண்டியது. ஆகையால், அந்தக் கோர்ட்டில்தான் பிராது கொடுக்கவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு 177.)

551. ஒரு குற்றம் நடந்த இடம் எந்த மாஜிஸ்திரேட்டு கோர்ட்டாருடைய எல்லையிலிருக்கிறதோ அந்தக்கோர்ட்டிலாவது, அந்தக் குற்றச்செய்கையின்முடிவு எந்த மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டாருடைய எல்லையில் சம்பவிக்கிறதோ அந்தக்கோர்ட்டிலாவது பிராதுகொடுக்கலாம். (கி.பு. கோடு, பிரிவு–177.)

உதாரணம் :—இராமனென்பவனுக்கு விருதுபட்டி மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டாருடைய அதிகாரஎல்லைக்குள் காயம் உண்டுபண்ணப்பட்டு அவன் திருமங்கலம் மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டாருடைய அதிகார எல்லைக்குள் போய் இறந்துபோகிறான். இராமனென்பவனுக்குச்செய்த அநியாய மரணமென்னுங் குற்றத்தைப்பற்றி இராமனுக்கு காயம் உண்டாக்கப்பட்ட இடத்தில் அதிகாரமுள்ள விருதுபட்டி மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டாராவது ஷை காயத்தினால் அவனுக்கு மரணம் சம்பவித்த இடத்தில் அதிகாரமுள்ள திருமங்கலம் மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டாராவது பிராதுவாங்கி விசாரிக்கலாம்.

552. அன்னவஸ்திரத்துக்காக ஒருவன்பேரில் அவனுடைய குழந்தைகளாவது, பெண்சாதியாவது கி. பு. கோடு 488-வது பிரிவுப்படி கொண்டுவரப்பட்ட பிராதுகள், அந்த ஒருவன் எந்த மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டாரின் அதிகார எல்லைகுள் குடியிருக்கிறானோ அந்த மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டில் தாக்கல்செய்யப்படவேண்டும். (இ. லா. ரிப்போர்ட்டு. கல்கத்தா ஸீரிஸ் 24-வது வால்யூம் 638-வது பக்கம்.)

553. ஒருசெய்கையானது குற்றமான வேறொரு செய்கையோடு சம்மந்தப்பட்டிருக்கிறதினிமித்தமாய் குற்றமாக ஏற்படும்போது 1-வது கண்ட ஒரு குற்றச்செய்கையை இந்த இரண்டு குற்றச்செய்கைகளில் ஒன்று எதுவாவது எந்த மாஜிஸ்திரேட்டினுடைய அதிகார எல்லைக்குள் நடந்ததோ அந்த மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டில் பிராது செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு 180.)

உதாரணம்.—உடந்தை செய்யப்பட்டதென்னும் குற்றத்தை எந்த மாஜிஸ்திரேட்டினுடைய அதிகார எல்லைக்குள் உடந்தைக்குற்றம் செய்யப்பட்டதோ அந்தக்கோர்ட்டாராவது அல்லது உடந்தையாயிருந்த பிரதான குற்றம்

எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள்செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டாராவது விசாரிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 180).

554. திருட்டுச்சொத்தை வாங்குகிறதோ அல்லது வைத்துக்கொண்டிருக்கிறதைப்பற்றி எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள் சொத்துத் திருடப்பட்டதோ அந்தக் கோர்ட்டாராவது அல்லது எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள் திருட்டுப்போன சொத்துக்களில் எவ்வளவாகிலும் எப்போதாவது அயோக்கியமாய்ப் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அல்லது வைத்துக்கொள்ளப்பட்டதோ அந்த மாஜிஸ்திரேட்டாராவது விசாரிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 180.)

555. திருட்டுத்தனமாய் கடத்திக்கொண்டுபோகப்பட்டதாகத் தெரிந்திருக்கிற ஒரு நபரை அக்கிரமமாக ஒளித்துவைத்திருப்பதாகச் செய்யப்பட்ட குற்றத்தை எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள் அந்த நபர் அக்கிரமமாய் ஒளித்துவைக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் கோர்ட்டாராவது அல்லது அந்த நபர் எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள்ளிருந்து திருட்டுத்தனமாய்க் கடத்திக்கொண்டுபோகப்பட்டதோ அந்த மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டாராவது விசாரிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 180.)

556. தக்கித் திருடன் என்பது இன்னாரென்று தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகையால் அதன் சரித்திரத்தை அடியிற்சொல்லப்பட்டிருக்கிறது. முற்காலத்தில் திருடர்களில் ஒரு வகுப்பார் வியாபாரிகள்போல் வேஷந் தரித்துக்கொள்வார்கள். அவர்கள் உண்மையாகவே வியாபாரிகளாயிருப்பவர்கள் பிரயாணஞ்செய்பவர்கள் தாமசிக்கும் சத்திரம் முதலியபொது ஸ்தலங்களில் போய், தாமசிப்பார்கள். அப்பால் உண்மையான வியாபாரிகளிடம் வியாபார விஷயங்களையும், அவர்கள் எந்த ஊரிலிருந்து வருகிறார்கள், எந்த ஊருக்குப்போகிறார்கள், அவர்கள் வியாபாரத்தில் என்னலாபம் சம்பாதித்திருக்கிறார்கள் என்ற சகல விஷயங்களையும் தந்திரமாய்த் தெரிந்துகொள்ளுவார்கள். முன்காலத்தில் பிரயாணம்செய்கிற எல்லா வியாபாரிகளும் குதிரையின்மேல்தான் பிரயாணம்போவது வழக்கம். அப்பால் வியாபாரி வேஷம் தரித்த திருடர்களில் சிலர் உண்மையான வியாபாரிகள் அந்த சத்திரம் அல்லது பொது ஸ்தலத்திலிருந்து போகும் திசையில் சிலதூரத்துக்கப்பால் எல்லை காடாக உள்ள இடத்தில் முன்னதாகவே போயிருந்துகொண்டு பாதைக்கிருபுறத்திலும் இரண்டு ஸ்தம்பங்களை நிறுத்திவைத்து, அதில் ஒரு வலுவான தந்திக்கம்பியை ரஸ்தாவுக்குக் குறுக்காகக் கட்டிவிட்டு அதன் அருகில் ஒரு குழி தோண்டி வைத்துக்கொண்டு அவ்விடத்தில் ஜாக்கிரதையாக இருப்பார்கள். வியாபாரி வேஷம் தரித்த திருடர்களில் சிலர் உண்மையான வியாபாரிகள்கூட வருவார்கள். விடியற்காலத்திலேயே பிரயாணம்போவது வழக்கமாகையால் பொழுது விடியாததற்கு முன்னதாகவே புறப்பட்டுவருவார்கள். கம்பிகட்டியிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தவுடன் குதிரை வேகமாகப்போகும்போது அந்த தந்தி குதிரைமேலிருக்கும் வியாபாரிகள் கழுத்தில்பட்டு குதிரையைவிட்டு கீழே விழுந்துவிடுவார்கள். குதிரைகள் அதற்குமுன் தோண்டியிருக்கும் குழியில் விழுந்துவிடும். உடனே திருடர்கள் வியாபாரிகள்மேல்விழுந்து அவர்களிடமிருக்கும் சொத்துகளைப் பிடுங்கிக்கொண்டு அவர்களைவிட்டுவிடவாவது, அல்லது காயப்படுத்திவிட்டுவிடவாவது, அல்லது கொலைசெய்துவிட்டுவிடவாவது, அவர்கள் மனதுப்போல சமயத்துக்குத் தக்கபடி செய்துவிடுவார்கள்.



557. தந்தித் திருடனாயிருக்கிறானென்கிற குற்றத்தையாவது, தந்தி திருடனாயிருந்து கொலைசெய்வதென்னும் குற்றத்தையாவது, கூட்டகொள்ளையடிப்பதென்னும் குற்றத்தையாவது, கொலையோடுங்கூடிய கூட்டகொள்ளையடிப்பதென்னும் குற்றத்தையாவது, கொள்ளையடிக்கிற கூட்டத்தில் சேர்ந்திருக்கிறானென்கிற குற்றத்தையாவது, காவலிலிருந்து தப்பித்துக்கொண்டோடிப் போனானென்கிற குற்றத்தையாவது, செய்ததாகக் கொண்டுவரப்பட்ட பிராதை குற்றஞ் சாட்டப்பட்டவன் யாருடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கிறானோ அந்தக் கோர்ட்டார் விசாரணை செய்யலாம்.

558. ஒரு சொத்தை அக்கிரமமாய் உபயோகித்துக்கொள்வதென்னுங் குற்றத்தையாவது அநியாயமான நம்பிக்கைத் துரோகமென்னுங் குற்றத்தையாவது செய்ததாகக் கொண்டுவரப்பட்ட பிராதை யாருடையஅதிகார எல்லைக்குள் அந்தக் குற்றத்தைச்சேர்ந்த சொத்தில் எவ்வளவாகிலும் குற்றஞ் சாட்டப்பட்டவனால் வாங்கிக்கொள்ளப்பட்டதோ அல்லது அந்தக் குற்றஞ் செய்யப்பட்டதோ அந்த கோர்ட்டார் விசாரணை செய்யலாம்.

559. ஒரு சொத்தைத் திருடுவதென்னுங் குற்றத்தை யாருடைய அதிகார எல்லைக்குள் அது திருடப்பட்டதோ, அல்லது அதைத் திருடினவன் வைத்துக்கொண்டிருந்தானோ, அல்லது அது திருடப்பட்டதென்று தெரிந்தாகிலும் திருடப்பட்டதென்று நம்புவதற்கு முகாந்திரம் இருந்தாகிலும், ஒருவன் அதைப் பெற்றுக்கொண்டாவது, வைத்துக்கொண்டாவது இருந்தானோ, அப்படிப்பட்ட கோர்ட்டார் விசாரிக்கலாம்.

560. திருட்டுத்தனமாய் ஆளைக் கடத்திக்கொண்டுபோகிற குற்றமானது கடத்திக்கொண்டுபோகப்பட்டவன் எந்த அதிகாரஎல்லைக்குள் கடத்திக்கொண்டு போகப்பட்டானோ அந்தக்கோர்ட்டாராவது, அல்லது எந்த அதிகார எல்லைக்குக் கடத்திக்கொண்டுபோகப்பட்டவன் கொண்டுபோகப்பட்டானோ, அல்லது எந்த எல்லையில் கடத்திக்கொண்டு போகப்பட்டவன் மறைத்துவைக்கப்பட்டிருக்கிறானோ அந்தக்கோர்ட்டாராவது விசாரிக்கலாம்.

561. பல பிரதேச விஸ்தீர்ணங்களில் எதிலே குற்றஞ்செய்யப்பட்டதென்று நிச்சயப்படாவிட்டாலும் ;

யாதொரு குற்றமானது ஒரு பிரதேச விஸ்தீரணத்தில் கொஞ்சமும் வேறொன்றில் மற்றதுமாக செய்யப்பட்டாலும் ;

குற்றமானது தொடர்ச்சியாய்ச் செய்யப்பட்டு ஒன்றிலல்லாமல் பல பிரதேச விஸ்தீரணங்களில் நடந்துகொண்டிருப்பதானாலும் ;

அது பல பிரதேச விஸ்தீரணங்களிலே செய்யப்பட்ட பல செய்கைகள் அடங்கினதாயிருந்தாலும் அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணங்களிலாவது ஒன்றில் அதிகாரஞ் செலுத்துகிற கோர்ட்டார் அதை விசாரணை செய்யலாம் அல்லது பரிசீலனை பண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு 182).)

562. யாதொரு பயணமாவது கப்பல் யாத்திரையாவது போய்க்கொண்டிருக்கையில் ஒருவனால் செய்யப்பட்ட யாதொருகுற்றத்தை அந்தபயணம் போகையிலாவது, அல்லது கப்பல் யாத்திரை போகையிலாவது, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைவழியாய் அல்லது எல்லைக்குள் குற்றஞ்செய்தவராவது, எதற்கு விரோதமாய் குற்றஞ் செய்யப்பட்டதோ, அந்தப் பொருளாவது சென்றதோ அந்தக்கோர்ட்டார் பரிசீலனை செய்யலாம் அல்லது விசாரணைசெய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு 183.)

563. ரெயில்வண்டிப் பாதையைக் குறித்தாவது, தந்தியைக் குறித்தாவது, தபாலாபீஸைக் குறித்தாவது, ஆயுதங்களையும் மருந்து, குண்டு முதலிய சாமான்களைக் குறித்தாவது அந்தக்காலத்தில் வழங்குகிற யாதொருசட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய்ச் செய்யப்படுகிற சகலகுற்றங்களையும் இராஜதானியிலே அந்த குற்றம் செய்ததாக சொல்லி இருந்தாலும் இராவிட்டாலும் அந்த இராஜதானிப் பட்டணத்திலேயே விசாரணைசெய்யலாம், அல்லது பரிசீலனை பண்ணலாம். ஆனால் குற்றஞ் சாட்டப்பட்டவனும் அவன் பேரில் பிராது நடத்துவதற்கு அவசியமான சகல சாக்ஷிகளும் அந்த இராஜதானிப்பட்டணத்திற்குள் ளிருக்கிறதாக இருக்கவேணும். (கி. பு. கோடு, பிரிவு 184.)

564. யாதொரு குற்றத்தை இந்த அத்தியாயத்தில் முன்னமே சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி எந்தக் கோர்ட்டார் விசாரணை செய்யவேண்டியதோ அல்லது பரிசீலனை செய்யவேண்டியதோவென்று சந்தேகமுண்டானால் கிரிமினல்விவகாரத்தில் எந்த ஹைகோர்ட்டாருடைய அப்பீல் விசாரணை அதிகார பிரதேச எல்லைக்குள் குற்றஞ் சாட்டப்பட்டவன் வாஸ்தவமாயிருக்கிறானோ அந்த ஹைகோர்ட்டார் அந்த குற்றம் இன்ன கோர்ட்டாரால் விசாரணை அல்லது பரிசீலனை செய்யவேண்டியதென்று நிச்சயிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 185.)

565. ஒரு ராஜதானி மாஜிஸ்திரேட்டு, டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டு, ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு, அல்லது பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிற 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு இவர்களுடைய அதிகார எல்லைக்குள் ளிருக்கிறவனாவது, தன் அதிகார எல்லைக்கு வெளியே (அதாவது பிரிட்டிஷ் இந்தியாவுக்கு உள்ளேயிருந்தாலுமே வெளியேயிருந்தாலுமே) குற்றச்செய்கை ஏதாவது செய்ததாக நம்புவதற்கிடமிருந்தால் அந்த குற்றத்தை கி. பு. கோடு 177-முதல் 184-வது பிரிவு முடிய உள்ள பிரிவுகளின் நிபந்தனைகளின்படிக்காவது அல்லது வேறு சட்டத்தின் நிபந்தனையின்படிக்காவது மேற்கண்ட மாஜிஸ்திரேட்டுகளால் விசாரிக்கப்படக்கூடாமல் ஏற்பட்டு, ஆனால் அப்போது அமுலிலிருக்கிற சில சட்டத்தின்படி பிரிட்டிஷ் இந்தியாவில் விசாரிக்கலாமென்றுயேற்பட்டால் அந்த மாஜிஸ்திரேட்டு ஷை குற்றமானது தன்னுடைய அதிகார எல்லைக்குள் நடந்து வந்ததுபோலவேயே பாவித்து விசாரிக்கலாம் அந்த குற்றஞ்செய்தவனை தன்முன் ஆஜராகும்படி கட்டாயப்படுத்தி அந்தக் குற்றத்தை விசாரிக்க அதிகாரமுள்ள மாஜிஸ்திரேட்டிடம் அவனை அனுப்பலாம். அல்லது அந்தக் குற்றம் ஜாமீன்பேரில் விடக்கூடிய குற்றமாயிருந்தால் அவனை ஜாமீன் வாங்கிக்கொண்டு அந்த மாஜிஸ்திரேட்டிடம் ஆஜராகும்படிக்குள்ள ஏற்பாட்டைச் செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு 186.)

(2) அப்பேர்ப்பட்ட அதிகாரமுள்ள மாஜிஸ்திரேட்டுகள் ஒருவருக்கு மேற்பட்டவர்களுயிருந்து இந்தப்பிரிவுப்படி அதிகாரத்தைச் செலுத்துகிற மாஜிஸ்ட்ரேட்டுக்குப் அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளில் யாரிடம் இந்தக் கைதியை அனுப்புகிறதென்று அல்லது ஆஜராகும்படி ஜாமீன் வாங்குகிறதென்று சந்தேகமுண்டானால், அந்தக்கேசைப்பற்றி ஹைகோர்ட்டாரவர்களுடைய உத்தரவுக்காக ரிப்போர்ட்டுச் செய்யவேண்டும்.

---



# அத்தியாயம் 10.

## கிரிமினல் கேசுகளில் வாதியாயிருக்கவேண்டியது யார்?

566. பொதுவாக அடியிற்கண்ட குறிப்பிட்ட கேசுகளைத் தவிர மற்ற கேசுகளைக்குறித்ததான செய்கையால் கஷ்டநஷ்டமடைந்தவர் வாதியாகயிருந்து நடபடிக்கை நடத்தவேண்டுமென்பதில்லை. ஒருகுற்றச்செய்கை நடந்ததைஅறிந்தயாரும், ஷை குற்றச்செய்கையினால் கஷ்டநஷ்டம் அடைந்திராவிட்டாலும் வாதியாகயிருந்து பிராது கொடுத்து நடவடிக்கை நடத்தலாம். (இ. லா. ரிப்போர்ட்டு பம்பாய் ஸீரிஸ் 13-வது வால்யம் 600-வது பக்கம்.)

குறிப்பு:—ஆனால் அடிபிடிபோலொத்த சொற்பமாயும் பொதுவாய் அசேஷ ஜனங்களுக்கும் சிரத்தையில்லாமலிருக்கிறதுமான சங்கதிகளில் குற்றச்செய்கையினால் கஷ்டநஷ்டமடைகிறவர்களாவது அல்லது அவர்களைச் சேர்ந்தவர்களாவது வாதியாகயிருந்து பிராது செய்வது நலம்.

567. இந்தியன் பினல்கோடு 19-வது அத்தியாயத்தில் "ஊழியஞ் செய்வதற்காக உடன்பட்டிருக்கிறபடி நடந்துகொள்ளாமல் அனியாயமாய்த் தவறிப்போவதைக்குறித்து"ச் சொல்லப்பட்டிருக்கிற 490, 491, 492 - வது பிரிவுகளின்படிக்குள்ள குற்றங்கள் அடியில் விவரிக்கப்பட்டிருக்கிறவைகளுக்கு அந்தக் குற்றச்செய்கையினால் கஷ்டநஷ்டம் அடைந்தவன்தான் வாதியாகயிருந்து பிராது நடத்தவேணும். அவர்களுக்காக மற்றவர்கள் நடத்தக் கூடாது.

568. (1) (இ. பி. கோடு, பிரிவு 490.) கப்பலிலாவது கரைவழியாகவாவது பயணம் போகையில் ஊழியஞ்செய்வதாக உடன்பட்டிருக்கிறபடி நடவாமலிருப்பது;

(2) (இ. பி. கோடு, பிரிவு 491.) இளமையினாலாவது, புத்தி மாறுாட்டத்தினாலாவது, வியாதியினாலாவது, துர்ப்பலத்தினாலாவது தன்னுடைய க்ஷேமத்துக்கு வேண்டும் சங்கதிகளைச் செய்துகொள்ளவாவது தனக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொள்ளவாவது சக்தியில்லாமலும் ஆதரவற்றுமிருக்கிற ஒருவனுக்கு ஏவல்செய்கிறதாகவாகிலும் வேண்டியதை சவுதரிக்கிறதாகவாகிலும் உடன்பட்டிருக்கிறவன் வேணுமென்று அந்தப்படி செய்யாமலிருந்துவிடுவது;

(3) (இ. பி. கோடு, பிரிவு 492.) வேறொருவனிடம் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் எந்த இடத்திலாவது மூன்று வருஷத்திற்கு மேற்படாத

எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள் செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டாராவது விசாரிக்கலாம். (கி. பு. கோ, பிரிவு 180).

554. திருட்டுச்சொத்தை வாங்குகிறது அல்லது வைத்துக்கொண்டிருக்கிறதைப்பற்றி எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள் சொத்துத் திருடப்பட்டதோ அந்தக் கோர்ட்டாராவது அல்லது எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள் திருட்டுப்போன சொத்துக்களில் எவ்வளவாகிலும் எப்போதாவது அயோக்கியமாய்ப் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அல்லது வைத்துக்கொள்ளப்பட்டதோ அந்த மாஜிஸ்திரேட்டாராவது விசாரிக்கலாம். (கி. பு. கோ, பிரிவு 180.)

555. திருட்டுத்தனமாய் கடத்திக்கொண்டுபோகப்பட்டதாகத் தெரிந்திருக்கிற ஒரு நபரை அக்கிரமமாக ஒளித்துவைத்திருப்பதாகச் செய்யப்பட்ட பிராதை எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள் அந்த நபர் அக்கிரமமாய் ஒளித்துவைக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் கோர்ட்டாராவது அல்லது அந்த நபர் எந்த மாஜிஸ்திரேட்டாருடைய அதிகார எல்லைக்குள்ளிருந்து திருட்டுத்தனமாய்க் கடத்திக்கொண்டுபோகப்பட்டதோ அந்த மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டாராவது விசாரிக்கலாம். (கி. பு. கோ, பிரிவு 180.)

தக்கித்திருடனென்று சொன்னது.

556. தக்கித் திருடன் என்பது இன்னதென்று தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகையால் அதன் சரித்திரத்தை அடியிற்சொல்லப்பட்டிருக்கிறது. முற்காலத்தில் திருடர்களில் ஒரு வகுப்பார் வியாபாரிகள்போல் வேஷந் தரித்துக்கொள்வார்கள். அவர்கள் உண்மையாகவே வியாபாரிகளாயிருப்பவர்கள் பிரயாணஞ்செய்பவர்கள் தாமசிக்கும் சத்திரம் முதலியபொது ஸ்தலங்களில் போய், தாமசிப்பார்கள். அப்பால் உண்மையான வியாபாரிகளிடம் வியாபார விஷயங்களையும், அவர்கள் எந்த ஊரிலிருந்து வருகிறார்கள், எந்த ஊருக்குப்போகிறார்கள், அவர்கள் வியாபாரத்தில் என்னலாபம் சம்பாதித்திருக்கிறார்கள் என்ற சகல விஷயங்களையும் தந்திரமாய்த் தெரிந்துக்கொள்ளுவார்கள். முன்காலத்தில் பிரயாணஞ்செய்கிற எல்லா வியாபாரிகளும் குதிரையின்மேல்தான் பிரயாணம்போவது வழக்கம். அப்பால் வியாபாரி வேஷம் தரித்த திருடர்களில் சிலர் உண்மையான வியாபாரிகள் அந்த சத்திரம் அல்லது பொது ஸ்தலத்திலிருந்து போகும் திசையில் சிலதூரத்துக்கப்பால் சில காடர்க உள்ள இடத்தில் முன்னதாகவேயே போயிருந்துகொண்டு பாதைக்கிருபுறத்திலும் இரண்டு ஸ்தம்பங்களை நிறுத்திவைத்து, அதில் ஒரு வலுவான தந்திக்கம்பியை ரஸ்தாவுக்குக் குறுக்காகக் கட்டிவிட்டு அதன் அடுத்த முகத்துவாரத்தில் ஒரு குழி தோண்டி வைத்துக்கொண்டு அவ்விடத்தில் ஜாக்கிரதையாக இருப்பார்கள். வியாபாரி வேஷம் தரித்த திருடர்களில் சிலர் உண்மையான வியாபாரிகள்கூட வருவார்கள். விடியற்காலத்திலேயே பிரயாணம்போவது வழக்கமாகையால் பொழுது விடியாததற்கு முன்னதாகவேயே புறப்பட்டுவருவார்கள். கம்பிகட்டியிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தவுடன் குதிரை வேகமாகப்போகும்போது அந்த தந்தி குதிரைமேலிருக்கும் வியாபாரிகள் கழுத்திற்பட்டு குதிரையைவிட்டு கீழே விழுந்துவிடுவார்கள். குதிரைகள் அதற்குமுன் தோண்டியிருக்கும் குழியில் விழுந்துவிடும். உடனே திருடர்கள் வியாபாரிகள்மேல்விழுந்து அவர்களிடமிருக்கும் சொத்துகளைப் பிடுங்கிக்கொண்டு அவர்களைவிட்டுவிடவாவது, அல்லது காயப்படுத்திவிட்டுவிடவாவது, அல்லது கொலைசெய்துவிட்டுவிடவாவது, அவர்கள் மனதுப்போல சமயத்துக்குத் தக்கபடி செய்துவிடுவார்கள்.



557. தக்கித் திருடனாயிருக்கிறானென்கிற குற்றத்தையாவது, தக்கித்திருடனாயிருந்து கொலைசெய்வதென்னுங் குற்றத்தையாவது, கூட்டகொள்ளையிடுவதென்னுங் குற்றத்தையாவது, கொலையோடுகூடிய கூட்டகொள்ளையிடுவதென்னுங் குற்றத்தையாவது, கொள்ளையடிக்கிற கூட்டத்தில் சேர்ந்திருந்தானென்கிற குற்றத்தையாவது, காவலிலிருந்து தப்பித்துக்கொண் டோடிப்போனானென்கிற குற்றத்தையாவது, செய்ததாகக் கொண்டுவரப்பட்ட பிராதை குற்றஞ் சாட்டப்பட்டவன் யாருடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கிறானோ அந்தக் கோர்ட்டார் விசாரணை செய்யலாம்.

558. ஒரு சொத்தை அக்கிரமமாய் உபயோகித்துக்கொள்வதென்னுங் குற்றத்தையாவது அனியாயமான நம்பிக்கைத் துரோகமென்னுங் குற்றத்தையாவது செய்ததாகக் கொண்டுவரப்பட்ட பிராதை யாருடையஅதிகார- எல்லைக்குள் அந்தக் குற்றத்தைச்சேர்ந்த சொத்தில் எவ்வளவாகிலும் குற்றஞ் சாட்டப்பட்டவனால் வாங்கிக்கொள்ளப்பட்டதோ அல்லது அந்தக் குற்றஞ் செய்யப்பட்டதோ அந்த கோர்ட்டார் விசாரணை செய்யலாம்.

559. ஒரு சொத்தைத் திருடுவதென்னுங் குற்றத்தை யாருடைய அதிகார எல்லைக்குள் அது திருடப்பட்டதோ, அல்லது அதைத் திருடினவன் வைத்துக்கொண்டிருந்தானோ, அல்லது அது திருடப்பட்டதென்று தெரிந்தாகிலும் திருடப்பட்டதென்று நம்புவதற்கு முகாந்திரம் இருந்தாகிலும், ஒருவன் அதைப் பெற்றுக்கொண்டாவது, வைத்துக்கொண்டாவது இருந்தானோ, அப்படிப்பட்ட கோர்ட்டார் விசாரிக்கலாம்.

560. திருட்டுத்தனமாய் ஆளைக் கடத்திக்கொண்டுபோகிற குற்றமானது கடத்திக்கொண்டுபோகப்பட்டவன் எந்த அதிகார யெல்லைக்குள் கடத்திக்கொண்டு போகப்பட்டானோ அந்தக்கோர்ட்டாராவது, அல்லது எந்த அதிகார யெல்லைக்குக் கடத்திக்கொண்டுபோகப்பட்டவன் கொண்டுபோகப்பட்டானோ, அல்லது எந்த எல்லையில் கடத்திக்கொண்டு போகப்பட்டவன் மறைத்துவைக்கப்பட்டிருக்கிறானோ அந்தக்கோர்ட்டாராவது விசாரிக்கலாம்.

561. பல பிரதேச விஸ்தீரணங்களில் எதிலே குற்றஞ்செய்யப்பட்டதென்று நிச்சயப்படாவிட்டாலும் ;

யாதொரு குற்றமானது ஒரு பிரதேச விஸ்தீரணத்தில் கொஞ்சமும் வேறொன்றில் மற்றதுமாக செய்யப்பட்டாலும் ;

குற்றமானது தொடர்ச்சியாய்ச் செய்யப்பட்டு ஒன்றிலல்லாமல் பல பிரதேச விஸ்தீரணங்களில் நடந்துகொண்டிருப்பினாலும் ;

அது பல பிரதேச விஸ்தீரணங்களிலே செய்யப்பட்ட பல் செய்கைகள் அடங்கினதாயிருந்தாலும் அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணங்களிலாவது ஒன்றில் அதிகாரஞ் செலுத்துகிற கோர்ட்டார் அதை விசாரணை செய்யலாம் அல்லது பரிசீலனை பண்ணலாம். (கி. பு. கோ, பிரிவு 182).)

562. யாதொரு பயணமாவது கப்பல் யாத்திரையாவது போய்க்கொண்டிருக்கையில் ஒருவனால் செய்யப்பட்ட யாதொருகுற்றத்தை அந்தபயணம் போகையிலாவது, அல்லது கப்பல் யாத்திரை போகையிலாவது, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைவழியாய் அல்லது எல்லைக்குள் குற்றஞ்செய்தவராவது, எதற்கு விரோதமாய் குற்றஞ் செய்யப்பட்டதோ, அந்தப் பொருளாவது சென்றதோ அந்தக்கோர்ட்டார் பரிசீலனை செய்யலாம் அல்லது விசாரணைசெய்யலாம். (கி. பு. கோ, பிரிவு 183.)

காலத்திற்கு வேலை செய்வதாக எழுத்துமூலமாக ஒப்பந்தம் செய்துகொண்டு அவன் செலவின்பேரில் தூரதேசத்தில் போயிருந்துகொண்டு அந்த இடத்தில் ஒப்பந்தப்படி வேலை செய்யமாட்டேனென்பது ;

இந்த குற்றங்களுக்கு ஒப்பந்தப்படி வேலைக்காரர்கள் நடவாததினால் கஷ்டநஷ்டமடைந்தவர்கள்தான் நேரில் பிராது கொடுக்கவேணும்.

569. (இ. பி. கோடு, பிரிவு 500.) இதன்படி அவதூறுக்காகப் பிராது கொடுப்பது, ஷை அவதூறினால் கஷ்டம், நஷ்டம், மனவருத்தம் அடைகிறவரே நேரில் பிராது கொடுக்கவேணும்.

570. (இ. பி. கோடு, பிரிவு 501.) அவதூறென்று தெரிந்திருக்கிற சங்கதியை அச்சுப்போடுவது அல்லது செதுக்குவதின் மூலமாய் அவதூறு செய்தால் அவதூறு செய்யப்பட்டவனே நேரில் பிராது செய்துகொள்ளவேணும்.

571. (இ. பி. கோடு, பிரிவு 502.) அவதூறான சங்கதியை எதில் அச்சுப்போட்டிருக்கிறதோ அல்லது செதுக்கியிருக்கிறதோ அதை விற்றதினால் செய்யும் அவதூறுக்கு அவதூறு செய்யப்பட்டவனே நேரில் பிராது செய்துகொள்ளவேணும்.

குறிப்பு.—இறந்துபோனவனை அவதூறு செய்தால் அவன் வார்சுகள் வாதியாகயிருந்து கேஸ் நடத்தலாம்.

572. இந்தியன் பினல்கோடு, 493, 494, 495, 496-இந்தப் பிரிவுகளுக்குள்பட்ட விவாக சம்மந்தமான குற்றங்களுக்காக அந்தக் குற்றத்தினால் கஷ்டநஷ்டமடைந்தவனே நேரில் பிராது செய்யவேணும்.

573. (இ. பி. கோடு, பிரிவு 493.) எவனாவது தன்னை நியாயமாய் விவாகஞ்செய்துகொண்டவளல்லாத யாதொரு ஸ்திரீயை அப்படி விவாகஞ்செய்துகொண்டதாக நம்பும்படி செய்து அந்த நம்பிக்கையினாலே தன்னோடு கூட வாழும்படிக்காவது, அல்லது தன்னைப் புணரும்படிக்காவது மோசம்பண்ணினால் அந்த ஸ்திரீயின் புருஷன் வாதியாகயிருந்து பிராதுசெய்யவேண்டும்.

574. (இ. பி. கோடு, பிரிவு 494.) ஒரு ஸ்திரீயின் புருஷன் உயிரோடிருப்பதினாலும், ஒரு புருஷனுடைய பெண்சாதி உயிரோடிருப்பதினாலும் கலியாணம் ஊர்ஜிதத்திலிருந்து கொண்டிருக்கையில் ஜாதிவழக்கத்துக்கு விரோதமாக வேறொரு விவாகஞ் செய்துகொண்டால் அந்த ஸ்திரீயாவது புருஷனாவது வாதியாகயிருந்தே ஒருவர்மேலொருவர் கேசு நடத்தவேண்டும்.

575. (இ. பி. கோடு, பிரிவு 495.) ஸ்திரீயாவது புருஷனாவது தனக்கு முன்னே விவாகம் நடந்திருக்கிற சங்கதியை, தான் பின்பு விவாகஞ்செய்துகொள்ளுகிற நபரோடு சொல்லாமல் மறைத்து மேலே 494-வது பிரிவில் கண்ட குற்றஞ்செய்தால் ஸ்திரீயாவது, புருஷனாவது வாதியாக யிருந்து கேஸ் நடத்தவேணும்.

576. (இ. பி. கோடு, பிரிவு 496.) இன்னவிதமாய்ச் செய்கிற விவாகமானது நியாயமானதாகமாட்டாதென்று தெரிந்திருந்து எவனாகிலும் அயோக்கியயாகவாவது மோசமான எண்ணத்தோடாவது விவாகச் சடங்கு நடத்தினால் இப்பேர்ப்பட்ட கேசுகளில் எந்தப் பெண்ணைக் கலியாணஞ்செய்துகொள்ளும்படி இப்படி விவாகச்சடங்கு மோசமான எண்ணத்தோடு நடத்தப்படுகிறதோ அந்தப் பெண்ணாவது அல்லது அந்தப் பெண்ணை மோசமாகவிவாகஞ்செய்துகொண்டதினால் கஷ்டநஷ்டம் அடையக்கூடியவர்களாவது வாதியாகயிருந்து கேஸ் நடத்தவேணும்.



577. ஒரு விவாகமான ஸ்திரீயை வியபசாரித்தனம் செய்ததாக உள்ள அவ்தூறு தவிர வேறுவிதமாக யாரும் அவதூறு செய்தால் அதற்கு அந்த ஸ்திரீயே வாதியாகயிருக்கவேணும்.

வியபசாரித்தனம் செய்ததாக அவதூறு செய்தால் மட்டும் அவள் புருஷன் வாதியாகயிருக்கலாம்.

578. (இ. பி. கோடு, பிரிவு 497.) வேறொருவனுடைய பெண்சாதியென்று தனக்குத் தெரிந்திருக்கையில் அவள் புருஷன் சம்மதமன்னியில் அந்தப் பெண்பிள்ளையைப் புணர்ந்து வியபசாரம் செய்தால், அந்தப் பெண்பிள்ளையின் புருஷனே வாதியாக வரவேண்டும். அவன் குற்றச்செய்கை நடக்கும்போது ஸ்தலத்தில், ஆஜரிலில்லாமலிருந்தால் அந்த ஸ்திரீ யாருடைய பாதுகாப்பிலிருக்கிறானோ அவர்கள் வாதியாக வரலாம். (கி. பு. கோடு, பிரிவு 199.)

579. (இ. பி. கோடு, பிரிவு 498.) வேறொருவனுடைய பெண்சாதியென்று தெரிந்து அப்படிப்பட்டவளை அவள் புருஷனிடத்திலிருந்தாவது அந்தப் புருஷனுக்காக அவளை யார் தன்வசத்தில் வைத்திருக்கிறார்களோ அப்படிப்பட்டவரிடத்திலிருந்தாவது, அவள் யாவனொருவனோடு கள்ளப்புணர்ச்சி செய்யும்படிக்கு கூட்டிக்கொண்டுபோனாலும், ஆசைகாட்டி வசியப்படுத்தினாலும், அந்த எண்ணத்தோடு அவளை ஒளித்துவைத்தாலும், போகவொட்டாமல் தடுத்துவைத்தாலும், அவளுடைய புருஷனாவது அவனில்லாவிட்டால் அவனுக்காக அவள் யார் பாதுகாப்பிலிருக்கிறானோ அவராவது வாதியாக வரவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு 199.)

580. இந்தக் கேசுகள் தவிர மற்றக்கேசுகளில் குற்றச் செய்கையினால் கஷ்டநஷ்டம் அடைந்தவர்களைச்சேர்ந்த யாரும் வாதியாகயிருந்து பிராது கொடுக்கலாம்.

---

# அத்தியாயம் 11.

---

## முன் அனுமதி பெற்றுக்கொண்டே பிராது கொடுத்து நடபடிக்கை நடத்தவேண்டிய குற்றங்கள்.

581. (1) இ. பி. கோடு, 172-வது பிரிவு. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனிடத்திலிருந்து வருகிற ஸம்மன் முதலானவைகள் தனக்குச் சேராமல் தப்பித்துக்கொள்ளும்பொருட்டு மறைந்துகொள்வதென்னுங் குற்றம்.

(2) இ. பி. கோடு, 173-வது பிரிவு. ஸம்மன் முதலானவை சேரவொட்டாமலாவது, பிரசித்தம் செய்யவொட்டாமலாவது தடுக்குங் குற்றம்.

(3) இ. பி. கோடு, 174 - வது பிரிவு. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனிடத்திலிருந்து வருகிற கட்டளையின்படி ஆஜராகாயிருப்பதென்னுங் குற்றம்.

(4) இ. பி. கோடு, 175-வது பிரிவு. சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு சட்டப்பிரகாரம் தஸ்தாவேஜைக்கொண்டு காட்டவேண்டியவன் அந்தப்படி காட்டாமலிருப்பதென்னுங் குற்றம்.

(5) இ. பி. கோடு, 1[illegible]-வது பிரிவு. சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு ஒரு சங்கதியைப்பற்றி அறிக்கைசெய்ய வேண்டியவன் அந்தப்படி செய்யாமலிருப்பதென்னுங் குற்றம்.

(6) இ. பி. கோடு, 177-வது பிரிவு. சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு யாதொரு சங்கதியை சட்டப்பிரகாரம் தெரிவிக்கவேண்டியவன், சங்கதியை பொய்யாகத் தெரிவிக்குங் குற்றம்.

(7) இ. பி. கோடு, 178 - வது பிரிவு. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனால் சட்டப்படி பிரமாணஞ் செய்யச்சொல்லப்படுகிறவன் அப்படி செய்யமாட்டேனென்று சொல்லுங் குற்றம்.

(8) இ. பி. கோடு, 179-வது பிரிவு. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தன் கேழ்க்கிற கேள்விக்கு உத்தரவு சொல்லமாட்டேனென்று சொல்லுங் குற்றம்.

(9) இ. பி. கோடு, 180-வது பிரிவு. ஒருவன் தான் கொடுத்த வாக்குமூலத்தில் கையெழுத்துப்போடமாட்டேனென்று சொல்லுங் குற்றம்.

(10) இ. பி. கோடு, 181-வது பிரிவு. ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தனிடத்திலாவது பிரமாணம் செய்விக்க அதிகாரமுடைய வேறொருவனிடத்திலாவது பொய்யான வாக்குமூலங் கொடுப்பதென்னுங் குற்றம்.

(11) இ. பி. கோடு, 182 - வது பிரிவு. வேறொருவனைக் கெடுக்கும் பொருட்டு யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனை அவனுக்குள்ள அதிகாரத்தைச் செலுத்தும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு பொய்யான சங்கதியைத் தெரிவிப்பதென்னுங் குற்றம்.

(12) இ. பி. கோடு, 183 - வது பிரிவு. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தன் தனக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு சொத்தைக் கைப்பற்றுகையில் எதிர்க்குங் குற்றம்.

(13) இ. பி. கோடு, 184 - வது பிரிவு. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தன் தனக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு சொத்தை ஏலத்தில் விற்கையில் ஏலம் போடவொட்டாமல் தடுக்குங் குற்றம்.

(14) இ. பி. கோடு, 185 - வது பிரிவு. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தன் தனக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு ஏலத்தில் விற்கிற சொத்தை சட்டப்படி வாங்கக்கூடாத எவனாவது சட்டத்துக்கு விரோதமாக வாங்குவதென்னுங் குற்றம்.



(15) இ. பி. கோடு, 186 - வது பிரிவு. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தன் தனக்குள்ள சர்க்கார் அலுவலை நடத்துகையில் அவனை ஷை வேலையைச் செய்யவொட்டாமல் வேணுமென்று தடுக்குங் குற்றம்.

(16) இ. பி. கோடு, 187-வது பிரிவு. சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு உதவிசெய்ய சட்டப்பிரகாரம் கடமைப்பட்டிருக்கிறவன் எவனாவது அப்படி உதவிசெய்யாமலிருக்குங் குற்றம்.

(17) இ. பி. கோடு, 188-வது பிரிவு. சர்க்கார் உத்தியோகஸ்தனால் கிரமமாய் பிரசித்தஞ்செய்யப்படுகிற கட்டளைக்கு உட்படாமலிருக்குங் குற்றம்.

குறிப்பு:—மேலே கண்ட குற்றங்கள் எந்த சர்க்கார் உத்தியோகஸ்தர் விஷயமாய் செய்யப்படுகிறதோ அந்த சர்க்கார் உத்தியோகஸ்தர் நேரில் பிராதுசெய்யவேணும். அல்லது அந்த குற்றத்திற்காக வேறு யாராவது பிராது செய்கிறதாகயிருந்தால் ஷை சர்க்கார் உத்தியோகஸ்தருடைய அல்லது ஷை சர்க்கார் உத்தியோகஸ்தருடைய மேலான சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய அனுமதி பெற்றுக்கொண்டபின் தான் பிராது கொடுக்கவேண்டும்; இல்லாவிடில் பிராதுகளை அங்கீகரிக்கமாட்டார்கள்.

(18) இ. பி. கோடு, 193 - வது பிரிவு. யாதொரு நீதி விசாரணையில் பொய்ச்சாட்சிசொல்லுவது அல்லது அதில் உபயோகப்படுத்தும்பொருட்டு பொய்சாட்சி உண்டுபண்ணுவதென்னுங் குற்றம்.

(19) இ. பி. கோடு, 194 - வது பிரிவு. ஒருவனை மரண தண்டனைக்குள்ளான குற்றத்தைச் செய்தவனென்று தீர்மானிப்பிக்கவேணுமென்கிற எண்ணத்தோடு பொய்ச்சாட்சி சொல்லுவது அல்லது உண்டுபண்ணுதென்னுங் குற்றம்.

(20) இ. பி. கோடு, 195-வது பிரிவு. ஒருவனைத் தண்ணீர்மேலேற்றும்படியான அல்லது காவலில் வைக்கும்படியான குற்றஞ் செய்தவனென்று தீர்மானிப்பிக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு பொய்ச்சாக்ஷி சொல்லுவது, அல்லது உண்டுபண்ணுவதென்னுங் குற்றம்.

(21) இ. பி. கோடு, 196-வது பிரிவு. பொய்யென்று தெரிந்திருக்கிற சாக்ஷியத்தை உபயோகிப்பதென்னுங் குற்றம்.

(22) இ. பி. கோடு, 199-வது பிரிவு. சட்டப்படி சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளத்தக்க யாதொரு வாக்குமூலத்தில் பொய்யான சங்கதியைச் சொல்லுவதென்னுங் குற்றம்.

(23) இ. பி. கோடு, 200-வது பிரிவு. பொய்யானதென்று தெரிந்திருக்கிற யாதொரு வாக்குமூலத்தை மெய்யானதென்று உபயோகப்படுத்துங் குற்றம்.

(24) இ. பி. கோடு, 205-வது பிரிவு. யாதொரு ஸிவில் அல்லது கிரிமினல் விவகாரத்தில் யாதொரு காரியம், அல்லது நடவடிக்கையின் பொருட்டு ஆள்மாறாட்டஞ்செய்வதென்னுங் குற்றம்.

(25) இ. பி. கோடு, 206-வது பிரிவு. பறிமுதலாகவாவது தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டாவது கைப்பற்றும விருக்கும்படிச் சொத்தை மோசடியாய் அப்புறப்படுத்துவது அல்லது மறைப்பதென்னுங் குற்றம்.

(26) இ. பி. கோடு, 207-வது பிரிவு. பறிமுதலாகவாவது, தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டாவது சொத்தைக் கைப்பற்றும விருக்கும்படி அதற்கு மோசடியாய் தாவாச்செய்வதென்னுங் குற்றம்.

(27) இ. பி. கோடு 208-வது பிரிவு. ஒருவன் தான் மற்றொருவனுக்கு யாதொரு தொகையுங் கொடுக்கவேண்டிய பாக்கியில்லாம லிருக்கும்போது தன் பேரில் தீர்ப்பாகும்படி மோசடியாய் சும்மாவிருக்குங் குற்றம்.

(28) இ. பி. கோடு, 209-வது பிரிவு. யாதொரு கோர்ட்டில் அயோக்கியமாய் பொய்யான தாவாச் செய்வதென்னுங் குற்றம்.

(29) இ. பி. கோடு, 210 – வது பிரிவு. பாக்கியில்லாத தொகைக்கு மோசடியாய் தீர்ப்புப் பெற்றுக்கொள்ளுவதென்னுங் குற்றம்.

(30) இ. பி. கோடு, 211-வது பிரிவு. கெடுதிசெய்யவேணு மென்கிற எண்ணத்தோடு பொய்யான குற்றஞ்சாட்டிப்பிராதுகொடுப்பதென்னுங் குற்றம்.

(31) இ. பி. கோடு, 228-வது பிரிவு. சர்க்கார் உத்தியோகஸ்தர் நியாய விசாரணைசெய்துக்கொண்டிருக்கையில் அவரை எவனாவது வேணுமென்று அலக்ஷியஞ் செய்வது அல்லது தடங்கல் பண்ணுவதென்னுங் குற்றம்.

**குறிப்பு:**—மேற்கண்ட பிரிவுப்படிக்குள்ள குற்றங்கள் எந்தக் கோர்ட்டில் நடக்கிற நடவடிக்கையில் நேரிடுகிறதோ அப்படிப்பட்ட கோர்ட்டார் பிராது கொடுக்கவேணும். அல்லது அந்தக் கோர்ட்டாருடைய அனுமதி பெற்றுக் கொண்டு பிராது கொடுக்கவேணும்.

(32) இ. பி. கோடு, 463-வது பிரிவு. சிருஷ்டனை செய்வதென்னுங் குற்றம்.

(33) இ. பி. கோடு, 471-வது பிரிவு. சிருஷ்டனை தஸ்தாவேஜை எதார்த்தமானதென்று உபயோகிக்குங்குற்றம்.

(34) இ. பி. கோடு, 475 - வது பிரிவு. பெறுமானபத்திரம், அல்லது மரணசாஸனம் இந்த தஸ்தாவேசுகளை உறுதிப்படுத்துவதற்கு உபயோகமான கள்ளமுத்திரை முதலிய அடையாளத்தைச் செய்வது; கள்ள அடையாளம் போட்டிருக்கிற காகிதம் முதலானதுகளை வைத்திருப்பதென்னுங் குற்றம்.

(35) இ. பி. கோடு, 476-வது பிரிவு. பெறுமானபத்திரம், மரணசாஸனம் இந்த தஸ்தாவேசுகளைத் தவிர மற்ற தஸ்தாவேசுகளை உறுதிப்படுத்துவதற்கு உபயோகமான கள்ளமுத்திரைமுதலிய அடையாளத்தைச் செய்தல், அல்லது கள்ள அடையாளம் போட்டிருக்கிற காகித முதலானதுகளை வைத்துக்கொண்டிருத்தல் என்னுங்குற்றம்.



**குறிப்புகள்**—(1) மேல்கண்ட குற்றச்செய்கைகள் யாதொரு கோர்ட்டில் நடத்தப்படுகிற நடவடிக்கையைச் சேர்ந்த எந்தக் கக்ஷிக்காரனாலாகிலும் அந்த நடவடிக்கையில் சாக்ஷியமாகக்கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜூ சம்மந்தமாய்ச் செய்யப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட கோர்ட்டாராவது அல்லது அவருக்கு மேலதிகாரமுள்ள கோர்ட்டாராவது பிராது செய்யவேணும். அல்லது பிராதுசெய்ய அனுமதி கொடுத்திருக்கவேணும்.

(2) எந்தக்கோர்ட்டு அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர் முன்பாக்கு அல்லது விஷயமாக மேலேகண்ட குற்றங்கள் எதுவும் செய்யப்படுகிறதோ அவர்கள் பிராதுசெய்ய அனுமதி கொடுத்தாலுமே, அனுமதி கொடுக்க மறுதலித்துவிட்டாலுமே, அந்தக்கோர்ட்டார் அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர் எந்தக்கோர்ட்டார் அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தருக்குக்கீழ்ப்பட்டிருக்கிறாரோ அந்தக்கோர்ட்டார் அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர், கொடுத்த அனுமதியை ரத்துச்செய்துவிடலாம். அல்லது அனுமதிகொடுக்க மாட்டேனென்று சொன்ன உத்திரவை ரத்துச்செய்து அனுமதிகொடுத்துவிடலாம்.

(3) பிராது செய்யும்படி பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியானது 6 – மாதத்திற்குமேல் ஊர்ஜிதத்திலிருக்கமாட்டாது. அந்த 6–மாசத்துக்குள் பிராது கொடுத்துநடவடிக்கைகள்நடத்திக்கொள்ளவேணும். தவறினால் மறுபடியும் அனுமதிபெற்றுத்தான் பிராது தாக்கல் செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு 195.)

(4) வாங்கின அனுமதியைவைத்துக் கூடிய சீக்கிரத்தில் பிராதுசெய்யவேணும். அப்படிக்கில்லாவிட்டால் பிராதை உடனே பிராது வாங்கின கோர்ட்டார் தள்ளிவிடலாம். (சர்க்கஷன்) அனுமதி பெற்று 3-மாசத்திற்குப்பிறகு பிராது தாக்கல்செய்வதற்கு தாமதித்ததற்குச் சரியான முகாந்திரம் சொல்லாததால் ஷை பிராதைத் தள்ளும்படி செய்தது சரியென்று சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (மதிராஸ் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு 6 - வது வாலியம் அனுபந்தம் 15-ல், கண்ட 1871-ம் வருஷம் ஜனவரி மீ 9உ போட்ட ஹைக்கோர்ட்டு புரொஸீடிங்கைப் பார்க்க.)

## சர்க்காருக்கு விரோதமாகச் செய்யப்படுகிற அடியிற்கண்ட குற்றங்களைக்குறித்து கவர்ன்மெண்டாரிடமிருந்து உத்தரவு அல்லது அனுமதி பெற்றுத்தான் பிராது நடத்தவேணும்.

582. (1) இ. பி. கோடு, 121-வது பிரிவு. மகாராஜா அவர்கள்பேரில் யுத்தஞ்செய்வது அல்லது யுத்தஞ்செய்ய எத்தனப்படுவது அல்லது யுத்தஞ்செய்வதற்கு உடந்தையாயிருப்பது என்னுங் குற்றம்.

(2) இ. பி. கோடு, 122 – வது பிரிவு. மகாராஜா அவர்கள்பேரில் யுத்தஞ்செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு ஆயுத முதலானவைகளைச் சேர்த்துவைக்குங் குற்றம்.

(25) இ. பி. கோடு, 206-வது பிரிவு. பறிமுதலாகவாவது தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டாவது கைப்பற்றுமலிருக்கும்படிச் சொத்தை மோசடியாய் அப்புறப்படுத்துவது அல்லது மறைப்பதென்னுங் குற்றம்.

(26) இ. பி. கோடு, 207-வது பிரிவு. பறிமுதலாகவாவது, தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டாவது சொத்தைக் கைப்பற்றுமலிருக்கும்படி அதற்கு மோசடியாய் தாவாச்செய்வதென்னுங் குற்றம்.

(27) இ. பி. கோடு 208-வது பிரிவு. ஒருவன் தான் மற்றொருவனுக்கு யாதொரு தொகையுங் கொடுக்கவேண்டிய பாக்கியில்லாமலிருக்கும்போது தன் பேரில் தீர்ப்பாகும்படி மோசடியாய் சும்மாவிருக்குங் குற்றம்.

(28) இ. பி. கோடு, 209-வது பிரிவு. யாதொரு கோர்ட்டில் அயோக்கியமாய் பொய்யான தாவாச் செய்வதென்னுங் குற்றம்.

(29) இ. பி. கோடு, 210 – வது பிரிவு. பாக்கியில்லாத தொகைக்கு மோசடியாய் தீர்ப்புப் பெற்றுக்கொள்ளுவதென்னுங் குற்றம்.

(30) இ. பி. கோடு, 211-வது பிரிவு. கெடுதிசெய்யவேணு மென்கிற எண்ணத்தோடு பொய்யான குற்றஞ்சாட்டிப்பிராதுகொடுப்பதென்னுங் குற்றம்.

(31) இ. பி. கோடு, 228-வது பிரிவு. சர்க்கார் உத்தியோகஸ்தர் நியாய விசாரணைசெய்துக்கொண்டிருக்கையில் அவரை எவனுவது வேணுமென்று அலக்ஷியஞ் செய்வது அல்லது தடங்கல் பண்ணுவதென்னுங் குற்றம்.

குறிப்பு:—மேற்கண்ட பிரிவுப்படிக்குள்ள குற்றங்கள் எந்தக் கோர்ட்டில் நடக்கிற நடவடிக்கையில் நேரிடுகிறதோ அப்படிப்பட்ட கோர்ட்டார் பிராது கொடுக்கவேணும். அல்லது அந்தக் கோர்ட்டாருடைய அனுமதி பெற்றுக் கொண்டு பிராது கொடுக்கவேணும்.

(32) இ. பி. கோடு, 463-வது பிரிவு. சிருஷ்டனை செய்வதென்னுங் குற்றம்.

(33) இ. பி. கோடு, 471-வது பிரிவு. சிருஷ்டனை தஸ்தாவேஜை எதார்த்தமானதென்று உபயோகிக்குங்குற்றம்.

(34) இ. பி. கோடு, 475 - வது பிரிவு. பெறுமானபத்திரம், அல்லது மரணசாஸனம் இந்த தஸ்தாவேசுகளை உறுதிப்படுத்துவதற்கு உபயோகமான கள்ளமுத்திரை முதலிய அடையாளத்தைச் செய்வது; கள்ள அடையாளம் போட்டிருக்கிற காகிதம் முதலானதுகளை வைத்திருப்பதென்னுங் குற்றம்.

(35) இ. பி. கோடு, 476-வது பிரிவு. பெறுமானபத்திரம், மரணசாஸனம் இந்த தஸ்தாவேசுகளைத் தவிர மற்ற தஸ்தாவேசுகளை உறுதிப்படுத்துவதற்கு உபயோகமான கள்ளமுத்திரைமுதலிய அடையாளத்தைச் செய்தல், அல்லது கள்ள அடையாளம் போட்டிருக்கிற காகித முதலானதுகளை வைத்துக்கொண்டிருத்தல் என்னுங்குற்றம்.



குறிப்புகள்—(1) மேல்கண்ட குற்றச்செய்கைகள் யாதொரு கோர்ட்டில் நடத்தப்படுகிற நடவடிக்கையைச் சேர்ந்த எந்தக் கக்ஷிக்காரனுலாகிலும் அந்த நடவடிக்கையில் சாக்ஷியமாகக்கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜு சம்மந்தமாய்ச் செய்யப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட கோர்ட்டாராவது அல்லது அவருக்கு மேலதிகாரமுள்ள கோர்ட்டாராவது பிராது செய்யவேணும். அல்லது பிராதுசெய்ய அனுமதி கொடுத்திருக்கவேணும்.

(2) எந்தக்கோர்ட்டு அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர் முன்பாக்கு அல்லது விஷயமாக மேலேகண்ட குற்றங்கள் எதுவும் செய்யப்படுகிறதோ அவர்கள் பிராதுசெய்ய அனுமதி கொடுத்தாலுமே, அனுமதி கொடுக்க மறுதலித்துவிட்டாலுமே, அந்தக்கோர்ட்டார் அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர் எந்தக்கோர்ட்டார் அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தருக்குக்கீழ்ப்பட்டிருக்கிறரோ அந்தக்கோர்ட்டார் அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர், கொடுத்த அனுமதியை ரத்துச்செய்துவிடலாம்; அல்லது அனுமதிகொடுக்க மாட்டேனென்று சொன்ன உத்திரவை ரத்துச்செய்து அனுமதிகொடுத்துவிடலாம்.

(3) பிராது செய்யும்படி பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியானது 6 – மாதத்திற்குமேல் ஊர்ஜிதத்திலிருக்கமாட்டாது. அந்த 6–மாசத்துக்குள் பிராது கொடுத்துநடவடிக்கைகள்நடத்திக்கொள்ளவேணும் தவறினல் மறுபடியும் அனுமதிபெற்றுத்தான் பிராது தாக்கல் செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு 195.)

(4) வாங்கின அனுமதியைவைத்துக் கூடிய சீக்கிரத்தில் பிராதுசெய்யவேணும். அப்படிக்கில்லாவிட்டால் பிராதை உடனே பிராது வாங்கின கோர்ட்டார் தள்ளிவிடலாம். (சர்க்கிஷன்) அனுமதி பெற்று 3-மாதத்திற்குப்பிறகு பிராது தாக்கல்செய்வதற்கு தாமதத்திற்குச் சரியான முகாந்திரம் சொல்லாததால் ஷை பிராதைத் தள்ளுபடி செய்ததுசரியென்று சென்னைபட்டணம் ஹைக்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (மதிராஸ் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு 6 - வது வாலியம் அனுபந்தம் 15-ல், கண்ட 1871-ம் வருஷம் ஜனவரிமீ 9உ போட்ட ஹைகோர்ட்டு புரொஸீடிங்கை பார்க்க.)

## ஸர்க்காருக்கு விரோதமாகச் செய்யப்படுகிற அடியிற் கண்ட குற்றங்களைக்குறித்து கவர்ன்மெண்டாரிடமிருந்து உத்தரவு அல்லது அனுமதி பெற்றுத்தான் பிராது நடத்தவேணும்.

582. (1) இ. பி. கோடு, 121-வது பிரிவு. மகாராஜா அவர்கள்பேரில் யுத்தஞ்செய்வது அல்லது யுத்தஞ்செய்ய எத்தனப்படுவது அல்லது யுத்தஞ்செய்வதற்கு உடந்தையாயிருப்பது என்னுங் குற்றம்.

(2) இ. பி. கோடு, 122 - வது பிரிவு. மகாராஜா அவர்கள்பேரில் யுத்தஞ்செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு ஆயுத முதலானவைகளைச் சேர்த்துவைக்குங் குற்றம்.

(3) இ. பி. கோடு, 123 - வது பிரிவு. மகாராஜா அவர்கள்பேரில் யுத்தஞ்செய்வதற்கு சுலபமுண்டாக்கவேணுமென்கிற எண்ணத்தோடு யுத்தப் பிரயத்தினத்தை மறைத்துவைப்பதென்னுங் குற்றம்.

(4) இ. பி. கோடு, 124 - வது பிரிவு. யாதொரு நியாயமான அதிகாரத்தைச் செலுத்தும்படியாவது செலுத்தாமலிருக்கும்படியாவது செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு கவர்னர்ஜனரல் கவர்னர் முதலானவர்களைத் தாக்கவருவதென்னுங் குற்றம்.

(5) இ. பி. கோடு, 125-வது பிரிவு. மகாராஜா அவர்களோடு தனது செய்துகொண்டு ஏஷியாகண்டத்திற்குள் ளிருக்கிற எந்த ஸமஸ்தானத்தின்பேரிலாவது யுத்தஞ்செய்வதென்னுங்குற்றம்.

(6) இ. பி. கோடு, 126 - வது பிரிவு. மகாராஜா அவர்களோடு சமாதானமாயிருக்கிற எந்த ஸமஸ்தானத்தினுடைய ராச்சியத்திலாவது கொள்ளையடிப்பதென்னுங் குற்றம்.

(7) இ. பி. கோடு, 128-வது பிரிவு. ஸர்க்கார்பேரில் கலகஞ்செய்வதினால் பிடிக்கப்பட்ட கைதியையாவது யுத்தத்திலகப்பட்ட கைதியையாவது தப்பித்துக்கொண்டு போய்விடும்படி சர்க்கார் உத்தியோகஸ்தன் தன்னுடைய காவலிலிருந்து மனதார விட்டுவிடுவதென்னுங் குற்றம்.

(8) இ. பி. கோடு, 129 - வது பிரிவு. ஸர்க்கார்பேரில் கலகஞ்செய்வதினால் பிடிக்கப்பட்ட கைதியையாவது யுத்தத்திலகப்பட்ட கைதியையாவது தப்பித்துக்கொண்டு போய்விடும்படி சர்க்கார் உத்தியோகஸ்தன் தன்னுடைய காவலிலிருந்து அஜாக்கிரதையினாலே விட்டுவிடுவதென்னுங் குற்றம்.

(9) இ. பி. கோடு, 130 - வது பிரிவு. ஸர்க்கார்பேரில் கலகஞ்செய்வதினால் பிடிக்கப்பட்ட கைதி தப்பித்துக்கொண்டு போய்விடுவதற்கு உடந்தையாயிருப்பது, அல்லது விடுவிப்பது அல்லது அவனுக்கு இருக்க இடங்கொடுப்பதென்னுங் குற்றம்.

(10) இ. பி. கோடு, 299 A-பிரிவு லாட்டரி ஆபீசு வைத்து நடவடிக்கை நடத்துங் குற்றம். (கி. பு. கோடு, பிரிவு 196.)

(11) ஸ்டாம்பு சட்டப்படிக்குள்ள குற்றங்கள் விஷயமான பிராதுகள்.

(12) இந்தியா கவர்ன்மெண்டாருடைய அனுமதியாவது, பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியாவது இல்லாமல் உத்தியோகத்திலிருந்து நீக்கப்படக்கூடாத யாதொரு ஜட்ஜி அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர்பேரில், அப்படிப்பட்ட ஜட்ஜி, சர்க்கார் உத்தியோகஸ்தர் என்கிற ஹோதாவிலே யாதொரு குற்றஞ்சாட்டப்பட்டால் அதற்காகப் பிராது கொடுக்க அனுமதி வேணும்.

(13) இ. பி. கோடு, பிரிவு 108-A. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியே செய்யப்படுகிற குற்றச் செய்கைகளுக்கு பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் உடந்தை செய்யுங் குற்றம்.



(14) 153-A. மகாராஜா அவர்களுடைய குடிகளில் ஒருவகுப்பார் மற்றொரு வகுப்பாருடன் துவேஷமாகயிருக்கும்படி விரோதத்தை உண்டாக்குங் குற்றம்.

(15) இ. பி. கோடு, 505.- வது பிரிவு. ஜனங்களுடைய சமாதானத்தைக் கெடுத்து, பொதுவாகக் கெடுதலை உண்டாக்கக்கூடிய பிரஸ்தாபத்தைப் பரவச்செய்வது.

# அத்தியாயம் 12.

## ஒரு குற்றச்செய்கை செய்யப்பட்டவுடன் வாதி அல்லது அவன் வகையில் நடத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

583. ஒரு குற்றச்செய்கை நடந்தவுடன் அந்தக் கிராமத்தின் கிராம முனிசிபு மாஜிஸ்திரேட்டண்டை தெரிவிக்கவேண்டியது. எழுதப்படிக்கத் தெரிந்த வாதியாகயிருந்தால் அவர் கைப்பட, செய்யப்பட்ட குற்றச்சங்கதியை எழுதியும், வாதிக்கு எழுதப்படிக்கத் தெரியாவிட்டால், அந்த வாதிக்கு நம்பிக்கையுள்ள ஒரு பந்து அல்லது சினேகிதனைக்கொண்டு பிராதின் சங்கதியை எழுதும்படிசெய்தும் அதைப்படிக்கச் [illegible] த்தும் அதற்கு [illegible] சரியான நகல் எடுத்து வைத்துக்கொ[illegible] அந்[illegible] த கிராம மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்துவிடவேண்டும். எழுத்துமூ[illegible]மாய் கி. மு. விடமும், போலீசாரிடமுங் கொடுக்கும் பிராதுகளின் கடாசியி[illegible] இன்னதெய்தி கிழமை இத்தனை நாழிகைக்கு அந்த பிராது தாக்கல்செய்யப்பட்டதென்பதை எழுத்திலேயே எழுதிவிடவேண்டும். இந்த முதல் பிரா[illegible]லேயே சாக்ஷிகளின் பேர்களையும் எழுதிவிடவேண்டும்.

584. அல்பக் குற்றமாயிருந்தால் அ[illegible]வது, சில்லரை வாய்ச்சச்சரவு, தாக்குதல் முதலிய குற்றங்கள், ஒரு ரூபா[illegible]க்குள்பட்ட திருட்டுக்குற்றம் இவைகளை கிராம மாஜிஸ்திரேட்டிடம் அவர் கோர்ட்டிலேயே நேரில் விசாரித்து பைசல் செய்யலாம்.

585. கிராம முன்சீப் மாஜிஸ்திரேட்டும், போலீசாரும் இவ்வளவு வி[illegible]த்தோடு எழுத்துமூலமாகப் பிராதுகளை வாங்கிக்கொண்டால் பிராது கொடுக்கும் கக்ஷிக்காரர்களுக்கும், பிராது எழுதிவாங்கிக்கொள்ளும் அதிகாரிகளுக்கும் நலம். எப்படியென்றால், சிலகேசுகளில் கக்ஷிக்காரர்கள் முதல் பிராது ஒருவகை எழுதிவைத்துவிட்டு பின்னிட்டு மாஜிஸ்திரேட்டிடம் வேறு வகையாகப் பிராது அல்லது வாக்குமூலம் கொடுத்து கி. மு. மாஜிஸ்திரேட்டிடமும் அதேவிதமாக எழுதிவைத்ததாகவும், வேறு வகையாக எழுதிவைக்கவில்லையென்றும் தாங்கள் சொன்னதைக்கேட்டு ஏதோ யெழுதிக்கொண்டு தங்களுக்குப் படித்துக்காட்டாமலேயே கையெழுத்து வாங்கிக்கொண்டதாகவும் சொல்லுகிறார்கள். கி. மு. மாஜிஸ்திரேட்டும், போலீசாரும்

சாக்ஷிக்காரர்கள் சொல்வதைக்கேட்டு தாங்களே எழுதிக்கொண்டு அவர்களிடம், கையெழுத்து வாங்குவதினால் சாக்ஷிக்காரர்கள் சொல்லுகிறபடியிருந்தாலுமிருக்குமென்று போலீசார்பேரிலும் கி. மு. பேரிலும் சந்தேகத்துக் கிடமுண்டாகிறது. சாக்ஷிக்காரர்களிடம் மேற்கண்டபடி எழுதி வாங்கிக்கொண்டால் இந்தச் சந்தேகத்துக் கிடமிருக்கமாட்டாது. இதே மாதிரியாகவே நேரம்போட்டு எழுதிவாங்குவதும் மிகவும் பிரயோசனமாகயிருக்கும்.

586. செய்யப்பட்ட குற்றமானது போலீசார் வாரண்டில்லாமலேயே பிடிக்கக்கூடிய குற்றமாயும், ஜாமீன்பேரில் விடக்கூடாத குற்றமாகவுமிருக்கும் பக்ஷத்தில், குற்றம் செய்யப்படும்போது பட்ட வாதியாவது அவரைச்சேர்ந்த யாருமாவது அல்லது வேறு எவருமாவது குற்றஞ்செய்த எதிரியை உடனே பிடித்துக்கொள்ளலாம். பிடித்துத்தாமதமன்னியில் எதிரியைப் போலீசாரிடம் ஒப்புவிக்கவேண்டும். போலீஸ் உத்தியோகஸ்தர் சமீபத்திலில்லாவிட்டால், எதிரியைச்சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் ஒப்புவிக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-59.)

587. இப்படிப் பிடிக்கப்பட்ட கேசுகளில் எதிரியைப்பிடித்த விபரத்துக்கு அத்தாட்சி பிறப்பிவித்து கிராமமுனிசிபு, கர்ணம், தலையாரி முதலிய சர்க்கார் சிப்பந்திகள் இவர்கள் அப்போது அகப்படுகிறவர்கள் யாரிடமாவது அல்லது அவர்களில் யாரும் அகப்படாவிட்டால் கிராமப் பெரிய குடித்தனக்காரர் முதலியவர்கள் குற்றஞ்செய்தவனைப்பிடிக்கும்போது இருந்தவர்களிடம் கையெழுத்து வாங்கி வைத்துக்கொள்ளுவது நலம்.

588. போலீசார் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடிய குற்றத்தைப்பற்றி கி. மு. மாஜிஸ்திரேட்டிடம் ரிப்போர்ட்டு செய்யப்பட்டிருந்தால் கிராம மாஜிஸ்திரேட்டே போலீசாருக்கு இந்தக் குற்றச்செய்கையைப்பற்றித் தெரிவிக்கவேணும். மாஜிஸ்திரேட்டுக்கும் ரிப்போர்ட்டுச் செய்ய வேண்டும். அப்பால் கிராம மாஜிஸ்திரேட்டினிடமிருந்து இந்தக் குற்றச் செய்கை விஷயமாய் வந்த யாதாஸ்தை வைத்து அதில் கண்ட சங்கதிகளின் சுருக்கத்தைக்கொண்டு அந்தக் குற்றம் நடந்த கிராமம் எந்த மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுச் சரகமோ அந்த மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டாருக்கு ஒரு மெமோ மூலமாகத் தெரிவிப்பார். அந்த மெமோவுடன் கிராம மாஜிஸ்திரேட்டிடமிருந்து வந்த யாதாஸ்தையும் கூடவே அனுப்புவார். உடனே போலீசார் குற்றம் நடந்த கிராமத்துக்குப்போய் வாதியை விசாரிப்பார்.

589. இப்படி கிராம மாஜிஸ்திரேட்டு போலீசாருக்கு குற்றச்சங்கதியைப்பற்றித் தெரிவிப்பாரென்று எதிர்பார்த்துக்கொண்டு வாதி போய்விடாமல், தானே நேரில் போலீசாரிடம் ஆஜராய் கிராம மாஜிஸ்திரேட்டிடம் எழுதிவைத்திருக்கிற பிராதுக்கு ஒரு நகல் எழுதிக்கொடுத்துவிடுவது நலம். ஏனென்றால், கிராம மாஜிஸ்திரேட்டு குற்றஞ்செய்த எதிரிக்கு அனுசரணையாக யிருந்துகொண்டு ரிப்போர்ட்டுச் செய்யாமலிருந்துவிடக் கூடும். போலீசாருக்கு இந்தக் கேசைப்பற்றி கட்டாயமாய் ரிப்போர்ட்டுச் செய்யவேண்டுமென்று ஒருக்கால் தெரிந்திராமலிருந்திருக்கலாம். அதனால் போலீசாருக்கு கிராம மாஜிஸ்திரேட்டு தெரிவிக்காமலிருந்துவிடக்கூடும். அல்லது ஞாபகமறதியினால் போலீசாருக்கு உடனே தெரிவிக்கத் தவறிவிடக்கூடும். இப்பேர்ப்பட்ட தவறுதலினால் சரியான காலத்தில் ரிப்போர்ட்டுச்செய்யாமல் தாமதித்து ரிப்போர்ட்டுச் செய்யக்கூடும். அல்லது குற்றச்செய்கை தன்னிடம் தெரிவிக்கப்பட்டவுடனே ரிப்போர்ட்டுச் செய்யத் தவறிவிட்டோமே



இனிமேல் தாமதித்து ரிப்போர்ட்டுச்செய்தால் என்ன கேள்விகளுக்கிடமாகுமோ என்று பயந்து ரிப்போர்ட்டுச் செய்யாமலேயே யிருந்துவிடக்கூடும். ஆகையால் இந்த சங்கதிகளை உத்தேசித்து கிராமமுனிசிபு மாஜிஸ்திரேட்டிடம் எழுத்துமூலமாய் தெரிவித்த உடனேயே போலீசு ஸ்டேஷனிலும் எழுத்துமூலமாகத் தெரிவித்துவிட்டால் குற்றஞ்செய்தவனை பிடித்து சிக்ஷிக்க வேண்டியதற்குள்ள நடவடிக்கை சுருசுறுப்பாக நடக்கும்.

590. வாதி போலீசாரிடம் அறிவித்த உடன் மாஜிஸ்திரேட்டிடமும் போலீசாரிடம் கொடுத்த பிராது சங்கதிகளைக்கண்டு ஒரு பிராது கொடுத்துவிடுவது நலம். ஏனென்றால், சில கேசுகளில் குற்றஞ்செய்தவர்கள், குற்றத்தைச் செய்துவிட்டு உடனேயே கிராம மாஜிஸ்திரேட்டிடத்துக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் போய் அங்கே அவர்களுக்கு கைவசப்படக்கூடிய ஆபீசர்களிருக்கும்படி நேரிட்டால், அவர்களைக் கைவசப்படுத்திக்கொண்டு விடுகிறார்கள். அப்படி நேரிடும்போது கிராம மாஜிஸ்திரேட்டும் போலீசாரும் சேர்ந்துகொண்டு கேசைக் கெடுத்துவிடுகிறார்கள்.

591. போலீசார் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகளில் கிராம முனிசிபு குற்றச்செய்கையைப்பற்றி போலீசாருக்குத் தெரிவித்தவுடன், அல்லது வாதியினால் சமாசாரம் தெரிந்துகொண்டவுடன் குற்றம் நடந்த கிராமத்துக்கு போலீசார் வருவார்கள். அவர்களிடம் வாதி குற்றம் நடந்த இடத்தையும், குற்றச்செய்கையின் சம்மந்தமான சாமான்கள் அல்லது இடங்கள் எதையாவது போலீசாரிடம் காண்பிக்கவேண்டியதிருந்தால் அவைகளையும் காண்பிக்கவேண்டும். உடனே வாதியே நேரில் போய் குற்றச்செய்கையைப்பற்றித் தெரிவிக்காமல், கிராம மாஜிஸ்திரேட்டினுடைய யாதாஸ்தின் பேரில் போலீசார் வந்திருந்தால் கிராமமுனிசிபுவினிடம் எழுதிக்கொடுத்த பிராதுக்கு ஒரு நகலை எழுதி போலீசாரிடம் கொடுத்துவிடவேண்டும். அதில் எழுதியிருக்கிற சங்கதிகளுக்குமேல் குற்றச்செய்கை விஷயமாய் ஜாஸ்தியான விபரம் ஏதாவது மேற்படி பிராதில் எழுதிக்கொடுக்கும்படி போலீசார் அபேக்ஷித்தால், உண்மையான சங்கதியை தன் கைப்பட அதில் எழுதிக்கொடுக்கவேண்டும். அப்பால் இந்த குற்றச்செய்கை நடக்கும்போது கூடயிருந்து பார்த்த சாக்ஷிகள் பிராதில் கண்டவர்களை உடனே போலீசாரிடம் ஆஜர்ப்படுத்தி அவர்களைக்கொண்டு விசாரிக்கும்படி செய்து, சாக்ஷிகள் சொல்லும் சங்கதிகளை அவர்கள் எழுத்து மூலமாக ரிக்கார்டுசெய்துகொண்டால் அதை சரியானபடி படிக்கச்சொல்லி கவனமாய்க்கேட்டு தான் சொன்னபடி சரியாக எழுதியிருந்தால் அதில் சாக்ஷிகள் கையெழுத்துப்போட்டுவிடுவது கக்ஷிக்காரர்களுக்கும் போலீசாருக்கும் நன்மை.

592. வாதியால் குறிப்பிடப்பட்ட சாக்ஷிகள் எல்லாரையும் விசாரித்தபிறகு வாதியின் பிராது உண்மையாகக் காணப்பட்டால் போலீசார், எதிரி அல்லது எதிரிகளை, ருசுவான குற்றம் போலீசார் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடிய குற்றமாக ஏற்பட்டால் மாஜிஸ்திரேட்டுமுன் சார்ஜ் செய்வார்கள். போலீசார் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடாத குற்றம் எதிரி அல்லது எதிரிகள் செய்ததாக ருஜுவானால் போலீசார் எதிரியைச் சார்ஜ் செய்யமாட்டார்கள். அப்பேர்ப்பட்ட குற்றத்திற்கு வாதியை மாஜிஸ்திரேட்டிடம் நேரில் பிராது செய்துகொள்ளும்படி சொல்லிவிடுவார்கள். மேலே சொன்னபடி முன்னமேயே வாதி மாஜிஸ்திரேட்டார் அவர்களிடம் பிராது செய்திராவிட்டால் போலீசார் மாஜிஸ்திரேட்டிடம் போய் பிராதுசெய்துகொள்ளும்படி சொன்ன

வுடன் தாமதமின்றி கூடியசீக்கிரத்தில் போய் மாஜிஸ்திரேட்டார் அவர்களிடம் பிராது செய்துகொள்ளவேண்டும்.

593. வாதன்னல்லாமல் பிடிக்கக்கூடிய கேஸ்களில் வாதியின் பிராது ருஜுவாகவில்லையென்று போலீசார் சரியான எண்ணத்தின்பேரில் அபிப்பிராயப்பட்டாலுமே, அல்லது எதிரிக்கு அனுகூலமாக யிருப்பதினால் வாதியின் கேஸ் ருஜுவாகவில்லையென்று அபிப்பிராயப்பட்டாலுமே, வாதியின் கேஸ் ருஜுவாகவில்லையென்றாவது பொய்யென்றாவது மாஜிஸ்திரேட்டுக்கு ரிப்பர் சார்ஜ்ஷீட்டு அனுப்பிவிடுவார்கள்.

594. சில கேசுகளில் போலீஸ்காரர் வாதியின் கேசு ருஜுவாகவில்லையென்றாவது சிவில் சம்மந்தமான வழக்கென்றாவது மாத்திரம் ரிப்பர்செய்யாமல் வாதியின் பிராது பொய்யென்றும், இ. பி. கோடு, 211-வது பிரிவுப்படி பொய்ப்பிராது கொடுத்ததற்காகவும், சர்க்கார் உத்தியோகஸ்தனிடம் வேறொருவனைக் கெடுக்கும்பொருட்டு யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனை அவனுக்குள்ள அதிகாரத்தைச் செலுத்தும்படி செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு பொய்யான சங்கதியை தெரிவித்ததற்காகவும் இ. பி. கோடு, 182-வது பிரிவுப்படிக்கும் நடவடிக்கை வாதிபேரில் நடத்த அனுமதி கொடுக்கும்படிக்கும் சாங்ஷனும் கேட்டு ரிப்பர் சார்ஜ்ஷீட்டிலேயே போலீஸ்காரர் கேழ்க்கவுஞ் செய்கிறார்கள். மேலே சொன்னபடி சாக்ஷிகள் சரியானபடி போலீஸ்காரரிடம் வாக்குமூலங்கொடுத்து அந்த வாக்குமூலத்தைச் சரியானபடி, வாசித்து அல்லது கவனமாய்ப்பரிசிக்கக்கேட்டு அதில் வாக்குமூலங் கொடுத்த சாக்ஷிகள் கையெழுத்துப்போட்டு விட்டால் இப்படி சாங்ஷன் கேழ்க்க இடமிராது.

595. அப்படி ரிப்பர் செய்யப்பட்டால் உடனே வாதி மாஜிஸ்திரேட்டாரவர்களிடம் ஆஜராகி தன்கேசு உண்மையென்றும் தான் சாக்ஷிகள் மூலமாக ருஜுப்படுத்தத் தயாராயிருப்பதாயும் மனுமூலமாய் தெரிவிக்கலாம். உடனே மாஜிஸ்திரேட்டாரவர்கள் கேஸை பயிலில் தாக்கல்செய்துகொண்டு கிரமப்படி விசாரித்து முடிவுசெய்வார்கள்.

---

# அத்தியாயம் 13.

---

## மாஜிஸ்திரேட்டாரவர்களிடம் பிராதுபோன பிறகு நடக்கும் நடவடிக்கைகளும் வாதி செய்யவேண்டிய சங்கதிகளும்.

596. மாஜிஸ்திரேட்டாரவர்களிடம் நேரில் எழுத்துமூலமாக பிராது கொடுக்கப்பட்டால், பிராது கொடுத்த வாதியை பிரமாணஞ் செய்வித்து உடனே பிராதில்கண்ட சங்கதிகளைக்குறித்து வாக்குமூலம் வாங்கப்படும். அதை வாதிக்கு வாசித்துக்காட்டி வாதியின் கையெழுத்து வாங்கப்படும். (கி. பு. கோடு, பிரிவு-200.)

597. பிராது என்பது எழுத்துமூலமாகத்தா னிருக்கவேண்டுமென்பதில்லை. வாய்மொழியாகவும் தெரிவிக்கப்படுகிற சங்கதிகளை, மாஜிஸ்திரேட்டு



அவர்களுக்கு அப்படிச்செய்வது யுக்தமென்று தோன்றினால், எழுதிக்கொண்டு எழுத்துமூலமாகக் கொடுக்கப்படும் பிராதுகளில் நடவடிக்கை நடத்துவதுபோலவேயே மேல் நடத்தலாம். இது மிகவும் அபூர்வமான கேசுகளில் தான் யேர்ப்படும். அதாவது ஒரு மாஜிஸ்திரேட்டு ஸர்க்யூட்டுப் போயிருக்குமிடத்தில் ஒரு குற்றச்செய்கையைக் குறித்து வாய்மொழியாய்த் தெரிவிக்கப்பட்டு, வாதியும் மிக ஏழையாகயிருந்து பிராது எழுதி வாங்கப்போதுமான சாவகாசமும், மைக்கட்டு, பேனா, காயிதம், எழுதிக்கொடுக்க மனுஷியாள் முதலிய ஸாதகங்களும் இல்லாமல் யேர்ப்படுகிற விசேஷ கேசுகளில் வாய்மொழியாய் தெரிவிக்கப்பட்ட கேசுகளில் மேல் நடவடிக்கை நடத்தப்படும்,

598. ஒரு முதலாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டாரவர்களிடம் கொடுக்கவேண்டிய பிராதை 2-வது 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்தாலுமே, 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் கொடுக்கவேண்டிய பிராதை 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்தாலுமே, அதை விசாரிக்க அதிகாரமுள்ள 1-வது அல்லது 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் கொடுக்கும்படி ஷை பிராதில் இண்டார்சு செய்து திரும்பக்கொடுத்து விடப்படும்.

599. இதேவிதமாக குற்றம் நடந்த இடம் எந்த மாஜிஸ்திரேட்டினுடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கிறதோ அந்த மாஜிஸ்திரேட்டிடம் கொடுக்கவேண்டிய ஒரு பிராதை வேறு மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்தாலும் மேலேகண்ட இண்டார்சு ஷை பிராதில் யெழுதி ஷை பிராதை பிராதுகொடுத்த வாதியிடம் திரும்பக்கொடுத்து விடப்படும்.

குறிப்பு:—இந்தப்பிரிவானது அடியில் கண்டபடி ஒரு வகையில் மிகவும் உபயோகமுள்ளதாக யிருக்கிறது. அதாவது ஒரு 3 அல்லது 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய அதிகார எல்லைக்குள் முதலாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய பரிசீலனைக்குள்பட்ட குற்றச்செய்கை நடக்கிறது. அப்போது பிராது கொடுக்கப்படவேண்டிய 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டார் குற்றம் நடந்த கிராமத்திலிருந்து சிலநாள் பிரயாணத்துக்குள்பட்ட தூரமுள்ள ஒரு ஊரில் சர்க்கியூட்டிலிருக்கிறார். குற்றச்செய்கையைப்பற்றி உடனே ஷை 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் தாமதயின்றியில் பிராது கொடுத்தால் நலம். அவ்வளவு தூரம் உடனே போய் பிராது கொடுக்கக் கக்ஷிக்காரனுக்கு அசௌகரியமாக யிருந்தாலாவது, அல்லது அசக்தனாகயிருந்தாலாவது, அந்தப்பிராதை சமீபத்திலுள்ள 2, 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்தால், 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்துக்கொள்ளும்படிக்கு அந்தப்பிராதில் இண்டார்சுமெண்டு எழுதிக்கொடுத்துவிடுவார்கள். அதை வாங்கி வைத்துக்கொண்டால் குற்றச்செய்கை நடந்த உடன் பிராது தாக்கல் செய்ததற்கு ஆதாரமாய்விடுகிறது. அதை வைத்துக்கொண்டு 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு தன் சாசுவதமான கோர்ட்டு யிருக்குமிடத்துக்குத் திரும்பிவந்த உடனாவது, அல்லது குற்றஞ் செய்யப்பட்ட கிராமத்துக்குச் சமீபத்திலுள்ள இடத்துக்கு சவாரிவந்தபோதாவது கூடிய சீக்கிரத்தில் மேற்கண்ட அதே பிராதையே தாக்கல் செய்துவிடலாம். இவ்விதமாக இந்தப் பிரிவு ஒருவாறாக உபயோகமாக ஏற்படுகிறது.

600. பிராது கொடுத்து அதன்பேரில் பிரமாண வாக்குமூலம் வாங்கப்பட்ட உடன், பிராது சங்கதியைக்குறித்து மாஜிஸ்திரேட்டு அவநம்பிக்கைப்பட்டால், பிராதில் கண்ட எதிரிக்கு சம்மன் முதலியதுகள்

# அத்தியாயம் 14.

## கேசுகளில் எதிரிகள் சாக்ஷிகள் முதலியவர்களுக்கு ஸம்மன் வாறண்டு முதலியவைகள் பிறப்பி விக்கவேண்டியவைகளின் நிபந்தனைகளும் மற்ற விஷயங்களும்.

609. ஒரு மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டு முன் ஒருவன் ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஆஜராவதற்காக ஸம்மன் பிறப்பிவிக்க அதிகாரமுள்ள ஒரு கோர்ட்டார், அடியிற்கண்ட முகாந்திரங்களின்பேரில் அவனைப்பிடிக்க பிடிவாறண்டை ஸம்மன் பிறப்பிவித்த பிறகாவது, ஸம்மன் பிறப்பிவிக்கு முன்னமேயாவது பிறப்பிவித்துவிடலாம்.

(1) ஸம்மன் பிறப்பிவிக்கு முன்னாடியாவது அல்லது ஸம்மன் பிறப்பிவித்தபிறகு, ஆனால் அவன் கோர்ட்டில் ஆஜராவதற்குக் குறிப்பிட்டிருக்கும் வாயிதாவுக்கு முன்னாடி, அவன் ஒளிந்துகொண் டிருக்கிறானாவது, அல்லது ஸம்மனுக்குக் கீழ்ப்படியமாட்டானென்றாவது, கோர்ட்டாருக்கு நம்ப இடமிருந்தால், அவனுக்குப் பிடிவாறண்டைப் பிறப்பிவித்துவிடலாம்.

(2) கோர்ட்டில் ஆஜராகவேண்டியதற்காக ஸம்மன் பிறப்பிவிக்கப்பட்ட நபர், ஸம்மனைப் பெற்றுக்கொண்டதாக ருஜுவாய், அந்த ஸம்மன்படிக் கோர்ட்டிலாஜராவதற்குப் போதுமான காலமிருந்ததாக ஏற்பட்டாலும், அப்படி ஆஜராகாமலிருந்ததற்குப் போதுமான காரணமிருக்கிறதாக காணப்படாவிட்டால், அந்த நபருக்குப் பிடிவாறண்டு பிறப்பிவித்துவிடலாம். (கி. பு. கோடு, பிரிவு-90.)

610. கிரிமினல் கோர்ட்டாரால் தன் கோர்ட்டில் ஒரு குறிப்பிட்ட வாயிதாவிலாவது, வேண்டும்போதாவது ஆஜராயிருக்கும்படி முச்சலிக்கா வாங்கப்பட்ட ஒருவன் அந்த முச்சலிக்காவின் நிபந்தனையின்படி ஆஜராகத்தவறினால் அவனுக்கும் பிடிவாறண்டு பிறப்பிவிக்கப்படும். (கி. பு. கோடு, பிரிவு-92.)

## ஸம்மன்கள், வாறண்டுகள், சாக்ஷியாயிருப்பவர்களுடைய கடமைகள் இவைகளைப்பற்றி ஜனங்கள் தெரிந்துக்கொள்ளவேண்டிய ஸங்கதிகள்.

### ஸம்மன்கள் விஷயம். ஸம்மன் செலுத்த வேண்டியதுயார்?

610. (a) மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுகளிலிருந்து பிறப்பிக்கப்படும் ஸம்மன்கள் போலீஸாரால் நிறைவேற்றப்படும். அல்லது ஸம்மன் அனுப்புகிற கோர்ட்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் யார் மூலமாகவாவது அல்லது



வேறு ஸர்க்கார் உத்தியோகஸ்தர் யார் மூலமாகவாவது நிறைவேற்றப்படலாம். (கி. பு. கோடு, பிரிவு 68 (2).)

### ஸம்மன்கள் நிறைவேற்ற வேண்டிய விதம்.

611. ஸம்மன் பிரதியிலொன்றை, யார் பேருக்கு ஸம்மன் பிறப்பிக்கப் பட்டிருக்கிறதோ அவனுக்குக் கொடுத்தாவது, வாங்கிக்கொள்ளச் சொல்லிக் காட்டியாவதுசெய்து ஸம்மனை கூடுமானால் அவனுக்குநேரில் செலுத்தவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-69 (1).)

ஸம்மனில் கண்ட நபரை டை ஸம்மன் பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாக கையெழுத்துப் போடச்சொல்லி ஸம்மன் கொண்டுவந்த உத்தியோகஸ்தர் கேட்டால்-ஸம்மன் நகலில் பின்பக்கத்தில், டை ஸம்மன்பெற்றுக்கொண்ட நபர், கையெழுத்துப் போட்டுக் கொடுக்கவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு 69 (2).)

612. **ஸம்மனில்கண்ட நபரைக் கண்டுபிடிக்காவிட்டால் செய்யவேண்டிய நடவடிக்கை.** ஸம்மனில்கண்டநபரை ஜாக்கிரதையாகத்தேடியும் அகப்படாவிட்டால், அவனுடைய குடும்பத்தைச்சேர்ந்த வயதுவந்த ஒரு ஆண்பிள்ளையிடத்திலாவது, அல்லது ஒரு ராஜதானி பட்டணத்தில் அவனுடையவேலைக்காரன் அவனோடு வாஸஞ் செய்துகொண்டிருப்பவனிடமாவது, அவனுக்காக ஸம்மன் பிரதிகளிலொன்றை ஒப்புவித்து அந்தஸம்மனை சேர்ப்பிக்கலாம். அவன் ஸம்மன் பெற்றுக்கொண்டதற்கு கையெழுத்து மேலே 69-(2)-ல் சொல்லப்பட்ட பிரகாரம் போடவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-70.)

### மேற்கண்டபடி ஸம்மனை நிறைவேற்ற முடியாவிட்டால் செய்யவேண்டிய நடவடிக்கை.

613. ஸம்மனில்கண்ட நபர் வழக்கமாய் குடியிருக்கிற வீட்டில், நன்றாய்த் தெரியும்படியான இடத்தில் ஸம்மன் பிரதிகளிலொன்றை ஒட்டிவிடவேண்டியது. அப்படிச்செய்து விட்டால் ஸம்மனை கிரமமாய் நிறைவேற்றினதாக எண்ணப்படும். (கி. பு. கோடு, பிரிவு-71.)

614. **ஸர்க்கார் உத்தியோகஸ்தனாகவாவது, அல்லது ரெயில்வே உத்தியோகஸ்தனாகவாவது நிருக்கப்பட்டவருக்கு ஸம்மனைச்சேர்ப்பிக்கும் விதம்.** ஸம்மனில்கண்ட நபரிருக்கப்பட்ட ஆபீஸின் தலைமை உத்தியோகஸ்தர் பேருக்கு அனுப்பவேணும். அவர் ஸம்மனை உடையவருக்குச் செலுத்தி ஸம்மன் நகலில் கையெழுத்து வாங்கி ஸம்மன் பிறப்பிவித்த கோர்ட்டாருக்கு அனுப்பிவிடுவார். அப்படி வாங்கி அனுப்பப்படும் கையெழுத்தானது ஸம்மன் செலுத்தப்பட்டதற்கு ஸாட்சியமாகும். (கி. பு. கோடு, பிரிவு-72.)

615. ஸம்மன் செலுத்தியதற்கு ஆதாரமாக ஸம்மன் செலுத்தப்படப்பட்ட நபர் வஸிக்கும் கிராமத்தின் கர்ணன் கிராம முனிஸீப் இவர்களிடம் அத்தாக்ஷிவாங்கிஅனுப்பவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-74.)

குறிப்பு.—வாறண்டு ஸம்மந்தமான விஷயங்கள், போலீஸாருக்குள்ள அதிகாரங்கள் இவைகளைப்பற்றி 17 - வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

## ஸம்மன்கள் யாருக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய ஸங்கதிகள்.

616. [illegible] ஸம்மனை பெற்றுக்கொள்ளாமல் [illegible] ஸம்மனில் கண்ட நபர் மறைந்துகொண்டால் இந்தியன் பினல்கோடு, 172-வது பிரிவுப்படி குற்றமாகும். அதற்கு ஒரு மாதம் மெய்காவல், அல்லது ரூ. 500 அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம்.

617. நிறைவேற்றுவதற்காகக் கொண்டுபோகப்பட்ட ஸம்மன் முதலியவற்றைச் [illegible] ஒட்டவொட்டாமலாவது அல்லது ஷை ஸம்மன் முதலியவற்றின் ஸங்கதியை அந்தக் கிராமத்தில் பிரஸித்தஞ் செய்யவொட்டாமலாவது, ஒருவரும் இடையூறு செய்யலாவது, தடுக்கவாவது கூடாது. தடை முதலியது செய்தால், இ. பி. கோடு, 173-வது பிரிவுப்படி 6, ஆறுமாதம் வெறுங்காவல், தண்டனையாவது அல்லது ரூ. 1000 அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கலாம்.

618. ஸம்மனைப் பெற்றுக்கொள்ளாமல் மறைந்துகொண்டிருந்தால், வாறண்டு, பிடிவாறண்டு, சொத்து ஜப்தி இஸ்தியார், இவைகள் பிறக்கும். அப்பால் சொத்து ஜப்தியாகும்.

619. ஒருவன் தன் பேருக்குப் பிறந்த ஸம்மனை நேரில் பெற்றுக்கொண்டு ஸம்மனில் குறிப்பிட்டிருக்கிற வாய்தாவில் குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் போதுமான முகாந்திர மன்னியில் வேணுமென்று ஆஜராகாமலிருந்துவிடக்கூடாது. அப்படிச்செய்தால் இ. பி. கோடு, 174-வதுபிரிவுப்படி குற்றமாகும். பொதுவாயஸர்க்கார் உத்தியோகஸ்தர்முன்புக்கு ஆஜராக மேலே கண்டபடி தவறினால், 1-மாதம் வெறுங்காவல் அல்லது ரூ. 500-அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம். நியாயஸ்தலங்களாகிய கோர்ட்டு முன்புக்கு ஆஜராகத் தவறினால் 6-மாதம் வெறுங்காவலாவது அல்லது 1000-ரூ. அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கலாம்.

620. சாக்ஷியாய்ப் போகிறவர்கள் ஸம்மன் பிறப்பிவித்த கோர்ட்டார் அல்லது ஸர்க்கார் உத்தியோகஸ்தர்முன் ஆஜரான பொழுது, சாக்ஷிசொல்ல ஆரம்பிக்குமுன் பிரமாணம் அல்லது உறுதிமொழி சொல்ல வேண்டும். (பிரமாணச்சட்டம், 1873-ம் வருஷத்து 10-வது ஆக்ட்டு 5-வது பிரிவு.) பிரமாணஞ் செய்யமாட்டேனென்றால், இ. பி. கோடு, 178-வது பிரிவுப்படி குற்றமாகும். 6-மாதம் வெறுங்காவலாவது அல்லது ரூ. 1000-அபராதமாவது அல்லது இரண்டு தண்டனையுமாவது விதிக்கலாம்.

621. சாக்ஷி சொல்லுகிறதற்காகவாவது, அல்லது ஏதாவது தஸ்தவேஜு அல்லது வேறு யெந்த ஸாமானையாவது கோர்ட்டு முன்புக்கு ஆஜர் செய்வதற்காகவாவது, சாக்ஷியாய் கோரப்பட்ட ஒருவன், போதுமான முகாந்திரமில்லாமல் கேழ்க்கப்பட்ட கேழ்விகளுக்கு ஜவாப் சொல்லமாட்டேனென்றாலும், ஷை தஸ்தாவேஜு அல்லது ஸமானை ஆஜர் செய்யமாட்டேனென்றாலும், அந்த கோர்ட்டார் அந்த சாக்ஷியை ஒருவாரத்துக்குமேல் போகாதகாலத்துக்கு அந்தக்கோர்ட்டு உத்தியோகஸ்தன் வசம் ஒப்புவித்து காவல் படுத்தலாம். அந்த ஒரு வாரத்துக்குள் எப்பொழுது கேட்ட கேழ்விக்கு ஜவாப்சொல்ல அல்லது ஆஜர்செய்ய சொன்ன தஸ்தவேஜை ஆஜர்செய்ய ஷை சாக்ஷி ஸம்மதிக்கிறானோ அப்பொழுது அவன் அந்தக் காவலிலிருந்து



விடுதலை செய்யப்படுவான். அந்த ஒரு வாரத்துக்குள் அந்த சாக்ஷி அப்படிச்செய்யச் ஸம்மதிக்காவிட்டால் கி.பு.கோடு, 480-அல்லது 482-வது பிரிவுகளின்படி நடவடிக்கை நடத்தப்படும். (கி. பு. கோடு, பிரிவு 485.) கேஸின் வாதி சாக்ஷியில்லை. ஆகையால் அவனுக்கு மேல்கண்ட [illegible] ஸம்பந்தப்பட [illegible] 600.)

622. ஒரு ஸிவில், கிரிமினல் அல்லது ரிவினியூ கோர்ட்டார் முன்பாக இ.பி. கோடு, 175, 178, 179, 180, அல்லது 228-வது பிரிவின்படிக்குள்ள குற்றஞ்செய்யப்பட்டால் அப்படிகுற்றஞ்செய்பவன் ஐரோப்பியனாயிருந்தாலும் அவனை உடனே பிடிக்கும்படி செய்து காவலில் வைக்கலாம். அன்று கோர்ட்டுக் கலையுமுன் கோர்ட்டாருக்கு அப்படிச் செய்யத்தேவையென்றால் அந்தக் குற்றத்தைத் தன் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு அந்த நபர் ரூபா 200-க்கு மேல்போகாத அபராதம் கொடுக்கும்படிக்கும் தவறினால் ஒரு மாதம் காவலிலிருக்கும்படிக்கும் தண்டனை விதிக்கலாம். (கி.பு. கோடு, பிரிவு 480.)

623. பொதுவாய் இது கறுப்புமனிதர்களாகயிருக்கப்பட்ட அதிகாரிகள் ஐரோப்பியர்களை குற்றத்திற்காக விசாரித்துத் தண்டிக்கப்படாதென்ற விதிக்கு விலக்கு. தான் விதிக்கக்கூடியமேற்கண்ட தண்டனைக்காணாதென்று தோன்றினால் அதிக தண்டனை விதிப்பதற்காக மேல்பட்ட மாஜிஸ்திரேட்டுக்கு இந்தக் கேஸை அனுப்பிவிட வேண்டும். (கி.பு. கோடு, பிரிவு 482.)

624. சாக்ஷியாய் இருப்பவன் தன்வசம் இருக்கப்பட்ட தஸ்தாவேஜை ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடம் ஆஜர் செய்யமாட்டேனென்று சொன்னால் அவனுக்கு ஒரு மாதம் வெறுங்காவல், அல்லது ரூ. 500-அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம். தஸ்தாவேஜு அல்லது வேறு வஸ்துவை ஒரு கோர்ட்டு அல்லது ஒரு நியாயஸ்தலத்தில் ஆஜர் செய்யமாட்டேனென்று சொன்னால், 6-மாதம் வெறுங்காவல் அல்லது ரூ. 1000-அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம். (இ. பி. கோடு, பிரிவு 175.)

625. ஸாக்ஷியானவன், கேட்ட கேழ்விக்கு ஜவாப் சொல்லமாட்டேனென்றால் அவனுக்கு 6-மாதம் வெறுங்காவல் அல்லது ரூ. 1000-அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம். (இ. பி. கோடு, பிரிவு 179.)

626. ஒரு சாக்ஷி, [illegible] கேழ்விகளுக்கு சொல்லும் ஜவாபானது அந்த சாக்ஷியை குற்றவாளியாக்கக் கூடியதா யிருந்தாலுமே அல்லது தண்டனைக்குள்ளாக்க கூடியதாயிருந்தாலுமே அந்தக் கேழ்விக்கு அவன் ஜவாப்சொல்லிதான் தீரவேணும். ஆனால் கட்டாயத்தின்பேரில் சொல்லப்பட்ட ஜவாபினால் ஏற்படும் ஸங்கதியை வைத்துக்கொண்டு, அந்த ஸாக்ஷியை பிடிக்கவாவது அல்லது வேறு அவனுக்கு விரோதமான கிரிமினல், நடவடிக்கையில் இந்த வாக்குமூலத்தை உபயோகப் படுத்தவாவது கூடாது. ஸாக்ஷிசொன்ன ஜவாப்பானது பொய்யாக ஏற்பட்டால் பொய் வாக்குமூலம் கொடுத்ததற்காக பிராஸிக்யூஷன் செய்யலாம். (சாக்ஷியச்சட்டம் 132-வது பிரிவு.)

627. சாக்ஷியை கேழ்க்கப்படுகிற கேழ்வியானது சரி அல்லது சரியான கேழ்வி இல்லையென்பதைத் தீர்மானம்செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டு (சாக்ஷியச்சட்டம் 148-வது பிரிவு.)

628. ஒரு சாக்ஷியினுடைய நடத்தையைப்பற்றி ஸாக்ஷியை கேழ்வி கேழ்க்கும்போது கேழ்விகேழ்க்கப்படும் சங்கதி உண்மையென்று ஸ்தாபிக்கப்

போதுமான காரணமிருந்தாலொழிய அந்தக் கேள்வியை கேள்க்கக்கூடாது. (சாக்ஷியச்சட்டம் 149-வது பிரிவு.)

629. ஒரு சாக்ஷியினுடைய நடத்தை விஷயமாக ஒரு பாரிஸ்டர், ப்ளீடர், வக்கீல் அல்லது அட்டர்னிபோதுமான காரணமில்லாமல் அநுவசியமான கேள்வியைக் கேட்டதாக ஒரு கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால், அவருடைய நடவடிக்கையைப்பற்றி, ஹைகோர்ட்டார் அல்லது, எந்தகோர்ட்டு முன் பாரிஸ்டர் அல்லது வக்கீலாகப் பேசி வருகிறாரோ அந்த கோர்ட்டாருக்கு இந்த சங்கதியைப்பற்றி ரிப்போர்ட்டு செய்யலாம். (சாக்ஷியச் சட்டம் 150-வது பிரிவு.)

630. ஒரு ஸாக்ஷியை கேள்க்கப்படுகிற கேள்வியானது; எந்தக் கேஸ் விஷயமாய் அந்தஸாக்ஷியைவிசாரிக்கப்படுகிறதோ அந்தக்கேஸின் ஸங்கதிக்குக் கொஞ்சம் ஸம்மந்தமுள்ளதா யிருந்தாலும், அந்த கேஸின் விவாதாம்சங்களுக்கு நேரில் சம்மந்தப்பட்டதா யிருந்தாலொழிய அந்தக் கேள்விகளை கோர்ட்டார் மரியாதைக்குறைவான அல்லது இகழ்ச்சியான கேள்விகளென்று நினைத்தால் அந்தக் கேள்விகளைக் கேள்க்கவொட்டாமல் தடுத்துவிடலாம். (சாக்ஷியச் சட்டம் 151-வது பிரிவு.)

631. ஒரு சாக்ஷியை அவமானம் செய்யவேண்டுமென்றாவது அல்லது இடைஞ்சல் செய்யவேண்டுமென்றாவது எண்ணங்கொண்டு, சரியானகேள்வியையுங் கூட அநுவசியமானதும் கோபம் மூட்டக்கூடியதுமான விதமாகக் கேட்டால் அந்தக் கேள்வியைக் கேள்கவொட்டாமல் கோர்ட்டார் தடுத்துவிடலாம், (சாக்ஷிய சட்டம், பிரிவு-152.)

632. ஒரு சாக்ஷியின் நடத்தை விஷயமாகக் கேள்க்கப்பட்ட கேள்விக்குச் சொன்ன ஜவாப்பின்பேரில் அந்த ஜவாப்பை ரத்துச் செய்யும்பொருட்டு சாக்ஷி சொன்ன ஸாக்ஷியமானது பொய்யாக யிருந்தால் அவனை பொய் வாக்கு மூலம் கொடுத்ததற்காக மட்டும் அவன்பேரில் கேஸ் நடத்தலாம். (சாக்ஷிய சட்டம், பிரிவு-153.)

633. ஒரு சாக்ஷியை எந்தப் பக்கத்தில் சாக்ஷியாகக் கோரப்படுகிற தோ அந்தக் கக்ஷிக்காரர் அல்லது அவர்பக்கத்து வக்கீல் முதலாவது விசாரிப்பார். பின்னிட்டு எதிர் கக்ஷிக்காரர் அல்லது அவர்பக்கம் வக்கீல் அந்த சாக்ஷியை குறுக்குக்கேள்வி (கிராஸ்) கேள்பார். அந்தக் குறுக்குக் கேள்விக்கு ஜவாப்பாகச் சொல்லப்பட்ட சாக்ஷியில் ஸந்தேகாஸ்பதமாக ஏதாவது யேர்ப்பட்டால் அதை விவரிக்கும் பொருட்டு அந்த ஸாக்ஷியை சாக்ஷிகோரின கக்ஷிக்காரர் அல்லது அவர்பக்கம் வக்கீல் மறுபடியும் அந்த சாக்ஷியைக் கேள்வி கேள்க்கலாம். (சா. ச. பிரிவு-138.)

634. ஒரு சாக்ஷியைத் தன் பக்கத்தில் கோரின ஒரு கக்ஷிக்காரனுக்கு அந்த சாக்ஷி எதிர்கக்ஷிக்காரன் பக்ஷமாயிருந்துக்கொண்டு தனக்கு விரோதமாகத்தான் சொல்லுவானென்று சாக்ஷியைப்பட்டியிலேற்றி விசாரிக்க ஆரம்பித்ததற்குப் பிறகு தெரிந்துகொண்டால் அதுவிபரத்தைக் கோர்ட்டாரிடம் தெரிவித்து, அவர்களிடம் அநுமதிபெற்றுக்கொண்டு அந்த சாக்ஷியை வேண்டும் குறுக்குக்கேள்விகள் கேள்க்கலாம். (சா. ச. பிரிவு-154.)

635. கேஸின் உண்மையை அறிந்துகொள்ளும்பொருட்டு கோர்ட்டார் கேசுக்கு சம்மந்தமுள்ளவும் சம்மந்தமில்லாதவுமான தனக்குத் தோன்றுகிற எந்தக் கேள்விகளையும் எந்தமாதிரியாகவும், எந்தக்காலத்திலும் சாக்ஷிகளை யாவது, கக்ஷிக்காரர்களையாவது கேள்க்கலாம். அவர்களை ஒரு தஸ்தாவேஜு அல்லது மற்றச் சாமானை தன் முன்புக்கு ஆஜர்செய்யும்படி உத்தரவு செய்லாம். அப்படிக் கேள்க்கப்படுங் கேள்விகளையாவது, செய்யப்படும் உத்தரவுகளையாவது கக்ஷிக்காரர்களாவது அவர்கள் பக்கம் வக்கீல்களாவது தடுக்க பாத்தியதையில்லை. அப்படிக்கேட்ட கோர்ட்டு கேள்விகள் பேரில் கோர்ட்டார் அனுமதியில்லாமல் குறுக்குக்கேள்வி கேள்க்கக் கூடாது. சாக்ஷிகளை கேள்வி கேள்க்கும் விஷயத்தில் மேலே சொன்ன சா. ச. 148, 149 - வது பிரிவுகளின் நிபந்தனைகள் கோர்ட்டாருக்கும் ஸம்மந்தமுண்டு.



636. ஜூரி அல்லது அஸெஸ்ஸர்களால் விசாரிக்கப்படும் கேசுகளில் சாக்ஷிகளை அவர்களும் அவர்களுக்கு அவசியமென்று தோன்றுகிற கேள்விகளைக் கேள்க்கலாம். (சா. ச. பிரிவு-166.)

637. சாக்ஷி சொல்லும்போது ஒரு சாக்ஷியினுடைய நடத்தையை குறித்து அந்தக் கோர்ட்டாருக்குத் தோன்றும் அபிப்பிராயத்தை அந்த சாக்ஷியின் வாக்குமூலத்திலேயே குறித்துவைக்க கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு (கி. பு. கோடு, பிரிவு-363.) ஆகையால் கோர்ட்டார் சந்தேகிக்கக்கூடியவிதமாக சாக்ஷி சொல்லும்போது சாக்ஷிக்காரர்கள் நடந்துகொள்ளக்கூடாது.

638. ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடங் கொடுத்த வாக்குமூலத்தில் கையெழுத்துப்போடமாட்டேனென்றால், இ. பி. கோடு, 180 - வது பிரிவுப்படி 3 மீ வெறுங்காவல் அல்லது ரூ. 500 அபராதம் அல்லது இரண்டும் தண்டனைகளும் விதிக்கலாம். சாக்ஷிகள் பொய்யான வாக்குமூலங்கொடுத்தால் இ. பி. கோடு, 193-வது பிரிவுப்படி குற்றமாகும்.

639. சாக்ஷிகள் கொடுத்த வாக்குமூலங்களில் கையெழுத்து வாங்க வேண்டுமென்று சென்னை ஹைக்கோர்ட்டு 1862ளு மார்ச்சுமீ 7உ போட்ட புரொஸிடிங்குவில் சொல்லப்பட்டிருக்கிறது.

640. போலீஸார்முன் விசாரிக்கப்படுகிற சாக்ஷிகள் வாய்மொழியாக விசாரிக்கப்படுவார்கள். போலீசார் கேள்க்கிற கேள்விகளுக்கெல்லாம் சாக்ஷிகள் ஜவாப்புச்சொல்லவேண்டும். தான் சொல்லுகிற ஜவாப்பே தன்னை குற்றவாளியாக முடிவு பண்ணதாகவாவது அல்லது தன்னை [illegible] படியாகவாவது ஏற்படும் ஜவாப்புள்ள கேள்விகளுக்கு ஜவாப்புச் சொல்லவேண்டியதில்லை. (கி. பு. கோடு, பிரிவு-161.)

641. [illegible]த்தில் பொதுவாக மனிதர்கள் உண்மையே பேசவேண்டுமென்பதும் பொய்பேசுவது இழிவான காரியமென்பதும் ஜனங்களின் இயற்கையான கொள்கையாகயிருக்கவேண்டும். ஆகையால், போலீசாரிடம் அவர்கள் கேட்ட கேள்விக்கு உண்மைதான் சொல்லவேண்டும். ஆனால் 1882-ம்ளுத்து கி. பு. கோடு 161-வது பிரிவில் போலீசாரிடம் சாக்ஷிகள் கொடுக்கும் வாக்குமூலத்தில் உண்மையைச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற வார்த்தைகளை 1898-ம்ளுத்து 5-வது ஆக்ட்டாகிய இப்போது கி.பு.கோ. 161-வது பிரிவில் எடுத்துவிட்டார்கள். ஆகையால் போலீசாரிடம் சாக்ஷிகள் உண்மையைச்சொல்லாவிட்டால் பொய் வாக்குமூலங் கொடுத்ததற்கேர்ப்பட்ட தண்டனைக்கு உள்ளாகமாட்டார்களென்று ஏற்படுகிறது.

642. கி. பு. கோடு 175-து பிரிவுப்படி தற்கொலை முதலிய மரணத்தைப்பற்றி போலீஸாரிடம் சாக்ஷிகள் உண்மையைச் சொல்லவேண்டும்.

643. போலீசார் முன் சாக்ஷிகள் தெரிவித்த சங்கதிகளை போலீசார் எழுதிக்கொண்டு அதில் கையெழுத்துக் கேட்டால் சாக்ஷிகள் அதில் கையெழுத்துப்போடவேண்டியதில்லை. (கி. பு. கோடு, பிரிவு-162.)

644. போலீசாரால் விசாரிக்கப்பட்ட சாக்ஷிகளை, தங்கள் முன்புக்காவது அல்லது வேறு கோர்ட்டார் முன்புக்காவது வேண்டும்போதாவது அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திலாவது ஆஜராவதாக முச்சலிக்காக் கொடுக்கும்படி கேட்டு அந்த சாக்ஷிகள் முச்சலிக்காக் கொடுக்கமாட்டேனென்றால் அவரைப்பிடித்து மாஜிஸ்திரேட்டிடம் பந்தோபஸ்தில் அனுப்பலாம். (கி. பு. கோடு, பிரிவு 171.)

645. அந்த மாஜிஸ்டிரேட்டரிடம் உடனே முச்சலிக்காக் கொடுக்காவிட்டால் முச்சலிக்கா கொடுக்கும் வரை அல்லது கேசு விசாரணை முடியும் வரை அவர்களைக் காவலில் வைத்திருக்கலாம்.

646. ஒரு கேசின் வாதியாவது அல்லது சாக்ஷிகளாவது மாஜிஸ்திரேட்டுக்கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது போலீசார் அவர்களைப் பின் தொடர்ந்துபோய் அனாவசியமான தடங்கல் அல்லது இடைஞ்சல் செய்யக்கூடாது. தன் கூடவந்து ஆஜராவதற்கு ஜாமீன் கொடுத்துப்போகும்படி அவர்களை இடைஞ்சல் செய்யக்கூடாது. வேண்டுமானால் அவர்களிடம் சொந்த முச்சலிக்கா வாங்கிக்கொள்ளலாம். (கி. பு. கோடு பிரிவு 171.)

647. கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது அல்லது கோர்ட்டிலிருந்து திரும்பிவரும்போது சாக்ஷி வகையராக்களை வாறண்டு முதலியதுகளுக்காகப் பிடிக்கக்கூடாது.

---

# அத்தியாயம் 15.

---

## ஸம்மன் கேசுகள் விசாரணையாகும் விதம் அடியில்கண்டிருக்கிறது.

பிராது சங்கதியைத் தெரிவிப்பது.

648. ஆஜரிலிருக்கும் எதிரிக்கு அவன்பேரில் வந்திருக்கும் பிராது இன்னதென்பதைத் தெளிவாக அவனுக்குத் தெரிவித்து, அந்தப்பிராதில் கண்ட குற்றஞ்செய்தானா இல்லையாவென்று மாஜிஸ்திரேட்டார் கேழ்ப்பார்கள். (கி. பு. கோடு, பிரிவு-242.)

பிராதை யதார்த்தமென்று ஒப்புக்கொண்டால் தக்க வாவியென்று தீர்மானிப்பது.

649. எதிரி பிராதில் கண்ட குற்றத்தை தான் செய்ததாக ஒப்புக்கொண்டால், அவனுடைய ஒப்புக்கொள்ளுதலை அவன் சொல்லுகிற அதே வார்த்தைகளைக்கொண்டு வாக்குமூலம் எழுதிக்கொள்ளப்படும். தான் குற்றஞ்செய்ததாக ஒப்புக்கொண்டாலுமே, தன்னை யேன் தண்டிக்கக்கூடாதென்பதற்கு முகாந்திரம் போதுமானபடி காண்பிக்காவிட்டாலுமே எதிரிக்கு மாஜிஸ்ட்ரேட்டார். யுக்தப்படி எதிரி செய்த குற்றத்துக்கு ஏற்பட்ட தண்டனை பூராவையுமாவது அல்லது அதில் எவ்வளவையாவது கொடுக்கப்படும். (கி. பு. கோடு, பிரிவு-243.)



வாதி தன் பக்கம் கோரிக்கொண்ட சாக்ஷிகளில் சிலரை, போதுமான முகாந்திரமன்னியில் நிறுத்திக்கொள்ளும் சங்கதியானது வாதிக்கு விரோதமாகக்கோர்ட்டாரை அபிப்பிராயப்படும்படி செய்யுமென்பது சட்டத்தின் கருத்து. அப்படிச் சில சாட்சிகளை விசாரியாமல் நிறுத்திக்கொள்ளுவதற்கு, நிறுத்திக்கொள்ளப்பட்ட சாட்சிகளை விசாரித்தால் உண்மையைச் சொல்லமாட்டார்களென்பதுதான் போதுமான காரணமாகயிருக்கும். (இ. லா. ரி. கல், ஸீரிஸ் 8-வது வால்யம் 121-வது பக்கம்.)

650. எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் வாதியும் அவன் பக்கம் சாக்ஷிகளையும் விசாரிக்கப்படும். அப்படி வாதிபக்கம் விசாரித்த சாக்ஷிகளை எதிரி தானாவது அல்லது தன்பக்கம் வக்கீலைக்கொண்டாவது கிராஸ்(குறுக்கு வினா) கேழ்விகள் கேழ்க்கலாம். அப்பால் கிராஸில் சாக்ஷிகள் சொன்ன ஜவாப்புகளை சீர்திருத்துவது அவசியமாக யிருந்தால் வாதி அல்லது அவன் பக்கம் வக்கீல் மறுபடி அந்தச் சாக்ஷிகளை அவசியமான கேழ்விகள் கேழ்க்கலாம்.

651. வாதி பக்கம் சாக்ஷி விசாரணை முடிந்தபிறகு, எதிரி பக்கம் சாக்ஷிகள் யாராவதிருக்கிறார்களாவென்று எதிரியைக்கேட்டு சாக்ஷி யிருக்கிறதாக எதிரி சொன்னால் அவர்களை நேரில் ஆஜர் செய்கிறனா அல்லது கோர்ட்டிலிருந்து ஸம்மன் பிறப்பிக்கவேண்டுமா வென்று தெரிந்துகொள்ளப்படும். உடனே எதிரி பக்கம் சாக்ஷி விசாரணைசெய்ய வாயிதா ஏற்படுத்தப்படும். சாக்ஷிகளுக்கு ஸம்மன் வேணுமென்று எதிரி சொல்லி அந்தக் கேசும் போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசாக இருந்தால் அந்த சாக்ஷிகளுக்கு ஸம்மன்படி கட்டும்படி உத்தரவு செய்யப்படும். உடனே சட்டப்படிக்கேர்ப்பட்ட ஸம்மன்படியைக் கட்டிவிடவேணும். (ஸம்மன் படித்தாரணைக்கு 530-வது விஷயத்தைப் பார்த்துக்கொள்ள.

கோர்ட்டாருக்கு அப்படிச்செய்வது யுக்தமென்று தோன்றினால், வாதி பக்கத்திலாவது, எதிரி பக்கத்திலாவது ஏற்படுகிற சாக்ஷிகளுக்கு ஸம்மன் பிறப்பிக்குமுன்னாடியே அந்தச் சாக்ஷிகளுக்கு ஏற்படக்கூடிய நியாயமான வண்டி, வாடகை, படிச்செலவு முதலிய யாவத்தையும் கோர்ட்டு முன் கட்டும்படி உத்தரவு செய்யலாம். அந்தத் தொகை எவ்வளவென்று தெரிந்துகொண்டு உடனேயாவது அல்லது கோர்ட்டார் உத்தரவு செய்கிற வாயிதாவுக்குள்ளாவது அந்தத் தொகையைச் செலுத்தினாலொழிய ஸம்மன் பிறப்பிக்கப்படமாட்டாது. (கி. பு. கோடு, பிரிவு-244.)

652. வாதியாவது எதிரியாவது தன் பக்கம் சாக்ஷிகளை ஆஜர்ப்படுத்த வேண்டியதே யல்லது, அவர்கள் பக்கம் சாக்ஷிகளுக்குக் கோர்ட்டார் ஸம்மன் பிறப்பிக்கக் கடமைப்படவில்லை. ஆனால் கோர்ட்டாருக்கு யுக்தமென்று தோன்றினால் வாதி, எதிரி இவர்கள் வேண்டுதலின்படி ஸம்மன் பிறப்பிக்கலாம், ஸம்மன் பிறப்பிக்கும்படி கேட்கப்படுஞ் சாட்சிகளுக்கெல்லாம் ஸம்மன் கொடுக்க மாஜிஸ்திரேட்டு கடமைப்படவில்லை. சில சாட்சிகளுக்கு மட்டும் ஸம்மன் கொடுக்கமாட்டோமென்று சொல்லிவிட கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. ஆனால் ஆஜர்ப்படுத்தி முன்னமேயே கோர்ட்டு முன்னிருக்கிற சாக்ஷிகளை விசாரிக்கமாட்டோமென்று சொல்லக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. (வீக்லி ரிப்போர்ட்டர், 13-வால்யம் 63-வது பக்கம்.)

653. (1) இப்படி வாதி, எதிரி பக்கம் சாக்ஷிகளையும் வேறு யாரை விசாரித்தால் இந்தக்கேசின் உண்மை வெளியாகுமென்று கோர்ட்டார்

விளைக்கிறார்களோ அவர்களையும், அவசியமென்று தோன்றினல் எதிரியையும் விசாரித்து, பிறகு எதிரி குற்றவாளியல்லவென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால் எதிரியை விடுதலை செய்யப்படும்.

(2) எதிரி குற்றஞ் செய்ததாகத் தீர்மானிக்கப்பட்டால் சட்டப்படி கோர்ட்டாருடைய யுக்தம்போல எதிரிக்குத்தண்டனை விதிக்கப்படும். (கி. பு. கோடு, பிரிவு-245.)

654. எதிரியின் ஒப்புக்கொள்ளுதலின் பேரிலாவது, அல்லது கேஸ் பூராவும் விசாரணைசெய்ததின்பேரிலாவது எதிரியைத் தண்டிப்பது பிராதில் சொல்லப்பட்ட அல்லது பிறப்பிவிக்கப்பட்ட ஸம்மனில் காணப்பட்ட குற்றத்திற்காகத்தானிருக்கவேண்டிய தென்பதில்லை. எந்தமட்டும் குற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டதோ, அல்லது எந்தமட்டும் குற்றம் ருஜுவாச்சுதோ அந்தப் பிரிவுப்படி எதிரியைத் தண்டிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-246.)

655. வாதியின் பிராதின்பேரில் ஸம்மன் பிறப்பிவிக்கப்படுகிற கேசுகளில், எதிரி ஆஜராவதற்காகக் குறிப்பிடப்படுகிற வாயிதாவிலாவது அல்லது அதற்கப்பால் அந்தக்கேசுக் [illegible]ப்பட்ட வேறு எந்த வாயிதாவிலாவது வாதி கோர்ட்டில் ஆஜராகாவிட்டால், அந்தக்கேசுக்கு வேறு காரணங்களை உத்தேசித்து வாயிதாப்போடவேண்டியது அவசியமென்று கோர்ட்டார் நினைத்தாலொழிய வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிடவேண்டியது.

வேறு காரணங்கள்:—வாதிக்கு எதிர்பாராததும் அவனால்தடுக்கமுடியாததுமான சங்கதி நேர்ந்து அதனால் அவன் வரவில்லையென்று வெளியாவது அல்லது, கோர்ட்டுக்கும் வாதியிருப்பிடத்துக்கும் மத்தியிலிருக்கும் ஆறு முதலியவற்றில் பெருவெள்ளம் முதலியதுகளாலும் தடுக்கப்பட்டானென்பது போலொத்த காரணங்கள்தான்.

குறிப்பு:—வாதியின் பிராதின்பேரில் ஸம்மன் பிறப்பிவிக்கப்பட்ட கேசுகளில் என்பதினால் போலீசாருடைய சார்ஜ்ஷீட்டின் மூலமாய் அல்லது முனிஸிபல், யூனியன், தாலூகா போர்டு, அப்காரி, ஸால்டு முதலிய டிபார்டுமெண்டாரால் நடத்தப்படும் கேசுகளுக்கு இந்த விதி சம்மந்தப்படமாட்டாதென்பது வெளியாகிறது. (கி. பு. கோடு, பிரிவு-247.)

656. ஸம்மன் கேசுகளில், வாதி தன் கேஸில் கடாசியாகக் கோர்ட்டார் பைசல் சொல்லுமுன் எப்போதாவது தன் கேசை எதிரிபேரில் மேல் நடத்தாமல் நிறுத்திக்கொள்ளப் போதுமான முகாந்திரங்களைச்சொல்லி கோர்ட்டாரைத்திருப்திசெய்து அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தன் பிராதை நிறுத்திக்கொள்ளலாம். (கி. பு. கோடு, பிரிவு-248.)

657. பிராது கொடுக்கப்பட்டதின் மூலமாயல்லாது வேறு வகையாய் தாக்கல் செய்துகொள்ளப்பட்ட ஸம்மன் கேசுகளில் ஒருராஜதானி மாஜிஸ்திரேட்டு, ஒரு 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு, அல்லது ஒரு டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டினுடைய அனுமதி பெற்றுக்கொண்டு மற்ற எந்த மாஜிஸ்திரேட்டும், அதற்குரிய முகாந்திரங்களைக் கண்டெழுதிக்கொண்டு எதிரியை விடுதலையாவது தண்டனையாவது செய்து தீர்ப்புச்சொல்லாமலேயே, கேசின் எந்த நிலைமையிலும் எதிரியை விட்டுவிடலாம். (கி. பு. கோடு, பிரிவு-249.)

## விசேஷக்குறிப்புகள்.

658. ஒவ்வொரு கேசின் வாதியும் ஷை கேசுக்கு [illegible] வாயிதாத் தய்தியில் ஸம்மனில்கண்ட நேரம், அதாவது காலை 11-மணிக்கே கோர்ட்டுக்குத் தவறாமல் போய் ஆஜரிலிருக்கவேண்டும். அந்த நேரத்தில் கோர்ட்டார் வராவிட்டாலுமே, கோர்ட்டார் கோர்ட்டுக்குவந்து அந்தக்கேசை எடுக்காமல் வேறு கேசை எடுத்து விசாரணை செய்துகொண்டிருந்தாலுமே, அன்று கோர்ட்டு கலையும் வரை கோர்ட்டார் அனுமதியன்னியில் கோர்ட்டைவிட்டு வேறு எங்கும் போய்விடக்கூடாது. அப்படிப்போனல் வாதி வெளியேபோயிருக்கும்போது கேசைக்கூப்பிட்டு வாதி ஆஜரில்லாததற்காக பிராதை தள்ளிவிட்டாலும் தள்ளிவிடுவார்கள். வாயிதாவன்று இந்தக்கேசு கூப்பிடப்படுமுன் அநேக நேரம் கோர்ட்டில் காத்திருந்ததும், வாதியைக்கூப்பிட்டு ஆஜரில்லாமலிருந்ததற்காக வாதியின் பிராதைத்தள்ளின உடன் வாதி ஆஜரானதும் இந்தக் காரணங்கள் வாதியின் பிராதை கூப்பிடும்போது வாதி ஆஜரில்லையென்று தள்ளினதை அநீதமான செய்கையாக்கமாட்டாது. அதாவது கேசு வாயிதாவன்று எப்போது கூப்பிட்டாலும் கோர்ட்டு கலைகிறவரை வாதி ஆஜரிலிருக்கவேண்டுமென்பது சட்டத்தின் கருத்து. (சென்னை ஹைக்கோர்ட்டு 1880-ம்வருஷம் டிஸம்பர்மீ 8உ போட்ட 2510-ம் நெ. புரொசிடிங்ஸ் பார்க்க.)



659. ஸம்மன்கேசுகளில் வாதி வாயிதாவன்று கூப்பிடும்போது ஆஜரில்லாவிட்டால் அன்று கோர்ட்டுக்கலையுமுன் வாதி வந்தாலும் வருவானென்று கோர்ட்டார் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை என்று ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பிருக்கிறது. (இந்தியன் லா. ரிப்போர்ட்டு மதிராஸ் ஸீரிஸ் 7-வது வால்யம் 356-வது [illegible])

660. ஸம்மன் பெற்ற சாக்ஷியும் மேற்கண்டபடி வாதி காத்திருக்கவேண்டுவதுபோலவேயே கோர்ட்டில் காத்திருக்கவேண்டும். தவறினல், போதுமான முகாந்தரஞ் சொல்லாவிட்டால், இ. பி. கோடு, 174-வது பிரிவுப்படி தண்டனைக்குள்ளாவான்.

661. ஸம்மன் கேசுகளில் வாதியாகயிருக்கப்பட்டவன் பிரதி வாயிதாவிலும் கோர்ட்டில் ஆஜராயிருக்கக் கடமைப்பட்டிருந்தாலும், வாதிபக்கம் சாக்ஷி விசாரணை பூராவும் முடிந்து தன் கேசை ருஜுவாச்செய்தபிறகு எதிரி பக்கம் சாக்ஷி விசாரணைக்கு குறிப்பிட்ட வாயிதாவில் அந்த வாதி கோர்ட்டில் ஆஜரிலிருக்கவேண்டியதற்கு முக்கிய காரணங்களிருந்தாலொழிய அவன் ஆஜராகாமலிருந்ததற்காக வாதியின் பிராதைத் தள்ளினது பிசகென்று சென்னை ஹைக்கோர்ட்டார் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். (1874-ம்வருஷம் நவம்பர்மீ 5உ போட்ட 170-ம் நெ. புரொஸீடிங்க்ஸ்.)

662. மாஜிஸ்திரேட்டு ஒரு ஊரில் ஸர்க்கியூட்டிலிருக்கும்போது வாதியை அந்த குறிப்பிட்ட வாயிதாவில் அந்த ஊரில் ஆஜராயிருக்கும்படி சொல்லியிருந்தாலொழிய வாதி ஆஜராகாமலிருந்ததற்காக அவன் பிராதைத் தள்ளுபடி செய்யக்கூடாது. (சென்னை ஹைக்கோர்ட்டு 1875-ம்வருஷம் ஆகஸ்டுமீ 17உ போட்ட புரொஸீடிங்க்ஸ்.)

# அத்தியாயம் 16.

## வாறண்டு கேசுகளை மாஜிஸ்திரேட்டுகள் பரிசிலனை செய்வதைக்குறித்து.

663. வாறண்டு கேசுகளைப் பரிசிலனைசெய்வதில் மாஜிஸ்திரேட்டுகள் அடியில்கண்டிருக்கிற நடவடிக்கையை அனுசரிக்கவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-251.)

664. (1) குற்றஞ்சாட்டப்பட்டவன் மாஜிஸ்திரேட்டுக்குமுன் ஆஜரானாலும் கொண்டுவரப்பட்டாலும் அந்த மாஜிஸ்திரேட்டானவர் பிராதுக்காரனைவருவிருந்தால் அவன் சொல்லுகிறதைக் கேட்கவும் பிராதுக்கு ஆதாரமாகக் கொண்டுவரப்படுகிற சகல சாட்சியத்தையும் வாங்கவும் தொடங்கவேண்டியது.

(2) மாஜிஸ்திரேட்டானவர் அந்தக்கேஸின் சங்கதிகளை அறிந்திருந்து பிராதுபட்சத்தில் சாட்சியஞ்சொல்லக்கூடுமானவர்கள் போலிருக்கிற நபர்கள் பேரை பிராதுக்காரனிடத்திலாவது வேறே விதமாயாவது நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு, இவர்களுக்குள் தனக்கு அவசியமாகத் தோற்றுகிறவர்களை தனக்குமுன் சாட்சியஞ் சொல்லுவதற்கு ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-252.)

665. (1) 252-வது பிரிவில் சொல்லியிருக்கிற சகல சாட்சியத்தையும்வாங்கி, குற்றஞ் சாட்டப்பட்டவனை மாஜிஸ்திரேட்டுக்கு அவசியமாகத் தோற்றுகிற ஏதாவது விசாரணை செய்தபின்பு, எதற்கு ஜவாப்புச் சொல்லி மறுக்காவிட்டால் குற்றஞ் சாட்டப்பட்டவனை குற்றவாளியென்று தீர்மானிப்பதற்கு ஏதுவிருக்குமோ அப்படிப்பட்ட யாதொரு சங்கதியும் அவன் பேரில் ருஜுவாகவில்லையென்று மாஜிஸ்திரேட்டு கண்டுகொள்ளுகிற பட்சத்தில், அவர் அவனை விட்டுவிடவேண்டியது.

(2) பிராது ருஜுவாகவில்லையென்று மாஜிஸ்திரேட்டு அபிப்பிராயப்பட்டால், குற்றஞ் சாட்டப்பட்டவனை, அந்தக்கேசு நடக்கிற முன்னிட்ட எந்த தெசையிலாவது விட்டுவிடுவதற்கு அவருக்குத் தடையுண்டாவதாக இந்தப் பிரிவிற்சொல்லியிருப்பதொன்றும் எண்ணக்கூடாது, மாஜிஸ்திரேட்டானவர் அப்படி பிராதுக்காதாரமில்லையென்று நம்புவதற்குத் தனக்குண்டான ஏதுக்களை எழுதிவைக்கவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-253.)

666. அப்படிப்பட்ட சாட்சியமும் வாங்கி விமரிசையுஞ் செய்தபின்பு, மாஜிஸ்திரேட்டானவர் இந்த அத்தியாயத்தின்படி பரிசிலனை செய்யப்படத்தக்க யாதொரு குற்றத்தை குற்றஞ் சாட்டப்பட்டவன் செய்திருக்கிறானென்று நிச்சயமாய்க் கொள்ளுவதற்கு முகாந்தரமிருப்பதாக அபிப்பிராயப்பட்டால், அந்த குற்றத்தைப் பரிசிலனைசெய்ய அவருக்கதிகாரமிருந்து, அதற்காகத்



தகுந்த தண்டனையும் அவர் விதிக்கக்கூடுமென்று அவருக்குக் காணுகிற பட்சத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவன்பேரில் அவர் குற்றபத்திரிகை எழுதவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-254.)

667. பின்பு குற்றபத்திரிகையை குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு படித்து விவரமாய்ச்சொல்லி, அவன் குற்றவாளியா அல்லது தன் பட்சத்தில் ஏதாவது வாதிக்கப்போகிறானாவென்று அவனைக் கேட்கவேண்டியது.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் தான் குற்றவாளிதானென்று ஒப்புகொண்டால் மாஜிஸ்திரேட்டானவர் அவன் ஒப்புக்கொள்வதை எழுதிகொள்ளவேண்டியது, தனக்கு யுக்தமாகத் தோற்றினால் அதின்பேரில் அவனைக் குற்றவாளியென்று அவர் தீர்மானிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-255.

668. குற்றஞ் சாட்டப்பட்டவன் எதிர்வாதஞ் செய்யமாட்டேனென்றாலும் எதிர்வாதஞ் செய்யாவிட்டாலும், தன்னைப் பரிசிலனை செய்யும்படியாவாசெய்வதாலும், அவன் தன்பட்சத்தில் வாதிக்கும்படிக்கும் தன் சாட்சியத்தைக்கொண்டுவரும்படிக்கும் அவனுக்கு உத்தரவுசெய்யவேண்டியதுமல்லாமல், அவன் தன்பட்சத்திலே வாதிக்கையில் எப்போதாவது அவனை, கோர்ட்டிலாகிலும் அதற்குச் சுற்றுப்புறத்திலாகிலும் வந்திருக்கிற பிராதுபட்சத்து சாட்சிகளில் எவனையாவது மறுபடி யழைத்து ரத்து சவால்போடவொட்டவேண்டியது. (இ. பி. கோடு பிரிவு, 256.)

(2) குற்றஞ்சாட்டப்பட்டவன் ஏதாவது விவரப்பத்திரிகை கொடுத்தால் மாஜிஸ்திரேட்டானவர் அதை ரிகார்டோடு தாக்கல்செய்து கொள்ளவேண்டியது.

669. யாதொரு சாட்சி அந்தக் கேசிலே முன்னதாய் விமரிசை செய்யப்பட்டிருந்தாலும் இராவிட்டாலும் அப்படிப்பட்ட யாதொரு சாட்சியை விமரிசை செய்யப்படும்பொருட்டாவது ரத்துசவால்போடப்படும் பொருட்டாவது ஆஜராகும்படி நிர்ப்பந்திப்பதற்காகவாகிலும், யாதொரு தஸ்தாவேஜு முதலிய பொருளைக்கொண்டுவந்து காட்டும்படி நிர்ப்பந்திப்பதற்காகவாகிலும் யாதொரு கட்டளை பிறப்பிக்கும்படி குற்றஞ்சாட்டப்பட்டவன் மாஜிஸ்திரேட்டுக்கு மனுவுசெய்துகொண்டால், மாஜிஸ்திரேட்டானவர் அலைக்கழிக்கும் பொருட்டாவது ஆலசியமுண்டுபண்ணும்பொருட்டாவது நீதிதவறிப்போகும் பொருட்டாவது அந்த மனுவு செய்துகொள்ளப்பட்டதென்கிற ஏதுவின் பேரில் அதை நிராகரிக்கவேணுமென்று தனக்குத் தோற்றினாலொழிய அப்படிப்பட்ட கட்டளையைப் பிறப்பிக்கவேண்டியது. அப்படிப்பட்ட ஏதுவை அவர் எழுதி ரிகார்டுபண்ணவேணும்.

(2) அப்படிப்பட்ட மனுவின்பேரில் யாதொரு சாட்சியை ஸம்மனனுப்பி வரவழைப்பதற்கு முன்னமே, பரிசிலனையின்பொருட்டு ஆஜராவதற்காக அவனுக்கு நியாயமாய்ப் பிடிக்கும் செலவுக்காக கோர்ட்டில் பணம் கட்டச் சொல்லி மாஜிஸ்திரேட்டு கேட்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-257.)

670. இந்த அத்தியாயத்திற்குட்பட்ட எந்தகேசில் குற்ற பத்திரிகை தயார்செய்யப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு கேசிலே, குற்றஞ் சாட்டப்பட்டவனை குற்றவாளியல்லவென்று மாஜிஸ்திரேட்டு தீர்மானித்தால், அவர் அவனை குற்றவாளியல்லவென்று விடுவிப்பதற்கான உத்தரவை ரிகார்டு பண்ணவேண்டியது.

(2) அப்படிப்பட்ட யாதொரு கேஸிலே குற்றஞ் சாட்டப்பட்டவனை குற்றவாளியென்று மாஜிஸ்திரேட்டு தீர்மானித்தால், அவர் சட்டப்படி அவனுக்கு சிட்சை விதிக்கவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-258.)

...பிராது செய்யப்படுவதின்பேரில் நடவடிக்கை நடத்தப்பட்டிருக்கி, அந்தக்கேசை விசாரணைசெய்வதற்கு நிச்சயிக்கப்பட்ட யாதொரு தினத்திலே பிராதுக்காரன் ஆஜராகாவிட்டால், அந்தக்குற்றம் சட்டப்படி ராஜியாகக்கூடியதாயிருக்கிற பட்சத்தில், மாஜிஸ்திரேட்டானவர் தனக்கு யுக்தமாகத்தோற்றுமாகில், இதில் முன்னமே என்ன சொல்லியிருந்தபோதிலும், குற்ற பத்திரிகை தயார்செய்யப்படுவதற்கு முன்னமே எப்போதாவது, குற்றஞ்சாட்டப்பட்டவனை விடுதலைசெய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-259.

## வாதியினுடையவும் வாதிபக்கம் சாக்ஷிகளினுடையவும் படிச்செலவு விஷயமான விதிகள்.

1. கவர்ன்மெண்டாரவர்களாலாவது, அல்லது அவர்களுடைய அனுமதியின்பேரிலாவது அல்லது ஒரு ஜட்ஜ், மாஜிஸ்ட்ரேட், அல்லது ஸர்க்கார் உத்தியோகஸ்தருடைய அனுமதியின்பேரிலாவது நடத்தப்படுகிறகேசுகளிலும் நீதி விசாரணையின் பிரயோசனத்தை அதிகரிக்கும்பொருட்டு அப்படிச்செய்வது அவசியமென்று ஜட்ஜ் அல்லது மாஜிஸ்திரேட்டு அபிப்பிராயப்படுகிற கேசுகளிலும், கி. பு. கோடு 2-வது ஷெடியூல் 5-வது கலத்தில் ஜாமீன்பேரில் விடக்கூடாத கேசுகளென்று காணப்பட்ட கேசுகளிலும், கி. பு. கோடு 540-வது பிரிவுப்படி கோர்ட்டு தரப்பு சாக்ஷியாக ஆஜராகும்படி மாஜிஸ்திரேட்டாரால் கட்டாயப்படுத்தப்படுகிற எல்லாக்கேசுகளிலும் அடியில் 3-வது விதியில்கண்ட தாரணைப்படிக்குள்ள தொகை வாதியாகயிருப்பவர்களுக்கும் வாதி பக்கம் சாக்ஷிகளுக்குங் கொடுக்கப்படும்.

2. படிச்செலவு கொடுக்கும் விஷயத்திற்காக ஐரோப்பியர்களையும், சட்டைக்காரர்களையும், சுதேசிகளையும் 3 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. வாதியாகவாவது, சாக்ஷியாகவாவது ஆஜராகிறவர்கள் இன்னவகுப்பைச் சேர்ந்தவர்களென்று ஜட்ஜி அல்லது மாஜிஸ்திரேட்டு தீர்மானிப்பார்கள்.

3. அடியில்கண்ட தாரிணைப் படிக்குள்ள படிகொடுக்கப்படும்.

### ஐரோப்பியர்களுக்கும், சட்டைக்காரர்களுக்கும்.

| | பிரயாணப்படி. வழிப்படி. | | |
|---|---|---|---|
| | முதல் வகுப்பு. | 2-வது வகுப்பு. | 3-வது வகுப்பு. |
| ரெயில் மார்க்கமாய் ... | 1-வது வகுப்பு வண்டியின் வாடகை. | 2-வது வகுப்பு வண்டியின் வாடகை. | 3-வது வகுப்பு வண்டியின்வாடகை. |
| ரஸ்தா மார்க்கமாய் ... | மைல் ஒன்றுக்கு 8-அணா. | மைல் ஒன்றுக்கு 4-அணா. | மைல் ஒன்றுக்கு 2-அணா. |
| கடல் அல்லது கால்வாய் மார்க்கமாய் ... | வாஸ்தவத்தில் செலவழித்த தொகை எதுவோ அது. | | |
| படிச்செலவுக்காக கொடுக்கக்கூடிய உயர்ந்ததொகை. | நாளொன்றுக்கு ரூ. 3. | நாளொன்றுக்கு ரூ. 1. | நாளொன்றுக்கு அணா 8. |



### சுதேசிகளுக்கு.

| | வழிப்படி. | | |
|---|---|---|---|
| | முதல் வகுப்பு. | 2-வது வகுப்பு. | 3-வது வகுப்பு. |
| ரெயில் மார்க்கமாய் ... | 1-வது வகுப்பு வண்டியின் வாடகை. | 2-வது வகுப்பு வண்டியின் வாடகை. | 3-வது வகுப்பு வண்டியின்வாடகை. |
| ரஸ்தா மார்க்கமாய் ... | மைல் ஒன்றுக்கு 3-அணா. | மைல் ஒன்றுக்கு 2-அணா. | மைல் ஒன்றுக்கு 2-அணா. |
| கடல் அல்லது கால்வாய் மார்க்கமாய் ... | வாஸ்தவத்தில் செலவழிந்த தொகை. | | |
| படிச்செலவுக்காக கொடுக்கக்கூடிய உயர்ந்ததொகை. | நாளொன்றுக்கு ரூ. 1. | நாளொன்றுக்கு அணா 8. | நாளொன்றுக்கு அணா 4. |

4. அலக்கழிவு செய்கிறதற்காகக் கொடுக்கப்பட்ட கேசென்று கி. பு. கோடு, 250-வது பிரிவுப்படி தள்ளுப்படி செய்யப்படுகிற கேசுகளில் வாதிக்கு வழிப்படியாவது, சாப்பாட்டுப்படியாவது கொடுக்கப்படமாட்டாது.

## ஸம்மன் வாறண்டு கேசுகளில் கக்ஷிக்காரர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள்.

672. (1) இந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி பிராதைக்கொண்டாகிலும், போலீஸ் உத்தியோகஸ்தருக்கோ அல்லது மாஜிஸ்திரேட்டுக்கோ தெரிவிக்கப்பட்ட சங்கதியின்மேலாகிலும் கொண்டுவரப்படுகிற யாதொரு கேஸிலே, யாதொரு நபர் மாஜிஸ்திரேட்டின்முன் அவர் பரிசீலனை செய்யத்தக்க யாதொரு குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, அந்தக்கேஸ் யாரால் விசாரணை செய்யப்படுகிறதோ அந்த மாஜிஸ்திரேட்டானவர் குற்றஞ் சாட்டப்பட்டவனை விடுதலைசெய்தாவது குற்றவாளியல்லவென்று விடுவித்தாவது அவன்மேல் செய்யப்பட்ட பிராது வீணுகவோ அல்லது அலைக்கழிக்கவோ தொடரப்பட்டதென்று தமக்குத் திருப்தியுண்டாகும்பட்சத்தில் அவர் தமக்கு யுக்தமாகத்தோற்றுமாகில், விடுதலைசெய்கிற அல்லது குற்றவாளியல்லவென்று விடுவிக்கிற தம்முடைய உத்தரவிலேயே, 50 - ரூபாய்க்கு அதிகப்படாமல் எவ்வளவு தமக்கு யுக்தமாகத்தோற்றுகிறதோ அவ்வளவு பிரதிபலனை யாருடைய பிராது அல்லது சங்கதியின்மேல் குற்றஞ் சாட்டப்பட்டதோ அவனை, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்காகிலும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் ஒருவனல்லாமல் பலரிருந்தால் அவர்களில் ஒவ்வொருவனுக்குமாகிலும் கொடுக்கும்படி கட்டளையிடலாம்.

ஆனால், அவ்வாறு கட்டளையிடுவதற்குமுன் மாஜிஸ்திரேட்டானவர்—

(a) பிராதுக்காரனாவது சங்கதி தெரிவித்தவனாவது அம்மாதிரி உத்தரவாகக்கூடாதென்று கொண்டுவரும் யாதொரு ஆட்சேபனையை ரிகார்ட்செய்து அதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்;

(b) அவர் விடுதலை செய்கிற அல்லது குற்றவாளியல்லவென்று விடுவிக்கிற தம்முடைய உத்தரவிலேயே, பிரதிபலனைக் கொடுக்கும்படி கட்டளையிட்டால் அப்படி கட்டளையிடுவதற்குத் தமக்கிருக்கும் நியாயங்களை எழுதிவைக்கவேண்டும்.

(2) மாஜிஸ்திரேட்டானவர் (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் கொடுக்கும்படி உத்தரவு செய்திருக்கிற பிரதிபலனானது அபராதத்தைப்போல் வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

ஆனால், அதை வசூல்செய்யக்கூடாதபட்சத்தில், விதிக்கவேண்டிய காவல் தண்டனையானது 30-நாளைக்கதிகப்படாமல் மாஜிஸ்திரேட் உத்தரவு செய்கிற காலத்திற்கு வெறுங்காவல் தண்டனையாயிருக்கவேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குப் பிரதிபலன் கொடுக்கும்படி 2-வது அல்லது 3-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டினால் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாருக்கு உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தப் பிராதுக்காரன் அல்லது சங்கதி தெரிவித்தவன் அந்த மாஜிஸ்திரேட்டினால் பரிசீலனை செய்யப்பட்டுக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாலெப்படியோ அப்படியே அந்த உத்தரவின்மேல் அது பிரதிபலன் கொடுப்பதற்குச் சம்மந்தப்படுகிறவரையிலே அப்பீல் செய்யலாம்.

(4) யாதொரு கேஸிலே குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குப் பிரதிபலன் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருந்து அது (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அப்பீல் செய்வதற்குள்ளாவதாயிருந்தால், அப்பீல் செய்வதற்குக் கொடுக்கப்பட்டிருக்குங் காலங்கழிவதற்கு முன்னாவது அப்பீல் செய்யப்பட்டிருந்தால் அப்பீல் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னாவது அவனுக்குப் பிரதிபலனைக் கொடுக்கக்கூடாது.

(5) அதேவிஷயத்தைக்குறித்துப் பின்னிட்டுக் கொண்டுவரப்படுகிற யாதொரு ஸிவில் வியாஜ்ஜியத்திலே நஷ்டத்தைப்பற்றித் தீர்ப்பு செய்கையில், இந்தப் பிரிவின்படி செலுத்தப்பட்டாவது வசூல் செய்யப்பட்டாவதிருக்கிற யாதொரு பிரதிபலனைக்குறித்துக் கோர்ட்டார் யோசிக்க வேண்டும். (கி. பு. கோடு, பிரிவு–250.)

673. (1) எந்த நபராவது போலீஸ் உத்தியோகஸ்தனைக்கொண்டு யாதொரு இராஜதானியில் வேறொரு நபரைப் பிடிப்பித்தால் அப்படி பிடிப்பிப்பதற்குத் தகுந்த ஆதாரமில்லையென்று அந்தக்கேஸை விசாரணைசெய்கிற மாஜிஸ்திரேட்டுக்குத் தோற்றுகிறபட்சத்தில், அவர் 50-ரூபாய்க்கதிகப்படாமல் தமக்கு யுக்தமாகத்தோற்றுகிற பிரதிபலனை, அப்படிப் பிடிப்பித்த நபர் அப்படி பிடிப்பிக்கப்பட்ட நபருக்கு அந்த விஷயத்தில் அவனுக்குண்டான காலநஷ்டத்துக்காகவும் செலவுக்காகவும் கொடுக்கும்படி தீர்மானிக்கலாம்.



(2) அப்படிப்பட்ட விஷயங்களிலே, ஒருவனல்லாமல் பலர் பிடிப்பிக்கப்பட்டாலும் பலர்பேரில் பிராது செய்யப்பட்டாலும், மாஜிஸ்திரேட்டானவர் 50-ரூபாய்க்கதிகப்படாமல் தமக்கு யுக்தமாகத்தோற்றுகிற பிரதிபலனை அவர்களில் ஒவ்வொருவனுக்கும் கொடுக்கும்படி அவ்விதமாகவே தீர்மானிக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட சகல பிரதிபலனையும் அபராதத்தைப்போல வசூல்செய்யலாம்; அதை அப்படி வசூல் செய்யக் கூடாதபட்சத்தில், அதைச்செலுத்தவேண்டிய நபரை 30-நாளைக்கு மேற்படாமல் மாஜிஸ்திரேட் உத்தரவுபண்ணுகிற காலத்திற்கு வெறுங்காவலில் வைக்கும்படி சிட்சை விதிக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-553.)

பிரா[illegible]காரர்கள்-சாட்சிகள் இவர்களுடைய செலவைக்குறித்து.

674. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்களிடத்திலே முன்னதாய் அனுமதி பெற்றுக்கொண்டு அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் செய்யும்படியான விதிகளுக்குட்பட்டு, யாதொரு கிரிமினல் கோர்ட்டார் இந்தச் சட்டத்தின்படி தங்களுக்கு முன்பாக நடக்கிற யாதொரு விசாரணை பரிசீலனை அல்லது வேறே நடவடிக்கையின்பொருட்டு வந்திருக்கிற யாதொரு பிராதுக்காரன் அல்லது சாட்சிக்குண்டாகிய நியாயமான செலவை ஸர்க்காரிலிருந்து செலுத்தும்படி உத்தரவு பண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு-544.)

செலவையாவது பிரதிபலனையாவது அபராதத்தொகையிலிருந்து கொடுக்கக் கோர்ட்டாருக்கு அதிகாரம்.

675. (1) அந்தந்தக்காலத்திலே வழங்கிவருகிற யாதொரு சட்டப்படி யாதொரு கிரிமினல் கோர்ட்டார் அபராதம் விதித்தாலும், அப்பீலிலாவது மேற் பரிசோதனையிலாவது மற்றப்படியாவது அபராத சிட்சையையாகிலும் வேறொரு சிட்சையோடு அபராதமுமொன்றாயிருக்கிற சிட்சையையாகிலும் ஊர்ஜிதப்படுத்தினாலும், தீர்ப்புசெய்யும்போது அந்தக் கோர்ட்டார் வசூல் செய்யப்பட்ட அபராதமுழுமையையுமாவது அதிலொருபாகத்தையாவது.—

(a) பிரியாதை நடத்துவதில் கிரமமாய் நேரிட்ட செலவுகளைச் செலுத்துவதற்காகவும்,

(b) ஸிவில் வியாச்சியமூலமாய் தக்கப்படிக்குள்ள பிரதிபலன் வசூல் செய்யப்படத்தக்கதென்று கோர்ட்டார் அபிப்பிராயங்கொண்டால் செய்யப்பட்ட குற்றத்தினாலுண்டான கெடுதிக்காகப் பிரதிபலனாகவும், உபயோகப்படுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

(2) அப்பீலுக்குள்ளான யாதொரு கேஸில் அபராதம் விதிக்கப்பட்டால் அப்பீல் கொடுத்துக்கொள்வதற்குண்டான கெடுவுகாலம் கழிவதற்கு முன்னேயாவது, அப்பீல் கொடுக்கப்பட்டிருந்தால் அப்பீல் தீர்மானத்துக்கு முன்னேயாவது, அப்படி உத்தரவு செய்யப்பட்ட தொகையை வாதிக்குக் கொடுத்துவிடக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-545.)

செலுத்திய தொகையைப பிந்திய வியாஜ்ஜியத்திலே கணக்கில் சேர்த்துக்கொள்வது.

676. அதே சங்கதியைக்குறித்து பிந்தி யாதொரு ஸிவில் வியாச்சியத்திலே பிரதிபலனுக்குத் தீர்மானஞ் செய்யும்போது கோர்ட்டார் 545-வது பிரிவின்படி பிரதிபலனாகச் செலுத்தப்பட்டாவது வசூல் செய்யப்பட்டாவதிருக்கிற யாதொரு தொகையைக் கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-546.)

இந்தப்புஸ்தகத்தின் 201-வது பக்கம் 589-வது விஷயத்தில் சொல்லப் பட்டிருக்கிறபடிக்குள்ள கேசுகளில் கோர்ட்டு பீஸுக்காகச் செலவு செய்யப் பட்டிருக்கிற தொகைகளையும், கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு 31-வது பிரிவுப்படி, எதிரியைத் தண்டிக்கும்போது எதிரியிடமிருந்து வசூல்செய்து வாதிக்குக்கொடுத்துவிடவேண்டும்.

# அத்தியாயம் 17.

## போலீஸார் அதிகாரங்களைக்குறித்து.

### ஆளைப்பிடிப்பதையும் தப்பித்துக்கொண்டோடிப்போவதையும் மறுபடி பிடிப்பதையுங்குறித்து.

### A.—சாதாரணமாய் ஆளைப்பிடிப்பது.

*ஆளைப் பிடிக்கும் விதம்.*

677. (1) ஆளைப்பிடிக்கையில், அவன் அதற்கு உட்பட்டு காவலுக்கு வராவிட்டாலும் வருகிறதாய்ச் சொல்லாவிட்டாலும், அப்படி பிடிக்கிற போலீசு உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது அவனை தேகத்தின்மேல் நேரில் கைவைக்கவாகிலும் காவற்படுத்தவாகிலும் வேண்டியது.

(2) அப்படிப்பட்டவனைப் பிடிக்க எத்தனப்படுகையில் அவன் பலமாய் எதிர்த்தாலும், பிடிக்கவொட்டாமல் தப்பித்துக்கொள்ள எத்தனித்தாலும், அவனைப்பிடிப்பதற்கு அவசியமாய் என்னென்ன செய்யவேண்டியதோ அதுகளையெல்லாம் அந்தப் போலீசு உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது செய்யலாம்.

(3) மரணதண்டனையாவது ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாவது விதிக்கப்படத்தக்கதாகிய ஒரு குற்றஞ்சாட்டப்படாதிருக்கிறவனுக்கு மரணமுண்டுபண்ண இந்தப் பிரிவிலுள்ள தெதினாலும் அதிகாரமுண்டாகமாட்டாது. (கி. பு. கோடு, பிரிவு-46.)

*எவனைப் பிடிக்க உத்தேசமோ அவன் புகுந்துகொண்டிருக்கிற இடத்தைச் சோதனை போடுவது.*

678. ஆளைப்பிடிக்கும்படியான வாறண்டைக்கொண்டு பிரவர்த்திக்கிற யாவனொருவனுக்காவது ஆளைப்பிடிப்பதற்கு உத்தரவுபெற்றிருக்கிற யாதொரு போலீசு உத்தியோகஸ்தனுக்காவது, எவனைப் பிடிக்கவேண்டியதோ அவன் யாதொரு இடத்திற்குள் நுழைந்திருக்கிறானென்றாகிலும் புகுந்துகொண்டிருக்கிறானென்றாகிலும் நம்புவதற்கு முகாந்தரமிருந்தால், அந்த இடத்தில் வாசஞ்செய்துகொண்டாவது அதைத் தன்வசமாய் வைத்துக்கொண்டிருக்கிறவன், மேற்சொல்லியபடி பிரவர்த்திக்கிற நபராவது அப்படிப்பட்ட போலீசு உத்தியோகஸ்தனாவது கேட்பதின்பேரில், அவனைத்தாராளமாய் உள்ளே விடவேண்டியதுமல்லாமல் அதில் சோதனை போடுவதற்கு நியாயமான சௌகரியங்களையெல்லாம் செய்யவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-47.)

679. 47-வது பிரிவின்படி அந்த இடத்திற்குள் விடப்படாவிட்டால், எந்த விஷயத்திலாவது வாறண்டைக்கொண்டு பிரவர்த்திக்கிற நபருக்கும்



*உள்ளே விடாவிட்டால் நடவடிக்கை.*

வாறண்டு பிறப்பிக்கப்படுவதாயிருந்தபோதிலும் அதை வாங்கிவருவதற்குள்ளே பிடிக்கப்படவேண்டிய நபர் ஓடிப்போகிறதாயிருக்கிற எந்த விஷயத்திலாவது யாதொரு போலீசு உத்தியோகஸ்தனுக்கும், அப்படிப்பட்ட இடத்திற்குள் நுழைந்து சோதனைபோடவும்,

அப்படிப்பட்ட இடத்திற்குள் நுழையும்பொருட்டு, தனக்குள்ள அதிகாரத்தையும் தான்வந்த காரியத்தையுந் தெரிவித்து தன்னை உள்ளேவிடவேணுமென்று கிரமமாய்க் கேட்டபின்பு, தன்னை அப்படியே விடாவிட்டால், யாதொருவீடு அல்லது இடம் பிடிக்கப்படவேண்டியவனுடையதாயிருந்தாலும் வேறே எவனுடையதாயிருந்தாலும், அப்படிப்பட்ட வீடு அல்லது இடத்தின் வெளிக்கதவையாவது உட்கதவையாவது ஜன்னலையாவது உடைத்து உள்ளே நுழையவும், அதிகாரமுண்டு.

*அந்தப்புர அறையில் நுழைவது.*

ஆனால் அப்படிப்பட்ட யாதோரிடமானது (பிடிக்கப்படவேண்டிய நபரல்லாமல்) தேசவழக்கப்படி பயிரங்கத்தில்வராத ஸ்திரீ வாஸ்தவமாய் வாசஞ்செய்கிற அறையாயிருந்தால், அப்படிப்பட்ட அறையில் போவதற்கு முன்னமே, அப்படிப்பட்ட நபராவது போலீசு உத்தியோகஸ்தனாவது அவள் அப்புறம் போய்விடலாமென்று அறிக்கையிட்டு, அப்படி அப்புறம் போவதற்கு நியாயமான சகல சுலபத்தையும் உண்டுபண்ணவேண்டியது. பின்பு அந்த அறையின் கதவுகளை உடைத்து உள்ளே நுழையலாம். (கி. பு. கோடு பிரிவு-48.)

*விடுதலை செய்வித்துக் கொள்ளக் கதவுகளையும் ஜன்னல்களையும் உடைத்துத் திறப்பதற்கு அதிகாரம்.*

680. ஆளைப்பிடிக்கும்படி அதிகாரம்பெற்ற யாதொரு போலீசு உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது தன்னை விடுவித்துக்கொள்ளவாகிலும், ஆளைப்பிடிக்கும்பொருட்டு வேறொருவன் சட்டப்படி உள்ளே நுழைந்திருந்து அவ்விடத்தில் மறியல்பண்ணப்பட்டிருக்கிறானே அவனை விடுவிக்கவாகிலும், யாதொரு வீடு அல்லது இடத்தின் வெளிக்கதவையாவது உட்கதவையாவது ஜன்னலையாவது உடைத்துத் திறக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-49.)

*அனாவசியமான நிர்ப்பந்தங்கூடாது.*

681. ஆளைப் பிடித்துக்கொண்டபின்பு அவனைத் தப்பித்துக்கொண்டு போகவொட்டாமல் என்னசெய்யவேண்டியதோ அதுதவிர வேறே யாதொரு நிர்ப்பந்தமும் செய்யக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-50.)

*பிடிபட்டவர்களைச் சோதனை போடுவது.*

682. ஆஜர் ஜாமீன் வாங்கும்படி உத்தரவு செய்யப்பட்டிராத வாறண்டைக்கொண்டு யாதொரு போலீசு உத்தியோகஸ்தன் ஆளைப்பிடித்தாலும், ஆஜர் ஜாமீன் வாங்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிற வாறண்டைக்கொண்டு யாதொரு போலீசு உத்தியோகஸ்தன் ஆளைப்பிடித்தாலும், ஆஜர் ஜாமீன் வாங்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிற வாறண்டைக்கொண்டு யாதொரு போலீசு உத்தியோகஸ்தன் ஆளைப்பிடித்தபின்பு பிடிபட்டவன் ஆஜர் ஜாமீன் கொடுக்கமாட்டாவிட்டாலும்,

வாறண்டில்லாமலாவது, வாறண்டைக்கொண்டு சர்க்கார்மனிதனல்லாத யாவனொருவனாவது ஆளைப்பிடித்து அவனிடத்தில் சட்டப்படி ஆஜர் ஜாமீன் ஏற்றுக்கொள்ளக்கூடாததாயிருந்தாலும், அவன் ஆஜர் ஜாமீன் கொடுக்கமாட்டாவிட்டாலும்,

ஆளைப்பிடிக்கிற உத்தியோகஸ்தனாவது, சர்க்கார் மனிதனல்லாத யாவனொருவன் ஆளைப்பிடித்திருந்தால் பிடிபட்ட நபரை யாரிடத்தில் ஒப்பிக்கிறானோ அந்தபோலீசு உத்தியோகஸ்தனாவது அப்படிப்பட்டவனைச் சோதனைபோட்டு, அவசியமான உடுப்புதவிர அவனிடத்தில் அகப்படுகிற மற்றச் சகல

வஸ்துக்களையும் பத்திரமான காவலில் வைத்திருவைக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-51.)

*ஸ்திரீகளைச் சோதனை போடுகிற விதம்.*

683. யாதொரு ஸ்திரீயை சோதனை போடுவிக்கவேணுமானால், எவ்வளவேனும் மானத்திற்கு பங்கம்வராமல் அவளை வேறொரு ஸ்திரீயைக்கொண்டு சோதனை போடவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-52.)

*தீங்கு உண்டுபண்ணத்தக்க ஆயுதங்களைக் கைப்பற்ற அதிகாரம்.*

684. இந்தச் சட்டப்படி ஆளைப்பிடிக்கிற உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது பிடிபட்டவன் தன்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிற தீங்கு உண்டுபண்ணத்தக்க யாதொரு ஆயுதத்தை அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளலாம். அப்படி எடுத்துக்கொண்ட சகல ஆயுதங்களையும் ஆளைப்பிடித்த உத்தியோகஸ்தனுகிலும் மற்றவனுகிலும் பிடிபட்டவனை யாருக்கு முன்பாகக் கொண்டுவரவேணுமென்று இந்த சட்டத்தில் உத்தரவு செய்திருக்கிறதோ அப்படிப்பட்ட கோர்ட்டாரிடத்திலாவது உத்தியோகஸ்தரிடத்திலாவது ஒப்பிக்கவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-53.)

B.—வாறண்டில்லாமல் பிடிப்பது.

*இன்னபடிக்கானால் பொலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கலாம்.*

685. யாதொரு போலீசு உத்தியோகஸ்தனானவன் மாஜிஸ்திரேட்டினுடைய உத்தரவில்லாமலும் வாறண்டில்லாமலும்—

முதலாவது:—பிடிக்கக்கூடிய யாதொரு குற்றத்தில் எவன் சம்பந்தப்பட்டிருக்கிறானோ, அல்லது அப்படி சம்பந்தப்பட்டிருப்பதாக எவன்பேரில் நியாயமான பிரியாது செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது நம்பத்தக்க சங்கதி தெரிந்திருக்கிறதோ அல்லது நியாயமாய் அனுமானமுண்டாயிருக்கிறதோ அப்படிப்பட்டவனையும்;

இரண்டாவது:—கன்னமிடுவதற்கான யாதொரு ஆயுதத்தை எவனாவது நியாயமான முகாந்தரமில்லாமல் வைத்துக்கொண்டிருந்தால் அப்படிப்பட்டவனையும் பிடிக்கலாம். அப்படி வைத்துக்கொண்டிருக்கிற பட்சத்தில் அதற்கு நியாயமான முகாந்தரமுண்டென்று ருஜுப்படுத்தும் கடமை அவனுடையதாகும்;

மூன்றாவது:—இந்தச் சட்டத்தின்படிக்காவது பிரதேச கவர்ன்மெண்டாருடைய உத்தரவின்படிக்காவது குற்றவாளியென்று விளம்பரஞ்செய்யப்பட்டிருக்கிறவனையும்;

நான்காவது:—திருட்டுச் சொத்தென்று நியாயமாய் அனுமானிக்கும்படியான யாதொரு சொத்து ஒருவனிடத்தில் அகப்பட்டு, அப்படிப்பட்ட சொத்து விஷயமாய் அவன் குற்றஞ்செய்திருப்பதாக நியாயமாய் அனுமானிப்பதற்கு இடமிருந்தால் அப்படிப்பட்டவனையும்;

ஐந்தாவது:—போலீசு உத்தியோகஸ்தன் தன் அலுவலை நடத்திக்கொண்டிருக்கையில் அவனைத் தடுக்கிறவனையும், நியாயமான காவலிலிருந்து தப்பித்துக்கொண்டு போகிறவனையும், தப்பித்துக்கொண்டுபோக எத்தனப்படுகிறவனையும்;

ஆறாவது:—மகாராஜா அவர்களுடைய ராணுவத்திலிருந்தாவது கப்பற்சேனையிலிருந்தாவது ஓடிவந்து விட்டவனென்றுகிலும், மகாராஜா அவர்களுடைய இந்தியன் மெரீன்ஸெர்விஸைச்சேர்ந்து சட்டத்துக்கு விரோதமாய் அந்த ஸெர்விஸை விட்டு வந்திருக்கிறவனென்றுகிலும் நியாயமாய் அனுமானிக்கப்பட்டவனையும்,

ஏழாவது—ப்ரிட்டிஷ் இந்தியாவில் செய்யப்பட்டிருந்தால் குற்றமாகத் தண்டிக்கப்படத்தக்கதும், ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியே யாதொரு இடத்தில் செய்யப்பட்டிருக்கிறதுமான யாதொரு காரியத்தில் சம்மந்தப்பட்டிருந்த காரணத்தினாலாவது, சம்மந்தப்பட்டிருந்ததாக நியாயமான பிராதுசெய்யப்பட்டிருக்கிற அல்லது நம்பத்தகுந்த சங்கதி தெரியவந்திருக்கிற அல்லது நியாயமாய் அனுமானம் உண்டாயிருக்கிற காரணத்தினாலாவது, குற்றவாளிகளைப் பிடித்து ஒப்பிப்பதைக்குறித்த யாதொரு சட்டத்தின்படிக்கோ ஓடிப்போகும் குற்றவாளிகளைக்குறித்த 1881-ம் வருஷத்து ஆக்ட்டின்படிக்கோ வேறு எதன்படிக்கோ ப்ரிட்டிஷ் இந்தியாவில் பிடிக்கப்படவேண்டியவனுகவாகிலும் காவலில் மறியல் செய்யப்படவேண்டியவனுகவாகிலுமிருக்கிற யாதொரு நபரையும்;



எட்டாவது:—565-வது பிரிவின் (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு விதிக்கு விரோதமாய் நடக்கிற விடுதலையான யாதொரு கைதியையும், பிடிக்கலாம்.

(2) கல்கத்தா, பொம்பாய் இந்தப்பட்டணங்களிலுள்ள போலீஸாருக்கும் இந்தப்பிரிவு சம்மந்தப்படுகிறது. (கி. பு. கோடு, பிரிவு-54.)

*ஊர்ச்சுற்றிகள் வழக்கமாய்க் கொள்ளையடிக்கிறவர்கள் முதலானவர்களைப் பிடிப்பது.*

686. (1) யாதொரு போலீசு ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனவன்.—

(a) அப்படிப்பட்ட ஸ்டேஷன் சரகத்துக்குள் பிடிக்கக்கூடிய யாதொரு குற்றத்தைச் செய்யும்பொருட்டு எவனாவது தானிருப்பதை மறைக்கும்படி ஜாக்கிரதைப்படுகிறானென்று நம்புவதற்கு முகாந்தரமிருக்கிற சங்கதிகளிலே, அப்படி ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளுவதாகக் காணப்படுகிறவனெவனையாவது ;

(b) அந்த ஸ்டேஷன் சரகத்துக்குள் ஜீவனத்துக்கு ஐவேஜில்லாதவனாய் காணப்படுகிறவனையாவது, தன்னைக் குறித்து திருப்திகரமாய் சங்கதி தெரிவிக்கமாட்டாதவனையாவது;

(c) வழக்கமாய் கொள்ளையடிக்கிறவனென்றுகிலும், கன்னமிடுகிறவனென்றுகிலும், திருடுகிறவனென்றுகிலும், திருட்டுச்சொத்தென்று தெரிந்திருந்து அதை வழக்கமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறவனென்றுகிலும் பேர்போனவனையாவது, வழக்கமாய் மிரட்டி வாங்குகிறவனென்றுகிலும் மிரட்டிவாங்கும்பொருட்டு ஜனங்களைத் துன்பஞ்செய்வதாக வழக்கமாய் பயப்படுத்துகிறவனென்றுகிலும் பயப்படுத்த எத்தனப்படுகிறவனென்றுகிலும் பேர்ப்போனவனையாவது,

அப்பிரகாரமே பிடிக்கலாம் அல்லது பிடிப்பிக்கலாம்.

(2) கல்கத்தா, பம்பாய் இந்தப்பட்டணங்களிலுள்ள போலீஸாருக்குங்கூட இந்தப்பிரிவு பிரயோகப்படுகிறது. (கி. பு. கோடு, பிரிவு-55,)

*வாறண்டில்லாமல் ஆளைப் பிடிக்கும்படி பொலீஸ் உத்தியோகஸ்தன் தன் கீழ் உத்*

687. (1) போலீசுஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனாவது, எவனை வாறண்டில்லாமல் சட்டப்படி பிடிக்கலாமோ அப்படிப்பட்டவனை (தனக்கெதிரிலில்லாமல் வேறே விதமாய்) வாறண்டில்லாமல் பிடிக்கும்படி தனக்குக் கீழ்ப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தனுக்கு உத்தரவு செய்தால்,

உத்தியோகஸ்தனுக்கு உத்தரவு பண்ணினால் இன்ன செய்வது.

ஆளைப்பிடிக்கவேண்டிய உத்தியோகஸ்தனுக்கு பிடிக்கவேண்டிய நபரையும் எதற்காகப் பிடிக்கவேண்டியதோ அந்த குற்றத்தையும் அல்லது இதர காரணத்தையுங் கண்டெழுதி, உத்தரவு கொடுக்கவேண்டியது.

(2) கல்கத்தா, பம்பாய், இந்தப்பட்டணங்களிலுள்ள போலீஸாருக்குங்கூட இந்தப்பிரிவு பிரயோகப்படுகிறது. (கி. பு. கோடு, பிரிவு-56.)

பெயரையும் இருப்பிடத்தையும் சொல்ல நிராகரிப்பது.

688. (1) யாதொரு போலீசு உத்தியோகஸ்தனுக்கு எதிரில் பிடிக்கக்கூடாத குற்றஞ் செய்திருக்கிற அல்லது செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிற எவனாவது அந்தப் போலீசு உத்தியோகஸ்தன் கேட்பதின்பேரில் தன்னுடைய பெயரையும் இருப்பிடத்தையும் சொல்லமாட்டேனென்றாலும், பொய்யென்று நம்புவதற்கு அந்த உத்தியோகஸ்தனுக்கு ஏதுவிருக்கிற பெயரையாவது இருப்பிடத்தையாவது சொன்னாலும், அவனுடைய பெயரையாகிலும் இருப்பிடத்தையாகிலும் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளுவதற்காக அவனை அந்த உத்தியோகஸ்தன் மறியல் செய்துவைக்கலாம்.

(2) அவனுடைய யதார்த்தமான பெயரும் இருப்பிடமும் தெரிந்துகொள்ளப்பட்டால், மாஜிஸ்திரேட்டுக்குமுன் வரும்படி உத்தரவு செய்யப்படுகிறபக்ஷத்தில் அவன் அப்படியே வந்து ஆஜராவதாக ஜாமீன்தார்களுடனாவது அவர்களில்லாமலாவது முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதின்பேரில் அவனை விட்டுவிடவேண்டியது.

ஆனால், அவன் பிரிட்டிஷ் இந்தியாவில் வசிக்கிறவனாயிராவிட்டால், பிரிட்டிஷ் இந்தியாவில் வசிக்கிற ஒரு ஜாமீன்தாரனையாவது பல ஜாமீன்தாரர்களைக்கொண்டு அந்த முச்சிலிக்காவை உறுதிப்படுத்தவேண்டும்.

(3) மறியல்செய்த 24-மணிநேரத்திற்குள் அவனுடைய யதார்த்தமான பெயரும் இருப்பிடமும் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளப்படாவிட்டாலும், அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கத்தவறினாலும், ஜாமீன்தாரர்கள் வேண்டியதென்று உத்தரவு செய்யும்பக்ஷத்தில் போதுமான ஜாமீன்தாரர்களைச் சவதரித்துக்கொடுக்கத்தவறினாலும், அவனை அதிகாரவரம்புடைய அதிக சமீபத்திலுள்ள மாஜிஸ்திரேட்டினிடத்திற்கு உடனே அனுப்பவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-57.)

குற்றவாளிகளை மற்ற அதிகார எல்லைகளுக்குள் தொடர்ந்து செல்லலாம்.

689. இந்த அத்தியாயத்தின்படி எவனைப்பிடிக்க போலீசு உத்தியோகஸ்தனுக்கு அதிகாரமிருக்கிறதோ அப்படிப்பட்டவனை வாறண்டில்லாமல் பிடிக்கும்பொருட்டு, அந்த போலீசு உத்தியோகஸ்தன் பிரிட்டிஷ் இந்தியாவிலே எந்த இடத்திலாவது அப்படிப்பட்டவனைத் தொடர்ந்துபோகலாம். (கி. பு. கோடு, பிரிவு-58.)

சர்க்கார் மனிதரல்லாதவர்கள் பிடிப்பது.

690. (1) சர்க்கார் மனிதனல்லாதவனெவனாவது ஜாமீன் வாங்கக்கூடாததும் பிடிக்கக்கூடியதுமான குற்றத்தை வேறொருவன் செய்யக்கண்டால் அப்படிப்பட்டவனையாவது, குற்றஞ்செய்தவனென்று விளம்பரஞ் செய்யப்பட்டிருப்பவனையாவது பிடிக்கலாம்;

மேலும் அனாவசியமான ஆலசியமில்லாமல், அப்படி பிடிக்கப்பட்டவனை வனையாவது போலீசு உத்தியோகஸ்தனிடத்தில் ஒப்பிக்கவேணும்; போலீசு உத்தியோகஸ்தன் ஆஜரில்லாவிட்டால், அப்படிப்பட்டவனை சமீபத்திலிருக்கிற போலீசு ஸ்டேஷனுக்கு கொண்டுபோகவேண்டியது.

(2) அப்படிப்பட்டவனை 54-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படியானவனென்று நம்புவதற்கு ஏதுவிருந்தால், போலீசு உத்தியோகஸ்தன் அவனை மறுபடி பிடிக்கவேண்டியது.



(3) பிடிக்கக்கூடாத குற்றத்தை அவன் செய்திருக்கிறானென்று நம்புவதற்கு ஏதுவிருந்து, யாதொரு போலீசு உத்தியோகஸ்தன் கேட்பதின்பேரில் அவன் தன்னுடைய பெயரையும் இருப்பிடத்தையும் சொல்லமாட்டேனென்றாலும், பொய்யென்று நம்புவதற்கு அந்த உத்தியோகஸ்தனுக்கு ஏதுவிருக்கிற பெயரையாவது இருப்பிடத்தையாவது சொன்னாலும், அப்படிப்பட்டவன் விஷயத்தில் 57-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடத்தவேண்டியது. அவன் யாதொரு குற்றஞ் செய்திருக்கிறானென்று நம்புவதற்கு ஏதுவில்லாதிருந்தால் அவனை உடனே விட்டுவிடவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-59.)

பிடிக்கப்பட்டவனை மாஜிஸ்திரேட்டுக்கு முன்பாகவாவது போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு முன்பாகவாவது கொண்டுபோவது.

691. வாறண்டில்லாமல் எவனையாவது போலீசு உத்தியோகஸ்தன் பிடித்தால், அவன் அந்தக்கேசை விசாரிக்க அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டினிடத்திற்காவது போலீசு ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனிடத்திற்காவது, ஆஜர் ஜாமீன் வாங்குவதைக்குறித்து இதில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு வீணான ஆலசியஞ்செய்யாமல், பிடிக்கப்பட்டவனைக் கொண்டுபோகவேண்டியது அல்லது அனுப்பவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-60.)

பிடிக்கப்பட்டவனை இருபத்திநான்கு மணிநேரத்திற்கதிகமாக மறியல் செய்துவைத்திருக்கக்கூடாது.

692. போலீசு உத்தியோகஸ்தனானவன் வாறண்டில்லாமல் பிடிக்கப்பட்டவனை அந்த விஷயத்தைச்சேர்ந்த எல்லா சங்கதியைப்பற்றியும் எவ்வளவு நேரம் காவலில்வைப்பது நியாயமாயிருக்கிறதோ அதற்கதிகமாக வைத்திருக்கக்கூடாது; 167-வது பிரிவின்படி யாதொரு மாஜிஸ்திரேட்டினுடைய பிரத்தியேகமான உத்தரவில்லாமல் அப்படி காவலில் வைத்திருக்கிற காலமானது பிடிக்கப்பட்ட இடத்திலிருந்து மாஜிஸ்திரேட்டினுடைய கோர்ட்டுக்குப் போவதற்கு வேண்டியகாலந்தவிர 24-மணி நேரத்திற்கதிகப்படக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-61.)

பிடிப்பதை போலீசார் ரிப்போர்ட் பண்ணுவது.

693. போலீசு ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் ஸ்டேஷன் சரகத்துக்குள்ளாக வாறண்டில்லாமல் பிடிக்கப்பட்டவர்களிடத்திலிருந்து ஆஜர் ஜாமீன் எற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் மற்றப்படியாயிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் சகலமானவர்களுடைய விஷயங்களை டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுக்காகிலும், அவர் உத்தரவு செய்தால் ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுக்காகிலும் ரிபோர்ட்டு பண்ணவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-62.)

பிடிக்கப்பட்டவனை விட்டுவிடுவது.

694. போலீசு உத்தியோகஸ்தனால் பிடிக்கப்பட்டவனை, அவனிடத்திலிருந்து முச்சிலிக்கா வாங்காமலாகிலும், ஆஜர் ஜாமீன் வாங்காமலாகிலும் பிரத்தியேகமாய் மாஜிஸ்திரேட்டினுடைய உத்தரவில்லாமலாகிலும், விட்டுவிடக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-63.)

தப்பித்துக்கொண்டு ஓடிப்போனால் பின்தொடர்ந்து பிடிக்க அதிகாரம்.

695. எவனாவது நியாயமான காவலிலிருக்கையில் தப்பித்துக்கொண்டோடிப்போனாலும் தப்புவிக்கப்பட்டாலும், அவன் யாருடைய காவலிலிருந்து தப்பித்துக்கொண்டானோ அல்லது தப்புவிக்கப்பட்டானோ அவனை பிரிட்டிஷ் இந்தியாவில் எந்த இடத்திலாவது அவனை உடனே பின் தொடர்ந்து பிடிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-66.)

696. அறுபத்தாறாவது பிரிவின்படி பிடிக்கிறவன் வாறண்டைக் கொண்டு பிரவர்த்திக்காமலும் பிடிப்பதற்கு அதிகாரமுடைய போலீசு உத்தி

யோகஸ்தனல்லாதவனுயிருந்தபோதிலும், 47, 48, 49-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் 66-வது பிரிவின்படி பிடிக்கிற விஷயங்களுக்குச் சம்பந்தப்பட வேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-67.)

47, 48, 49-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் 66-வது பிரிவின்படி பிடிப்பதற்கு பிரயோசனப்படுவது.

## குற்றங்களைச் செய்யவொட்டாமல் தடுப்பதற்கு போலீசார் பிரவேசிப்பது.

பிடிக்கக்கூடிய குற்றங்களைப் போலீஸார் தடுப்பது.

697. பிடிக்கக்கூடிய யாதொரு குற்றத்தைச் செய்யவொட்டாமல் தடுக்கும்பொருட்டு பிரதி போலீசு உத்தியோகஸ்தனும் பிரவேசிக்கலாம். அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்வதைத் தடுப்பதற்கு தன்னாலான முயற்சியும் செய்யவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-149.)

அப்படிப்பட்ட குற்றங்கள் செய்ய எத்தனிக்கப்படுவதை அறிக்கை செய்வது.

698. பிரதி போலீசு உத்தியோகஸ்தனும் பிடிக்கக்கூடிய குற்றமேதாவது செய்ய எத்தனிக்கப்படுவதைக்குறித்து தனக்குத் தெரியவருகிற சங்கதியைத்தான் எவனுக்குக்கீழ்ப்பட்டிருக்கிறானோ அந்தப்போலீசு உத்தியோகஸ்தனுக்கும், அப்படிப்பட்ட யாதொரு குற்றஞ்செய்வதைத் தடுப்பதாவது விசாரிப்பதாவது எவனுடைய கடமையாயிருக்கிறதோ அந்த வேறே யாதொரு உத்தியோகஸ்தனுக்கும் அறிக்கை பண்ணவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு 150.)

அப்படிப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பொருட்டு ஆளைப்பிடிப்பது.

699. பிடிக்கக்கூடிய குற்றமேதாவது செய்ய எத்தனிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ளுகிற போலீசு உத்தியோகஸ்தனுக்கு-அந்தக்குற்றத்தை நடக்கவொட்டாமல் வேறேவகையாய்த் தடுப்பது கூடாமையானதென்று தனக்குத்தோற்றினால், அப்படிச்செய்ய எத்தனப்படுகிறவனை மாஜிஸ்திரேட்டினுடைய உத்தரவில்லாமலும் வாறண்டில்லாமலும் பிடிக்கலாம். (கி. பி. கோடு, பிரிவு-151.)

பொதுவான சொத்துக்குக் கெடுதி செய்யவொட்டாமல் தடுப்பது

700. யாதொரு பொதுவான ஸ்தாவர ஜங்கம சொத்துக்குக் கெடுதி செய்ய எத்தனஞ் செய்யப்படுவதை போலீசு உத்தியோகஸ்தன் பார்த்தால் அதைத்தடுப்பதற்கும், யாதொரு பொதுவான சில அடையாளத்தையாவது போயாக்கட்டையையாவது ...ல்செல்லுவதற்கு உபயோகமான வேறே அடையாளத்தையாவது எடுத்துப் போடவொட்டாமலும் அதுகளுக்குக்கெடுதி செய்யவொட்டாமலும் தடுப்பதற்கும், வேறொருவருடைய உத்தரவில்லாமல் அவன் தானேபிரவேசிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-152.)

குண்டு-படி முதலிய அளவைகளைப் பார்வையிடுவது.

701. (1) யாதொரு போலீசு ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன் அந்தஸ்டேஷன் சரகத்துக்குள் எந்த இடத்திலாகிலும்நிறுப்பதற்காகக் கள்ள குண்டுகளாவது அளப்பதற்காகக் கள்ளப்படி மரக்கால் முதலானதுகளாவது நிறுப்பதற்காகக் கள்ள கருவிகளாவது இருக்கிறதென்று நம்புவதற்கு தனக்கு ஏதுவிருந்தால், அவ்விடத்திலே வைக்கப்பட்டாகிலும் உபயோகிக்கப்பட்டாகிலுமிருக்கிற நிறுப்பதற்கான குண்டுகளையாவது அளப்பதற்கான படி முதலானதுகளையாவது நிறுப்பதற்கான கருவிகளையாவது பார்வையிடும் பொருட்டாகிலும் சோதனை போடும்பொருட்டாகிலும் அப்படிப்பட்ட யாதோரிடத்தில் வாறண்டில்லாமலும் நுழையலாம்.

(2) அந்த இடத்திலே கள்ளகுண்டு-படி அல்லது நிறுப்பதற்கான கருவிகளை அவன் கண்டுபிடித்தால், அவன் அதுகளைக் கைப்பற்றலாம். அப்படிச்செய்தவுடனே அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டினிடத்தில்



அப்படி கைப்பற்றினதைக்குறித்து அறிக்கைசெய்யவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-153.)

## போலீஸாருக்கு சங்கதிதெரிவிப்பதும் முதல்விசாரணை செய்வதற்கு அவர்களுக்குண்டான அதிகாரமும்.

பிடிக்கக்கூடிய கேசுகளில் சங்கதி தெரிவிப்பது.

702. பிடிக்கக்கூடிய யாதொருகுற்றஞ் செய்யப்பட்டதைக்குறித்து போலீஸ் ஸ்டேஷன்தலைமை உத்தியோகஸ்தனிடத்திலே வாய்மொழியாய் சங்கதி தெரிவிக்கப்பட்டால், அப்படிப்பட்ட பிரதி சங்கதியையும் அந்த உத்தியோகஸ்தனாவது அவன் சொல்லுகிறபடியாவது எழுதவேண்டியது மல்லாமல், அதை சங்கதி தெரிவித்தவனுக்குப் படித்துக்காட்டவும் வேண்டியது; அப்படிப்பட்ட பிரதி சங்கதியும் எழுத்துமூலமாய்த் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் மேற்சொல்லியபடி எழுதப்பட்டிருந்தாலும், அதைத் தெரிவிக்கிறவன் அதில் கையெழுத்து பண்ணவேண்டியது. அதின் சாராம்சத்தை-இதுவிஷயத்தில் அவ்விஷத்திய கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படுகிற நமூனாப்பிரகாரம் அந்த உத்தியோகஸ்தன்வைக்கிற புஸ்தகத்தில் எழுதிக்கொள்ளவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-154.)

பிடிக்கக்கூடாதகேசுகளில் சங்கதி தெரிவிப்பது.

703. (1) பிடிக்கக்கூடாத குற்றமானது போலீஸ் ஸ்டேஷன் சரகத்துக்குள் செய்யப்பட்டதைக்குறித்து அந்தஸ்டேஷன்தலைமை உத்தியோகஸ்தனிடத்திலே சங்கதி தெரிவிக்கப்பட்டால், அந்த உத்தியோகஸ்தன் அந்தச்சங்கதியின் சாராம்சத்தை மேற்சொல்லியபடி வைக்கப்படுகிற புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு அப்படி சங்கதி தெரிவித்தவனை மாஜிஸ்திரேட்டினிடத்தில் போய் பிராது கொடுத்துக்கொள்ளும்படி போகச்சொல்லவேண்டியது.

(2) பிடிக்கக்கூடாத யாதொரு கேசைப் பரிசீலனை செய்யவாவது பரிசீலனைக்குக் கமிட்டுப்பண்ணவாவது அதிகாரமுடைய முதல்வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டினுடைய உத்தரவில்லாமலாகிலும் யாதொரு ராஜதானி மாஜிஸ்திரேட்டினுடைய உத்தரவில்லாமலாகிலும், எந்தப் போலீஸ் உத்தியோகஸ்தனும் அப்படிப்பட்ட கேசை முதல் விசாரணை செய்யலாகாது.

(3) அப்படிப்பட்ட உத்தரவு பெற்றுக்கொண்டதின்பேரில் யாதொருபோலீஸ் உத்தியோகஸ்தனானவன் - (வாறண்டில்லாமல் ஆளைப்பிடிக்கும்படியான அதிகாரந்தவிர) பிடிக்கக்கூடிய கேசில் போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் செலுத்தும்படியான அதிகாரங்களை இந்தமுதல் விசாரணை விஷயத்தில் செலுத்தலாம். (கி. பு. கோடு, பிரிவு-155.)

பிடிக்கக்கூடிய கேசுகளை முதல் விசாரணை செய்வது.

704. (1) போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன்-எப்படிப்பட்டகேசை அந்த ஸ்டேஷன் சரகத்துக்குள்ளடங்கிய பிரதேச விஸ்தீரணத்தில் அதிகாரமுடைத்தாயிருக்கிற கோர்ட்டார் விசாரணையாவது பரிசீலனையாவது செய்யும் இடத்தைக்குறித்து கி. பு. கோடின் 15-ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி விசாரணைசெய்யவாகிலும் பரிசீலனை பண்ணவாகிலும் அதிகாரமுடையவர்களாவார்களோ அப்படிப்பட்ட பிடிக்கக்கூடிய யாதொருகேசை மாஜிஸ்திரேட்டினுடைய உத்தரவில்லாமல் முதல்விசாரணை செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொருகேசில் போலீஸ் உத்தியோகஸ்தன் நடத்துகிற நடவடிக்கையானது-அந்தக்கேசை முதல்விசாரணைசெய்ய இந்த

பிரிவின்படி அந்த உத்தியோகஸ்தனுக்கு அதிகாரமுண்டாயிருக்கவில்லையென்கிற ஏதுவின்பேரில் எவ்விதத்திலும் ஆட்சேபிக்கப்படாது.

(3) 190-வது பிரிவின்படி அதிகாரம் கொடுக்கப்பெற்றுள்ள எந்த மாஜிஸ்திரேட்டாவது மேலே சொல்லியிருக்கிற பிரகாரம் முதல்விசாரணை செய்யும்படி உத்தரவுபண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு-156.)

பிடிக்கக்கூடிய குற்றம் நடந்ததாக அனுமானமுண்டானால் நடவடிக்கை.

705. (1) போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் 156-வது பிரிவின்படி முதல்விசாரணைசெய்ய அதிகாரமுடைத்தாயிருக்கிற யாதொரு குற்றஞ்செய்யப்பட்டதென்று அறிக்கையின்பேரிலாவது வேறேவிதமாயாவது அவன் அனுமானிப்பதற்கு ஏதுவிருந்தால், அவன் போலீஸ் ரிபோர்ட்டின் பேரில் அந்த குற்றத்தை விசாரணைசெய்ய அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டுக்கு அதைக்குறித்து உடனே ரிபோர்ட்டு அனுப்பிவிட்டு, அந்த குற்றத்தைச் சேர்ந்த சங்கதிகளையும் விவரங்களையும் முதல்விசாரணைசெய்யவும், குற்றவாளி இன்னானென்று தெரிந்துகொண்டு அவனைப்பிடிப்பதற்கு வேண்டிய வகைகளைத்தேடவும், அவ்விடத்திற்கு நேராய்த் தானாவது [illegible]யாவது அல்லது தனக்குக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களில் ஒருவனை அனுப்பவாவது வேண்டியது : ஆனால் :—

(a) இன்னான் அப்படிப்பட்ட குற்றஞ்செய்தானென்று பேரைச் சொல்லி அவன்பேரில் சங்கதி தெரிவிக்கப்படாமல், அந்தகுற்றம் பலமானதாயிராதபட்சத்தில், போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் அவ்விடத்திலே முதல்விசாரணை செய்வதற்கு நேராய்ப் போகவேண்டியதுமில்லை தனக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தனை அனுப்பவேண்டியதுமில்லை.

(b) முதல்விசாரணைசெய்யத் தொடங்குவதற்குப் போதுமான ஏதுவில்லையென்று போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்குத் தோற்றினால், அவன் அந்த குற்றத்தைக்குறித்து முதல்விசாரணை செய்ய வேண்டியதில்லை.

(2) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையின் (a), (b) குறிப்பிட்ட வகுப்புகளில் சொல்லியிருக்கிற விஷயங்கள் ஒவ்வொன்றிலும், அந்தப்பிரிவில் உத்தரவுசெய்கிறபடி பூர்த்தியாய் அநுஷ்டிக்காமைக்காக தனக்குண்டான ஏதுக்களை போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் மேற்கண்ட தன்னுடைய ரிபோர்ட்டில் எழுதவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-157.)

706. (1) 157-வது பிரிவின்படி மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பப்படுகிற பிரதி ரிபோர்ட்டையும், அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவினாலே அந்த விஷயத்தில் நேமிக்கிற மேலான போலீஸ் உத்தியோகஸ்தன்மூலமாய் அனுப்பவேணுமென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்தால் அந்தப்பிரகாரமே அனுப்பவேண்டியது.

(2) அந்த மேலான உத்தியோகஸ்தனானவன் தனக்கு யுக்தமாகத்தோற்றுகிற உத்தரவுகளை போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்குகொடுக்கலாம், மேலும் அப்படிப்பட்ட உத்தரவுகளை அந்த ரிபோர்ட்டின்பேரில் எழுதின பின்பு, அதை மாஜிஸ்திரேட்டுக்கு ஆலஸியமில்லாமல் அனுப்பவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-158.)



முதல்விசாரணையாவது பிரதம விசாரணையாவது செய்ய அதிகாரம்.

707. அப்படிப்பட்ட ரிபோர்ட்டு வந்ததின்பேரில் அந்த மாஜிஸ்திரேட்டானவர் முதல் விசாரணை செய்யும்படி உத்தரவு பண்ணலாம். தனக்கு யுக்தமாகத்தோற்றினால், இந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கிறவிதமாய் அந்தக் கேசைக்குறித்து பிரதம விசாரணை ; நடத்தவாவது, மற்றப்படி அதை பைசல் செய்யவாவது உடனே ஆரம்பிக்கலாம் ; அல்லது தனக்குக் கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கு அப்படி உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-159.)

708. இந்த அத்தியாயத்தின்படி முதல்விசாரணைசெய்கிற யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன்—இந்தக் கேசைச்சேர்ந்த சங்கதிகள் எவனுக்குத் தெரிந்திருக்கிறதென்று அறிக்கையினாலாவது வேறே விதத்தினாலாவது தோற்றுகிறதோ அப்படிப்பட்டவன் தன்னுடைய ஸ்டேஷன் அல்லது அடுத்த யாதொரு ஸ்டேஷன் சரகத்துக்குளிருப்பானாகில், அவனுக்கு எழுத்து மூலமாய் உத்தரவு அனுப்பி தனக்குமுன் ஆஜராகும்படி உத்தரவுசெய்யலாம் ; அப்[illegible]வன் அந்த உத்தரவின்படி ஆஜராகவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-160.)

போலீசார் சாட்சிகளை விசாரணை செய்வது.

709. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணைசெய்கிற யாதொரு போலீச உத்தியோகஸ்தன் அந்தக் கேசைச்சேர்ந்த சங்கதிகளும் விவரங்களும் எவனுக்குத் [illegible]ந்திருக்குமென்று நினைக்கப்படுகிறதோ அவனை வாய்மொழியாக விசாரிக்கலாம்.

அப்படிப்பட்டவன் எந்தக் கேழ்விகளுக்கு ஜவாபுச் சொன்னால் குற்றஞ் சாட்டப்படுவதற்காவது தண்டனைக்காவது பறிமுதலுக்காவது தான் உள்ளாகலாமோ அப்படிப்பட்ட கேழ்விகள் [illegible], அந்த உத்தியோகஸ்தன் அந்தக் கேசைக்குறித்து தன்னைக் கேட்கிற மற்றக் கேழ்விகளுக்கெல்லாம் சரியான ஜவாபு சொல்லவேண்டியவனாவான். (கி. பு. கோடு, பிரிவு 161.)

710. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல்விசாரணை நடத்துகையில், மரணகாலத்திலே சொல்லப்பட்ட யாதொரு வாக்குமூலந்தவிர போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு யாவனொருவனால் சொல்லப்பட்ட வேறே எந்த சங்கதியாவது எழுதிவைக்கப்பட்டால், அந்தச் சங்கதியைச்சொல்லுகிறவன் அதில் கையெழுத்து பண்ணவுங்கூடாது, அதைகுற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு விரோதமாய் சாட்சியமாக உபயோகிக்கவுங் கூடாது.

ஆனால் யார் சொன்ன சங்கதி மேலே சொல்லியபடி எழுதிக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்தச்சாட்சியைப் பிராது நடத்துவதற்காக [illegible]கப்படுங் காலத்தில், கோர்ட்டார் குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய வேண்டுகோளின் மேல் அப்படி எழுதவைகைப்பட்டதைப் பார்வையிடவேண்டும்; பிறகு கோர்ட்டார் ந்யாயம் தவறாமல் நடக்கும்பொருட்டு தங்களுக்கு யுக்தமென்று தோன்றினால் அதன் நகல் ஒன்றைக குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குக் கொடுக்கும்படி உத்தரவுசெய்யலாம்: மேலும், 1872-ம் வருஷத்திய இந்துதேசத்துச்சாட்சிய ஆக்ட்டில் ஏற்படுத்தியிருக்கிறபடி அந்த சாட்சி நம்பத்தகாதவனென்று காண்பிப்பதற்காக சங்கதியை உபயோகிக்கலாம்.

இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையும் 1872வருஷத்திய இந்துதேசத்து சாட்சியாக்ட்டு 27-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு பாதகமுண்டு பண்ணுவதாக எண்ணப்படாது. (கி. பு. கோடு, பிரிவு-162.)

சங்கதி தெரிவிக்கும்படி உட்படுத்தக்கூடாது.

711. (1) போலீஸ் உத்தியோகஸ்தனாவது அதிகாரமுடைத்தாயிருக்கிற மற்றவனாவது 1872-ஆம் வருஷத்து இந்துதேசத்து சாட்சியாக்ட்டு 24-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படிக்கு மிரட்டியாவது ஆசைகாட்டியாவது உட்படுத்தக்கூடாது.

(2) ஆனால் இந்த அத்தியாயத்தின்படி முதல்விசாரணை நடத்துகையில், எவனாவது தன் இஷ்டமாய் எதையாகிலும் வெளிப்படுத்தக்கருத்து கொண்டால் அதை வெளிப்படுத்த வொட்டாமல் அவனை போலீஸ் உத்தியோகஸ்தனாவது மற்றவனாவது எச்சரிக்கையினாலாகிலும் வேறெவ்விதத்திலாகிலும் தடுக்கக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-163.)

வாக்குமூலங்களையும் ஒப்புக்கொள்வதையும் ரிகார்ட்பண்ண அதிகாரம்.

712. (1) போலீஸ் உத்தியோகஸ்தனல்லாத யாதொரு மாஜிஸ்திரேட்டானவர் இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணை செய்கையிலாவது, அதற்குப் பின்பு விசாரணை அல்லது பரிசீலனை ஆரம்பமாவதற்கு முன்னமே எப்போதாவது, தன்னிடத்தில் சொல்லுகிற வாக்குமூலத்தையாகிலும் ஒப்புக்கொள்வதையாகிலும் ரிகார்ட்பண்ணலாம்.

(2) சாட்சியத்தை ரிகார்ட்பண்ணுவதைக் குறித்து இதில் பின்னால் சொல்லியிருக்கிற எந்த விதமாய் ரிகார்ட்பண்ணினால் அந்த சங்கதியைப் பற்றின விஷயங்களுக்கு மிகவும் தகுந்ததென்று அவருக்குத் தோற்றுகிறதோ அவ்விதமாய் அந்த வாக்குமூலங்களை ரிகார்ட்பண்ணவேண்டியது. அப்படி ஒப்புக்கொள்வதை 364-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் ரிகார்டு செய்து கையெழுத்துபண்ணவேண்டியது; அதற்குப் பின்பு, அந்தக்கேசை யார் விசாரணை செய்யப்போகிறாரோ, அல்லது பரிசீலனை செய்யப்போகிறாரோ அந்த மாஜிஸ்திரேட்டினிடத்திற்கு அதை அனுப்பவேண்டியது.

(3) அப்படி ஒப்புக்கொண்டவனை விசாரணைசெய்வதின் பேரில், அவன் தன்னிஷ்டமாய் அப்படி ஒப்புக்கொண்டானென்று நம்புவதற்கு ஏதுவிருந்தாலொழிய, அப்படி ஒப்புக்கொள்வதை மாஜிஸ்திரேட்டு ரிகார்டு பண்ணக்கூடாது; அப்படி ஒப்புக்கொள்வதை அவர் ரிகார்டு பண்ணினால், அந்த ரிகார்டினடியிலே பின்னால் வருகிற பொருள்படும்படியாக அவர் யாதாஸ்து எழுதவேண்டியது, அதாவது:—

"இது வலிய ஒப்புக்கொள்ளப்பட்டதென்று நான் நம்புகிறேன். அது என்முன்பாக என்காதாரக்கேட்டு எழுதப்பட்டு, இப்படி ஒப்புக்கொண்டவனுக்கு அது படித்துக்காட்டப்பட்டது; அது சரியானதென்று அவன் ஒத்துக்கொண்டான், அவன் சொன்னசங்கதியை அதில் பூர்த்தியாயும் சரியாயும் எழுதியிருக்கிறது. (கி. பு. கோடு, பிரிவு 164.)

போலீஸ் உத்தியோகஸ்தன் சோதனை போடுவது.

713. (1) போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனாவது முதல்விசாரணை செய்கிற போலீஸ் உத்தியோகஸ்தனாவது முதல் விசாரணை செய்யத் தனக்கு அதிகாரமிருக்கிற யாதொரு குற்றத்தைக் குறித்து முதல் விசாரணை நடத்துவதற்கு யாதொரு தஸ்தாவேஜு முதலிய பொருள் கொண்டுவந்து காட்டப்படுவது அவசியமென்று அபிப்பிராயப்பட்டால், 94-வது பிரிவின்படி எவனுக்கு ஸம்மன் அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோ அல்லது பிறப்பிக்கப்படலாமோ அப்படிப்பட்டவன் ஸம்மனிலாவது உத்தரவிலாவது கண்டிருக்கிறபடி அந்த தஸ்தாவேஜு முதலியபொருளைக் கொண்டு வரமாட்டானென்று நம்புவதற்கு முகாந்தரமிருக்கிற பக்ஷத்திலாகிலும்,



அப்படிப்பட்ட தஸ்தாவேஜு முதலிய பொருள் யாவனொருவனுடைய ஸ்வாதீனத்தில் இருப்பதாகத் தெரியவராத பட்சத்திலாகிலும், அந்த உத்தியோகஸ்தன்தான் எதற்குத் தலைமையாயிருக்கிறானோ அல்லது எதைச்சேர்ந்திருக்கிறானோ அந்த ஸ்டேஷன் சரகத்துக்குளிருக்கிற யாதொரு இடத்திலே அந்தப் பொருளுக்காச் சோதனைபோடலாம் அல்லது சோதனை போடுவிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தன் கூடுமானால் நேரில் சோதனை போடவேண்டியது.

(3) அவன் நேரில் சோதனை போடக்கூடாமையாயிருந்து, சோதனை போடத்தகுந்த வேறே எவனாவது அப்போது ஆஜரிலிராவிட்டால், அவன் தனக்குக்கீழ்ப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தனை சோதனைபோடச் சொல்லலாம், மேலும் எதற்காகச் சோதனைபோடவேண்டியதோ அந்த தஸ்தாவேஜு முதலிய பொருளையும் சோதனைபோடவேண்டிய இடத்தையும் கண்டு உத்தரவு எழுதி அந்தக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தனுக்குக் கொடுக்கவேண்டியது, பின்மேல் அந்தக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தன் அந்த இடத்தில் அப்படிப்பட்ட பொருளைக் குறித்து சோதனைபோடலாம்.

(4) சோதனை வாறண்டுகளைக்குறித்து இந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகள், இந்தப் பிரிவின்படி போடப்பட்ட சோதனைக்குக்கூடியமட்டில் சம்மந்[illegible] வேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-165.)

714. போலீஸ் ஸ்டேஷன் தலைமை [illegible] தன்னுடைய ஸ்டேஷன் சரகத்துக்குள் தான் எந்தவிஷயத்தில் சோதனை போடுவிக்கலாமோ அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தில், அதே டிஸ்திரிக்ட்டிலாவது வேறொரு டிஸ்திரிக்டிலாவது [illegible] வேறொருபோலீசு ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனை யாதொரு இடத்தில் சோதனை போடுவிக்கும்படிக் கேட்டுக்கொள்ளலாம்.

(2) அப்படிக் கேட்டுக்கொள்ளப்படுவதின் பேரில், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தனானவன் 165-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி நடத்த வேண்டியதுமல்லாமல், ஏதாவதுபொருள் அகப்பட்டால் அதை, யார் சொன்னதின்பேரில் சோதனைபோடப்பட்டதோ அந்த உத்தியோகஸ்தனுக்கு அனுப்பவும் வேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-166.)

24-மணிநேரத்திற்குள் முதல் விசாரணை செய்து முடிக்கக்கூடாவிட்டால் நடவடிக்கை.

715. (1) இந்த அத்தியாயத்தின்படி செய்யப்படுகிற முதல் விசாரணையானது 61-வது பிரிவில் சொல்லியிருக்கிற இருபத்துநாலுமணி நேரத்திற்குள்ளாக முடியமாட்டாதென்று தோற்றினால், குற்றஞ் சாட்டப்பட்டதற்குத் தகுந்த ஆதாரமிருக்கிறதென்று நம்புவதற்கு ஏதுவிருக்குமாகில், போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன் இதில் பின்னால் நிர்ணயித்திருக்கிற டையரிப் புஸ்தகத்தில் அந்த கேசைக்குறித்து எழுதியிருக்கிறசங்கதிகளுக்கு நகலை சமயதாருடன் மாஜிஸ்திரேட்டுக்கு உடனே அனுப்பவேண்டியதுமல்லாமல், குற்றஞ்சாட்டப்பட்டவனையும் அந்தமாஜிஸ்திரேட்டினிடத்திற்கு அப்போதே அனுப்பவேண்டியது.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவன் யாரிடத்திற்கு இந்தப் பிரிவின்படி அனுப்பப்படுகிறானோ அந்த மாஜிஸ்திரேட்டானவர், அந்தக்கேசைப் பரிசீலனைசெய்யத் தனக்கு அதிகாரமிருந்தாலும் இல்லாவிட்டாலும், தனக்கு யுக்தமாகத் தோற்றுகிற காவலில் பதினைந்துநாளைக் கதிகப்படாமல் எவ்வளவு

காலத்திற்காவது குற்றஞ் சாட்டப்பட்டவனை வைத்துவைப்பதற்காக அப்போதைக்கப்போது அதிகாரங்கொடுக்கலாம். அந்தக்கேசைப் பரிசீலனை செய்யவாவது பரிசீலனைக்காகக் கமிட்டுபண்ணவாவது அவருக்கு அதிகாரமில்லாதிருந்து, அப்படி பின்னும் காவலில் வைத்துவைப்பது அவசியமென்று அவருக்குத் தோற்றினால், அப்படிப்பட்ட அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டினிடத்திற்கு குற்றஞ் சாட்டப்பட்டவனைக் கொண்டுபோகும்படி அவர் உத்தரவு செய்யலாம்.

(3) போலீசாருடைய காவலில்வைக்க இந்தப் பிரிவின்படி உத்தரவுசெய்கிற மாஜிஸ்திரேட்டானவர் அப்படிச் செய்வதற்கு தனக்குண்டான ஏதுக்களை யெழுதிவைக்கவேண்டியது.

(4) டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டு அல்லது ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுதவிர வேறே யாதொரு மாஜிஸ்திரேட்டு அப்படிப்பட்ட உத்தரவு கொடுத்தால், அவர்-அப்படி கொடுப்பதற்கு தனக்குண்டான காரணங்கள் சகிதமாய் தன்னுடைய உத்தரவுக்கு நகலை, நேராய்த்தான் [illegible] கீழ்ப்பட்டிருக்கிறரோ அந்த மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-167.)

716. கீழ்ப்பட்ட யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் இந்த அத்தியாயத்தின்படி யாதொரு முதல்விசாரணை [illegible], அவன்-அந்தவிசாரணை இன்னபடி முடிந்ததென்று [illegible] ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு ரிபோர்ட்டுபண்ணவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு 168.)

சாட்சியம் குறைவாயிருந்தால் குற்றஞ் சாட்டப்பட்டவனை விட்டுவிடுவது.

717. இந்த அத்தியாயத்தின்படி முதல்விசாரணை செய்வதின்பேரில் போதுமான சாட்சியமாவது அனுசரிப்பதற்கு நியாயமான ஏதுவாவது இல்லாமையினாலே குற்றஞ்சாட்டப்பட்டவனை மாஜிஸ்திரேட்டினிடத்திற்கு அனுப்புவதற்கிடமில்லையென்று போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்குத் தோற்றினால், அப்படி குற்றஞ்சாட்டப்பட்டவன் காவலிலிருக்கிற பட்சத்தில் அவன் போலீஸ் ரிபோர்ட்டின்பேரில் அந்த குற்றத்தை தன் விசாரணையில் வைத்துக்கொண்டு குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பரிசீலனை செய்யவாவது பரிசீலனைக்குக் கமிட்டு பண்ணவாவது அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டுக்குமுன் ஆஜராகும்படி உத்தரவு செய்யப்பட்டால் அந்தக் காலத்தில் ஆஜராவதாக, அந்த உத்தியோகஸ்தன் உத்தரவு செய்கிறபடி ஜாமீன்தாரர்கள் சகிதமாயாகிலும் ஜாமீன்தாரர்களில்லாமலாகிலும், முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதின்பேரில், அவனை அந்த உத்தியோகஸ்தன் விட்டுவிடவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-169.)

718. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணைசெய்வதின்பேரில், மேற்சொல்லியபிரகாரம் போதுமான சாட்சியமாவது நியாயமான ஏதுவாவது இருக்கிறதென்று போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்குத் தோற்றினால், அந்த உத்தியோகஸ்தன் போலீஸ் ரிபோர்ட்டின்பேரில் குற்றத்தைத் தன் விசாரணையில் வைத்துக்கொண்டு குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பரிசீலனை செய்யவாவது பரிசீலனைக்குக் கமிட்டுபண்ணவாவது அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டினிடத்திற்கு அப்படி குற்றஞ்சாட்டப்பட்டவனைக் காவலோடு அனுப்பவேண்டியது; அந்தக் குற்றம் ஜாமீன் வாங்கத்தக்க குற்றமாயிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவனும் ஜாமீன் கொடுக்கச் சக்தியுள்ளவனுயிருந்தால், அந்த மாஜிஸ்திரேட்டுக்குமுன் குறித்த தினத்தில் அவன்



ஆஜராவதாகவும், மற்றப்படி [illegible] செய்யப்படுகிறவரையில் அந்த மாஜிஸ்திரேட்டுக்குமுன் தினந்தோறும் ஆஜராய்க்கொண்டிருப்பதாகவும் அவனிடத்தில் ஜாமீன் வாங்கவேண்டியது.

(2) இந்தப் பிரிவின்படி போலீசு ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் குற்றஞ்சாட்டப்பட்டவனை மாஜிஸ்திரேட்டினிடத்திற்கு அனுப்பினாலும், அந்த மாஜிஸ்திரேட்டுக்குமுன் ஆஜராவதாக அவனிடத்திலே ஜாமீன் வாங்கினாலும், அந்த உத்தியோகஸ்தன் அந்த மாஜிஸ்திரேட்டுக்குமுன் கொண்டுவந்து காட்டவேண்டியதாயிருக்கும்படியான யாதொரு ஆயுதத்தையாவது வேறே வஸ்துவையாவது அவரிடத்திற்கு அனுப்பவேண்டியதுமல்லாமல், குற்றஞ்சாட்டப்பட்டவன்பேரில் கொண்டுவரப்பட்ட பிராது விஷயத்தில் (சங்கதிக்குத்தக்கபடி) முச்சலிக்காவில் குறித்திருக்கிறபிரகாரம் மாஜிஸ்திரேட்டுக்குமுன் ஆஜராகிப்பிராது நடத்துவதாகவாவது சாட்சியஞ்சொல்லுவதாகவாவது முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச்சொல்லி, பிராதுக்காரனாயாராவதிருந்தால் அவனுக்கும், அந்தக்கேசைச்சேர்ந்த சங்கதிகள் தெரிந்திருப்பதாக அந்த உத்தியோகஸ்தனுக்குத் தோற்றுகிறவர்களில் எத்தனைபேர் அவசியமென்று அந்த உத்தியோகஸ்தன் எண்ணுகிறானோ அவர்களுக்கும் உத்தரவு பண்ணவேண்டியது.

(3) அந்த முச்சிலிக்காவில் டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டாவது ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டாவது கண்டெழுதப்பட்டால், அப்படிப்பட்ட கோர்ட்டு என்பது அந்த மாஜிஸ்திரேட்டானவர் அந்தக் கேசை விசாரணைக்காகிலும் பரிசீலனைக்காகிலும் எந்தக் கோர்ட்டுக்கு அனுப்பலாமோ அந்தக்கோர்ட்டென்றும் அர்த்தமாவதாக எண்ணவேண்டியது. ஆனால் அப்படி அனுப்புவதைக்குறித்து அந்த பிராதுக்காரனுக்காவது சாட்சிகளுக்காவது நியாயமான அறிக்கை செய்யவேணும்.

(4) இந்தப் பிரிவின்படி நிர்ணயிக்கப்பட்ட தினமானது, குற்றஞ்சாட்டப்பட்டவனிடத்திலே ஆஜராவதாக ஜாமீன் வாங்கப்பட்டிருந்தால், அவன் என்றைக்கு ஆஜராகவேண்டியதோ அந்நாளாகவாகிலும், காவலோடு அவன் அனுப்பப்படுவதாயிருந்தால், அவன் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் என்றைக்கு வந்து சேரலாமோ அந்த நாளாகவாகிலுமிருக்கவேண்டியது.

(5) எவனுக் கெதிரிலே முச்சிலிக்கா எழுதிக் கொடுக்கப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தன் அதை யெழுதிக்கொடுத்தவர்களில் ஒருவனுக்கு அதற்கு நகலொன்றைக்கொடுத்தபின்பு, அசலை தன்னுடைய ரிபோர்ட்டோடுகூட மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-170.)

719. பிராதுக்காரனாவது சாட்சியாவது மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்கு போகும்போது, போலீஸ் உத்தியோகஸ்தனோடுகூட போகும்படி அவனுக்கு உத்தரவு செய்யக்கூடாது.

போலீஸ் உத்தியோகஸ்தனோடுகூடபோகும்படி பிராதுக்காரர்களுக்கும் சாட்சிகளுக்கும் உத்தரவு பண்ணக்கூடாது.

அவனுக்கு அனாவசியமான நிர்ப்பந்தமாகிலும் அசந்தர்ப்பமாகிலும் உண்டுபண்ணவுங்கூடாது. ஆஜராவதாக அவனிடத்தில் முச்சிலிக்காக் கேட்பது தவிர வேறே யாதொரு ஜாமீன் கொடுக்கச்சொல்லி அவனைக் கேட்கவுங்கூடாது.

ஆனல் யாதொரு பிராதுக்காரனாவது சாட்சியாவது ஆஜராகமாட்டேனென்றாலும், 170-வது பிரிவில் உத்தரவு செய்திருக்கிறபடி முச்சிலிக்கா எழு

திக்கொடுக்கமாட்டேனென்றாலும், அப்படிப்பட்டவனை போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன் மாஜிஸ்திரேட்டினிடத்திற்குக்காவலோடு அனுப்பலாம். அந்த மாஜிஸ்திரேட்டானவர் அவனை, முச்சிலிக்கா எழுதிக் கொடுக்கிறவனாயிலாவது அந்தக்கேசு விசாரணை முடிகிறவரையிலாவது காவலில் வைத்திருக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-171.)

முதல் விசாரணை செய்கையில் நடவடிக்கைகளை டையரி புஸ்தகத்தில் எழுதுவது.

720. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல் விசாரணை செய்கிற பிரதி போலீஸ் உத்தியோகஸ்தனும் தனக்கு அறிக்கை எட்டினகாலத்தையும், தான் எப்போது விசாரணை செய்யத்தொடங்கி அதை எப்போது முடிக்கிறானோ அந்தக்காலத்தையும், தான் பார்வையிட்ட இடம் அல்லது இடங்களையும், தன்னுடைய முதல் விசாரணையினாலே நிச்சயிக்கப்பட்ட சங்கதிகளின் விவரத்தையும் கண்டு, முதல் விசாரணையில் தான் நடத்துகிற நடவடிக்கைகளை டையரி புஸ்தகத்தில் தினந்தோறும் எழுதிவரவேண்டியது.

(2) யாதொரு கிரிமினல் கோர்ட்டார் தங்கள் கோர்ட்டில் விசாரணையிலாவது பரிசீலனையிலாவதிருக்கிற யாதொரு கேசைச்சேர்ந்த போலீசு டையரி புஸ்தகங்களை வரவழைக்கலாம். மேலும் அந்தக் கேசிலே சாட்சியமாகவல்லாமல் அப்படிப்பட்ட விசாரணையிலாகிலும் பரிசீலனையிலாகிலும் அதற்குச் சகாயமாக அந்த டையரி புஸ்தகங்களை உபயோகிக்கலாம். குற்றஞ்சாட்டப்பட்டவனாவது அவனுடைய ஏஜெண்டுகளாவது அந்த டையரி புஸ்தகங்களை வரவழைக்க அர்ஹரானவர்களல்ல. கோர்ட்டார் அதுகளைப் பார்வையிட்டதினாலேயே மாத்திரம் அவனாவது அவர்களாவது அதுகளைப் பார்ப்பதற்கு அர்ஹரானாகவுமாட்டார்கள்; ஆனால் அதுகளை யெழுதின போலீஸ் உத்தியோகஸ்தன் தன்னுடைய ஞாபக சத்திக்காக அதுகளை உபயோகப்படுத்தினாலும், அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன் சொல்லுவதற்கு எதிரிடையாகக் கோர்ட்டார் அதுகளை உபயோகப்படுத்தினாலும், சங்கதிக்குத்தக்கபடி 1872-ஷ்த்திய இந்துதேசத்து சாட்சி ஆக்ட்டு 161-வது பிரிவிலாவது 145-வது பிரிவிலாவது சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி டை போலீஸ் டையரி முதலியதை எதிரி பார்த்து அந்தப் போலீஸ் சாட்சிகளை அவைகளில்கண்ட சங்கதிகள் விஷயமாய் குறுக்குக்கேழ்விகள் (Cross) கேழ்க்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-172.)

721. (1) இந்த அத்தியாயத்தின்படி முதல்விசாரணை செய்கையில், வீணான ஆலசியஞ்செய்யாமல் அப்படிப்பட்ட பிரதிவிசாரணையையும் முடிக்கவேண்டியது. அது முடிந்த உடனே, போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன் போலீஸ் ரிபோர்ட்டின்பேரில் குற்றத்தை விசாரணை செய்ய அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டுக்கு, உபயவாதிகளின் பெயர்களையும், அறிக்கை இப்படிப்பட்டதென்பதையும், அந்தக் கேசைச்சேர்ந்த சங்கதிகள் தெரிந்திருக்கிறவர்களாகக் காணப்படுகிறவர்களுடைய பெயர்களையும், குற்றஞ்சாட்டப்பட்டவன் காவலோடு அனுப்பப்பட்டிருக்கிறானோ அல்லது அவனிடத்தில் முச்சிலிக்கா வாங்கிக்கொண்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறானோ என்பதையும், அப்படி விடுதலை செய்யப்பட்டிருந்தால் ஜாமீன்தாரர்கள் சகிதமாயோ ஜாமீன்தாரர்களில்லாமலோ அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுத்திருக்கிறானென்பதையும் கண்டெழுதி பிரதேச கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படுகிற நமூனாப்படிக்கு ரிபோர்ட்டை அனுப்பவேண்டியது.



(2) 158 - வது பிரிவின்படி மேலான போலீஸ் உத்தியோகஸ்தன் நேமிக்கப்பட்டிருந்தால், அந்த ரிபோர்ட்டை அந்த உத்தியோகஸ்தன் மூலமாய் அனுப்பவேணும். அந்த உத்தியோகஸ்தன் மாஜிஸ்திரேட்டினுடைய உத்தரவு வருகிறவரையிலே, பின்னும் முதல்விசாரணை நடத்தும்படி போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனுக்கு உத்தரவு பண்ணலாம்.

(3) இந்தப் பிரிவின்படி அனுப்பப்படுகிற ரிபோர்ட்டினாலே, குற்றஞ்சாட்டப்பட்டவனை முச்சிலிக்கா வாங்கிக்கொண்டு விடுதலை செய்திருக்கிறதென்று தெரியவந்தால், மாஜிஸ்திரேட்டானவர் அந்த முச்சிலிக்காவை நிவர்த்திசெய்வதற்காவது மற்றப்படியாவது தனக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவு செய்யவேண்டியது. (கி. பு. கோடு, பிரிவு-173.)

தற்கொலை முதலியதைக் குறித்து போலீஸார் விசாரணைசெய்து ரிப்போர்ட்பண்ணுவது.

722. (1) எவனாவது—

(a) தற்கொலை செய்துகொண்டதாகவாகிலும்,

(b) வேறொருவனாலாவது யாதொரு பிராணியினாலாவது எந்திரத்தினாலாவது யாதொரு இடையூறினாலாவது மரணமடைந்ததாகவாகிலும்,

(c) வேறொருவன் குற்றஞ் செய்திருக்கிறானென்று நியாயமாய் அனுமானிப்பதற்கு இடமிருக்கிற சங்கதிகளினால் இறந்துபோனதாகவாகிலும்,

கேள்விப்படுவதின்பேரில், போலீஸ் ஸ்டேஷன் யார்வசத்திலிருக்கிறதோ அந்த உத்தியோகஸ்தனாவது இதன் விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்றிருக்கிற வேறே யாதொரு உத்தியோகஸ்தனாவது,

(Inquest) பிரேதவிசாரணை செய்ய அதிகாரம் பெற்றவராய் சமீபத்திலிருக்கிற மாஜிஸ்திரேட்டுக்கு அந்தச் சங்கதியை உடனே தெரியப்படுத்தவேண்டியது. மேலும் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்பட்ட யாதொரு விதியிலாவது டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டாலாகிலும் ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டாலாகிலும் செய்யப்பட்ட யாதொரு பொதுவான உத்தரவிலாவது விசேஷமான உத்தரவிலாவது வேறேவிதமாய்ச் சொல்லியிராதபட்சத்தில் அந்த உத்தியோகஸ்தன் அந்தப் பிரேதமிருக்கிற இடத்திற்குப்போய் அவ்விடத்திலே, அக்கம்பக்கத்திலிருக்கிற பெருந்தன்மையுள்ள இரண்டு அல்லது பல குடித்தனக்காரர்களைக் கூடவைத்துக்கொண்டு முதல் விசாரணைசெய்து, அந்தப் பிரேதத்தின்பேரில் காயம், முறிவு, சதைவு முதலிய துன்பக்குறிகள் காணப்பட்டால் அதுகளையும், அந்தக்குறிகள் எவ்விதமாய் அல்லது என்ன ஆயுதம் அல்லது கருவியினால் செய்யப்பட்டதாகத் தோற்றுகிறதோ அதையும் விவரமாயெழுதி, மரணமுண்டானதற்கு தென்படுகிற காரணமின்னதென்று ரிபோர்ட்டு எழுதவேண்டியது.

(2) அந்த ரிபோர்ட்டிலே அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன் கையெழுத்து செய்யவேண்டியதுந் தவிர, (கூட இருந்த) மற்றவர்களுள் அவர்களுக்குள் எத்தனைபேர் அந்த அபிப்பிராயத்தில் ஒன்றுபடுகிறார்களோ அவர்கள்மட்டுமாவது கையெழுத்து செய்யவும்வேண்டியது. மேலும் அதை டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்திரேட்டுக்காவது ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுக்காவது உடனே அனுப்பவேண்டியது.

(3) மரணமுண்டானதற்குக் காரணம் இன்னதென்பதைக்குறித்துச் சந்தேகமுண்டானாலும், வேறே யாதொரு காரணத்தைப்பற்றி பிரேதத்தை சோதனைக்கனுப்புவது யுக்தமானதென்று போலீஸ் உத்தியோகஸ்தனுக்குத் தோற்றினாலும், வெய்யில் மழை முதலிய காலபேதத்தையும் தூரத்தையும் யோசிக்கையில் பிரேதத்தைச் சோதனைக்கு அனுப்புவதினாலே அப்படிச் சோதனைபோடுவது பிரயோசனமில்லாததாய்ப் போகும்படியாக வழியிலே அது அழுகிப்போகாதென்று தோற்றுகிறபட்சத்தில், இந்தவிஷயத்திலே பிரதேச கவரன்மெண்டார் நிர்ணயிக்கிற விதிகளுக்குட்பட்டு அந்த உத்தியோகஸ்தனானவன் சோதனை செய்யப்படும்பொருட்டு அந்தப் பிரேதத்தை சமீபத்திலிருக்கிற ஸிவில் சர்ஜியனுக்காவது பிரதேச கவர்ன்மெண்டாரால் இதற்காக நேமிக்கப்பட்ட வைத்தியசம்மந்தமான வேறு உத்தியோகஸ்தருக்காவது எடுத்தனுப்பவேண்டியது.

(4) சென்னப்பட்டணம் ராஜதானியிலும் பம்பாய் ராஜதானியிலும் கிராம பெரியதனக்காரன் இந்தப்பிரிவின்படியான முதல்விசாரணையைச் செய்யலாம்; பின்பு அவன் பிரேதவிசாரணைசெய்ய அதிகாரம்பெற்றவராய் சமீபத்திலிருக்கிற மாஜிஸ்திரேட்டுக்கு அந்த விசாரணையில் தேறுகடையாவதை ரிபோர்ட்டு பண்ணவேண்டியது.

(5) யாதொரு டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டு அல்லது ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுக்கும், இதுவிஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங்கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கும், பிரேத விசாரணைசெய்ய அதிகாரமுண்டாயிருக்கிறது. (கி. பு. கோடு, பிரிவு-174.)

நபர்களை ஸம்மன்பண்ணி வரவழைக்க அதிகாரம்.

723. (1) போலீஸ்ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தனானவன் உத்தரவு எழுதி அனுப்பி, மேற்படி முதல்விசாரணைக்காக மேற்கண்டபடி இரண்டு அல்லது பலபேர்களையும், அந்த விஷயத்தைச்சேர்ந்த சங்கதிகள் தெரிந்திருக்கிறவராகத் தோற்றுகிற வேறே யாதாமொருவரையும் வரவழைக்கலாம். அப்படி அழைக்கப்படுகிற பிரதிகபரும் ஆஜராகவும், எந்தக் கேள்விகளுக்கு ஜவாபுசொன்னால் அவன் குற்றஞ் சாட்டப்படுவதற்காவது தண்டனைக்காவது பறிமுதலுக்காவது ஒருவேளை உள்ளாக்கிறதாயிருக்கலாமோ அப்படிப்பட்டகேள்விகள்தவிர மற்ற சகல கேள்விகளுக்கும் சரியாய் ஜவாபுசொல்லவும் கடமைப்பட்டவனாவான்.

(2) சங்கதிகளினாலே அது 170-வது பிரிவு சம்மந்தப்படத்தக்க பிடிக்கக்கூடிய குற்றமாக வெளிப்படாவிட்டால், அப்படிப்பட்டவர்களுக்கு மாஜிஸ்திரேட்டுகோர்ட்டில் ஆஜராகும்படி போலீஸ் உத்தியோகஸ்தன் உத்தரவுசெய்யக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-175.)

724. (1) போலீசாருடைய காவலிலிருக்கையில் எவனாவது இறந்துபோனால், பிரேதவிசாரணைசெய்ய அதிகாரம்பெற்றவராய் சமீபத்திலிருக்கிற மாஜிஸ்திரேட்டானவர் போலீஸ் உத்தியோகஸ்தனால் செய்யப்பட்ட முதல் விசாரணைக்குப் பதிலாகவாவது அதோடு சேர்க்கையாகவாவது, மரணத்தின் காரணத்தைக்குறித்து விசாரணை நடத்தவேண்டியது; 174-வது (a), (b), (c), உட்பிரிவுகளில் சொல்லியிருக்கிற வேறே யாதொருவிஷயத்தில் அப்படி அதிகாரம்பெற்ற எந்த மாஜிஸ்திரேட்டாவது மேற்கண்டபடி விசாரணை நடத்தலாம்; அவர் அப்படிச்செய்கிறபட்சத்தில், யாதொருகுற்றத்தைக்குறித்து



விசாரணை நடத்துவதில் அவருக்கு என்னென்ன அதிகாரமுண்டோ அதுகளெல்லாம் இந்த விசாரணை நடத்துவதிலும் அவருக்குண்டு. அப்படிப்பட்ட விசாரணை நடத்துகிற மாஜிஸ்திரேட்டானவர் அந்த விஷயத்தைச்சேர்ந்த சங்கதிகளுக்குத்தக்கபடி, இதில் பின்னால் நிர்ணயித்திருக்கிற விதங்களில் ஏதன்பிரகாரமாவது அதைக்குறித்து தான்கேட்கிற சாட்சியத்தை எழுதிவைக்கவேண்டியது.

(2) முன்னமேயே புதைக்கப்பட்டிருக்கிற யாதொரு பிரேதத்தை, மரணமுண்டானதற்குக் காரணம் இன்னதென்று அறியும்பொருட்டு சோதனை செய்வது யுக்தமென்று அந்த மாஜிஸ்திரேட்டுக்குத்தோற்றினால், அவர் அந்தப் பிரேதத்தை வெளியிலெடுப்பித்து சோதனைபோடுவிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-176.)

## எதிரிகளாயிருப்பவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய பொது விஷயங்கள்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் ஆஜரில்லாதபோது சாட்சியத்தை ரிக்கார்டுபண்ணுவது.

725. (1) குற்றஞ்சாட்டப்பட்டவன் மறைந்திருக்கிறதாகவும், உடனே அவன் பிடிபடுவதாயில்லையென்றும் ருஜுவானால், எந்தக் குற்றத்தை அவன் செய்ததாகப் பிராது செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் குற்றத்திற்காக அவனைப் பரிசீலனை செய்யவாகிலும் பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணவாகிலும் அதிகாரமுள்ள கோர்ட்டார் அவன் ஹாஜரில்லாதிருக்கையில் பிராதுபட்சத்தில் யாராவது சாட்சிகள் கொண்டுவரப்பட்டால் அவர்களை விசாரணைசெய்து அவர்களுடைய வாக்குமூலங்களை ரிகார்ட்பண்ணலாம். அப்படிப்பட்டவன் பிடிக்கப்பட்ட பின்பு, வாக்குமூலங்கொடுத்தவன் இறந்துபோயாவது சாட்சியங்கொடுக்க அசக்தனாயாவது, அதிக ஆலசியமாகிலும் செலவாகிலும் அசந்தர்ப்பமாகிலுமில்லாமல் அவனை ஆஜர்படுத்துவிக்கக்கூடாமையாயிருந்து கேஸின் சங்கதியை யோசிக்கையில் அப்படிப்பட்ட ஆலசியமுதலானவை நியாயமல்லாததாயாவது இருக்கிறபட்சத்தில், அவன்மேல் சாட்டப்பட்ட குற்றத்திற்காக அவனை விசாரணை அல்லது பரிசிலனை செய்கையிலே அப்படிப்பட்ட யாதொரு வாக்குமூலத்தைச் சாட்சியமாகத் தாக்கல் செய்யலாம்.

(2) மரணதண்டனையாவது தண்ணீர்மேலேற்றும்படியான தண்டனையாவது விதிக்கப்படத்தக்க குற்றமானது தெரியவராத யாரோ நபர் அல்லது நபர்களால் செய்யப்பட்டிருப்பதாகத் தோற்றுமானால், முதல் வகுப்பைச்சேர்ந்த யாதொரு மாஜிஸ்திரேட் விசாரணைசெய்து, அக்குற்றத்தைக் குறித்துச் சாட்சியங் கொடுக்கக்கூடிய எவ்விதச் சாட்சிகளையாவது விசாரிக்கவேண்டுமென்று ஹைகோர்ட்டார் கட்டளையிடலாம். வாக்குமூலங்கொடுத்தவன் இறந்துபோயிருந்தாலும், சாட்சியங்கொடுக்க அசக்தனாயிருந்தாலும், ப்ரிட்டிஷ் இந்தியாவின் எல்லைகளுக்கு வெளியேயிருந்தாலும், பிறகு அக்குற்றஞ் சாட்டப்படுகிற யாதொரு நபருக்கு விரோதமாக மேலே கண்டபடி வாங்கப்படும் வாக்கு மூலங்களைச் சாட்சியமாக உபயோகப்படுத்தலாம். (கி. பு. கோடு, பிரிவு-512.)

### பிரசித்தஞ் செய்வதும் ஜப்திபண்ணுவதும்.

726. (1) எவன்மேல் யாதொரு கோர்ட்டாரால் வாறண்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட நபர் அந்தவாறண்டை நிறைவேற்றக்கூடாதபடி மறைந்துபோயாவது ஒளித்துக்கொண்டாவதிருக்கிறானென்று நம்புவ

தற்கு (சாட்சியங்கேட்ட பின்பாகிலும் மற்றப்படியாகிலும்) அந்த கோர்ட்டாருக்கு முகாந்தரமிருந்தால், அந்தக்கோர்ட்டார் எழுத்துமூலமாய் இஸ்தியார் பிரசித்தஞ் செய்யப்படுகிற தேதிமுதல் முப்பதுநாளைக்குக் குறையாமல் குறிப்பிடப்பட்ட ஓர் காலத்தில் குறிக்கப்பட்ட ஓரிடத்திலே ஹாஜராக வேண்டியதென்று அதில் உத்தரவு செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட இஸ்தியாரைப் பிரசித்தஞ்செய்யவேண்டியதெப்படி யென்றால்:—

(a) அந்த நபர் வழக்கமாய் வாசஞ்செய்கிற பட்டணம் அல்லது கிராமத்தில் யாவரும் அறியும்படியான இடத்திலே அதைப் பஹிரங்கமாய்ப் படிக்கவேண்டும்.

(b) அந்த நபர் சாதாரணமாய் வாசஞ்செய்கிற வீடு அல்லது குடிஸிலத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான இடத்திலாவது அப்படிப் பட்ட பட்டணம் அல்லது கிராமத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான இடத்திலாவது அதை ஒட்டவேண்டும் ; மேலும்,

(c) கோர்ட்டுக் கட்டடத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான இடத்திலே அதற்கொரு நகலை ஒட்டவேண்டும்.

(3) இன்னதினத்தில் இஸ்தியார் கிரமமாய்ப் பிரசித்தஞ்செய்யப்பட்டதென்று அந்த இஸ்தியாரைப் பிறப்பிக்கிற கோர்ட்டார் எழுத்து மூலமாய்க் கொடுக்கிற ஸ்ட்டேட்மென்டானது இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறபடி செய்யப்பட்டதென்பதற்கும், அந்த தினத்தில் இஸ்தியார் பிரசித்தஞ் செய்யப்பட்டதென்பதற்கும் முடிவான சாட்சியமாகும். (கி. பு. கோடு, பிரிவு-87.)

மறைந்துபோய் விடுகிறவனுடைய சொத்தை ஜப்திபண்ணுவது.

727. (1) 87-வது பிரிவின்படி இஸ்தியார் பிறப்பிக்கிற கோர்ட்டார் பிரசித்தஞ் செய்யப்பட்ட நபருடைய யாதொரு அசையும் பொருளையாவது அசையாப் பொருளையாவது அவ்விரண்டையுமாவது ஜப்திபண்ணும்படி எப்பொழுதாகிலும் உத்தரவு செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட உத்தரவினாலே, அது செய்யப்படுகிற டிஸ்திரிக்டுக்குள் அப்படிப்பட்ட நபருடைய யாதொரு சொத்தை ஜப்திசெய்வதற்கு அதிகாரமுண்டாகும் ; மேலும், அந்த டிஸ்ட்ரிக்டுக்கு வெளியில் அப்படிப்பட்ட நபருக்குச் சொந்தமாயிருக்கிற யாதொரு சொத்தை ஜப்திசெய்வதற்காக, அந்தச் சொத்து யாருடைய டிஸ்திரிக்டிலிருக்கிறதோ அந்த டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட் அல்லது பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட் அதன்மேல் எண்டார்ஸ் செய்வாராகில், அதனால் அதிகாரமுண்டாகும்.

(3) ஜப்திபண்ணும்படி உத்தரவு செய்யப்பட்ட சொத்து கடன் அல்லது வேறே அசையும் பொருளாயிருக்கிறதானால், இந்தப் பிரிவின்படி ஜப்தியை—

(a) கைப்பற்றுவதனாலாகிலும்,

(b) ரிஸீவரை நியமிப்பதனாலாகிலும்,

(c) பிரசித்தஞ் செய்யப்பட்டவனுக்காவது அவன் பட்சத்தில் எவனுக்காவது அந்தப்பொருளை ஒப்பிக்கக்கூடாதென்று தடுக்கிற எழுத்து மூலமான உத்தரவினாலாகிலும்,



(d) கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த வகைகள் யாவற்றினாலாகிலும் அவைகளில் எதாவதிரண்டினாலாகிலும், செய்யவேண்டும்.

(4) ஜப்திபண்ணும்படி உத்தரவு செய்யப்பட்ட சொத்து அசையாப்பொருளா யிருக்கிறதானால், இந்தப் பிரிவின்படி ஜப்தியை, ஸர்க்காருக்கு கிஸ்திசெலுத்துகிற நிலவிஷயத்தில், அந்த நிலமிருக்கிற டிஸ்ட்ரிக்டின் கலெக்ட்டர் மூலமாய்ச் செய்யவேண்டும் மற்ற சகல விஷயங்களிலும்—

(e) ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதனாலாகிலும்,

(f) ரிஸீவரை நியமிப்பதனாலாகிலும்,

(g) பிரசித்தஞ் செய்யப்பட்ட நபருக்காவது அவன் பட்சத்தில் எவனுக்காவது குத்தகை அல்லது வாடகைப்பணத்தைச் செலுத்தக்கூடாதென்றாவது தடுக்கிற எழுத்துமூலமான உத்தரவினாலாகிலும்,

(h) கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த வகைகள் யாவற்றினாலாகிலும் அவைகளில் எதாவதிரண்டினாலாகிலும்,

அந்த ஜப்தியைச் செய்யவேண்டும்.

(5) ஜப்தி பண்ணும்படி உத்தரவு செய்யப்பட்ட சொத்து ஆடு மாடு முதலிய ஜீவஜெந்துவாயாவது, அழியத்தக்க வஸ்துவா யாவதிருந்தால், கோர்ட்டார், தங்களுக்கு யுக்தமென்று தோற்றும்பட்சத்தில், அதை உடனே விற்றுவிடும்படி உத்தரவு செய்யலாம் ; அந்த விஷயத்தில் விற்று முதலானது கோர்ட்டார் உத்தரவின்படி வினியோகப்படவேண்டும்.

(6) இந்தப் பிரிவின்படி நியமிக்கப்பட்ட ரிஸீவருடைய அதிகாரங்களும் அலுவல்களும் உத்தரவாதங்களும் ஸிவில் ப்ரொஸீஜர்கோட் 36-ம் அத்தியாயப்படி நியமிக்கப்பட்ட ரிஸீவருக்கிருப்பதுபோலவே இருக்கவேண்டும்.

(7) பிரசித்தஞ் செய்யப்பட்ட நபர் இஸ்தியாரில் கண்டிருக்கிறகாலத்திற்குள் ஹாஜராகாவிட்டால், ஜப்தியிலிருக்கிற சொத்தைக் கவர்ன்மெண்டாருடைய இஷ்டப்படி செய்யவேண்டும் ; ஆனால், அது சீக்கிரமாயும் தன்னிச்சையாயும் அழிந்துபோகும்படியானதாயிராவிட்டாலும், அதை விற்றால் சொந்தக்காரனுக்குப் பிரயோசனகரமா யிருக்குமென்று கோர்ட்டாருக்குத் தோற்றாவிட்டாலும், ஜப்தித்தேதிமுதல் ஆறுமாதங்கழிகிற வரையிலே அதை விற்கக்கூடாது ; மேற்சொல்லியபடி அது அழியும்படியானதா யிருக்கிற விஷயத்திலும் சொந்தக்காரனுக்குப் பிரயோசன முள்ளதாயிருக்கிற விஷயத்திலும் கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றும்போது அதை விற்கும்படி செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-88.)

ஜப்தி செய்யப்பட்டசொத்தை மறுபடி கொடுத்துவிடுவது.

728. எவனுடையசொத்து 88-வது பிரிவின் (7) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கவர்ன்மெண்டாருடைய இஷ்டத்திலிருக்கிறதோ அப்படிப்பட்டவனாவது ஜப்தித்தேதிமுதல் இரண்டுவருஷத்திற்குள், யாருடைய உத்தரவினாலே சொத்து ஜப்திசெய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டுக்கு முன்பாவது, அது எந்த கோர்ட்டுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதோ அந்தக்கோர்ட்டுக்குமுன்பாவது தானேவந்து ஹாஜராயாலும் பிடித்துக்கொண்டு வரப்பட்டாலும், அவன் வாறண்ட் நிறைவேற்றப்படுவதினின்றும் தப்பித்துக்கொள்ளும்பொருட்டு மறைந்து போகவில்லை அல்லதுஒளித்துக்கொள்ள வில்லையென்றும்,

இஸ்தியாரில் கண்டிருக்கிற காலத்திற்குள் தான்வந்து ஹாஜராகக் கூடும்படி அதைக்குறித்துத் தனக்கு அறிக்கையாகவில்லையென்றும் அந்தக் கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜூச்செய்கிறபட்சத்தில், அப்படிப்பட்ட சொத்தாவது, அது விற்கப்பட்டிருந்தால், அந்த விற்பனையின் கிரய வரும்படியாவது, அதில் ஒருபாகமாத்திரம் விற்கப்பட்டிருந்தால், அந்த விற்பனையின் கிரய வரும்படியும் அந்த சொத்தின் மிகுதியுமாவது, ஜப்தியினிமித்தம் நேரிட்ட சகல செலவுகளையும் அதிலிருந்து செலுத்தினபின்பு, அவனுக்கு ஒப்பிக்கப்படவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-89.)

---

# அத்தியாயம் 18.

---

## ஸெஷ்ஷன் கேஸ்களின் விசாரணையைக்குறித்த விஷயங்கள்.

ஸெஷ்ஷன் கேஸென்றுலென்ன?

729. ஸெஷ்ஷன் கோர்ட்டாரவர்களால் மட்டும் விசாரணை செய்யப்பட்டு பைசல் செய்யப்படக்கூடிய கேசுக்கு ஸெஷ்ஷன் கேஸென்று பெயர்.

பரிசீலனைக்குக் கமிட்டுப் பண்ண அதிகாரம்.

730. ஸெஷ்ஷன் கேசுகளை பிரதம விசாரணைசெய்து ஸெஷ்ஷன் கோர்ட்டுக்காவது ஹைக்கோர்ட்டுக்காவது கம்மிட்டுப்பண்ண பிரதேச கவர்ன்மெண்டாரவர்களால் அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிற மாஜிஸ்திரேட்டுகளெல்லாம் ஸெஷ்ஷன் கேசுகளை கமிட்டுப்பண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு 206.)

731. (1) எதிரி மாஜிஸ்திரேட்டின் முன் ஆஜரான அல்லது கொண்டுவரப்பட்ட பொழுது வாதி, வாதிபக்கம் சாக்ஷிகள், எதிரிபக்கம் சாட்சிகள், இவர்களையும், தன்னுடைய யுக்தப்படி வரவழைக்கப்பட்ட மற்ற சாக்ஷிகளையும் விசாரிக்கவேண்டும்.

(2) வாதியையும் அவன்பக்கம் சாக்ஷிகளையும் எதிரி குறுக்குக் கேழ்விகள் (Cross) கேழ்க்கலாம். அந்தசாக்ஷிகளை வாதிபக்கத்தில் மறுபடி கேழ்விகள் (Re-examination) கேழ்கலாம்.

(3) வாதிபக்கத்திலாவது எதிரிபக்கத்திலாவது ஏதும் சாக்ஷியை ஆஜராகும்படிக்காவது அல்லது தஸ்தாவேஜு அல்லது வேறு ஏதும் வஸ்துவை ஆஜர்ப்படுத்தும்படிக்காவது ஸம்மன் பிறப்பிவிக்கவேண்டுமென்று மாஜிஸ்திரேட்டிடம் மனுச் செய்துகொண்டால், அப்படி ஸம்மன் செய்வது அனாவசியமென்று தோன்றினுலொழிய, மாஜிஸ்திரேட்டு ஸம்மன் பிறப்பிவிக்கத்தான் வேண்டும். அனாவசியமென்று நினைத்து ஸம்மன் பிறப்பிவிக்காவிட்டால் அதற்குரிய காரணங்களை எழுதிவைக்கவேண்டும்.

(4) ராஜதானி மாஜிஸ்திரேட்டுகள் காரணம் யெழுதிவைக்க வேண்டியதில்லை. (கி. பு. கோடு, பிரிவு-208.)



எப்போது குற்றஞ் சாட்டப்பட்டவனை விடுதலை செய்யலாமென்பது.

732. (1) மேலேசொல்லப்பட்ட பிரகாரம் சாக்ஷிவிசாரணை செய்ததின்பேரிலும், எதிரியை அவசியமானுல் விசாரித்ததின்பேரிலும் எதிரியைக் கமிட்டுச் செய்வதற்குப்போதுமான ருஜூவில்லையென்று மாஜிஸ்திரேட்டுக்குத் தோன்றினுல் எதிரியை விடுதலைசெய்துவிட வேண்டும். ஸெஷ்ஷன் கோர்ட்டுக்குக் கமிட்டுச் செய்யவேண்டிய கேசு ருஜூவில்லாமல், தன் முன்பாகவாவது அல்லது வேறு மாஜிஸ்திரேட்டு முன்பாகவாவது விசாரிக்கப்படவேண்டிய குற்றத்தை எதிரி செய்ததாக ருஜூவானுல் அந்தப்படி எதிரி பேரில் விசாரிக்கவேண்டும்.

(2) மேலேகண்டபடி பூராவிசாரணையுஞ் செய்யாமலேயே அதற்கு முன்னதாக எப்போதாவது எதிரியை விடுதலைசெய்துவிடவும் மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரமுண்டு. (கி. பு. கோடு, பிரிவு-209.)

733. (1) கம்மிட்டுச் செய்யப்போதுமான சாக்ஷியமிருப்பதாக மாஜிஸ்திரேட் அபிப்பிராயப்பட்டால் ருஜூவான குற்றத்திற்குக் குற்றப்பத்திரிகை படிக்கப்படும்.

குற்றப்பத்திரிகை எழுதுவது.

(2) எழுதப்பட்ட குற்றப்பத்திரிகையைப் எதிரிக்குப் படித்து விவரமாய்ச்சொல்லி எதிரி அபேக்ஷித்தால் குற்றப்பத்திரிகைக்கு, யாதொரு செலவுமில்லாமல் நகலும் கொடுக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-210.)

734. அப்பால் ஸெஷ்ஷன் கோர்ட்டில் தன்பக்கம் ஸம்மன் பிறப்பித்து விசாரிக்கப்படவேண்டிய சாக்ஷிகளினுடைய பேர்களை வாய்மொழியாகத் தெரிவிக்கலாம், அல்லது ஜாபிதா எழுதிக்கொடுப்பதன்மூலமாகத் தெரிவிக்கலாம். அப்படிச்செய்வது யுக்தமென்று தோன்றினுல் மறுபடியும் புதிதாக ஒரு சாக்ஷி ஜாப்தாக்கொடுக்கும்படிக்கு இடங்கொடுக்கலாம். ஹைக்கோர்ட்டு ஸெஷ்ஷனுக்குக் கம்மிட்டுப்பண்ணப்பட்டிருக்கிற கைதிகள், விசாரணைக்கு முந்தி எப்பொழுதாவது வேறு ஒரு புது ஜாப்தாவை கிளர்க்கு ஆப் தி க்ரௌனிடத்தில் கொடுத்து ஹைக்கோர்ட்டு விசாரணைக்கு சாக்ஷிகளை ஸம்மன் செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். (கி. பு. கோடு, பிரிவு-211.)

735. மேலே கி. பு. கோடு 211-வது பிரிவுப்படி ஸம்மன் செய்து வரவழைக்கிற சாக்ஷிகளில் யாரையாவது மாஜிஸ்திரேட் தன் யுக்தப்படி விசாரணை செய்துகொள்ளலாம். (கி. பு. கோடு, பிரிவு-212.)

கம்மிட்டுப் பண்ணுகிற உத்தரவு.

736. (1) இவ்வளவு விசாரணையும் செய்தபின்பேரில் கேசைக் கமிட்டுச் செய்வது உசிதமென்று தோன்றினுல்கேசைஸெஷ்ஷன் கோர்ட்டுக்குக் கமிட்டுசெய்யலாம்.

(2) எதிரிபக்கம் சாக்ஷிகளை விசாரித்த பிறகு கேசு கம்மிட்டுச் செய்வதற்கு லாயக்கானதில்லையென்று மாஜிஸ்திரேட்டு நினைத்தால் படிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையை ரத்துசெய்துவிட்டு எதிரியை விடுதலைசெய்துவிடலாம். (கி. பு. கோடு, பிரிவு-213.)

737. யுரோப்பியன் ப்ரிட்டிஷ் குடியோடு சேர்ந்து குற்றஞ்செய்ததாக (யுரோப்பியன் பிரிட்டிஷ் குடியல்லாத) யாவனொருவன்மேல் ராஜதானி மாஜிஸ்திரேட்தவிர வேறே யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்து, அந்த யுரோப்பியன் ப்ரிட்டிஷ் குடியானவன் அதே காரியத்திலுண்டாகும் அவ்வித குற்றச்சாட்டி னிமித்தம் ஹைகோர்ட்டாருக்குமுன் பரிசீலனைக்காகக் கம்மிட் பண்ணப்படும்படியாவது பரிசீலனை

செய்யப்படும்படியாவதிருக்கிற பட்சத்தில், அப்படி குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பரிசீலனைக்காக் கமிட் பண்ணுவதற்குப் போதுமான முகாந்தரமிருக்கிறதென்று மாஜிஸ்திரேட்டுக்குத் தோற்றுமாகில், அவர் அவனைப் பரிசீலனைக்காக ஸெஷ்ஷன் கோர்ட்டாருக்குக் கமிட் பண்ணாமல் ஹைகோர்ட்டுக்குக் கமிட் பண்ணவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-214.)

738. 213 அல்லது 214-வது பிரிவின்படி தகுந்த அதிகாரமுடைய மாஜிஸ்திரேட்டினாலாவது, 477-வது பிரிவின்படி ஸெஷ்ஷன் கோர்ட்டாராலாவது, 478-வது பிரிவின்படி ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாராலாவது ஒருதரஞ் செய்யப்பட்ட கம்மிட்மெண்டானது ஹைகோர்ட்டாரால் மாத்திரம் சட்டவிஷயத்தைப்பற்றித்தான் ரத்து செய்யப்படக்கூடும். (கி. பு. கோடு, பிரிவு-215.)

*குற்றஞ் சாட்டப்பட்டவனை கமிட்டு செய்தபோது அவன் பட்சத்து சாட்சிகளுக்கு ஆஜராகும்படி ஸம்மன்.*

739. குற்றஞ்சாட்டப்பட்டவன் 211-வது பிரிவின்படி சாட்சி ஜாபிதா கொடுத்திருந்து அவனைப் பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணியிருந்தால், மாஜிஸ்திரேட்டானவர்-அந்த ஜாபிதாவில் கண்டிருக்கிற சாட்சிகளில் தமக்கு முன் ஹாஜராகாதிருக்கிறவர்களுக்கு, குற்றஞ்சாட்டப்பட்டவன் எந்தக்கோர்ட்டுக்குக் கம்மிட்டு செய்யப்பட்டிருக்கிறானோ அதற்கு முன்பாக ஹாஜராகும்படி ஸம்மனனுப்பவேண்டும்.

ஆனால், குற்றஞ்சாட்டப்பட்டவன் ஹைகோர்ட்டுக்குக் கம்மிட் செய்யப்பட்டிருந்தால், தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்தில் மாஜிஸ்திரேட்டானவர் அந்தச்சாட்சிகளை க்ளார்க் ஆவ் தி க்ரவுன் என்னும் உத்தியோகஸ்தர் ஸம்மனனுப்பி வரவழைக்கும்படி விட்டுவிடலாம்; அப்பிரகாரமே அந்த சாட்சிகள் ஸம்மனனுப்பி வரவழைக்கப்படலாம்:

மேலும், அலைக்கழிப்பு அல்லது ஆலஸியம் உண்டுபண்ணும் பொருட்டாவது, நீதி நடக்கவொட்டாமல் செய்யவேண்டுமென்றாவது யாதொரு சாட்சியை ஜாபிதாவில் சேர்த்திருப்பதாக மாஜிஸ்திரேட்டுக்குத் தோற்றினால், அவர் அந்த சாட்சி முக்கியமென்று நம்புவதற்கு நியாயமான முகாந்தரமிருந்தால் அதைத் தமக்குத் திருப்தியாகும்படி தெரிவிக்கச்சொல்லி, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு உத்தரவுசெய்யலாம்; அப்படித் திருப்தியாகாவிட்டால் அவனை வரவழைக்க நிராகரிப்பதற்குரிய காரணங்களை எழுதி அந்த சாட்சிக்கு ஸம்மனனுப்ப நிராகரிக்கலாம்; அல்லது அந்த சாட்சியை ஹாஜர்செய்விப்பதைப் பற்றி பிடிக்கும் செலவுக்காகவும் தகுதியான மற்றெல்லாச் செலவுகளுக்காகவும் அந்த மாஜிஸ்திரேட்டுக்கு எவ்வளவு அவசியமாகத் தோற்றுகிறதோ அவ்வளவு பணத்தைக்கட்டச்சொல்லி அவனுக்கு ஸம்மனனுப்புவதற்கு முன்னமே உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-216.)

740. (1) யார் ஸெஷ்ஷன் கோர்ட்டாருக்கு முன்பாகவாவது ஹைகோர்ட்டாருக்கு முன்பாகவாவது அவசியமாய் ஹாஜராக வேண்டியவர்களாயும், மாஜிஸ்திரேட்டுக்குமுன் ஹாஜராகியுமிருக்கிறார்களோ அப்படிப்பட்ட பிராதுக்காரர்களும் பிராதுபட்சத்திலும் குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்சத்திலுமிருக்கிற சாட்சிகளும், சங்கதிக்குத்தக்கபடி பிராதை நடத்தவாகிலும் சாட்சி சொல்லவாகிலும் ஸெஷ்ஷன் கோர்ட்டிலாவது ஹைகோர்ட்டிலாவது அழைக்கப்படும்போது ஹாஜராவதாகப் பிணைப்பட்டு அவருக்கெதிரில் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டும்.



(2) யாதொரு பிராதுக்காரனாவது சாட்சியாவது ஸெஷ்ஷன் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஹைகோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் ஹாஜராக மாட்டேனென்றாலும், மேற்சொல்லியபடி முச்சிலிக்கா எழுதிக்கொடுக்க மாட்டேனென்றாலும், அவன் அப்படிப்பட்ட முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கிற வரையிலாவது ஸெஷ்ஷன்கோர்ட்டிலாகிலும் ஹைகோர்ட்டிலாகிலும் அவன் ஹாஜராகவேண்டிய காலம்வரையிலாவது அவனை மாஜிஸ்ட்ரேட்டானவர் காவலில் வைத்துவைக்கலாம்; அப்படி அவன் ஹாஜராகவேண்டிய காலத்தில் சங்கதிக்குத்தக்கபடி ஸெஷ்ஷன் கோர்ட்டுக்காவது ஹைகோர்ட்டுக்காவது மாஜிஸ்திரேட்டானவர் அவனைக் காவலோடு அனுப்பவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-217.)

741. (1) குற்றஞ்சாட்டப்பட்டவன் பரிசீலனைக்குக் கம்மிட்டு பண்ணப்பட்டால், மாஜிஸ்திரேட்டானவர் - இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால், நியமிக்கப்படுகிற நபருக்கு அந்த கம்மிட்மெண்ட் சங்கதியும் குற்றபத்திரிகை மாதிரியாகவே அந்த குற்றத்தையுங் கண்டெழுதி மேற்படி நபருக்கு ஒரு உத்திரவு அனுப்பவேண்டும்;

மேலும், குற்றப்பத்திரிகையையும் விசாரணையைச்சேர்ந்த ரிகார்டையும் சாட்சியமாகக் காட்டவேண்டியதாயிருக்கிற யாதொரு ஆயுதமுதலிய சாமானையும், ஸெஷ்ஷன் கோர்ட்டாரிடத்திற்காவது, (ஹைகோர்ட்டுக்குக் கம்மிட் செய்திருக்கிற பட்சத்தில்) க்ளார்க் ஆவ் தி க்ரவுன் அல்லது இது விஷயத்தில் ஹைகோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திற்காவது அனுப்பவேண்டும்.

(2) ஹைகோர்ட்டுக்குக் கம்மிட் செய்யப்பட்டால், அந்த ரிகார்ட்டில் யாதொரு பாகமானது இங்கிலீஷில்லாதபட்சத்தில், அதற்கு இங்கிலீஷ் தர்ஜுமாவை அந்த ரிகார்டோடுகூட அனுப்பவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-218.)

742. (1) கம்மிட் செய்தபிறகு பரிசீலனை ஆரம்பத்திற்கு முன்னமே, பின்னும் சேர்க்கப்பட்ட சாட்சிகளை மாஜிஸ்திரேட்டானவர் தமக்குத் தகுதியென்று தோற்றினால் ஸம்மனனுப்பி வரவழைத்து விசாரணைசெய்யலாம்; மேலும், ஹாஜராகிச் சாட்சி சொல்லும்படி இதில் முன்னமே கண்டிருக்கிற விதமாய் அவர்களை உடன்படுத்தலாம்.

(2) அப்படிப்பட்ட விசாரணையைக் கூடுமானால் குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கெதிரில் நடத்தவேண்டும்; அந்த மாஜிஸ்திரேட்டானவர் ராஜதானி மாஜிஸ்திரேட்டாயிராதபட்சத்தில், அந்தச் சாட்சிகள் சொல்லுகிற சாட்சியத்திற்கு நகல் வேண்டுமென்று குற்றஞ்சாட்டப்பட்டவன் கேட்டால் அப்படியே அதை அவனுக்குச் செலவில்லாமல் கொடுக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-219.)

743. பரிசீலனை நடக்கிறவரையிலும் பரிசீலனை நடக்கும்போதும், ஜாமீன் வாங்குவதைக்குறித்து இந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு மாஜிஸ்திரேட்டானவர் வாறண்ட் எழுதி அதைக்கொண்டு காவலுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவனைக் கம்மிட்பண்ணவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-220.)

நடவடிக்கைகளை ஆரம்பிப்பது.

பரிசீலனையைத் தொடங்குவது.

744. (1) பரிசீலனையை ஆரம்பிக்கக் கோர்ட்டார் சித்தமாயிருக்கும்போது, குற்றஞ்சாட்டப்பட்டவன் கோர்ட்டாருக்கு முன்பாக ஹாஜராகவாவது வேண்டும், அல்லது அவனைக்கொண்டுவரவாவது வேண்டும்; குற்ற பத்திரிகையைக் கோர்ட்டிலே படித்து அவனுக்கு விவரமாய்ச்சொல்லி, சாட்டப்பட்ட குற்றத்தை அவன் செய்திருக்கிறானா அல்லது பரிசீலனை செய்யச் சொல்லுகிறானாவென்று அவனைக்கேட்கவேண்டும்.

குற்றவாளி என்று ஒப்புக்கொள்வது.

(2) குற்றஞ் சாட்டப்பட்டவன் தான் குற்றவாளிதானென்று ஒப்புக்கொண்டால், அவன் ஒப்புக்கொள்வதை ரிகார்ட் பண்ணவேண்டும். அதன்மேல் அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-271.)

745. குற்றஞ் சாட்டப்பட்டவன் எதிர்வாதம் பண்ணமாட்டேனென்றாலும், பண்ணுவிட்டாலும், தன்னைப் பரிசீலனை செய்யச்சொன்னாலும், கோர்ட்டார் இதில் பின்னால் உத்தரவுசெய்யப்படுகிறபடி ஜூரர்களையாவது அஸெஸர்களையாவது தெரிந்தெடுத்துக் கேஸைப் பரிசீலனைசெய்யத் தொடங்கவேண்டும்.

ஆனால், இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி ஆட்சேபனை செய்வதற்கான சுதந்தரத்திற்குள்ளாகி, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எத்தனைபேரை வரிசையாய்ப் பரிசீலனைசெய்வது கோர்ட்டாருக்கு யுக்தமாகக் காண்கிறதோ அத்தனைபேரை அதே ஜூரி பரிசீலனைசெய்யலாம்; அல்லது அவர்களுடைய பரிசீலனையில் அதே அஸெஸர்கள் சகாயஞ் செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-272.)

நிலைக்காத பிராதுகளின் மேல் பதிவு.

746. (1) ஹைகோர்ட்டுக்கு முன்பாக நடக்கும் பரிசீலனைகளிலே, யாதொரு குற்றபத்திரிகையாவது அதில் யாதொரு பாகமாவது குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பரிசீலனைசெய்யத் தொடங்குவதற்கு முன்னமே எப்போதாகிலும் பரிஷ்காரமாய் நிலைக்காததாக் ஹைகோர்ட்டுக்குத் தோற்றுமாகில், ஜட்ஜானவர் அந்த குற்றபத்திரிகையின்மேல் அந்தப்படி எழுதிவைக்கலாம்.

அந்தப்பதிவினாலே இன்னதாகுமென்பது.

(2) அப்படி எழுதிவைப்பது ரக்ஷிக்குத்தக்கபடி அந்த குற்றபத்திரிகையின்மேலாவது குற்ற பத்திரிகையின் பாகத்தின்மேலாவது நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படியான பிரயோசனமுள்ளதாகும். (கி. பு. கோடு, பிரிவு-273.

ஜூரியைத் தெரிந்தெடுப்பது.

ஜூரியின் சங்கியை

747. (1) ஹைகோர்ட்டுக்கு முன்பாக நடக்கும் பரிசீலனைகளிலே ஜூரி ஒன்பதுபேர் இருக்கவேண்டும்.

(2) ஸெஷ்ஷன் கோர்ட்டுக்கு முன் ஜூரியைக்கொண்டு செய்கிற பரிசீலனைகளில், ஜூரி மூன்றுபேருக்குக் குறையாமலும் ஒன்பதுபேருக்கு அதிகப்படாமலும், இன்ன டிஸ்திரிக்ட்டுக்கென்றாகிலும் அந்த டிஸ்திரிக்ட்டில் இன்ன இனமான குற்றங்களுக்கென்றாகிலும் செய்யப்பட்ட உத்தரவைக்கொண்டு அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் ஒற்றப்படையாக எத்தனைபேர் இருக்கவேண்டுமென்று உத்தரவுசெய்கிறார்களோ அத்தனைபேர் இருக்கவேணடும். (கி. பு. கோடு, பிரிவு-274.)

748. யூரோப்பியன் அல்லது அமெரிக்கனல்லாதவனை ஸெஷ்ஷன் கோர்ட்டாருக்குமுன் ஜூரியைக்கொண்டு பரிசீலனை செய்வதில், அவன்



கேட்டுக்கொண்டால், ஜூரியில் பெருந்தொகையார் யூரோப்பியர் அல்லது அமெரிக்கர்களல்லாதவர்களாயிருக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-275.)

ஜூரர்களைச் சீட்டுப்போட்டுத் தெரிந்தெடுப்பது.

749. ஜூரர்களாகப் பிரவர்த்திக்க வரவழைக்கப்பட்டவர்களுக்குள்ளே, ஹைகோர்ட்டார் அப்போதைக்கப்போது ஏற்படுத்துகிற விதிகளுக்கிணங்கச் செய்கிறவிதமாய்ச் சீட்டுப்போட்டு ஜூரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். ஆனால்:—

இப்போதிருக்கும் வழக்கம் அப்படியே இருப்பது.

முதலாவது, இந்தப் பிரிவின்படி யாதொரு கோர்ட்டுக்காக விதிகள் செய்யப்படுகிற வரையில், ஜூரர்களைத் தெரிந்தெடுப்பதைக் குறித்து அந்தக் கோர்ட்டில் இப்போது வழங்கிக்கொண்டிருக்கும் ஆசாரத்தையே அனுசரிக்கவேண்டும்;

இரண்டாவது, வரவழைக்கப்பட்டவர்கள் குறைவுபடுகிற பட்சத்தில், வேண்டியிருக்கிற ஜூரர்களைக் கோர்ட்டாருடைய அனுமதியின்மேல், வந்திருக்கும்படியான அப்படிப்பட்ட மற்றவர்களிலிருந்து தெரிந்தெடுத்துக் கொள்ளலாம்;

ஸ்பெஷல் ஜூரர்களுக்கு முன்பாகப் பரிசிலனை.

மூன்றாவது, ராஜதானிகளிலே:—

(a) மரணதண்டனைக்குட்பட்ட குற்றஞ்செய்ததாக ஒருவன்மேல் பிராது கொண்டுவரப்பட்டாலும்,

(b) வேறே யாதொரு விஷயத்தில் ஹைகோர்ட் ஜட்ஜ் எவராவது உத்தரவு செய்தாலும்,

ஸ்பெஷல் ஜூரியைக்குறித்து இதில் பின்னால் நிர்ணயித்திருக்கிற ஜாபிதாவிலிருந்து ஜூரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

நான்காவது சில குற்றங்களின் பரிசீலனை பிரத்தியேகமான ஜூரிகளால் நடத்தலாமென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் நிர்ணயித்திருக்கிற யாதொரு டிஸ்ட்ரிக்ட்டிலே, ஜட்ஜானவர் எந்த கேஸில் உத்தரவு செய்கிறாரோ அந்த கேஸில் 325-வது பிரிவில் நிர்ணயித்திருக்கிற பிரத்தியேகமான ஜூரி ஜாபிதாவிலிருந்து ஜூரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-276.)

ஜூரர்களுடைய பெயர்களைக் கூப்பிடுவது.

750. (1) பிரதி ஜூரரும் தெரிந்தெடுக்கப்படுகையில், அவருடைய பெயரை உறக்கக் கூப்பிடவேண்டும்; அவர் ஹாஜராவதன்மேல், குற்றஞ் சாட்டப்பட்டவனை அவரால் பரிசீலனை செய்யப்படுவதற்கு ஆட்சேபனையுண்டாவென்று கேட்கவேண்டும்.

ஜூரர்களைக் குறித்து ஆட்சேபம்.

(2) அப்போது குற்றஞ்சாட்டப்பட்டவனாவது பிராஸிக்யூட்டராவது அந்த ஜூரரைக்குறித்து ஆட்சேபிக்கலாம்; அப்படிச் செய்கையில் ஆட்சேபனைக்குண்டான ஹேதுக்களைச் சொல்லவேண்டும்.

ஹேதுக்கள் சொல்லாமல் ஆட்சேபம்.

ஆனால், ஹைகோர்ட்டிலே, ஹேதுக்கள் சொல்லாமல் ஆட்சேபனை செய்யப்பட்டால் ராஜாங்கத்தின் பட்சத்தில் எட்டு ஆட்சேபனைகள் வரையிலும், குற்றஞ் சாட்டப்பட்டவன் ஒருவனாயிருந்தாலும் பலராயிருந்தாலும் எட்டு ஆட்சேபனை வரையில் செய்ய இடங்கொடுக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-277.)

ஆட்சேபனைக்குண்டான ஹேதுக்கள்.

751. அடியில் கண்டிருக்கிற ஹேதுக்க[illegible]மேலாவது யாதொரு ஜூரரைக்குறித்துச் செய்யப்பட்ட யாதொரு ஆட்சேபனையானது கோர்ட்டாருக்குத் திருப்திகரமாயிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்,

(a) ஜூரரிடத்திலுள்ள ஏதோ ஒரு அனுமேயமான அல்லது வாஸ்தவமான பட்சபாதம்,

(b) அந்நிய தேசத்தானாயிருப்பது, அந்தந்த காலத்தில் வழங்கி வருகிற யாதொரு சட்டப்படிக்காவது சட்டத்தைப் போல ஊர்ஜிதமாயிருக்கிற விதிப்படிக்காவது வேண்டிருயிக்கிறதிறமையில் குறைவு அல்லது இருபத்தொரு வயதுக்கு உட்பட்டாவது அறுபது வயதுக்கு மேற்பட்டாவதிருப்பது ஆகிய நபரைப்பற்றின ஆட்சேபம்.

(c) வழக்கத்தினாலாவது மதவைராக்கியத்தினாலாவது லௌகிகக் கவலைகளை யெல்லாம் ஒழித்திருக்கிறாரென்பது;

(d) அந்தக் கோர்ட்டிலாவது அந்தக்கோர்ட்டின் கீழாவது அவர் யாதொரு உத்தியோகஞ் செய்கிறாரென்பது;

(e) அவர் யாதொரு போலீஸ் அலுவலை நடத்துகிறார் அல்லது யாதொரு போலீஸ் அலுவல் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது;

(f) யாதொரு குற்றத்தைக்குறித்து அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறாரென்பதனாலே அப்படிப்பட்டவர் ஜூரியாகப் பிரவர்த்திப்பதற்குத் தகாதவரென்று கோர்ட்டாருக்கு அபிப்பிராயமுண்டானால் அப்படிப் பட்டது;

(g) எந்தப் பாஷையில் சாட்சியஞ் சொல்லப்படுகிறதோ, அல்லது அந்தச்சாட்சியம் மொழிபெயர்க்கப்பட்டால் எந்தப் பாஷையில் அது மொழிபெயர்க்கப்படுகிறதோ அந்தப் பாஷையைத் தெரிந்துகொள்ள அவருக்குச் சக்தியில்லையென்பது;

(h) வேறே யாதொரு சங்கதியினாலே அவர் ஜூரராயிருக்கத் தகாதவரென்று கோர்ட்டாருக்கு அபிப்பிராயமுண்டானால் அப்படிப்பட்டது. (இ. பு. கோடு, பிரிவு-278.)

ஆட்சேபனையின் தீர்மானம்.

752. (1) யாதொரு ஜூரரைக்குறித்துச் செய்யப்பட்ட பிரதி ஆட்சேபத்தையும் கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டும்; அந்தத் தீர்மானம் ரிக்கார்ட் செய்யப்படவேண்டியதுமல்லாமல் முடிவானதுமாகும்.

எவர்மேல் ஆட்சேபனை யேற்றுக் கொள்ளப்படுகிறதோ அந்த ஜூரருக்குப்பதிலாக வேறே ஏற்படுத்துவது.

(2) ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டால், அப்படிப்பட்ட ஜூரருக்குப்பதிலாக, ஸம்மன்படி வந்திருக்கிறவர்களில் 276-வது பிரிவில் விதித்திருக்கிற விதமாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட வேறே யாதொரு ஜூரர் ஹாஜரில்லாவிட்டால், அப்போது ஜூரர்களின் ஜாபிதாவிலே பெயர் தாக்கலாய்க்கோர்ட்டில் வந்திருக்கிற வேறே யாதொரு நபரையாவது, ஜூரியாகப் பிரவர்த்திக்கத் தகுந்தவரென்று கோர்ட்டாருக்குத் தோற்றி அவ்விடத்தில் வந்திருக்கிற வேறே யாதொரு நபரையாவது ஏற்படுத்தவேண்டும்.

ஆனால், அப்படிப்பட்ட ஜூரர் அல்லது வேறே நபரைக்குறித்து 278-வது பிரிவின்படி ஆட்சேபனை செய்யப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் அப்படி ஏற்படுத்தக்கூடாது. (இ. பு. கோடு, பிரிவு-279.)



ஜூரியில் தலைவன்.

753. (1) ஜூரர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பிறகு, அவர்கள் தங்களிலொருவரைத் தலைவராக நியமித்துக்கொள்ளவேண்டும்.

(2) அந்தத் தலைவரானவர் ஜூரி ஆலோசனையில் தலைமையாயிருக்கவும், ஜூரியின் தீர்மானத்தைச் சொல்லவும், ஜூரியாவது ஜூரர்களிலெவராவது தெரிந்துகொள்ளவேண்டுமென்ற சங்கதியைக் கோர்ட்டாரைக்கேட்கவும் வேண்டும்.

(3) ஜூரியில் பெருந்தொகையார், நியாயமானதென்று ஜட்ஜ் நினைக்கிற காலத்திற்குள் ஒரு தலைவரை நியமிப்பதில் ஒருமைப்படாவிட்டால், அந்தத் தலைவரைக் கோர்ட்டார் நியமிக்கவேண்டும். (இ. பு. கோடு, பிரிவு-280.)

ஜூரர்களைப் பிரமாணஞ் செய்விப்பது.

754. தலைவர் நியமிக்கப்பட்டபின்பு, 1873-ம் ஒவது இந்துதேசத்துப்பிரமாண ஆக்ட்டின்படி ஜூரர்களைப் பிரமாணஞ் செய்விக்கவேண்டும். (இ. பு. கோடு, பிரிவு-281.)

ஜூரர் ஹாஜரில்லாமற் போவது முதலிய சங்கதிகளில் நடவடிக்கை.

755. (1) ஜூரியால் பரிசீலனை நடந்துகொண்டிருக்கையில், தீர்மானம் தெரிவிக்கப்படுவதற்கு முன்னமே எப்போதாவது, யாதொரு ஜூரரானவர் யாதொரு தகுந்த காரணத்தினாலே பரிசீலனை முழுவதும் ஹாஜரிலிருக்கத் தடைபட்டாலும், யாதொரு ஜூரர் வராதிருந்து, அவரை வரும்படி செய்வதற்குச் ஸாத்தியப்படாவிட்டாலும், எந்தப்பாஷையில் சாட்சியத்தை மொழிபெயர்க்கிற பட்சத்தில் அது எந்தப்பாஷையில் மொழிபெயர்க்கப்படுகிறதோ அந்தப்பாஷையைத் தெரிந்துகொள்ள யாதொரு ஜூரருக்குச் சக்தியில்லையென்று தெரியவந்தாலும், நூதனமாய் ஒரு ஜூரரையாவது சேர்க்கவேண்டும்; அல்லது அந்த ஜதை ஜூரியை எடுத்துவிட்டு வேறே ஜதை ஜூரியையாவது தெரிந்தெடுக்கவேண்டும்.

(2) இந்த இரண்டுவகைகளில் எது செய்தபோதிலும், பரிசீலனையை மறுபடி முதலிலிருந்து நடத்தவேண்டும். (இ. பு. கோடு, பிரிவு-282.)

756. மேலும், (bar) மறியற்கூட்டிலிருக்கும் கைதி அசக்தனாய் விட்டால், ஜட்ஜானவர் ஜூரியை விடுதலை பண்ணலாம். (இ. பு. கோடு, பிரிவு-283.)

## அஸெஸர்களைத் தெரிந்தெடுப்பது.

அஸெஸர்களைத் தெரிந்தெடுக்கிற விதம்.

757. அஸெஸர்களைச் சகாயமாய் வைத்துக்கொண்டு பரிசீலனை செய்கிறதினால், அஸெஸர்களாகப் பிரவர்த்திக்க வரவழைக்கப்பட்டவர்களுக்குள் ஜட்ஜுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி இரண்டு அல்லது மேற்பட்ட பெயரைத் தெரிந்தெடுக்கவேண்டும். (இ. பு. கோடு பிரிவு-284.)

758. (1) அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனை நடந்துகொண்டிருக்கையில் தீர்மானத்திற்கு முன்னமே எப்போதாவது யாதொரு அஸெஸருக்கு யாதொரு தகுந்த காரணத்தினாலே அந்தப்பரிசீலனை முழுதுமிருக்கத் தடங்கலுண்டானாலும், அவர் வராதிருந்து அவரை ஹாஜராகும்படிச் செய்வதற்குச் சாத்தியப்படாவிட்டாலும், மற்ற அஸெஸர் அல்லது அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு அந்தப்பரிசீலனையை நடத்தவேண்டும்.

(2) எல்லா அஸெஸர்களுக்கும் ஹாஜரிலிருக்கத் தடங்கலுண்டானாலும், அவர்களெல்லாரும் வராதிருந்தாலும், நடவடிக்கையை நிறுத்தி,

வேறே புது அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனையை மறுபடி முதலிலிருந்து நடத்தவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-285.)

## வாதி எதிரிபக்கம் சாக்ஷி விசாரணை ஆரம்பமுதல் கேசு முடிவுவரையுள்ள நடவடிக்கைகள்.

*[illegible] நடத்துவதற்குக் கேஸ் ஆரம்பம்.*

759. (1) ஜூரர்களாவது அஸெஸர்களாவது தெரிந்தெடுக்கப்பட்ட பின்பு, ப்ராஸிக்யூட்டரானவர் சாட்டப்பட்ட குற்றத்தின் விவரத்தை இந்தியன் பினல்கோடிலிருந்தாகிலும் வேறே யாதொரு சட்டத்திலிருந்தாகிலும் எடுத்து வாசித்து, குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று இன்ன சாட்சியத்தினால் தாம்ருஜூப்படுத்தக் கோருகிறதாகச் சுருக்கமாய்ச்சொல்லித் தம்முடைய கேஸை ஆரம்பிக்கவேண்டும்.

*சாட்சிகளின் விசாரணை.*

(2) பின்பு ப்ராஸிக்யூட்டரானவர் தம் சாட்சிகளை விசாரணை செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-286.)

760. கம்மிட்செய்கிற மாஜிஸ்திரேட்டினுலாவது அவருக்கு முன்பாகவாவது குற்றஞ்சாட்டப்பட்டவனை விசாரணைசெய்து கிரமமாய் ரிகார்ட் செய்யப்பட்டிருக்கிற ஸ்டேட்டுமெண்டை ஸெஷ்ஷன் கோர்ட்டில் சாட்சியமாக வாசிக்கப்படும். (கி. பு. கோடு, பிரிவு-287.)

*பிரதம விசாரணையில் கொடுக்கப்பட்ட சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கது.*

761. குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கெதிரிலே, கம்மிட்செய்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக யாதொரு சாட்சியால் கொடுக்கப்பட்டுக் கிரமமாய் வாங்கப்பட்டிருக்கிற சாட்சியத்தை, அந்தச்சாட்சி கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்படுவானாகில், ஜட்ஜூக்கு யுக்தமாகத் தோற்றினால் அந்தக் கேஸில், சாட்சியமாக எடுத்துக்கொள்ளலாம். (கி. பு. கோடு, பிரிவு-288.)

762. (1) வாதிபட்சம் சாட்சிகளின் விசாரணையும் குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய விசாரணை ஏதாவதிருந்தால் அதுவும் முடிந்தபின்பு, சாட்சிகளை அழைக்க அபிப்பிராயப்படுகிறானோவென்று குற்றஞ்சாட்டப்பட்டவனைக் கேட்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லையென்று அவன் சொன்னால், ப்ராஸிக்யூட்டரானவர் கேஸின் சங்கதியை விவரித்துச்சொல்லலாம்; குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றஞ் செய்திருக்கிறானென்பதற்கு ருஜூவில்லையென்று கோர்ட்டார் நினைப்பார்களாகில், அந்தக்கோர்ட்டார் அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே குற்றவாளியல்லவென்று தீர்மான மெழுதலாம்; ஜூரியைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே குற்றவாளியல்லவென்று தீர்மானம் சொல்லும்படி ஜூரிக்குக் கற்பிக்கலாம்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவனாவது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பலரிருந்தால் அவர்களிலெவனாவது சாட்சிகளையழைக்கத்தான் அபிப்பிராயப்படுகிறதாகச் சொன்னால், குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றஞ்செய்தானென்பதற்கு ருஜூவில்லையென்று கோர்ட்டார் எண்ணுவார்களாகில், அப்போது கோர்ட்டார் அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே, குற்றவாளியல்லவென்று தீர்மானமெழுதலாம்; ஜூரியைக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே குற்றவாளியல்லவென்று தீர்மானம் சொல்லும்படி ஜூரிக்குக் கற்பிக்கலாம்.



(4) குற்றஞ்சாட்டப்பட்டவனாவது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பலரிருந்தால் அவர்களிலெவனாவது சாட்சிகளையழைக்கத்தான் அபிப்பிராயப்படுவதாகச்சொல்லி, அந்தக்குற்றத்தை அவன் செய்திருக்கிறானென்பதற்கு ருஜூவிருக்கிறதென்று கோர்ட்டார் நினைத்தாலும், சாட்சிகளையழைக்கத் தனக்கு அபிப்பிராயமில்லையென்று அவன் சொல்லுவதன்மேல் ப்ராஸிக்யூட்டரானவர் அந்தக்கேஸின் சங்கதிகளைத் விவரித்துச்சொல்லி, குற்றஞ்சாட்டப்பட்டவன் அந்தக்குற்றஞ் செய்திருக்கிறானென்பதற்கு ருஜூவிருக்கிறதென்று கோர்ட்டார் நினைத்தாலும், குற்றஞ்சாட்டப்பட்டவனைத் தன்பட்சத்தில் வாதிக்கும்படி கோர்ட்டார் அவனுக்கு உத்தரவு செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு - 289.)

*குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்சத்தில் வாதிப்பது.*

763. குற்றஞ்சாட்டப்பட்டவனாவது அவனுடைய வக்கீலாவது அப்போது, எதை ஆதாரமாகக் கொள்ளத்தான் உத்தேசிக்கிறானோ அந்தச் சங்கதிகள் அல்லது சட்டத்தையும், பிராதுபட்சத்துச் சாட்சியத்தைக்குறித்துத் தனக்கு அவசியமாகத்தோற்றுகிற குறிப்புகளையும் எடுத்துச்சொல்லித் தன்னுடைய கேஸை ஆரம்பிக்கலாம். பின்பு அவன் தன் பட்சம் சாட்சிகளிருந்தால் அவர்களை விசாரணை செய்யலாம்; அவர்களைக் குறுக்குக்கேள்வியும் மறு கேள்வியும் கேட்கிறபட்சத்தில் அப்படியான பிறகு, அவன் தன்னுடைய கேஸின் சங்கதியை மொத்தமாய் விவரித்துச் சொல்லலாம். (கி. பு. கோடு, பிரிவு-290.)

*சாட்சிகளை விசாரணை செய்வதைக்குறித்தும் அவர்களை ஸம்மனனுப்பி வரவழைப்பதைக்குறித்தும் குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குள்ள சுதந்தரம்.*

764. குற்றஞ்சாட்டப்பட்டவனால் முந்தி குறிக்கப்படாத யாதொரு சாட்சி ஹாஜராயிருந்தால், குற்றஞ் சாட்டப்பட்டவன் அந்த சாட்சியை விசாரணைசெய்து விடவேண்டும்; ஆனால், 211 – வது, 231 – வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, குற்றஞ் சாட்டப்பட்டவன் எவரால் தான் பரிசீலனைக்குக் கம்மிட்பண்ணப்பட்டானோ அந்த மாஜிஸ்திரேட்டினிடத்தில் கொடுக்கப்பட்ட ஜாபிதாவில் கண்டிருக்கிற சாட்சிகள்தவிர வேறே யாதொரு சாட்சியையும் ஸம்மனனுப்பி வரவழைக்கும்படி அவன் பாத்தியதை கொண்டாடக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-291.)

*மறுமொழி சொல்ல ப்ராஸிக்யூட்டருக்குள்ள சுதந்தரம்.*

765. குற்றஞ் சாட்டப்பட்டவனாவது குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் எவனாவது யாதொரு சாட்சியைக் கொண்டுவந்து காட்டினால், ப்ராஸிக்யூட்டரானவர் மறுமொழிசொல்லச் சுதந்தரமுடையவராவார் (கி. பு. கோடு, பிரிவு 292.)

*ஜூரியாவது அஸெஸர்களாவது பார்வையிடுவது.*

766. (1) சாட்டப்பட்ட குற்றம் எவ்விடத்தில் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அந்த இடத்தையாவது, பரிசீலனைக்கு முக்கியமான வேறே யாதொரு காரியம் எவ்விடத்தில் நடந்ததாகச் சொல்லப்படுகிறதோ அந்த வேறோரிடத்தையாவது, ஜூரியாகிலும் அஸெஸர்களாகிலும் பார்வையிடவேண்டுமென்று கோர்ட்டார் எண்ணுகிற பட்சத்தில், அந்தப்படியே உத்தரவு செய்யவேண்டும்; அதற்குமேல் ஜூரியையாவது அஸெஸர்களையாவது கோர்ட் உத்தியோகஸ்தர் தம்முடைய வசமாய் ஒரு கூட்டமாக இட்டுக்கொண்டு, கோர்ட்டாரால் நியமிக்கப்படுகிறவன் அவர்களுக்குக் காட்டவேண்டிய மேற்படி இடத்திற்குப் போகவேண்டும்.

(2) அந்த உத்தியோகஸ்தரானவர் கோர்ட்டாருடைய அனுமதியில்லாமல் ஜூரி அல்லது அஸெஸர்களில் எவரோடாவது வேறே எவனை

யாரிலும் பேசவொட்டவுங்கூடாது ; எவ்வித அறிவிப்பும் செய்யவொட்டவுங்கூடாது ; கோர்ட்டார் மற்றப்படி உத்தரவுசெய்தாலொழிய, பார்வையிட்டான பின்பு உடனே அவர்களைக் கோர்ட்டுக்கு மறுபடியும் இட்டுக்கொண்டு வந்துவிடவேண்டும்.' (கி. பு. கோடு, பிரிவு-293.)

இன்னபடிக் காரணால் ஜூரரையாவது விசாரணை செய்யலாம்.

767. யாதொரு ஜூரராவது ஒற்றுமையான யாதொரு சங்கதியை நேராய்த் தெரிந்துகொண்டவராயிருந்தால், அது தனக்குத் தெரியுமென்று ஜட்ஜிக்குத் தெரிவிப்பது அவருடைய கடமையாகும், அதற்குமேல் அவரை வேறே யாதொரு சாட்சி விமரிசை செய்கிறவிதமாகவே பிரமாணஞ் செய்வித்து விமரிசையும் எதிர் விமரிசையும் மறுவிமரிசையுஞ்செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-294.)

768. ஒரு கேசில் ஜூரராகவாவது, அஸெஸ்ஸராகவாவதிருந்தவர் அந்தக் கேசில் விசாரணை நிறுத்திவைக்கப்பட்டால், பின்பு விசாரணை நடத்துங் காலத்திலும் பின்னிட்டு நடத்தும் அந்தந்த காலத்திலும் விசாரணை முடிகிறவரையிலே ஜூரியாவது அஸெஸர்களாவது வந்திருக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-295.)

ஜூரியை அடைத்து வைப்பது.

769. ஹைகோர்ட்டார், ஒரு நாளைக்குநிகமாய் அந்தக்கோர்ட்டுக்கு முன்பாக யாதொரு விசாரணை நடக்குங்காலத்திலும் ஜூரியை ஒன்றாய் வைத்திருப்பதைக் குறித்து அப்போதைக்கப்போது விதிகள் செய்யலாம்; அந்த விதிகளுக்குட்பட்டு, ஜட்ஜானவர் கோர்ட் உத்தியோகஸ்தர் வசத்திலே ஜூரர்களை ஒன்றாய்வைத்திருக்க வேண்டியதோ, அல்லது அவர்களை அவரவர் வீட்டுக்குப் போகவொட்ட வேண்டியதோ அதைக்குறித்து உத்தரவு பண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு-297.)

ஜூரியால் பரிசீலனை செய்யப்பட்ட கேஸுகளில் பரிசீலனைமுடிவு.

770. ஜூரியால் பரிசீலனை செய்யப்படுகிற கேஸுகளிலே குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சத்து வாதமும் அதற்கு ஏதாவது பிரதிவாதமுண்டாகில் அதுவும் முடிந்தபின்பு, கோர்ட்டார் பிராது பட்சம் சாட்சியத்தையும் குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்சம் சாட்சியத்தையும் விவரித்துச் சொல்லி, ஜூரி அனுசரித்து நடக்கவேண்டிய சட்டத்தையும் எடுத்துக்காட்டி அவர்களுக்குக் கற்பனைகள் சொல்லவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-297.)

771. அப்படிப்பட்ட கேஸுகளிலே—

(a) பரிசீலனை நடந்துகொண்டிருக்கையில் சட்டசம்மந்தமாய் ஏற்படுகிற சகல விஷயங்களையும், முக்கியமாய், ருஜுப்படுத்த உத்தேசிக்கப்படுகிற சங்கதிகளின் ஒற்றுமையைக் குறித்த சகல விஷயங்களையும், இருகக்ஷிக்காரர்களாலாவது அவர்கள் பட்சத்திலாவது கேட்கப்படுகிற சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதுவென்பதையும் அப்படி கேட்கப்படுகிற கேள்விகள் கிரமமானவைகளா வென்பதையும் தீர்மானிப்பதும் ; தமக்கு யுக்தமாகத்தோற்றினால், இருகக்ஷிக்காரர்களாலும் ஆட்சேபிக்கப்பட்டாலும் படாவிட்டாலும், ஏற்றுக்கொள்ளத்தகாத சாட்சியங் கொண்டு வருவதைத் தடுப்பதும் ;



(b) பரிசீலனையில் சாட்சியமாகக் கொடுக்கப்பட்ட சகல தஸ்தவேஜுகளின் அர்த்தத்தையும் வாக்கியங்களின் பொருத்தத்தையுங் குறித்துத் தீர்மானிப்பதும் ;

(c) குறிப்பான விஷயங்களைக்குறித்துச் சாட்சியங் கொடுக்கக்கூடுமானதாய்ச் செய்யும் பொருட்டு ருஜுப்படுத்துவதற்கு அவசியமாயிருக்கும்படியான சங்கதியைச் சேர்ந்த சகல விஷயங்களைக்குறித்தும் தீர்மானிப்பதும்;

(d) உண்டாகிற யாதொரு விஷயத்தைத் தாம் தீர்மானிக்கவேண்டியதோ அல்லது ஜூரி தீர்மானிக்கவேண்டியதோ வென்று நிச்சயிப்பதும், ஜட்ஜினுடைய கடமையாகும் :

இந்த அம்சத்தைப்பற்றி அவர் செய்கிற தீர்மானத்தின்படி ஜூரர்கள் நடந்து கொள்ளவேண்டும்.

(2) ஜட்ஜானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினால், கேஸை அவர் தொகுத்துச் சொல்லுகையில், நடவடிக்கைக்கு ஒற்றுமையானதாகிய சங்கதியைப்பற்றின யாதொரு விஷயத்தைக் குறித்தாவது சட்டமும் சங்கதியும் கலந்திருக்கிற யாதொரு விஷயத்தைக் குறித்தாவது தமது அபிப்பிராயத்தை ஜூரிக்குச் சொல்லலாம்.

## திருஷ்டாந்தங்கள்.

(a) கேஸிலே சாட்சியாயிராத ஒருவனுடைய வாய்ப்பிறப்பைக்குறித்த சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகச் செய்யும்படியான சங்கதிகள் ருஜுவாயிருக்கிறதென்கிற ஹேதுவின்மேல் அப்படிப்பட்ட வாய்ப்பிறப்பை ருஜுப்படுத்தும்படி பிரேரேபனை செய்யப்படுகிறது.

அந்தச் சங்கதிகள் உண்டாயிருக்கிறது ருஜுசெய்யப்பட்டதோ இல்லையோவென்று நிச்சயிப்பது ஜட்ஜியினுடைய காரியமேயல்லாமல் ஜூரியினுடைய காரியமல்ல.

(d) அசல் பிரதி போக்கடிந்து போய்விட்டதென்றாவது அழித்துப் போடப்பட்டதென்றாவது சொல்லப்படுகிற தஸ்தவேஜுக்குறித்து உபசாட்சியஞ்சொல்லும்படி பிரேரேபனை செய்யப்படுகிறது.

அசல் பிரதி போக்கடிந்து போய்விட்டதென்றாவது அழித்துவிடப்பட்டதென்றாவது நிச்சயிப்பது ஜட்ஜியினுடைய கடமை.(கி. பு. கோடு, பிரிவு-298.)

772. ஜூரியினுடைய கடமை என்னவென்றால்:—

(a) சங்கதிகளைக்குறித்து இன்னகருத்து எதார்த்தமானதென்று நிச்சயிப்பதும், பின்பு அப்படிப்பட்ட கருத்தின் பிரகாரம் ஜட்ஜ் வழிகாட்டுகிறபடி என்ன தீர்மானம் சொல்லவேண்டியதோ அந்தத் தீர்மானத்தைச் சொல்லுவதும் ;

(b) வழக்கமில்லாத அர்த்தத்திலே பிரயோகிக்கப்பட்டிருக்கிற வார்த்தைகள் தஸ்தவேஜுகளில் பிரயோகிக்கப்பட்டிருந்தாலும் இராவிட்டாலும், அப்படிப்பட்ட வார்த்தைகள் இன்ன அர்த்தம் கொள்ளுகின்றனவென்றும், (சட்டத்தைப்பற்றின சொற்கள் தவிர மற்ற) குறிப்புச் சொற்கள் இன்ன அர்த்தம் கொள்ளுகிறதென்றும் நிச்சயிப்பது அவசியமாயிருந்தால், அப்படிப்பட்ட சகல வார்த்தைகளின் அர்த்தத்தையும் சொற்களின் அர்த்தத்தையும்

(c) சங்கதியைப்பற்றி அம்சங்களாக எண்ணவேண்டியதென்று சட்டத்தில் சொல்லியிருக்கிற சகல அம்சங்களையும் தீர்மானிப்பதும் ;

(d) இன்னதென்று குறிக்காமல் பொதுப்பட்ட வசனங்கள் குறிப்பான விஷயங்களுக்குச் சம்பந்தப்படுகிறதோ சம்பந்தப்படவில்லையோவென்று தீர்மானிப்பதுமே ; ஆனால், அப்படிப்பட்ட வசனங்கள் சட்டசம்பந்தமான நடவடிக்கைக்குச் சம்பந்தப்படுகிற விஷயத்திலாவது, அவைகளின் அர்த்தம் சட்டத்தினாலே நிச்சயிக்கப்பட்டிருக்கிற விஷயத்திலாவது, அவைகளின் அர்த்தத்தை நிச்சயிப்பது ஜட்ஜியினுடைய கடமையாகும்.

## திருஷ்டாந்தங்கள்.

(a) A என்பவன் B என்பவனைக் கொலைசெய்ததற்காகப் பரிசீலனை செய்யப்படுகிறான்.

கொலைக்கும் அநியாய மரணத்திற்குமுள்ள பேதத்தை ஜூரிக்கு விவரிப்பதும், சங்கதிகளின் இன்னின்ன நோக்கத்தைக்கொண்டு கொலை செய்தவனென்றாவது அநியாய மரணமுண்டு பண்ணினவனென்றாவது A என்டவனைத் தீர்மானிக்கவேண்டியிருக்கிறதென்றாகிலும், குற்றவாளியல்லவென்று அவனை விடுதலைசெய்யவேண்டியிருக்கிறதென்றாகிலும் அவர்களுக்குச்சொல்லுவதும் ஜட்ஜினுடைய கடமையாகும்.

சங்கதிகளின் நோக்கங்களில் இன்னது எதார்த்தமென்று நிச்சயித்து, ஜட்ஜ் வழிகாட்டினது சரியானதாயிருந்தாலும் பிசகானதாயிருந்தாலும் ஜூரி அதை ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், ஜட்ஜி வழிகாட்டியபடி தீர்மானம் சொல்லுவது ஜூரியின் கடமை.

(b) விஷயமானது நியாயமான திறமையோடாவது தகுந்த ஜாக்கிரதையோடாவது வேலைசெய்யப்பட்டதோ இல்லையோவென்பது இன்ன அம்சத்தைக் குறித்து ஒருவனுக்கு நியாயமான நம்பிக்கை உண்டாயிருந்ததோ இல்லையோ வென்பது.

இவைகளில் ஒவ்வொன்றும் ஜூரி நிச்சயிக்கும்படியான விஷயம். (கி. பு. கோடு, பிரிவு-299.)

ஆலோசிக்கப்போவது.

773. ஜூரியைக்கொண்டு பரிசீலனைசெய்கிற கேசுகளிலே, ஜட்ஜானவர் சங்கதிகளை எடுத்துச்சொல்லி முடிந்தபின்பு, ஜூரி தங்களுடைய தீர்மானத்தைக்குறித்து ஆலோசிக்கப்போகலாம்.

கோர்ட்டாருடைய உத்தரவில்லாமல், ஜூரர் தவிர வேறொருவரும் அப்படிப்பட்ட ஜூரியில் எவரோடாவது பேசவுங்கூடாது எவ்வித சமாசாரப் போக்குவரவு செய்யவுங்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-300.)

தீர்மானத்தைத் தெரிவிப்பது.

774. ஜூரி தங்கள் தீர்மானத்தை ஆலோசித்தபின்பு, அவர்கள் தீர்மானம் இன்னதென்றாவது பெருந்தொகையாருடைய தீர்மானம் இன்னதென்றாவது அவர்களில் தலைவராயிருப்பவர் ஜட்ஜுக்குத் தெரிவிக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-301.)

ஜூரி அபிப்பிராயத்தில் வேறுபட்டால் இன்னது செய்வது.

775. ஜூரி ஒருமிக்காவிட்டால், ஜட்ஜானவர் அவர்களை இன்னும் ஆலோசிக்கப் போகச்சொல்லலாம், ஜட்ஜுக்கு நியாயமாகத் தோற்றுகிற காலத்திற்குப் பின்பு, ஜூரி ஒருமிக்காவிட்டாலும் அவர்கள் தங்கள் தீர்மானத்தைச் சொல்லலாம். (கி. பு. கோடு, பிரிவு-302.)



776. (1) கோர்ட்டாரால்வேறே விதமாய் உத்தரவு செய்யப்பட்டாலொழிய, குற்றஞ் சாட்டப்பட்டவன் எவைகளைக்குறித்துப் பரிசீலனை செய்யப்படுகிறானோ அந்த குற்றங்களைக் குறித்தெல்லாம் ஜூரி தீர்மானஞ் சொல்லவேண்டும் ; அவர்களுடைய தீர்மானம் இன்னதென்று நிச்சயிப்பதற்கு அவசியமான கேழ்விகளை ஜட்ஜ் அவர்களைக் கேட்கலாம்.

(2) அப்படிப்பட்ட கேழ்விகளையும் அவைகளுக்கு ஜவாப்புகளை [illegible] வேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-303.)

தீர்மானத்தைத் திருத்துவது.

777. தற்செயலாயாவது பிசகினாலாவது தப்பாய்த் தீர்மானஞ் சொல்லப்பட்டால், அது ரிகார்ட் செய்யப்படுவதற்கு முன்னமேயாகிலும் ரிகார்ட்செய்யப்பட்ட பின்பு அடுத்து உடனேயாகிலும் அந்தத் தீர்மானத்தை ஜூரி திருத்தலாம் ; கடைசியாய்த் திருத்தப்பட்டபடி அந்தத் தீர்மானமிருக்க வேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-304.)

ஹைக்கோர்ட்டிலே இன்னபடிக்காகல் தீர்மானம் சொல்லுவது.

778. (1) ஹைகோர்ட்டுக்கு முன்பாகப் பரிசீலனை செய்யப்பட்ட யாதொரு கேஸிலே, ஜூரி தங்கள் அபிப்பிராயத்தில் ஒருமைப்பட்டாலும், அவர்களில் ஆறுபேர் ஒரு அபிப்பிராயப்பட்டு அவர்களோடு ஜட்ஜானவர் ஏகோபித்தாலும் அந்த அபிப்பிராயத்தின்படி ஜட்ஜானவர் தீர்ப்பைச் சொல்ல வேண்டும்,

(2) அப்படிப்பட்ட யாதொரு கேஸிலே ஜூரி தாங்கள் ஒருமைப்படுவதில்லையென்று தெரிந்துகொண்டபோதிலும் அவர்களில் ஆறுபேர் ஒரு அபிப்பிராயப்பட்டால், அப்படியே தலைவன் ஜட்ஜுக்குத் தெரிவிக்க வேண்டும்.

(3) பெருந் தொகையாரோடு ஜட்ஜானவர் ஏகோபியாவிட்டால், அவர் ஜூரியை உடனே விடுதலை பண்ணவேண்டும்.

(4) அபிப்பிராயத்தில் ஒருமைப்படுகிறவர்கள் ஆறுபேர் இல்லாவிட்டால், ஜட்ஜானவர் தமக்கு நியாயமாகத்தோற்றுகிற காலங்கடந்த பின்பு ஜூரியை விடுதலை செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-305.)

ஸெஷ்ஷன் கோர்ட்டிலே இன்னபடிக்காகல் தீர்மானஞ் சொல்லுவது.

779. (1) ஸெஷ்ஷன்கோர்ட்டுக்கு முன்பாகப் பரிசீலனைசெய்யப்பட்ட யாதொரு கேஸிலே, ஜூரர்கள் அல்லது ஜூரர்களில் பெருந்தொகையாருடைய தீர்மானத்தினின்று தான் வேறுபடுவதாகத் தெரிவிப்பது ஜட்ஜுக்கு அவசியமாகத் தோற்றாவிட்டால், அப்பிரகாரமே அவர் தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

2. குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளியல்லவென்று விடுதலை செய்யப்பட்டால், குற்றவாளியல்லவென்று விடுதலைத் தீர்ப்பை ஜட்ஜ் ரிகார்ட் பண்ணவேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றவாளி யென்று, தீர்மானிக்கப்பட்டால், ஜட்ஜானவர் சட்டப்படி அவனுக்குச் சிட்சை விதிக்க வேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-306.)

ஸெஷ்ஷன்ஜட்ஜ் தீர்மானத்தினின்று வேறுபட்டால் நடவடிக்கை.

780. (1) அப்படிப்பட்ட யாதொரு கேஸிலே, குற்றஞ்சாட்டப்பட்டவன் எவைகளின்மேல் பரிசீலனை செய்யப்பட்டானோ அப்படிப்பட்ட பிராதுகள் எல்லாவற்றையுங் குறித்தாவது அவைகளில் எதைக்குறித்தாவது ஜூரர்களாகிலும் ஜூரர்களில் பெருந்தொகையாராகிலும் தெரிவித்த தீர்மானத்தை ஜட்ஜ் முற்றிலும் ஒத்துக்கொள்ளாமல், நீதி நடப்பிக்கும்பொருட்டு அதனாலே அந்தக் கேஸை ஹைகோர்ட்டாருக்கு அனுப்புவது அவசியமென்று

தெளிவாக அபிப்பிராயப்பட்டால், அவர் அப்படியே அந்தக்கேஸை அனுப்ப வேண்டும்; அப்படிச்செய்கையில் அவர் தம்முடைய அபிப்பிராயத்திற்குண்டான ஹேதுக்களை ரிகார்ட் பண்ணவும், குற்றவாளியல்லவென்று விடுதலைத் தீர்மானம் தெரிவிக்கப்பட்டிருந்தால், செய்யப்பட்டிருப்பதாகத்தாம் எண்ணுகிற குற்றத்தைக்கண்டெழுதவும் வேண்டும்.

(2) ஜட்ஜானவர் இந்தப்பிரிவின்படி யாதொரு கேஸை அனுப்பினால், குற்றஞ்சாட்டப்பட்டவன் எவைகளின்மேல் பரிசீலனை [illegible] டானோ அந்தப் பிராதுகளிலெதைக் குறித்தாகிலும் [illegible] குற்றவாளியல்லவென்றாவது குற்றவாளிதானென்றாவது அவர் தீர்ப்பு ரிகார்ட் பண்ணக்கூடாது; அவர் குற்றஞ்சாட்டப்பட்டவனை மறுபடி காவலுக்காவது அனுப்பலாம், அல்லது அவனை ஹாஜர் ஜாமீன் வாங்கிக்கொண்டாவது விடலாம்.

(3) அப்படி அனுப்பப்பட்ட கேஸைக்குறித்துப் பிரவர்த்திப்பதில், ஹைகோர்ட்டார் அப்பீலில் தாங்கள் செலுத்தும்படியான அதிகாரங்களிலெதையாவது செலுத்தலாம்; மேலும் அதற்குட்பட்டு, சாட்சியம் முழுவதையும் யோசித்தபிறகும், ஸெஷன் ஜட்ஜினுடைய அபிப்பிராயத்தையும் ஜூரியினுடைய அபிப்பிராயத்தையும் தீர்க்கமாய் யோசித்தபிறகு, பிராது தயார்செய்து ஜூரி முன்கொண்டு வரப்பட்டதன்மேல் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவனை எதைக்குறித்துக் குற்றவாளியென்று தீர்மானிக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு குற்றத்தைக்குறித்து ஹைகோர்ட்டார் அவனைக் குற்றவாளியல்லவென்றாவது தீர்மானிக்கவேண்டும்; அவர்கள் அவனைக்குற்றவாளியென்று தீர்மானிக்கிறபட்சத்தில், ஸெஷன்கோர்ட்டார் விதித்திருக்கத்தக்க சிட்சையை விதிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-307.)

## ஜூரியை விடுதலை செய்தபின்பு குற்றஞ்சாட்டப்பட்டவனை மறுபடி பரிசீலனை பண்ணுவது.

*ஜூரியைவிடுதலை செய்தபின்புகுற்றஞ்சாட்டப்பட்டவனைமறுபடி பரிசீலனை பண்ணுவது.*

781. ஜூரி விடுதலைசெய்யப்பட்டால், குற்றஞ்சாட்டப்பட்டவனை (சங்கதிக்குத்தக்கபடி) காவலிலே வைத்துக்கொண்டாவது ஜாமீன்மேல் விட்டாவதிருந்து, அவனை மறுபடி பரிசீலனை செய்யவேண்டியதில்லையென்று ஜட்ஜுக்குத்தோன்றினாலொழிய, வேறே ஜூரியைக்கொண்டு அவனைப்பரிசீலனை செய்யவேண்டும்; அவனை மறுபடி பரிசீலனை செய்யவேண்டியதில்லையென்று தோற்றினால் அந்தப்படியே ஜட்ஜானவர் குற்றபத்திரிகையில் பதிவுசெய்யவேண்டும்; அப்படி பதிவுசெய்வது அவனைக்குற்றவாளியல்லவென்று விடுதலை செய்வதாகும். (கி. பு. கோடு, பிரிவு-308.)

## அஸெஸர்களோடு பரிசீலனைசெய்யப்பட்ட கேஸுகளிலே பரிசீலனையின் முடிவு.

*அஸெஸர்களுடைய அபிப்பிராயங்களைச்சொல்லுவ*

782. (1) அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டு, பரிசீலனை செய்யப்பட்ட கேஸிலே, குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்சத்து வாதமும் அதற்கு ஏதாவது ப்ராஸிக்யூட்டருக்கு எதிர்வாதமிருந்தால் அதுவும் முடிந்த பின்பு, கோர்ட்டார் பிராதுபட்சம் சாட்சியத்தையும் தொகுத்துச் சொல்லலாம். பிறகு அஸெஸர்களில் ஒவ்வொருவரையும் தம்தம் அபிப்பிராயத்தை வாய்மொழியாகச்சொல்லச்சொல்லி, அதை ரிகார்ட்பண்ணவேண்டும்.

(2) அப்போது ஜட்ஜானவர் தீர்ப்புச்சொல்லவேண்டும்; ஆனால் அப்படி சொல்லுகையில் அஸெஸர்களுடைய அபிப்பிராயத்தை ஒத்துச்செய்ய வேண்டுமென்பதில்லை.



(3) குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், ஜட்ஜானவர் சட்டப்படி அவனுக்கு சிட்சை விதிக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-309.)

## பழய குற்றவாளிகளாயிருக்கிற கைதிகள் ஸம்மந்தப்பட்ட கேசுகளில் நடவடிக்கை.

*குற்றவாளியென்று முன்னமேதீர்மானிக்கப்பட்டிருக்கிறவிஷயத்தில் நடவடிக்கை.*

783. ஜூரியைக்கொண்டாவது அஸெஸர்களுடைய சகாயத்தைக்கொண்டாவது செய்யப்பட்ட யாதொரு பரிசீலனை விஷயத்தில், யாதொரு குற்றத்திற்காக குற்றவாளியென்று முன்னதாய்த் தீர்மானிக்கப்பட்ட பின்பு செய்யப்பட்ட குற்றத்திற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவன்மேல் பிராது கொண்டுவரப்பட்டால், 271, 28[illegible], 305, 306, 309-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிற நடவடிக்கைகளை அடியில்கண்டிருக்கிறபடி வேறுபடுத்திக்கொள்ள வேண்டும்:—

(a) குற்றஞ்சாட்டப்பட்டவன் பின்னிட்ட குற்றத்திற்காகக் குற்றவாளிதானென்று ஒப்புக்கொள்ளாவிட்டால் அல்லது ஒப்புக்கொள்ளுகிறவரையிலாவது, அதற்காக அவனைக் குற்றவாளியென்று தீர்மானிக்காதிருந்தால் அல்லது தீர்மானிக்கிறவரையிலாவது, பிராதிலே முன்னிட்ட குற்றஸ்தாபனையைக்கண்டிருக்கிற பாகத்தைக் காட்டில்வாசிக்கவுங்கூடாது, குற்றஞ் சாட்டப்பட்டவன் பிராதில் சொல்லியிருக்கிறபடி குற்றவாளியாக முன்னமே தீர்மானிக்கப்பட்டிருக்கிறானென்று அவனைக் கேட்கவுங்கூடாது.

(b) பின்னிட்ட குற்றத்தைச்செய்ததாக அவன் ஒப்புக்கொண்டாலும், அதற்காக அவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாலும் அப்போது, பிராதில் சொல்லியிருக்கிறபடி அவன் குற்றவாளியாக முன்னமே தீர்மானிக்கப்பட்டிருக்கிறானென்று அவனைக்கேட்கவேண்டும்.

(c) பழய குற்றவாளியென்று அவன் ஒப்புக்கொண்டால் ஜட்ஜானவர் அப்படியே அவனுக்குச் சிட்சை விதிக்கத்தொடங்கலாம்; ஆனால், பழய குற்றவாளியென்று அவன் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அந்தக்கேள்விக்கு அவன் உத்தரவு சொல்லமாட்டேனென்றாலும் உத்தரவு சொல்லாவிட்டாலும், அப்போது சங்கதிக்குத்தக்கபடி ஜூரியாவது கோர்ட்டாரும் அஸெஸர்களுமாவது அப்படிப்பட்ட முன்னிட்ட குற்றஸ்தாபனையைக் குறித்துச் சாட்சியத்தைக் கேட்கவேண்டும்; அப்படிப்பட்ட விஷயத்திலே (ஜூரியைக்கொண்டு பரிசீலனை நடந்தால்) ஜூரர்களை மறுபடி பிரமாணஞ் செய்விக்கவேண்டிய அவசியமில்லை. (கி. பு. கோடு, பிரிவு-310.)

*குற்றவாளியென்று முன்னமேதீர்மானிக்கப்பட்டிருக்கிறதைச்சாட்சியமாகப் பொழுது சொல்லலாம்.*

784. அடுத்த முந்தியபிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, குற்றவாளியென்று முன்னமே தீர்மானிக்கப்பட்ட விஷயமானது, 1872-ம் வருஷத்திய இந்துதேசத்துச் சாட்சிய ஆக்ட்டின் நிபந்தனைகளின்படி ஒத்துமையானதாயிருக்கும் பட்சத்தில் குற்றவாளியென்று முன்னமே தீர்மானிக்கப்பட்டதைப் பின்பு செய்த குற்றத்தைப் பரிசீலனை செய்யும்பொழுது சாட்சியமாகச் சொல்லலாம். (கி. பு. கோடு, பிரிவு-309.)

## ஹைகோர்ட்டுக்காக ஜூரர்களின் ஜாபிதாவும், அந்தக் கோர்ட்டுக்கு ஜூரர்களை வரவழைப்பதும்.

*ஸ்பெஷல் ஜூரர்களின் சங்கியை.*

785. நபர்களுடைய பெயர்களை நானூறு பெயருக்கதிகப்படாமல் ஸ்பெஷல் ஜூரர்களுடைய ஜாபிதாவிலே எப்போதாவதொருகாலத்தில் பதியவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-312.)

*சாதாரணமான ஜூரர்களுக்கும் ஸ்பெஷல் ஜூரர்களுக்கும் ஜாபிதாக்கள்.*

786. (1) க்ளார்க் ஆவ் தி க்ரவுனானவர் ஹைகோர்ட்டாரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படுகிற விதிகளுக்குட்பட்டு, அந்தந்த வருஷத்தில் ஏப்ரல்மாதம் முதல்தேதிக்கு முன்னமே,—

(a) சாதாரணமான ஜூரர்களாகப் பிரவர்த்திப்பதற்குட்பட்ட சகலமானவர்களுடைய ஜாபிதாவையும்,

(b) ஸ்பெஷல் ஜூரர்களாக மாத்திரம் பிரவர்த்திப்பதற்குட்பட்டவர்களுடைய ஜாபிதாவையும், தயார் செய்யவேண்டும்.

(2) மேற்படிய ஜாபிதாவைத் தயார்செய்வதில் அதிலே பெயர் பதிவு செய்யப்படுகிறவர்களுடைய ஆஸ்தியையும் யோக்கியதையையும் கல்வித் திறத்தையும் யோசித்துச்செய்யவேண்டும்.

(3) முந்திய வருஷத்திற்கு ஸ்பெஷல் ஜூரர்களின் ஜாபிதாவிலே தன்பெயர் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஹேதுவினலே மாத்திரம் ஒருவனும் தன்பெயரை ஸ்பெஷல் ஜூரர்களின் ஜாபிதாவில் பதிவுசெய்வித்துக்கொள்ள அர்ஹனுகமாட்டான்.

(4) பங்காளத்திலே போர்ட் உல்லியத்திலுள்ள ஹைகோர்ட் விஷயத்திலே ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களும், மற்ற ஹைகோர்ட்டுகள் விஷயத்திலே அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரும்; சம்பளம் வாங்கிக்கொண்டு ஸர்க்காரில் சேவிக்கிற யாதொரு உத்தியோகஸ்தனை ஜூரராகப் பிரவர்த்திப்பதினின்றும் நிவர்த்திசெய்யலாம்.

*ஜாபிதாக்கள் தயார்செய்கிற உத்தியோகஸ்தர் யுக்தப்படி செய்வது.*

(5) க்ளார்க் ஆவ் தி க்ரவுனானவர் மேற்சொல்லிய விதிகளுக்குட்பட்டு, தமக்குக் கிரமமாகத் தோற்றுகிற பிரகாரம் மேற்படி ஜாபிதாக்களைப் பூர்த்தியாய்த் தமது இஷ்டப்படி தயார்செய்யலாம், அவருடைய தீர்மானத்தின்மேல் அப்பீலுங்கூடாது மறு விசாரணை கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-313.)

*பிரதமஜாபிதாக்களையும் திருத்தப்பாடான ஜாபிதாக்களையும் பிரசித்தப்படுத்துவது.*

787. (1) சாதாரணமான ஜூரர்களாகவும் ஸ்பெஷல் ஜூரர்களாகவும் பிரவர்த்திப்பதற்குட்பட்டவர்களுடைய பிரதமஜாபிதாக்களில் அதிலதிலே க்ளார்க ஆவ் தி க்ரவுன் கையெழுத்துச்செய்து, அவைகள் தயார்செய்யப்பட்ட பின்பு அடுத்துவருகிற ஏப்ரல் மாதம் பதினைந்தாம் தேதிக்கு முன்னமே அவ்விடத்திய ஸர்க்கார் கெஜெட்டில் அவைகளை ஒருதரம் பிரசித்தம் பண்ணவேண்டும்.

(2) சாதாரணமான ஜூரர்களாகவும் ஸ்பெஷல் ஜூரர்களாகவும் பிரவர்த்திப்பதற்குட்பட்டவர்களுடைய திருத்தப்பாடான ஜாபிதாக்களை அதிலதிலே மேற்சொல்லியபடி கையெழுத்துச்செய்து, அவைகள் தயார் செய்யப்பட்ட பின்பு, அடுத்துவருகிற மே மாதம் முதல்தேதிக்கு முன்னமே அவ்விடத்திய ஸர்க்கார் கெஜெட்டில் ஒருதரம் பிரசித்தம் பண்ணவேண்டும்.

(3) மேற்படி ஜாபிதாக்களின் நகல்களைக் கோர்ட்கட்டடத்தில் யாவருக்குந் தெரியும்படியான இடத்திலே ஒட்டவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-314.)



*ராஜதானியிலே ஸம்மனுப்பி வரவழைக்கப்பட வேண்டிய ஜூரர்களின் சங்கியை.*

788. (1) மேற்சொல்லிய திருத்தப்பாடான ஜாபிதாக்களில் கண்டிருக்கிறவர்களுக்குள், ஸ்பெஷல் ஜூரிகளாகப் பிரவர்த்திப்பதற்குட்பட்டவர்களில் குறைந்தது இருபத்தேழு பெயரையும், சாதாரணமான ஜூரிகளாகப் பிரவர்த்திப்பதற்குட்பட்டவர்களில் குறைந்தது ஐம்பத்திநான்கு பெயரையும் ஒவ்வொரு ராஜதானியிலும் பிரதி ஸெஷ்ஷனுக்கும்ஸம்மனுப்பிவரவழைக்கவேண்டும்.

(2) எவரையாவது சேர்க்காமல் சங்கியை பூர்த்தியாகமுடியாமலிருந்தாலொழிய, ஒருவரையும் ஆறுமாதத்தில் ஒருதரத்திற்கதிகமாக அப்படி ஸம்மனனுப்பி வரவழைக்கக்கூடாது.

(3) யாதொரு ஸெஷ்ஷன் நடந்துகொண்டிருக்கையில், அப்படி வரவழைக்கப்பட்ட ஜூரர்களின் சங்கியை போதுமானதல்லவென்று தோற்றினல், மேற்சொல்லியபடி பிரவர்த்திப்பதற்குட்பட்ட மற்றவர்களில் எத்தனை பெயர் வேண்டியிருக்குமோ அத்தனைபெயரை அந்த ஸெஷ்ஷனுக்கு ஸம்மனுப்பி வரவழைக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-30[illegible].)

*ராஜதானிகளுக்கு வெளியில் ஜூரர்களை ஸம்மனுப்பி வரவழைப்பது.*

789. யாதொரு ஹைகோர்ட்டார் க்ரிமினல் விவகாரத்திலே தங்களுடைய அசல்விசாரணை அதிகாரத்தைச் செலுத்துவதற்காக, ராஜதானிகளுக்கு வெளியிலுள்ள யாதோரிடத்திலே (sitting) விசாரணை நடத்த உத்தேசித்திருப்பத்தைக்குறித்து அறிக்கை செய்திருக்கும்போதெல்லாம், அவ்விடத்திலுள்ளஸெஷ்ஷன்கோர்ட்டார் ஹைகோர்ட்டாரால் கொடுக்கப்படும் யாதொரு உத்தரவுக்குட்பட்டு, ஸெஷ்ஷன் கோர்ட்டுக்கு ஜூரர்களை ஸம்மனனுப்பி வரவழைப்பதைக் குறித்து இதில் பின்னல் சொல்லியிருக்கிறவிதமாய்த் தங்களுடைய சொந்த ஜாபிதாவிலிருந்து ஜூரர்கள் போதுமான பெயரை ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு 316.)

*மிலிட்டெரி ஜூரர்கள்*

790. ஜூரர்களாக அப்படி ஸம்மனப்பி வரவழைக்கப்பட்டவர்களுமல்லாமல், மேற்படி ஸெஷ்ஷன்கோர்ட்டார் தங்களுக்கு அவசியமாகத்தோற்றினல், கம்மாண்டிங் ஆபீஸருக்கு எழுதித்தெரிந்துகொண்டபின்பு, விசாரணை நடத்தப்போகிற இடத்திற்குப் பத்துமைலுக்குள்ளாக வாசஞ்செய்துகொண்டு மஹாராஜா அவர்களுடைய சேனையிலே கம்மிஷண்ட் நன்கம்மிஷண்ட் ஆபீஸர்களாயிருக்கிறவர்களில், மேற்சொல்லியபடி ஹைகோர்ட்டாருக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பரிசீலனை செய்வதற்காக வேண்டியிருக்கிற ஜூரி சங்கியையைப் பூர்த்திசெய்ய எத்தனை பெயர் வேண்டியிருக்கிறதாகக் கோர்ட்டாருக்குத் தோன்றுகிறதோ அத்தனை பெயரை ஸம்மனுப்பி வரவழைக்கவேண்டும்.

(2) அப்படி வரவழைக்கப்பட்ட சகல ஆபிஸர்களும் இந்தச் சட்டத்தில் என்னசொல்லியிருந்தபோதிலும் நிமித்தமில்லாமல் அப்படிப்பட்ட ஜூரிகளாகப் பிரவர்த்திப்பதற்குள்ளவர்கள்; ஆனல், அவசரமான மிலிட்டெரி அலுவலைப்பற்றியாவது ராணுவத்தைச்சேர்ந்த யாதொரு முக்கியமான ஹேதுவைப்பற்றியாவது எவரை வரவழைக்காமல் விடவேண்டியதென்று அவருடைய கம்மாண்டிங் ஆபிஸர்கோருகிருரோ அப்படிப்பட்ட ஆபீஸரை ஸம்மனுப்பி வரவழைக்கக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு 317)

*ஜூரர்கள் ஹாஜராகாமை.*

791. 315, 316 அல்லது 317-வது பிரிவின்படி ஸம்மனுப்பி வரவழைக்கப்பட்டவரெவராவது ஸம்மனில் சொல்லியிருக்கிறபடி ஹாஜராவதற்கு நியாயமான முகாந்தரமில்லாமல் தவறிப்போனலும், ஹாஜராகியும்ஜட்ஜியிடத்தில் செலவுபெற்றுக் கொள்ளாமல்போய்விட்டாலும், ஹாஜராகும்படி

உத்தரவு செய்யப்பட்டிருக்கையில் கோர்ட் கிறுத்திவைக்கப்பட்ட பின்பு ஹாஜராகாவிட்டாலும், அப்படிப்பட்டவர் அலட்சியஞ்செய்தவராக எண்ணப்பட்டு, ஜட்ஜியினுடைய உத்தரவினால் அவருக்கு யுக்தமாகத் தோற்றுகிற அபராதத்திற்குள்ளாவார்; அந்த அபராதத்தைச் செலுத்தாவிட்டால், அது செலுத்தப்படுகிறவரையிலே ஆறுமாதத்திற்கு அதிகப்படாத ஒரு காலத்திற்கு ஸிவில் ஜெயிலில் வைக்கப்படுவார்.

ஆனால், கோர்ட்டார் அவ்வாறு விதிக்கும் யாதொரு அபராதத்தையாவது காவல் தண்டனையையாவது தங்களுடைய யுக்தப்படி குறைக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-318.)

## ஸெஷ்ஷன் கோர்ட்டுக்கு ஜூரர்கள் அஸெஸர்கள் இவர்களுடைய ஜாபிதாவும், அந்தக்கோர்ட்டுக்கு ஜூரர்களையும் அஸெஸர்களையும் வரவழைப்பதும்.

ஜூரர்களாகவாவது அஸெஸர்களாகவாவது பிரவர்த்திப்பதற்குள்ளாயிருப்பது.

792. இதில் அடுத்துப் பின்னால் சொல்லப்படுகிறவர்கள் தவிர, இருபத்தொரு வயது முதல் அறுபது வயதுவரையிலுள்ள மற்ற புருஷர்களெல்லோரும், அவர்கள் வாசஞ்செய்யும் டிஸ்திரிக்ட்டிலாவது,

அவ்வவ்விடத்திய சந்தர்ப்பங்களை யோசித்து அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் இதன் விஷயமாய் இன்னுஞ் சிறிய விஸ்தீரணத்தை சிர்ணயிக்கப்பட்ட விஸ்தீரணத்திற்குள்ளாவது,

விசாரிக்கப்படுகிற யாதொரு பரிசிலனையிலே ஜூரர்களாகவாகிலும் அஸெஸர்களாகவாகிலும் பிரவர்த்திப்பதற்குள்ளாவார்கள். (கி. பு. கோடு, பிரிவு-319.)

793. ஜூரர்களாகவாவது அஸெஸர்களாகவாவது பிரவர்த்திக்கவேண்டியதில்லையென்று விலக்கப்பட்டவர்கள் யாராரென்றால்:—

விலக்கப்பட்டவர்கள்.

(a) டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட் அந்தஸ்துக்கு மேற்பட்ட ஸிவில் உத்தியோகத்திலிருக்கிற சகல உத்தியோகஸ்தர்களும்;

(b) சம்பளம் பெறுகிற ஜட்ஜுகளும்;

(c) கமிஷனர்களும் ரெவினியு அல்லது கஸ்டம் கலெக்ட்டர்களும்;

(d) போலீஸ் உத்தியோகஸ்தர்களும் கஸ்டம் இலாக்காவில் தீர்வைசெலுத்தாமல் சரக்குகளைக் கொண்டுபோகாதபடி தடுக்கும்படியான அலுவலிலிருக்கிறவர்களும்;

(e) ரெவினியூ வசூல்செய்கிற அலுவலிலிருக்கிறவர்களில் அலுவலைப்பற்றி யாரை விலக்கிவிடுவது யுக்தமென்று கலெக்டர் நினைக்கிறாரோ அவர்களும்,

(f) தங்கள் தங்கள் மதங்களிலே வாஸ்தவமாய் குருக்கள் அல்லது மினிஸ்ட்டர்வேலை செய்கிறவர்களும்;

(g) மாஹாராஜா அவர்களுடைய சேனையிலிருக்கிறவர்கள் அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டத்தினாலே ஜூரர்கள் அல்லது அஸெஸர்களாகப் பிரவர்த்திக்கும்படி பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்படுகிறபோது தவிர, மற்றப்படி அவர்களும்;

(h) ஸர்ஜன்களும், பகிரங்கமாய் இடைவிடாமல் வைத்தியஞ் செய்துகொண்டிருக்கிற மற்றவர்களும்;



(i) (1879-ம் ஞூத்து நியாயவாதிகளாக்ட்டில் விவரித்திருக்கிறபடி) வாஸ்தவமாய் அப்பியாசிக்கிற நியாயவாதிகளும்;

(j) தபாலாபிஸ் மின்தபாலென்னும் டிலிக்ராப் இந்த டிபார்ட்மெண்டுகளில் உத்தியோகஞ் செய்கிறவர்களும்;

(k) ஸிவில் ப்ரொஸீஜர்கோட் 640-வது 641-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளின்படி கோர்ட்டில் நேராய் ஹாஜராக வேண்டியதில்லையென்று நிவர்த்தி செய்யப்பட்டவர்களும்;

(l) ஜூரர்களாகவாவது அஸெஸர்களாகவாவது பிரவர்த்திக்க வேண்டியதில்லையென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மென்டாரால் நிவர்த்திசெய்யப்பட்ட மற்றவர்களும். (கி. பு. கோடு, பிரிவு-320.)

ஜூரர்களையும் அஸெஸர்களையுங் குறித்த ஜாபிதா.

794. (1) ஸெஷ்ஷன்ஜட்ஜும், டிஸ்திரிக்ட் கலெக்ட்டர் அல்லது பிரதேச கவர்ன்மெண்டாரால் இந்த விஷயத்தில் நியமிக்கப்படுகிற வேறே உத்தியோகஸ்தரும், யாரார்ஜூரர்களாகவாவது அஸெஸர்களாகவாவது பிரவர்த்திப்பதற்குள்ளாகி அப்படிப்பட்டவர்களாகப் பிரவர்த்திப்பதற்குத் தகுந்தவர்களென்று ஸெஷ்ஷன்ஜட்ஜுக்கும் கலெக்ட்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தருக்கும் தோற்றி, 278-வது பிரிவு (b) முதல் (h) ஏற்பட்ட அதுவரையிலுள்ள உட்பிரிவுகளின்படி திருப்திகரமாய் ஆட்சேபிக்கப்படமாட்டார்கள்போலிருப்பதாகத் தெரிகிறதோ அவர்களைக்குறித்து அகராதி வரிசையாக ஒரு ஜாபிதா எழுதித் தயார் செய்யவேண்டும்.

(2) அந்த ஜாபிதாவிலே அப்படிப்பட்ட பிரதி மனுஷனுடைய பெயரையும் இருப்பிடத்தையும் அந்தஸ்து அல்லது அலுவலையுங் கண்டெழுத வேண்டும்; மேலும் அப்படிப்பட்டவன் யுரோப்பியனாகவாவது அமெரிக்கனாகவாவதிருந்தால், அவன் இன்ன வம்சத்தானென்று அந்த ஜாபிதாவில் கண்டெழுதவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-321.)

ஜாபிதாவைப் பிரசித்தஞ் செய்வது.

795. கலெக்ட்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தருடைய ஆபீஸிலும், டிஸ்திரிக்ட்மாஜிஸ்திரேட் கோர்ட்டிலும், அப்படிப்பட்ட ஜாபிதாவுக்கு நகல்களையும், அந்த நகல்களின் எக்ஸ்ட்ராக்ட்டில் கண்டிருக்கிறவர்கள் எவ்விடத்தில் அல்லது எதற்குச் சமீபத்தில் வாசஞ்செய்கிறார்களோ அந்தப்பட்டணம் அல்லது பட்டணங்களில் எல்லாருக்குந் தெரியும்படியான இடத்தில் அந்த நகல்களிலிருந்தெடுக்கப்படும் எக்ஸ்ட்ராக்டுகளையும் ஒட்டவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-322.)

ஜாபிதாவுக்கு ஆட்சேபனை.

796. அந்த ஜாபிதாவைக்குறித்து ஆட்சேபங்களை நோட்டிஸில் கண்டிருக்கிறகாலத்தில் ஸெஷ்ஷன்ஜட்ஜும் கலெக்ட்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தரும் கேட்டுத் தீர்மானஞ் செய்வார்களென்று நோட்டிஸ் எழுதி அப்படிப்பட்ட ஒவ்வொரு நகல் அல்லது எக்ஸ்ட்ராக்டோடும் சேர்க்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-323.)

ஜாபிதாவைத் திருத்துவது.

797. (1) அப்படிப்பட்ட ஆட்சேபங்களைக் கேட்பதற்காக ஸெஷ்ஷன் ஜட்ஜானவர் கலெக்ட்டர் மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தரோடுகூட உட்கார்ந்து, நோட்டீஸில் குறிக்கப்பட்ட காலத்தில் அதில் கண்டிருக்கிற இடத்திலே அந்த ஜாபிதாவை மறுபடி பரிசோதித்து, அதைத் திருத்துவிக்க

வேண்டுமென்கிற அக்கறையுள்ளவர் (எதாவது) ஆட்சேபஞ்சொன்னால் அதைக்கேட்டு, யார் ஜூரர் அல்லது அசெஸராகப் பிரவர்த்திப்பதற்குத் தகுந்தவனல்லவென்று தங்களுக்குத் தோற்றுகிறதோ அவனுடைய பெயரையும், 320 - வது பிரிவினால் அப்படி பிரவர்த்திக்க வேண்டியதில்லையென்று விலக்கப்பட்டபடி நிவர்த்தியாவதற்குச் சுதந்தரத்தை ஸ்தாபிக்கிறவனுடைய பெயரையும் அடித்துவிட்டு, அந்த ஜாபிதாவில் கண்டெழுதப்படாத எந்தநபா அப்படிப் பிரவர்த்திக்கத் தகுந்தவனென்று தங்களுக்குத் தோற்றுகிறதோ அவனுடைய பெயரை அதிலெழுதவேண்டும்.

(2) ஸெஷனஜட்ஜாவும் கலெக்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தரும் அபிப்பிராயத்தில் வேறுபட்டால், கருதிய ஜூரர் அல்லது அசெஸருடைய பெயரை ஜாபிதாவில் எழுதாமல் தள்ளிவிடவேண்டும்.

(3) திருத்தி எழுதப்பட்ட ஜாபிதாப்பிரதியொன்றில்ஸெஷன் ஜட்ஜாவும் கலெக்டர் அல்லது மேற்சொல்லிய வேறே உத்தியோகஸ்தரும் கையெழுத்துப்போட்டு, அதை ஸெஷன்கோர்ட்டுக்கு அனுப்பவேண்டும்.

(4) அந்த ஜாபிதாவைத்தயார் செய்வதிலும் மறுபடி பரிசோதிப்பதிலும் ஸெஷன் ஜட்ஜாவும் கலெக்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தரும் செய்கிற உத்தரவே முடிவானதாகும்.

(5) நிவர்த்தி செய்யும்படி இந்தப் பிரிவின்பிரகாரம் கேட்டுக் கொள்ளாவிட்டால், பின்பு அந்த ஜாபிதா மறுபடி பரிசோதிக்கப்படுகிறவரையில் அந்தச் சுதந்தரத்தை விட்டுவிட்டதாக எண்ணவேண்டும்.

ஜாபிதாவை வருஷந்தோறும் திருத்துவது.

(6) அப்படித் தயார்செய்து மறுபடி பரிசோதிக்கப்பட்ட ஜாபிதாவை வருஷத்திற் கொருதடவை மறுபடியும் பரிசோதிக்கவேண்டும்.

(7) அப்படிப் பரிசோதிக்கப்பட்ட ஜாபிதாவானது புதிதாய் ஏற்படுத்தப்பட்ட ஜாபிதாவென்று எண்ணப்படுவதுமல்லாமல், முதலில் தயார் செய்யப்பட்ட ஜாபிதாவைக்குறித்து இதில் முன்னமே சொல்லியிருக்கிற எல்லா விதிகளுக்கும் உட்படவும்வேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-324.)

விசேஷ ஜூரர்களின் ஜாபிதா தயார்செய்வது.

798. ஜட்ஜ் உத்தரவு செய்வாராகில் விசேஷ ஜூரியைக்கொண்டு சில குற்றங்களைப் பரிசிலனை செய்யவேண்டுமென்று எந்த டிஸ்திரிக்டுக்காகப் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயித்திருக்கின்றார்களோ அந்த டிஸ்திரிக்டின் விஷயத்திலே ஸெஷன் ஜட்ஜாவும் அந்த டிஸ்திரிக்ட் கலெக்டர் அல்லது மேலே சொன்ன வேறே உத்தியோகஸ்தரும்-இதற்கு முன்னே குறிக்கப்பட்ட திருத்தமான ஜாபிதாவோடுங்கூட, திருத்தமான ஜாபிதாவிற் கண்டிருப்பவர்களுக்குள்ளே சொத்தின் விஷயமாகவாவது கல்வியின் விஷயமாகவாவது மேலான யோக்கியதை பெற்றிருக்கிற காரணத்தினால் விசேஷ ஜூரர்களாயிருந்து பிரவர்த்திக்கத் தகுதியானவர்களென்று ஸெஷன் ஜட்ஜாவும் கலெக்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தரும் யாரைப்பற்றி அபிப்பிராயப்படுகிறார்களோ அந்த ஜூரர்களின் பெயர்களடங்கிய ஒரு விசேஷ ஜாபிதாவையும் தயார் செய்யவேண்டும்; ஆனால் அப்படிப்பட்ட விசேஷ ஜூரியினால் பரிசிலனை செய்யப்படாத கேஸுகளிற் சாதாரண ஜூரராகப் பிரவர்த்திக்க அந்த நபருக்குள்ள உத்தரவாதம் நிவர்த்தியாகுமென்றுவது ஒருபோதும் கொள்ளவேண்டியதில்லை. (கி. பு. கோடு, பிரிவு-325).



ஜூரர்களையும் அசெஸர்களையும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட் ஸம்மனனுப்பி வரவழைப்பது.

799. (1) ஸெஷனில் பரிசிலனையை ஜூரியைக்கொண்டு நடத்துவதற்கும்,அசெஸர்களுடைய சகாயத்தினாலே நடத்துவதற்கும், ஸெஷன் ஜட்ஜானவர் மறுபடி பரிசோதிக்கப்பட்ட மேற்படி ஜாபிதாவிலாவது மேற்படி விசேஷ ஜாபிதாவிலாவது கண்டிருக்கிறவர்களிலே எத்தனை பெயர் வேண்டியிருக்கிறதென்று தமக்குத் தோற்றுகிறதோ அத்தனை பெயர்களுக்கு ஸம்மனனுப்பும்படி, ஸெஷன்கோர்ட் கூடுவதற்காக அப்போதைக்கப்போது தம்மால் நிச்சயிக்கப்படுகிற காலத்திற்கு குறைந்தது ஏழுநாள் முன்னதாய் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குச் சாதாரணமாகக் கடிதமனுப்பவேண்டும்; அப்படிச்செய்கையில்,அப்படிப்பட்ட யாதொரு பரிசிலனைக்கு எத்தனை பெயர் வேண்டியதோ அதற்கு இரட்டிப்புப் பெயருக்குக் குறையாமல் ஸம்மனனுப்பி வரவழைக்கவேண்டும்.

(2) ஆறுமாதத்திற்குள்ளாக வந்திருந்தவர்களைத் தள்ளிவிட்டு மற்றவர்களுடைய பெயர்களைக்கோர்ட்டில் பகிரங்கமாய்ச் சீட்டுப்போட்டு எத்தனை பெயருக்கு ஸம்மனனுப்பவேண்டியதோ அத்தனை பெயர்களை எடுக்கவேண்டும், தள்ளிவிடப்பட்டவர்களைச் சேர்க்காமல் தொகையாகாவிட்டால் அவர்களையுஞ் சேர்த்துக்கொள்ளவேண்டும்; இவ்விதமாய்ச் சீட்டுப்போட்டு எடுக்கப்படுகிறவர்களுடைய பெயர்களை மேற்படிகடிதத்தில்கண்டெழுதவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு 326.)

[மறுபடி ஜூரர்களையாவது அசெஸர்களையாவது வரவழைக்க அதிகாரம்.

800. ஸெஷன் கோர்ட்டார் தங்களுக்குமுன்பாக நடக்கும் பரிசிலனைகள் அதிகமாயிருந்து அதினாலே ஒரேஜதை ஜூரர்களாவது அசெஸர்களாவது ஸெஷன் முழுமையும் வருவது தொந்தரையாயிருந்தாலும், வேறே காரணங்களைப்பற்றி ஜூரர்களையாவது அசெஸர்களையாவது (மறுபடியும்) வரவழைக்கவேண்டியது அவசியமாகக் காணப்பட்டாலும், 326-வது பிரிவில் கண்டிருக்கிற காலத்திலல்லாமல் மற்றக் காலங்களிலே ஜூரர்கள் அல்லது அசெஸர்களை ஸம்மனனுப்பி வரவழைக்கும்படி உத்தரவுசெய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-327.)

ஸம்மனெழுதுகிற விதமும் அதில் காணவேண்டிய விஷயங்களும்.

801. ஜூரருக்காவது அசெஸருக்காவது அனுப்பப்படுகிற பிரதிஸம்மனும் எழுத்துமூலமாயிருக்கவேண்டும்; மேலும், அதில் குறிக்கப்பட்ட காலத்தில் கண்டிக்கிற இடத்திலே அவர் ஜூரராகவோ அல்லது அசெஸராகவோ வந்திருக்க வேண்டியதென்று அதில் கண்டெழுதவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-328.)

802. ஜூரராகவாவது அசெஸராகவாவது பிரவர்த்திப்பதற்கு ஸம்மனனுப்பப்பட்டவனொருவனிலும் ஸர்க்கார் உத்தியோகஸ்தனாகவாவது ரெயில் வேகம்பெனியாருடைய உத்தியோகஸ்தனாகவாவதிருந்தால், எந்தக் கோர்ட்டில் அவன் அப்படிப்பட்டவனாகப் பிரவர்த்திக்க ஸம்மனனுப்பி வரவழைக்கப்படுகிறானோ அந்தக் கோர்ட்டார் – அவன் ஜூரராகவோ அசெஸராகவோ வந்தால் ஜனங்களுடைய வேலைக்குக் குந்தகமுண்டாகுமென்று அவன் வேலைசெய்கிற ஆபீஸ்தலைவன் தெரிவிப்பதின்மேல் அது சரியென்று தோற்றுகிற பட்சத்தில், அவன் வரவேண்டியதில்லையென்று உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-329.)

ஜூரர் அல்லது அசெஸர் ஆஜரிலிருக்க வேண்டியதில்லையென்று கோர்ட்டார் உத்தரவு செய்யலாம்.

803. (1) தகுந்த காரணத்தைப்பற்றி ஸெஷன் கோர்ட்டார் யாதொரு குறித்த ஸெஷனில் எந்த ஜூரராவது அசெஸராவது ஹாஜரிலிருக்க வேண்டியதில்லையென்று அவருக்கு உத்தரவு செய்யலாம்.

(2) விசேஷ ஜூரியைக்கொண்டு நடத்தப்பட்ட யாதொரு பரிசீலனை முடிவாவதன்மேல் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால்ஸெஷ்ஷன் கோர்ட்டார் - அந்த விசேஷ ஜூரியில் ஜூரர்களாயிருந்தவர்களைப் பன்னிரெண்டு மாதம் வரையில் மறுபடியும் ஜூரர்களாயிருக்கும்படி அழைக்கக் கூடாதென்று கட்டளையிடலாம். (கி. பு. கோடு, பிரிவு-330.)

வந்திருக்கிற ஜூரர்கள் அல்லது அஸெஸர்களுடைய ஜாபிதா.

804. (1) பிரதி ஸெஷ்ஷனிலும் ஜூரர்களாகவும் அஸெஸர்களாகவும் வந்திருக்கிறவர்களுடையபெயர்களை அந்தந்த ஸெஷ்ஷனில்மேற்படி கோர்ட் ஒரு ஜாபிதாவில் எழுதுவிக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஜாபிதாவை ஜூரர்களைக்குறித்தும் அஸெஸர்களையும் 321-வது பிரிவின்படி மறுபடியும் பரிசோதித்துச் செய்யப்பட்ட ஜாபிதாவோடுகூட வைத்திருக்கவேண்டும்.

(3) இந்தப்பிரிவின்படி தயார்செய்யப்பட்ட ஜாபிதாவில் கண்டிருக்கிறபெயர்களில் ஒவ்வொருவரையும், மறுபடி பரிசோதிக்கப்பட்ட மேற்படி ஜாபிதாவின் பக்கத்தில் குறிப்பிடவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-331.)

ஜூரர்வது அஸெஸராவது வராவிட்டால் தண்டனை.

805. (1) ஜூரராகவாவது அஸெஸராகவாவது வரும்படி ஸம்மனனுப்பப்பட்டவனெவனுகிலும் ந்யாயமான காரணமில்லாமல் ஸம்மன்படி வராதிருந்தாலும், வந்திருந்தும் கோர்ட்டாருடைய உத்தரவில்லாமல் போய்விட்டாலும், வரும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கையில் கோர்ட் நிறுத்தி வைக்கப்பட்டபின்பு வராவிட்டாலும், அப்படிப்பட்டவன் ஸெஷ்ஷன் கோர்ட்டாருடைய உத்தரவினால் நூறுரூபாய்க்கதிகப்படாத அபராதத்திற்குள்ளாவான்.

(2) அப்படிப்பட்ட அபராதத்தை, மேற்படி உத்தரவு செய்கிற கோர்ட்டாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அப்படிப்பட்ட ஜூரர் அல்லது அஸெஸருடையதாயிருக்கிற யாதொரு அசையும்பொருளை ஜப்தி செய்துவிற்று டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட்டானவர் வசூல் பண்ணவேண்டும்.

(3) அந்தப்படி விதிக்கப்பட்ட யாதொரு அபராதத்தைக் கோர்ட்டார் - நல்ல காரணம் தெரிவிக்கப்படுவதன்மேல், வஜாச் செய்யலாம், அல்லது குறைக்கலாம்.

(4) ஜப்திசெய்து விற்பதினாலே அந்த அபராதம் வசூலாகாவிட்டால், அப்படிப்பட்ட ஜூரர் அல்லது அஸெஸரை, அந்த அபராதம் அதற்குள்ளாகச் செலுத்தப்படாதபக்ஷத்தில், ஸெஷன் கோர்ட்டாருடைய உத்தரவினால் பதினைந்து நாள்வரையிலே ஸிவில் ஜெயிலில் வைக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-332.)



# அத்தியாயம் 19.

## விசாரணைகளைக்குறித்தும் பரிசீலனைக்குறித்தும் பொது நிபந்தனைகள்

806. (1) ஸெஷ்ஷன் கோர்ட்டாராலேயாவது ஹைகோர்ட்டாராலேயாவது பரிசீலனை செய்யப்படத்தக்க யாதொரு குற்றவிஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாவது அந்தக் குற்றத்தை விசாரணைசெய்கிற யாதொரு முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது, டிஸ்ட்டிரிக்ட் மாஜிஸ்ட்டிரேட்டினுடைய அனுமதியின்மேல் வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது விசாரணையிலிருக்கிற குற்றத்தில் நேராகவாகிலும் நேராயல்லாமலாகிலும் சம்மந்தப்படிருப்பதாக வாயினும் அதற்கு உட்கையாயிருந்ததாகவாயினும் எண்ணப்பட்ட யாதொரு நபரின் சாட்சியத்தை அடையும் பொருட்டு, அந்த நபர் அப்படிப்பட்ட குற்றத்தைக்குறித்தும் அதைச்செய்வதில் முக்கியஸ்தனாகவாவது உடந்தைக்காரனாகவாவது சம்மந்தப்பட்டிருந்த மற்ற பிரதிநபரைக்குறித்தும் தனக்குத்தெரிந்திருக்கிற சங்கதிகளையெல்லாம் யதார்த்தத்தில் முழுவதும் வெளிப்படுத்துவதாய் உடன்பட்டால் அவனை மன்னிப்பதாகச் சொல்லலாம்.

உடன் குற்றவாளியை மன்னிப்பதாகச் சொல்லுவது.

(2) இந்தப்பிரிவின்படி மன்னிப்புக்கு ஒப்புக்கொள்ளுகிற பிரதிநபரையும் அந்தக் கேஸில் சாட்சியாக விசாரணை செய்யவேண்டும்.

(3) அப்படிப்பட்ட நபர் ஜாமீன்மேல் விடுதலையாகாதிருந்தால், சங்கதிக்குத்தக்கபடி ஸெஷ்ஷன்கோர்ட்டாராலாவது ஹைகோர்ட்டாராலாவது பரிசீலனைசெய்து முடிகிறவரையில் அவனைக் காவலில் வைத்திருக்கவேண்டும்.

(4) இந்தப்பிரிவின்படி மன்னிக்கிறதாகச்சொல்லுகிற ராஜதானி மாஜிஸ்ட்ரேட்தவிர வேறே பிரதி மாஜிஸ்ட்ரேட்டும் அப்படிச் செய்வதற்குத் தமக்குள்ள ஹேதுக்களை ரிகார்ட் பண்ணவேண்டும்; எந்த மாஜிஸ்ட்ரேட்டாவது மன்னிக்கிறதாகச்சொல்லி, யாரை மன்னிக்கிறதாகச் சொல்லுகிறாரோ அந்த நபரை விசாரணை செய்திருந்தால் குற்றஞ்சாட்டப்பட்டவன் செய்திருப்பதாகத்தோன்றுகிற குற்றத்தைத் தாமே பரிசீலனைசெய்யக் கூடியதாயிருந்தபோதிலும், அவர் அந்தக்கேஸைத் தாமே பரிசீலனைபண்ணக் கூடாது. (கி. பு. கோடு, பிரிவு 337)

மன்னிக்கிறதாகச் சொல்லும்படி உத்தரவு பண்ண அதிகாரம்.

807. கம்மிட்பண்ணப்பட்டபின்பு தீர்ப்பு செய்யப்படுவதற்கு முன்னமே எப்போதாவது, யாருக்குக் கம்மிட்செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டார் அப்படிப்பட்ட யாதொரு குற்றத்தில் நேராகவாவது நேராயல்லாமலாவது சம்மந்தப்பட்டிருப்பதாகவாகிலும் அதற்கு உட்கையாயிருந்ததாகவாகிலும் எண்ணப்பட்ட யாதொரு நபரின் சாட்சியத்தைப் பரிசீலனை காலத்தில் அடையும்

பொருட்டு, அந்த நபரை மேற்கண்ட உடன்பாட்டின்படி மன்னிப்பதாகச் சொல்லலாம், அல்லது மன்னிப்பதாகச்சொல்லும்படி கமிட்செய்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது உத்தரவுபண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு 338)

மன்னிக்கிறதாக எவனுக்குச் சொல்லப்பட்டதோ அவனைக் கமிட் பண்ணுவது.

808. (1) 337 அல்லது 338-வது பிரிவின்படி மன்னிப்புச் செய்கிறதாகச் சொல்லியிருக்கும்போது, அப்படிச்சொன்னதை ஒத்துக்கொண்ட யாதொரு நபர் எதன்மேல் அப்படிச்சொல்லப்பட்டதோ அந்த உடன்பாட்டை, முக்கியமான யாதொரு சங்கதியை வேண்டுமென்று மறைப்பதனுலாவது பொய்ச்சாட்சியம் சொல்வதனுலாவது அதிக்கிரமித்துவிட்டால், எதைக் குறித்து அப்படி மன்னிப்புச் செய்கிறதாகச் சொல்லப்பட்டதோ அந்தக் குற்றத்திற்காகவாவது அதேசங்கதி சம்மந்தமாய் அவன் செய்திருப்பதாகத் தோற்றுகிற வேறே யாதொரு குற்றத்திற்காகவாவது அவனைப் பரிசீலனை பண்ணலாம்.

(2) இந்தப்பிரிவின்படி மன்னிப்பு அடிபட்டுப்போயிருக்குமானால் அந்தமன்னிப்புக்குட்பட்டிருந்த நபர் சொன்ன வாக்குமூலத்தை அவனுக்கு விரோதமாய்ச் சாட்சியமாகக் கொண்டுவரலாம்.

(3) அப்படிப்பட்ட வாக்குமூல சம்மந்தமாய்ப் பொய்சாட்சியஞ் சொல்லப்பட்டதென்கிற குற்றத்தைக்குறித்த பிராதை ஹைகோர்ட்டாருடைய அனுமதியில்லாமல் எடுத்துக்கொள்ளக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு 339.

குற்றஞ் சாட்டப்பட்டவன் தன் பட்சத்தில் வக்கீலை நியமித்துக் கொள்ளுவதற்கு சுதந்தரம்.

809. யாதொரு க்ரிமினல் கோர்ட்டாருக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டிவரப்பட்ட பிரதி நபருக்கும் தன்பட்சத்தில் யாதொரு ப்ளீடரைப் பேசும்படி செய்யச் சுதந்தரமுண்டு. (கி. பு. கோடு, பிரிவு 340)

810. குற்றஞ் சாட்டப்பட்டவன் பைத்தியக்காரனல்லாவிட்டாலும், அவனை நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ளும்படிச் செய்யக் கூடாவிட்டால் கோர்ட்டார் விசாரணையையாவது பரிசீலனையையாவது நடத்தலாம்; ஹைகோர்ட்டல்லாத வேறே யாதொரு கோர்ட் விஷயத்திலே, அப்படிப்பட்ட விசாரணையினால் கமிட் பண்ணும்படி கோர்ட்டாரும், அப்படிப்பட்ட பரிசீலனையினால் குற்றவாளியென்று தீர்மானமானாலும் அந்த நடவடிக்கைகளை, அந்தக் கேஸைச்சேர்ந்த சங்கதிகளைக்குறித்து ரிப்போர்ட் சஹிதமாய், ஹைகோர்ட்டுக்கு அனுப்பவேண்டும்; அதன்மேல் ஹைகோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிற உத்தரவைப் பிறப்பிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 341.)

குற்றஞ் சாட்டப்பட்டவனை விசாரணை செய்ய அதிகாரம்.

811. (1) குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு விரோதமாய்ச் சாட்சியத்தினால் தெரியவருகிற யாதொரு சங்கதியைக்குறித்துச் சமாதானஞ்சொல்ல அவனுக்குக் கூடுமானதாகச் செய்யும்பொருட்டு, யாதொரு விசாரணை அல்லது பரிசீலனை நடத்தும் எந்தத்தசையிலாவது கோர்ட்டார் குற்றஞ்சாட்டப்பட்டவனை முன்னதாய் எச்சரிப்பித்தாமல், தாங்கள் அவசியமென்னுகிற கேள்விகளை அவனுக்குப்போடலாம்; வாதி பட்சம் சாட்சிகளைவிசாரணை செய்தானபின்பும், அவனைத் தன்பட்சத்தல வாதிக்கும்படிக்கும் உத்தரவு செய்வதற்கு முன்னும், மேற்சொல்லிய காரியத்தின்பொருட்டு அந்தக்கேஸைக்குறித்துச் சாதாரணமாய் அவனை கேள்வி கேட்கவேண்டும்.



(2) குற்றஞ்சாட்டப்பட்டவன் அப்படிப்பட்ட கேள்விகளுக்கு ஜவாப்பு சொல்லமாட்டேனென்பதற்காகிலும் பொய் ஜவாப்பு சொல்லுவதற்காகிலும் தண்டிக்கப்படத்தக்கவனாகமாட்டான்; ஆனால், அப்படி ஜவாப்பு சொல்லமாட்டேனென்பதனுலாகிலும் பொய்ஜவாப்பு சொல்லுவதனுலாகிலும் கோர்ட்டாரும் ஜூரியிருந்தால் அவர்களும் தங்களுக்கு நியாயமாகத் தோற்றுகிறபடி ஊகிக்கலாம்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவன் சொல்லுகிற ஜவாப்பைக்குறித்து அப்படிப்பட்ட விசாரணை அல்லதுபரிசீலனையில்யோசிக்கலாம்; மேலும், அந்த ஜவாப்பினாலே அவன் செய்திருப்பதாகத் தெரியவரும்படியான வேறே யாதொரு குற்றத்தைக்குறித்த வேறு விசாரணை அல்லது பரிசீலனையில் அவன் பட்சத்திலாகிலும் அவனுக்கு விரோதமாயாகிலும் அதைச்சாட்சியமாகக் கொண்டுவரலாம்.

(4) குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குப் பிரமாணம் செய்விக்கக் கூடாது. (கி. பு. கோடு, பிரிவு 342.)

சங்கதியை வெளிப்படுத்தும்படி வெருட்டுதல் முதலியவை செய்யக்கூடாது.

812. 337 - 338 - வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்குத் தெரிந்திருக்கிற யாதொரு சங்கதியை வெளிப்படுத்தும் படிக்காவது அடக்கிவிடும்படிக்காவது அவனைச் செய்யும்பொருட்டு, ஆசைகாட்டியாகிலும் வெருட்டியாகிலும் வேறே எவ்விதமாயாகிலும் அவனை உட்படுத்தக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு - 343.)

813. (1) யாதொரு சாட்சி ஹாஜரில்லாமையினாலாவது வேறே யாதொரு நியாயமான காரணத்தினாலாவது, யாதொரு விசாரணை அல்லது பரிசீலனையை ஆரம்பிப்பதை ஒத்திவைப்பதாகிலும் அதை நிறுத்திவைப்பதாகிலும் அவசியமாகவாவது யுக்தமாகவாவதிருந்தால், கோர்ட்டார் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றினால், அதற்குண்டான ஹேதுக்களைக் கண்டு எழுத்துமூலமாய் உத்தரவு பிறப்பித்து, தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிற கிட்டப்படி தங்களுக்கு நியாயமாகக் காணுகிற காலம்வரையில் அதை அப்போதைக்கப்போது ஒத்திவைக்கலாம் அல்லது நிறுத்திவைக்கலாம்; மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவன்காவலிலிருப்பானாகில் அவனைவாறண்டைக்கொண்டுமறுபடி காவலுக்கனுப்பலாம்.

காவலுக்கனுப்புவது.

ஆனால், ஒரு தடைவையில் பதினைந்து நாளைக் கடிகப்பட்ட காலத்திற்கு மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ்சாட்டப்பட்டவனை இந்தப்பிரிவின்படி மறுபடியுங் காவலுக்கனுப்பக்கூடாது.

(2) ஹைகோர்ட் தவிர வேறேயாதொரு கோர்ட்டாரால் இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட பிரதி உத்தரவும், எழுத்துமூலமாயிருக்கவேண்டியதுமல்லாமல், கோர்ட்செய்கிற ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது அதில் கையெழுத்துப் பண்ணவும்வேண்டும்.

மறுபடி காவலுக்கனுப்புவதற்கு நியாயமான காரணம்.

விவரணம்.—குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றஞ் செய்திருப்பானென்கிற அனுமானமுண்டாவதற்குப் போதுமான சாட்சியங்கிடைத்திருந்து அவனை மறுபடி காவலுக்கனுப்புவதனாலே இன்னுஞ் சாட்சியம் கிடைக்கலாம் போலிருக்கிறதென்று தோற்றினால் மறுபடி காவலுக்கனுப்புவதற்கு இது தகுந்த காரணமாகும். (கி. பு. கோடு, பிரிவு - 344.)

*தாம் பைசல் செய்யக்கூடாத கேஸை ஜில்லா ப்ரொவின்ஷியல் மாஜிஸ்திரேட் நடத்துவது. B*

814. (1) ராஜதானிக்கு வெளியிலுள்ள எந்த டிஸ்ட்ரிக்டிலாகிலும் யாதொரு மாஜிட்ரேட்டுக்கு முன்பாக விசாரணையாவது பரிசீலனையாவது நடந்துகொண்டிருக்கையில, அந்தக் கேஸானது அந்த டிஸ்ட்ரிக்டிலுள்ள வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினால் பரிசீலனை செய்யப்படவேண்டியதாக வாகிலும் பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணப்படவேண்டியதாகவாகிலுமிருக்கிற கேஸாயிருக்கிறதென்று நிச்சயித்துக்கொள்ளுவதற்கு இடமிருப்பதாகச் சாட்சியத்தினாலே அவருக்குத்தோற்றினால், அவர் நடவடிக்கையை நிறுத்தி, வைத்து, தாம் யாருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறாரோ அப்படிப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் உத்தரவு செய்கிறபடி அதிகாரமுடைய வேறே மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது அந்தக் கேஸை அனுப்பவேண்டியதுமல்லாமல், அது இப்படிப்பட்டதென்று சுருக்கமாய் ரிபோர்ட் எழுதி அதையும் கூட அனுப்பவேண்டும்.

(2) யாரிடத்திற்கு அந்தக்கேஸ் அனுப்பப்படுகிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கதிகார மிருந்தால், அந்தக்கேஸைத் தாமே பரிசீலனை பண்ணலாம், அதிகாரமுடையவராய்த் தமக்குக் கீழ்ப்பட்டிருக்கிற யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அதை அனுப்பலாம், அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவனைப் பரிசீலனைக்குக் கம்மிட் பண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு-346.)

*விசாரணை அல்லது பரிசீலனை ஆரம்பித்தபின்பு கேஸைக் கம்மிட் பண்ணவேண்டியதென்று மாஜிஸ்திரேட்டுக்குத் தெரியவந்தால் இன்னது செய்வது.*

815. (1) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக விசாரணை நடக்கையிலாவது, தீர்ப்பில் கையெழுத்துச் செய்வதற்குமுன்னமே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகப்பரிசீலனை நடக்கையிலாவது, அந்தக்கேஸானது ஸெஷ்ஷன் கோர்ட்டாராலாகிலும் ஹைகோர்ட்டாராலாகிலும் பரிசீலனை செய்யப்படவேண்டிய கேஸென்று நடவடிக்கைகளின் எந்தத் தெசையிலாவது அவருக்குத்தோற்றி, பரிசீலனைக்குக் கம்மிட்பண்ண அவருக்கதிகாரமிருக்கிற பட்சத்தில், அவர் அப்புறம் நடவடிக்கை நடத்தாமல் நிறுத்திக் குற்றஞ் சாட்டப்பட்டவனை இதில் முன்னமே சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி கம்மிட் பண்ணவேண்டும்.

(2) பரிசீலனைக்குக் கம்மிட்பண்ண அந்த மாஜிஸ்ட்ரேட்டுக் கதிகாரமில்லாவிட்டால், அவர் 346 - வது பிரிவின்படி நடத்தவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு - 347.)

816. இந்தியன் பினல்கோட் 12-ம் அத்தியாயம் அல்லது 17-ம் அத்தியாயத்தின்படி மூன்றுவருஷத்திற்காவது அதற்கு மேற்பட்ட காலத்திற்காவது காவலில் வைக்கும்படியான தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்திற்காக எவனாகிலும் குற்றவாளியாக்கப்பட்டிருந்து, அந்த அத்தியாயங்களில் எதன்படிக்காவது மூன்று வருஷத்திற்காகிலும் அதற்குமேற்பட்ட காலத்திற்காகிலும் காவலில் வைக்கும்படியான தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றம் மறுபடி சாட்டப்படுவானாகில், யாருக்குமுன்பாக நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவானாகில் தாமே தகுந்த தண்டனை விதிக்கக்கூடுமென்று அபிப்பிராயப்பட்டாலன்றி மற்றப்படி அப்படிப்பட்டவனைச் சங்கதிக்குத்தக்கபடி ஸெஷ்ஷன்கோர்ட்டுக்காவது ஹைகோர்ட்டுக்காவது கம்மிட்பண்ணவேண்டும்.



ஆனால், 30 - வது பிரிவின்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரங்கொடுக்கப் பட்டிருந்தால், ஸெஷ்ஷன்கோர்ட்டுக்குக்கம்மிட்செய்வதற்குப் பதிலாக அந்தக்கேஸை அவருக்கு மாற்றிவிடலாம். (கி. பு. கோடு, பிரிவு - 348)

*போதுமான கடுஞ்சிட்சை மாஜிஸ்ட்ரேட் செய்யக்கூடாதபோது நடந்துவது.*

817. (1) அதிகாரமுடைய இரண்டாவது அல்லது மூன்றாவதுவகுப்பு மாஜிஸ்ட்ரேட்டானவர், வாதிபக்கம் சாட்சியத்தையும் குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்சம் சாட்சியத்தையும் கேட்டபின்பு குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றவாளிதானென்று அபிப்பிராயப்பட்டு, விதிப்பதற்கு அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமிருப்பதைவிட இன்னுங் கடுஞ்சிட்சையாகிலும் அதற்கு வேறான சிட்சையாகிலும் அவனடையவேண்டியதென்றாவது, 106-வது பிரிவின்படி அவனை முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கச்சொல்லி உத்தரவு செய்யவேண்டியதென்றாவது எண்ணுவாராகில், அவர் அந்த அபிப்பிராயத்தை எழுதிவைத்து, தான் யாருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறாரோ அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்காவது தம்முடைய நடவடிக்கைகளையும் குற்றஞ் சாட்டப்பட்டவனையும் அனுப்பலாம்.

(2) யாரிடத்திற்கு நடவடிக்கைகள் அனுப்பப்படுகிறதோ அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்குயுக்தமாகத்தோற்றினால், கட்சிக்காரர்களை விசாரணைசெய்வதுமல்லாமல், அந்தக்கேஸிலே முன்னதாய்ச் சாட்சியஞ் சொல்லியிருக்கிற யாதொரு சாட்சியத்தையும் மறுபடி அழைப்பித்து அவர்களுடைய சாட்சியத்தையுங் கேட்கலாம்; அதற்குமேல் அந்தக் கேஸிலேதமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடிக்கும் சட்டத்திற்கு ஒத்திருக்கும்படிக்கும் தீர்ப்புச் சிட்சை அல்லது உத்தரவுசெய்யவேண்டும்:

ஆனால், அவர் 32, 33-வது பிரிவுகளின்படி விதிப்பதற்குத் தமக்கு அதிகாரமிருக்கிற தண்டனையைவிட இன்னுங் கடுந்தண்டனையை விதிக்கக் கூடாது. (கி. பு. கோடு, பிரிவு - 349.)

818. (1) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் யாதொரு விசாரணை அல்லது பரிசீலனையில் சாட்சியம் முழுமையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது கேட்டு ரிகார்ட் செய்தபின்பு, அதில் அதிகாரஞ் செலுத்துவதை விட்டுவிட்டு, அவருக்குப்பதிலாக அப்படிப்பட்ட அதிகாரமுடைய வேறொரு மாஜிஸ்ட்ரேட் அந்த அதிகாரத்தைச் செலுத்த வந்திருக்கும்போது, அப்படி வந்திருக்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு முன்னிருந்தவரால் அப்படி ரிகார்ட்செய்யப்பட்ட சாட்சியத்தின் மேலாகிலும், தமக்கு முன்னிருந்தவர் சிறிது ரிகார்ட்செய்தும் மற்றதைத் தாம் ரிகார்ட்செய்து மிருக்கிற சாட்சியத்தின் மேலாகிலும் நடவடிக்கை நடத்தலாம்; அல்லது அவர் சாட்சிகளை மறுபடிஸம்மனனுப்பி வரவழைத்து விசாரணை அல்லதுபரிசீலனையைமறுபடி ஆரம்பிக்கலாம்.

ஆனால்:—

(a) எந்தப் பரிசீலனையிலாவது, இரண்டாவது வந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் தம்முடைய நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்போது, குற்றஞ்சாட்டப்பட்டவன் சாட்சிகளை யாகிலும் அவர்களிலெவனையாகிலும், மறுபடி ஸம்மனனுப்பி வரவழைத்து மறுதரம் விமரிசை செய்யவேண்டுமென்று கேட்கலாம்.

37

(b) ஹைகோர்ட்டாராவது, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கீழ்ப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளால் பரிசிலனை செய்யப்பட்ட கேஸுகளிலே டிஸ்ட்ரிகட் மாஜிஸ்ட்ரேட்டாவது, குற்றஸ்தாபனை செய்த மாஜிஸ்ட்ரேட்டினால் முழுவதும் ரிகார்ட் செய்யப்படாத சாட்சியத்தின்மேல் செய்யப்பட்ட யாதொரு குற்றஸ்தாபனையினாலே குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு முக்கியமாய்ப் பாதகமுண்டாயிருக்கிறதென்று அபிப்பிராயப் படுகிறபட்சத்தில், அந்தக் கோர்ட்டாராவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது அப்பீல் செய்யப்பட்டிருந்தாலும் இராவிட்டாலும், அப்படிப்பட்ட குற்றஸ்தாபனையைத் தள்ளிவிடலாம்; மேலும், புதிதாய் விசாரணை அல்லது பரிசிலனை நடத்தும்படி உத்தரவு செய்யலாம்.

(2) நடவடிக்கைகள் 346-வது பிரிவின்படி நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற கேஸுகளுக்கு இந்தப்பிரிவில் சொல்லியிருப்பதெதுவும் சம்மந்தப்படமாட்டாது. (கி. பு. கோடு, பிரிவு - 350)

*கோர்ட்டில் வந்திருக்கிற குற்றஞ் சாட்டப்பட்டவர்களை மறிப்பது.*

819. (1) பிடிக்கப்பட்டாவது ஸம்மன் செய்யப்பட்டாவது வந்திராவிட்டாலும் க்ரிமினல் கோர்ட்டில் வந்திருக்கிறவனெவனையாவது, சாட்சியத்தினாலே அவன் செய்திருப்பதாகத் தோற்றி விசாரிப்பதற்கு அந்தக் கோர்ட்டார் அதிகாரமுடைத்தாயிருக்கிற யாதொரு குற்றத்தைக்குறித்து விசாரணை அல்லது விமரிசைசெய்வதற்காக அந்தக் கோர்ட்டார் மறியல்செய்து, அவன் பிடிக்கப்பட்டாவது ஸம்மன் செய்யப்பட்டாவதிருந்தாற்போல அவன் மேல் நடவடிக்கை நடத்தலாம்.

(2) 18-ம் அத்தியாயத்தின்படி விசாரணை நடந்துகொண்டிருக்கையிலாவது, பரிசிலனை ஆரம்பிக்கப்பட்டபின்பாவது அப்படி மறியல் செய்யப்படுமாகில், அப்படிப்பட்டவனைக்குறித்து நடவடிக்கைகளைப் புதிதாய் ஆரம்பித்து, சாட்சிகளை மறுபடி விசாரணை செய்யவேண்டும். (கி. பு. கோடு பிரிவு - 351)

*கோர்ட்டுகள் பஹிரங்கமானவைகளாயிருப்பது.*

820. யாதொரு குற்றத்தை விசாரணை அல்லது பரிசிலனை செய்யும் பொருட்டு யாதொரு க்ரிமினல் கோர்ட் கூடுகிற இடமானது பஹிரங்கமான கோர்ட்டாக எண்ணப்படும்; அவ்விடத்திற்கு ஜனங்கள் வசதியாய்க் கொள்ளக்கூடியவரையிலே சாதாரணமாய்ப்போகலாம்:

ஆனால், கோர்ட்செய்கிற ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது தமக்கு யுக்தமாகத் தோற்றினால், யாதொரு குறித்தகேஸ் விசாரணை அல்லது பரிசிலனை நடந்துகொண்டிருக்கிற எந்த நிலைமையிலாகிலும், சாதாரணமாய் ஜனங்களாவது குறிக்கப்பட்டவனெவனாவது கோர்ட்டாரால் உபயோகிக்கப்பட்ட அறை அல்லது கட்டிடத்திற்கு வரக்கூடாதென்றாகிலும் அவ்விடத்திலிருக்கக்கூடாதென்றாகிலும் உத்தரவுசெய்யலாம்.

*குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கெதிரில் சாட்சியம் வாங்குவது.*

821. வெளிப்படையாய் வேறே விதமாகச் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, 18, 20, 21, 22, 23-ம் அத்தியாயங்களின்படி வாங்கப்பட்ட சகல சாட்சியத்தையும், குற்றஞ்சாட்டப்பட்டவனுக் கெதிரிலாவது, அவன் நேராய் ஹாஜராகவேண்டியதில்லையென்று உத்தரவுசெய்யப்பட்டிருக்குமாகில் அவனுடைய ப்ளீடருக்கெதிரிலாவது வாங்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-353.)



821 (a) முதலில் ஸம்மன் பிறப்பிக்கப்படுகிற கேசுகளில் சரியான காரணமிருக்கிறபட்சத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவன் நேரில் ஆஜராகவேண்டியதில்லையென்று நிவர்த்தித்து அவனுக்கு பதிலாய் அவனுடைய ப்ளீடர் ஆஜராகலாமென்று மாஜிஸ்திரேட்டு அவனுக்கு அனுமதி கொடுக்கலாம்.

ஆனால் கேசை விசாரணையாவது பரிசிலனையாவது செய்கிற மாஜிஸ்திரேட்டானவர் தனக்கு யுக்தமாகத்தோற்றினால், நடவடிக்கை நடந்துகொண்டிருக்கையி லெப்போதாகிலும் குற்றஞ் சாட்டப்பட்டவனை நேரில் ஆஜராகச் சொல்லி உத்தரவு செய்யலாம், மேலும் அவசியமானால் அப்படி ஆஜராகும்படி இதில் முன்னமே சொல்லியிருக்கிற விதமாய் நிர்ப்பந்திக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-205.)

*ராஜதானிக்குள்ளு வெளியில் சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுகிற விதம்.*

822. ராஜதானி மாஜிஸ்ட்ரேட் தவிர வேறேயாதொரு மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸெஷன் ஜட்ஜினாலாவது அவருக்கு முன்பாகவாவது இந்தச் சட்டப்படி நடத்தப்போகிற(சுருக்கவகைப் பரிசிலனைகள் தவிர மற்ற) விசாரணைகளிலும் பரிசிலனைகளிலும், சாட்சிகளின் வாக்குமூலத்தை அடியில்கண்டிருக்கிறவிதமாய் ரிகார்ட்பண்ணவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-354.)

823. (1) ராஜதானி மாஜிஸ்ட்ரேட் தவிர வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகப் பரிசிலனை செய்யப்பட்ட ஸம்மன் கேஸுகளிலும், 260-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (b) முதல் (m) உட்பட அதுவரையிலுள்ள பகுதிகளில் சொல்லியிருக்கிற குற்றங்கள் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினால் பரிசிலனை செய்யப்படுகையில் அந்தக்கேஸுகளிலும், (பரிசிலனை நடந்துகொண்டிராவிட்டால்) 514-வது பிரிவின்படிக்கான சகல நடவடிக்கைகளிலும் மாஜிஸ்ட்ரேட்டானவர் சாட்சி விசாரணை நடக்கையில் பிரதி சாட்சியினுடைய வாக்குமூலத்தின் சாராம்சத்திற்கு சுருக்கம் எழுதிக்கொள்ளவேண்டும்.

(2) அப்படிப்பட்ட சுருக்கத்தை மாஜிஸ்ட்ரேட்டானவர் தன் கையினாலேயே எழுதிக்கையெழுத்துப் போடவேண்டும்; அதற்குமேல் அது ரிகார்டில் சேரவேண்டும்.

(3) மேற் சொல்லியபடி சுருக்கம் எழுதுவதற்கு மாஜிஸ்ட்ரேட்க்குத் தடங்கலுண்டானால், அப்படி தான் எழுதக்கூடாமைக்குண்டான ஹேதுவை அவர் ரிகார்ட் பண்ணவேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட சுருக்கத்தைப் பஹிரங்கமான கோர்ட்டில் தான் சொல்லி எழுதுவித்து அதில் தம் கையெழுத்துப் போடவேண்டும்; அதற்குமேல் அந்தச்சுருக்கவாக்குமூலம் ரிகார்ட்டில் சேரவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-355.)

சுருக்கவகையான பரிசீலனைகளைக் குறித்து

823. (a) (1) இந்தச்சட்டத்தில் என்னசொல்லி யிருந்தபோதினும்—

(a) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டும்,

(b) இந்த விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங்கொடுக்கப் பெற்றிருக்கிற யாதொரு முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டும்,

(c) முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகாரங்களையுடையவர்களாய், இந்த விஷயத்திலே பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்றிருக்கிற மாஜிஸ்ட்ரேட்டுகளின் சபையாரும் (Bench Magistrates).

அவர் அல்லது அவர்களுக்குச் சரியாகத் தோன்றுகிறபடி அடியில் கண்டிருக்கிற குற்றங்கள் யாவற்றையுமாவது அவைகளிலெதையாவது சுருக்க வகையாய்ப் பரிசீலனை செய்யலாம்.

(a) ஆறுமாதத்திற்கதிகப்பட்ட காலத்திற்குக் காவல் தண்டனையாவது தண்ணீர் மேலேற்றும் தண்டனையாவது மரணதண்டனையாவது விதிக்கப்படத்தக்கதல்லாத குற்றங்கள் ;

(b) இந்தியன் பினல்கோட் 264, 265, 266 - வது பிரிவுகளின்படி படிக்கட்டு முதலிய எடுத்தலளவைகளுக்கும் படிமரக்கால் முதலிய முகத்தலளவைகளுக்கும் சம்பந்தமான குற்றங்கள் ;

(c) அதேகோட் 323 - வது பிரிவின்படி துன்பம் ;

(d) அதேகோட் 379, 380 அல்லது 381 - வது பிரிவின்படி திருடப்பட்ட சொத்தின் கிரயம் ஐம்பது ரூபாய்க்கதிகப்படாத திருட்டு ;

(e) அதேகோட் 403 - வது பிரிவின்படி, அநியாயமாய் உபயோகப்படுத்திக் கொள்ளப்பட்ட சொத்து ஐம்பதுரூபாய்க்கு அதிகப்படாதபோது அந்தச் சொத்தை அநியாயமாய் உபயோகித்தல் ;

(f) அதேகோட் 411 - வது பிரிவின்படி, திருடப்பட்ட சொத்தின் கிரயம் ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாதபோது, அந்தத் திருட்டுச் சொத்தைப் பெற்றுக்கொள்வது அல்லது வைத்துக்கொண்டிருப்பது ;

(g) அதேகோட் 414 - வது பிரிவின்படி, திருடப்பட்ட சொத்தின்கிரயம் ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாதபோது, அந்தத்திருட்டுச் சொத்தை மறைப்பதற்காவது யாதொருவகை செய்வதற்காவது உதவிபண்ணுவது ;

(h) அதேகோட் 427 - வது பிரிவின்படி கெடுதி;

(i) அதேகோட் 448-வது பிரிவின்படி, வீட்டினிடமாய் நுழைவதும், 451, 453, 456, 457 - வது பிரிவின்படிக்கான குற்றங்களும் ;

(j) அதேகோட் 504 - வது பிரிவின் பிரகாரம், அமரிக்கையைக் கெடுக்கும்படிச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு பழித்தலும், 506-வது பிரிவின்படி, அநியாயமாய்ப் பயப்படுத்துதலும்;

(k) மேற்படி குற்றங்களில் எதற்காவது உடந்தையாயிருப்பது ;

(l) மேற்படி குற்றங்களில் எதையாவது செய்ய எத்தனப்படுவதும் குற்றமாகும்போது அந்த எத்தனம் ;

(m) ஆடுமாடுகள் துராகிருதமாய் நுழைவதைக் குறித்த 1871-ம்வருஷத்து ஆக்ட் 20 - வது பிரிவின்படிக்கான குற்றங்கள்.

ஆனால், எந்தக்கேஸில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் 34-வது பிரிவினால் கொடுக்கப்பட்ட விசேஷ அதிகாரங்களைச் செலுத்துகிறாரோ அப்படிப்பட்ட கேஸைச் சுருக்கவகையாய்ப் பரிசீலனை செய்யக்கூடாது.

(2) சுருக்கவகையாய்ப் பரிசீலனை செய்யும்போது மாஜிஸ்ட்ரேட்டுக்காவது மாஜிஸ்ட்ரேட் சபையாருக்காவது அந்தக்கேஸின் சுபாவத்தை யோசிக்கையிலே சுருக்கவகையாய்ப் பரிசீலனைசெய்வது சரியல்லவென்று தோன்றும்பட்சத்தில் மாஜிஸ்ட்ரேட்டாவது மாஜிஸ்ட்ரேட் சபையாராவது விசாரணை செய்யத்தயாராயிருக்கும் எந்தச் சாட்சிகளையேனும், அழைத்து இந்த சட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிறபடி அந்தக்கேஸைப் புனர் விசாரணைசெய்ய ஆரம்பிக்கலாம். (இ. பு. கோடு, பிரிவு-260.)



824. (1) ஸெஷ்ஷன் கோர்ட்டுக்கு முன்பாகவும் ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுகள் தவிர வேறே மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முன்பாகவும் நடக்கிற மற்ற சகல பரிசிலனைகளிலும், 12, 18-ம் அத்தியாயங்களின்படி செய்கிற சகல விசாரணைகளிலும், பிரதி சாட்சியின் வாக்கு மூலத்தையும் கோர்ட்டில் வழங்குகிற பாஷையில் மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது எழுதவேண்டும், அல்லது தமக்கு எதிரிலே தமக்குக்கேட்கும்படி தம்முடைய உத்தரவுப்பிரகாரம் தம்முடைய நேரான மேல் விசாரணைக்குள்ளாக எழுதுவிக்கவேண்டும் ; அப்படிப்பட்டதில் அந்த மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷ்ஷன் ஜட்ஜாவது கையெழுத்துப் பண்ணவேண்டும்.

ராஜதானிகளுக்கு வெளியில் மற்ற கேசுகளில் ரிகார்ட்.

(2) அப்படிப்பட்ட சாட்சிக்காரன் தன்னுடைய சாட்சியத்தை இங்கிலீஷில் சொன்னால்,அதைமாஜிஸ்ட்ரேட்டாவதுஸெஷ்ஷன் ஜட்ஜாவது இங்கிலீஷில் தாமே தம்கையால் எழுதலாம் ; குற்றஞ் சாட்டப்பட்டவன் இங்கிலீஷ் பாஷை தெரிந்தவனாகவாகிலும், கோர்ட்டில் வழங்குகிற பாஷை இங்கிலீஷாகவாகிலும் இராவிட்டால், அந்தச் சாட்சியத்தைக்கோர்ட்டில்வழங்குகிறபாஷையில் தர்ஜமாச் செய்வித்து, கையெழுத்து மூலமாய் உறுதி செய்யப்பட்ட அந்தத் தர்ஜமாவை ரிகார்டில் சேர்க்கவேண்டும்.

இங்கிலீஷில் சொல்லப்பட்ட சாட்சியம்.

(3) சாட்சியத்தை மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷ்ஷன் ஜட்ஜாவது எழுதாத கேஸுகளிலே அவர் அந்தந்தச் சாட்சிவிசாரணை நடக்கையில், அந்தந்தச் சாட்சி சொல்லுகிற சாட்சியத்தின் சாராம்சத்திற்கு சுருக்கம் எழுதவேண்டும்; அப்படிப்பட்ட சுருக்க வாக்குமூலத்தை அந்த மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷ்ஷன் ஜட்ஜாவது தம் கையினாலேயே எழுதிக் கையெழுத்துப் போடவேண்டும் ; அதற்குமேல் அது ரிகார்டில் சேரவேண்டும்.

சாட்சியத்தை மாஜிஸ்ட்ரேட்டாவது ஜட்ஜாவது தாமே எழுதிக்கொள்ளாவிட்டால் சுருக்கம் எழுதுவது.

(4) மேற்சொல்லியபடி சுருக்கவாக்குமூலம் எழுதுவதற்கு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸெஷ்ஷன் ஜட்ஜுக்காவது தடங்கலுண்டானால், அப்படி தாம் எழுதக்கூடாமைக்குண்டான ஹேதுவை அவர்ரிகார்ட் பண்ணவேண்டும். (இ. பு. கோடு, பிரிவு-356.)

825. (1) யாதொரு டிஸ்ட்ரிக்ட்டிலாவது டிஸ்ட்ரிக்ட்டின் பாகத்திலாவது, யாதொரு ஸெஷ்ஷன் கோர்ட்டுக்கு முன்பாகவாகிலும் யாதொரு மாஜிஸ்ட்ரேட் அல்லது யாதொரு வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முன்பாகவாகிலும் நடத்தப்படுகிற நடவடிக்கைகளிலாவது, 356-வது பிரிவில் சொல்லியிருக்கிற விஷயங்களிலே, யாதொரு சாட்சிக்காரனுடைய சாட்சியத்தை எழுதிக்கொள்வதற்கு யாதொருதக்க காரணத்தினாலே ஸெஷ்ஷன் ஜட்ஜுக்காகிலும் மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் தடங்கலுண்டானாலொழிய, அவர் ஒவ்வொரு சாட்சிக்காரனுடைய சாட்சியத்தையும் தம்முடைய சுயபாஷையில் தம் கையினாலே எழுதவேண்டியதென்று அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தரவு பண்ணலாம் ; அப்படி எழுதுவதற்குத் தடங்கலுண்டாகிற விஷயத்தில் அப்படி தாம் எழுதக்கூடாமைக்குண்டான ஹேதுவை ரிகார்ட் செய்து அப்படிப்பட்ட சாட்சியத்தைப் பகிரங்கமான கோர்ட்டில் தாம் சொல்லி எழுதுவிக்கவேண்டும்.

சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுகிற பாஷை.

(2) அப்படி எழுதப்பட்ட சாட்சி வாக்குமூலத்திலே ஸெஷ்ஷன் ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது கையெழுத்துப் பண்ணவேண்டும் ; அதற்கு மேல் அது ரிகார்ட்டில் சேரவேண்டும்.

ஆனால், ஸெஷன் ஜட்ஜ் அல்லது மாஜிஸ்ட்ரேட்டினுடைய சுயபாஷையானது இங்கிலீஷ் அல்லாவிட்டாலும், கோர்ட்டில் வழங்குகிற பாஷையல்லாவிட்டாலும், சாட்சியத்தை இங்கிலீஷிலாவது கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாவது எழுதும்படி அவருக்கு அவ்விடத்திய கவர்ன்மெண்டார் உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-357.)

*355 - வது பிரிவிற்குட்பட்ட கேசுகளிலே மாஜிஸ்ட்ரேட்டானவர் சொல்லப்பட்டிருக்கிற எதாவதொரு விதமாய்ச்செய்வது.*

826. 355-வது பிரிவிற்கண்டிருக்கிற விதமான கேஸுகளிலே, மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத்தோற்றினால், 356-வது பிரிவிலிருக்கிற விதமாய் யாதொரு சாட்சியின் வாக்குமூலத்தை எழுதலாம், அல்லது அந்த மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் 357-வது பிரிவில் சொல்லியிருக்கிற உத்தரவை அவ்விடத்திய கவர்ன்மெண்டார் செய்திருந்தால், அந்த 357-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் எழுதலாம். (கி. பு. கோடு, பிரிவு-358.)

*356- அல்லது 357 - வது பிரிவின்படி சாட்சியத்தை எழுதுகிற ஒழுங்கு.*

827. (1) 356 அல்லது 357-வது பிரிவின்படி எழுதப்படுகிற சாட்சியத்தைச் சாதாரணமாய் கேள்வி ஜவாப்பாக எழுதாமல் விருத்தாந்தமாக எழுதவேண்டும்.

(2) மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது தமக்குயுக்தமாகத்தோற்றினால், குறித்தயாதொரு கேள்வியையும் ஜவாபையும் தாமே எழுதலாம், அல்லது எழுதுவிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-359.)

*அப்படிப்பட்ட சாட்சியம் எழுதி முடிந்த பின்பு அதைக்குறித்து இன்னது செய்வது.*

828. (1) பிரதி சாட்சியினுடைய வாக்குமூலத்தையும் 356 அல்லது 357-வது பிரிவின்படி எழுதி முடிந்த வுடனே, குற்றஞ்சாட்டப்பட்டவன் ஹாஜரிலிருந்தால் அவனுக்கெதிரிலாவது, அவனுக்காக ப்ளீடர் வந்திருந்தால் அவருக்கெதிரிலாவது, அதைச் சாட்சிக்கு வாசித்துக்காட்டவேண்டும்; பின்பு அவசியமானால் அதைத் திருத்தவேண்டும்.

(2) சாட்சியத்தைச் சாட்சிக்கு வாசித்துக்காட்டுகையில் அதில் ஏதாவது சரியாயிருக்கவில்லையென்று அவன் சொன்னால், மாஜிஸ்ட்ரேட்டாவது ஸெஷன் ஜட்ஜாவது அந்தச் சாட்சியத்தைத் திருத்தாமல், அதைக் குறித்து அந்த சாட்சி செய்த ஆட்சேபத்தை அதன்மேல் சுருக்கமாக எழுதலாம், அப்படிச் செய்கையில் தமக்கு அவசியமாகத் தோற்றுகிற வுராக்களை அதன்மேல் எழுதவேண்டும்.

(3) ஒரு பாஷையில் சொல்லப்பட்ட சாட்சியத்தை வேறொரு பாஷையில் எழுதினால், அது எழுதப்பட்ட பாஷை அந்தச் சாட்சிக்குத் தெரியாத பக்ஷத்தில், அப்படி எழுதப்பட்ட சாட்சியத்தை அது சொல்லப்பட்ட பாஷையிலாவது அவனுக்குத் தெரிந்திருக்கிற வேறே எந்தப்பாஷையிலாவது அவனுக்கு மொழிபெயர்த்துச் சொல்லவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-360.)

*குற்றஞ்சாட்டப்பட்டவனுக்காவது அவனுடைய ப்ளீடருக்காவது சாட்சியத்தை மொழிபெயர்த்துச் சொல்லுவது.*

829. (1) குற்றஞ்சாட்டப்பட்டவனுக்குத் தெரியாத பாஷையிலே சாட்சியஞ் சொல்லப்பட்டிருந்து, அவன் நேராய்வந்திருக்கிற விஷயத்தில் அதை அவனுக்குத் தெரிந்திருக்கிற பாஷையிலே பகிரங்கமான கோர்ட்டில் அவனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவனுக்காக ப்ளீடர் வந்திருந்து கோர்ட்டில் வழங்குகிற பாஷையல்லாததாயும் ப்ளீடருக்குத் தெரியாததாயுமிருக்கிற வேறே பாஷையில் சாட்சியஞ் சொல்லப்பட்டால் அதை அந்த ப்ளீடருக்குக் கோர்ட்டில் வழங்குகிய பாஷையில் தெரிவிக்கவேண்டும்.



(3) முறையான ருஜுவுக்காகத் தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்யப்பட்டால், அதில் அவசியமாகக் காணுகிறமட்டிலே கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றினால் அதை எதிரிக்கு வேறுபாஷையில் தெரிவிக்கவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு - 361.)

*ராஜதானி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுவது.*

830. (1) ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டானவர்-இருநூறு ரூபாய்க்கதிகப்பட்ட அபராதமாவது ஆறுமாதத்திற்கு அதிகப்பட்ட காவல்தண்டனையாவது விதிக்கிற ஒவ்வொரு கேஸிலும், அவர் சாட்சிகள் சொல்லுகிற சாட்சியத்தைத் தம் கையினாலேயே எழுதிக்கொள்ளவாவது வேண்டும், அல்லது பகிரங்கமான கோர்ட்டில் தாம் சொல்லி எழுதுவிக்கவாவது வேண்டும். அப்படி எழுதிக்கொள்ளப்பட்ட சகல சாட்சியத்திற்கும் மாஜிஸ்ரேட் கையெழுத்துப் போடவேண்டும்; அதற்குமேல் அது ரிகார்டில்சேரவேண்டும்.

(2) அப்படி எழுதிக்கொள்ளுகிற சாட்சியத்தைச் சாதாரணமாய்விருத்தாந்தமாக எழுதவேண்டும்; ஆனால், மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினால், குறித்த யாதொரு கேள்வியையாவது ஜவாபையாவது எழுதலாம், அல்லது எழுதுவிக்கலாம்.

(3) ஒரேதருணத்தில் 35 - வது பிரிவின்படி விதிக்கப்பட்ட சிட்சைகள் இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற காரியங்களின்பொருட்டு ஒரே சிட்சையாக எண்ணப்படும். (கி. பு. கோடு, பிரிவு - 362)

*சாட்சி சொல்லுகையில் சாட்சியினுடைய நடத்தையைக்குறித்து விசேஷங்களை எழுதுவது.*

831. ஸெஷன் ஜட்ஜாவது மாஜிஸ்ட்ரேட்டாவது யாதொரு சாட்சியினுடைய வாக்குமூலத்தை ரிகார்ட்செய்த பின்பு அவர் சாட்சியை விசாரணை செய்கையில் அந்தச்சாட்சி நடந்துகொள்வதில் விசேஷமா எதாவது தமக்குத் தோற்றினால் அதையும் ரிகார்ட் பண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு-363.)

*குற்றஞ்சாட்டப்பட்டவனைச் செய்த விசாரணை இன்னபடி ரிகார்ட் பண்ணுவது.*

832. (1) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது, ராயல் சார்ட்டரினால் ஸ்தாபிக்கப்பட்ட ஹைகோர்ட் அல்லது பஞ்ஜாப் முக்கிய கோர்ட் தவிர வேறே யாதொரு கோர்ட்டாராலாவது, குற்றஞ்சாட்டப்பட்டவன் விசாரணைசெய்யப்படும்போதெல்லாம், அப்படிப்பட்ட விசாரணைமுழுமையையும் அதில் அவனைக்கேட்ட பிரதி கேள்வியையும் அவன் சொன்ன பிரதி ஜவாப்பையும், அவனை விசாரணைசெய்த பாஷையிலாவது, அது சாத்தியப்படாவிட்டால், கோர்ட்டில் வழங்குகிற பாஷையிலாவது இங்கிலீஷிலாவது பூர்த்தியாய் ரிகார்ட் பண்ண வேண்டும்; அந்த ரிகார்ட்டை அவனுக்குக் காட்டவாவது வேண்டும், படித்து காட்டவாவதுவேண்டும்; அது எழுதப்பட்ட பாஷை அவனுக்குத் தெரியாவிட்டால், அவனுக்குத்தெரிந்த பாஷையில் அதை அவனுக்குத் தெரிவிக்க வேண்டும்; அவன் சொன்ன ஜவாப்புகளை அவன் விவரித்தாவது பின்னும் வேறே ஜவாப்புகளையாவது சொல்லுவதற்குத் தடங்கலில்லை.

(2) அவன் எதார்த்தமென்று என்ன சொல்லுகிறானோ அதற்கிணங்கப் பூர்த்தியாய் எழுதியான பின்பு, அந்த ரிகார்டிலே குற்றஞ் சாட்டப்பட்டவனும் மாஜிஸ்ட்ரேட் அல்லது அந்தக்கோர்ட் ஜட்ஜும் கையெழுத்துப்பண்ணவேண்டும்; மேலும் அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டாவது ஜட்ஜாவது தமக்கு முன்பாகத் தமக்குக்கேட்கும்படி வாக்குமூலம் எழுதப்பட்டதென்றும், குற்றஞ்சாட்டப்பட்டவன் சொன்ன வாக்குமூல முழுவதும் சரியாய் ரிகார்ட் செய்திருக்கிறதென்றும் கண்டு தம் கைப்பட ஸெர்ட்டிபிகேட் பண்ண வேண்டும்.

(3) குற்றஞ் சாட்டப்பட்டவனுடைய விசாரணை மாஜிஸ்ட்ரேட்டாவது ஜட்ஜாவது தாமே ரிகார்ட் செய்யாத விஷயங்களிலே அவர் ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டாயிராத பட்சத்தில், விமரிசை நடந்துகொண்டிருக்கையில், கோர்ட்டிலே வழங்குகிற பாஷையிலாவது போதுமானமட்டில் தமக்கு இங்கிலீஷ்தெரிந்திருந்தால் இங்கிலீஷிலாவது அதைக்குறித்துசுருக்கமாக எழுதவேண்டிய கடமையுள்ளவராவார்; அப்படிப்பட்ட சுருக்க வாக்குமூலத்தை மாஜிஸ்ட்ரேட்டாவது ஜட்ஜாவது தம்கையினுலே எழுதிக் கையெழுத்துப் பண்ணி ரிகார்டில் சேர்க்கவேண்டும். மேற்சொல்லியபடி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஜட்ஜூக்காவது யாதாஸ்து எழுதக்கூடாமையானுல், அதைக்குறித்து அவர் முகாந்தரத்தை ரிகார்ட் பண்ணவேண்டும்.

(4) குற்றஞ்சாட்டப்பட்டவனை 263-வது பிரிவின்படி செய்கிற விசாரணைக்கு இந்தப் பிரிவில் சொல்லியிருப்பதெதுவும் சம்மந்தப்படுவதாக எண்ணக்கூடாது. (கி. பு.கோடு, பிரிவு-364.)

ஹைக்கோர்ட்டிலே சாட்சியத்தை ரிகார்ட் பண்ணுவது.

833. ராயல் சார்ட்டரினுல் ஸ்தாபிக்கப்பட்ட பிரதிஹைகோர்ட்டாரும் பஞ்ஜாப் முக்கிய கோர்ட்டாரும், கோர்ட்டுக்கு முன்பாக வருகிற கேஸுகளிலே சாட்சியத்தை இன்னபடி எழுதிக்கொள்ளவேண்டியதென்று அப்போதைக்கப்போது பொதுவிதிசெய்து நிர்ணயிக்கலாம்; அந்தக்கோர்ட் ஜட்ஜுகள் சாட்சியத்தையாவது அதன் சாராம்சத்தையாவது, அப்படி ஏதாகிலும் விதி நிர்ணயிக்கப்பட்டால் அந்த விதியை அனுசரித்து எழுதிக்கொள்ளவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-356.)

## ஜாமீனைக் குறித்து.

இன்ன விஷயங்களில் ஜாமீன் வாங்கவேண்டுமென்பது.

834. ஜாமீன் வாங்கத்தகாத குற்றஞ் சாட்டப்பட்டவனல்லாத யாவனொருவன் யாதொரு போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தரால் வாறண்டில்லாமல் பிடிக்கப்பட்டாலும் மறியல் செய்யப்பட்டாலும், யாதொரு கோர்ட்டாருக்கு முன்பாக ஹாஜராலும் கொண்டுவரப்பட்டாலும், அந்த உத்தியோகஸ்தருடைய காவலிலிருக்கையிலெப்போதாவது அல்லது அந்தக் கோர்ட்டாருக்கு முன்பாக நடக்கிற நடவடிக்கையில் எந்த நிலைமையிலாவது, ஜாமீன் கொடுக்கச் சித்தமாயிருந்தால், அவனை ஜாமீன்மேல் விட்டுவிடவேண்டும்.

ஆனுல் அந்த உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டார்-யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்தில், அப்படிப்பட்டவனிடத்திலிருந்து ஜாமீன் வாங்காமல் இதில் பின்னுல் சொல்லியிருக்கிற விதமாய் அவன் ஹாஜராவதற்கு ஜாமீன்தாரர்களில்லாமலே அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதன்மேல் அவனை விட்டுவிடலாம். (கி. பு. கோடு, பிரிவு-496.)

835. (1) ஜாமீன் வாங்கத்தகாத யாதொரு குற்றஞ் சாட்டப்பட்டவனெவனுவது பொலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தரால் வாறண்டில்லாமல் பிடிக்கப்பட்டாலும், மறியல் செய்யப்பட்டாலும், யாதொரு கோர்ட்டாருக்கு முன்பாக ஹாஜராலும் கொண்டுவரப்பட்டாலும், அவனை ஜாமீன்மேல் விட்டுவிடலாம்; ஆனுல், அவன் எதைச்செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிருனே அந்தக் குற்றத்தை அவன் செய்தானென்று நம்புவதற்கு நியாயமான ஹேதுக்கள் காணப்பட்டால் அவனை அப்படி விட்டுவிடக்கூடாது.



(2) குற்றஞ்சாட்டப்பட்டவன் அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்திருக்கிருனென்று நம்புவதற்கு நியாயமான ஹேதுக்களில்லையென்றும், ஆனுல், அவனுடைய குற்றத்தை இன்னும் விசாரணை செய்வதற்குப் போதுமான ஹேதுக்களிருக்கிறதென்றும், அந்த உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டாருக்குச் சங்கதிக்குத் தக்கபடி முதல் விசாரணை, அல்லது பரிசீலனையில் எந்தத் தெசையிலாவது தோற்றுகிற பட்சத்தில், குற்றஞ் சாட்டப்பட்டவனை அந்த விசாரணை முடிவாகிறவரையில் ஜாமீன்மேலாவது, அந்த உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றினுல் இதில் பின்னுல் சொல்லப்படுகிறவிதமாய் அவன் ஹாஜராவதற்கு ஜாமீன்தாரர்களில்லாமலே அவன் முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதன் மேலாவது, விடுதலை செய்யவேண்டும்

(3) இந்தச் சட்டத்தின்படியான யாதொரு நடவடிக்கையின் பிந்திய எந்தத் தெசையிலாகிலும் யாதொரு கோர்ட்டார் இந்தப் பிரிவின்படி விட்டுவிடப்பட்டிருக்கிற யாவனொருவனைப் பிடிக்கலாம்; மேலும், அவனைக் காவலில் வைக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-497.)

836. இந்த அத்தியாயத்தின்படி எழுதிக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு முச்சிலிக்காவின் தொகையையும் அந்தந்தக் கேஸின் தாரதம்மியத்துக்குத் தக்கபடி நிர்ணயிக்கவேண்டியது மல்லாமல் அது அதிகமாயிருக்கவுங்கூடாது; ஹைகோர்ட்டாராவது ஸெஷ்ஷன் கோர்ட்டாராவது குற்றத்தீர்மானத்தின் மேல் அப்பீலிருந்தாலு மில்லாவிட்டாலும் யாதொரு கேஸிலே, யாவனொருவனிடத்திலிருந்து ஜாமீன் வாங்கும்படியாவது யாதொரு பொலீஸ் உத்தியோகஸ்தன் அல்லது மாஜிஸ்ட்ரேட் கேட்கிற ஜாமீனைக் குறைக்கும்படியாவது உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-498.)

குற்றஞ் சாட்டப் பட்ட [illegible] ஜாமீன்தாரர்களும் எழுதிக் கொடுக்கிற முச்சிலிக்கா.

837. (1) யாவனொருவனை ஜாமீன்மேலாவது அவனுடைய முச்சிலிக்காவின் மேலாவது விட்டுவிடுவதற்கு முன்னமே அவன் சங்கதிக்குத்தக்கபடி போலீஸ் உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டாருக்குப் போதுமான[illegible]ன்று தோன்றுகிற தொகைக்கு முச்சிலிக்கா எழுதிக்கொடுக்க[illegible], அன்றியும் அவனை ஜாமீன்மேல் விடுகிறதாயிருந்தால், [illegible]லான கா[illegible]தில் பலான இடத்திலே அந்த நபர் ஹாஜராகவேண்டு மென்று[illegible]ங்க[illegible]குத் தக்கபடி போலீஸ் உத்தியோகஸ்தர் அல்லது கோர்ட்டார் வேறே [illegible]தமாய் உத்தரவு செய்கிறவரையில் அப்படி ஹாஜராகிக்கொண்டே யிருக்கவேண்டு மென்றும் ஷரத்துக்கண்டு ஒன்று அல்லது பல தகுந்த ஜாமீன்தாரர்கள் அப்படிப்பட்ட முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டும்.

(2) அந்தக் கேஸில் வேண்டியிருந்தால், ஜாமீன்மேல் விடப்பட்டவன் ஹைகோர்ட்டிலாகிலும் ஸெஷ்ஷன்கோர்ட்டிலாகிலும்வேறெந்தக் கோர்ட்டிலாகிலும் பிராதைப்பற்றி ஜவாப்சொல்ல வரவழைக்கப்பட்டபோது வருவதற்கு அந்த முச்சிலிக்காவில் அவனைப் பிணைப்படுத்தவும் வேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-499.)

காவலிலிருந்து விடுதலை செய்வது.

838. (1) முச்சிலிக்கா எழுதிக்கொடுத்தவுடனே, எவன் ஹாஜராக வேண்டியதற்காக அது எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவனை விட்டுவிடவேண்டும்; அவன் ஜெயிலிலிருந்தால், அவனிடத்தில் ஜாமீன் வாங்குகிற கோர்ட்டார் அந்த ஜெயில் விசாரணை உத்தியோகஸ்தருக்கு அவனை விடுதலை செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; அந்த உத்தியோகஸ்தர் அந்த உத்தரவைப் பெற்றுக்கொள்வதன்மேல் அவனை விடுதலை செய்யவேண்டும்.

(2) எதற்காக முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கப்பட்டதோ அந்த விஷயந்தவிர வேறே விஷயத்திற்காக மறியலுக்கு உள்ளாகவேண்டியவனை இந்தப் பிரிவிலாவது 496 - அல்லது 497-வது பிரிவிலாவது சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையினாலும் விடுதலை செய்யவேண்டியிருப்பதாக எண்ணக்கூடாது. (கி. பு. கோடு, பிரிவு-500.)

839. பிசகினாலாவது மோசடியினாலாவது வேறெந்த விதத்தினாலாவது குறைந்த ஜாமீன்தாரர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், அவர்கள் பிறகு போதுமானவர்களல்லாமற் போனாலும், கோர்ட்டார் ஜாமீன்மேல் விடப்பட்டவனைத் தங்களுக்கு முன்னே கொண்டுவரும்படி ஆள்மேல் வாறண்ட் பிறப்பிக்கலாம்; மேலும், போதுமான ஜாமீன்தாரர்களைக் கொடுக்கும்படி அவனுக்கு உத்தரவு செய்யலாம், அவன் அப்படி கொடுக்கத் தவறிப்போவானுகில் அவனை ஜெயிலுக்குக் கம்மிட்பண்ணலாம். (கி. பு. கோடு, பிரிவு-501.)

*ஜாமீன்தாரர்களை விடுதலை செய்வது.*

840. (1) ஜாமீன்மேல் விடப்பட்டவனெவனுகிலும் ஹாஜராவதற்காகவும் வருவதற்காகவும் பிணைப்பட்ட எல்லா ஜாமீன்தாரர்களுமாவது அவர்களில் யாராவது முச்சிலிக்காவை முழுமைக்குமாகிலும் தங்களுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலாகிலும் ரத்துச் செய்யும்படி யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கு எப்போதாவது மனுசெய்துகொள்ளலாம்.

(2) அப்படி மனுசெய்து கொண்டபின்பு, அப்படி விடப்பட்டவனைத் தமக்கு முன்பாகக் கொண்டுவரும்படி அந்த மாஜிஸ்திரேட்டானவர் ஆள்மேல் வாறண்ட் பிறப்பிக்கலாம்.

(3) அந்த நபர் அந்த வாறண்டின்படி ஹாஜராவதன் மேலாவது தானே வலியவருவதன் மேலாவது, மாஜிஸ்திரேட்டானவர் அந்த முச்சிலிக்காவை முழுமைக்குமாவது மனுதாரர்களுக்குச் சம்பந்தப்படுகிற மட்டிலாவது ரத்தாகின்றனும்படி உத்தரவு செய்யவேண்டும்; மேலும், வேறே போதுமான ஜாமீன்தாரர்களைக் கொடுக்கும்படி அந்த நபரைக்கேட்கவேண்டும்; அவன் அப்படி கொடுக்கத் தவறிப்போகிற பட்சத்தில், அவனைக் காவலுக்கு அனுப்பவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-502.)

## சாட்சிகளை விசாரணை செய்வதற்காகக் கம்மிஷனென்னுங் கட்டளைகளைக் குறித்து.

*இன்னபடிக் காரணால் சாட்சி ஆஜராகவேண்டியதில்லையென்று உத்தரவு செய்யலாம்.*

841. (1) இந்தச் சட்டத்தின்படி யாதொரு விசாரணையாவது பரிசீலனையாவது வேறே யாதொரு நடவடிக்கையாவது நடந்துகொண்டிருக்கையில், நீதி நடப்பதற்கு யாதொரு சாட்சியை விசாரணைசெய்வது அவசியமென்றும், அதிக ஆலசியமாவது செலவாவது அசந்தர்ப்பமாவதில்லாமல் யாதொரு சாட்சியை ஹாஜர்ப்படுத்துவிக்கக் கூடாமையாயிருக்குமென்றும், கேஸின் சங்கதியை யோசிக்கையில் அப்படிப்பட்ட ஆலசிய முதலானவை நியாயமாயிராதென்றும் யாதொரு ராஜதானி மாஜிஸ்திரேட்டுக்காவது டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டுக்காவது ஸெஷ்ஷன்கோர்ட்டாருக்காவது ஹைகோர்ட்டாருக்காவது தோன்றினால், அந்த மாஜிஸ்திரேட் அல்லது கோர்ட்டார் அப்படிப்பட்ட சாட்சி ஹாஜராவதை வேண்டாமென்று நிறுத்திவிடலாம்; அன்றியும், யாருடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள் அப்படிப்பட்ட சாட்சி வாசஞ்செய்கிறானே அந்த டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட் அல்லது முதல்



வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அந்த சாட்சியின் சாட்சியத்தைக் கேட்கும்படி கம்மிஷனென்னுங் கட்டளை பிறப்பிக்கலாம்.

(2) இந்தியாவில் யாதொரு அதிபதி அல்லது தலைவரைச் சேர்ந்ததாய், ப்ரிட்டிஷ் இந்தியன் அரசாங்கத்தாருக்குப் பிரதிநிதியாகிய யாதொரு உத்தியோகஸ்தரிருக்கிற ராஜ்ஜியங்களில் அந்த சாட்சி வாசஞ்செய்துகொண்டிருந்தால், கம்மிஷனென்னுங் கட்டளையை அந்த உத்தியோகஸ்தருக்கு அனுப்பலாம்.

(3) யாருக்குக் கம்மிஷனென்னுங் கட்டளை அனுப்பப்படுகிறதோ அந்த மாஜிஸ்திரேட்டாவது உத்தியோகஸ்தராவது, அவர் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டாயிருந்தால், அவராவது இதுவிஷயத்தில் அவர் நியமிக்கிற முதல்வகுப்பு மாஜிஸ்திரேட்டாவது அந்த சாட்சியிருக்கிற இடத்திற்குப் போயாகிலும் அந்த சாட்சியை ஸம்மனனுப்பித் தனக்கு முன்பாக வரவழைத்தாகிலும், இந்தச் சட்டத்தின்படி வாறண்ட் கேஸுகளின் பரிசீலனையில் செய்வதுபோலவே அவனுடைய சாட்சியத்தைக் கேட்டு எழுதவேண்டும்; மேலும், இதன் பொருட்டு அவ்வித பரிசீலனையில் செலுத்துகிற அதிகாரங்களைச் செலுத்தலாம்.

(4) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட உத்தியோகஸ்தருக்குக் கம்மிஷனென்னுங் கட்டளை பிறப்பிக்கப்படுமாகில், அவர் - அந்த கம்மிஷன்படி தமக்குள்ள அதிகாரங்களையும் அலுவல்களையும், தமக்குக் கீழ்ப்பட்டவராய் ப்ரிட்டிஷ் இந்தியாவில் முதல்வகுப்பு மாஜிஸ்திரேட்டின் அதிகாரங்களுக்குக் குறைவுபடாத அதிகாரங்களையுடைய யாதொரு உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கலாம்.

*ராஜதானிக்குள் சாட்சியிருக்கிற விஷயத்தில் கம்மிஷனென்னுங் கட்டளை.*

842. (1) யாதொரு ராஜதானி மாஜிஸ்திரேட்டினுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அந்த சாட்சியிருக்கிற விஷயத்தில், கம்மிஷனென்னுங் கட்டளையைப் பிறப்பிக்கும் மாஜிஸ்திரேட் அல்லது கோர்ட்டார் மேற்கண்ட ராஜதானி மாஜிஸ்திரேட்டுக்கு அதை அனுப்பலாம். அதற்குமேல் அவர் அப்படிப்பட்ட சாட்சியானவன் தமக்குமுன் நடக்கிற யாதொரு கேஸில் சாட்சியாயிருந்தாற் போலவே அவனை ஹாஜராகும்படி நிர்ப்பந்தித்து விசாரணை செய்யலாம்.

(2) அடிமை வியாபாரத்தைக்குறித்த 1876-ம் வருஷத்து ஆக்ட் 8-வது பிரிவின்படி கம்மிஷனென்னுங் கட்டளையைப் பிறப்பிக்க ஹைகோர்ட்டாருக்குள்ள அதிகாரத்திற்கு, இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

*கட்சிக்காரர்கள் சாட்சியை விசாரணை செய்யலாம்.*

843. (1) இந்தச் சட்டத்தின்படி நடந்துகொண்டிருக்கிற எந்த நடவடிக்கையில் யாதொரு கம்மிஷனென்னுங் கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அந்த நடவடிக்கையில் கட்சிக்காரர்கள் கம்மிஷனை அனுப்புகிற மாஜிஸ்திரேட் அல்லது கோர்ட்டார் விவாத அம்சத்துக்கு ஒற்றுமையானவைகளென்று எண்ணுகிற சவால்களை எழுத்துமூலமாய்த் தனித்தனி அனுப்பலாம். எவருக்கு அந்தக் கம்மிஷன் அனுப்பப்பட்டிருக்கிறதோ அந்த மாஜிஸ்திரேட் அல்லது உத்தியோகஸ்தர் அப்படிப்பட்ட சவால்களின்மேல் அந்த சாட்சியை விசாரணை செய்யவேண்டும்.

(2) அந்த மாஜிஸ்திரேட் அல்லது உத்தியோகஸ்தருக்கு முன்பாக, அப்படிப்பட்ட யாதொரு கட்சிக்காரன் ப்ளீடர் மூலமாகவாவது காவலில்

இல்லாவிட்டால் நேராகவாவது ஹாஜராகி மேற்படி சாட்சியை (சங்கதிக்குத் தக்கபடி) விசாரணை செய்யலாம்.

844. இந்தச் சட்டத்தின்படி யாதொரு விசாரணையாவது பரிசீலனையாவது வேறே யாதொரு நடவடிக்கையாவது ராஜதானி மாஜிஸ்திரேட் அல்லது டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட் தவிர வேறே யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கு முன்பாக நடந்துகொண்டிருக்கையில், நீதி நடப்பதற்கு யாருடைய சாட்சியம் அவசியமாயிருக்கிறதோ அந்த சாட்சியை விமரிசை செய்வதற்காகக் கம்மிஷனென்னும் கட்டளை பிறப்பிக்கவேண்டுமென்றும், அதிக ஆலசியமாவது செலவாவது அசந்தர்ப்பமாவதில்லாமல் யாதொரு சாட்சியை ஹாஜர்ப்படுத்துவிக்கக்கூடாமையாயிருக்குமென்றும், கேஸின் சங்கதியை யோசிக்கையில் அப்படிப்பட்ட ஆலசிய முதலானவை நியாயமாயிராதென்றும் தோற்றினால், அந்த மாஜிஸ்திரேட்டானவர் மனுசெய்து கொள்வதற்குண்டான நியாயங்களைக்கண்டு டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டுக்கு மனுசெய்துகொள்ளவேண்டும்; டிஸ்திரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் இதில் முன்னமே சொல்லியிருக்கிறபடி கம்மிஷனென்னும் கட்டளையைப் பிறப்பிக்கலாம், அல்லது அந்த மனுவைத் தள்ளிவிடலாம். (கி. பு. கோடு, பிரிவு-506.)

கம்மிஷனென்னும் கட்டளையை ரிடர்ன் பண்ணுவது.

845. (1) 503 அல்லது 506-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு கம்மிஷனென்னும் கட்டளை கிரமமாய் நிறைவேற்றப்பட்டபின்பு, அதை அந்தக்கட்டளையின்படி விசாரணை செய்யப்பட்ட சாட்சியின் வாக்குமூல சகிதமாய், அதைப்பிறப்பித்தகோர்ட்டுக்கு ரிட்டரன் பண்ணவேண்டும்; அந்தக்கம்மிஷனென்னும் கட்டளையையும் அது ரிட்டரனானதையும் அந்த சாட்சி வாக்குமூலத்தையும் கட்சிக்காரர்கள் நியாயமான சமயங்களிலெல்லாம் பார்வையிட வைத்திருக்கவேண்டும்; மேலும், அவைகளை உபயத்திராரும் நியாயமாய் நீக்கப்பட்ட சகலத்திற்கு முட்பட்டு அந்தக் கேஸில் சாட்சியமாக வாசிக்கலாம், அன்றியும் அவைகள் ரிகார்டில் சேரவேண்டும்.

(2) அந்தப்படி வாங்கப்பட்ட யாதொரு வாக்குமூலம் 1872 - ம் ஸு இந்திய இந்து தேசத்துச்சாட்சி ஆக்ட் 33 - வது பிரிவினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற திட்டங்களுக்கு இணங்கியிருந்தால், வேறொரு கோர்ட்டாருக்கு முன்னே கேஸ் நடந்துகொண்டிருக்கும்போது பிறகு எந்த தெசையிலாவது அந்த வாக்குமூலத்தைச் சாட்சியமாகவும் ஏற்றுக்கொள்ளலாம்.

846. 503 - வது அல்லது 506-வது பிரிவின்படி கம்மிஷனென்னுங் கட்டளை பிறப்பிக்கப்படுகிற ஒவ்வொரு கேஸிலும், அந்தக்கட்டளையை நிறைவேற்றுவதற்கும் ரிட்டரன் பண்ணுவதற்கும் நியாயமாய்ப் போதுமானதாயிருக்கிற குறித்தகாலம் வரையில் விசாரணையையாவது பரிசீலனையாவது வேறே நடவடிக்கையையாவது நிறுத்திவைக்கலாம்.

## சாக்ஷிகளைக்குறித்த விசேஷ விதிகள்.

வைத்திய சாட்சியின் வாக்குமூலம்.

847. (1) யாதொரு ஸிவில் ஸர்ஜன் அல்லது வேறே வைத்திய சாட்சியினிடத்திலே மாஜிஸ்திரேட்டினால் குற்றஞ்சாட்டப்பட்டவனுக் கெதிரில் வாங்கி அத்தாட்சிக் கையெழுத்து செய்யப்பட்டிருக்கிறதாகவாவது, 40 - ம் அத்தியாயத்தின்படி கம்மிஷன்மேல் வாங்கப்பட்டிருக்கிறதாகவாவதுள்ள வாக்குமூலத்தை, அந்த வாக்குமூலங் கொடுத்தவர் சாட்சியாக அழைக்கப்படாமற் போனபோதிலும், இந்தச்சட்டத்தின்படி நடக்கும் யாதொரு விசாரணை-பரிசீலனை அல்லது வேறே நடவடிக்கையில் சாட்சியமாகக் கொடுக்கலாம்.



(2) கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், அப்படி வாக்குமூலங் கொடுத்தவரை அவருடைய வாக்குமூல சங்கதியைக் குறித்து ஸம்மனனுப்பி வரவழைத்து விசாரணை செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-509.)

ரஸாயன பரிசோதகருடைய ரிபோர்ட்.

848. இந்தச் சட்டத்தின்படி யாதொரு நடவடிக்கை நடக்கையில், பரிசோதித்தாவது பகுத்தாராய்ந்தாவது ரிபோர்ட் பண்ணும்படி யாதொரு கவர்ன்மெண்ட் (Chemical Examiner) ரஸாயன பரிசோதகர் அல்லது உதவி ரஸாயன பரிசோதகரிடத்திற்குக் கிரமமாய் அனுப்பப்பட்ட யாதொரு பொருள் அல்லது வஸ்துவைக்குறித்து அப்படிப்பட்டவர் கையெழுத்துப் போட்டனுப்பிய ரிபோர்ட்டென்று பொருள்படுகிற யாதொரு தஸ்தவேஜை, இந்தச் சட்டத்தின்படி நடக்கும் யாதொரு விசாரணையிலாவது பரிசீலனையிலாவது வேறே நடவடிக்கையிலாவது சாட்சியமாக உபயோகிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-510.)

முந்திய குற்றஸ்தாபனையாவது குற்ற நிவாரணையாவது ருஜுவாகிற விதம்.

849. இந்தச்சட்டத்தின்படி நடக்கும் யாதொரு விசாரணை-பரிசீலனை அல்லது வேறே நடவடிக்கையிலே, அந்தந்தக் காலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு சட்டத்திற் சொல்லியுள்ள வேறெந்த விதத்தோடுங்கூட, முந்திய குற்றஸ்தாபனையையாவது குற்ற நிவாரணையையாவது,—

(a) அப்படிப்பட்ட குற்றஸ்தாபனை அல்லது நிவாரணை எந்தக் கோர்ட்டில் செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டினுடைய ரிகார்டைத் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிற உத்தியோகஸ்தருடைய கையெழுத்துப்பட அந்த சிட்சைத் தீர்ப்பு அல்லது உத்தரவுக்கு நகலென்று ஸெர்ட்டிபை செய்யப்பட்ட எக்ஸ்ட்ராக்ட்டினாலாகிலும்,

(b) குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட விஷயத்தில், அந்தத் தண்டனையாவது அதிலெவ்வளவாவது எவ்விடத்தில் நிறைவேற்றப்பட்டதோ அந்த ஜெயிலின் விசாரணை உத்தியோகஸ்தர் கையெழுத்து செய்திருக்கிற ஸெர்ட்டிபிகேட்டினாலாகிலும், எதன்படி அந்தத் தண்டனை யடையப்பட்டதோ அந்தக் கம்மிட்மெண்ட் வாறண்டைக் கொண்டுவந்து காட்டியாகிலும், ருஜுப்படுத்தலாம்;

அவைகளோடுகூட, அப்படிப்பட்ட கேஸுகளொவ்வொன்றிலும் அப்படிப்பட்ட குற்றஸ்தாபனை அல்லது குற்ற நிவாரணை யடைந்தவன் தான் குற்றஞ் சாட்டப்பட்ட நபரென்பதைக்குறித்து, சாட்சியத்தைக் கொண்டும் ருஜுப்படுத்தலாம். (கி. பு. கோடு, பிரிவு-511.)

## முச்சிலிக்காக்களைக்குறித்த நிபந்தனைகள்.

முச்சிலிக்காவுக்கு பதிலாய்ப் பணங் கட்டுவது.

850. ஜாமீன்தாரர்களோடாவது ஜாமீன்தாரர்களில்லாமலாவது முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி எவனுக்காவது யாதொரு கோர்ட்டாராகிலும் உத்தியோகஸ்தராகிலும் உத்தரவுசெய்தால், நல்லநடத்தைக்காக முச்சிலிக்கா வாங்கும்விஷயத்தில் தவிர, அப்படிப்பட்ட கோர்ட்டார் அல்லது உத்யோகஸ்தர் அந்த முச்சிலிக்கா எழுதிக்கொடுப்பதற்கு பதிலாய்த் தாங்கள் நிர்ணயிக்கிறதொகைக்கு அவனை ரொக்கமாவது கவர்ன்மெண்டுபத்திரமாவது கட்டும்படி உத்தரவுகொடுக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு-513.)

851. இந்தச் சட்டத்தின்படி முச்சிலிக்கா வாங்கியிருக்கிற கோர்ட்டுக்காவது, ராஜதானி மாஜிஸ்திரேட்டு அல்லது முதல்வகுப்பு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்காவது,

யாதொரு கோர்ட்டுக்கு முன்னே ஆஜராவதற்காக முச்சிலிக்காவாங்கியிருந்தால் அந்தக் கோர்ட்டுக்காவது,

அப்படிப்பட்ட முச்சிலிக்கா அடிபட்டுப்போயிருக்கிறதென்று திருப்திகரமாய் ருஜுவானால், கோர்ட்டார் அந்த ருஜுவின் எதுக்களை ரிகார்டுபண்ணவேண்டியது, மேலும் அப்படிப்பட்ட முச்சிலிக்காவினால் கடமைப்பட்ட யாவனொருவனை அதற்குண்டான தெண்டத் தொகையைச் செலுத்தும்படிக்காவது அதை ஏன் செலுத்தக்கூடாதோ அதற்குக்காரணத்தைத்தெரிவிக்கும்படிக்காவது கேட்கலாம்.

தகுந்த காரணந் தெரிவிக்கப்படாமலும் அந்த தெண்டத் தொகை செலுத்தப்படாமலுமிருந்தால், அந்தக்கோர்ட்டார் அவனுக்குச் சொந்தமாயிக்கிற அசையும்பொருளை ஐப்திசெய்து விற்பதற்காக வாறண்டுபிறப்பித்து அதைக்கொண்டு அந்த தெண்டத்தொகையை வசூல்பண்ணத்தொடங்கலாம்.

அப்படிப்பட்ட வாறண்டைப் பிறப்பித்த கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் அந்தவாறண்டை நிறைவேற்றலாம்; மேலும் அப்படிப்பட்ட எல்லைக்குவெளியில் அந்த நபருக்குச் சொந்தமாயிருக்கிற யாதொரு அசையும் பொருளை ஐப்திசெய்து விற்கவேணுமானால, யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள அப்படிப்பட்டபொருள் அகப்படுகிறதோ அந்த டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டு அதை இண்டார்ஸ்பண்ணுவாராகில் அப்படி ஐப்திசெய்து விற்பதற்கு அதனால் அதிகாரமுண்டாகும்.

அந்ததெண்டத்தொகை செலுத்தப்படாமலும் அப்படி ஐப்திசெய்து விற்பதினாலே வசூலாகமாட்டாமலுமிருக்குமாகில், அப்படி கடமைப்பட்ட நபரானவன் வாறண்டுபிறப்பித்த கோர்ட்டாருடைய உத்தரவினாலே, ஆறுமாசத்துக்கதிகப்படாத காலவரையில் சிவில்ஜெயிலிலே, காவற்படுத்திவைக்கப்படத்தக்கவனாவான்.

கோர்ட்டார் தங்களுக்கு யுத்தமாகத் தோற்றினால், குறிக்கப்பட்ட தெண்டத்தொகையில் யாதொரு பாகத்தைத் தள்ளிவிட்டு மற்றபாகத்தைமாத்திரம் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கலாம். (கி. பு.கோடு, பிரிவு-514.)

514-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவுகளின் பேரில் அப்பீல்களும் மேற்பரிசோதனையும்.

852. ராஜதானி மாஜிஸ்திரேட்டு அல்லது டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டல்லாத வேறே யாதொரு மாஜிஸ்திரேட்டினால் 514-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட எல்லா உத்தரவுகளும டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுக்கு அப்பீலசெய்யப்படாவிட்டால், அவரால் அதுகள்மேற் பரிசோதனை செய்யப்படலாம். (கி. பு. கோடு, பிரிவு-515.)

853. ஹைகோர்ட்டாராவது செஷன்கோர்ட்டாராவதுதங்கள்கோர்ட்டில் ஆஜராய்வந்திருக்க வேண்டியதைக்குறித்த முச்சிலிக்காவின் பேரில் பாக்கியாயிருக்கிற தொகையை வசூல்பண்ணும்படி யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கு உத்தரவுசெய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-516.)

## சொத்தை பைசல்செய்வதைக் குறித்து.

எதைப்பற்றிக் குற்றஞ் செய்யப்பட்டதோ அந்தச்சொத்தைப் பைசல் செய்ய உத்தரவு.

854. (1) யாதொரு கிரிமினல் கோர்ட்டில் யாதொரு விசாரணையாவது பரிசீலனையாவது முடிந்தபின்பு அந்தக் கோர்ட்டார் தங்களுக்கு முன்னே கொண்டுவரப்பட்டாகிலும், தங்கள் வசத்திலிருப்பதாகவாகிலும் எதைப்பற்றி யாதொரு குற்றஞ் செய்யப்பட்டதாகத் தோன்றுகிறதோ அல்லது எது யாதொரு குற்றத்தைச்செய்வதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கிறதோ



அப்படிப்பட்டதாகவாகிலுமுள்ள யாதொரு சொத்து அல்லது தஸ்தவேஜை யாதொரு வகை செய்யும்பொருட்டுத் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிற உத்தரவுசெய்யலாம்.

(2) யாதொருஹைகோர்ட்டாராவது ஸெஷன்கோர்ட்டாராவது அப்படிப்பட்ட உத்தரவைச்செய்து, சொத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பாத்தியதையுள்ள நபருக்குத் தங்களுடைய உத்தியோகஸ்தர்களைக்கொண்டு அஸந்தர்ப்பமில்லாமல் ஒப்பிக்கக்கூடாமையாயிருந்தால், அந்தக்கோர்ட்டார் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டினால் அந்த உத்தரவு நிறைவேற்றப்படவேண்டியதென்று கட்டளை செய்யலாம்.

(3) அப்பீலுள்ள யாதொரு கேஸில் இந்தப் பிரிவின்படி யாதொரு உத்தரவு செய்யப்பட்டால், அந்த உத்தரவானது (சொத்து ஜீவப்பிராணியாகவாவது சீக்கிரத்தில் தன்னிச்சையாய்க் கெட்டுப்போகும்படியானதாகவாவதிராத பட்சத்தில்) அந்த அப்பீல் செய்துகொள்வதற்குக் கொடுத்திருக்கிற கெடுவுகாலம் கழிகிறவரையிலாகிலும், அந்த அப்பீல் அந்தகாலத்திற்குள் செய்துகொள்ளப்படுகிற பட்சத்தில் அந்த அப்பீல் பைசல் செய்யப்படுகிறவரையிலாகிலும் நிறைவேற்றப்படக்கூடாது.

விவரணம்.—இந்தப் பிரிவிலே "சொத்து", என்கிற வார்த்தையானது எதைப்பற்றி யாதொரு குற்றஞ் செய்யப்பட்டிருக்கிறதாகக் காணப்படுகிறதோ அந்தச்சொத்து விஷயத்தில், யாதொரு (Party) நபரினுடைய ஸ்வாதீனத்திலாகிலும் அதிகாரத்திற்குள்ளாகிலும் பிரதமத்தில் இருந்திருக்கிற சொத்து மாத்திரமல்லாமலும், நேராயாவது மற்றப்படிக்காவது அது வேறே எதுவாக உருமாற்றப்பட்டிருக்கலாமோ அல்லது எதற்காக மாற்றிக்கொள்ளப்பட்டிருக்கலாமோ அப்படிப்பட்ட சொத்தென்றும் அப்படி உருமாற்றப்பட்டிருக்கலாமோ அல்லது எதற்காக மாற்றிக்கொள்ளப்பட்டிருக்கலாமோ அப்படிப்பட்ட சொத்தென்றும் அப்படி உருமாற்றினதனாலாவது மாற்றிக்கொண்டதனாலாவது மாற்றிக்கொண்டதனாலாவது பெற்றுக்கொள்ளப்பட்ட யாதொரு பொருளென்றும் அர்த்தமுமாகும். (கி. பு. கோடு, பிரிவு-517.)

855. கோர்ட்டார் 517-வது பிரிவின்படி தாங்களே யாதொரு உத்தரவு செய்வதற்குப் பர்த்தியாய், டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட் அல்லது ஸப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டுக்கு அந்தச் சொத்தை ஒப்பிக்கும்படி கட்டளையிடலாம், அப்படிப்பட்ட விஷயங்களிலே அவர் அந்த சொத்தைப் போலீஸார் பிடித்திருந்து, பிடித்ததை இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாய்த் தமக்கு ரிபோர்ட் செய்திருந்தாற்போல, அத்தச் சொத்தைக்குறித்து நடத்தவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-518.)

குற்றஞ் சாட்டப்பட்டவனிடத்திலகப்படுகிற பணத்தை நிர்தோஷியான கிரயக்காரனுக்குக் கொடுப்பது.

856. திருட்டு அல்லது திருட்டுச்சொத்தை வாங்குவதென்னும் குற்றம் அடங்குகிறதான அல்லது அப்படிப்பட்டதாகிற யாதொரு குற்றத்தைச் செய்ததாக யாவனொருவன்மேல் குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு, அந்தச்சொத்து திருடப்பட்டதென்று அறியாமலாவது நம்புவதற்கு முகாந்தரமில்லாமலாவது அவனிடத்திலிருந்து அதை வேறொரு நபர் விலைக்கு வாங்கியிருக்கிறதாகவும், குற்றஸ்தாபனை செய்யப்பட்டவனைப் பிடிக்கும்போது அவன் வசத்திலிருந்து ஏதாகிலும் பணமெடுக்கப்பட்டிருக்கிறதாகவும் ருஜுவானால், அந்தத் திருட்டுச்சொத்தையடையப் பாத்தியதையுள்ள நபருக்கு அதைக்கொடுத்துவிடுவதன்மேலும், கோர்ட்டார் அப்படி விலைக்கு வாங்கினவன் கொடுத்த கிர

ந்து அவனுக்குச் செலுத்திவிடும்படி உத்தரவு செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-519.)

*517, 518 அல்லது 519-வது பிரிவுக்குட்பட்ட உத்தரவை நிறுத்திவைப்பது.*

857. அப்பீலதிகாரத்தையாவது ஊர்ஜிதப்படுத்தும் அதிகாரத்தையாவது ஆலோசிக்கும் அதிகாரத்தையாவது மேற் பரிசோதனை அதிகாரத்தையாவதுடைய யாதொரு கோர்ட்டார் தங்களுக்குக் கீழ்ப்பட்ட யாதொரு கோர்ட்டாரால் 517, 518 அல்லது 519-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவைத் தங்களுடைய ஆலோசனை முடிவாகிறவரையில் நிறுத்திவைக்கும்படி உத்தரவு பண்ணலாம்; மேலும், அந்த உத்தரவைத் திருத்தலாம் மாற்றலாம் அல்லது ரத்துபண்ணலாம்; அன்றியும் நியாயமாயிருக்கும் இன்னும் ஏதேனும் உத்தரவையும் செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-520.)

*பழி தூற்றுவது முதலாகிய விஷயங்களை அழிப்பது.*

858. (1) இந்தியன் பினல்கோடின் 292, 293, 501 அல்லது 502-வது பிரிவின்படி குற்றஸ்தாபனை செய்யப்படுவதன்மேல், கோர்ட்டார் எதைப் பற்றிக் குற்றஸ்தாபனையாகிக் கோர்ட் பந்தோபஸ்திலாவது குற்றஸ்தாபனை செய்யப்பட்டவனுடைய ஸ்வாதீனத்திலாவது அதிகாரத்திலாவது இருக்கிறதோ அந்த வஸ்துவின் எல்லாப் பிரதிகளையும் அழித்துவிடும்படி உத்தரவு செய்யலாம்.

(2) இந்தியன் பினல்கோடின் 272, 273, 274 அல்லது 275 வது பிரிவின்படி குற்றஸ்தாபனை செய்யப்படுவதன்மேல், கோர்ட்டார் எதைப் பற்றிக் குற்றஸ்தாபனை செய்யப்பட்டதோ அந்த ஆகாரத்தையாவது பானத்தையாவது மருந்து சம்பாரத்தையாவது அவிழ்த சம்பந்தமான எதையாவது அழித்துவிடும்படி அப்பிரகாரமே உத்தரவுசெய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-521.)

*அசையாப் … படி ஸ்வாதீனப்படுத்த அதிகாரம்.*

859. (1) அநியாயமான பலவந்தத்தோடுங்கூடிய யாதொரு குற்றத்திற்காக யாதொரு நபர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு, அப்படிப்பட்ட பலவந்தத்தினாலே யாவனொருவன் யாதொரு அசையாப்பொருளின் ஸ்வாதீனத்தினின்றும் விலக்கப்பட்டிருக்கிறானென்று கோர்ட்டாருக்குத் தோற்றினால், கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகக் காணுகிறபட்சத்தில், அப்படிப்பட்டவனுக்கு அதை மறுபடி ஸ்வாதீனப்படுத்தும்படி உத்தரவுசெய்யலாம்.

(2) ஸிவில் வியாஜ்ஜியத்திலே யாவனொருவன் அந்த அசையாப்பொருளுக்காவது பொருளிலாவது ஸ்தாபிக்கக்கூடுமான யாதொரு சுதந்தரத்திற்காகிலும் பாத்தியதைக்காகிலும் அப்படிப்பட்ட உத்தரவினாலே பாதகமுண்டாகமாட்டாது. (கி. பு. கோடு, பிரிவு-522.)

860. (1) 51-வது பிரிவின்படி எடுத்துக்கொள்ளப்பட்டாவது, திருடினதாகச் சொல்லப்பட்டாவது அனுமானிக்கப்பட்டாவது யாதொரு குற்றஞ் செய்யப்பட்டதாக அனுமானமுண்டுபண்ணுகிற சங்கதிகளில் கண்டுபிடிக்கப்பட்டாவதிருக்கிற சொத்தை யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தன் பிடித்துக்கொண்டால், அதை உடனே மாஜிஸ்திரேட்டுக்கு ரிபோர்ட் பண்ணவேண்டும்; அவர் அந்தச்சொத்தை ஒருவகை செய்வதைக் குறித்தாவது பெற்றுக்கொள்ளப் பாத்தியதையுள்ளவனுக்கு அதை ஒப்பித்துவிடுவதைக்குறித்தாவது அப்படிப்பட்டவன் இன்னானென்று அறியக்கூடாத பட்சத்தில் அதைப் பத்திரப்படுத்திக் கொண்டுவந்து காண்பிப்பதைக்குறித்தாவது தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவுசெய்யவேண்டும்.



*பிடிபட்ட சொத்தின் சொந்தக்காரன் இன்னானென்று தெரியாவிட்டால் இன்னது செய்வது.*

(2) அப்படிப்பட்ட பாத்தியதையுள்ளவன் இன்னானென்று தெரியவருகிற பட்சத்தில் மாஜிஸ்திரேட்டானவர் தமக்கு யுக்தமாகத்தோற்றுகிற ஏதாவது திட்டங்களின்மேல் சொத்தை அவனுக்கு ஒப்பிக்கும்படி உத்தரவுசெய்யலாம். அப்படிப்பட்டவன் இன்னானென்று தெரியாத பட்சத்தில், மாஜிஸ்திரேட்டானவர் அதை வைத்துவைக்கலாம்; அப்படிச்செய்கிற விஷயத்திலே அந்தச் சொத்தில் இன்னின்ன வஸ்துக்கள் சேர்ந்திருக்கிறதென்று கண்டெழுதி அந்தச்சொத்தில் எவனுக்காவது சுதந்தரமுண்டாயிருக்குமானால் அவன் இஸ்தியார் தேதிமுதல் ஆறுமாதத்திற்குள் தமக்கு முன்பாக ஹாஜராகி அவனுடைய சுதந்தரத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று இஸ்தியார் போடவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-523.)

*வாரிஸ்தாரன் ஆறுமாதத்திற்குள் வராவிட்டால் இன்னசெய்வது.*

861. (1) எவனாவது அந்தக்காலத்திற்குள் அப்படிப்பட்ட சொத்திற்குத் தன்னுடைய சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்ளாமலும், அந்தச்சொத்து எவனுடைய ஸ்வாதீனத்திலகப்பட்டதோ அவன் அதை தான் நியாயமாய்ச் சம்பாதித்ததென்று ருஜுப்படுத்தமாட்டாமலுமிருந்தால், அப்படிப்பட்ட சொத்து எவ்வகையாவது செய்யப்படும்பொருட்டு கவர்ன்மெண்டார் பரமாகவேண்டும்; மேலும், ராஜதானி மாஜிஸ்திரேட்டாவது டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டாவது ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டாவது இது விஷயத்தில்பிரதேச கவர்ன்மெண்டாரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டாவது செய்கிற உத்தரவின்படி அதை விற்றுவிடலாம்.

(2) இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட பிரதி உத்தரவின் விஷயத்திலும், அப்படிப்பட்ட உத்தரவைப் பிறப்பிக்கிற கோர்ட்டின் தீர்ப்புகளின்மேல் எந்தக்கோர்ட்டில் அப்பீல் பிடிக்கப்படுமோ அந்தக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-524.)

*… போகத் தக்க சொத்தை விற்பனை செய்ய அதிகாரம்.*

862. அப்படிப்பட்ட சொத்தை ஸ்வாதீனம் பண்ணிக்கொள்ளப் பாத்தியதையுடையவன் இன்னானென்று தெரியாமலாவது வராமலாவதிருந்து சொத்தானது தானே சீக்கிரத்தில் கெட்டுப்போகும்படியானதாகவிருந்தாலும், அது பிடிபட்ட சங்கதி எவருக்கு ரிபோர்ட் செய்யப்பட்டதோ அந்த மாஜிஸ்திரேட்டானவர் அதை விற்பதினாலே சொந்தக்காரனுக்குப் பிரயோஜனமுண்டாகுமென்று அபிப்பிராயப்பட்டாலும், அவர் அதை விற்கும்படி எப்போதாவது உத்தரவுசெய்யலாம்; 523, 524-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் அந்த விற்று முதலில் கிடைக்கிற பணத்துக்குக் கூடுமானமட்டில் சம்மந்தப்படவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-525.)

## கிரிமினல் கேஸுகளை மாற்றுவதைக்குறித்து.

*ஹைகோர்ட்டார் கேஸை ட்ரான்ஸ்பர் செய்யலாம் அல்லது தாங்களே பரிசீலனை செய்யலாம்.*

863. (1) (a) ஹைகோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட யாதொரு கிரிமினல் கோர்ட்டில் யாதொரு விசாரணை அல்லது பரிசீலனையானது சரியாயும் பட்சபாதமில்லாமலும் நடத்தப்படமாட்டாதென்றாவது,

(b) சாதாரணமாயிருப்பதைவிட அதிக கஷ்டமுள்ள சட்ட சம்மந்தமான யாதொரு சந்தேகமுண்டாகும்போலிருக்கிறதென்றாவது,

(c) எவ்விடத்தில் அல்லது எதற்குச் சமீபத்தில் யாதொரு குற்றஞ்செய்யப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தை, அந்தக் குற்றத்தைக்குறித்துத் திருப்திகரமாய் விசாரணை அல்லது பரிசீலனை செய்யும்பொருட்டு, பார்க்கவேண்டியிருக்கலாமென்றாவது,

(d) இந்தப்பிரிவின்படி செய்யப்படுகிற யாதொரு உத்தரவினால் கட்சிக்காரர்களுக்காகிலும் சாட்சிகளுக்காகிலும் ஸாதாரணமாய்ச் சங்கடமுண்டாகாதிருப்பதற்கு அனுகூலமாயிருக்குமென்றாவது,

(e) அப்படி உத்தரவு செய்வது நியாயம் நடப்பதற்குத் தகுதியாயிருக்கிறதென்றாவது, இந்த கோடிலுள்ள யாதொரு நிபந்தனையின்படி வேண்டியதாயிருக்கிறதென்றாவது,

ஹைகோர்ட்டாருக்குத் தோற்றும்படி செய்யப்படும்போதெல்லாம் அந்தக்கோர்ட்டார்,—

(i) யாதொரு குற்றமானது 177-வது முதல் 184-வது உட்பட அதுவரையிலுள்ள பிரிவுகளின்படி அதிகாரம் பெறுதவர்களாய், மற்ற விஷயங்களில் அந்தக்குற்றத்தை விசாரணைசெய்யவாவது பரிசீலனை செய்யவாவது அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டரால் விசாரணை அல்லது பரிசீலனை செய்யப்படவேண்டியதென்றாகிலும் ;

(ii) யாதொரு குறித்த கிரிமினல் கேஸ் அல்லது அப்பீலையாவது அப்படிப்பட்ட இனமான கேஸுகள் அல்லது அப்பீல்களையாவது, தங்களதிகாரத்துக்குட்பட்ட யாதொரு க்ரிமினல் கோர்ட்டிலிருந்து அதற்குச்சமானமான அல்லது மேலான அதிகாரமுடைய அப்படிப்பட்ட வேறே யாதொரு க்ரிமினல் கோர்ட்டுக்கு அனுப்பும்படியாகிலும் ;

(iii) யாதொரு குறித்த க்ரிமினல் கேஸ் அல்லது அப்பீல் தங்களுக்கு அனுப்பப்பட்டுத் தங்களுக்கு முன்பாகப் பரிசீலனை செய்யப்படவேண்டியதென்றாகிலும் ;

(iv) குற்றஞ்சாட்டப்பட்டவனெவனையாகிலும் தங்களிடத்திற்காவது யாதொருஸெஷன் கோர்ட்டாரிடத்திற்காவது பரிசீலனைக்குக் கம்மிட்பண்ணவேண்டியதென்றாகிலும் ;

உத்தரவுசெய்யலாம்.

(2) ராஜதானி மாஜிஸ்திரேட் கோர்ட்டல்லாத வேறே யாதொரு கோர்ட்டிலிருந்து யாதொரு கேஸை ஹைகோர்ட்டார் தங்களுக்கு முன்பாகப் பரிசீலனைக்கு வரவழைத்துக் கொண்டால், அவர்கள் 267-வது பிரிவிற்கண்டிருக்கிறபடிக்குத்தவிர, அந்தக்கேஸ் அப்படி வரவழைக்கப்படாதிருந்தால் அந்தக்கோர்ட்டார் நடத்தியிருக்கும்படியான அதே நடவடிக்கையை அந்தப் பரிசீலனையில் அனுசரிக்கவேண்டும்.

(3) ஹைகோர்ட்டார் கீழ்க்கோர்ட்டாருடைய ரிபோர்ட்டின் மேலாவது, அது விஷயத்தில் சிரத்தையுள்ள ஒரு கட்சிக்காரன் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலாவது, தாங்களே சுதாவாகவாவது பிரவர்த்திக்கலாம்.

(4) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச்செலுத்துவதற்காகச் செய்துகொள்ளப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் மனு மூலமாகச் செய்துகொள்ளப்படவேண்டும் ; விண்ணப்பக்காரர் அட்வொகேட்



ஜெனரலாயிராவிட்டால், அதற்காதரவாகப் பிரமாணப்பத்திரிகையாவது உறுதிமொழிப் பத்திரிகையாவது வரவேண்டும்.

(5) குற்றஞ்சாட்டப்பட்டவனெவனாவது இந்தப்பிரிவின்படி விண்ணப்பஞ் செய்துகொண்டால், ஹைகோர்ட்டார் அவன்மேல் குற்றஸ்தாபனை செய்யப்படுகிறபட்சத்தில் பிராதுக்காரனுடைய செலவுகளைக் கொடுப்பதாக ஷரத்து கண்டு, ஜாமீன்தாரர்களோடாகிலும் ஜாமீன்தாரர்களில்லாமலாகிலும் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி அவனுக்கு உத்தரவுசெய்யலாம்.

(6) அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பத்தைச் செய்துகொள்ளுகிறவனாகிய குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொரு நபரும் அந்த விண்ணப்பத்தைக்குறித்து, அதைச்செய்து கொள்வதற்குண்டான ஆதாரங்களின் பிரதிசகிதமாய்ப் பப்ளிக் ப்ராஸிக்யூட்டருக்கு எழுத்துமூலமாக நோட்டீஸ் கொடுக்கவேண்டும், அப்படிப்பட்ட நோட்டீஸ் கொடுத்தது முதல் விண்ணப்ப விசாரணை வரையிலே குறைந்தது இருபத்திநான்குமணிநேரம் சென்றாலொழிய, அந்த விண்ணப்பத்தின் சாராம்சத்தைப்பற்றி யாதொரு உத்தரவும் செய்யக்கூடாது.

இந்தப் பிரிவின்படி கொடுத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தைக்குறித்து பப்ளிக் ப்ராஸிக்யூட்டருக்கு நோட்டீஸ் கொடுப்பது.

(7) இந்தப்பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும், 197-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவுக்குப் பாதகமுண்டானதாக எண்ணக்கூடாது.

(8) எந்த கிரிமினல் கேஸிலாவது அப்பீலிலாவது விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னமே, பப்ளிக் ப்ராஸிக்யூட்டராகிலும் பிராதுக்காரனாகிலும் குற்றஞ்சாட்டப்பட்டவனாகிலும் அந்தக கேஸைக்குறித்து இந்தப்பிரிவின்படி தாம் விண்ணப்பஞ் செய்துகொள்ளப்போகிறதாக அந்தக் கேஸ் அல்லது அப்பீல் யாருக்கு முன்பாக விசாரணையிலிருக்கிறதோ அந்தக் கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தினால், குற்றஞ்சாட்டப்பட்டவன் தன் பட்சத்தில் வாதிக்கும்படி உத்தரவு செய்யப்படுவதற்கு முன்னமேயாவது அப்பீல் விஷயத்திலே அப்பீல் விசாரிக்கப்படுவதற்கு முன்னமேயாவது, விண்ணப்பஞ்செய்துகொண்டு அதன்மேல் உத்தரவு வந்துசேருவதற்கு நியாயமான அவகாசமிருக்கும்படியாய்க் கோர்ட்டார் விசாரணையை நிறுத்திவைப்பதற்காகிலும் ஒற்றிவைப்பதற்காகிலும் 344 - வது பிரிவினால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவேண்டும். (கி. பு. கோவ, பிரிவு-526.)

இந்தப் பிரிவின்படி விண்ணப்பஞ் செய்துகொள்ளப்படுவதன்மேல் விசாரணையை நிறுத்திவைப்பது.

864. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - யாதொரு குறித்த கிரிமினல் கேஸ் அல்லது அப்பீலை ஒரு ஹைகோர்ட்டிலிருந்து வேறொரு ஹைகோர்ட்டுக்காவது, யாதொரு ஹைகோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட யாதொரு கிரிமினல் கோர்ட்டிலிருந்து வேறொரு ஹைகோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட சமமான அல்லது மேலான அதிகாரமுடைய வேறே யாதொரு கிரிமினல் கோர்ட்டுக்காவது மாற்றுவதனால் செவ்வையாய் நீதி நடக்குமென்றாகிலும் உபயவாதிகள் அல்லது சாட்சிகளுக்கு ஸாதாரணமாய்ச் சங்கடமுண்டாகாதபடி அனுகூலமா யிருக்குமென்றாகிலும் தமக்குத் தோற்றினால், அப்படி ட்ரான்ஸ்பர் செய்யும்படி இந்தியா கெஜெட்டில் விளம்பர மூலமாய் உத்தரவு பண்ணலாம்.

கிரிமினல் கேஸுகளையும் அப்பீல்களையும் ட்ரான்ஸ்பர் செய்ய ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு அதிகாரம்.

அப்படிப்பட்ட கேஸ் அல்லது அப்பீல் எந்தக் கோர்ட்டுக்கு மாற்றப்படுகிறதோ அந்தக்கோர்ட்டார் - ஆரம்பத்திலேயே அது தங்கள் கோர்ட்

டில் தொடரப்பட்டாவது கொடுத்துக் கொள்ளப்பட்டாவதிருந்தாற் போல வே அதை நடத்தவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-527.)

டிஸ்திரிக்ட் அல்லது ஸப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டானவர் கேசுகளை வரவழைத்துக்கொள்ளலாம் அல்லது அனுப்பலாம்.

865. (1) யாதொரு பிரதான ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்திரேட், டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட் அல்லது ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டானவர்-தமக்குக்கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்திரேட்டினிடத்திலிருந்து யாதொருகேஸை வரவழைத்துக்கொள்ளலாம், அல்லது அவருக்குத் தாம் அனுப்பியிருக்கிற யாதொரு கேஸை மறுபடியும் வரவழைத்துக்கொள்ளலாம்; மேலும், அப்படிப் பட்ட கேஸைத் தாமே விசாரணையாவது பரிசீலனையாவது செய்யலாம், அல்லது அதை விசாரணையாவது பரிசீலனையாவது செய்யத்தகுந்த வேறே அப்படிப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அதை விசாரணைக்காவது பரிசீலனைக்காவது அனுப்பலாம்.

(2) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் தமக்கு யுக்தமாகத் தோன்றுகிற இனங்களான கேஸுகளையாவது, இன்ன இனங்களான கேஸுகளையாவது தமக்குக் கீழ்ப்பட்ட மாஜிஸ்திரேட்டுகளிடத்திலிருந்து வரவழைத்துக் கொள்ளும்படி பிரதேச கவர்ன்மெண்டார் அவருக்கு அதிகாரங் கொடுக்கலாம்.

(3) இந்தப்பிரிவின்படி உத்தரவுசெய்கிற மாஜிஸ்ட்ரேட்டானவர் அதைச் செய்வதற்குண்டான ஹேதுக்களை யெழுதி ரிக்கார்ட் பண்ணவேண்டும்.

(4) 1821-ம் ஷ்டு 4-வது சென்னைப்பட்டணம் ரெகுலேஷன்படி கிராமப் பெரியதனக்காரர் இந்தப் பிரிவின் காரியங்களுக்கா. மாஜிஸ்திரேட்டாவார். (கி. பு. கோடு, பிரிவு-528.)

# அத்தியாயம் 20.

## அப்பீல்களைப்பற்றிய விஷயங்கள்.

866. ஸிவில்கேசுகளில் ஒவ்வொருகேஸிலும், அப்பீலும், 2-வது அப்பீலும் உண்டு. ஆனால் கிரிமினல் கேசுகளில் ஒவ்வொரு கேஸிலும் ஒரே அப்பீல்தான் செய்யலாம். அதற்கு மேல்பட்டு அப்பீல்கிடையாது. ஹைக்கோர்ட்டில் மேற்பரிசோதனை மனு (Revision petion) கொடுக்கலாம்.

மரணதண்டனையின்பேரில் மட்டும் ஹைக்கோர்ட்டு பைசலின்பேரில் தயாளத்தைச் செலுத்தும்பொருட்டு மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்கள் கவர்னர் ஜெனரல் அவர்கள், மகிமைதங்கிய சக்ரவர்த்தி அவர்கள் இவர்களுக்கெல்லாம் மனுச் செய்துகொள்ளலாம்.

குறிப்பு:--ஒரு ஐரோப்பிய பிரிட்டிஷ் குடியாயிருப்பவர் தண்டிக்கப் பட்டபொழுது, அவர் அவருடைய யுக்தப்படி ஸெஷன் கோர்ட்டிலாவது ஹைக்கோர்ட்டிலாவது அப்பீல் செய்துகொள்ளலாம்.

இராஜ த்ரோகத்திற்காக இ. பி. கோடு 124-வது பிரிவின்படி தண்டிக்கப் பட்டபொழுது ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-408.)

விடுதலையின்பேரில் (Acquittal) அப்பீல்செய்ய கவர்ன்மெண்டாருக்கு மட்டுந்தான் பாத்தியதையுண்டு. அந்த அப்பீலை ஹைக்கோர்ட்டில் செய்ய வேண்டும்.

868. மேலே 728-வது விஷயத்திற்கண்ட ஜப்தி செய்யப்பட்ட சொத்தையாவது அல்லது ஷை சொத்தை ஏலம் போட்டு விற்றதுகையை



யாவது சொத்துக்கு உடையவனுக்குக் கொடுக்கப்பட மாட்டாதென்று செய்யப்பட்ட உத்தரவின்பேரில் அந்த உத்தரவுசெய்த கோர்ட்டாரின் பைசல்களின்பேரில் எந்தக்கோர்ட்டில் சாதாரணமாக அப்பீகள் செய்யப்படுமோ, அந்தக்கோர்ட்டில்தான் அப்பீல் செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு 405.)

869. கி. பு. கோடு, 118-வது பிரிவுப்படி டிஸ்திரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு அல்லது ராஜதானி மாஜிஸ்திரேட்டல்லாத வேறு மாஜிஸ்திரேட்டுகளால் நல் நடத்தைக்காக ஜாமீன் கொடுக்கும்படி செய்யப்பட்ட உத்தரவுகளின்பேரில் டிஸ்திரிக்கட்டு மாஜிஸ்திரேட்டிடம் அப்பீல்செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-406.)

870. கி. பு. கோடு, 349-வது பிரிவுப்படி 2-வகுப்பு ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டினால் தண்டிக்கப்பட்டவர்கள் டிஸ்திரிக்கட்டு மாஜிஸ்திரேட்டிடம் அப்பீல் செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-407.)

871. கி. பு. கோடு, 480,485-வது பிரிவுகளின்படி தண்டிக்கப்பட்டவர்கள் எந்தக்கோர்ட்டாரால் தண்டனை விதிக்கப்பட்டதோ அந்தக்கோர்ட்டின் தீர்மானத்தின்பேரில் எந்தக்கோர்ட்டுக்கு சாதாரணமாக அப்பீல்கள் செய்யப்படுமோ அந்தக்கோர்ட்டில் அப்பீல்செய்யவேண்டியது.

ராஜதானிப் பட்டணத்தில் ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜினால் மேல்கண்டபடி தண்டிக்கப்பட்டவர்கள் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்யவேண்டியது. மற்ற இடங்களிலுள்ள ஸ்மால்காஸ் கோர்ட்டுகளினால் தண்டிக்கப்பட்டவர்கள் ஸெஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்யவேண்டியது.

ஒரு ரிஜிஸ்ட்ரார் அல்லது ஸப்ரிஜிஸ்ட்ரார் ஸிவில் கோர்ட்டு ஹோதாவிலிருந்து மேல்கண்டபடி த[illegible]டிக்கும்போது, மற்ற இடங்களில் டிஸ்திரிக்கட்டு ஜட்ஜிடமும் ராஜதானிப் பட்டணத்தில் ஹைக்கோர்ட்டிலும் அப்பீல் செய்யவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-486.)

872. கி.பு.கோடு, 514-வது பிரிவுப்படி ஜாமீன், முச்சலிக்காப் பத்திரங்களின்படி நடக்கத்தவறினதற்காக துகை வசூல் செய்யும்படி மற்ற மாஜிஸ்திரேட்டுகளால் செய்யப்பட்ட உத்தரவுகளின்பேரில் டிஸ்திரிக்கட்டு மாஜிஸ்ட்ரேட்டிடம் அப்பீல் செய்யவேண்டும். அப்பீல் செய்யப்படாவிட்டாலுமே டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுக்கு ஷை உத்தரவுகளை மேற்பரிசோதனை செய்ய அதிகாரமுண்டு. (கி. பு. கோடு, பிரிவு-515.)

## அப்பீலில்லாத கேசுகள்.

873. எதிரியே குற்றத்தை ஒப்புக்கொண்டதின்பேரில் ஒரு ஸெஷன் கோர்ட்டார் ராஜதானி மாஜிஸ்திரேட், அல்லது ஒரு 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டினால் தண்டிக்கப்பட்டால் அதன் பேரில் அப்பீலில்லை. (கி. பு. கோடு, பிரிவு-412.)

874. ஒரு ஸெஷன் கோர்ட்டார், டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட் அல்லது வேறு 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டானவர் ஒரு மாதத்திற்கு மேல் போகாத காவல்தண்டனை மட்டுமாவது ; அல்லது 50-ரூபாய்க்கு மேல்போகாத அபராதமட்டுமாவது, அல்லது அடி தண்டனைமட்டுமாவது விதிக்கிற கேசுகளில் அப்பீலில்லை. (கி. பு. கோடு, பிரிவு-413.)

875. சுருக்கமாக விசாரணை செய்யப்படுகிற கேசுகளில் 3 மாதத்திற்கு மேல் போகாத காவல்தண்டனை மட்டுமாவது அல்லது 200 ரூபாய்க்கு மேல்

போகாத அபராதமட்டுமாவது, அல்லது அடிதண்டனை மட்டுமாவது விதிக்கப்படுகிற கேசுகளில் அப்பீலில்லை.

அப்பீல் மனுவை தாக்கல் செய்யும் விதம்.

876. அப்பீலைத்தபாலில் அனுப்பிவிடக்கூடாது. அப்பீல் வாதியாவது அல்லது அவனால் அதிகாரங் கொடுக்கப்பட்ட வக்கீலாவது அப்பீல் கோர்ட்டில் நேரில் தாக்கல் செய்யவேண்டும்.

அப்பீல் மனுவோடு தண்டனை செய்த கீழ்க்கோர்ட்டுத்தீர்ப்பு நகலையும் தாக்கல் செய்யவேண்டும்.

குறிப்பு:—தீர்ப்பு நகல் கிடைப்பதற்குத் தாமதப்படுகிறது என்பதுபோலொத்த அப்பீல் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளுகிற காரணங்களிருந்தால், கீழ்க்கோர்ட்டுத்தீர்ப்பு நகலில்லாமலேயே அப்பீலை அப்பீல் கோர்ட்டார் அங்கீகரித்துக்கொள்ளலாம். (கி. பு. கோடு, பிரிவு-419.)

அப்பீல் வாதி ஜெயிலிலிருந்தால், ஜெயில் விசாரணை உத்தியோகஸ்தர் மூலமாக அப்பீல் தாக்கல் செய்யப்படவேண்டும். (கி. பு. கோடு, பிரிவு-420.)

877. அப்பீல்கள் தாக்கல் செய்வதற்குக் காலாவதியைப்பற்றி இந்தப் புஸ்தகத்தின் 204, 205-வது பக்கங்களைப்பார்க்க.

## அப்பீல் தாக்கல் செய்யப்பட்டதின்பேரில் அப்பீல் கோர்ட்டாருக்கிருக்கப்பட்ட அதிகாரங்கள்.

அப்பீலை சுருக்கமாகத் தள்ளிவிடுவது.

(1) அப்பீல் மனுவைப்படித்துப்பார்த்ததின்பேரில் கீழ்கோர்ட்டுத்தீர்ப்பை மாற்றுவதற்குப் போதுமான முகாந்தரமில்லையென்று அப்பீல் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால் அப்பீலை உடனே சுருக்கமாகத் தள்ளுபடி செய்துவிடலாம்.

இப்படி சுருக்கமாகத்தள்ளுபடி செய்கிறதாயிருந்தால் அப்பீலை ஏன் சுருக்கமாகத் தள்ளுபடி செய்துவிடக்கூடாதென்பதற்கு முகாந்தரமுண்டானால் தெரிவிக்கும்படி, அப்பீல் வாதியையாவது அல்லது அவன் பக்கம் வக்கீலையாவது கேட்காமல் அப்பீலை சுருக்கமாக தள்ளுபடி செய்துவிடக்கூடாது.

(2) அப்பீலைத் தள்ளுபடி செய்யு முன்னாடி ஷை கேசைச் சேர்ந்த ரிக்கார்டுகள் கீழ்கோர்ட்டிலிருந்து அப்பீல் கோர்ட்டார் தருவித்துக்கொள்ளலாம். ஆனால் ரிக்கார்டைத் தருவித்துக்கொண்டு தான் தள்ளுபடி செய்யவேண்டுமென்பது கட்டாயமில்லை. (கி. பு. கோடு, பிரிவு-421.)

அப்பீல் நோட்டீஸ்.

878. சுருக்கமாகத்தள்ளிவிடாமல் யேற்றுக்கொள்ளப்பட்ட அப்பீல்கள் விஷயத்தில் அப்பீல்வாதிக்காவது அல்லது அவனுடைய வக்கீலுக்காவது அப்பீல் இன்னதேதியில் இன்ன இடத்தில் விசாரிக்கப்படுமென்பதைப்பற்றி நோட்டீஸ் கொடுக்கப்படும். அப்பீல் எதிர் வாதம் செய்கிறதற்காக, போலீஸ் கேசு அல்லது மற்ற டிபார்ட்டுமெண்டுக் கேசுகளில் அந்தந்த டிபார்ட்டுமெண்டைச்சேர்ந்தவர்களுக்கு அல்லது பப்ளிக் பிராஸிக்யூடருக்கு நோட்டீசு கொடுக்கப்படும். அவர்கள் கேட்டுக்கொண்டால் அப்பீல் யாதாஸ்துக்கு ஒரு நகல் கொடுக்கப்படும்.

விடுதலையின்பேரில் செய்யப்பட்ட அப்பீல்களில் எதிரிக்கு நோட்டீஸ் கொடுக்கப்படும். (கி. பு. கோடு-பிரிவு 422.)

879. (1) அப்பீல் மனுவையும் அந்தக்கேசில் சம்மந்தப்பட்ட ரிக்கார்டுகளையும் படித்ததின்பேரில் அப்பீல் வாதி அல்லது அவன் பக்கம் வக்கீலைக்



கேட்டும் அப்பால் எதிர்பக்கம் கேட்டும், விடுதலையின் பேரில் செய்யப்படுகிற அப்பீல்களில் எதிரி ஆஜரானால் அவனைக்கேட்டும் செய்தபிற்பாடு கீழ்க்கோர்ட்டுத்தீர்மானத்தில் பிரவேசிப்பதற்குப்போதுமான காரணமிருப்பதாக அப்பீல் கோர்ட்டார் நினைக்காவிட்டால் அப்பீலைத்தள்ளுபடி செய்துவிடலாம்.

அப்பீலை பைசல் செய்வதில் அப்பீல் கோர்ட்டாருக்குள்ள அதிகாரங்கள்.

(a) விடுதலையின் பேரில் ஹைகோர்ட்டில் கவர்ன்மெண்டார் பக்கத்தில் தாக்கல் செய்யப்பட்ட அப்பீலாகவிருந்தால், விடுதலைத் தீர்ப்பை ரத்துச்செய்து மறுபடி கேசை விசாரிக்கும்படி உத்தரவு செய்யலாம், அல்லது மறுபடி விசாரித்து எதிரியைக் கம்மிட்டுச்செய்யும்படிக் குத்தரவு செய்யலாம், அல்லது எதிரியைக் குற்றவாளியென்று தீர்மானித்து அவனுக்கு சிக்ஷை விதிக்கலாம்.

(b) தண்டனையின் பேரில் செய்யப்படுகிற அப்பீல்களில் (1) கீழ்க்கோர்ட்டு சிக்ஷையை ரத்துச்செய்து எதிரியை விடுதலை செய்யலாம்.

அல்லது தண்டனையை ரத்துச்செய்து அப்பீல்க்கோர்ட்டாருக்குட்பட்ட வேறு மாஜிஸ்ட்ரேட்டைக்கொண்டு மறுபடி கேசை விசாரித்து கேசை பைசல் செய்யும்படிக்காவது எதிரியைக் கம்மிட்டுச்செய்யும்படிக்காவது உத்தரவுசெய்யலாம், அல்லது (2) கீழ்க்கோர்ட்டு சிக்ஷையை உறுதிசெய்து தீர்மானத்தை மாற்றலாம், அல்லது தீர்மானத்தை மாற்றியாவது மாற்றாமலாவது சிக்ஷையைக்குறைக்கலாம், அல்லது (3) சிக்ஷையைக்குறைத்தாவது குறைக்காமலாவது தீர்மானத்தை மாற்றியாவது மாற்றாமலாவது சிக்ஷையின் தன்மையை மாற்றலாம். சிக்ஷையை அதிகப்படுத்தும்படியான விதமாக மாற்றக்கூடாது. ஆனால், கி. பு. கோடு 106 (3) உட்பிரிவுப்படி அப்பீல் கோர்ட்டாராவது ஹைகோர்ட்டாராவது தண்டனை உறுதிசெய்யப்படுகிறவர்களைக் கலகஞ் செய்யாமலிருக்கும்படிக்கு ஜாமீன் கொடுக்கும்படிக் குத்தரவு செய்யலாம்.

(c) மற்ற விதமான உத்தரவுகளின் பேரில் செய்யப்படுகிற அப்பீல்களில் கீழ்க்கோர்ட்டு உத்தரவை ரத்துச்செய்யவாவது அல்லது திருத்தவாவது செய்யலாம்.

(d) யாதொரு திருத்தத்தையாவது அல்லது சங்கதிகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தக்கபடி நியாயமாகத் தோற்றப்படுகிற உத்தரவைச் செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-423.)

அப்பீல் தீர்மானம் வரை சிக்ஷையை நிறுத்தி வைப்பது.

880. (1) ஜெயில் தண்டனைத்தீர்ப்பின் பேரில்ச்செய்யப்பட்ட அப்பீல்களில் அப்பீல் கோர்ட்டார் அப்பீலின் முடிவை எதிர்பார்த்து அப்பீல் வாதியை ஜாமீன்பேரிலாவது சொந்தமுச்சலிக்காவின் பேரில் விடும்படிக் குத்தரவு செய்யலாம்.

(2) தங்களுக்குக் கீழ்ப்பட்ட கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட அப்பீல்களில் சம்மந்தப்பட்ட தண்டனைப்பட்டவர்களை ஜாமீன்பேரில் விடுவதற்கு ஹைகோர்ட்டாருக்கும் அதிகாரமுண்டு.

(3) அப்பீலில் தண்டனை உறுதியாகிவிட்டால் ஜாமீன்பேரிலிருந்த நாட்களை ஜெயிலிலிருந்த நாட்களாக சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது. (கி. பு. கோடு, பிரிவு-426.)

அப்பீல் நின்றுபோய்விடுவது.

881. அப்பீல்வாதி இறந்துவிட்டால் அப்பீலில்லாமல் போய்விடும். விடுதலையின்பேரில்செய்யப்படும் அப்பீல்களில் எதிரி இறந்துபோய்விட்டால் அப்பீல் நின்றுபோய்விடும். அபராத தண்டனை விதிக்கப்பட்ட கேசுகளில் அபராதம் விதிக்கப்பட்டவனிறந்துபோய்விட்டாலும் அவனுடைய வார்சுகள் அப்பீல் செய்யலாம். (கி. பு. கோடு, பிரிவு-431.)

867, கிரிமினல் கேசுகளில் தாக்கல் செய்யப்படவேண்டிய அப்பீல்களைக் குறித்த விஷயங்கள் கி· பு· கோடு, 404-முதல் 431-வது பிரிவுவரை·

| தண்டனை விதிக்கும் கோர்ட்டு. | அப்பீல்தாக்கல் செய்யப்படவேண்டிய கோர்ட்டு. | எப்பொது. |
|---|---|---|
| 2-வது 3-வது வருப்பு மாஜிஸ்திரேட்டுகள். | டிஸ்ட்ரிக்கட்டு மாஜிஸ்ட்ரேட் அல்லது குறிப்பிட்டு அதிகாரங் கொடுக்கப்பட்டிருகிற முதலாவது வருப்பு மாஜிஸ்ட்ரேட். | எல்லாக் கேசுகளின் பைசலின் பேரிலும். |
| 1-வது வருப்பு மாஜிஸ்ட்ரேட். | ஸெஷ்ஷன் கோர்ட்டு. | சுருக்கமாக விசாரிக்கப்படாத கேசுகளிலும், அப்பீலில்லாத கேசுகளிலும் செய்யப்படுகிற தண்டனையைத் தவிர மற்ற தண்டனைகளின்பேரில். |
| டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட். | ஷை | ஷை |
| ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டு. | ஹைகோர்ட். | 6-மாதத்திற்கு மேல்பட்ட காவல் தண்டனையாவது ரூ. 200 க்கு மேல்பட்ட அபராதமாவது விதிக்கப்பட்டபொழுது. |
| அஸிஸ்டாண்டு ஸெஷ்ஷன் ஜட்ஜ். | ஸெஷ்ஷன் ஜட்ஜ். | 4-வருஷத்திற்குக் கீழ்ப்பட்ட காலத்திற்கு காவல் தண்டனை விதிக்கப்பட்டபொழுது அதற்கு மேல்பட்டு விதிக்கப் பட்டால் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யவேண்டும், |
| அடிஷனல் ஸெஷ்ஷன் ஜட்ஜ். | ஹைகோர்ட். | அப்பீலில்லாத சுவல்ப கேசுகளைத்தவிர மற்றக் கேசுகளில். |
| ஸெஷ்ஷன் ஜட்ஜ். | ஷை | ஷை |

# 2-ம் பாகம்.

## அத்தியாயம் 1.

### பிராதுகள் மனுக்கள் முதலியவைகளுக்கெல்லாம் மசோதாக்கள் இதனடியில் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தப் புஸ்தகத்தின் 1 வது பாகத்தில், கிரிமினல் சட்டங்களும், கிரிமினல் கோர்ட்டுகளும் உண்டுபண்ணியிருப்பதினுடைய நோக்கம் இன்னதென்பதையும், குற்றங்களுக்காகக் கொடுக்கக்கூடிய பற்பல வருப்புத்தண்டனைகள், அதாவது, அபராததண்டனை, அடிதண்டனை வெறுங்காவல் தண்டனை, கடினகாவல் தண்டனை, தனிக்காவல் தண்டனை, கைகூ வழிய தண்டனை, தண்ணீர்மேலேற்றும் தண்டனை, சொத்தைப் பறிமுதல் செய்யும் தண்டனை, மரணதண்டனை இவைகள் விதிக்கப்படக்கூடிய குற்றங்களின்னதென்பதையும், மேற்கண்ட பற்பலவருப்புத் தண்டனைகளை நிறைவேற்றப்படும் விதங்களின்னதென்பதையும் குற்றச்செய்கைகள் நடந்தது முதல் கடைசிவரை அந்தக் குற்றச்செய்கைகள் சம்மந்தமாக நடத்தப்படவேண்டிய நடவடிக்கைகள் இன்னதென்பதைப்பற்றியும், இந்தியாவிலுள்ள பற்பல வருப்பு கிரிமினல் கோர்ட்டுகள், அவைகளின் அதிகாரங்கள் இன்னதென்பதையும், குற்றஞ் செய்தவர்களை அனுப்பும் பற்பல வருப்பு ஜெயில்கள், ஜெயில்களுக்கு அனுப்பப்பட்ட கைதிகள் படிம்பாடுகள், ஜெயில் குற்றங்கள், அவைகளுக்கு ஜெயிலில் கொடுக்கப்படும் தண்டனைகள், ஜெயில் குற்றங்களுக்காக கைதிகளுக்குப் போடப்படும் பற்பல விதமான விலங்குகள், ஜெயிலில் கைதிகள் செய்யும் பற்பல வருப்பு வேலைகள், ஜெயிலில் நல்நடத்தையுடனிருக்கும் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனை வஜாக்கள், ஜெயிலில் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் பற்பல வருப்பு உத்தியோகங்கள் இவைகளின்னதென்பதைப் பற்றியும், ஜனங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய எல்லாவிஷயங்களையும் விவரமாகச் சொல்லியாய் விட்டது.

இனி இந்த 2 வது பாகத்தில், செய்யப்பட்ட குற்றச் செய்கைகளுக்கும் அவைகள் சம்மந்தமான சில்லறை விஷயங்களுக்கும் பிராது, மனு முதலியவைகளை ஜனங்கள் தானே யெழுதிக்கொள்ளத் தெரிந்துகொள்ளும்படியான விதமாக பிராது மனு முதலிய நடவடிக்கைகளுக்கு மசோதாவும், ஒவ்வொரு கேசிலும் ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள், விசாரணையாகும் கோர்ட்டுகள் முதலிய நடவடிக்கைகளின் சுருக்கத்தையும் எழுதப்பட்டிருக்கிறது.

## பிராதுகள் தயார் செய்யும் விஷயத்திற்காக குற்றச்செய்கைகளை அடியில் கண்டவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

I. மனிதனுடைய தேகம், உயிர் சம்மந்தமான குற்றங்கள்:—அநியாயமான பலவந்தம் (Criminal force) தாக்குதல் (Assault) இ.பி. கோடு, பிரிவு-352, இன்னும் இ. பி. கோடு, 353, 354, 355, 356, 357, இந்தப் பிரிவுகளின்படிக்குள்ள தாக்குதல் குற்றங்களையும், இ. பி. கோடு, 341 வது பிரிவுப்படி ஒருவனை அக்கிரமமாக மறிப்பது அல்லது தடுப்பதைப்பற்றியும், இ. பி. கோடு, 342, 346, 347, 349 வது பிரிவுகளின்படி ஒருவனை சட்டவிரோதமாக அடைத்து அல்லது கட்டிவைப்பது அல்லது காவலில்வைப்பதைப் பற்றியும், 323 வது பிரிவுப்படி, துன்பஞ்செய்வது, 324 வது பிரிவுப்படி அபாயகரமான ஆயுதங்களினுலாவது அல்லது வேறு அபாயகரமான மாதிரியாகவாவது துன்பஞ்செய்வது, 325 வது பிரிவுப்படி ஒருவனுக்குக் கொடுந்துன்பஞ் செய்வது, 356 வது பிரிவுபடி அபாயகரமான ஆயுதங்களினுல் கொடுந் துன்பஞ் செய்வது, முதலிய குற்றங்கள் வகையரா தொடர்ச்சியாய் கொலைவரையிலுமுள்ள குற்றங்களைப்பற்றியும்;

II. பொருள்கள்-அசையும் பொருள், அசையாப்பொருள் விஷயமாகச் செய்யப்படுகிற குற்றச் செய்கைகளைப்பற்றியும்;

III. விவாக சம்மந்தமான வகையரா கேசுகளைப்பற்றியும் பிராதுகளெழுதப்பட்டிருக்கிறது.

## பிராது எழுதும் விஷயத்தில் தெரிந்துகொள்ள வேண்டிய சில முக்கியமான குறிப்புகள்.

ஒவ்வொரு கிரிமினல் கேசின் பிராதும் சட்டத்துக்குப் பொருத்தமாக எழுதப்படவேண்டிய விஷயத்தில் வாதி கவனமாயிருக்கவேண்டும். ஏனென்றால் பிராது என்பது கேசுக்கு அஸ்திவாரமாக யிருக்கிறது. ஒரு கட்டடம் கட்டுவதற்குத் தோண்டப்படுகிற அஸ்திவாரம் எவ்விதமாக யிருக்கிறதோ அதேவிதமாகத்தான் கட்டமிருக்கும். அதுபோல பிராதை ஜாக்கிரதையாக சரியானபடி சட்டத்துக்கு ஒத்துமையாக எழுதப்பட்ட கேசுகளில் சாக்ஷிகள் மாத்திரம் சரியானபடி சாக்ஷியக் கொடுக்கும் விஷயத்தில் எதிரிக்குத் தண்டனை கிடைப்பது நிச்சயம். பிராது சரியானபடி எழுதப்படாமலிருப்பதானது எதிரிக்கு மிகவும் அனுகூலமான விஷயமாகவேயே ஏற்படுகிறது. இப்படிக்கிருக்கப்பிராது எழுதுவதைந்தான் ஜனங்கள் பொதுவாக அசட்டை செய்கிறார்கள். சாதாரணமாகப் பிராதுகளை கிரிமினல் கேசுகளில் மிகவும் அனுபோகமுள்ள வக்கீல்கள் மூலமாக எழுதுவது நலம். அப்பேர்ப்பட்டவர்களிடம் போனல் பீஸ்கேழ்ப்பார்களென்று எண்ணி, 2-அணு முதல் 1-ரூ வரை எழுத்துக்கூலி கொடுத்து சட்ட நடவடிக்கைகள் அதிகமாகத் தெரியாதவர்களிடம் பிராதுகளை எழுதிக்கொண்டு கோர்ட்டுகளில் தாக்கல்செய்து விடுகிறார்கள். பின்னிட்டு கேசுவிசாரணைக்காலத்தில் வக்கீல்களைக்கொண்டு கேசு நடத்தும்பொழுது பிராது சட்டத்துக் கொத்துமையாக சரியானபடி எழுதப்படவில்லை யென்பது வெளியாகிறது. பின்னிட்டு தெரிந்து என்னசெய்யக்கூடும். ஆகையால் எல்லா ஜனங்களுடைய சௌகரியத்தையும் நன்மையையும் உத்தேசித்து அடியில்க் கண்டபடிக்குள்ள பிராது மனு முதலியதுகளுக்கெல்லாம் மசுமதாக்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளைப்



பார்த்துக்கொண்டு எந்தக்கேசுக்கும் எளிதில், யாரும், தன் கேசுக்குத்தகுந்தாப்போல் பிராது மனு முதலியவைகள் எதுவும் தயார்செய்து விடலாம்.

## குறிப்புகள்.

(1) பிராதுகள் சுலபமான நடையில் சங்கதிகள் எவ்விதமாக நடந்திருக்கிறதோ அந்தப்படி வாதியாகயிருப்பவனுக்கும் ஈனஜாதியைச் சேர்ந்த சாக்ஷிகளுக்கும் எளிதில் அர்த்தமாகக்கூடிய விதமாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

(2) பிராதில் முக்கியமாக இருக்கவேண்டியவிஷயங்கள்:—குற்றம் நடந்த இடம், நேரம், சாக்ஷிகளின்பெயர், சங்கதியின் சுருக்கம், அடியினுலுண்டான காயம், வீக்கம் முதலியதுகளையும் கிராமமுன்சிபிலும் போலீசிலும் உடனே தெரியப்படுத்தப்பட்டிருந்தால் அது விபரத்தையும், எழுதவேண்டும்.

(3) பிராது சுருக்கமாக எழுதப்படவேண்டும். இப்படி எழுதிலும் சங்கதிகளை சமயத்துக்குத் தகுந்தபடி சாக்ஷிகள் வாக்குமூலத்தால் விவரித்துக் கொள்ளலாம்.

(4) நடந்த சங்கதியைமட்டும் எழுதவேண்டும். நடக்காத சங்கதிகளை கூட்டி எழுதிக்கொண்டால், குற்றச் செகையை வாஸ்தவமாகப் பார்த்துச் சாக்ஷி சொல்லவருகிற சாக்ஷிகள் நடக்காத சங்கதிகளை கோர்ட்டில் தெரிவிக்க விட்டுவிடுவார்கள். சில சாக்ஷிகள் கட்டுப்பாடாகச் சொன்னாலும் சாக்ஷிகளுடைய வாக்குமூலங்கள் பேதப்பட்டுப்போகும். ஆகையால் நடந்தபடி வாஸ்தவத்தைமட்டும் பிராதில் எழுதவேண்டும்.

(5) சாக்ஷிகள் போடுவதில் வாதிக்கு பந்துக்களில்லாதவும், பற்பல ஜாதிக்காரர்களாகவு மிருப்பவர்களை சாக்ஷிபோடவேண்டும்.

(6) குற்றம் நடந்த இடத்திற்குச் சமீபத்தில் வசிக்கிற அல்லது வேலை பார்த்துக்கொண்டிருப்பவர்களை சாட்சி போடவேண்டும்.

(7) வழக்கமாக சாக்ஷி சொல்லுவதையே ஜீவனமாக வைத்துக்கொண்டிருப்பவர்களை சாக்ஷி போடாமல் விலக்கவேண்டும்.

(8) விவாக சம்மந்தமான விஷயங்களில் செய்யப்படுகிற குற்றங்களுக்குப் பந்துக்களாயிருப்பவர்களையும் சாக்ஷி போடவேண்டும்.

(9) சிவில் ஸம்மந்தமான கேசுகளை, கிரிமினல் கோர்ட்டுகளுக்கு முன், அவைகளை கிரிமினல் பிராது சொரூபமாகத் தாக்கல் செய்யக்கூடாது.

(10) பந்துக்களுக்குள் நடக்கிற அற்ப அடிபிடி முதலியதுகளைப்பற்றி கிரிமினல் கோர்ட்டுகளில் பிராது தாக்கல் செய்து கேசு நடத்துவது நலமல்ல.

(11) எந்தக் குற்றச்செய்கைகளை மறைப்பது சட்டப்படி குற்றமாகுமோ அப்பேர்ப்பட்ட கேசுகளைத்தவிர மற்றக் கேசுகளில் கிரிமினல் கோர்ட்டுகளுக்குமுன் பிராது கொடுக்காமலேயே கக்ஷிக்காரர்களுக்குள் ராஜி செய்து கொள்வது நலம்.

(12) ராஜியாகிப் போகக்கூடிய கேசுகளிலெல்லாம் கேசு பைசல் செய்யப்படு முன்னுடி கூடிய சீக்கிரத்தில் கக்ஷிக்காரர்கள் ராஜியாய்ப் போய்விடுவது நலம்.

(13) ஒரு ரூபாய்க்கு உட்பட்ட களவு கேசுகளையும், சாதாரணமான தாக்குதல் கேசுகளையும் அனுவசியமாய் ஸப்மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுகளில்

தாக்கல்செய்து அவர்களுடைய விலையுயர்ந்த நேரத்தை வீண்போக்காமல் கிராம மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுகளிலே தாக்கல்செய்தால் கக்ஷிக்காரர்களுக்கு பணச்செலவு விஷயமாகவும் மற்றச் சங்கதிகள் விஷயமாகவும் அநேகம் சௌகரியங்களுண்டு.

பிராதின் வாதி, எதிரி அல்லது எதிரிகள், சாக்ஷிகள், குற்றம் நடந்த இடம், குற்றம் நடந்த தெய்தி, இவைகளின் விபரங்களை மேலே 1 அல்லது 2-வது பிராதில்கண்ட பிரகாரம் எழுதிக்கொள்ளவேண்டும் இ. பி. கோடின் ஒவ்வொரு பிரிவுப்படிக்குள்ள பிராதின் ஸாராம்சத்தை மாத்திரம் கீழே எழுதப்பட்டிருக்கிறது.

## 1

### திருநெல்வேலிஜில்லா பாளையங்கோட்டை ம-ா-ா-ஸ்ரீ, 3-வது கிளாஸ் மேஜிஸ்திரேட்டார் அவர்கள் சமுகத்துக்கு.

மேற்படி கோர்ட் 1906-ம் வருஷத்து காலெண்டர் கேஸ் நெம்பர் 382.

இ. பி. கோடு, 352-வது பிரிவுப்படி பிராது நகல்.

| நம்பர். | பெயர். | தகப்பன் பெயர். | இருப்பிடம். | தாலூகா. | வயசு. | ஜாதி. | தொழில். | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணய்யங்கார் | நாராயணய்யங்கார் | கீழ்நத்தம் | திருநெல்வேலி | 30 | பிராம்மணன் | விவசாயம் | வாதி |
| 2 | சம்பூர்ணமய்யர் | ராஜாங்கம் அய்யர் | டிஷ | டிஷ | 40 | டிஷ | டிஷ | எதிரி |
| 3 | திருநீலகண்டபிள்ளை | பழனிவேலாயுதம் பிள்ளை | டிஷ | டிஷ | 25 | வெள்ளாழர் | டிஷ | சாக்ஷிகள் |
| 4 | வையாபுரித்தேவன் | மாயாண்டித் தேவன் | டிஷ | டிஷ | 50 | அகமுடையமறவர் | காவல் | |
| 5 | சுந்தரலிங்கம்பண்டாரம் | சங்கரக் குமார பண்டாரம் | டிஷ | டிஷ | 35 | பண்டாரம் | பூக்கடிவேலை | |

குற்றம் நடந்த இடம்—கீழ்நத்தம். குற்றம் நடந்த தெய்தி—2-1-06.

மேல்கண்ட வாதியாகிய நான் எதிரிபேரில் வணக்கமாய் இந்தியன் பினல்கோட் 352-வது பிரிவின்படி செய்துக்கொள்ளும் பிராது.

துராகிருதமான பலவந்தக் கேசில்.

(Criminal Force)

ருஜுச்செய்யவேண்டிய விஷயங்கள்.

(1) எதிரி கையோங்குவது, கையைக் குவித்து முஷ்டிவைத்துக் கொள்ளுவது முதலி அபிநயங்களைக் காட்டினன் அல்லது பலவந்தஞ்செய்ய ஆரம்பித்தான்.

(2) வாதி முன்னிலையில் இப்படிச் செய்யப்பட்டது.

(3) வாதிக்கு விரோதமாக அந்த ஜாடைகள்செய்ய எதிரி எண்ணினனென்றும், எதிரி தன்னைத் துராகிருதமான பலவந்தஞ் செய்வானென்று வாதிபயந்தானென்றும்,



(4) வாதி எதிரியை எவ்விதத்திலும் கோபம் மூட்டவில்லை.

(5) சாக்ஷிகள் தடுத்திருக்காவிட்டால் அல்லது வாதி விலகிக்கொள்ளாவிட்டால் எதிரி அப்போதே துராகிருதமான பலவந்தஞ் செய்திருப்பான்.

செய்கைக்கு காரணம் ;—எதிரி, வாதியாகிய என்னிடம் கைமாத்து வாங்கினவகையில் எனக்கு ரூபா 2 - 0 - 0 கொடுக்கவேண்டியிருந்தது, அதை நான் பல தடவைகளில் எதிரியிடம் கேட்டுவந்தேன். கொடுக்காமல் நகட்டிக்கொண்டு வந்தார். அதை இன்றுகாலையிலும் எதிரியிடம் போய்க் கேட்டேன். கையில் ரூபாகிடைத்தபோதுகொடுப்பதாகச்சொன்னார். இப்படி நகட்டுதல் செய்கிறதைப்பற்றி நான் மனவருத்தமடைந்து எதிரியைப் பார்த்து இப்படி மானமில்லாமல் கடன் ரொக்கமாக வாங்கினதைக் கொடுக்காமல் நகட்டுதல் செய்கிறீரே, இது யோக்கியமில்லை என்று சொன்னேன். அதற்காக எதிரி என்மேல் கோபங்கொண்டு மும்மறித்து தன் கைகளை ஓங்கிக்கொண்டு என் பல்களை உடைத்துவிடுவதாய்ச் சொல்லிக்கொண்டு என் பக்கத்தில் நெருங்கினார். நான் என்னை அடித்துவிடுவாரென்று நடுங்கிப்போய் விலகிநின்றுகொண்டேன். சாக்ஷிகள் என்னை எதிரி அடியாமல் தடுத்துக்கொண்டார்கள்.

இதைப்பற்றி உடனே டிஷ கிராமம் கிராமமுனிசீபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால் கிருபைசெய்து எதிரியையும் சாக்ஷிகளையும் தருவித்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

2-1-1906. (ஒப்பம்) கிருஷ்ண அய்யர்.

## 2

### செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரி ம-ா-ா-ஸ்ரீ, ஸப் மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டார் அவர்கள் சமுகத்துக்கு.

மேற்படி கோர்ட் 1906-ம் வருஷத்து காலெண்டர் கேஸ் நெ. 575.

இ. பி. கோடு, 352-வது பிரிவுப்படி பிராது நகல்

டிஷ பொன்னேரி கஸ்பாவிலிருக்கும் பார்த்தசாரதி நாயக்கர் அவர்கள் மகன் நாராயணசாமி நாயக்கர்——வாதி.

மேல்கண்ட வாதியாகிய நான் அடியில்கண்ட எதிரிகள்பேரில் வணக்கமாய், இ. பி. கோடு, 352-வது பிரிவுப்படி செய்துக்கொள்ளும் பிராது.

தாக்குதல் கேசில் ருஜுச்செய்யவேண்டிய விஷயங்கள்.

(1) எதிரி வாதியை துராகிருதமான பலவந்தஞ் செய்தான்.

(2) மனதாரவேணுமென்று அப்படி பலவந்தஞ் செய்தான்.

(3) வாதி சம்மதமில்லாமல் குற்றச்செய்கை செய்வதற்காக அப்படிப் பலவந்தஞ் செய்தான்.

(4) வாதிக்குச் சங்கடமுண்டாகு மென்று தெரிந்திருந்து எதிரி அப்படிச்செய்தான்.

(5) வாதி எதிரியை எவ்வகையிலும் கோபம் மூட்டவில்லை.

பிராது:—என்னவென்றால் நேற்று 3 எதிரிகளும் நானும் ஊர் மடத்தில் பேசிக்கொண்டிருந்தோம். எதிரிகளுக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் விஷயமாய் கொஞ்சம் வாய்த்தர்க்கம் நேரிட்டு அதனால் மனவருத்தமும் நேரிட்டு விட்டது.

இன்று காலையில் நான் தெருவழி வரும்போது 1 வது எதிரியும் அவன் பங்காளிகளான 2, 3 எதிரிகளும் ஒன்று சேர்ந்து போய்க்கொண்டிருந்தார்கள். அப்போது 1 வது எதிரி தன் கையில் பிடித்திருந்த நாயை ஏவி என் பேரில் பாயும்படி செய்தான். நான் நாயை அடித்ததற்காக 2 வது எதிரி என்னை அவன் கையில் வைத்திருந்த கம்பினால் அடிக்க கம்பை ஓங்கிக்கொண்டு என்னண்டை நெருங்கி வந்தான். 3 வது எதிரி கையினால் என் மூஞ்சியிலடித்தான். நான் விலகிக்கொண்டபடியால் லேசில் போய்விட்டது. அடியில்கண்ட சாக்ஷிகள் விலக்கிவிட்டார்கள்.

கிராமமுனிசிபு எதிரிகளுக்கு அத்தியந்த சிநேகிதராக யிருப்பதால் அவரிடம் தெரியப்படுத்தவில்லை.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

குறிப்பு :—இதில் 1 வது எதிரியும் 3 வது எதிரியும் தாக்குதல் என்னும் குற்றத்தையும் 2 வது எதிரி அநியாயமான பலவந்தமென்னுங் குற்றத்தைச் செய்தவர்களாகிறார்கள்.

## எதிரிகள்.

ஷை பொன்னேரியிலிருக்கும் துரைசாமி பிள்ளை மகன் சிங்காரவேலுப்பிள்ளை 1. ரத்னஸபாபதிபிள்ளை மகன் வேலுப்பிள்ளை 2. ஆறுமுகம்பிள்ளை மகன் சுந்தரம்பிள்ளை 3. பேர்கள்.

## சாக்ஷிகள்.

ஷை பொன்னேரியிலிருக்கும் பார்த்தசாரதி ஐயங்கார் குமாரர் நாராயணய்யங்கார் 1. ஷை யூரிலிருக்கும் உஸ்மான் சாயபு மகன் அமீர்கான் சாய்பு 2, இயேசு அடியான் மகன் சாலோமன் உபதேசியார் 3 பேர்கள்.

7-2-1906. (ஒப்பம்.) வாசுதேவன்.

## நடவடிக்கை.

போலீஸார் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடாது—ஸம்மன்கேஸ்—எதிரி வாதி சாக்ஷிகள் இவர்களுக்கு ஸம்மன் வாரண்டு பிறப்பிவிக்கப்படிகட்டவேணும்—ஜாமீன்பேரில் விடலாம்—ராஜியாகலாம்—3மாதம் காவல் தண்டனையாவது அல்லது 500 ரூபாவரை அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கலாம்—எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.



## 3

## வாதியாகிய நான் வணக்கமாய் எதிரிபேரில் இ. பி. கோடு, 353-வது பிரிவுப்படி யெழுதிகொண்ட பிராது.

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) தாக்கப்பட்டவன் ஸர்க்கார் உத்தியோகஸ்தனாக யிருப்பவன். (2) எதிரி அந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தனைத் தாக்கினான் (3) அப்படிதாக்கப்படுங்காலத்தில் அந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தன் அவனுக்கு ஏற்பட்ட ஸர்க்கார்வேலையை நடத்திக்கொண்டிருந்தான். (4) அந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தனை அவன் வேலையைச்செய்ய வொட்டாமல் தடுக்கும்பொருட்டு தாக்கப்பட்டான். (5) அந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தன் தான்செய்யவேண்டிய தன் கடமையைச் செய்ததற்காக அல்லது செய்யப் பிரயத்தனப் பட்டதற்காகத் தாக்கப்பட்டான். இ. பி. கோ டு, 353-வது பிரிவுப்படிபிராது நகல்.

பிராது:—எதிரியினுடைய புஞ்சைக்குப்பக்கத்தில் புறம்போக்கு நிலமிருக்கிறது. அதை எதிரி தன் நிலத்தோடு சேர்த்து உழுதிருப்பது தெரிந்து நான் இன்று காலை அங்கேபோனேன். அவன் நிலத்தைப்பூராவாக உழுதாய் விட்டது. பக்கத்திலிருக்கிற புறம்போக்கு நிலத்தைச்சேர்த்து உழுதிருந்தது. எதிரிக்குப் பட்டாபடிக்குள்ள நிலம்போக எவ்வளவு நிலத்தைச் சேர்த்து உழுதிருக்கிறானென்று தெரிந்துகொள்ள வேண்டியதற்காக எதிரியின் நிலத்தை அளக்க ஆரம்பித்தேன். அப்போது எதிரி அளவு சங்கிலியை பிடித்துக்கொண்டிருந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்களான சாக்ஷிகளைப் பிடித்துத் தள்ளிவிட்டு என்னையும் அடிக்கக் கையோங்கிக்கொண்டு வந்தான். இதன் மூலமாய் எதிரி எவ்வளவு நிலத்தைச் சேர்த்து புறம்போக்கைகட்டி யிருக்கிறானென்று தெரிந்து சமூகத்துக்கு ரிப்போர்ட்டுச்செய்ய மார்க்கமன்னியில் ஸர்க்கார் வேலை தடைப்பட்டுப் போய்விட்டது.

நான் ஸர்க்கார் கர்ணமென்றும் சங்கிலிபிடித்துக் கொண்டிருந்தவர்கள் சர்க்கார் தலையாரிகளென்றும் சர்க்கார் வேலையை நியாயமாய் செய்துகொண்டிருக்கிறோ மென்றும் தெரிந்திருந்தும் எங்கள் வேலையைத் தடுத்து தான் செய்திருக்கிற ஆக்கிரமிப்பைக் கண்டுபிடித்து ரிப்போர்ட்டுச் செய்வதைத்தடுத்துவிட வேணுமென்ற எண்ணத்துடன் இப்படி 1, 2 சாக்ஷிகளை அநியாயமான பலவந்தம் செய்தும் என்னை தாக்கியுமிருக்கிறான்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

9-4-1909. (ஒப்பம்) ஆறுமுகம் பிள்ளை.

## 4

பிராது:—என்னவென்றால் அம்பாசமுத்திரம் டிஸ்டிரிக்கட்டு முன்சீபுக் கோர்ட்டு 1905-ஆம் அசல் நெ. 545-ல் இந்தப்பிராதில்கண்ட எதிரிகள் பிரதிவாதிகள். அவர்கள் வீட்டில் ஜங்கமசொத்துக்களை உடன் ஜப்தி செய்யும்படி எனக்கு அம்பாசமுத்திரம் முனிசிபு கோர்ட்டிலிருந்து ஜப்திக்கட்டளை பிறந்திருக்கிறது. அதை இந்தப் பிராதுடன் ஆஜர் செய்திருக்கிறேன். அந்த ஜப்தி கட்டளைப்படி நான் 12-7-06 காலை 8 மணிக்கு 1, 2 சாக்ஷிகள் சகிதம் எதிரிகள் வீட்டுக்குப்போய் எதிரிகளுக்கு ஜப்தி கட்டளையையும் காட்டி சங்கதிகளைச் சொன்னேன். இ. பி. கோ டு, 353-வது பிரிவுப்படிபிராது நகல்.

எதிரிகள் ஜப்தி செய்யக்கூடாதென்று சொன்னார்கள். வேண்டும் சமாதானங்கள் சொல்லியும் கேட்கவில்லை. ஜப்தி செய்வதற்காக ஷை எதிரிகள் வீட்டுக்குள் நான் நுழையும்போது எதிரிகள் என்னைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டு ஜப்தி செய்யவேண்டிய வீட்டின் கதவையும் சாத்திக்கொண்டார்கள். நான் கோர்ட்டு அமீனா வென்று எதிரிக்குத் தெரிந்திருந்தும் ஜப்தி செய்யவொட்டாமல் சர்க்கார் வேலையை மனதாற வேணுமென்று தடுத்துவிட்டார்கள்.

ஆகையால் கிருபை செய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

12-7-06. (ஒப்பம்) ராமகிருஷ்ணபிள்ளை அமீனா

குறிப்பு:—ஸர்க்கார் உத்தியோகஸ்தர் என்பது, இ. பி. கோடு, 21-வது பிரிவில்விவரிக்கப்பட்டிருக்கிறது. அதில்கண்டவர்கள் தவிர, ஜெயிலிலிருக்கிற கைதி வார்டர்களும், அம்மை குத்துகிறவர்கள் முதலியவர்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்தான்.

குறிப்பு:—353-வது பிரிவுப்படி குற்றமாகவேண்டுமானால் தாக்கப்படப்பட்டவன் ஸர்க்கார் உத்தியோகஸ்தனாக யிருக்கவேண்டும். எதிரி தடுத்ததாய் சொல்லப்பட்ட வேலை ஷை உத்தியோகஸ்தன் குற்றம் நடந்ததாகச் சொல்லுகிற காலத்தில் சட்டத்தாக்கு ஒத்துமையாயும் அவனுக்கு யேர்ப்பட்டதாகவுமிருக்கப்பட்ட வேலையைச் செய்துகொண்டிருந்திருக்கவேண்டும். இப்படியானால் தான் இந்தப்பிரிவுப்படி குற்றமாகும்.

இப்படிக்கில்லாமல் சர்க்கார் உத்தியோகஸ்தனாக யிருந்தாலும், தனக்கு யேர்ப்படாத அல்லது சட்டத்தாக்கு ஒத்துமையில்லாத வேலையை அவன் அக்கிரமமாகச்செய்து அதற்காக அவனை யாரும் தடுத்து தாக்கினால் அது குற்றமாகாது.

## நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கலாம்—வாறண்டு கேஸ்—படிகட்டவேண்டாம் ஜாமீன்பேரில் விடலாம்— ராஜியாகக்கூடாது— 2 வருஷம் இருவகை காவல் அல்லது அபராதம் அல்லது 2 ம் விதிக்கலாம்—ராஜாதனி மே, 1-வது மே அல்லது 2-வது மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## 5

## இ. பி. கோடு, 354-வது பிரிவுப்படிக்குள்ள பிராதில் ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

இ. பி. கோடு, 354-வது பிரிவுப்படி பிராது நகல்.

(1) எதிரி அந்தப் பெண்பிள்ளையைத் தாக்கினான் அல்லது துராகிருதமான பலவந்தஞ்செய்தான்.

(2) அந்தப் பெண்பிள்ளையின் நாணத்தை பங்கம் செய்யும்பொருட்டு அப்படிச் செய்தான்.

பிராது:—என்னவென்றால் இன்றுகாலையில் என் ஸம்ஸாரம் சீதாலெக்ஷ்மி அம்மாள் வீரப்பபுரம் அக்கிரகாரம் வாய்க்கால் படித்துறையில் ஸ்நானஞ்செய்யப்போய் வஸ்திரம் துவைத்துக்கொண்டிருந்தாள். அப்போது எதிர்யும்ஷை படித்துறையில் என் ஸம்ஸாரம் சேலை துவைத்துக்கொண்டிருந்ததற்கு பக்கத்தில் போய் உட்கார்ந்து பல் தேய்த்துக்கொண்டிருந்தான். சேலை துவைப்பதினால் தன்பேரில் ஜலம் தெறிப்பதாகவும் ஆகையால்சேலை துவைக்கக்கூடாது



என்றும் எதிரி சொன்னான். அந்தப்படி சேலை துவைப்பதை என் ஸம்ஸாரம் நிறுத்தாதபடியால் எதிரி கோபங்கொண்டு பெண்பிள்ளைக்கு இவ்வளவு மதமாவென்று சொல்லி என் ஸம்ஸாரம் கையில் பிடித்துத் துவைத்துக்கொண்டிருந்த சேலையை எதிரி என் ஸம்ஸாரத்தின் கையைத் தொட்டுப் பிடுங்கி எறிந்துவிட்டான். சாக்ஷிகளுக்கு தெரியும்.

இப்படி அன்னிய புருஷனாக யிருக்கப்பட்ட எதிரி என் ஸம்ஸாரம் கையிலிருந்த சேலையைக் கையைத்தொட்டுப் பிடுங்கினதானது ஜாதி வழக்கத்துக்கும், பெண்களின் நாணத்துக்கும் கெடுதலாயிருப்பதுடன், பெண்நாணத்தையும் பங்கப்படுத்தக் கூடியதென்று எதிரிக்குத் தெரிந்திருந்தும் எதிரி வேணுமென்றே இப்படிச் செய்ததாக யிருக்கிறது.

இது சங்கதியை கிராம முனிசீபிடம் தெரியப்படுத்தப்போனதில் அவர் ஆஜரில்லை.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

1-9-06. (ஒப்பம்) ரெங்கய்யர்.

குறிப்பு :—இந்தப்பிராதும் இதைப்போலொத்த பெண் நாணத்துக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சங்கதிகளடங்கிய பிராதுகளும், தாக்கப்பட்ட பெண்பிள்ளைகளே நேரில் கொடுக்கவேண்டுமென்பதில்லை. அந்தச் செய்கையினால் மனவருத்தமடையக்கூடிய ஷை பெண்பிள்ளையின் புருஷனாவது அல்லது அந்தப்பெண்பிள்ளை யார் பாதுகாப்பிலிருக்கிறாளோ அவர்களாவது வாதியாக யிருந்து பிராது கொடுத்து நடவடிக்கை நடத்தலாம்.

## நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீன்பேரில் விடலாம்—ராஜியாகக்கூடாது—2 வருஷம் இருவகைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம்—இராஜதானி மே அல்லது 1-2-வது மேஜிஸ்திரேட்டுகள் விசாரிக்கலாம்.

## 6

## ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி, வாதியை அவமானஞ் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் பிராதில் கண்டபடி தாக்கினான்.

(2) எதிரி அவ்விதம் தாக்குதல் செய்யும்படியான மாதிரியாக வாதி அவனைக் கோபமூட்டவில்லை.

பிராது:—என்னவென்றால் 1-வது எதிரி ஒருவருஷக்காலமாககொஞ்சம் நடவடிக்கைப் பிசகாயிருந்து வருகிறார். ஒரு வாரத்துக்கு முன் நான் தென்காசிக்குப்போயிருந்த இடத்தில் 1-வது எதிரியின் தாய் மாமன் சதாசிவன்பிள்ளை 1-வது எதிரியின் நடப்பைப்பத்தி என்னிடம் விசாரித்தார். எதிரியின் நடத்தையைப்பற்றி எனக்குத்தெரிந்ததை அவரிடம் சொன்னேன். அவர் இது சங்கதியைப்பத்தி 1-வது எதிரியிடம் என்ன கேட்டாரோ தெரியாது.

இ. பி. கோடு, 355-வது பிரிவுப்படி.

நேற்று சாயந்திரம் நான் நதிக்குப் போயிருக்கும்போது 1-2 எதிரிகள் அங்கே வந்தார்கள். என்னைக்கண்டு 1-வது எதிரி என்மாமனாரிடம் தென்

காசிமில் என்னடா சொன்னுயென்று கேட்டார். நான் அப்படி விதீயாஸமாக ஒன்றும் சொல்லவில்லையே யென்று சொன்னேன், உடனே என்னை அவமானஞ் செய்யக்கருதி 1-வது எதிரி உன்னை செருப்பாலடித்தாலென்னடாவென்று சொல்லி 2-வது எதிரியைப்பார்த்துப் போடடாவென்று சொன்னுன். உடனே 2-வது எதிரி தன் காலில் கிடந்த செருப்பைக்கொண்டு என்னை இரெண்டு அடி தலையிலடித்துவிட்டான். சாக்ஷிகள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். என்னை அவமானஞ் செய்யவேணுமென்று என்னை இப்படி எதிரிகள் செய்தார்கள்.

1-வது எதிரி ஏவுதலினுல் இப்படி நடந்ததினுல் அவன் இ. பி. கோடு, 114, 355-வதுபிரிவுகளின்படிக்கும், 2-வது எதிரி செய்கையைச்செய்ததினுல் இ. பி. கோடு, 355-வது பிரிவுப்படிக்கும் குற்றஞ் செய்தவர்களாகிறுர்கள். இது சங்கதியைப்பற்றி கிராமமுனிசிபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

2-9-06. (ஒப்பம்) பூர்ணலிங்கம்பிள்ளை.

குறிப்பு:—விளக்குமாறு முதலிய வஸ்துக்களாலடித்தாலும் இந்தப் பிரிவின்படிக்கே குற்றமாகும்.

குறிப்பு:—குற்றச் செய்கையைச் செய்யும்படி ஏவுதல் செய்துவிட்டு குற்றச்செய்கை நடக்கிற இடத்துக்கு ஏவுதல் செய்தவன் போகாமலிருந்துவிட்டாலும், அவன் விஷயத்தில் எந்தப் பிரிவுப்படி குற்றம் செய்யப்படுகிறதோ அந்தப் பிரிவோடு 109 - வது பிரிவும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாது—வாறண்டுகேஸ்—படி கட்டவேண்டாம்—ஜாமீன்பேரில் விடலாம்—இராஜியாய்ப்போகலாம்—2 வருஷ இருவகைக்காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்—ராஜதானி மாஜிஸ்ரேட்டு, 1 வது 2 வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு விசாரிக்கலாம்.

## 7

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி வாதியைத் தாக்கினுன்.

(2) வாதி தாக்கப்படுங்காலத்தில் பிராதில்கண்ட சொத்தை அணிந்துகொண்டு அல்லது வைத்துக்கொண்டிருந்தான்.

(3) அந்த சொத்தைத் திருடிக்கொள்ள எண்ணங்கொண்டு வாதியைத் தாக்கினுன்.

இ. பி. கோடு, 356-வது பிரிவுப்படி.

பிராது:—என்னவென்றுல் நான் என்னூரிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நேற்று காலை போய்க்கொண்டிருந்தேன். நான் என்கழுத்தில் தங்கத்தினுல் செய்த கண்டருத்திராக்ஷம் போட்டிருந்தேன். நான் என்னூரைவிட்டு 4 மைல் போனவுடன் எதிரியும் வந்து என்கூடச்சேர்ந்து என்கூடவே பேசிக்கொண்டு வந்தான். அப்போது வேறு ஒருவருமில்லை. என்கண்ட ருத்திராக்ஷம் எங்கே செய்யப்பட்டதென்று கேட்டு அதைப்பார்க்கவேணும் கழட்டிக்கொடு யென்று எதிரி சொன்னுன், நான் அப்படிச்செய்ய சம்மதிக்கவில்லை.



உடனே எதிரி என் இருகைகளையும் பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டான். இப்படி என்னைத் தாக்குதல் செய்தது, நான் அணிந்திருந்த கண்ட ருத்திராக்ஷத்தைத் திருடிக்கொள்ள எத்தனப்படுவதற்காக என்று நான் அறிந்து கூப்பாடுபோட்டேன். சாக்ஷிகள் பக்கங்களிலிருந்து வந்துவிட்டார்கள். எதிரியை பிராதில் கண்ட 2-வது சாக்ஷிக்கு முன்னமேயே தெரியுமென்று சொன்னுன். சாக்ஷிகள் வந்து என்னிடம் நடந்த சங்கதிகளைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது எதிரி ஓடிவிட்டான்.

இது சங்கதிகளை கிராம முனிசிபிடம் தெரியப்படுத்துவதற்கு குற்றம் நடந்த இடம் இன்னுர் சரகமென்று திட்டமாய் தெரியாதபடியால் மார்க்கமில்லை. சமுகத்திலேயே நேரில் இந்தப்பிராது செய்திருக்கிறேன்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

குறிப்பு:—களவு நடவாமல் களவு செய்வதற்காக தாக்குதல் மட்டும் செய்யப்படுகிற கேசுகளுக்குமட்டும் இந்தப்பிரிவு சம்மந்தப்படும்.

3-9-06. (ஒப்பம்) ராகவய்யர்.

நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கலாம்—வாறண்டு கேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீன்பேரில் விடக்கூடாது—இராஜியாய் போகக்கூடாது—2-வருஷ இருவகைக்காவல் ஏதுவாகிலும் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம்—எந்த மாஜிஸ்திரேட்டும் விசாரிக்கலாம்.

## 8

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) வாதியை எதிரி தாக்கினுன் (2) வாதியை அக்கிரமமாககட்டி அல்லது அடைத்துவைக்கும்படி அப்படித் தாக்கினுன்.

இ. பி. கோடு, 357-வது பிரிவுப்படி.

பிராது:—என்னவென்றுல் நான் எதிரியின் மருமகன் கலியாக்குடும்பன் பேரில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேஷனரி மாஜிஸ்திரேட்கோர்ட்டில் தாக்குதல் பிராதுகொடுத்து அதற்கு இன்று வாயிதா யேர்பட்டிருக்கிறது. இந்தக் கேசின் எதிரியும், அவனைச்சேர்ந்த மற்றவர்களும் ஷை கலியாகுடும்பனுடன் சமாதானமாகப்போய் அந்தப் பிராதை விறுத்திக்கொள்ளு வேண்டுமென்று சொல்லிப்பார்த்தார்கள். நான் கேழ்க்கவில்லை. அதற்காக என்னை இந்தக்கோர்ட்டில் ஷை கலியாக்குடும்பன்பேரில் நான் கொடுத்திருக்கிற கேசு இன்று வாயிதாவுக்கு எப்படியாவது என்னை ஆஜராகவொட்டமல் தடுத்து விடுவதாகவும், வாதியாகிய நான் வாயிதாவுக்கு ஆஜராகவிட்டால் பிராது தள்ளுபட்டுப்போமென்றும் எதிரி பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தது எனக்குத் தெரியவந்தது.

இன்று காலை 4-5 நாழிகைச்சுமாருக்கு நான் பணியாரத்தோப்புப்பக்கம் வரும்போது எதிரி ஷை தோப்பிலிருக்கிற மரத்தண்டை உட்கார்ந்திருந்தான். என்னைக்கண்டு கூப்பிட்டு வெற்றிலை போட்டுப் போகலாமென்று சொன்னுன். நான் உட்கார்ந்து வெற்றிலைபோட்டு முடிந்தவுடன் வெய்யிலாகயிருக்கிறது இந்த மடத்தில் கொஞ்சநேரம் படுத்திருந்து போகலாமேயென்று எதிரி சொன்னுன். நான் கேழ்வைப்பட்ட சங்கதிக்கு இது அனுஸரணையாக யிருந்தபடியால் நான் சம்மதிக்கவில்லை. மடத்தின் கதவு ஒருக்களித்து வைத்திருந்தது நான் சம்மதிக்காமலிருந்த உடன் எதிரி என்னைக்கையைப் பிடித்து

இழுத்து மடத்துக்குள் தள்ளினான். நான் மன்றாடி கூச்சல் சத்தம்போட்டேன். சாக்ஷிகள் வந்துவிட்டார்கள். அப்பால் விசாரித்ததில் 4-வது சாக்ஷியிடம், யேதோ பொய்யான சாக்குச்சொல்லி அன்று சாயந்திரம்வரை ஷை மடத்துக்குள் தானிருக்கவேண்டியதற்காக ஷை மடத்தின் சாவியை எதிரி 4-வது சாக்ஷிக்கு அணா 4-கொடுப்பதாய் பேசி வாங்கிக்கொண்டதாக 4-வது சாக்ஷியால் தெரியவந்தது.

சாக்ஷிகள் வந்திராத விஷயத்தில் எதிரி என்னை அக்கிரமமாக ஷை மடத்தில் அன்று சாயந்திரம்வரை சட்டவிரோதமாக அடைத்துவைத்து இந்தக் கோர்ட்டுக்கு இன்று வாயிதாவுக்கு வரவொட்டாமல் செய்து என் பிராது தள்ளுபட்டுப்போகும்படி செய்திருப்பான்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

4-9-06. (ஒப்பம்) - சீறல் சுப்பக்குடும்பன்.

நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கலாம்—வாறண்டு கேஸ்—படி கட்டவேண்டாம்—ஜாமீன்பேரில் விடலாம்—ராஜியாகக்கூடாது—1-வருஷம் இருவகைக் காவல் 1000 ரூ. அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம்—எந்த மாஜிஸ்திரேட்டும் விசாரிக்கலாம்.

9

ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி வாதியை வேணுமென்றுத் தடுத்தான். (2) தனக்குப் போகிறதற்குப் பாத்தியதையுள்ள இடத்தின் வழியாகப் போவதைத் தடுத்துவிட்டான். (352) வதுபிரிவின்படி ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள், நடவடிக்கைகள் இவைகளைப்பற்றி 2 வது பிராதின் கடாசியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இ. பி. கோட, 341,352-வது பிரிவுகளின்படி

பிராது:—என்னவென்றால் எதிரி என்வயலுக்குக் ஆட்டுக்கிடைவைத்த வகையில் நான் அவனுக்கு ரூபாய்கொடுக்கவேண்டியதிருந்தது. அதை எதிரி இன்று காலை என்னிடம்வந்து கேட்டான். நாளை கொடுப்பதாய்ச் சொன்னதைக்கேளாமல் உடனே ஏழே வைத்துவிட்டு மறுஜோலி பார்க்கவேண்டுமென்று அவமரியாதையான வார்த்தைகளைப் பேசினான்.

மறுபடியும் நாளை தருகிறேனென்று சொல்லிவிட்டு நான் அவசர அலுவலின்பேரில் வெளியே புறப்பட்டேன். எதிரி என்னை வெளியே என்ஜோலியின்பேரில் போகவொட்டாமல் வேணுமென்று எதிரே நின்று வழி மறித்தான். அப்படிச் செய்யக்கூடாதென்று சொன்னதற்காகவும் நான் மீறி அப்புறம் நடந்துபோக புறப்பட்டதற்காகவும் எதிரி என் நெஞ்சில் கைபோட்டு அடித்துத் தள்ளிவிட்டான். சாக்ஷிகள் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள்.

உடனே கிராமமுனிசிபிடம் போய் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால் விசாரித்து நீதி செலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

5-9-06. (ஒப்பம்.)—கீரல் சங்கிலித்தேவன்.

குறிப்பு:—வழி மறித்தது 341-வதுபிரிவுப்படிக்கும், அடித்தது 352-வது பிரிவுப்படிக்கும் குற்றமாகிறது. எதிரியின் செய்கையில் எத்தனைவிதமாயுள்ள



குற்றங்கள் யேர்ப்படுகிறதோ அத்தனை குற்றங்களைப்பற்றியும் பிராதில் சொல்லுவது நலம். இப்படி நடந்த ஒவ்வொரு குற்றத்தையும் பிராதில் சொல்வது எதிரியை பிராதில்ச் சொல்லப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்காகவும் தண்டித்துவிடுகிறதற்காக அல்ல. ஆனால் பிராதில் சொல்லப்பட்ட குற்றச்செய்கைகளில் சிலது ருஜுவாகாவிட்டாலும் ருஜுவான சில குற்றச்செய்கைக்காகவாவது எதிரிக்கு தண்டனை கிடைப்பதற்கு ஆதாரவாக யேர்ப்படும் பொருட்டுத் தான் இப்படிச்செய்வது.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—ஸம்மன்கேஸ்—படிகட்டவேண்டியதில்லை—ஜாமீன்பேரில் விடலாம்—ராஜியாகலாம்—1 மாஸம் வெறுங்காவலாவது அல்லது ரூபா 500 அபராதமாவது அல்லது 2 மாவது விதிக்கலாம்—எந்த மேஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.

10

ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) ஒரு குறிப்பிடப்பட்ட எல்லையைக் கடந்து போகவொட்டாமல் எதிரி வாதியை கட்டுப்படுத்தி வைத்திருந்தான்.

(2) அப்படிக் கட்டுப்படுத்தி வைத்தது சட்டவிரோதமானது.

இ. பி. கோட, 342-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் என் ஜாதிக்காரர்களாகிய எதிரிகளுக்கும் 1-வது சாக்ஷிக்கும் விரோதம். 1-வது சாக்ஷிக்கு நான் தச்சவேலை செய்து வருகிறேன். 1-வது சாக்ஷிக்கு நான் வேலை செய்யக்கூடாதென்று எதிரிகளும் என் ஜாதிக்காரர்களில் மற்றவர்களும் ஜாதிக்கூட்டம் போட்டுத் தீர்மானித்தார்கள். அதற்கு நான் உட்படாமல் 1-வது சாக்ஷிக்கு வேலை வழக்கம்போல் செய்துவந்தேன். அதற்காக இன்று காலை எதிரிகளும் மற்ற என் ஜாதிக்காரர்களும் 1-வது எதிரி வீட்டில் கூட்டம் கூடிக்கொண்டு என்னைக் கூப்பிட்டு விட்டார்கள். நான் போனேன். அவர்கள் தீர்மானப்படி செய்யாததற்காக என்னைக் கட்டிவைக்கும்படி எதிரிகள் பைசல் செய்தார்கள். என்னை எதிரிகள் பிடித்து 1-வது எதிரி வீட்டுத்தூணில் கட்டிவைத்துக்கொண்டு என்னைகட்டி வைத்திருந்த இடத்தைவிட்டு அப்பால் எங்கும் போகக்கூடாமல் செய்துவிட்டார்கள். கட்டிவைத்ததில் என் கைகளில் கயற்பட்ட அடையாளங்களிருக்கின்றன.

சாக்ஷிகள்வந்து கட்டை அவிழ்த்துவிட்டு என்னைப்போகும்படி செய்தார்கள். உடனே கிராம முனிசிபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்துப் நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

6-9-06. (ஒப்பம்) ராமன் ஆசாரி.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படி கட்டவேண்டாம். ஜாமீனில் விடலாம்—ராஜியாகலாம்—1-வருஷம் காவல் ரூ. 1000 வரைஅபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்—ராஜதானி மே. 1-வது அல்லது 2-வது வகுப்பு மேஜிஸ்ட்ரேட்டு இவர்கள் விசாரிக்கலாம்.

குறிப்பு:—மூன்று அல்லது அதற்குமேல்பட்ட நாள்களுக்கு அடைத்து வைத்தால், சங்கதிகண்டு 10-வது பிராதுபோலவே 343-வது பிரிவுப்படியெழுதவேண்டும்.

(2) பத்து அல்லது அதிகநாளைக்கு அடைத்துவைத்தால் 344-வது பிரிவுப்படி 10-வது பிராதுபோலவேயே எழுதவேண்டும்.

(3) அடைக்கப்பட்ட அல்லது அக்கிரமமாகக் காவற்படுத்தி வைக்கப்பட்ட அல்லது கட்டிவைக்கப்பட்டவர்களை விட்டுவிடும்படி கிரமமாய் உத்தரவு பிறந்திருக்கிறதாய் அறிந்திருந்தும் பின்னும் அடைத்திருந்தால் 345-வது பிரிவுப்படி பிராது 10-வது பிராதுபோலவேயே எழுதவேண்டும்.

(4) ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாக அடைத்துவைத்தால் அதற்கு 346-வது பிரிவுப்படி 10-வது பிராதுபோலவேயே பிராது எழுதவேண்டும்.

(5) சொத்தைப்பறிக்கும் பொருட்டாவது சட்டவிரோதமான யாதொரு காரியத்தைச்செய்யும்படி பலவந்தப்படுத்தும்பொருட்டாவது அக்கிரமமாய் அடைத்துவைத்தால் 347-வது பிரிவுப்படி 10-வது பிராதுபோலவேயே பிராது எழுதவேண்டும்.

(6) ஒரு சங்கதியைச்செய்ததாக ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தவாவது அல்லது எடுத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்ட சொத்தை திரும்பக்கொடுத்து விடும்படி கட்டாயப் படுத்தும்படியாவது அக்கிரமமாக அடைத்துவைத்தால் அதற்கு 348-வது பிரிவுப்படி 10-வது பிராதுபோலவேயே பிராது எழுதவேண்டும்.

## 11

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) ஒரு குறிப்பிடப்பட்ட எல்லையைக்கடந்து போகவொட்டாமல் வாதியை எதிரி காவல்படுத்தியிருந்தான் (2) அப்படிச்செய்தது சட்டவிரோதமானது (3) ஒருவருக்குந் தெரியாதபடி ரகசியமாகக் காவல்படுத்தியிருந்தான்.

இ. பி. கோடு, 346-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் எதிரி கும்பகோணம் ராயல் தியெடர் கம்பெனி என்னும் நாடகக்கம்பெனி ஏஜெண்டு.

என்னுடைய மகன் 15-வயதுள்ள பாலசுப்பிரமணிய னென்பவன் நன்றாய் பாடவும், ஹார்மோனியம், பிடில், முதலிய வாத்தியங்கள் வாசிக்கவும் தெரிந்தவன்.

அவனை ஷை எதிரி தன் கம்பெனியில் ஸங்கீதத்துக்காக அப்போதைக்கப்போது கூட்டிப்போவது வழக்கம். எதிரியின் கம்பெனி ரங்கூனுக்குப்போவதற்காக வேண்டும் யேர்ப்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. எதிரி என் மகனையும் கூடக்கூப்பிட்டதில் என் மகன் போக சம்மதிக்கவில்லை. 12-10-1906 இரவு நாடகத்துக்கு என் மகன் போயிருந்தான்; நாடகம் முடிந்து கம்பெனியிலுள்ள எல்லோரும் போனபிறகு ஹார்மோனியப்பெட்டியைக்கொண்டு ஷை கம்பெனியில் நாடக சாமான்களை வைப்பதற்காக யேர்ப்படுத்தப்பட்டிருக்கும் அறையில் வைக்கும்படியாக என்மகன் போனவனை ஷை அறைக்குள்ளிருந்து வெளியே வரவொட்டாமல் எதிரி ஷை அறையின் கதவைச் சாத்திப்பூட்டிக்கொண்டு போய்விட்டான். அன்று இரவு நாடகம் முடிந்து எல்லோரும் வீட்டுக்குப்போய் 2-மணி நேரம் வரை என் மகன் வீட்டுக்கு வந்து சேராதபடியால் நான் அன்றிரவு சுமார் 4-மணிக்கு எதிரியின் ஜாகைக்குப்போய் என்



மகனெங்கே யென்று கேட்டேன். அவன் நாடகம் முடிந்த உடன் வீட்டுக்குப்போய்விட்டதாக எதிரி சொல்லிவிட்டான்.

அப்பால்விசாரித்ததில் எனக்காவது வேறு யாருக்குமாவது தெரியக்கூடாதவிதமாக எதிரி என் மகனை ரகசியமாக மேல்கண்டபடி அடைத்துவைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

13-10-06 ஆகிய இன்று காலையில் எதிரியைப்போய்க் கேட்டதிலும் என் மகனிருக்கிற இடம் தனக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டான்.

எதிரியின்செய்கையும் நடவடிக்கையும் என் மகனிருக்கிற இடம் எனக்காவது ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்காவது தெரியாமலிருக்கும்படி ரகசியமாக மறைந்து வைத்திருப்பதை நன்றாய்க் காட்டுகிறது.

இது சங்கதிகள் பிராதில் கண்ட என் பக்கம் சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால், கோர்ட்டாரவர்கள் கிருபை செய்து உடனே கி. பு. கோடு, 100-வது பிரிவுப்படி சோதனை வாறண்டு பிறப்பிவித்து என் மகனைக்கண்டு பிடித்து கோர்ட்டு முன் ஆஜர்ப்படுத்தும்படிக்கும், எதிரியையும் சாக்ஷிகளையும் வருத்தி விசாரித்து நீதி செலுத்தும்படிக்கும் உத்தரவாகப் பிரார்த்திக்கிறேன்.

13-10-06. (ஒப்பம்) ரங்கசாமி அய்யர்.

### நடவடிக்கை.

பிடிக்கலாம்-வாறண்டு கேஸ்-படிகட்டவேண்டாம்-ஜாமீனில் விடலாம்-ராஜியாகக்கூடாது-இ. பி. கோடு 342-வதுபிரிவுப்படி சட்டவிரோதமாகக் காவல்படுத்தி வைப்பதற்காகக் கொடுக்கப்படும் தண்டனையோடு இந்த 346-வது பிரிவுப்படி 2-வருஷம்வரை காவல் தண்டனையும் கொடுக்கலாம்—ஸெஷ்ஷன் கோர்ட்டார் ராஜதானி மே. 1-வது அல்லது 2-வது வகுப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## 12

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 10-வது பிராதில் ருஜூச்செய்யவேண்டியதாகச் சொல்லப்பட்ட 1-வது 2-வது அம்சங்களும் (3) அப்படி காவல் படுத்திவைக்கப்பட்டது வாதியிடமிருந்து சொத்தை மிரட்டி வாங்கிக்கொள்வதற்காகத்தான்.

இ. பி. கோடு, 347-வது பிரிவுப்படி.

பிராது:—1-வது எதிரி அறப்புக்கோட்டை போலீஸ் ஸ்டேஷன் ஹெட் கான்ஸ்டெபிள். வாதியாகிய என்பேரில் களவு பிராது வந்திருப்பதாகவும் ரூ. 50 கொடுத்தாலொழிய என்பேரில் மேல் நடவடிக்கை நடத்துவதாகவும் 1-வது எதிரி சொன்னார். ரூ. 50 கொடுக்கும் வரை என்னை விடக்கூடாதென்று 2-3-வது எதிரிகளுடைய காவலில் என்னை வைத்து தானும் அடிக்கடி வந்துப் பார்த்துக்கொண்டார்.

இது சங்கதி என் மகனும் என் பக்கம் 1-வது சாக்ஷிக்கும் மற்ற 2, 3, 4 சாக்ஷிகளுக்கும் தெரிந்து 1-வது எதிரியிடம் போய் நலவு சொல்லி என்னை விடுவித்துக்கொண்டுபோனார்கள்.

என்னை மிரட்டி வாங்கும்பொருட்டு எதிரிகள் என்னை சட்டவிரோதமாக 2-மணி நேரம்வரை போலீஸ்டேஷனுக்குப் பின்பக்கத்தில் காவல் படுத்தி வைத்திருந்தார்கள்.

இது இ. பி. கோடு 347-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

இது சங்கதிகள் சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால் கிருபை செய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

14-10-06. (ஒப்பம்) நாராயணசாமி நாயுடு.

நடவடிக்கை, மேலே 11-வது பிராதைப்போல்தான்,

## 13

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 10-வது பிராதில்கண்ட 1, 2 அம்சங்களும் (3) வாதியிடமிருந்து நிர்ப்பந்தித்து கடனை வசூல் செய்யும்பொருட்டு இப்படிச் செய்யப்பட்டது.

இ. பி. கோடு, 348-வது பிரிவுப்படி.

பிராது:—என்னவென்றால் வாதியாகிய நான் 1-வது பிரதிவாதிக்கு ரூ. 100 கொடுக்கவேண்டியதிருக்கிறது அதுபோல கூ. மி. சி. அண்ணாமலை செட்டியாருக்கும் ரூ. 200 கொடுக்கவேண்டியிருப்பதற்கு டிக்கிரியாகியிருக்கிறது. இந்த டிக்கிரித்தொகையைச் செலுத்தும்பொருட்டு என் மகன் நாகூர் மீரா ரெங்கூனிலிருந்து ரூ. 200-க்கு எனக்கு மணியாடர் அனுப்பியிருந்தான்.

இது சமாசாரத்தை 1-வது எதிரி தெரிந்துகொண்டு என்னைக்கூப்பிட்டுவிட்டார். நான் போனதில் தன் கடனைக்கொடுக்கும்படி என்னைக்கேட்டார். இப்போது கொடுக்கமுடியாதென்று சொன்னேன். அதற்காக 1-வது எதிரி 2, 3-வது எதிரிகளைச்சேர்த்துக்கொண்டு 1-வது எதிரியின் கடன் ரூ. 100 யும் கொடுத்தாலொழிய விடுகிறதில்லை யென்று 1-வது எதிரியின் வீட்டிற்குள்ளிருக்கும்படி என்னைத்தள்ளி 1, 2, 3-வது எதிரிகள் தலைவாசலிலிருந்து நான் வெளியில் போய்விடாதபடி மறித்துக்கொண்டார்கள். அப்பால் சாக்ஷிகள் தலைசொல்லி என்னை விடுவித்தார்கள்.

இது சங்கதியை உடனே ஷை கிராமம் கிராமமுனிசீபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால், கிருபை செய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

15-10-06 கீரல் முகமது ராவுத்தர்.

### நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டு கேஸ்—படி கட்டவேண்டாம்—ஜாமீனில் விடலாம்—ராஜியாகக்கூடாது—3-வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷன் கோர்ட்டு, ராஜதானி மே. அல்லது 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரிக்கலாம்.



## மனிதர்களைத் திருட்டுத்தனமாய்க் கொண்டுபோதல், அக்கிரமமாய் அழைத்துக்கொண்டு போகுதல், அடிமைத்தனம் கட்டாயமான வேலை இவைகளைக்குறித்து.

மனிதர்களைத் திருட்டுத்தனமாய்க் கொண்டுபோகுதல் இருவகைப்படும். அதாவது பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து அப்படிக்கொண்டுபோகுதல் (2) நியாயமான ஸம்ரக்ஷணையிலிருந்து அப்படிக்கொண்டு போகுதலுமாம். (இ. பி. கோடு, பிரிவு-359.)

யாவனொருவனை அவனுடையவாவது, அல்லது அவனுக்காக ஸம்மதிப்பதற்கு சட்டப்படி அதிகாரமுள்ள வேறொருவருடையவாவது ஸம்மதமும் அனுமதியுமில்லாமல், பிரிட்டிஷ் இண்டியாவின் எல்லைக்கப்பால் கொண்டுபோனால் அப்படிக்கொண்டுபோகிறவன் ஷை யானை பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து திருட்டுத்தனமாய்க் கொண்டுபோகிறவனென்று சொல்லப்படுவான். (இ. பி. கோடு, பிரிவு-360.)

பதினாலு வயஸாகாத ஆண்பிள்ளையையாவது, பதினாறுவயஸாகாத பெண்பிள்ளையையாவது, புத்திமாறாட்டமுள்ள ஆணையாவது பெண்ணையாவது, அப்படிப்பட்டவருடைய நியாயமானஸம்ரக்ஷணைகர்த்தரின் ஸம்மதியில்லாமல் அவருடைய வசத்திலிருந்து எவனாவது கொண்டுபோனாலும், ஆசைகாட்டிவசியப்படுத்திக்கொண்டாலும் அப்படிப்பட்டவன் நியாயமான ஸம்ரக்ஷணை கர்த்தரின் வசத்திலிருந்து திருட்டுத்தனமாய் கொண்டுபோனவனென்று சொல்லப்படுவான். (இ. பி. கோடு, பிரிவு-361.)

விவரணம்:—இந்தப்பிரிவில் "நியாயமான ஸம்ரக்ஷணை கர்த்தர்" என்னும் வார்த்தைகள் யாருடையவசம் அல்லது விசாரணையில் அப்படிப்பட்டவரையாவது புத்தி மாறாட்டக்காரரையாவது சட்டப்படி ஒப்புவித்திருக்கிறதோ அவரென்று அர்த்தம்.

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

#### பிரிட்டிஷ் இந்தியாவைவிட்டுக் கடத்திக்கொண்டு போகப்பட்ட கேசுகளில்.

(1) கடத்திக்கொண்டு போகுங் காலத்தில் அவன் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்தான்.

(2) எதிரி அவனை பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லைக்கு வெளியில் கொண்டுபோய்விட்டான்.

(3) அப்படிக் கடத்திக்கொண்டுபோனது, கடத்திக்கொண்டுபோகப்பட்டவனுடையவாவது, அல்லது அவனுடைய பக்ஷத்தில் சம்மதிக்கிறதற்கு அதிகாரமுள்ளவருடையவாவது சம்மதமில்லாமல் கடத்திக்கொண்டு போகப்பட்டான்.

#### ஸம்ரக்ஷக கர்த்தாக்கள் வசத்திலிருந்து கடத்திக்கொண்டு போகப்பட்ட கேசுகளில்.

(1) கடத்திக்கொண்டு போகப்பட்ட காலத்தில் ஆண்பிள்ளையாகயிருந்தால் 14-வயதுக்குட்பட்டவும் பெண்பிள்ளையாகயிருந்தால் 16-வயதுக்குட்பட்ட மைனரென்றும், அல்லது அந்த நபர் புத்தி சுவாதீனமில்லாமலிருந்ததாகவும்.

(2) கடத்திக்கொண்டு போகப்பட்ட காலத்தில் அந்தமைனர் அல்லது புத்தி சுவாதீனத் தப்பான நபரை ஒரு ஸம்ரக்ஷணைக் கர்த்தாவின் வசம் ஒப்பிக்கப்பட்டிருந்ததையும் ருஜூச்செய்யவேண்டும்.

## 14

இ. பி. கோடு, 363-வது பிரிவுப்படி.

பிராது:-என்னவென்றால் எதிரி எனக்குப்பெண் கொடுத்தமாமனார், அவருடையமகள் ஸாவித்திரி அம்மாளுக்கு இப்போது 15-வயது ஆகிறது. அவள் என் வீட்டுடன் சென்ற 3-வருஷகாலமாக என் ஸம்ரக்ஷணையிலிருந்து வருகிறாள். அவளை என் மாமனாராகிய எதிரி தன் ஊருக்குக் கூட்டிப்போகவேண்டுமென்று என்னிடம் பலதபாக்கேட்டு முயற்சிசெய்தும் எனக்கு அவர் வீட்டுக்குவிட மனமில்லை. அவர் வீட்டுக்குவிட மனமில்லாமலிருப்பதற்கு எனக்கு அநேக முக்கியமான காரணங்களுண்டு.

அப்படியிருக்க நேற்று நான் ஊரிலில்லாத ஸமயத்தில் எதிரி என் வீட்டுக்குவந்து எனக்குத்தெரியாமலும், என் அனுமதியாவது என் சம்மதமாவது இல்லாமலும் என் சம்ரக்ஷணையிலிருந்த என் சம்ஸாரம் 15-வயதுள்ள ஷை ஸாவித்திரி அம்மாளை என் வீட்டைவிட்டுக் கடத்தி தன் ஊருக்குப் கூட்டிக்கொண்டுபோய் விட்டார். 1-முதல் 2-வரை சாக்ஷிகள் தடுத்துச்சொல்லியும் எதிரி கேழ்க்காமல் கூட்டிக்கொண்டுபோய்விட்டார். 4, 5, சாக்ஷிகளுக்கு என் சம்ஸாரம் வாதி வீட்டிலிப்போது இருப்பது தெரியும்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

9-12-06. (ஒப்பம்) கிருஷ்ணையர்.

## 15

இ. பி. கோடு, 363-வது பிரிவுப்படி.

பிராது:-என்னவென்றால் எதிரி நாடகக்கம்பெனிக்கு ஏஜெண்டு. அவர் சிறுப்பய்யன்கள் சுறு சுறுப்பாகவும் பார்வைக்கு அழகாயுமுள்ள பையன்களை அவர்களுக்கு வேண்டும் தின் பண்டங்களையும் அவர்கள் விரும்புகிற மற்ற சாமான்களையும் கொடுத்து எப்போதும் அவர்களை, தான்சொல்லுவதைக்கேழ்க்கும்படியான நிலைமையிலேயே வைத்துவருவது வழக்கமாக யிருந்துகொண்டிருக்கிறது.

இப்படியிருக்க என் பையன் 12-வயதுள்ள சுந்தரத்தை எதிரி நேற்று சாயங்காலம் கூப்பிட்டுக்கொண்டு திண்டுக்கல்லுக்கு அவர் நாடகக் கம்பெனி இப்போதிருக்குமிடத்துக்கு கொண்டுபோவதற்காக, டிக்கட்டு வாங்கி ரெயிலிலேறிவிட்டார்கள். நான் பையனைக்காணாமல் ரெயில்வே ஸ்டேஷனில் போய்த் தேடியதில் ரெயில்வண்டியில் எதிரி பக்கத்தில் என் பையன் சுந்தரம் உட்கார்ந்துகொண்டிருப்பதைப்பார்த்தேன். அதற்குள் வண்டி புறப்பட்டுப்போய்விட்டது. உடனே அடுத்த ஸ்டேஷனுக்கு தந்திகொடுத்து என் பையனையும் எதிரியையும் கீழே இறக்கிவிடும்படி செய்தேன்.

என் பையன் சுந்தரம் 12 வயதுள்ள மைனரென்றும் என் ஸம்ரக்ஷணையிலிருந்துவருகிறனென்றும் தெரிந்திருந்தும் எதிரி என்னுடைய அனுமதியாவது சம்மதமாவதில்லாமலும் எனக்குத் தெரியாமலும் இப்படிச்செய்திருக்கிறார். சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

10-12-06. (ஒப்பம்.) முத்துப்பிள்ளை.



நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—7 வருஷம் காவல் தண்டனையும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷன் கோர்ட்டார், ராஜதானி மேஜி. அல்லது 1-வது வகுப்பு மே. விசாரிக்கலாம்.

## 16

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரிகள் கடத்திக்கொண்டு போனார்கள்.

(2) தானிருந்த இடத்தைவிட்டுப்போகும்படி எதிரிகள் ஏமாற்றிக்கடத்திக்கொண்டு போனார்கள்.

(3) அந்த நபரைக் கொலைசெய்யும்பொருட்டு அல்லது அந்த நபருக்கு அபாயம் சம்பவிக்கும்படி செய்யும்படி கடத்திக்கொண்டு போனார்கள்.

இ. பி. கோடு, 364-வது பிரிவுப்படி.

பிராது:-என்னவென்றால் 1-வது எதிரிக்கும் எனக்கும் நெடுநாளாய் விரோதம் என்பேரிலும் என்மகன்பேரிலும் அநேகப் பொய்யான கேசுகள் கட்டுபாடுகள் செய்து எங்களைக் கெடுத்துவிடப்பார்த்தும் நடக்கவில்லை.

இப்படியிருக்க என்மகன் 1[illegible]-வயதுள்ள நாணுவய்யன் நேற்று இரவு சித்திராபவுர்ணமைத்திருவிழா சுவாமி கும்பிடத்தனியாக போயிருக்கும்போது எதிரிகளில் 2, 3, எதிரிகள் எங்கள்வீட்டில் திருடர்கள் பிரவேசித்து விட்டதாகவும், திருடர்கள் அகப்பட்டுக்கொண்டதாகவும் சொல்லி ஷை நாணுவை அந்த இடத்திலிருந்து தனியே எங்கள் வீட்டுக்குவரும்படி ஏமாற்றி ஷை யானுக்குத்தாங்களும் துணையாக வருவதாகச்சொல்லி 2, 3, எதிரிகள் ஷை பய்யனை கூப்பிட்டுக்கொண்டு கூடவே வந்தார்கள். இதற்கு மத்தியில் 1-வது எதிரி 2, 3, எதிரிகளைக்கொண்டு என் பய்யனை அம்பட்டன் தோப்புக்கு கூப்பிட்டு வரச்சொன்னதை இருட்டிலிருந்து கேட்டுக்கொண்டிருந்ததாகச சொன்ன என்பக்கம் 1, 2, சாக்ஷிகளால் தெரிந்து நான் ஓடினதில், 1-வது எதிரியும் பின்னும் இனந்தெரியாத சிலரும் அம்பட்டன்தோப்பிலிருந்தார்கள். அதைக் கவனியாததுபோல இருட்டில் நானும் 3, 4, சாக்ஷிகளும் ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்ததில் 2-நிமிஷத்துக்குள் 2, 3, எதிரிகள் என் பய்யன்சகிதம் பாதைவழி போய்க்கொண்டிருக்கையில, 2,3, எதிரிகள், நில்லு இந்தத்தோப்பில் ஒரு சாமான் வைத்திருக்கிறது எடுத்துக்கொண்டு போவோமென்று சொல்லி பையனையும் தோப்புக்கு கூட்டிகொண்டுபோனார்கள். 1-வது எதிரி, பயல் வந்துவிட்டான் சோலியை முடித்துவிடுகவென்று சொன்னான். அதற்குள் நானும் 3, 4, சாக்ஷிகளாகிய போலீஸ் கான்ஸ்டேபிள்களும் போய் என் பையனுக்கு முதலாவது ஆபத்து நேரிடாமல் காப்பாற்றிவிட்டு கைப்பத்திக்கொண்டு அப்பால் எதிரிகளையும் மற்றவர்களையும் பிடிக்குமுன் அவர்கள் ஓடிப்போய்விட்டார்கள். 1, 2, 3, எதிரிகளை மட்டும் இனம் தெரிந்தது. மற்றவர்களை இருட்டில் இனம் தெரியவில்லை.

ஆகையால் 114, 364-வது பிரிவுப்படி குற்றம்செய்த 1-வது எதிரியையும் 364-வது பிரிவுப்படி குற்றம்செய்த 2, 3, எதிரிகளையும், சாக்ஷிகளையும் தருவித்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

11-12-06. (ஒப்பம்.) பரசுராமய்யர்.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படிகட்ட வேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—10-வருஷம்காவலும் அபராதமும் விதிக்கலாம். ஸெஷ்ஷன் கோர்ட்டார் விசாரிக்கவேண்டியது.

## 17

### ருஜுசெய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி கடத்திக்கொண்டுபோகுறன் (2) கடத்திக்கொண்டு போகப்பட்ட நபரை ரகசியமான காவலில் வைக்கவேணுமென்று, அல்லது யாருக்குந்தெரியாமல் அடைத்துவைக்க வேணுமென்று எண்ணி அப்படிக்கடத்திக்கொண்டுபோகுறன்.

இ. பி. கோ டு, 365-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் பரமக்குடி நயினர் ஆசாரிமகன் வேலாசாரி மகளை 1-வது எதிரிக்கு கல்லியாணம் செய்வதாகத் தீர்மானித்திருந்தது. முகூர்த்தமும் வைத்திருந்தது. அப்பால் ஷை பெண்ணை எனக்குக் கல்லியாணம்செய்து அதே முகூர்த்தத்தில் கொடுத்துவிடுவதாயும், 1-வது எதிரிக்குக் கொடுக்கமாட்டேனென்றும் ஷை வேலாசாரி சொல்லிவிட்டார். அப்பால் 1-வது எதிரியும் அவன் பந்துக்களான 2, 3, எதிரிகளும் என்னிடம் வந்து ஷை பெண்ணை நீ கலியாணம் செய்துகொள்ளக்கூடாது. செய்து கொண்டால் பெரியகலகமும் விரோதமும் சம்பவிக்குமென்று சொன்னார்கள். நான் அதற்கு உடன்படவில்லை.

என் வீட்டில் எனக்கு உதவிக்கு யாருமில்லாதபடியால் கும்பகோணம் போய் ஜவுளி ஷை கலியாணத்துக்காக வாங்கிவரப்போனேன். போய்விட்டு திரும்புகையில் 4-வது எதிரி திருச்சிருப்பள்ளி ஜங்ஷென் ரெயில்வே ஸ்டேஷனில் நின்றவனைச் சந்தித்தேன். அவன் என்னைக்கண்டு எனக்குப் பெண் கொடுக்கப்போகிற வேலாசாரி கலியாணப்பெண்ணுக்கு சில நகைகள் திருச்சிருப்பள்ளியில் வாங்கவந்திருப்பதாகவும், வந்தவேலை இன்று இராத்திரிவரை செல்லுமென்றும், என்னையும் திருச்சி ஜங்ஷனிலிறங்கி அந்த நகைகளை கூடயிருந்து வாங்கிக்கொண்டு போகும்படியாயும் சொல்லி இறக்கிக் கூட்டிவரச்சொன்னதாயும் சொன்னான். 4-வது எதிரியை முன்தெரிந்திருந்தாலும் 1-முதல் 3-வரை எதிரிகளுக்கு உடந்தையாயிருப்பது எனக்குத்தெரியாமல் 4-வது எதிரி சொல்லை நம்பி ரெயிலைவிட்டிறங்கி 4-வது எதிரியின் கூடவேபோனேன். என்பக்கம் 1-வது சாக்ஷியின் வண்டியில் போனோம். திருச்சிருப்பள்ளி ஆண்டார் தெருவில் ஷை வேலாசாரி ஒரு வீட்டிலிருப்பதாகச் சொல்லி என்னைக்கூட்டிக்கொண்டு போய் ஒரு வீட்டிலிறக்கிவிட்டான். ஷை வேலாசாரியை அங்கே காணவில்லை. வெளியே போயிருப்பதாயும் வருவானென்றும் சொன்னான். நம்பி காத்திருந்ததில் ஷை வீட்டுக்குள் தூங்கிவிட்டேன். பொழுதடைந்து 4-5-நாழிகைக்குப் பிறகு 1, 2, 3, எதிரிகள் வந்து கலியாணத்துக்குச் சேலைவாங்கியாச்சுதாவென்று கேட்டார்கள். நான் பதில் சொல்லவில்லை. அவர்களை அங்கே கண்டவுடன் எனக்கு திடுக்கிட்டு மதிமயங்கிப் போய்விட்டது. அப்பால் எதிரிகள் என்னை அந்த வீட்டில் விட்டு 10-நாளைக்கு வெளியே விடக்கூடாதென்றும் ரகசியமாய் அந்தவீட்டிலேயே அடைத்து வைத்து வைக்கும்படிக்கும் நான் பேசும்பக்ஷத்தில் என்னைக் கொலைசெய்து போடும்படிக்கும் அங்கிருந்த இனம் தெரியும் பேர் தெரியாத 3-பேர்களிடம் சொல்லிவிட்டு போய்விட்டார்கள்.



அப்பால் நான் பேசினாலுமே கூப்பிட்டாலுமே உயிர் போய்விடுமென்று பயந்து பேசாமலிருந்துவிட்டேன். அதற்கு மூன்றாம் நாள் கலியாணம். கலியாண முகூர்த்தம் கழிந்த நாலாம் நாள் என்னை வெளியே விட்டார்கள். இது சங்கதிகள் சாக்ஷிகளுக்குத்தெரியும். சாக்ஷிகள் தப்புவிசாரித்து வந்து என்னை கூட்டிப்போனார்கள்.

ஆகையால் விசாரித்து நீதி செலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

29-12-06. (ஒப்பம்) முத்துசுவாமி ஆசாரி.

நடவடிக்கை.

பிடிக்கலாம் — வாறண்டுகேஸ் — படிகட்டவேண்டாம் — ஜாமீனில் விடக்கூடாது — ராஜியாகக்கூடாது — 7-வருஷம் காவல்தண்டனையும் அபராதமும் விதிக்கலாம் — ஸெஷ்ஷன் கோர்ட்டு ராஜதானி மாஜிஸ்ட்ரேட் அல்லது 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் விசாரிக்கலாம்.

## 18

### ருஜுசெய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி கடத்திக்கொண்டு போனுன் (2) கடத்திக்கொண்டு போகப்பட்ட நபர் பெண்பிள்ளை (3) அந்தப்பெண்பிள்ளையினுடைய மனதுக்கு விரோதமாக அவளைக் கலியாணஞ் செய்துகொள்ள, அல்லது அவளுடன் தேகசம்பந்தம்பட அவளைக் கட்டாயஞ் செய்யவேண்டுமென்றஎண்ணத்தோடு கடத்திக்கொண்டு போனுன்.

இ. பி. டு, 3 பிரிவு

பிராது:—என் ஸம்ஸாரத்துக்கு பாண்டிக்கண்மாய் தாய்வீடு. என் ஸம்ஸாரம் கர்ப்பமாயிருக்கிறவள் பிரஸவத்துக்காக அவள் தாய்வீட்டுக்குப்போயிருந்தாள். அவளைப் பார்த்துவரும்படி நான் பாண்டிக்கண்மாய்க்குப் போயிருந்தேன். என் வீட்டில் 15-வயதுள்ள என்மகள் மீனாக்ஷியைத்தனிமையாக வைத்து விட்டுப் முந்தாநாள் போனேன்.

இப்படியிருக்கையில் நேற்றுக்காலையில் பாண்டிக்கண்மாய் சிவலிங்கத்தேவன் பெண்சாதி ராக்கம்மாள் என் வீட்டில் என் மகளண்டைபோய் என் ஸம்ஸாரம் பாண்டிக்கண்மாயில் பிரஸவித்து விட்டதாகவும், அதற்காக என் மகளை நான் வகையறாக் கூட்டிவரச்சொன்னதாகவும் செலவுக்கு ரூபாய் கொடுத்திருப்பதாகவும், மருந்துச் சரக்குகள் கடையில் வாங்கி வரவேண்டியதற்காக ரூ. 2 கொடுத்திருப்பதாகவும் அதற்கு சுக்கு திப்பிலி வகையறா மருந்துகள் வாங்கியிருப்பதாகச்சொல்லி மருந்துச் சாமான்களையுங் காட்டினாள். இதுகளை நம்பி என்மகள் மீனாக்ஷியம்மை வீட்டை பூட்டிவிட்டு ஷை ராக்கிகூடப் புறப்பட்டாள். வண்டி கொண்டுவந்திருப்பதாகச் சொல்லி ஒரு வண்டியிலேறும்படி ஷை ராக்கி சொன்னபடி என் மகள் ராக்கி காட்டின வண்டியிலேறினாள். கொஞ்சதூரம் போனவுடன் 2, 3, 4, எதிரிகள் ஷை வண்டியின்கூடவே பின்தொடர்ந்து வந்தார்கள். கூடவரும்போதே 1-வது எதிரிக்கு வாழ்க்கைப்பட்டால் ரூ. 1000-க்குநகைகள் போடுவதாகச்சொல்லி நகைகளைக்காட்டி என் மகள் அவனுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு என் மகள் சம்மதிக்கவில்லை. அப்பால் தேகசம்பந்தப்படவாவது வேண்டுமென்று கேட்டார்கள். இந்தச் சமயத்தில் 1-வது

எதிரி வண்டி யடித்துக்கொண்டு வந்தான். வண்டியைவிட்டுக் கீழே இறங்கிக் கொஞ்சம் பின்னால் வந்துகொண்டிருந்தான். இப்படி யிருக்கும்போது, சில போலீசார்கள் அதாவது 3, 4, 5, சாக்ஷிகள் வந்தார்கள். அவர்கள் வருவதைக் கண்டு எதிரிகள் எங்கேயோ நழுவிறைப் போல் போய்விட்டார்கள்.

இது சங்கதிகள் என் மகளாலும் 3, 4, 5, சாக்ஷிகளாலும் எனக்குத் தெரியவந்திருக்கிறது. ஆஜர் வண்டி, மாடுகள் இவைகள் 1-வது எதிரியினுடையதென்பது விசாரணையில் வெளியாகும்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

30-3-06. (ஒப்பம்) துரைசாமி முதலியார்.

நடவடிக்கை.

மேல்கண்ட 16-வது பிராதின் நடபடிக்கைபோலத்தான்.

## 19

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி கடத்திக்கொண்டு போனான். (2) கொடுந்துன்பம் உண்டு பண்ணும் பொருட்டாவது அடிமைத்தொழிலுக்குட்படுத்தும் பொருட்டாவது அல்லது இயர்க்கைக்கு விரோதமான புணர்ச்சி செய்யும்படிக்காவது கடத்திக்கொண்டு போனான்.

இ. பி. கோ டு, 367-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் தேவக்கோட்டை அருணாசலம்செட்டியார்வீட்டில் 1-வது எதிரிமானேஜர்வேலைபார்த்துவந்தார். ஷை வேலையிலிருந்து ஷை செட்டியார் 1-வது எதிரியைத்தள்ளிவிடுவதாய்ச் சொல்லிஷை வது 1-வது எதிரியிருக்கும்போதே அவர் கூடயிருந்துவேண்டும் தகவல்களைத்தெரிந்து வைத்துக்கொள்ளும்படி என்னைஷை செட்டியார் நியமித்தார். அப்போது 1-வது எதிரி என்னைப்பார்த்து நீ வேலைக்கு யிருக்க ஸம்மதியாத விஷயத்தில் வேறு ஸரியான ஆள் கிடைக்கமாட்டார்கள்; நீ வராவிட்டால் இப்போது செட்டியார் என்னை விலக்கிவிடமாட்டார். ஆகையால், நீ வேலைபார்க்க ஒப்புக்கொள்ளக்கூடாதென்றுசொன்னார். வேலைபார்த்தால் அநேக தீங்குகள் நேரிடுமென்று 1-வது எதிரி என்னிடம் சொன்னார். நான் அதற்கும்கேழ்க்கவில்லை. இந்தசங்கதிகளை வெளியில் சொல்லுவது யுக்தமாகத் தோன்றாதபடியால் நான் ஒருவரிடமும் சொல்லவில்லை.

இப்படிக்கிருக்கையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 2, 3 எதிரிகள் என்னிடம் வந்துசெட்டியார் தோட்டத்திலிருப்பதாகவும் என்னைகூட்டிவரச் சொன்னதாகவும் சொன்னார்கள். நான் அவர்கள் சொன்னதை நம்பி அவர்கள் கூடப்போனேன். தோட்டத்திற்குப்போகும் வழியில் 1-வது எதிரி நின்றுகொண்டிருந்தான். அவன், நான் போன உடன் ஒரு ஜாடை சொல்லி இந்தப் பயலுடைய வேலைக்குப்போகிற காலையும் எழுதுகிற கையையும் வெட்டுங்களடாவென்று சொன்னான். அப்போது ஒரு கல்லில் அருவாள்களைத் தீட்டுகிற சப்தமும் கேட்டது. அதற்குள் 3, 4, 5 சாக்ஷிகள் வந்து விட்டார்கள். அருவாள் ஸஹிதம் 4-வது எதிரியைப் பிடித்துக்கொண்டார்கள்.



2, 3 எதிரிகள் என்னை வீட்டில்வந்து கூட்டிக்கொண்டு போனது 1, 2 சாக்ஷிகளுக்குத் தெரியும்.

இது சங்கதிகளை உடனே கிராமமுனிசீபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால் விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

27-12-06. (ஒப்பம்) சுப்பய்யா பிள்ளை.

நடவடிக்கை.

மேலே 16-வது பிராதுக்குச் சொல்லியபடி தான்.

## 20

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) பிரஸ்தாபநபரைக் கடத்திக்கொண்டு போகப்பட்டது. (2) அந்த நபர் கடத்திக்கொண்டு போகப்பட்டப்பட்ட நபரென்று எதிரிக்குத்தெரியும். (3) அப்படித்தெரிந்திருந்தும் அந்த நபரை மறைத்து வைத்திருந்தான் (4) எதற்காக அல்லது என்ன எண்ணத்தின்பேரில் எதிரி அந்த நபரை ஒளித்து வைத்திருந்தான்.

இ. பி. கோ டு, 368-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் என் மகள் சிவகாமியை மூன்று நாளாகக்காணவில்லை. தேடியதிலும் தட்டுப்படவில்லை. விசாரித்ததில் 1,2 சாக்ஷிகளால் 2 தினங்களுக்கு முன் திண்டுக்கல் ராமநாயக்கன் மகன் லிங்கசாமிநாய்க்கன் என் மகளைக்கடத்திக்கொண்டுபோய் தன் வீட்டில் வைத்திருந்ததாகத் தெரியவந்தது. அவன் எதிரியிடம் என் மகளை ஒப்புவித்து அவளை பந்தோபஸ்தாக வைத்திருந்து தன்னிடம் ஒப்புவிக்கும்படி விட்டிருப்பதாக 3, 4 சாக்ஷிகளால் தெரியவந்தது.

எதிரியிடம் போய் என் மகளைப்பற்றிக் கேட்டதில் தனக்கு யாதொன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டார். அவர் வீட்டிற்குள் போய் பார்த்ததில் என் மகள் தட்டுப்படவில்லை. அப்பால் விசாரணையில் எதிரியுடைய தோட்டத்திலிருக்கிற வீட்டில் வெளிக்குத் தெரியாமல் ரகஸியமாயும் மறைவாகவும் என் மகளை மறைத்துவைத்திருப்பதாகத் தெரியவந்தது. அப்பால் 3,4, 5 சாக்ஷிகள் ஸஹிதம் போய் எதிரி தோட்டத்து வீட்டைப் பார்த்ததில் மூடியிருந்தது. எதிரியைக் கூப்பிட்டு ஷை வீட்டின் திறவுகோலை கேட்டதில் கைதவறிப் போய்விட்டதாகச் சொல்லிவிட்டான். அந்த வீடு வெத்துவீடென்றும் அந்த வீட்டில் ஆள்புழக்கமே கிடையாதென்றும் என் மகளைப் பத்தின சங்கதியே தனக்கு யாதொன்றும் தெரியாதென்றும் சொல்லிவிட்டான்.

அப்பால் 6, 7 சாக்ஷிகளாகிய கி. மு. ஹெட் கான்ஸ்டேபிள் இவர்களைக் கூட்டிவரச்செய்து வேறு திறவுகோலைக்கொண்டு வந்து திறந்து பார்த்ததில் என் மகளை அந்த வீட்டுக்குள் ஒரு அறையில் போட்டு பூட்டி வைத்திருந்தது தெரியவந்தது.

எதிரிக்கு, மறைத்து அடைத்து வைத்திருந்தபெண் என் மகளென்றும் அவளை என்னிடமிருந்து ஷை லிங்கசாமி நாயக்கன் கடத்திவந்திருக்கிறது

தெரிந்திருந்தும் மனதாரவேணுமென்று இப்படி என் மகளை மறைத்து வைத்துக்கொண்டு என்மகளிருக்கிற இடம் தனக்குத் தெரியாதென்றும் சொல்லியிருக்கிறான்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

27-12-06. (கீறல்) மாயாண்டித்தேவன்.

நடவடிக்கை.

மேலே 16-வது பிராதுக்குச் சொல்லியபடிதான்.

## 21

ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி கடத்திக்கொண்டு போனான்.

(2) கடத்திக்கொண்டு போகப்பட்டநம்பர் 10-வயதுக்குட்பட்ட குழந்தை.

(3) அந்தக் குழந்தையின் பேரிலிருந்த நகையல்லது மற்ற அசையும் பொருளை அயோக்கியமாய் எடுத்துக்கொள்ளுவதற்காக அப்படிக் கடத்திக் கொண்டுபோனான்.

இ. பி. கோ டு, 369-வது பிரிவுப்படி

பிராது:—இன்று காலை என் ஆண் குழந்தை 4-வயதுள்ளது ரெங்கசாமி அடியில்கண்ட நகைகள் போட்டுக்கொண்டு தெருவில் விளையாடிக் கொண்டிருந்தது. அப்பால் பார்த்ததில் காணவில்லை. விசாரித்ததில் எதிரி தூக்கிக்கொண்டுபோனதை பார்த்ததாக 1-வது சாக்ஷியால் தெரிந்தது. கடையில் குழந்தைக்கு எதிரி வாழைப்பழம் வாங்கிக்கொடுக்கப் பார்த்ததாக 2-வது சாக்ஷியால் தெரிந்தது. உடனே ஓடிப்போய் தப்புத்தலக்கிக்கொண்டே போனதில் நதிக்கரை ஓரம் குழந்தை நின்றது. நகைகளைக் காணவில்லை. எங்கே வந்தாயென்று கேட்டதில் குழைந்தை அழுதுகொண்டு மேல்பக்கமாக கையை காட்டினது. உடனே 3, 4 சாக்ஷிகளும் பின்னும் சிலரும் ஓடிப் போய்ப் பார்த்ததில் எதிரி ஒரு பள்ளத்தில் பதுங்கிக்கொண்டிருந்தான். அவனைப்பிடித்தார்கள். அவன் குழந்தைக்குப்போட்டிருந்த வெள்ளி அரைஞாண் ரூ. 10 பெறுமானது 1, குழந்தை கையில் போட்டிருந்த ரூ. 30 பெறுமான தங்கக்காப்புகள் 2 ஆக இவ்வளவையும் எதிரி கழட்டிக்கொண்டவைகள் அவன் வசமிருந்ததாக குழந்தையால் தெரியவந்தது.

எதிரியை திருடின நகைகள் சகிதம் பிடித்து ஆஜர் செய்திருக்கிறேன்.

ஆகையால் விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

29-11-06. (ஒப்பம்) முத்துப் போகண்டன்.

நடவடிக்கை.

17-வது பிராதின் நடவடிக்கைகள்தான் இதற்கும்.



## 22

ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) 2-வது எதிரி அடிமையாக ஒருவனைவிலைக்கி வாங்கினான். 1-வது எதிரி அடிமையாக ஒருவனை விலைக்கு விற்றான்.

(2) அடிமைத்தொழில் செய்வதற்காக விற்கப்பட்டவனை அவன் மனதுக்கு விரோதமாக விற்கப்பட்டது.

பிராது:—என்னவென்றால் சென்ற ஞாயிற்றுக்கிழமை சுந்தரம் என்ற 13 வயதுள்ள பையனை, 1-வது எதிரி 2-வது எதிரிக்கு ரூ. 25-க்கு கிரயதஸ்தாவேஜு மூலமாக அடிமையாகவிற்றான். ஷை சுந்தரத்தை தான் சுப்பபிள்ளையென்ற ஒருவரிடமிருந்து விலைக்கு அடிமைத்தொழில் செய்வதற்காக வாங்கியிருப்பதாகவும், ஷை சுந்தரத்தை 1-வது எதிரி 2-வது எதிரிக்கு ரூ. 25-க்குவிற்றுவிட்டதாகவும் அந்த சுந்தரத்தின் சம்மந்தமாய் தனக்குயிருக்கும் சகல பாத்தியதைகளையும் 1-வது எதிரி 2-வது எதிரிக்கு கொடுத்துவிட்டதாகவும் கண்டு தஸ்தாவேஜும் 1-வது எதிரி எழுதிக்கொடுத்திருக்கிறான். இ. பி. கோ டு, 370-வது பிரிவுப்படி

2-வது எதிரி வீட்டைச் சோதனைபோட்டால் ஷை சுந்தரம் என்ற பையனும் அவன் சம்மந்தமாய் 1-வது எதிரி 2-வது எதிரிக்கு எழுதிக்கொடுத்திருக்கிற தஸ்தாவேஜும் அகப்படும்.

இந்த சுந்தரத்தை 1-வது எதிரி 2-வது எதிரிக்கு அடிமைத்தொழில் செய்ய விலைக்கு விற்றதும், 2-வது எதிரி ஷை சுந்தரத்தை அடிமைத்தொழில் செய்வதற்காக 1-வது எதிரியிடமிருந்து விலைக்கு வாங்கினதும் இ. பி. கோடு 370-வது பிரிவுப்படி குற்றமாகிறது. இது சங்கதிகள் பூராவும் சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

20-2-06. (ஒப்பம்) திம்மக்கவுண்டன்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது—வாறண்டுகேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீன்பேரில் விடலாம்—ராஜியாகக்கூடாது—7-வருஷம்வரைகாவலும், அபராதமும் விதிக்கலாம்—ஸெஷன்கோர்ட்டார் விசாரிக்கவேண்டியது.

## 23

ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) விற்கப்படுகிற காலத்தில் விற்கப்பட்ட மைனர் 16-வயதுக்குள்பட்டவளாக யிருந்ததையும்,

(2) எதிரி அந்த மைனரை விலைக்கு விற்றாள், அல்லது வாடகைக்குக் கொடுத்தாள் அல்லது வேறு வகையாகக் கொடுத்துவிட்டாளென்றும்,

(3) விற்கப்படப்பட்ட மைனர் வியபசாரித்தனஞ் செய்வதற்கு உபயோகப்படுத்தப் படுவாளென்று தெரிந்து விற்றதாகவும் ருஜுச்செய்யவேண்டும்.

பிராது:—என்னவென்றால் நேற்றுமாலை எதிரி தன் மகள் முத்துலக்ஷிமி என்பவள் 15-வயதுள்ளவளை இந்த ஊர் தாசி மாணிக்க மென்பவளுக்கு விலை பேசிக்கொண்டிருந்தாள். இந்தப்பெண்ணுக்கு விலை ஜாஸ்தியாக கேழ்க்கிறு யென்று மாணிக்கம் சொன்னதற்கு எதிரி இந்த என்மகளைக்கொண்டு எத்தனை இ. பி. கோ டு, 372-வது பிரிவுப்படி

ரூபாயோ சம்பாதித்துப்போடுவாயே, ஆயிரக்கணக்காக சம்பாதிப்பாயே எனக்காகொடுக்கப்போகிறாய் என்று சொன்னான். அப்பால் எதிரி தன் மகளை ஷை மாணிக்கத்துக்கு வித்து ரூ. 200 வாங்கியிருக்கிறான்.

எதிரி மாணிக்கம் என்பவள் தாசி யென்றும் விபசாரித்தனமே தொழிலாகக் கைக்கொண்டிருப்பதும் தன் மகள் முத்துலக்ஷிமியை ஷை மாணிக்கத்துக்கு விற்பதனால் மாணிக்கம் முத்துலக்ஷிமியை விபசாரத்தொழிலுக்கே உபயோகப்படுத்துவாளென்று தெரிந்திருந்தும் இந்த முத்துலக்ஷிமியால் 1000 கணக்காய் சம்பாதிப்பாயென்று வியக்தமாகச் சொல்லியும் வித்திருக்கிறான். இது சாக்ஷிகளுக்குத் தெரியும் இப்போதும் ஷை முத்துலக்ஷிமி மாணிக்கம் வீட்டிலேயே யிருக்கிறாள்.

ஆகையால், கிருபைசெய்துவிசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

3-5-06. (ஒப்பம்) ராமக்கவுண்டன்.

## 24

இ. பி. கோடு, 372-வது பிரிவுப்படி

பிராது:—எதிரி பொன்னுரெங்கம் என்பவரின் மகள் பாப்பாத்தியை எனக்குக் கலியாணம் செய்துகொடுப்பதாக எதிரி நிச்சயதாம்பூலம் செய்திருக்கிறார். அப்படியிருக்க, எதிரி தன் மகள் பாப்பாத்தி யென்ற அபரஞ்சிதமென்னும் பெண் 15-வயதுள்ள பிரௌடையானவளை இராமானுஜம் மென்பவருக்கு சென்ற ஜனவரிமீ 1உ போட்டு ஒரு தஸ்தாவேஜின் மூலமாகவைப்பாட்டியாகக் கொடுத்துவிட்டார். அந்த தஸ்தாவேஜில், அபரஞ்சித அம்மாள் என்பவளுக்கு அன்னவஸ்திரம் கொடுத்துக் காப்பாற்றுவதற்காக ஷை பொன்னுரெங்கம், ருமானுஜத்துக்கு ஷை அபரஞ்சித அம்மாளை பரிவர்த்தனைசெய்ததாக கண்டிருக்கிறது.

இப்போது 11 நாளாக ஷை தஸ்தாவேஜுப்படி ஷை அபரஞ்சித அம்மாள் ஷை ருமானுஜத்தின் வீட்டுடன் அவன் வைப்பாட்டியாகயிருந்துவருகிறாள். ஷை அபரஞ்சித அம்மாளையும் அவள் விஷயமாய் எதிரி பொன்னுரெங்கம் ருமானுஜத்துக்கு யெழுதிக்கொடுத்திருக்கிற தஸ்தாவேஜையும் இப்போது ஷை ருமானுஜத்தின் வீட்டில் பார்க்கலாம்.

ஷை சங்கதிகள் சாக்ஷிகளுக்குத்தெரியும். இது, இ. பி. கோடு 372-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

2-6-06. (ஒப்பம்) லக்ஷ்மண நாயக்கன்.

### நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாரண்டுகேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது —10-வரு வரை காவல்தண்டனையும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷன் கோர்ட்டு, ராஜதானி மே, அல்லது 1-வகுப்பு மே விசாரிக்கலாம்.

## 25

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) வாங்கப்படப்பட்ட மைனர் பெண் 16-வயதுக் குட்பட்டவளாகயிருந்தாள்,

(2) எதிரி, அந்தப்பெண்ணை விலைக்காவது வாடகைக்காவது வாங்கிக் கொண்டான்.



(3) அப்படி வாங்கினது, அந்த மைனர் பெண் 16-வயதுக் குட்பட்டவளாகயிருக்கும்போதே அவளை வியபசாரித்தனத்துக்கு உபயோகிக்கலாமென்ற எண்ணத்தின்பேரில்.

பிராது:—வாலாஜபேட்டை சுப்பாநாயக்கர் பெண்சாதி விசாலாக்ஷி என் இ. பி. கோ
பவளிடமிருந்து அவளுடைய பெண் குழந்தைகள் விஜயலெக்ஷிமி என்ற டு, 373-வது
10-வயதுள்ளதையும், தனலெக்ஷிமி என்ற 11-வயதுள்ளதையும் இந்த பிரிவுப்படி
சின்னகாஞ்சீபுரத்திலிருக்கும் எதிரி தாசி பத்மாவதி சென்ற திங்கட்கிழமை கிரயத்துக்கு வாங்கினாள்.

ஷை பெண்கள் இரண்டையும் ஷை பத்மாவதி தன்னூரில் தான் ஊழியம் செய்துவருகிற காமாக்ஷி அம்மன் கோவிலில் தன் வாரசுகளாக புதன் கிழமை எழுதிவைத்தாள்.

பொதுவாக கோவில்தாசித் தொழிலைச் செய்பவர்கள் விலைமாதுகளாக, அதாவது பணம் கொடுத்தவர்களிடம் அவர்கள் இஷ்டப்படி தேக ஸம்மந்தப்பட்டு வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த எதிரி பத்மாவதியும் அதே தொழிலைக் கைப்பற்றி அதில் காலக்ஷேபம் செய்துவருகிறாள்.

மேற்கண்ட காரணங்களால் 2-வது எதிரி ஷை பெண்குழந்தைகளையும் தன் தொழிலை அனுஸரித்து நடப்பதற்காகவே வாங்கி ஷை கோவிலுக்கு தாசிகளாக தன் வாரசுகளாக எழுதிவைத்திருக்கிறாளென்பதில் தடையில்லை. இந்த எதிரி இப்படி எழுதி வைத்திருப்பது ஷை கோவில் சிப்பந்தி ரிஜிஸ்டரைப் பார்வையிடுவதனால் தெரியவரும்.

இந்தச் சங்கதிகள் எல்லாம் சாக்ஷிகளுக்குத்தெரியும். எதிரி இ. பி. கோடு, 372-பிரிவுப்படிக்கு குற்றஞ் செய்தவளாகிறாள்.

ஆகையால் கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப்பிரார்த்திக்கிறேன்

3-2-07. (ஒப்பம்) சுப்பபண்டாரம்.

### நடவடிக்கை.

மேலே 23, 24-வது பிராதுகளின்படிதான்.

## 26

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி வாதியை வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்தினான்.

(2) அப்படிக் கட்டாயப்படுத்தினது ந்யாய விரோதமானது.

(3) வேலையில் கட்டுப்பட்டவனுடைய மனதுக்கு விரோதமாக எதிரி அவனை வேலைவாங்கினான்.

பிராது:—என்னவென்றால் எதிரி இந்த ஊரில் பெரிய குடித்தனகாரர். இ. பி. கோ
எதிரியினுடைய புஞ்சையில் என் மாடு மேய்ந்தது. அதற்காக டு, 374-வது
என்னைக்கூப்பிட்டு எதிரிகண்டித்து "என் புஞ்சையில் நீ நாலுநாள் வேலைசெ பிரிவுப்படி
ய்யவேணும் இல்லாவிட்டால் பிராதுகொடுப்பேன்" என்றுபயமுறுத்திசென்ற 2 நாளாய் என்னை வேலை வாங்கிவருகிறார். சம்பளமாவது சாப்பாடாவது கொடுக்கவில்லை, என் வீட்டில் சாப்பிட்டுவிட்டு விடியற்காலம் முதல் சாயங்காலம்வரை எதிரி புஞ்சையில் வேலைசெய்யவேண்டியதாயிருக்கிறது. நேரே வேலை செய்யவில்லையென்று ஊடே ஊடே என்னை அடிக்கவும் செய்கிறார்.

இப்படி வேலை வாங்குவது என் மனதுக்கும் சட்டத்துக்கும் நியாயத்துக்கும் மூற்றிலும் விரோதமாகயிருக்கிறது.

இது சங்கதிகள் சாக்ஷிகளுக்கு த்தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

3-4-07. (ஒப்பம்) சங்கக்கோன்.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படி கட்டவேண்டாம்—ஜாமீனில் விடலாம்—ராஜியாகலாம்—1-வருஷம் காவல், அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்.—எந்த மாஜிஸ்திரேட்டும் விசாரிக்கலாம்.

## துராகிருதமான புணர்ச்சியைக்குறித்து.

எவனாவது அடியில் விலக்கப்பட்டிருக்கிற விஷயத்தில் தவிர இதனடியில்கண்டிருக்கிற ஐந்து வகைகளில் எதின்படிக்காவது ஒரு ஸ்திரீயைப் புணர்ந்தால் அவன் துராக்கிருதமாகப் புணர்ந்தவனென்று சொல்லப்படுவான்.

முதலாவது:—அவளுக்கு இஷ்டமில்லாமலிருக்கும்போது பலவந்தமாய்ப்புணர்வது.

இரண்டாவது:—அவளுக்கு சம்மதமில்லாமல் புணர்வது.

மூன்றாவது:—உடன்படாவிட்டால் கொல்லுவேனென்றாகிலும் துன்பம் செய்வேனென்றாகிலும் சொல்லிப் பயப்படுத்தி அதனால் அவளுடைய சம்மதம்பெற்றுக்கொண்டு புணர்வது.

நான்காவது:—ஒருவன் தான் வேறொரு குறிப்பிட்ட ஸ்திரீயின் புருஷனல்லவென்றும், குறிப்பிட்ட ஒரு ஸ்திரீ எவனை நியாயமாய் விவாகம் செய்துகொண்டாளோ, அல்லது விவாகம்செய்துகொண்டதாகநம்பியிருக்கிறாளோ அவனென்று தன்னை அவள் நினைத்து புணர்ச்சிக்குச் சம்மதிக்கிறாளென்றும் தெரிந்துகொண்டு அந்த சம்மதியின்பேரில் புணர்வது.

ஐந்தாவது:—பனிரெண்டு வயதாகாதவளோடு அவளுடைய சம்மதம் பெற்றாகிலும் பெறாமலாகிலும் புணர்வது.

குறிப்பு:—துராக்கிருதமாய்ப் புணர்ந்த குற்றம் செய்ததாகச் சொல்லுவதற்கு ஆண் குறியை நுழைப்பதே போதும்.

விலக்கு:—ஒருவன் 12-வயதுக்குக் குறைவில்லாமலிருக்கிற தன்பெண்சாதியோடு புணர்வது துராகிருதமான புணர்ச்சியாகமாட்டாது.

### 27

ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) பிரஸ்தாபப் பெண்பிள்ளையோடு எதிரி துராகிருதப்புணர்ச்சி செய்தான் (2) மேல்கண்ட 5 வகைக்குள் ஒருவகையில் குற்றஞ் செய்யப்பட்டது. (3) அந்தப் பெண்பிள்ளை எதிரியினுடைய பெண்சாதியல்ல (4) அவள் அவனுடைய பெண்சாதியாக யிருந்தால் 12 வயதுக்குள்பட்டவளாக யிருக்கிறாள்.



பிராது:—நான் விபசாரியாக யிருந்து காலக்ஷேபம் செய்துவருகிறேன். எதிரியும் என்னிடம் அப்போதைக்கப்போது வந்து தேக சம்மந்தம் செய்து போவதுண்டு. இ. பி. கோ டு, 376-வது பிரிவுப்படி

இப்படிக்கிருக்கையில் நேற்றுப்பகலில்நான் உடம்புவலியினால் ரொம்பக் கஷ்டப்பட்டு வருத்தமடைந்திருந்தேன். எதிரி அன்றிரவு என்னிடம்வந்து என்னை தேக சம்மந்தத்துக்கு கூப்பிட்டான். எனக்கு இன்று அதில் இஷ்டமில்லாம லிருப்பதுடன் வெறுப்பாகவு மிருப்பதால் எனக்கு சம்மதமில்லையென்று சொன்னேன். எதிரி நீ கேட்டதைத் தருகிறேனென்று சொன்னான். நான் அதற்கும் சம்மதிக்கவில்லை.

அப்படிக்கிருக்கையில் எதிரி துராகிருதமாகவும் எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லாமலும் அது விஷயத்தில் மிகவும் வெறுப்பாகவுமிருக்கும்போது என்னைப்பலவந்தமாய்ப் புணர்ந்து எனக்கு மனவருத்தமும், சங்கடமு முண்டாக்கியிருக்கிறான்.

என்வீட்டிற்கு அப்போதுவந்திருந்த அடியில்கண்ட சாக்ஷிகளுக்கு அது தெரியும். கிராம முனிசீபிடம் தெரியப்படுத்தி யிருக்கின்றேன்.

ஆகையால், கிருபைசெய்துவிசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

5-6-07, (ஒப்பம்.) ரெங்கம்மாள்.

### 28

பிராது:—என்னவென்றால் என் புருஷனிறந்துவிட்டார். என் ஜாதி திரும்பக் கலியாணம் செய்துகொள்ளும் ஜாதியல்ல. ஆகையால், எனக்கு அவசியம் நேரிடும்போது எனக்கு இஷ்டப்பட்டவர்களிடம் அபூர்வமாகத் தேக சம்மந்தம் வைத்துக்கொள்ளுவேன். எதிரியிடமும் வேளாவேளைகளில் அப்படி தேகசம்மந்தப்பட்டிருப்பதுண்டு. இ. பி. கோ டு, 376-பிரிவுப்ப

இப்படிக்கிருக்கையில், இன்று மதியத்துக்கு நான் என்னூர் நதிக்கு ஸ்நானம் செய்யப்போயிருந்தேன். அப்போது நதியில் யாருமில்லை. எதிரி திடீரென்று அங்கேவந்து ஆற்றங்கரையிலுள்ள மண்டபத்தில் தன்னோடு அப்போதே தேக சம்மந்தப்படும்படி கேட்டுக்கொண்டான். பயிரங்கமான இடமாகவும் ஜனங்கள் திடீரென்று வந்துவிடக்கூடிய இடமாகவுமிருப்பதை நினைத்து மானத்துக்கஞ்சி அப்படிச்செய்ய எனக்கு சம்மதமில்லையென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன்.

உடனே யெதிரி என்னை பக்கத்திலிருந்த மண்டபத்துக்கு இழுத்துக்கொண்டுபோய் என் சம்மதத்துக்கு விரோதமாக என்னை ஜோராவலிசெய்து என்னுடன் தேகசம்மந்தப்பட்டு என் மனதுக்கு இடஞ்சல் செய்துவிட்டான்.

அந்தச்சமயத்தில் என் சாக்ஷிகள் வந்துவிட்டார்கள். அவர்களும் இதைப் பார்த்திருக்கிறார்கள். எதிரி என்னை இழுத்துப் பலவந்தம் செய்ததில் என் தேகத்திலுண்டான நகக்குறிவகையராக்களு மிருக்கிறது. உடனே கிராம முனிசீபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

5-7-07. (ஒப்பம்.) கீறல் ரத்தினம்.

## 29

இ. பி. கோ டு, 376-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் நான் இன்றுபருத்திக்காட்டுக்குப் பருத்திக்கா வலுக்குப்போயிருந்தேன். சுமார் மத்தியமிருக்கும்போது பக்கத்துப் புஞ்சைகளி லிருந்த ஆள்களெல்லாம் வீட்டிற்குப் போய்விட்டார்கள். அந்தச்சமயம் பார்த்து எதிரி என்னிடம் வந்து ஸரஸம் செய்ய ஆரம்பித்தான். நான் சம்மதியாமல் ஓட ஆரம்பித்தேன். எதிரி உடனே என்கையைப்பிடித்துக் கொண்டு "நீ இப்போது சம்மதியாவிட்டால் உன் குறல்வளையை நெரித்துக் கொன்றுபோடுவேன்" என்றுசொல்லி என்னைப்பயப்படுத்தி, "என்னசொல்லு கிறாய் சம்மதிக்கிறாயா" என்று கேட்டான். நான் பேசாமலிருந்தேன். உட னே எதிரி என்னுடன் என்மனதுக்கு விரோதமாக என்னை இடஞ்சலுக்கும் சங்கடத்துக்கும் உள்ளாக்கி என்னுடன் தேக சம்மந்தப்பட்டுக் கொண்டி ருந்தான்.

அப்போது என் தகப்பன் எனக்குக் கஞ்சிகொண்டுவந்துவிட்டான். அக் கம் பக்கம் புஞ்சைகளிலும் ஆட்கள் சாக்ஷிகளாக வந்திருக்கிறவர்கள் வந்து விட்டார்கள்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்துநீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

6-7-07. (ஒப்பம்.) கீறல் அங்கம்மாள்.

## 30

இ. பி. கோ டு, 376-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் நேற்றிரவு என் புருஷன் தன் தம்பி வை ஞர் ரெயிலில் வருகிறதாகச்சொல்லி அவனைக்கண்டு பேசிவருகிறேனெ ன்று போனார். நான் கதவை அடைத்து விபத்தை அமர்த்திவிட்டுப் படுத் துக்கொண்டேன். அப்போது இரவு சுமார் 11-மணியிருக்கும்.

அப்பால் கொஞ்சநேரத்துக்கெல்லாம் வாசல் கதவைதட்டின சப்தத்தைக் கேட்டு என் புருஷன் வந்திருக்கிறதாக நினைத்து கதவைத்திறந்தேன்.

உடனே எதிரி என் வீட்டுக்குள் அக்கிரமமாய் நுழைந்து நான் படுத்தி ருந்த படுக்கையில் படுத்துக்கொண்டான். வைஞர் வந்தாரோவென்று கேட் டேன். வரவில்லையென்று மெல்லச்சொன்னான். தேகசம்மந்தத் துக்குக் கூப் பிட்டான். மெல்லிய சப்தத்துடன் காதுக்குள் கூப்பிட்டான். என்புருஷனெ ன்று தேகசம்மந்தத்துக்கு ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கையில் என் புருஷன்வந்து கூப்பிட்டுக் கதவை யிடித்தார். உடனே கதவைத்திறந்தேன்.

என்புருஷனென்று எதிரி நம்பும்படியான சந்தர்ப்பமிருந்தபடியால் அப் படியே நம்பித் சம்மந்தப்பட்டேன். எதிரி செய்கையால் எனக்கு நேரிட் டிருக்கிற மனவருத்தமும் துக்கமும் கணக்கில் லை. சாக்ஷிகளும் என் புருஷன் வந்தவுடனே வந்து என் வீட்டுக்குள்ளிருந்த எதிரியைப் பிடித்திருக்கிறார் கள்.

கிராம முனிசிபிடம் உடனே தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்துப்பட ஸ்பிரார்த்திக்கி றேன்.

7-7-07. (ஒப்பம்,) கீறல் பாகமாயி.



## 31

இ. பி. ( டு, 376-( பிரிவுப்ப

பிராது:—என்னவென்றால் என்மகள் 11-வயதுள்ள பார்வதியை கடை க்கு வெத்திலை வாங்கிக்கொண்டுவரும்படி இன்று காலை 8-மணிக்கு அனுப்பி யிருந்தேன்.

கொஞ்சநேரத்துக்கெல்லாம் அவள் வெத்திலை கொண்டுவந்து சேராத படியால் அவளைத் தேடிக்கொண்டுபோனேன். அவளைத் தேடியதில் காண வில்லை. வீட்டுக்குத்திரும்பும்போது, 1; 2-வது சாக்ஷிகளால் என்மகளை எதிரி தன்வீட்டுக்குக் கூட்டிப்போன சமாசாரம் தெரிந்தது.

உடனே எதிரிவீட்டுக்கு போய் பார்த்ததில் வாசல்கதவு அடைத்திருந் தது. உள்ளே என்மகள் தொணி அழுகிற சத்தம் கேட்டது. கதவைத் தட்டித்திறக்கச் சொன்னதில் எதிரி திறக்கவில்லை. அப்பால் 3, 4, சாக்ஷிகள் அங்கேவந்தார்கள். அவர்களும் நானும் கொஞ்சநேரம் வெளியிலிருந்து சத் தம் போட்டதின்பேரில் எதிரி கதவைத்திறந்தான்.

உள்ளேபோய்ப்பார்த்ததில் என்மகள் அலங்கோலமாய் பெண்ணுருவத்தி லிருந்து ரெத்தம் வடிந்துகொண்டிருந்த நிலைமையில் அழுதுகொண்டிருந் தாள்.

என்மகளைக் கேட்டதில் எதிரி மிட்டாய்வாங்கிக்கொடுத்து தன்னை அவன்வீட்டுக்கு கூப்பிட்டதின்பேரில் தான் அங்கேபோனதாகவும், போன உடனே எதிரி வீட்டு கதவை அடைத்துக் கொண்டதாகவும், அப்போது வீட் டில் எதிரியையும் தன்னையும் தவிர வேறே ஒருவருமில்லையென்றும் சொன் னாள். மிட்டாயை தனக்குக் கொடுத்துக்கொண்டு தன்னைக்கீழே படுக்கச் சொல்லி தன் சித்தாடையை ஒதுக்கிக்கொண்டு பலவந்தமாகத் அவனுடைய ஆண்குறியை தன் பெண்குறியில் நுழைத்து தனக்கு சங்கடமுண்டுபண்ணிக் கொண்டிருந்ததாகவும், அப்போது வலி பொறுக்கமாட்டாமல் தான் அழுத தாகவும் உடனே நான் வந்துவிட்டதாகவும் சொன்னாள்.

இது சாக்ஷிகளுக்குத் தெரியும். ஆஸ்பத்திரியில் காட்டி மருந்துபோட்டு வயது வகையரா விஷயமாக ஸர்டிபிகேட்டு வாங்கி தாக்கல் செய்திருக்கிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

5-3-08. (ஒப்பம்.) துப்புசாமித் தேவர்.

குறிப்பு:—(1) ஒரு ஸ்திரீயினுடைய மனதிற்கு விரோதமாக, அல்லது அவளுடைய சம்மதமன்னியில், அவள்பேரில் ஜோராவலிசெய்வதுதான் அனி யாயப் புணர்ச்சியென்னும் குற்றமாவதற்கு வேண்டிய முக்கிய சங்கதி.

(2) ஒருபெண்பிள்ளை சம்மதங்கொடுக்கக்கூடாத நிலைமையில், அதாவது, மயக்கவஸ்துக்களைச் சாப்பிட்டு அவள் தன் சுபாவ புத்தியில்லாமல் மனது கலங்கியிருக்கும்போதாவது, அல்லது, குடித்துவிட்டு குடிவெறியினால் தன் சொந்த அறிவில்லாமலிருக்கையிலாவது, சித்தப்பிரமையினால் நடந்துகொண் டிருக்கிற காரியத்தின் சுபாவம் இன்னதென்பதை அவள் அறியக்கூடாத நில [illegible]ருக்கையிலாவது அப்பேர்ப்பட்ட பெண்பிள்ளையுடன் ஒருவன் புணர் ந்து அவன்பேரில் பிராது வருமேயாகில் அவனும் இந்தப்பிரிவுப்படி குற்றம் செய்தவனா[illegible]கிறான்.

(3) தான் புணர்ந்த பெண்பிள்ளையானவள் பொதுவான வேசியென்று வது, தனக்குச்சிநேகமாய் விவாகமாகாவிட்டாலும் அவளுடைய வைப்பாட்டி

என்றுவதுசொல்லுவது எதிர்வாகமாட்டாது. ஏனென்றால் அவளுடையஜீவன மார்க்கம் எவ்வளவு துர்மார்க்கமாகயிருந்தாலும், சட்டத்தினுடைய ஸம்ரக்ஷணையைப் பெற்றுக்கொள்ள அவளுக்குப் பாத்தியதையுண்டு. அவளுக்கு இஷ்டமானபோது இந்த கெட்டநடத்தையை விட்டு நல்லநடத்தை யுள்ளவளாகுலும் ஆகலாம். ஒரு காலத்தில் தன் கூட சம்மந்தப்பட்டதை வைத்து எப்போதும் அவளை கட்டாயம் செய்யக்கூடாது.

## 32

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி ஒருமனிதன், பெண்பிள்ளை, அல்லது மிருகத்தோடு புணர்ந்தான் (2) அப்படிப் புணர்ந்ததானது சுபாவத்துக்கு விரோதமாக யிருந்தது. (3) எதிரிவேணுமென்று அப்படிச் செய்தான்.

இ. பி. கோடு, 377-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் நேற்றுமதியத்துக்கு என் பெண்கழுதையைக் காணுமல் தேடித்திரிந்தேன்.

இந்த ஊர் சுப்பியதேவர் தோட்டத்திலிருக்கிற கட்டடம் மேல்கோப்பு பிரிந்தும் கதவில்லாமல் துறந்து கிடப்பதற்குள் போய் பார்த்தேன். என்கூட 1-வது சாக்ஷியும் 2-வதுசாக்ஷியும் தங்கள் கழுதைகளேயும் காணவில்லை யென்று தேடிவந்தார்கள். நாங்கள் மேற்சொன்ன கட்டடத்துக்குள் பார்க்கும்போது யென் பெண்கழுதையை முன்னங்கால்கள் இரெண்டையும் கட்டியும், கழுதையின் கழுத்தில் கயிர்போட்டு அவீந ஒரு கம்பில் கட்டியும் வைத்துக்கொண்டு டை கழுதையுடன் எதிரி சுபாவத்துக்கு விரோதமாகப் புணர்ச்சி செய்துகொண்டிருந்தான்.

உடனே நாங்கள் எதிரியைப் பிடித்துக்கொண்டோம். 3, 4, சாக்ஷிகளும் வந்தார்கள்.

எதிரியின் செய்கையானது இ. பி. கோடு 377-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

எதிரி சுபாவத்துக்கு விரோதமாகப் புணர்ச்சி செய்த கழுதையையும் ஆஜர் செய்திருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்துவிசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

6-3-08. (ஒப்பம்.) கருப்பன்னன் ஏகாலி.

இ. பி. கோடு, 377-வது பிரிவிப்படி

பிராது:—என்னவென்றால் என்மகன் 13-வயதுள்ள பையனைக் காணவில்லை. தேடிக்கொண்டு போகும்போது என் பையன் ராமசுப்புவென்பவன் எதிரியுடன் போனதாகத் தெரியவந்தது. எதிரியை அவன்வீட்டில் தேடியதில் காணவில்லை. அப்பால் பலவிடங்களில் தேடிக்கொண்டுபோனதில் எதிரி என் பையனை நதிக்கரையிலிருக்கிர மண்டபத்துக்குக் கூட்டிக்கொண்டு போய் அங்கே அவன் ஆஸனத்துவாரத்தில் சுபாவத்துக்கு விரோதமான புணர்ச்சிசெய்வதை 1, 2, 3, சாக்ஷிகள் பார்த்ததாயும் எதிரியைக் கண்டித்துப் போகச்சொல்லி விட்டதாகவும், என் மகன் ஆஸனத்துவாரத்தில் ரத்தம் வந்து அவன் வேஷ்டி யெல்லாம் ரத்தமாக யிருபபதாகவும் சொன்னார்கள். என் பையனைகண்டு பிடித்துப்பார்த்ததில் சாக்ஷிகள் சொன்னபடிக்கே [illegible] தது. டை பையனைக்கூட்டிக்கொண்டு இவ்விடம் மெடிகல் அபீசரிடம் (1-வது சாக்ஷியிடம்) காட்டிமருந்துபோட்டு ஆஜர்ஸர்டிபிகேட்டும் [illegible]றேன்.

ஆகையால், கிருபைசெய்துவிசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

7-3-08 (ஒப்பம்) இராமலிங்க முதலியார்



## 33

இ. பி கோடு, 37[illegible] பிரிவு[illegible]

பிராது:—என்னவென்றால் நான் இந்த ஊரிலுள்ள ஒரு வியபசாரி. எதிரி நேற்றிரவு என்னைத் தன்னோடு தேகசம்மந்தப்படும்படிக்குத் தீர்மானம் செய்துகொண்டு எனக்கு ரூ. 5 கொடுத்தான். நானும் அவனும் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரி திடீரென்று என்னை கீழேதள்ளி என் வாயில் சுபாவத்துக்கு விரோதமாகப் புணர்ச்சிசெய்தான். அவனை அப்படிச் செய்யக்கூடாதென்று தடுத்தும் கேழ்க்கவில்லை. கீழே பிடித்துத்தள்ளியும் போகாமல் என்னை இம்சை செய்துவிட்டான்.

என் வீட்டிலிருந்த மேலேகண்ட சாக்ஷிகள் நான் உள்ளேபடுகிறகஷ்டத்தை என் சப்தத்தினல் தெரிந்து உள்ளேவந்து எதிரியைத்தள்ளி என்னைவிடுவித்தார்கள்.

ஆகையால், கிருபைசெய்துவிசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

குறிப்பு:—இது 177-வது பிரிவுப்படி குற்றமாயில்லையாவென்று சந்தேகமாயிருப்பதாக சென்னை ஹைகோர்ட்டார் 1886-ம் வருஷயத்திய 147-ம் நெ. கிரிமினல் அப்பீலில் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். குற்றமில்லையென்று சொல்லவில்லை.

8-3-08. (ஒப்பம்.) அகிலாண்டம்மாள்.

### நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—10 வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷ்ஷன் கோர்ட்டு, ராஜதானிமே, அல்லது 1-வது வகுப்பு மேஜிஸ்ட்ரேட் இவர்கள் விசாரிக்கலாம்.

## சண்டை போடுவது, கலகஞ்செய்வது முதலியதைப் பற்றிய விஷயங்கள்.

ஒரு பயிரங்கமான இடத்தில் 2 அல்லது அதற்கு மேல்பட்ட தொகையுள்ள ஜனங்கள், சண்டைபோட்டு பொதுஜன சமாதானத்தைக் கெடுத்தால் அது இ. பி. கோடு 160-வது பிரிவுப்படி குற்றமாகும். இதற்கு சண்டை (Affray) போடுவது என்று பெயர். (இ. பி. கோடு, பிரிவு-159).

சண்டைபோடுவதற்கும் (Affray) தாக்குதல் (Assault) க்கும் வித்தியாஸம்:—ரகசியமான இடத்தில் சண்டைபோட்டால் அது 160-வது பிரிவுப்படி குற்றமாகமாட்டாது. தாக்குதல் குற்றமானது ரகசியமான இடத்திலாவது பயிரங்கமான இடத்திலாவதுசெய்யப்படலாம். சண்டைபோடுவதென்னும் குற்றமானது பொதுஜன சமாதானத்துக்கு விரோதமாகவும், தாக்குதலென்னுங் குற்றமானது, ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு விரோதமாகவும் செய்யப்படுகிறதாக எண்ணப்படுகிறது. சண்டைபோடுவதென்பது, பயிரங்கமான இடத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான விதமாய் செய்யப்பட்டதாக்குதல் குற்றத்தைத்தவிர வேறில்லை.

சண்டை போடுவதற்கும் கலகஞ்செய்வதற்கும் வித்தியாஸம் :—சண்டைபோடுவதென்பது பயிரங்கமான இடத்தில் தான் நடக்கவேண்டும். கலகமென்பது பயிரங்கமான இடத்திலாவது அல்லது ரகஸியமான இடத்திலாவது நடக்கலாம். சண்டைபோடுவதென்பதற்கு 5 அல்லது அதிகமான பெயர்களிருக்கவேண்டுமென்பதில்லை. ஆனால் கலகத்துக்கு 5 அல்லது அதற்கு மேற்பட்டவர்களிருக்கவேணும்.

## 34

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) 2 அல்லது அதற்கு அதிகமான ஜனங்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

(2) பைரங்கமான இடத்தில் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

(3) அந்தச்சண்டையினுல் பொதுஜன அமரிக்கைக்குக் கெடுதல் உண்டாகக்கூடியதாக யிருந்தது.

இ. பி. கோடு, 160-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் எதிரிகள் இதனடியில்கண்ட 3 பேர்களும் இந்தக்கோயம்புத்தூர் கஸ்பாக்கடைத்தெருவில் ஒருவரை ஒருவர் தூராகிருதமாக வைதுக்கொண்டும் கையினுலடித்துக் கொண்டுமிருந்தார்கள்.

அந்தச் சண்டையினுல் கடைத்தெருவில் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்த ஜனங்கள் கூட்டங்கூடினூர்கள். அப்படி எதிரிகள் சண்டைபோட்டதானது பொதுஜன ஸமாதானத்துக்குக் கெடுதலாகயிருந்தது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

9-3-08. (ஒப்பம்) பாலகோபால பிள்ளை.

### நடவடிக்கை.

*பிடிக்கக்கூடாது - ஸம்மன்கேசு—படி கட்டவேணும்—ஜாமீனில் விடலாம்-ராஜியாகக்கூடாது.—1 மாதம் காவல் அல்லது 100 ரூ. வரை அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்—எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.*

*குறிப்பு:—இ. பி. கோடு 160-வது பிரிவுப்படிக்குள்ள கேசுகளில் ஒரு கக்ஷிக்கு 4 பேர் வீதம் இருக்கக்ஷியிலுமாக 8 பேர்கள் சேர்ந்தும் சண்டை போடலாம். (உதாரணம்) ஒரு குறிப்பிட்ட உத்ஸவகாலத்தில் ஒரு கோவிலுக்குள் போவதற்கு நபர் 1-க்கு அரை அணு வீதம் டிக்கட்டு வைக்கப்பட்டிருக்கிறது. கோவிலுக்குள் போகும் 4 பேர்கள் டிக்கட்டுக்குள்ள அரை அணுவைக் கொடுக்கமாட்டோமென்று சண்டை போடுகிறூர்கள். டிக்கட்டுக் கொடுக்கும் 4 பேர்கள் டிக்கட்டு வாங்கிக்கொண்டு தான்கோவிலுக்குள் போகவேண்டுமென்று அவர்களுடன் சண்டை போடுகிறூர்கள். இங்கே 8 பேர்கள் கூடி சண்டை போட்டாலும், இது 160-வது பிரிவுப்படி தான் குற்றமாகிறது. ஏனென்றால் 4 பேர்களின் கக்ஷி டிக்கட்டு அணு வசூல் செய்யவேண்டுமென்பது. மற்றொரு 4 பேர்களின் கக்ஷி டிக்கட்டு அணுக்கொடுக்காமலேயே கோவிலுக்குள் போகவேண்டுமென்பதாக யிருக்கிறது.*

## ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுப்பதற்கான குற்றங்களைக்குறித்து.

*ஐந்துபேர் அல்லது அதற்கதிகமானவர்கள் அடியிற்கண்ட காரியங்களிலேதையாவது செய்யவேணுமென்ற எண்ணத்தோடு கூட்டங்கூடினுல் அது சட்டவிரோதமான கூட்டமென்று சொல்லப்படும்.*

*(1) கவர்ன்மெண்டாரையாவது அல்லது ஸர்க்கார் உத்தியோகஸ்தர் சட்டப்படி தனக்குள்ள அதிகாரத்தைச்செலுத்திக்கொண்டிருக்கையில் அந்த உத்தியோகஸ்தரையாவது குற்றம் பொருந்திய பலவந்தஞ் செய்தாகிலும்* (Using Criminal Force) *அப்படிச்செய்வதாகத் தோற்றியாகிலும் பயப்படுத்துவது.*



*(2) சட்டப்படி நடத்தும் நடவடிக்கைகளை நடத்தவொட்டாமல் தடுப்பது.*

*(3) யாதாமொருவருக்குத் துன்பத்தையாவது, ஒரு இடத்தில் அக்கிரமமாக நுழைவது அல்லது வேறே யாதொரு குற்றச்செய்கையைச் செய்வது.*

*(4) எவனையாகிலும் குற்றம் பொருந்திய பலவந்தஞ் செய்தாவது அப்படிச்செய்வதாகத் தோற்றியாவது யாதொரு சொத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்வது ; அல்லது யாதொரு வழியில் நடக்கும்படியான பாத்தியதை ஒருவனுக்குண்டாயிருப்பதையாவது, தண்ணீரை உபயோகித்துக்கொள்ளுகிற பாத்தியதையை யாவது, அவனுடைய ஸ்வாதீனத்திலாகிலும் அனுபோகத்திலாகிலும் யிருக்கிற அப்படிப்பட்ட வேறே யாதொரு பாத்தியதையையாவது அவனுக்கில்லாமல் செய்வது, அல்லது யாதொரு பாத்தியதையைக்கொண்டாவது தனக்குப் பாத்தியதை உண்டென்று நினைத்து அதைக்கொண்டாவது யாதொரு காரியத்தைப் பலவந்தமாய் நடத்துவது.*

*(5) குற்றம் பொருந்திய பலவந்தஞ் செய்தாவது அப்படிச்செய்வதாகத் தோற்றியாவது எவனையாகிலும் அவன் நியாயமாய்ச் செய்யவேண்டியதல்லாததைச்செய்யும்படிக்காவது, அவன் நியாயமாய்ச் செய்யத்தக்கதைச் செய்யாமல் விடும்படிக்காவது பலவந்தப்படுத்துவது.*

*விவரணம்:—ஒரு கூட்டத்தார் முதலில் கூடும்போது நியாயமான சங்கதியையே செய்யக்கூடினபோதிலும், பின்பு அவர்கள் சட்டவிரோதமான சங்கதிகளிலேதையாவது செய்யத்தலைப்படும் பக்ஷத்தில் அந்தக்கூட்டம் சட்டவிரோதமான கூட்டமாய் விடுகிறது.* (இ. பி. கோடு, பிரிவு-141.)

## 35

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

*(1) கூட்டத்தில் 5 அல்லது அதற்கு மேற்பட்டவர்களிருந்தார்கள். (2) அந்தக்கூட்டத்தாரின் எண்ணமானது இ. பி. கோடு 141-வது பிரிவில் சொல்லப்பட்டபடி குற்றச்செய்கைகளிலேதையாவது செய்யும்படிக்காக யிருந்தது. (3) ஒரு குறிப்பிட்ட குற்றச் செய்கையைச் செய்யவேண்டுமென்பது அந்தக்கூட்டாத்தாரின் பொது நோக்கமாகயிருந்தது (4) எதிரியும் அப்பேர்ப்பட்ட கூட்டத்தில் வேணுமென்று தெரிந்திருந்து சேர்ந்திருந்தான்.*

இ. பி. கோடு, 143-வது பிரிவுப்படி

*பிராது:—என்னவென்றால் எனது பர்த்தாயிறந்து 2 மாதமாகிறது. எனது பர்த்தாவின் சகோதரர் விஜயரங்கம்பிள்ளை என் வீட்டுக்கொல்லையிலிருக்கும் கிணற்றை தானும் உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் அதற்காக அவர் வீட்டுக்கும் என் வீட்டுக்கும் நடு சுவரில் வழி வைத்துக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறூர். அதற்கு நான் சம்மதிக்கவில்லை. அப்படிச்செய்யும்படி கட்டாயப்படுத்தும்பொருட்டாக அடியில் கண்ட 7 எதிரிகளும் ஷை விஜயரங்கம்பிள்ளை வீட்டுக்கொல்லையில் வந்து சட்டவிரோதமான கூட்டங்கூடி என் வீட்டிற்கும் விஜயரெங்கம் பிள்ளை வீட்டிற்கும் மத்தியிலுள்ள சுவரை இடித்துவிட வேண்டும்எத்தனங்கள் செய்து கொண்டிருக்கிறூர்கள்.*

*இதைப்பற்றி என்னூர் கிராம முனிசிபிடம் போய்த்தெரியப்படுத்தி அவர் வந்து பார்த்து போகச்சொல்லியும் ஷை யார்கள் போகவில்லை.*

*பின்னிட்டு நான் சமூகத்தில் வந்து தெரியப்படுத்துவதாகப் புறப்பட்டு வந்திருக்கிறேன். இது சாக்ஷிகளுக்குத் தெரியும்.*

*ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.*

10-3-08. (ஒப்பம்) கிறல் பத்மாவதி அம்மாள்.

## 37

### ருஜுசெய்யவேண்டிய அம்சங்கள்.

(1) 5. அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சட்டவிரோதமாகக் கூட்டங் கூடினார்கள். (2) அவர்களுடைய பொதுவான எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு குற்றச்செய்கை அல்லது செய்கைகளைச் செய்வதற்காக அப்படிக் கூடினார்கள். (3) அந்தக் கூட்டத்தில்சேர்ந்த யாராவது தாக்குதல் முதலிய குற்றத்தைச் செய்தார்கள். (4) தங்களுடைய பொதுவான எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டு குற்றச்செய்கையைச் செய்தார்கள்.

பிராது:—என்னவென்றால் எனக்கும் 1-வது எதிரியாகிய என் தமையனுக்கும் கோயம்புத்தூர்க் கிராமம் அயன் ஸர்வே நெ. 548 நஞ்சைவிஷயமாகத் தாவாயிருந்து வருகிறது. அதைப்பற்றி அவர்பேரில் நான் ஸிவில் கோர்ட்டில் வியாச்சியஞ் செய்திருக்கிறேன். அந்த விரோதத்தை வைத்து 1-வது எதிரி 2-முதல் 7 வரை எதிரிகளைச் சேர்த்துக்கொண்டு என்னுடைய அனுபோகத்திலிருக்கிற கோயம்புத்தூர் நஞ்சை அயன் ஸர்வே. 395-ல் சாகுபடியாயிருந்த நெல் பயிரை இன்றுகாலை அழித்துக்கொண்டிருந்தார்கள். நான் போய் தடுத்ததற்காக என்னை எதிரிகள் ஒன்றுசேர்ந்து அடித்துத்துறத்திவிட்டார்கள். இ. பி. கோடு, 147-வது பிரிவுப்படி

இது சாக்ஷிகளுக்குத்தெரியும். இதைப்பற்றி உடனே ஷை கிராமம் கிராமமுனிசிபிடம் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

12-3-08. (ஒப்பம்.) முருகேசபிள்ளை.

### நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கலாம் - வாறண்டுகேஸ் - படி கட்டவேண்டாம். ஜாமீனில் விடலாம்-ராஜியாகக்கூடாது - இரண்டு வருஷம் காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம் - எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.

குறிப்பு:—(1) சட்ட விரோதமான கூட்டத்தில் கூடி அந்தக் கூட்டத்திலுள்ள யாராவது, வாதி வகையராவைத் துன்பப்படுத்தினால் அந்தக் கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் 147, 323-வது பிரிவுப்படி குற்றஞ் செய்தவர்களாவார்கள். துன்பஞ்செய்த சங்கதியையும் பிராதில்கண்டு 147, 323-வது பிரிவுகள்போட்டுப் பிராது எழுதவேண்டும்.

(2) மரணத்தை உண்டுபண்ணக்கூடிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு கலகஞ் செய்வார்களேயாகில் அப்போது 148-வது பிரிவுபோட்டுப் பிராது எழுதவேண்டும். இந்தக்கேசை 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரத்துக்கு குறைந்த மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரிக்கக் கூடாது.

### துன்பம்.

ஒருவன் மற்றொருவனுக்கு, தேகத்தில் வலி, சுகக்குறைவு, அல்லது பலக்குறைவு, உண்டாகும்படி செய்வானேயாகில் அந்த ஒருவன் மற்றொருவனுக்குத் துன்பம் செய்ததாகிறது. (இ. பி. கோடு, பிரிவு-319.)

அடியில்கண்ட துன்பங்கள் கொடுந்துன்பங்களென்று சொல்லப்படும்.

(1) விரையடித்தல் அல்லது ஆண்மையழித்தல்.

(2) இரண்டுகண்ணில் ஒரு கண்ணையாவது சாசுவதமாய் பார்வையை யிழந்துவிடும்படி செய்தல்.

(3) காதுகளிரெண்டி லொன்றையாவது சாசுவதமாகக் கேழ்க்கவொட்டாமல் செய்தல்.

(4) தேகத்தில் எந்த உறுப்பையாவது அல்லது கணு-மூழி, பொருத்து இவைகளில் எதையாவது சாசுவதமாக யிழந்துவிடும்படி செய்தல்.

(5) தேகத்தில் யாதாமொரு உறுப்பு அல்லது கணு, மூழி, பொருத்து முதலியதின் உபயோகத்தை சாசுவதமாக அழித்து விடுதல் அல்லது கெடுத்துவிடுதல்.

(6) தலையல்லது முகத்தை சாசுவதமாக உருவழித்தல் அல்லது பின்னப்படுத்துதல்.

(7) ஒரு எலும்பை முறிந்து போகும்படிக்காவது அல்லது அது இருக்கும் யிடம் மாறிம்போகும்படிக்காவது செய்தல்.

(8) உயிருக்கு அபாயம் நேரிடும்படி செய்கிற, அல்லது அவனுக்கு ஏற்பட்ட தொழிலை செய்யவொட்டாமல் 20 - நாள் தேகத்துக்கு அதிக வலி உண்டாகும்படியான துன்பம் செய்வது. (இ. பி. கோடு, பிரிவு-320.)

குறிப்பு:—(1) ஒருவன் செய்கையால், மற்றொருவனுக்கு கொடுந்துன்பம் உண்டாகவேண்டும். அப்படிஉண்டாக்கும் கொடுந்துன்பமானது அவனால் மனதார உண்டாக்கப்பட்டிருக்கப்படவேண்டும். அப்படியானால்தான் ஒருவன் மற்றொருவனுக்குக் கொடுந்துன்பம் செய்ததாகச் சொல்லலாம். (இ. பி. கோடு, பிரிவு-322.)

(2) மேல் 1-முதல் 7-வரை சொல்லப்பட்டவகையான துன்பங்கள் மேல் சொல்லப்பட்ட மாதிரியாய் செய்து முடிந்து போய்விட்டால் 8-வது வகையாகச் சொல்லப்பட்டபடி 20-நாள்வரை தன் வேலையைச் செய்யும்படியான ஸ்திதியிலிருந்தாலுமே, இல்லாவிட்டாலுமே, அது கொடுந்துன்பம் தான். 1-முதல் 7-வரை சொல்லப்பட்டபடி யேதுவிதமான துன்பமும் முடிவு பெறாமல் அறைகுறையாக யிருந்தால் துன்பம் செய்யப்படப்பட்டவன் 20-நாள்வரை அப்படி தனக்கேற்பட்ட வேலையைச்செய்யக்கூடாத நிலைமையிலிருந்தானென்பதை ஒரு கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியிலிருக்கப்பட்ட மெடிகல் ஆபீஸர்மூலமாகச் ருஜூ செய்யவேணும்.

## 38

### ருஜூ செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி வாதிக்கு உடம்பில்வலி, வியாதி, அல்லது அசக்தியை உண்டு பண்ணினான்.

(2) வேணுமென்று அப்படிச் செய்தான்.

(3) வாதி எதிரியைக் கோபமூட்டாமலிருக்கையில் அப்படிச் செய்தான்.

இ. பி. கோடு, 323-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் 1-வது எதிரிக்கு நான் ஆட்டுக்கிடை வைத்திருந்தவகையில் எனக்கு 1-வது எதிரி ரூ. 3-கொடுக்கவேண்டியிருந்தது. அதை நான் கேட்டுவந்ததில் ஒருமாசகாலமாக கொடுக்காமலே நகட்டுதல் செய்துவந்தார்.

இன்று காலை நான் 1-வது எதிரி வீட்டுக்குப்போய் ரூபாயைக் கேட்டேன். கையில் ரூ. கிடைத்தபோது கொடுப்பதாய்ச் சொல்லிவிட்டு 2-வது எதிரியையும் கூட்டிக்கொண்டு 1-வது எதிரி வெளியே புறப்பட்டார். என்



ரூபாயைக் கொடுத்துவிட்டுத்தான் வெளியே போகவேணுமென்று வாய்மொழியாய் சொன்னேன். வெளியேபோகிறவனை சகுனத்தடையாய் மறிக்கலாச்சா இடப்பயலே யென்று சொல்லி 1, 2, எதிரிகள் என்னை அடித்து துன்பம் செய்தார்கள். உடம்பெல்லாம் ஊமை அடியாக அடித்து வலியுண்டாயிருக்கிறது. நகங்கள்பட்ட ரத்தக்கோடுகளு மிருக்கின்றன. இது சங்கதியை சாக்ஷிகள் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள்.

உடனேபோய் கிராம முனிசீபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

13–3–03. (ஒப்பம்) வெள்ளிமலைக்கோன்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது-வாறண்டுகேஸ் - படிகட்டவேண்டாம்-ஜாமீனில் விடலாம் - ராஜியாகலாம் — 1-வருஷம் காவல் அல்லது 1000 ரூ. வரை அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம் — எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.

குறிப்பு:—323-வது பிரிவுப்படி குற்றமாகிறதற்கு அடியினால் அடிப்பட்டவனுக்கு ரத்தகாய முண்டாயிருக்க வேண்டுமென்பதில்லை. அடியினால் அடிப்பட்டவனுக்கு வலியுண்டாயிருந்தாலே போதுமானது. ஆனால், பொதுவாக மாஜிஸ்திரேட்டுகள் ரத்தகாயமாவது ரத்தக்கோரைகளாவது யிருந்தாலொழிய, அடிபட்டவனுக்கு எவ்வளவு வலி வீக்கமுதலியதுக ளிருந்தாலுமே தாக்குதல் அல்லது அனியாயமான பலவந்தஞ் செய்ததாக 352-வது பிரிவுப்படிக்கே பிராதை தாக்கல் செய்துகொள்ளுவது வழக்கத்திலிருந்து வருகிறது.

## 39

### ருஜூ செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) மேலே 323-வது பிரிவுப்படி ருஜூச்செய்யவேண்டிய அம்சங்களும்.

(2) அபாயகரமான ஆயுத முதலியவற்றால் துன்பம் உண்டுபண்ணப்பட்டது.

இ. பி. கோடு, 324-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால், எதிரிகளுக்கு என் நிலத்துக்குப் பக்கத்தில் நிலமிருக்கிறது. என், நிலங்களுக்கு மத்தியில், பொழியில் என்னிலத்தை அடுத்து ஒரு கருவேலமர மிருக்கிறது. அது என்னைச்சேர்ந்து அதில் வழக்கமாக நான் கொப்புகள் வெட்டி அதை அனுபவித்து வந்திருக்கிறேன். அந்த மரம் அங்கேயிருப்பதால் தங்களுடைய நிலத்தில் முள்ளுகள் விழுவதாகச் சொல்லி எதிரிகள் அதை வெட்டிவிடும்படி என்னைக்கேட்டுக்கொண்டார்கள். நான் அதற்குச்சம்மதிக்கவில்லை. அதற்காக எதிரிகள் வெட்டருவாள்கள் சகிதம் என் நிலத்திலுள்ள ஷை என் கருவேலமரத்தை நேற்று சாயங்காலம் வெட்டப்போனார்கள். அது தெரிந்து நான்போய் வெட்டக்கூடாதென்று தடுத்தேன். அதற்காக 1 - வது எதிரி தன் கையிலுள்ள வெட்டருவாளைக் கொண்டு என்னை வெட்டினான். நான் திடீரென்று விலகிக்கொண்டேன். அப்படியிருந்தும் வெட்டு என் வலதுகைவிரலில்பட்டு ஆள்க்காட்டி விரலில் பாதி வெட்டுப்பட்டு கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. சாக்ஷிகள் விலக்கிவிட்டார்கள்.

ஆஸ்பத்திரியில்போய் மருந்துபோட்டு ஸர்ட்டிபிகேட்டும் வாங்கி ஆஜர் செய்திருக்கிறேன். கிராம முனிசீபிடமும் உடனே தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்,

14-3-08. (ஒப்பம்) வாலதுநல்லரெட்டி.

நடவடிக்கை.

பிடிக்கலாம் - வாரண்டுகேஸ் - படிகட்டவேண்டாம் - ஜாமீனில் விடலாம் - கோர்ட்டாருடைய அநுமதி பெற்றுக்கொண்டு ராஜியாகலாம் - 3-வருஷம்வரை காவல், அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம் — ஸெஷந்தன் கோர்ட்டார், ராஜதானி மே 1-வது வகுப்பு மே இவர்கள்விசாரிக்கலாம்.

குறிப்பு:—(1) துப்பாக்கி முதலிய வஸ்துக்களினுலாவது.

(2) குத்தக்கூடிய ஈட்டி, பாலா, வேல், சூலம் முதலிய எதினுலாவது.

(3) குற்றம் செய்வதில் ஆயுதமாக உபயோகித்தால் சாதாரணமாய் மரணத்தை உண்டுபண்ணக் கூடிய எந்த வஸ்துவினுலாவது.

(4) நெருப்பு அல்லது, நெருப்பில் தீப்பற்றக்காய்ச்சின வஸ்துவினுலாவது.

(5) அல்லது விஷத்தினுலாவது.

(6) தேகத்தை அரித்துவிடக்கூடிய வஸ்துவினுலாவது.

(7) அல்லது வெடிக்கக்கூடிய வஸ்துவினுலாவது.

(8) எந்த வஸ்துவை சாப்பிட்டாலுமே விழுங்கினுலுமே, நமது ரெத்தத்தில் சேர்ந்தாலுமே மனுஷன் தேகத்துக்கு நாசமுண்டாக்குமோ அப்பேர்ப்பட்ட வஸ்துவினுலாவது.

(9) அல்லது ஒரு ஜெந்துவினுலாவது துன்பம் உண்டுபண்ணினுலுமே அது 324-வது பிரிவுப்படி தான் குற்றமாகிறது. ஆகையால், மேற்கண்ட வகைகளி லெந்தவகையில் குற்றஞ்செய்யப்பட்டாலுமே நடந்த சங்கதிக்குத் தக்கப்படி 39-வது ப்படி பிராது எழுதவேண்டும்.

இந்த மேலே சொல்லப்பட்ட எந்த வஸ்துவினுலாவது கொடுந்துன்பம் செய்தால் அது 326-வது பிரிவுப்படி குற்றமாகும்.

(3) இதில் 5, 8-வது வகையான குற்றச் செய்கைகளுக்கு பிரத்தியேகமான ஸந்தேகமற்ற பிரிவிருக்கிறது. அது இ. பி. கோடு, பிரிவு-328.

## 40

### ருஜூசெய்யவேண்டிய அம்சங்கள்.

(1) மேலே 38-வது பிராதின் உச்சியில் சொல்லப்பட்டபடி எவ்விதமாகவாவது வேணுமென்று கொடுந்துன்பம் செய்தான்.

இ.பி.கோடு 326-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றல், என் பர்த்தாயிறந்து மூன்று வருஷங்களாக வீட்டில் ஆண்பிள்ளை உதவி யாருமில்லை. என்வீடு எதிரி வீட்டுக்கு அடுத்த மேல்புறமிருக்கிறது. என்வீட்டுக் கொல்லையிலிருக்கிற தொழுவில் என்புருஷனிருக்கிறகாலத்தில் எங்கள் சம்மதத்தின்பேரிலும் அனுமதியின்பேரிலும் எதிரி வீட்டுக்காரர்கள் மாடுகள் கட்டி வந்தார்கள். ஆண்பிள்ளை உதவிக்கு யாருமில்லாதபடியால் என் வீட்டுக்கொல்லையில் எதிரி வீட்டு ஆண்பிள்ளைகள் வந்து புழங்கக்கூடாதென்று சொல்லியிருந்தேன். அதற்கு விரோதமாக எதிரி என் வீட்டுத்தொழுவில் மாடுகள் கட்டிவந்தார். நான் கண்டித்தும்



கேழ்க்கவில்லை. இதற்கு 18-நாளைக்குமுன் காலையில் நான் தடுத்தும் தண்ணீர் இறைத்தார். நான் மானமில்லாமல் ஊரார்வீட்டுக் கொல்லையில் வந்து தண்ணீரிறைக்கலாமா வென்று கேட்டேன். அதற்காக எதிரி என்னைத் தொட்டுக்கீழேபிடித்து தள்ளி என் நெஞ்சிலும், அடிவயிற்றிலும் மிதித்துக் கொடுந்துன்பம் செய்தார்.

உடனே கிராமமுனிசீபிடம் தெரியப்படுத்திவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போய் 17-நாள் ஆஸ்பத்திரியிலேயேயிருந்து சிகிச்சை செய்துகொண்டேன். இன்னும் பூராவாகக் குணமாகவில்லை.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

15-3-08. (ஒப்பம்.) முத்து லெக்ஷிமி.

நடவடிக்கை.

மேலே 39-வது பிராதுக்குச் சொல்லப்பட்டபடி தான் - ஆனல் 7-வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம்.

குறிப்பு:—(1) அபாயகரமான ஆயுதங்களினுல் கொடுந்துன்ப முண்டு பண்ணப்பட்டால் இந்தப் பிராதுபோலவேயே 326-வது பிரிவுபோட்டுப் பிராது எழுதவேண்டும்.

(2) ஒரு சொத்தைப் பறிமுதல் செய்யவாவது ஒரு சட்ட விரோதமான சங்கதியைச் செய்யும்படி கட்டாயம் செய்யும்பொருட்டாவது துன்பம் செய்தால் 40-வது பிராது போல 327-வது பிரிவுபோட்டுப் பிராது எழுதவேண்டும்.

(3) மேல்கண்ட சங்கதிகளிலெதையும் செய்யும்பொருட்டு கொடுந்துன்பம் செய்தால் 40-வது பிராதுபோல் 329-வது பிரிவுபோட்டு பிராது எழுதவேண்டும்.

(4) ஒருவனைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படியாவது, அல்லது எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்தைத் திரும்பக் கொடுத்துவிடும்படிக்காவது செய்யும்பொருட்டு துன்பம் செய்தால் அது சங்கதிகண்டு 40-வது பிராதுபோல் 330-வது பிரிவுபோட்டு எழுதவேண்டும்.

(5) மேல்கண்ட சங்கதிகளிலெதையும் செய்யும் பொருட்டு கொடுந்துன்பம் செய்தால், 40-வது பிராதுபோல் 331 பிரிவுபோட்டு பிராது எழுதவேண்டும்.

(6) ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தனை அவன் வேலையைச் செய்ய ஒட்டாமல் தடுக்கும்பொருட்டு அவனுக்குத் துன்பஞ்செய்தால், 40-வது பிராதுபோல் 332-வது பிரிவுபோட்டுப் பிராது எழுதவேண்டும்.

(7) ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தனை அவன் வேலையைச் செய்யவொட்டாமல் செய்வதற்காகக் கொடுந்துன்பம் செய்தால் 333-வது பிரிவுபோட்டு பிராது எழுதவேண்டும்.

## 41

### கர்ப்பம் அழித்தல்.

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) அவள் கர்ப்பமா யிருந்தாள் (2) பிள்ளைவிழத் தட்டும்படி ஏதும் செய்கைகளைச் செய்தாள் (3) வேணுமென்று அப்படிச் செய்தாள் (4) செய்த முயற்சிப்படி பிள்ளை விழுந்துவிட்டது.

பிராது:—எதிரி பாப்பம்மாள் 18 வயதுள்ள ஜெண்டு ஜாதியைச்சேர்ந்த விதவை. அவள் ரகசியமாக வியபசாரத்தனம்செய்து 6 மாதம் கர்ப்பமாயிருந்தாள். விதவை பிரஸவித்துவிட்டால் அவமானமென்று நினைத்து

இ. பி. கோடு, 312 வது பிரிவுப்படி

அந்தக் கர்ப்பத்தை அழிப்பதற்கு வேண்டும் மருந்துசாப்பிட்டு 6 மாதக் குழந்தை கர்ப்பப் பையிலிருந்ததை நேற்று விழத் தட்டிவிட்டாள்.

எதிரியினுடைய செய்கையானது - இ. பி. கோடு, 312-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

இது சாக்ஷிகளுக்குத் தெரியும். இந்த ஊர் கிராமமுனிசீபுக்கும் தெரியும். அவரும் இதைப்பற்றி ரிப்போர்ட்டுச் செய்திருக்கிறார்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

16-3-08. (ஒப்பம்) சுப்புசெட்டி.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது - வாறண்டு கேஸ் - படி கட்டவேண்டாம் - ஜாமீனில் விடலாம் - ராஜியாகக் கூடாது - 7 வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம் - ஸெஷ்ஷன் கோர்ட்டார் விசாரிக்கவேண்டியது.

குறிப்பு:—(1) அந்தப் பெண்பிள்ளைக்கு வேறு யாராவது மருந்து முதலியதுகொடுத்து பிள்ளை விழும்படிசெய்தாலும் அவர்களும் இந்தப் பிரிவுப்படி தண்டனைக்குள்ளாவார்கள்.

(2) இப்படி பிள்ளையை விழத் தட்டினதானது கர்ப்பமாயிருக்கிற பெண்பிள்ளையின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவல்ல எண்ணத்தின்பேரிலிருந்தால் அது குற்றமாகமாட்டாது.

## 42

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 41-வது பிராதுக்கு ருஜு செய்யவேண்டிய அம்சங்களும் - அப்படி பிள்ளைவிழும்படி செய்வதில் அந்தப் பெண்பிள்ளைக்கு சம்மதமில்லையென்பதும்.

இ. பி. கோடு, 313-வது பிரிவுப்படி

பிராது:—என் புருஷனுக்கு 2-தாரங்கள். நான் இளையாள். எதிரி மூத்தாள். எதிரிக்கு குழந்தையில்லை. எனக்கும் சென்ற 15 வருஷமாகக் குழந்தையில்லாமலிருந்து இப்போது 3 மாதம் கர்ப்பமாகவிருந்தேன். என் புருஷன் கல்கத்தாவுக்குப்போய் 2 மாஸமாச்சுது.

தனக்கு குழந்தையில்லாமலிருக்க எனக்குக் குழந்தை பிறந்துவிட்டால் தனக்குக் கெடுதலென்று நினைத்து எதிரி என் மனதுக்கு விரோதமாகவும், என் ஸம்மதமன்னியிலும் கர்ப்ப மழிந்துபோவதற்குள்ள மருந்துகளை முந்தாளுள் எனக்கு கர்ப்பிணிகளுக்குக் கொடுக்கவேண்டிய மருந்தென்று சொல்லி மோசடியாக் கொடுத்துவிட்டாள். இன்று பிள்ளைக் கரு விழுந்துவிட்டது.

எதிரி கர்ப்பமழிக்கவேண்டியதற்கு மருந்துகள் தேடிக்கொண்டிருந்தது 1-முதல் 4-வரை சாக்ஷிகளால் எனக்குத் தெரியவந்திருக்கிறது. எனக்கு மருந்து கொடுத்தது 5, 6. சாக்ஷிகளுக்குத் தெரியும், கரு அழிந்து விழுந்துவிட்டது சாக்ஷிகள் எல்லாருக்கும் தெரியும்.

இதைப்பற்றிக் கிராம முனிசீப்பிடம் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

17-3-08. (ஒப்பம்) நாகமணி அம்மாள்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது—வாறண்டுகேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—10-வருஷம் காவல் தண்டனையும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷ்ஷன்கோர்ட்டார் விசாரிக்கவேண்டும்.



## 43

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) அந்தப் பெண்பிள்ளை கர்ப்பமாயிருந்தாள்.
(2) குழந்தை பிறந்தபின்பு எதிரி அதைக்கொன்றாள்.
(3) எதிரி வேணுமென்று குழந்தையைக் கொன்றாள்.

இ. பி. கோடு, 315-வது பிரிவுப் படி

பிராது:—எதிரி மீனாக்ஷியென்பவள் என் வீட்டுப்பக்கத்தில் குடியிருப்பவள். அவள் புருஷன் ரங்கூனில் 7 வருஷமாகயிருக்கிறான். அவள் கெட்ட நடவடிக்கையினால் கர்ப்பமாய் நேற்று ராத்திரி பிரஸவித்து ஆண் குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தை உயிருடன் அழுதுகொண்டு பிறந்தது. தன் புருஷன் 7 வருஷமாய் ரங்கூனிலிருக்க தான் இங்கே கர்ப்பமாய் பிரஸவித்தது அவமானமான ஸங்கதியென்று நினைத்து பிரஸவித்ததே வெளிக்குத் தெரியாமலிருக்கும்பொருட்டு பிறந்த ஆண் குழந்தையின் மூச்சைப்பிடித்துக்கொன்றுவிட்டாள்.

எதிரி பிரஸவித்ததும் குழந்தையைக்கொன்றதும் எதிரிவீட்டுப் பின்பக்கம் கொல்லையில் வைத்து நடந்தது. நானும் என் பக்கம் 1-2-3 சாக்ஷிகளும் எதிரி வீட்டுக்கொல்லைக்குப் பின்பக்கத்திலுள்ள சந்தில் இருட்டில் ஜலவாதைக்குப் போய்க்கொண்டிருந்தோம். யேதோ ஒரு ஆள் பிரஸவேதனைப்படுகிற அவஸ்தையைக்கேட்டு சந்தடி செய்யாமலிருட்டிலிருந்து கவனித்துப்பார்த்ததில் எதிரி குழந்தை பிரஸவித்ததையும் அதைக்கொன்றதையும் பார்த்தோம்.

உடனே ரோந்துபோய்க்கொண்டிருந்த 4, 5 சாக்ஷிகளாகிய இந்தக் கிராமம் தலையாரிகளைக் கூட்டிக்கொண்டுபோய் காட்டியிருக்கிறோம். அவர்கள் ஆஜர் குழந்தையையும் எதிரியையும் பிடித்துக்கொண்டார்கள்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

18-3-08. (ஒப்பம்) அப்துல்லாராவுத்தன்.

நடவடிக்கை.

மேலே 42-வது பிராதுக்குச் சொன்னபடிதான்.

## 44

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எறிந்து விடப்பட்ட குழந்தையானது 12 வயதுக்குட்பட்டதாகயிருந்தது.

(2) அந்தக்குழந்தையைத் துலைத்துவிடும்படியாக அந்தக்குழந்தையின் தாய் அல்லது தகப்பன் அப்படி எறிந்துவிட்டார்கள்.

இ. பி. கோடு, 317-வது பிரிவுப்படி

பிராது:—எதிரி ரங்கம்மாள் 25 வயதுள்ள விதவை. அவளுடைய புருஷனிறந்து 3-வருஷமாச்சுது. அவள் நேற்று இரவு பிரஸவித்து பெண் குழந்தை பிறந்தது. நேற்று இரவு சுமார் 4-மணிக்கு நானும் 1-2-3-4 சாக்ஷிகளும் நதிக்கரைக்குச் சமீபத்திலுள்ள ஊர் மந்தையில் ஜலவாதைக்குப் போய்க்கொண்டிருந்தோம். அப்போது இருட்டு. ஏதோ ஒரு ஆள் வந்து ஏதோ வஸ்து வைக்கீழே வைக்கிறதாக எங்களுக்குத் தெரிந்தது. அது என்னவென்று யோசித்துக்கொண்டிருக்கையில் குழந்தை அழுகைச்சத்தம் கேட்டது. நாங்கள் உடனே போய் அந்தக்குழந்தையைக் கொண்டுவந்து போட்ட ஆளைப் பிடித்துக்கொண்டதில் அந்த நபர் ஷை குழந்தையின் தாயாராகிய எதிரியாகயிருந்தது. அந்தக்குழந்தையை தன்னைவிட்டுத்துலைத்து விடும்படி எதிரி இப்படி எறிந்திருக்கிறாள்.

உடனே ஷை குழந்தை ஸஹிதம் எதிரியைப் பிடித்து கிராமமுனிசீபிடம் தெரியப்படுத்தியிருக்கிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

19-3-08. (ஒப்பம்) பரங்கிரியா பிள்ளை.

நடவடிக்கை.

போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கலாம் — வாறண்டு கேஸ்-படிகட்ட வேண்டாம்-ஜாமீனில் விடலாம்-ராஜியாகக்கூடாது-7 வருஷம் காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்-ஸெஷஷன் கோர்ட்டார் விசாரிக்க வேண்டியது.

குறிப்பு:—(1) 12 வயது வரையுள்ள குழந்தைகளை தாய் தகப்பன் அநுதரவாக யார்வசமும் ஒப்புவியாமல் எங்கேயாவது விட்டுவிட்டுப் போய்விட்டால் இந்தப்பிரிவுப்படி குற்றமாகும்.

(2) ஒருவன் தன்னுடைய வைப்பாட்டியின் குழந்தை 12 வயதுக்குட்பட்டதை மேல்கண்டபடி அநுதரவாக விட்டுப்போனாலும் இந்தப் பிரிவுப்படி குற்றந்தான்.

(3) இப்படி விட்டுப்போகப்பட்ட குழந்தை இறந்துபோய்விட்டால், விட்டுப்போன தாய் தகப்பன் அந்தக் குழந்தையைக் கொலைசெய்த குற்றத்திற்குள்ளாவார்கள்.

## 45

### ருசுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) குழந்தை பிறந்தது (2) அந்தக் குழந்தை இறந்தே பிறந்தது, அல்லது பிறக்கும்போது இறந்தது. அல்லது பிறந்தபின் இறந்தது, (3) எதிரியால் அந்தக்குழந்தை ரகசியமாகப் புதைத்துவிடப்பட்டது, அல்லது வேறு விதமாகச் செய்யப்பட்டது. (4) குழந்தை பிறந்ததையே மறைத்துவிடும்படிக்கு அப்படிச் செய்யப்பட்டது

இ. பி. கோடு, 318-வது பிரிவுப்படி

பிராது:—எதிரி முருகாயிக்குப் புருஷனில்லை. அவளுக்கு மூந்தாநாள் இராத்திரி குழந்தை செத்துப்பிறந்தது. குழந்தை பிறந்ததே ஒருவருக்குந் தெரியாமலிருக்கும்படிக்காக அதைத் தன்வீட்டுக் கொல்லையிலேயே புதைத்துக்கொண்டாள்.

குழந்தை பிறந்ததையும் இறந்ததையும் ஜனனமரண ரிஜிஸ்ட்டரில் தாக்கல் செய்யும்படிக்காக சட்டப்படி தெரிவிக்கவுமில்லை. குழந்தை பிறந்ததாமேயென்று கேட்ட இந்த ஊர் தலையாரி 3-வது சாக்ஷியிடமும் குழந்தை பிறக்கவில்லையென்று எதிரி சொல்லிவிட்டாள்.

எதிரியின் செய்கையானது இ. பி. கோடு, 318-வது பிரிவுப்படி குற்றமாகிறது. இது சாக்ஷிகளுக்குத் தெரியும். இப்போதே எதிரியின் வீட்டுக் கொல்லையின் தென்மேற்கு மூலையிலிருக்கிற வாகைமரத்தடியில் தோண்டிப் பார்த்தால் புதைக்கப்பட்ட குழந்தை அகப்படும். எதிரியை மெடிகல் ஆபீஸரைக்கொண்டு சோதனைபோடும்படி செய்தால் எதிரி பிரஸவித்திருப்பதும் வெளியாகும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

20-3-08. (ஒப்பம்) வடிவேலு நாடான்.

நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கலாம் - வாறண்டுகேஸ் - படிகட்டவேண்டாம் ஜாமீனில் விடலாம் - ராஜியாகக்கூடாது — 2-வருஷம் காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம் - ஸெஷஷன் கோர்ட்டார், ராஜதானி மே அல்லது 1-வது அல்லது 2-வது வகுப்புமே-இவர்கள் விசாரிக்கலாம்.

## 46

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) 1-வது எதிரி முன்னமேயே ஒரு புருஷனுக்குக் கல்லியாணஞ் செய்யப்பட்டவள் (2) அந்தக்கல்லியாணம் ஊர்ஜிதத்திலிருக்கிறது. (3) அப்படி அந்தக்கல்லியாணம் ஊர்ஜிதத்திலிருக்கும்போது அவளை 2-வது எதிரி கலியாணம் செய்துகொண்டான்.



இ. பி. கோடு, 494-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் வாதியாகிய நானும் எதிரிகளும் அகமடிய மறவர் ஜாதி. எங்களுக்குள் புருஷன் பெண்சாதியை வேண்டாமென்று சொன்னால் பெண்சாதிக்கு ரூ. 100 கொடுத்து எங்கள் ஜாதிக்காரர்கள் கூட்டம் போட்டு அவர்கள் முன்னிலையில் அந்தப் பெண்பிள்ளையைத் தீர்த்துவிட வேணும். அப்படியானால், தான் அந்தப்பெண்பிள்ளையை வேறொருவன் கலியாணம் செய்துகொள்ளலாம்.

இப்படியிருக்க 2-வது எதிரி ராமசாமித்தேவன் 1-வது எதிரியாகிய என்பெண்சாதி லெக்ஷிமி என்பவள் அவள் தாய்வீட்டுக்குப் போயிருந்தவளை என் பெண்சாதியென்றும் அவளை நான்தீரவில்லையென்றும் தெரிந்திருந்து 23-3-08 ல் கலியாணம் செய்திருக்கிறான். என் பெண்சாதியான 1-வது எதிரியும் அதற்கு இணங்கி வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். 3, 4, எதிரிகளாகிய அந்தப்பெண்ணின் தாய் தகப்பனும் கூடயிருந்து, கலியாணத்தை நடத்தியிருக்கிறார்கள்.

என்பெண்சாதியை நான் தீரவில்லை. இன்னும் அவள் என்னுடைய பெண்ஜாதியாகவேயே யிருந்துவருவது என் பக்கம் 1-முதல் 4-வரை சாக்ஷிகளுக்குத் தெரியும். 2-வது எதிரி இப்படிகலியாணம் செய்திருப்பது 5-முதல் 8-வரை சாக்ஷிகளுக்குத் தெரியும். 1, 2 எதிரிகள் இ. பி. கோடு 494-வது பிரிவுப்படிக்கும் 3, 4 எதிரிகள் 494-114-வது பிரிவுப்படிக்கும் குற்றஞ்செய்தவர்களாகிறார்கள்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிராத்திக்கிறேன்.

21-3-08. (ஒப்பம்.) வீரணந்தேவன்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது-வாறண்டு கேஸ்-படிகட்டவேண்டாம் - ஜாமீனில்விடலாம்-ராஜியாகக்கூடாது-7 வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம்-ஸெஷஷன் கோர்ட்டார் விசாரிக்க வேண்டியது.

## 47

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி குற்றச்செய்கையைச் செய்தான். (2) முரட்டுத்தனமாகவும் அஜாக்கிரதையாகவும் செய்தான். (3) மற்றவர்களுக்கு அபாயத்தை உண்டு பண்ணக்கூடிய செய்கையைச்செய்தான்.

இ. பி. கோடு, 336-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் என் வீட்டுக்கு அடுத்த தென்பக்கத்திலிருக்கிற மாமரங்கள் காய்த்திருக்கிறது. இன்று காலையில் அந்த மரங்களிலிருக்கிற காய்களின்பேரில் திருஷ்டிவைத்து அவைகளைத் தட்டும்படி எதிரி உருளைக்கல்களை வீசி எறிந்தான். மேற்படி கற்கள் என் வீட்டில் முற்றத்திலும் பக்கத்துவீட்டு முற்றத்திலும் வந்து விழுந்தன. மேற்படி எதிரியிடம் அப்படிச்செய்யக்கூடாதென்று நானும் என் பக்கத்துவீட்டில் குடியிருக்கிற சாக்ஷிகளும் சொல்லியும் கேழ்க்காமல் மறுபடியும் கற்களை எறிந்துகொண்டிருந்தான். சில கற்கள் என் பையன் ராமசாமி கால்களிலும் சில கற்கள் 2, 3-வது சாக்ஷிகள்பேரிலும் இலேசாய்ப்பட்டுவிட்டது. இது சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால், கிருபை செய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

27-3-08. (ஒப்பம்) ரெங்கசாமி அய்யங்கார்.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—ஸம்மன் கேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடலாம்—ராஜியாகக்கூடாது—3 மாதம் காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம்—எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.

## 48

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 47-வது பிராதுப்படி ருஜுச்செய்யவேண்டிய அம்சங்களும் எதிரியின் செய்கையால் துன்பம் உண்டாக்கப்பட்டது.

பிராது:—என்னவென்றால் எதிரி இன்று காலை என் வீட்டுப்பக்கத்தி
இ. பி. கோ. 337-வது பிரிவுப்படி லிருக்கிற தோப்பில் வில் தெறித்துக்கொண்டிருந்தான். வில் உருண்டை ஜனங்கள் பேரில் ஒருக்கால் பட்டுவிடுமென்றும், ஜனங்கள் நடமாட்டமாயிருக்கிற இடத்தில் இப்படி முரட்டுத்தனமாயும், அஜாக்கிரதையாயும் வில் தெறிக்கக்கூடாதென்று நானும் சாக்ஷிகளும் சொல்லியும் எதிரி கேழ்கவில்லை. மறுபடி வில் தெறித்துக்கொண்டிருந்தான். உருண்டைகளிலொன்று என் பெண் குழந்தை மண்டையிலடித்து இரத்தகாயம் உண்டாய்விட்டது.

உடனே ஆஸ்பத்திரியில் மருந்து போட்டு ஸர்டிபிகெட்டு வாங்கியிருக்கிறேன்.

கிராமமுனிசிபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால், கிருபை செய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

28-3-08. (ஒப்பம்) ஆறுமுக முதலியார்.

### நடவடிக்கை.

பிடிக்கலாம்—ஸம்மன் கேஸ்—படிகட்ட வேண்டாம்—ஜாமீனில் விடலாம்—கோர்ட்டார் அனுமதி பெற்றுக்கொண்டு ராஜியாகலாம்—6 மாதம் காவல் அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்—ராஜதானி மே அல்லது 1 அல்லது 2-வது வகுப்பு மே இவர்கள் விசாரிக்கலாம்.

## 49

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 47-வது பிராதுப்படி ருஜுச்செய்யவேண்டிய அம்சங்களும் எதிரியின் செய்கையால் கொடுந்துன்பம் உண்டாக்கப்பட்டது.

பிராது:—என்னவென்றால் எதிரி இன்று காலையில் நதிக்கரையில் நின்று
இ. பி. கோ. 338-வது பிரிவுப்படி கொண்டு வேட்டையாடும் முயற்சியில் பறவைகள் பேரில் திருஷ்டிவைத்து துபாக்கியால் சுட்டுக்கொண்டிருந்தான். 2-வது சாக்ஷி ஜனங்கள் நடமாடுகிற இடத்திலிப்படி துபாக்கி சுடக்கூடாதென்று சொல்லியும் எதிரி கேழ்க்காமல் முரட்டுத்தனமாகவும் அஜாக்கிரதையாகவும் மறுபடி சுட்டான். எதிர் கரையில் வந்துகொண்டிருந்த என் கையில் ரவைகள் தெறித்து என் இடதுகை மணிக்கட்டில்பட்டு முழி தெறித்து கைதொங்கிவிட்டது. இனி கை உருக்கக்கூடமார்க்கமில்லை என்று மெடிகல் ஆபீசர் சொல்லுகிறார். இடதுகை சாசுதமாக ஊனமாகிப்போய்விட்டது. இது சங்கதிகளை சாக்ஷிகள் பார்த்திருக்கிறார்கள்.

மெடிகல் ஸர்டிபிகேட்டும் ஆஜர் செய்திருக்கிறேன்.

கிராம முனிசிபிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்துவிசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

29-3-08. (ஒப்பம்) ராமக் கவுண்டன்.

### நடவடிக்கை.

மேலே 48-வது பிராதுப்படி.



## 50

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரிதான் பிரேதமானவனைக்கொலைசெய்தான் (2) எதிரியின் அடி அல்லது குத்து அல்லது இதுபோலொத்த குற்றச்செய்கையால் தான்பிரேதமானவன் இறந்தான் (3) பிரேதமானவனைக் கொல்லவேண்டுமென்ற எண்ணத்தோடே எதிரி அப்படிச்செய்தான். அல்லது பிரேதமானவன் இறந்துபோய் விடுவதற்குள்ள மாதிரியாக அவனுக்குக்காய மூதலியதை எதிரி உண்டாக்கினான். (4) எதிரி அவ்விதம் செய்யும்படிக்காக திடீரென்று நியாயமாகக்கோபமுண்டாகும்படிக்கான செய்கை யாதொன்றையும் பிரேதமானவன் செய்யவில்லை.

பிராது:—என்னவென்றால் இப்போது பிரேதமாயிருக்கிற ராமசாமித் இ. பி. கோ.
தேவர் என் புருஷன். அவருக்கும் 1-வது எதிரி முத்துசுவாமித் தேவருக்கும் 302-வது
நெடுநாளாக விரோதம். என்புருஷன் 1-வது எதிரி மகன்பேரில் பிராது பிரிவுப்படி
கொடுத்து அவனுக்கு 2 வருஷம் தண்டனையாயிருக்கிறது.

இந்த விரோதங்களை மனதில்வைத்து என் புருஷன் நேற்றிரவு புஞ்சைக்காவலுக்கிருந்துவிட்டு வீட்டுக்கு வரும்போது 1, 2, 3, 4. எதிரிகள் என் புருஷனை வழிமறித்துக் கலகஞ்செய்தார்கள். அப்போது அடியில்க்கண்ட சாக்ஷிகளும் புஞ்சைக் காவலுக்கிருந்து வீட்டுக்குத்திரும்ப வருகிறவர்கள் எதிரிகளைத் தடுத்தும் கேழ்க்காமல் என் புருஷனைக் கலகம்செய்தார்கள். அந்தக் கலகத்தில் 2, 3, 4. எதிரிகள் என்புருஷனை நன்றாகப்பிடித்துகொண்டும் 1-வது எதிரி தன் கையிலிருந்த அருவாளால் என் புருஷன் தேகங்களில் அநேகஇடங்களில் வெட்டியும்தலையை உடலைவிட்டுப் பிரித்து வெட்டி தள்ளியும் விட்டான். என் புருஷனைக்கொலைச் செய்யவேண்டுமென்ற முன் எண்ணத்தின் பேரிலேயே எதிரிகள் இப்படிச் செய்திருக்கிறார்கள். எதிரிகள் ஓடிவிட்டார்கள். என் வீட்டிலிருந்து, அரைமைல் தூரத்திலுள்ள கரையாளன் புஞ்சையில் இவ்வளவும் நடந்தது. இது நடந்தது இன்று காலை 5-மணியிருக்கும். என் புருஷனுக்கு உயிர்போய்விட்டது. ஆகையால் உடனேவந்து பிரேதத்தைப்பார்த்து சாக்ஷிகளை விசாரித்து வேண்டும் நடவடிக்கைகளை நடத்தவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

30-3-08. (ஒப்பம்) கிளால் சுப்பம்மாள்.

### நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாரண்டு கேஸ்—படிகட்ட வேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—மரண தண்டனையாவது ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுந் தண்டனையும் அபராதமுமாவது விதிக்கலாம்—ஸெஷன்கோர்ட்டார் விசாரிக்கவேண்டும்.

## 51

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 50-வது பிராதுப்படிக்குள்ள கேசுக்கு ருஜுச்செய்யவேண்டிய 1-முதல் 3 வரை அம்சங்கள்.

பிராது:—என்னவென்றால் என் புருஷன் இப்போது பிரேதமாயிருக் இ. பி. கோ.
கிற நாராயணய்யருக்கும் எதிரியின் பெண்சாதி மீனாக்ஷிக்கும் வெகுகாலமாக 304-வது
தேகசம்மந்தமுண்டு. நான் என் புருஷனிடம் அப்படிச்செய்யக்கூடாதென்று பிரிவுப்படி.
சொல்லியும் அவர் கேழ்க்கவில்லை. அவர் நான்சொல்வதைக்கேட்டு விலகினாலும் ஷை மீனாக்ஷி என் புருஷனைவிடாமல் அவரை நிர்ப்பந்தம்செய்து அவருடன் தேகசம்மந்தப்பட்டு வந்தாள்.

இன்றிரவு என் புருஷனும் ஷை எதிரியின் பெண்சாதி மீனாக்ஷியும் தேகஸம்மந்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது எதிரிவந்து நேரில் கண்டுகொண்

யார். அப்போது டை மீனாக்ஷி அவள் வீட்டின் பின்வாசல் கதவைத்திறந்து கொண்டு ஓடிவிட்டாள். என் புருஷன் நாராயண அய்யர் எதிரியின் கையில் அகப்பட்டுக்கொண்டார். எதிரிக்கு இந்த அக்கிரமச் செய்கையைக் கண்டவுடன் திடீரென்றுவந்த கடுங்கோபத்தில் அங்கேவைத்திருந்த உலக்கையை எடுத்து என் புருஷன் நாராயணய்யர் மண்டையிலடித்து அங்கேயே அவரைப் பிரேதமாகவிழத் தட்டிவிட்டார். சாக்ஷிகளும் அங்கேயிருந்தவர்கள் பார்த்திருக்கிறார்கள். இது நடக்கும்போது இரவு 8 மணியிருக்கும்.

உடனே எனக்குத்தெரிந்து நான்போய் பார்த்தேன். எதிரியும் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறார்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

இரவு 12 மணி<br>3-3-08 (ஒப்பம்)<br>விஜயலக்ஷிமி அம்மாள்.

நடவடிக்கை.

—50-வது பிராதிப்படிக்குள்ள நடவடிக்கைகள் தான்.

## 52

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி தற்கொலை செய்து கொள்ளவேண்டியதற்குரிய சகல சங்கதிகளையும் செய்துமுடித்துவிட்டாள். (2) தற்கொலை செய்துகொள்ளுவதற்காகச் செய்யப்பட்ட செய்கையினாலுண்டாகக்கூடிய முடிவு முற்று பெறு முன் கண்டுபிடித்துக்கொள்ளப்பட்டாள்.

இ. பி. கோடு, 309-வது பிரிவுப்படி. பிராது:—என்னவென்றால் எனது ஸகோதரர் கிருஷ்ண பிள்ளைக்கு 2 தாரங்கள். மூத்ததாரத்துக்குக்குழந்தை இல்லையென்று இந்தக்கேஸின் எதிரி நாகலெக்ஷிமி அம்மாளை 7-வருஷங்களுக்கு முன் கல்யாணஞ் செய்துகொண்டார். எதிரி இப்போது 2 வருஷமாக மூத்ததாரத்தை விலக்கி வைத்துவிடவேணுமென்று என் ஸகோதரரிடம் சொல்லிக்கொண்டிருப்பதில் அவர் கேழ்க்காததை இட்டு தான் தற்கொலைசெய்துகொள்ளுவதாகச்சொல்லிவந்தாள்.

இப்போது என் தமயனார் கிருஷ்ணபிள்ளையும் அவர் மூத்ததாரமாகிய மரகத அம்மாளும் மதுரைக்கு சுவாமிதரிசனத்துக்காக மூன்றுநாளைக்கு போயிருக்கிறார்கள். போகும்போது என் தமயனார் தன் இளையதாரத்தின் மூர்க்க குணத்தையும் அவள் தற்கொலை செய்துகொள்ளுவதாகச் சொல்லிக்கொண்டு வருவதையும் சொல்லி அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி என்னிடம் சொல்லிப்போனார்.

அப்படிக்கிருக்கையில் நேற்று இரவு 11 மணி சுமாருக்கு எங்கள் வீட்டுக் கொல்லையிலிருக்கிற கிணற்றில் திடீரென்று சப்தம் கேட்டது. எங்கள் வீட்டு மேல்மாடியில் அப்போது என்னுடன் பேசிக்கொண்டிருந்த 1 முதல் 5 வரை சாக்ஷிகள்ஸஹிதம் ஓடிப்போய் கிணற்றை தீபங்கொண்டு பார்த்ததில், கிணற்றுத்தண்ணீரில் குமிழிகள் கிளம்பிக்கொண்டிருந்தது. உடனே 2-வது சாக்ஷியைக்கிணற்றுக்குள் குதிக்கும்படிசெய்து பார்த்ததில் யாரோ ஒரு ஆள் விழுந்திருப்பதாகத் தெரிந்தது. அந்த ஆளை வெளியில் தூக்கிப்பார்த்ததில் அது எதிரி நாகலெக்ஷிமியாகயிருந்தது. எதிரி தன் மடியில் ஆஜர் கல்களை வைத்து சேலையைக்கொண்டு வளைந்து கட்டிக்கொண்டிருந்தாள். அவள் கிணற்றுத்தண்ணீருக்குள் மூழ்கிக்குடித்திருந்த தண்ணீரை எல்லாம், சக்கரத்தின்பேரில் அவளை வைத்துச்சுற்றி வெளியேற்றி தக்க ஔஷதங்கள் செய்து அவளைப்பிழைப்பு மூட்டினேன்.

நாங்கள் உடனே போய் அவளை கிணற்றை விட்டு வெளியேற்றி யிராவிட்டால் அவளிறந்தே போயிருப்பாள்.



எதிரியின் செய்கையானது இ. பி. கோடு 309-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

1-4-08. (ஒப்பம்.) சிறல் தெய்வசிகாமணி பிள்ளை.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டு கேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடலாம்—ராஜியாகக்கூடாது—1 வருஷம் வெறுங்காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்— ராஜதானி மே அல்லது 1, 2-வது வகுப்பு மே இவர்கள் விசாரிக்கலாம்.

---

# அத்தியாயம் 2.

ஒருவனுடைய ஸ்வாதீனத்திலிருந்து அவனுடைய ஸம்மதமில்லாமல் யாதொரு அசையும் பொருளை அயோக்கியமாய் எடுத்துக்கொண்டுபோக வேணுமென்கிற எண்ணத்தோடு எவனாவது அப்படி எடுத்துக்கொண்டு போகும் பொருட்டு அந்தப்பொருளை நகர்த்தினால் அவன் திருட்டு என்னுங் குற்றத்தை செய்யப்பட்டவனென்று சொல்லப்படுவான்.

விவரணம்:—(1) எது பூமியைப்பற்றிக்கொண்டிருக்கிறதோ அது அசையும் பொருளல்லாதபடியினாலே அது திருடக்கூடிய பொருளாகமாட்டாது; ஆனால் அது பூமியைவிட்டுப் பிரிக்கப்பட்ட உடனே திருடக்கூடிய பொருளாய் விடுகிறது.

(2) பூமியைப்பற்றிக்கொண்டிருக்கிற ஒரு சாமானை பூமியைவிட்டுப்பிரிக்கும் செய்கையினால் நகர்ச்சியுண்டானால், அது திருட்டாகலாம்.

(3) ஒரு பொருளை நகரவொட்டாமல் தடுத்துக்கொண்டிருக்கிற தடங்கலை ஒருவன் நீக்குவதினாலும் அல்லது வேறு ஒரு பொருளிலிருந்து அதைப் பிரிப்பதினாலும் வாஸ்தவமாய் அதை நகர்த்துவதினாலும் அவன் அந்தப்பொருளை நகரும்படி செய்தவனென்று சொல்லப்படுவான்.

(4) ஒருவன் எந்த வகையினாலாகிலும் எந்தப்பிராணியையும் நகரும்படி செய்தால் அவன் அந்தப்பிராணியை நகரும்படி செய்ததைப் பற்றி அந்தப்பிராணியினாலே நகர்த்தப்பட்ட சகலமானதையும் அவன் நகர்த்தினதாகவும் சொல்லப்படுவான்.

(5) மேலே சொல்லியிருக்கிற ஸம்மதமென்பது வெளிப்படையாகவாவது, குறிப்பிட்டாவது இருக்கலாம். மேலும் அந்தப்பொருளை தன் ஸ்வாதீனத்தில் வைத்திருப்பவனாவது ஸம்மதிக்க வெளிப்படையாகவாகிலும், குறிப்பாகவாகிலும் அதிகாரமுடைய வேறே எவனாவது ஸம்மதித்திருந்தால் போதும்.

## 53

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) பிரஸ்தாப சொத்து அசையும்பொருள் (2) அந்த சொத்து வாதியல்லது வேறொருவர் வசத்திலிருந்தது (3) அப்பேர்ப்பட்டவர் வசத்திலிருக்கப்பட்ட சொத்தை எதிரி நகர்த்தினான் (4) யார்வசத்திலிருக்கிறதோ அவருடைய

அதை நேற்று காவல்காரனையும் [illegible]விட்டு அயோக்கியமான எண்ணத்துடன் எதிரி கொண்டுபோயிருக்கிறான். சொந்தத்துக்கு உபயோகித்துக்கொண்டான். இது சாக்ஷிகளைக்கொண்டு தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

4-4-08. (ஒப்பம்) சின்னுசாமி மூப்பன்.

நடவடிக்கை.

*வாரண்டில்லாமல் பிடிக்கலாம்—வாரண்டு கேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—3ளு காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்—எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.*

குறிப்பு:—*குடியிருப்பு வீடு முதலானதில் களவுசெய்தால். இ. பி. கோடு, பிரிவு-380-ப்படிக்கும்.*

*ஒருவனுடைய குமாஸ்தா வகையறு உத்தியோகஸ்தனாவது, வேலைக்காரனாவது தன் எஜமானுடைய ஸ்வாதீனத்திலிருக்கிற ஸொத்தைக் களவு செய்தால் இ. பி. கோடு, பிரிவு-381ப்படிக்கும்.*

*திருடும்பொருட்டு மரணம் அல்லது துன்பம் உண்டுபண்ணுவதற்காக யத்னம் செய்துகொண்டு திருடினால் இ. பி. கோடு, 382-வது பிரிவுப்படிக்கும் பிராது எழுதவேண்டும்.*

*இந்தப் பிரிவுகளின்படி யெழுதப்பட்ட பிராதுகள் மேலே 53, 54, 55-வது பிராதுகள் போலவேயே சங்கதியைக்கண்டு யெழுதவேண்டும்.*

*அயோக்கியமான எண்ணத்துடனும் அனுமதியில்லாமலும், பிறருடைய அசையும்பொருளை எடுத்துக்கொண்டு போவதுதான் திருடிக்கொண்டு போவதென்பது.*

## 56

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

*(1) வாதிக்குக்கெடுதல் செய்வதாக எதிரி வாதியைப்பயமுறுத்தினான். (2) வாதிக்காவது அல்லது அந்த வாதிக்கு சிரத்தையுள்ள வேறொருவருக்காவது கெடுதல் செய்வதாக எதிரி பயப்படுத்தினான். (3) எதிரி வேணுமென்று மனதார அப்படிப் பயப்படுத்தினான். (4) அப்படிப்பயப்படுத்தியதின் மூலமாக ஏதும் சொத்து அல்லது பெறுமான பத்திரத்தை வாதியைத்தனக்காவது வேறொருவருக்காவது கொடுக்கும்படி செய்தான் (5) மேல்கண்டபடிக்குள்ள விதமாக வெல்லாம் எதிரி அயோக்கியமான எண்ணத்துடன் செய்தான்.*

பிராது:—*என்னவென்றால் என் சாதி வண்ணார்கள் என்னூரிலுள்ளவர்களுக்கும் கிராமமுனிசிபு சுப்பிரமணியபிள்ளைக்கும் விரோதம். ஷை பிள்ளையவர்களுக்கு என்னூரிலுள்ள வண்ணார்கள் வெளுக்கமாட்டோமென்று எல்லோரும் சொல்லிவிட்டார்கள். அப்பால் நான் ஷைபிள்ளையவர்களுக்கு வெளுக்கச் சம்மதித்து இரண்டு வெள்ளை வெளுத்துக் கொடுத்தேன். அதற்குள் என்னூரிலுள்ள என் ஜாதிக்காரர்கள் என்னை அவர்களுக்கு வெளுக்கக்கூடாதென்று தடுத்தார்கள். நான் கேழ்க்கவில்லை.* இ. பி. கோடு, 384-வது பிரிவுப்படி

*இப்படிக்கிருக்கையில் வண்ணான் [illegible]ங்கரலிங்கம் மகன் சுப்பன் வீட்டுச் சமையல் புரை தற்செயலாய் தீப்பிடித்து வெந்து போச்சுது. அதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகவைத்துக்கொண்டு எதிரிகள் தீயை அமர்த்தப்போனவர்கள் அக்கிரமமான கூட்டம் போட்டு "ஷை சுப்பன் வீட்டு சமையல் புரையில் நீதான் தீயை வைத்திருக்கிறாய் உன்னை இப்போதே அடித்துப்பிடித்துக்கட்டி போலீசுக்கு அனுப்புவோம்" என்று சொன்னார்கள். அப்போது வீட்டுக்காரனை ஷை சுப்பன் தன் வீட்டில் ஒருவரும் தீயை வைக்கவில்லை, சமையல் செய்யும்போது கைப்பிசகாய் தீப்பிடித்ததென்று சொன்னான். அதற்கு எதிரிகள் "உனக்கென்ன தெரியும் நீ சும்மாயிருடா" வென்றுசொல்லி "இந்தப்புயல்*

போக்கிரி நாமெல்லாரும் கி.மு. வீட்டுக்கு வெளுக்காமலிருக்க இவன் வெளுக்கிறான். இவனை விடக்கூடாதென்று சொல்லி என்னை வளைத்துக்கொண்டார்கள்.

நீ கி. மு. வீட்டுக்கு இனி வெளுக்கவில்லையென்று சத்தியம் செய்து கொடுத்து ரூ. 50-ம் இதுவரை கி. மு. வீட்டுக்கு வெளுத்ததற்கு அபராதம் கொடுக்கவேணும், இல்லாவிட்டால் உன்பேரில் தீக்கொளுத்திப் பிராது நடத்துவோம் இப்போதே உன்னைக்கட்டி போலீசாருக்கு அனுப்புவோமென்று சொன்னார்கள்.

என்னூரிலுள்ள என் ஜாதிகாரர்களெல்லாரும் ஒன்றாயிருப்பதால் நான் பயந்து என் வீட்டுக்குப்போய் ரூபாயில்லாதபடியால் என் பெண்சாதியின் ரூ. 50 விலையுள்ள சரட்டட்டிகையை ஈடாக 1-வது எதிரியிடம் கொடுத்து ரூ. 50 கொடுத்து மீட்டிக்கொள்ளுவதாகச் சொல்லியிருக்கிறேன். சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

5-4-08. (ஒப்பம்) கறுப்பனன் ஏகாலி.

குறிப்பு:—1-வது எதிரி வீட்டை உடனே சோதனை போட்டால் என் பெண்சாதி சரட்டட்டிகை அவன் வீட்டிலிப்போது அகப்படும். ஆகையால் டையான் வீட்டை உடனே சோதனை போடச்சோதனை வாறண்டு பிறப்பிக்க உத்திரவாகப் பிரார்த்திக்கிறேன்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது—வாறண்டு கேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடலாம்—ராஜியாகக்கூடாது—3வரு காவல், அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம். ஸெஷன் கோர்ட்டு ராஜதானி மே, 1, 2-வது வகுப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## கொள்ளையடிப்பதையும் கூட்டக்கொள்ளையடிப்பதையும்பற்றி.

கொள்ளையிலெல்லாம் திருட்டாவது மெரட்டி வாங்குவதாவது கலந்திருக்கிறது.

எவனாகிலும் திருடும்பொருட்டாவது, அல்லது திருடுகையிலாவது, அல்லது திருடினபொருளை எடுத்துக்கொண்டு போகையிலாவது, அல்லது அதை எடுத்துக்கொண்டுபோக எத்தனப்படுகையிலாவது, தன் காரியம் நிறைவேறும்படி அவன்வேறொருவனுக்கு மரணம், துன்பம், அக்கிரமமான தடங்கல் இது களிலேதையாவது மனதார உண்டுபண்ணினாலும், உண்டுபண்ண எத்தனப்பட்டாலும், உடனே அப்படிப்பட்ட துன்பம் செய்வதாகப் பயமுண்டாக்கினாலும் பயமுண்டாக்க எத்தனப்பட்டாலும் திருட்டானது கொள்ளையாகும்.

எவனாகிலும் ஒருவனிடத்திலிருந்து யாதொரு பொருளை மெரட்டி வாங்குகையில், அவனுக்கெதிரிலிருந்துகொண்டு, அவனுக்காவது வேறொருவனுக்காவது உடனே மரணம், துன்பம் அல்லது அக்கிரமமான தடங்கலை உண்டு பண்ணுவதாக அவனைப் பயப்படுத்தி அந்தப் பயத்தினாலே அவனை அவ்விடத்தில் அப்போதே அந்தப்பொருளை ஒப்புவிக்கும்படி உட்படுத்தினால் மெரட்டி வாங்குவது கொள்ளையாகும்.

விவரணம்:—மெரட்டி வாங்குகிறவன், உடனே மரணம் துன்பம் அல்லது அக்கிரமமான தடங்கலை உண்டுபண்ணுவதாக வேறொருவனைப் பயப்படுத்துவதற்குப்போதுமான சமீபத்திலிருந்தால், எதிரிலிருந்தானென்று சொல்லப்படுவான். (இ. பி. கோடு, பிரிவு–391).

ஐந்துபேர் அல்லது அதிகமானவர்கள் ஒன்றாய்ச்சேர்ந்து கொள்ளையடித்தாலும், கொள்ளையடிக்க எத்தனப்பட்டாலும், அப்படிச் சேர்ந்து செய்கிறவர்களும் அப்படிச்செய்வதற்குக் கூடயிருந்து உதவிசெய்கிறவர்களும் கூடி மொத்தத்தில் 5 – பேராகவாவது 5 – பேருக்கு அதிகமாகவாவதிருந்தாலும்



அப்படிக்கொள்ளையடிப்பவனும் கொள்ளையடிக்க எத்தனப்படுகிறவனும், உதவி செய்கிறவனும், கூட்டக்கொள்ளையடிக்கிறவர்களென்று சொல்லப்படுவார்கள்.

குறிப்பு:—சட்டப்படி செய்யக்கூடிய அல்லது செய்யக்கடமைப்பட்ட ஒரு சங்கதியைச் செய்வதாகச்சொல்லிக் கண்டித்து ஒரு பொருளை வாங்கினால் அது மிரட்டி வாங்குதலாகமாட்டாது.

கொடுத்த கடனை வியாச்சியம் செய்வதாகச்சொல்லி கண்டித்து வாங்குகிறான். பயிரை மேய்ந்து அழித்த ஆடுகளை பவுண்டில் அடைப்பதாகச்சொல்லி ரூ. வாங்கிக்கொண்டு விட்டுவிடுகிறான். இவைகள் குற்றமாகமாட்டாது.

## 57

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி களவு செய்தான் (2) யாதாமொருவருக்கு மரணம், துன்பம் தடை செய்தான் அல்லது உடனே மரணம் துன்பம் அல்லது தடையைச் செய்வதாகப்பயப்படுத்தினான் (3) மேல்கண்ட சங்கதிகளை திருடுகையில் செய்தான். அல்லது திருடுவதற்காகச் செய்தான். அல்லது திருட்டில் கிடைத்த பொருளைக்கொண்டு போகையிலாவது அல்லது கொண்டுபோவதற்கு முயற்சிக்கையிலாவது அப்படிச்செய்தான்.

### மிரட்டிவாங்குதல் கொள்ளையாகும்போது.

எதிரி மிரட்டி வாங்கினான். மேலே 56-வது பிராதுக்கு ருஜூச்செய்ய வேண்டிய அம்சங்களும், எதிரி யாரை மிரட்டுகிறானோ அவனுக்கு எதிரிலிருந்தான்-(3) அப்படி மிரட்டுவதனால் அங்கேயே சொத்தைக் கொடுக்கும்படி செய்துவிட்டான்.

பிராது:—என்னவென்றால் இன்று விடிய 2, 3, நாழிகையிருக்கும் இ. பி. கோ போது நதிக்கு ஸ்நானம்செய்வதற்காகப் போனேன். அப்போது எதிரிகள் டு, 392-வது வந்து என்னை மறித்துப் பிடித்துக்கொண்டு என்கையில் போட்டிருந்த 2 பிரிவுப்படி பவுனில்செய்த தங்கமோதிரத்தைக் கழட்டிக்கொண்டு போனார்கள். அப்போதே சாக்ஷிகளும் வந்துவிட்டார்கள். நானும் சாக்ஷிகளுமாக எதிரிகளை விரட்டிக்கொண்டு போனதில் எதிரிகள் கல்களை விட்டெறிந்ததில் கல்வந்து என்மண்டையில் விழுந்து காயம்பட்டுவிட்டது. நாங்கள் போய், அவர்கள் கொண்டுபோன மோதிரத்தைப் பறித்துக்கொண்டு போய்விடாமலிருக்கும்படி இப்படி கல்லெறிந்தார்கள்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

6-4-08. (ஒப்பம்) ரத்னசாமி நாடார்.

நடவடிக்கை.

பிடிக்கலாம் – வாறண்டு கேஸ் – படிகட்டவேண்டாம் – ஜாமீனில் விடக்கூடாது–ராஜியாகக்கூடாது–10வரு காவலும் அபராதமும் விதிக்கலாம்–ராத்திரிக்காலத்தில் பயிரங்கமான ரஸ்தாவில் பறிமுதல் செய்தால் 14வரு காவல் தண்டனை விதிக்கலாம்–ஸெஷன் கோர்ட்டு ராஜதானி மே, அல்லது 1-வது வகுப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## 58

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி மேலே 57-வது பிராதில் ருஜூச்செய்யவேண்டியதாகச் சொல்லப்பட்ட சங்கதிகளை செய்து பறிமுதல் செய்ய எத்தனித்தான்.

இ. பி. கோடு, 393-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் நானும் 1-வது சாக்ஷியும் சுவாமி தெரிசனத்துக்காக கோவிலுக்குப்போய்விட்டு நேற்று வரும்போது 1, 2 எதிரிகள் எங்களுடன் வந்து என்மேலே போட்டுக்கொண்டிருக்கிற சரிகைவேஷ்டியைப் பிடுங்கினார்கள். நான் தடுத்ததில் என்னையும் 1-வது சாக்ஷியையும் அடித்தார்கள். சாக்ஷிகள் வந்தவுடன் வேஷ்டியை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். சாக்ஷிகள் வந்திராவிட்டால் எதிரிகள் என் வேஷ்டியை பிடுங்கிக்கொண்டே போயிருப்பார்கள்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

7-4-08. (ஒப்பம்) சுப்பய்யா பிள்ளை.

நடவடிக்கை.

மேலே 57-வது பிராதுப்படி.

## 59

ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரிகள் 392-வது பிரிவில்சொல்லப்பட்டபடி பறிமுதல் செய்தார்கள் அல்லது செய்ய யத்தனப்பட்டார்கள் (2) பறி முதல் செய்வதில் ஊன்பம் செய்தார்கள்.

இ. பி. கோடு, 394-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் நான் நேற்று இராத்திரி 10-மணிக்குமேல் பஞ்சாபீசிலிருந்து பணம்வாங்கிக்கொண்டு வீட்டுக்குவந்தேன். அப்போது எதிரிகள் வழியில் நின்றுகொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் என் மேல் விழுந்து என்னை அமுக்கிக்கொண்டு பையைப் பிடுங்கினார்கள். நான் பையை விடவில்லை. முறண்டிப்பிடுங்கிக்கொண்டு பையை விடாமல் முறண்டலாச்சாவென்றுசொல்லி 1-வது எதிரி தன் கையிலிருந்த கம்பால் என் மண்டையிலடித்து ரத்தக்காய முண்டாக்கினான்.

இதுகள் நடக்கும்போது சாக்ஷிகள் பார்த்திருக்கிறார்கள். எதிரிகள் கொண்டுபோன பையில் 500 ரூ. யிருந்தது.

உடனே எதிரிகளை, நானும், சாக்ஷிகளும் ரோந்துக்குவந்த போலீசாதலையாரிகள் இதனடியில் கண்டவர்களுமாகப்போய் பின்தொடர்ந்து பிடித்ததில் ரூபாய் சகிதம் முதலாவது எதிரி அகப்பட்டுக்கொண்டான்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

8-4-06. (ஒப்பம்.) முத்துப்பிள்ளை.

நடவடிக்கை.

57-வது பிராதுப்படிதான்.

## 60

ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து 392-வது பிரிவில் சொல்லப்பட்டபடி பறி முதல் செய்தார்கள், அல்லது பறிமுதல் செய்ய யத்தனப்பட்டார்கள்.

இ. பி. கோடு, 395-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் நானும் என்வீட்டிலுள்ள 1-வது சாக்ஷியும் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சாத்தூருக்கு நேற்று இரவு போய்க்கொண்டிருந்தோம்.

ராத்திரி சுமார் 2-மணியிருக்கும்போது இனம் தெரிந்த இந்த பிராதில் கண்ட 7-எதிரிகளும் இனம்தெரியாத இன்னும்சுமார் 10-பேர்களுமாக வந்து வண்டியை மறித்தார்கள். ஒவ்வொருவரும் கையில் மூங்கில் கம்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். வந்தவுடன் என் வண்டிக்கூட்டில் கம்புகளினால் அடித்தார்கள். அப்பால் என் வண்டியிலிருந்த அடியில்கண்ட ஜாபிதாவில்



கண்ட சாமான்களைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். இது நடக்கும்போது நல்ல நிலவு வெளிச்சம். சாக்ஷிகளுக்குந் தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

9-4-08. (ஒப்பம்.) பாகுராமய்யர்.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—10வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷஷன் கோர்ட்டார் விசாரிக்க வேண்டியது.

## 61

ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) 60-வது பிராதில்கண்டபடி கொள்ளை யடிக்கப்பட்டது (2) கொள்ளையடிக்கும்போது கொலை செய்யப்பட்டது.

இ. பி. கோடு, 396-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் என்வீட்டு வாசலில் நேற்றிரவு நானும் என் மகனும் வேலைக்காரனும் வீட்டின் கதவைப்பூட்டிக்கொண்டு திறவுகோலை வேலைக்காறன் வைத்துக்கொண்டு படுத்திருந்தோம்.

ராத்திரி சுமார் 1-மணியிருக்கும்போது பிராதில்கண்ட எதிரிகள் 3-பேர்களும் இவர்களுடன் இனம் தெரியும் பேர் தெரியாத சிலரும், இனமே தெரியாத சிலருமாக 15-பேர்கள் வரைவந்து எங்கள் 3-பேர்களையும் அடித்து என்மகன் காதில்போட்டிருந்த கடுக்கனைக் கழட்டிக்கொண்டார்கள். அப்படி கழட்டிக்கொண்டது 2,3, எதிரிகள். அப்பால் 1-வது எதிரி என் வேலைக்காரனைப்பார்த்து வீட்டுத்திறவுகோலை கொடுக்கும்படி கேட்டான். அவன் கொடுக்கமாட்டேனென்று சொன்னதற்காக, இனம் தெரியும் பேர்தெரியாத ஒருவன் அந்தக்கூட்டத்தில் 15-பேர்களில் சேர்ந்தவன் என் வேலைக்காரனை அவன் கையிலிருந்த தடிக்கம்பினால் மண்டையில் ஓங்கியடித்ததில் திடீரென்று அவன் கீழேவிழுந்து உயிர்போய்விட்டது.

அப்பால் ரோந்துபோன போலீஸ்க்காரர் 2-வது எதிரியை, என்மகன் கடுக்கன் வைத்துக்கொண்டிருந்தவனைப் பிடித்துக்கொண்டார்கள். ஏதோகளேன் பிடிப்பட்ட சங்கதி தெரிந்து போய் பார்த்ததில் என் மகன் கடுக்கனை வைத்திருந்ததையும், என் மகன் காதிலிருந்தகடுக்கனை கழட்டினவனிவன்தானென்பதையும் தெரிந்து கொண்டேன். சாக்ஷிகளுக்கும் தெரியும்.

ஆகையால், கிருபைசெய்துவிசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

10-4-08. (ஒப்பம்) முத்துசுவாமி ஆசாரி.

நடவடிக்கை.

மேலே 60-வது பிராதுப்படிதான்.

## 62

ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரிகள் பறிமுதல் அல்லது கொள்ளை செய்தார்கள் (2) அப்படிச் செய்யும்பொழுது மரணத்தை உண்டு பண்ணக்கூடிய அல்லது அபாயகரமான ஆயுதத்தை உபயோகித்துக் கொடுங்காயம் செய்தார்கள் அல்லது செய்ய யத்தனப்பட்டார்கள்.

இ. பி. கோடு, 397-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் நானும் 1, 2-வது சாக்ஷிகளும் தோட்டத்துக்குத் தண்ணீர் இறைத்துவிட்டு ராத்திரி சுமார் 9-மணிக்கு பன்றி ஓடைக்குப் பக்கத்தில் வரும்போது எதிரிகள் 4-பேர்களும் வழியில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டவுடன் எதிரிகள் திடீரென்று எழுந்திருந்து நின்றுகொண்டார்கள். 2, 3-வது எதிரிகள் 1, 2,

சாக்ஷிகளையும் 3-வது எதிரி என்னையும் அடித்தார்கள். 1-வது எதிரி என் இடுப்பில் கிடந்த வெள்ளியரைஞாண் கொடி ரூ. 25-பெறுமானதைக் கழட்டிக்கொண்டான். 1, 2, சாக்ஷிகளிடம் ஒன்றுமில்லை. 1-வது எதிரி கழட்டிக் கொண்ட அரைஞாண்கொடியை திரும்பப் பிடுங்கிக்கொள்ள நானும் சாக்ஷிகளும் எத்தனப்பட்டதில் 3-வது எதிரி அவன்கையில் வைத்திருந்த வீச்சருவாளால் வெட்டினான். அது என்கையில்பட்டு வலது கைவிரலில் சுண்டுவிரல் வெட்டுபட்டு போய்விட்டது. இது இ. பி. கோடு, 397-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

11-4-08. (ஒப்பம்) ராகவயியர்.

நடவடிக்கை.

மேலே 60-வது பிராதுபடிதான்.

குறிப்பு:—இதேவிதம் தான் கூட்டுக்கொள்ளை யடிக்கும்போது, எதிரி மரணம் உண்டுபண்ணக்கூடிய ஆயுதத்தை உபயோகித்தாலும்; கொடுந்துன்பம் உண்டுபண்ணினாலும், அல்லது மரணம் அல்லது கொடுந்துன்பம் உண்டுபண்ணமுயன்றாலும் பிராது எழுதவேண்டும்.

63

## அநியாயமாய் அபகரித்துக்கொள்வது மோசஞ் செய்வது இவைகளைப்பற்றி.

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

தன்னதல்லாத ஒரு அசையும் பொருளை அயோக்கியமான எண்ணத்துடன் அபகரித்துச் சொந்தத்துக்கு உபயோகப்படுத்திக்கொண்டான்.

இ. பி. கோடு, 403-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் நானும் எதிரியும் கூடி பொதுவில் ரூபாய் போட்டு இருவர்களும் உபயோகித்துக் கொள்ளுகிறதென்கிற நிபந்தனையின் பேரில் ரூ. 200-க்கு சிவலை நிறமுள்ள ஒரு குதிரையை வாங்கி சுமார் 6 மாசகாலமாக இருவர்களும் உபயோகப் படுத்திவந்தோம்.

இப்படியிருக்கையில் 10-?-08 ல் எதிரி என் லாயத்தில் கட்டியிருந்த குதிரையை தன் சவாரிக்காக கொண்டுபோவதாக என்னிடம் சொல்லிவிட்டு கொண்டுபோனவர் ஷை குதிரையை 4-வது சாக்ஷிக்கு என் தகவலாவது அனுமதியாவது இல்லாமல் விற்று கிரையத்தொகையில் எனக்குள்ளதை என்னிடம் கொடுக்காமல் பூராவையும் அயோக்கியமாய் தன் சொந்தத்துக்கு உபயோகித்துக்கொண்டார். அவரைக் கேட்டதில் சரியான ஜவாப்புச்சொல்லாமல் நீங்கள் செய்கிறதைச் செய்துகொள்ளுங்களென்று சொல்லி விட்டார். எதிரியினுடைய செய்கையானது இ. பி. கோடு 403-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

12-4-08. (ஒப்பம்.) அழகப்ப முதலியார்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது-வாறண்டு கேஸ்-படிகட்டவேண்டாம்-ஜாமீனில் விடலாம்-ராஜியாகக்கூடாது-2 வருஷம் காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்-எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.



64

### ருஜூசெய்யவேண்டிய அம்சங்கள்.

(1) ஒரு அசையும்பொருள் ஒருவனிறந்துபோகும்பொழுது அவன்வசமிருந்தது. (2) எதிரி இறந்துபோனவனுடைய வார்சுகளுக்கு அதைக் கொடாமல் அயோக்கியமான எண்ணத்துடன் தான் சொந்தத்துக்கு உபயோகப்படுத்திக்கொண்டான்.

பிராது:—என்னவென்றால் என் தகப்பனார் வீராசாமி நாயுடு என்பவர் என் கலியாணத்துக்காக 1-வது சாக்ஷியின் ஜவுளிக்கடையில் ரூ. 100-க்கு காஸிபட்டு விலைக்கு வாங்கிக்கொண்டு அது வாங்கின தினமாகிய இதற்குமுன் வந்த திங்கட்கிழமையன்று ராத்திரி 2-வது சாட்சியின் கிளப்பில் சாப்பிட்டுவிட்டு எதிரியின் வீட்டில் போய் ஷை பட்டையும் வைத்துக்கொண்டு படுத்துக்கொண்டிருந்தவர் திடீரென்று வாயுக்குத்திக்கொண்டு இறந்துபோய்விட்டார்.

இ. பி. கோடு, 404-வது பிரிவுப்படி

எதிரிக்கு, ஷை பட்டு என் தகப்பனாருக்குப்பின் எனக்குச் சேரவேண்டுமென்பது நன்றாகத் தெரிந்திருந்தும் ஷை பட்டை எனக்குக் கொடாமல் தன் வீட்டில் தன் சொந்தத்துக்கு உபயோகித்துக்கொண்டு விட்டார்.

இது சாக்ஷிகளுக்குத் தெரியும். ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

குறிப்பு:—ஷை பட்டு இப்போது எதிரி வீட்டிலிருக்கிறது. அதை எடுத்துக் கோர்ட்டில் ஆஜர்செய்யும்படி சோதனைவாறண்டு பிறப்பிவிக்கும்படிக் குத்திரவாக பிரார்த்திக்கிறேன்.

13-4-08. (ஒப்பம்.) துப்புசாமி நாயுடு.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது—வாறண்டுகேஸ்—படி கட்டவேண்டாம்—ஜாமீனில் விடலாம்—ராஜியாகக்கூடாது—3-வருஷம் காவலும் அபராதமும்-குற்றஞ் செய்தவன் இறந்துபோனவனிறக்குங்காலத்தில் அவனுடைய வேலைக்காரனாக யிருந்திருந்தால் 7-வருஷக் காவல்தண்டனை—ஸெஷன் கோர்ட்டு, ராஜதானி மே. அல்லது 1-2-வது வகுப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

65

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

எதிரி ஒப்புவிக்கப்பட்ட சொத்தை அயோக்கியமான எண்ணத்துடன் தன் சொந்தத்துக்கு உபயோகித்துக்கொண்டான்.

இ. பி. கோடு, 406-வது பிரிவுப்படி

பிராது:-நான் சென்னப்பட்டணம் போகவேண்டியதிருந்ததால்எனக்குப் பாத்தியப்பட்ட அடியிற்கண்ட சாமான்களை எதிரி வீட்டில் போடுவதற்காக எதிரி வீட்டுக்கு மாசம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வாடகைபேசி 3-மாதத்தில் திரும்பவந்து வாடகையைக் கொடுத்துவிட்டு சாமான்களை எடுத்துக்கொள்ளுவதாக ஒப்பந்தம்பேசி சாமான்களை எதிரிவீட்டில் போட்டுவிட்டு பட்டணம் போயிருந்தேன்.

நேற்றுவந்து வாடகையை வாங்கிக்கொண்டு சாமான்களைக் கொடுக்கும்படி கேட்டதில் எதிரி உடனே சாமான்களைக்கொடுக்காமல் நகட்டுதல் செய்துவந்தான்.

விசாரித்ததில் ஷை சாமான்களை 3, 4, சாக்ஷிகளுக்கு எதிரி விற்றுப்பேட்டு அதில் வந்த கிரையத்தொகையை தன் சொந்தத்துக்கு அநியாயமாய் அபகரித்துக்கொண்டிருக்கிறனென்று தெரியவருகிறது.

நான் எதிரியிடம் சொத்தை ஒப்புவித்திருந்தது 1, 2, சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

14-4-07. (ஒப்பம்.) வைத்தீனாதய்யர்.

சாமான்களின் விபரம்.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படி கட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—3-வரு காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம். ஸெஷன் கோர்ட்டு, ராஜதானி மே. அல்லது 1-2-வது வகுப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## 66

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி சாமான்களைக் கொண்டுபோகுந்தொழிலுள்ளவன். (2) அவனிடம் பிரஸ்தாப சாமான்களை ஒப்புவிக்கப்பட்டது. (3) அதை அவன் மோசஞ்செய்து சொந்தத்துக்கு உபயோகப்படுத்திக்கொண்டான்.

இ. பி. கோடு, 407-வது பிரிவுப்படி பிராது:—என்னவென்றால் எதிரி வழக்கமாக பிறருடைய சாமான்களை கூலிக்குச் சுமந்து பிழைக்கிறவன். நான் 14-4-1908-ல் என் சாமான்கள் அடியிற்கண்டவைகள் அடங்கிய பெட்டியை எதிரியிடம் கொடுத்து கும்பகோணம் ரெயில்வே ஸ்டேஷனில் கொண்டுபோய் வைக்கும்படி சொல்லி ஷை பெட்டியை எதிரியிடம் ஒப்பித்துவிட்டு நான் பின்னால் போனேன். நான் ரெயில்வே ஸ்டேஷனுக்குப்போய் எதிரியைத் தேடியதில் காணவில்லை. எதிரி ஷை சாமான்களடங்கிய பெட்டியுடன் 2-வது சாக்ஷியிடம் ரூ. 10-க்கு அடகுவைத்து ஷை ரூபாயை வாங்கி அநியாயமாய் அபகரித்துக்கொண்டான்.

இது சங்கதிகள் சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

15-4-08. (ஒப்பம்) சீதாராம நாயுடு.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படிகட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—7-வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷன் கோர்ட்டார், ராஜதானி மே. அல்லது 1-வது வருப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## 67

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

எதிரி தன்னிடம் வேலைக்காரனாக யிருந்தவனிடம் சொத்து ஒப்புவிக்கப்பட்டது. (2) அதை அவன் மோசம்செய்துவிட்டான்.

பிராது:—எதிரி என்னிடம் சென்ற 10-வருஷக்காலமாக குமாஸ்தா

இ. பி. கோடு, 408-வது பிரிவுப்படி வேலை பார்த்து வருகிறார். நான் 1-வது சாக்ஷியிடமிருந்து எனக்கு வரவேண்டிய ரூபாய் 300 ஷை 1-வது சாக்ஷி எனக்கு 10-4-1906 இரவு 8-மணிக்குக் கொடுத்ததை எதிரியிடம் கொடுத்து என் வீட்டில் என் தமயனிடம் கொண்டுபோய் கொடுக்கும்படி சொல்லிவிட்டு நான் மதுரைக்கு போய்விட்டேன். நான் இன்று வந்து என் தமயனைக்கேட்டதில் எதிரி தன்னிடம் ரூபாயைக் கொடுக்கவில்லையென்று சொல்லிவிட்டார்.



எதிரியைக் கேட்டதிலும், தான் ரூபாயை தன் அவசரச்செலவுக்குச் செலவழித்து விட்டதாகச் சொல்லுகிறார்.

நான் நம்பிக்கையாக ஒப்புவித்த ரூபாய் முன்னூறையும் எதிரி அயோக்கியமாய்த் தன் சொந்தத்துக்கு அபகரித்துக் கொண்டிருக்கிறார்.

இது சாக்ஷிகளுக்குத் தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

16-4-08. (ஒப்பம்) போய் சொல்லா ஜெய பிள்ளை.

நடவடிக்கை.

மேலே 65-வது பிராதுக்குச் சொல்லப்பட்டபடி.

## 68

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) சர்க்கார் வேலைக்காரனாகிய எதிரியிடம் ரூ. செலுத்தப்பட்டது. (2) அதை அவன் மோசம்செய்து வியாபித்துக்கொண்டான்.

பிராது:—என்னவென்றால் எதிரி என்னூர் கிராம முனிசீபு. நான் என் நிலங்களுக்காகச் செலுத்தவேண்டிய 1315-ம் பசலி சர்க்கார் தீர்வை ரூபா இ. பி. கோடு, 409-வது பிரிவுப்படி

100-யும் எதிரியிடம் செலுத்தி ஆஜர் ரசீதும் பெற்றிருக்கிறேன்.

அப்படியிருக்க நான் தீர்வை செலுத்தாதுபோல் என் சொத்தை ஜப்தி செய்யும்படி உத்திரவு வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

நான் ரூ. செலுத்தியது சாக்ஷிகளுக்குத் தெரியும். கிராம முனிசீபைக் கண்டு கேட்டதில் ஏதோ தன் செலவுக்கு ஷை தொகையை உபயோகப்படுத்திக் கொண்டு விட்டதாகவும் என் ரூ. கஜானாவில் செல்லாக்கவில்லை யென்றும் சொல்லுகிறார்.

நான் செலுத்திய ரூபாய் 100-யும் எதிரி அக்கிரமமாகவும் அநியாயமாகவும் அபகரித்துக் கொண்டிருக்கிறார். ஷையார் கொடுத்த ரசீதும் இத்துடன் ஆஜர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

17-4-08. (ஒப்பம்.) துரைசாமி தம்பிரான்.

நடவடிக்கை.

மேலே 66-வது பிராதுக்குச் சொல்லப்பட்டபடிதான்.

## 69

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி வாங்கினதாக அல்லது வைத்துக்கொண்டிருந்ததாகச் சொல்லப்பட்ட சொத்து திருடியாவது மிரட்டி வாங்கியாவது கொள்ளையடித்தாவது நம்பிக்கைமோசம் செய்தாவது அநியாயமாய் வியாபித்துக்கொண்டாவது சம்பாதிக்கப்பட்டதென்று ருஜுச்செய்யவேண்டும். (2) அப்படிப்பட்ட சொத்தென்று தெரிந்து எதிரி அயோக்கியமான எண்ணத்தோடு வாங்கினன் அல்லது வைத்துக்கொண்டிருந்தான்.

பிராது:—என்னவென்றால் என்வீட்டில் 16-3-08, இரவில் களவுபோன சொத்துக்களைப்பற்றி இக்கஊர் கிராமமுனிசீபிடமும் போலீசாரிடமும் ஜாபிதா எழுதிவைத்திருக்கிறேன். இ. பி. கோடு, 411-வது பிரிவுப்படி

அந்த ஜாபிதாவில்கண்டதும் என் வீட்டில் களவுபோனதுமான பச்சை பதித்த மோதிரம் 100 ரு. பெறுமானதை எதிரி, இனம் தெரியும் பேர் தெரியாத ஒருவனிடமிருந்து 50 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறதாகத் தெரியவருகிறது. அந்த மோதிரம் என்னுடையதென்பதும் என் வீட்டில் களவுபோயிருக்கிறதென்பதும் எதிரிக்குத் தெரிந்திருந்து எதிரி ஷை மோதிரத்தை குறைந்த விலைக்கு வாங்கியிருக்கிறார். இது திருட்டு சொத்தென்பது எதிரிக்குத் தெரியும்.

என்பக்கம் சாக்ஷிகளை விசாரித்தால் மேற்கண்ட சங்கதிகள் ருஜுவாகும்.

இப்போதும் அந்தமோதிரம் எதிரிவச மிருக்கிறது. சோதனை வாறண்டு பிறப்பிவித்து ஷை மோதிரத்தை எதிரியிடமிருந்து எடுத்து எதிரியை விசாரித்தாலே நியாயம் ருஜுவாகும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

18-4-08. (ஒப்பம்.) குப்புசாமி தேவர்.

குறிப்பு:—திருடியாவது, கொள்ளையடித்தாவது, வாங்கியாவது, ஒருவனுடைய ஸ்வாதீனத்தி லிருந்துகொண்டு வரப்பட்ட சொத்தும்; அக்கிரமமாய் உபயோகித்துக்கொள்ளப்பட்டாவது, ஒப்பிவித்திருந்து அபகரிக்கப்பட்டாவதிருக்கிற சொத்தும் திருட்டுசொத்தென்று சொல்லப்படும். இதில் எதையாவது, எதை திருட்டுசொத்தென்று தெரிந்து வாங்கினாலும், வைத்துக்கொண்டிருந்தாலும். 411-வது பிரிவுப்படி குற்றம் செய்தவனாவான்.

நடவடிக்கை.

பிடிக்கலாம்—வாறண்டுகேஸ்—படி கட்டவேண்டாம்—ஜாமீனில் விடக்கூடாது—ராஜியாகக்கூடாது—3-வருஷ காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்—செஷன் கோர்ட்டு, ராஜதானி மே. அல்லது 2-வது வகுப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## 70

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) திருட்டுச்சொத்தை மறைப்பதற்கு அல்லது கொண்டுபோவதற்கு எதிரி உதவிசெய்தான். (2) திருட்டுச்சொத்தென்று தெரிந்திருந்து அப்படி உதவிசெய்தான்.

இ. பி. கோடு, 414-வது பிரிவுப்படி பிராது:—என்னவென்றால் 3-4-08-ல் என் வீட்டில் களவுபோன மயிலைநிறமுள்ள காளைமாடுகள் 2-ம் எதிரிவீட்டி லிருப்பதாக துப்புத் தெரிந்து நான் போய் எதிரியைக் கேட்டதில் முதலாவது தனக்கு அதைப்பற்றி யாதொன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டான். அப்பால் மாட்டைக்கண்டு பிடித்துக்கொண்டு கேட்டதில் தனக்கு சிநேகிதனான சுப்பயத்தேவன் என்ற ஒருவன் 4-4-08 மாலை ஷை மாடுகளை தன் வீட்டில் கொண்டுபோய் கட்டிவைத்து ஷை மாடுகளை யாராவது விலைக்குக் கேட்டால் கொடுத்து விடும்படி சொல்லிப்போனதாகச்சொல்லுகிறான். ஷை மாடுகள் திருட்டுமாடென்று தெரிந்திருந்து ஷை மாடுகளை எதிரி தன்வசத்தில் ஒளித்து பந்தோபஸ்தாக வைத்துக்கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

19-4-08. (ஒப்பம்.) குப்புசாமி நாயுடு.

நடவடிக்கை.

மேலே 69-வது பிராதுக்குச் சொல்லப்பட்டபடிதான்.



## 71

# அத்தியாயம் 3.

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி ஒரு அசையும்பொருள் அல்லது அசையாப்பொருளுக்குக் கெடுதல் செய்தான், அல்லது அதை முன்னிருந்த நிலைமையமாற்றி அதின் உபயோகத்தைக் குறைத்துவிட்டான். (2) கெடுதியை உண்டாக்க எண்ணியாவது கெடுதல் உண்டாகுமென்று தெரிந்தாவது அப்படிச்செய்தான். (3) எதிரியினுடைய செய்கையானது அக்கிரமமானது.

பிராது:—என்னவென்றால் எதிரிக்கு என் நிலத்துக்கு அடுத்த வடபக்கத்தில் நிலமிருக்கிறது. என் நிலத்தைப் பார்க்கிலும் எதிரியின் நிலம் மேடாயுள்ளது. எதிரிநிலத்திலும் அதற்குவடக்கேயுள்ள புஞ்சைகளிலும் விழுகிற மழைத்தண்ணீர் என் நிலத்தின்வழி ஓட ஒட்டாமல் எதிரி நிலத்துக்கும் என் நிலத்துக்கும் மத்தியில் ஒருகால் உயரத்தில் ஒருகரை தொன்று தொட்டுயிருந்து வந்தது. எதிரி நிலத்தில் விழுகிற மழைநீரும் பூராவும் எதிரி நிலத்தின் தெற்குக் கடாசியில் மேற்குமுகமாய் ஓடி அதற்கு மேல்பக்கத்திலிருக்கிற ஓடையில்போய் விழுகிற வழக்கம். இ. பி. கோடு, 426-வது பிரிவுப்படி

இப்படியிருக்க எதிரி எனக்குக் கெடுதல்செய்ய நினைத்து மேல்கண்ட கரையை 17-4-08-ல் வெட்டிவிட்டான். அன்று இராத்திரி பெய்தமழையில் எதிரி புஞ்சையிலும் அதற்கு வடக்கேயுள்ள புஞ்சைகளிலும் விழுந்த மழைத்தண்ணீரெல்லாம் என் புஞ்சையில் விழுந்தோடி எனக்கு ரு. 25-வரை நஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறது.

இது சாக்ஷிகளுக்குத் தெரியும். இதைப்பற்றி உடனே ஷை கிராமம் கிராமமுனிசிபண்டை தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கின்றேன்.

20-4-08. (ஒப்பம்.)—சீரல் சங்கிலித்தேவன்.

குறிப்பு :—இதில் எதிரி தன்னிலத்திலிருந்த கரையை வெட்டி பின்னிட்டு மழைபெய்து இந்தவாதிக்குக் கெடுதல் நேரிடலாம்போலிருந்தால் எதிரியின் செய்கையானது கெடுதல் குற்றமாகமாட்டாது. ஒருவன்செய்த செய்கையினால் மற்றொருவனுக்குக் கெடுதல் சம்பவித்தாலொழிய, அந்தச் செய்கையானது குற்றமாகமாட்டாது. ஒருவன் செய்த செய்கையினால் பின்னிட்டு எப்போதாவது கெடுதல நேரிடுமென்றிருந்தால் அது 426-வது பிரிவுப்படிக்கு குற்றமாகமாட்டாது.

தன்னுடைய சொத்தென்று நம்பி அதுவிஷயத்தில் ஒருகெடுதலைச்செய்தால் அது கெடுதல் குற்றமாகமாட்டாது. 427-வது பிரிவுப்படிக்கு குற்றமாகவேண்டுமானால் 50-ரூபாய்க்காவது அதற்கு மேல்பட்டாவது நஷ்டம் யேற்பட்டிருக்கவேண்டும். அப்படியேற்பட்டிருந்தால் இ. பி. கோடு 426-வது பிரிவுப்படிக்குள்ள பிராது எழுதுவது போலவேயே 427-வது பிரிவுக்கும் பிராது எழுதவேண்டும்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது - ஸம்மன் கேஸ் - படி கட்டவேணும் - ஜாமீனில் விடலாம் - ஸர்க்கார் சொத்தில்லாத வேறு சொத்துக்கு கெடுதல் செய்யப்பட்டால் ராஜியாகலாம்-3-மாதம் காவல். அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம் - எந்த மாஜிஸ்திரேட்டும் விசாரிக்கலாம்.

## 75

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 71-வது பிராதுக்கு ருஜுச்செய்யவேண்டிய அம்சங்களும்—நெருப்பினுல் அல்லது வெடிக்கத்தக்க வஸ்துவினுல் கெடுதிசெய்யப்பட்டது—ரூ. 100-அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு நஷ்டமும், வியவஸாய விளைவைச்சேர்ந்ததாகயிருந்தால் ரூ. 10 - அல்லது அதற்கு மேற்பட்டு நஷ்டமும் ஸம்பவித்திருக்கிறது - எதிரி வேணுமென்று, அல்லது தன் செய்கையால் இவ்விதம் நஷ்டம் உண்டாகுமென்று தெரிந்திருந்து இப்படிச்செய்தான்.

இ. பி. கோ டு, 435-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் எதிரி அநேக கேசுகளில் தெண்டனைப்பட்டு கே.டி. யாக யிருக்கப்பட்டவன். அவனுக்கு காலக்ஷேபத்துக்கு யாதொரு மார்க்கமும் கிடையாது. அவன் ஒரு சரவை எருமைமாட்டை சம்ரக்ஷணை செய்துவருகிறான். அவன் சென்ற 5, 6 தினங்களுக்கு முன்னொரு நாள் என்னைக் கேளாமலென் தீவனப்படப்பில் தீவனம் பிடுங்கினுன். அதை நான் கண்டு கண்டித்ததில் அவனுக்கும் எனக்கும் வாக்குவாதம் வளர்ந்து அவன் நீ தீவனப்படப்பு இனி வைத்திருக்கிறதைப் பார்ப்போமென்று வர்மித்துவிட்டுப்போனுன். இதைப்பற்றி அன்றைத்தினமே அஸிஸ்டாண்டு போலீசு சூப்பிரெண்டாண்டு துரையவர்களுக்கு மனுப் போட்டிருக்கிறேன்.

இப்படிக்கிருக்கையில் நேற்றிரவு எதிரி என் மேல்கண்ட தீவனப்படப்பில் தீயை வைத்துக்கொளுத்திப் படப்புப்பூராவும் வெந்துபோய்விட்டது.

எதிரி தீவைக்கும்போது சாக்ஷிகள் கண்டு அவனை கைப்பிடியாக பிடித்திருக்கிறார்கள்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

24-4-08. (ஒப்பம்) ராமசாமி பிள்ளை.

குறிப்பு:—வியவசாய விளைவுக்குத்தீ முதலியது வைத்துக்கெடுதல் செய்கிறதாயிருந்தால் ரூ. 10 அல்லது அதற்கு மேல்பட்ட விலையுள்ளதாகயிருந்தாலும் 435-வது பிரிவுப்படி குற்றமாவதற்குப் போதுமானது.

### நடவடிக்கை.

பிடிக்கலாம் - வாறண்டு கேஸ் - படி கட்டவேண்டாம் - ஜாமீனில் விடலாம் - ராஜியாகக்கூடாது - 7-வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷ்ஷன் கோர்ட்டு, ராஜதானி மே. அல்லது 1-வது வகுப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## 76

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 71-வது பிராதுக்கு ருஜுச்செய்யப்பட்ட சக்கதிகளும் அழிக்கப்பட்ட பொருள் ஒரு வீடு, தேவாராதனைக்காக உபயோகப்படுத்த இடம் அல்லது சாமான் வைக்கிறதற்காக உபயோகப்படுகிற இடமென்றும் ருஜுச் செய்யவேண்டும்.

இ. பி. கோ டு, 436-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் எதிரி பேரில் நான் வழிப்பறி கேசு நடத்தி அவனுக்குத் தண்டனையாகி தண்டித்த காலத்துக்கு ஜெயிலிலிருந்து விட்டு எதிரி திரும்பிவந்து 2 மாசமாச்சுது.



ஜெயிலிலிருந்து வந்ததுமுதல் என்னைக்குடும்பத்தோடு தொலைத்து விடுவதாகப் பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தான். அதைப்பற்றி ஊரிலுள்ள பெரிய மனுஷியான் எல்லாரும் அவனைக்கண்டித்து மிருக்கிறார்கள். அப்படிக்கண்டித்தவர்களிடம் என்னை என் குடும்பத்தோடு எவ்விதத்திலாகிலும் தொலைத்துவிட்டு தான் தூக்குத்தெண்டனைக்குப் போய்விட்டாலும் பெரியதில்லை யென்று பதில் சொல்லியிருக்கிறான்.

இப்படிக்கிருக்கையில் நேற்று ராத்திரி எதிரி நான் குடியிருக்கிற வீட்டில் தீயை வைத்துவிட்டான். அப்போது தற்செயலாக சாக்ஷிகள் பார்த்து எதிரியை அவன் கையில் திப்பெட்டி சகிதம் பிடித்திருக்கிறார்கள்.

அவ்னைப்பிடித்த சாக்ஷிகள் கூப்பாடு போட்டு ஜனங்கள் வந்து கூடுமுன் என் வீட்டுக்கொல்லைப்பக்கத்தில் கொஞ்சம் வெந்துபோய்விட்டது. அப்பால் கூடின ஜனங்கள் எல்லாரும் கூரை பூராவையும் பிரித்துக்கீழே தள்ளிவிட்டார்கள். அதினுல் நானும் என் வீட்டிலுள்ள மற்றவர்களும் பிழைத்தோம்.

கி. மு. முதலியவர்களுக்கும் இது அன்று ராத்திரியே தெரியும்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

25-4-08. (ஒப்பம்) மயிலேறும் பெருமாள் நாடான்.

### நடவடிக்கை.

பிடிக்கலாம் - வாறண்டு கேஸ் - படிகட்டவேண்டாம் - ஜாமீனில் விடக்கூடாது - ராஜியாகக்கூடாது - 10வருஷ காவலும் அபராதமும் விதிக்கலாம்—ஸெஷ்ஷன் கோர்ட்டார் விசாரிக்கவேண்டும்.

## 77

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 71-வது பிராதுக்கு ருஜுச்செய்யவேண்டிய அம்சங்களும் - அப்படிக்கெடுதல் செய்யும்போது யாராவது கண்டு பிடித்துவிட்டால் அவர்களுக்கு மாணம், துன்பம் - தடை இவைகள் செய்யவாவது அல்லது இவைகள் செய்வதாகப் பயப்படுத்தவாவது எதிரி தயாராகயிருந்தான்.

இ. பி. கோ டு, 440-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் எதிரிக்கு என் நிலத்துக்கு அடுத்த கீழ் பக்கத்தில் நிலமிருக்கிறது எதிரியின் நிலத்துக்கு மேல்பக்கத்திலும் என் நிலத்துக்கு கீழ்பக்கத்திலுமிருக்கப்பட்ட பொழியைப்பற்றி தாவா யிருந்து கொண்டிருக்கிறது. எதிரியின் நிலம் மேடாயும் என் நிலம் கொஞ்சம் பள்ளமாயுமிருக்கிறது. எதிரி நிலத்தில் விழுகிற மழை ஜலம் அவனுடைய நிலத்தில் கட்டுகிறதாயும், அதற்கு என் நிலத்தின் வழியாக போக்குவிடவேண்டுமென்றும் எதிரி சொல்லிக்கொண்டு வந்தான். நான் அதற்கு சம்மதியாதபடியால் பொழி தன்னுடையதென்றும் அதை வெட்டிப்போடப்போவதாயும் சொல்லிக்கொண்டிருந்தான். அதை நான் வெட்ட வொட்டாமல் ஜாக்கிரதையாகத்தடுத்துக் கொண்டுவந்தேன்.

இப்படிக்கிருக்கையில் நேற்று மத்தியானம் என் பொழி என் சொந்த நிலத்து ஊத்துக்குள்ளேயே யிருக்கிறபடியால் நான் போய் சாக்ஷிகள் முன்னிலையில் எதிரியைத் தடுத்தேன். அப்போது எதிரி தடுக்கிறவர்களை துன்பம் முதலியதுகள் செய்வதற்காக தன் மடியில் பெரிய சூரிக்கத்தி கொண்டுவந்திருப்பதாயும் மிறித்தடுத்து எனக்கு உதவிக்கு வருகிறவர்களை கிட்டப்போகவொட்டாமல் செய்யும் பொருட்டு கம்புகள் சகிதம் ஆள்கள் பக்கத்தில் தயார் செய்[illegible] தெரியவந்தது.

நான்போய் தடுத்ததில் எதிரி மடியிலிருந்த சூரிக்கத்தியை உருவிக்கொண்டு என்னைக்குத்தவந்தான். சாக்ஷிகள் வந்துவிலக்கிவிட்டார்கள். எதிரி என் பொழியை 12 கெஜ நீளத்துக்கு வெட்டி அழித்துவிட்டான்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

26-4-08. (ஒப்பம்) ராக்கனபிள்ளை.

நடவடிக்கை.

பிடிக்கலாம் - வாறண்டு கேஸ் - படிகட்டவேண்டாம் - ஜாமீனில் விடக்கூடாது - ராஜியாகக்கூடாது - 7வருஷ காவலும் அபராதமும் விதிக்கலாம்- ஸெஷன் கோர்ட்டு, ராஜதானி மே அல்லது 1-வது வக்குப்பு மாஜிஸ்ட்ரேட்டு விசாரிக்கலாம்.

## 78

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) பிரஸ்தாபச்சொத்து வாதியின் அனுபோகத்திலிருந்தது. எதிரி அதில் அக்கிரமமாகப் பிரவேசித்தான் அல்லது நியாயமாகப் பிரவேசித்து அப்பால் அங்கே அக்கிரமச்செய்கைகளைச் செய்வதற்காக அல்லது வாதியைப் பயப்படுத்தும்பொருட்டு, அல்லது அவனுக்கு இடைஞ்சல் செய்யும்பொருட்டு அல்லது அவனைக்கோபமூட்டும் பொருட்டு அங்கே இருந்தான்.

இ. பி. கோ. 447-வது பிரிவுப்படி

பிராது:—என்ன வென்றால் எதிரிக்கு என் தோட்ட நிலத்துக்கு பக்கத்தில் நிலமிருக்கிறது. என் தோட்டத்தில் நாலு பக்கத்திலும் வேலிபோட்டு சாகுபடி செய்திருக்கிறது. எதிரி ஷை வேலி யிருப்பதால் தன் நிலத்திலிருக்கிறபயிர்களுக்கு யேதோ பாதகமிருப்பதாயும் ஆகையால் ஷை வேலியை நான் எடுத்துப்போடவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டிருந்தான். நான் அதைக் கேழ்க்கவில்லை. அதற்காக எதிரி இன்று காலையில் அவனுக்கு யாதொரு பாத்தியதையில்லாததும் என் சுவாதீனத்திலிருக்கிறதுமான என் தோட்டத்திலிருக்கிறவேலியை பிரிக்கவேணுமென்கிறஎண்ணத்துடனும் எனக்கு இடஞ்சல் செய்யவேணுமென்கிற எண்ணத்துடனும், என் தோட்டத்தில் அநியாயமாய் நுழைந்து வேலியைப் பிரித்துக்கொண்டிருந்தான்.

இது சாட்சிகளால் தெரிந்து நான்போய் தடுத்தும் கேழ்க்கவில்லை.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

27-4-08. (ஒப்பம்) சுகாமூர்த்திப்பண்டிதன்.

நடவடிக்கை.

பிடிக்கலாம் - ஸம்மன் கேஸ் - படிகட்டவேண்டாம் - ஜாமீனில் விடலாம் - ராஜியாகலாம் - 3 மாதம் காவல் அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம் - எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.

## 79

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

மேலே 78-வது பிராதுக்கு ருஜூச்செய்யவேண்டிய அம்சங்களும்—எதிரி ஒரு கட்டடம், கூடாரம் கப்பல் முதலியவற்றில் அக்கிரமமாகப் பிரவேசித்தான் அல்லது தாமசித்தான்—அந்த இடமானது குடியிருப்புக்காவது, அல்லது தேவாராதனைக்காவது அல்லது சாமான் வைப்பதற்காவது உபயோகப்படுத்திவரப்பட்டது.

இ. பி. கோ. 448-வது பிரிவுப்படி

பிராது:—என்னவென்றால் எதிரியின் கடையில் நான் சம்பளத்துக்கிருந்து வந்தேன். அப்படிக்கிருந்ததில் எதிரி என்னை நடத்திவந்த விதம் எனக்குத்திருப்திகரமாக யில்லாதபடியால் அவருடைய கடையில் சம்பளத்துக்கிருந்து வேலைபார்க்க எனக்கு மனமில்லை. இன்று முதல் கடைக்கு வர



மாட்டேனென்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். அப்படிக்கிருக்கையில் இன்று காலையில் எதிரி என் வீட்டு வாசலில்வந்து என்னைத் தன் கடைக்கு வரும்படி கூப்பிட்டார். எனக்கு வர இஷ்டமில்லையென்று நான் என் வீட்டுக்குள்ளிருந்த வாக்கில் சொல்லியும் எதிரி கேழ்க்கவில்லை. வெளியிலிருந்த வாக்கில் கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தார். நான் உடனே கதவைப் பூராவும் சாத்தவொட்டாமல் தன் கைகளினால் கதவைத்தள்ளிக்கொண்டும் தன் ஒரு காலை என் வீட்டுக்குள் வைத்துக்கொண்டு நின்றுகொண்டும் என்னை வைதுகொண்டு நின்றார்.

சாக்ஷிகள் வந்து எதிரியைப் போகச்சொன்னார்கள்.

இதைப்பத்தி கி. மு. விடம் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

ஆகையால், விசாரித்து நீதிசெலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

28-4-08. (ஒப்பம்) ராமவேளான்

குறிப்பு:—இந்தப் பிரிவுப்படி குற்றமாக வேண்டுமானால் 447-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்துக்கு வேண்டிய சங்கதிகள் எல்லாம் ஏற்படவேண்டும்.

குறிப்பு:—(1) மரண தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தைச் செய்யும் பொருட்டு ஒரு கட்டடத்தில் நுழைந்தால் அதற்கு 448-வது பிரிவுப்படிக்குள்ள பிராதைப்போல 449—வது பிரிவுபோட்டு பிராது எழுதவேண்டும்.

(2) ஆயுசபரியந்தம் தண்ணீர்மேலேற்றும் தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தைச் செய்யும்பொருட்டு வீட்டினிடமாய் நுழைந்தால் அதற்கு மேல்க்கண்டபடி 450-வது பிரிவுபோட்டு பிராது எழுதவேணும்.

(3) காவல் தண்டனை விதிக்கக்கூடிய குற்றச்செய்கையைச் செய்யும்படிக்காக ஒரு வீட்டினிடமாய் நுழைந்தால், மேல்கண்டபடி 451-வது பிரிவுபோட்டு பிராது எழுதவேண்டும்.

நடவடிக்கை.

பிடிக்கலாம் - வாறண்டு கேஸ் - படிகட்டவேண்டாம் - ஜாமீனில் விடலாம் - ராஜியாகலாம் - 1வருஷ காவல் அல்லது ரூ. 1000 வரை அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம் எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.

## 80

### ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

எதிரி அக்கிரமமாகக் கட்டடத்தில் நுழைந்தான் - வாதிக்குத் துன்பம், தாக்குதல், தடை இவைகள் செய்யவாவது அல்லது செய்வதாகப் பயமுறுத்துவதாகச்சொல்லவாவது, வேண்டும் எத்தனங்கள் செய்துகொண்டு அந்தக் கட்டடத்தில் அக்கிரமகாக நுழைந்தான்.

பிராது:—என்னவென்றால் எதிரிக்கு சித்தூர் தாலூகாவில் போலீஸ் கான்ஸ்டேபில் வேலையிருப்பது எனக்குத்தெரியும். அவர் இன்று காலை 10-மணிக்கு துராகிருதமாக என் வீட்டுக்குள் வந்து, என்னைப் பிடித்துக்கொண்டுபோய் மாஜிஸ்டிரேட்டுக்கோர்ட்டில் ஆஜர் செய்யும்படி வாறண்டிருப்பதாய்ச் சொல்லி யேதோ காயிதத்தை மடித்தவாக்கில் காட்டினான். அந்த வாறண்டின் மூலமாக என்னைப்பிடித்துக்கொண்டு போவதற்குத் தனக்கு அதிகார யிருப்பதாயும், ஆகையால் தன் கூட நான் போகவேண்டுமென்றும் சொன்னான்.

இ. பி. கோ. 452-வது பிரிவுப்படி

நான் கொஞ்சம் யோசனை செய்துகொண்டிருந்ததில் என் கைகளைப் பிடித்து இழுத்தான். நான் பயந்து எதிரியின் கூடவே சுமார் 2 மையில் தூரம் போனேன். போகும்போது குதிரை மேல் யாரோ ஒரு துரை சவாரி செய்துகொண்டு கொஞ்சதூரத்தில் போய்க்கொண்டிருந்தார். அந்த துரையை

நான் கூப்பிட்டேன். என்னைவிட்டு விட்டு அப்போது உடனே எதிரி நழுவிப்போய்விட்டார்.

எதிரி இப்படிச்செய்தது சாக்ஷிகளுக்குத் தெரியும்.

எதிரி இப்படிச்செய்தது என் விரோதிகளின் ஏவுவின்பேரிலிருக்கலாம்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

நடவடிக்கை.

29-4-08. (ஒப்பம்) ராமசாமி தாசரி.

நடவடிக்கை.

பிடிக்கலாம் வாறண்டு கேஸ் - படிகட்டவேண்டாம் - ஜாமீனில் விடக்கூடாது. 7 வருஷம் காவலும் அபராதமும் விதிக்கலாம் - ஸெஷன் கோர்ட்டார் ராஜதானி மே. அல்லது 1, 2-வது வகுப்பு மே. இவர்கள் விசாரிக்கலாம்.

## 81

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) கடத்திக்கொண்டு போகப்பட்ட பெண்பிள்ளை வேறு ஒருவனுடைய பெண்சாதி (2) கடத்திக்கொண்டு போகப்படப்பட்ட காலத்தில் அவள் அவனுடைய புருஷனுடையவாவது அல்லது அவனுக்காகவேறொருவருடைய ஸம்ரக்ஷணையிலாவதிருந்தாள்-(3) எதிரி கடத்திக்கொண்டுபோனான் அல்லது ஒளித்துவைத்தான், (4) வேறொருவனுடைய பெண்சாதி யென்று தெரிந்திருந்து கடத்திக்கொண்டு போனான் அல்லது ஒளித்துவைத்தான், (5) அவளுடன் தேகசம்மந்தப்படும்படிக்காக அவளைக்கடத்திக்கொண்டு போனான்.

இ. பி. கோ டு, 498-வது பிரிவுப்படி. பிராது:—என்னவென்றால் என்னுடைய பெண்சாதி பாலாம்பாளை என் வீட்டில் வைத்துவிட்டு நான் மதுரைக்குப்போயிருந்தேன். 4 நாள் கழிந்தபிற்பாடு நேற்றுத் திரும்பி வீட்டுக்குப்போய்ப் பார்த்ததில் என் பெண்சாதியைக்காணவில்லை.

அப்பால் விசாரித்ததில் என்னுடன் அதிக சிநேகமாயிருந்து என் வீட்டுக்கு அடிக்கடி வந்துகொண்டிருந்த எதிரி ஷை பாலாம்பாள் எனக்கு நியாயமானபடி விவாகம் செய்யப்பட்டு என்னுடன் வாழ்ந்துகொண்டு என் வீட்டிலிருந்தது தெரிந்திருந்தும் ஷை பாலாம்பாளைத் தன்னுடன் தேகசம்மந்தப்படுத்திக்கொள்ளும்பொருட்டு கடத்திக்கொண்டு போய் இதற்கு 4 மயில் தூரமுள்ள புதூரில் வைத்திருப்பதாக என் பக்கம் சாக்ஷிகளால் தெரியவந்தது.

அங்கே போய்ப் பார்த்ததில் என் ஸம்சாரமிருந்தாள். எதிரி ஓடிவிட்டான். அவளைக்கேட்டதில் எதிரி யேதோ மிட்டாய் கொண்டுவந்து தனக்குக்கொடுத்ததாகவும் அதைத்தின்றது முதல் தனக்கு எதிரிபேரில் பிரியமிருப்பதாகவும் தன்னை எதிரி கூட்டிவந்து அங்கே வைத்திருப்பதாயும் சொன்னாள். இது சங்கதியை கிராமமுனிசிபிடம் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

ஆகையால், எதிரியையும் சாக்ஷிகளையும் வருத்தி விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

—-08. (ஒப்பம்) குப்புசாமி அய்யர்.



நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது-வாறண்டு கேஸ்-படிகட்டவேண்டாம்-ராஜியாகலாம்-2-வருஷம் காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்-ராஜதானி மே. 1-2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரிக்கலாம்.

## 82

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

எதிரி ஒரு தஸ்தாவேஜு (அதாவது ஒரு எழுத்துமூலமான நடவடிக்கையைச்) செய்தான், அதாவது எழுதினான், கையெழுத்துப்போட்டான், முகர் வைத்தான், அல்லது தஸ்தாவேஜில் ஒரு பாகத்தையாவது முடித்ததற்குள்ள அடையாளங்களைச் செய்தான்.

(2) அப்படிச்செய்ததானது, அது மேல்கண்டபடி செய்யப்பட்டவனல்லாதவேறு மனுஷனால்செய்ததாகவாவது, அல்லது அவனுடைய அனுமதியின்பேரில் செய்ததாகவாவது, அல்லது ஒரு குறிப்பிடப்பட்ட காலத்தில் செய்யப்பட்டதாகவாவது நம்பும்படிக்கு மோசடியாய் அப்படிச்செய்தான்.

(3) யாரால் அந்த தஸ்தாவேஜு அல்லது எழுத்து முதலியது பிறப்பிக்கப்பட்டதாக நம்பும்படி செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நபர் அதைப்பிறப்பிக்கவில்லை. அல்லது எந்தக்காலத்தில் அது பிறப்பிவிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதோ அந்தக்காலத்தில் அது பிறப்பிவிக்கப்படவில்லை.

(4) யாரால் அல்லது யாருடைய அனுமதியின்பேரில் ஷை தஸ்தாவேஜு எழுதப்பட்டதாக அல்லது பிறப்பிவிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதோ, அல்லது எந்தக்காலத்தில் அந்ததஸ்தாவேஜு பிறப்பிவிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதோ, அந்த நபரால், அல்லது அந்த நபருடைய அனுமதியின்பேரில் அல்லது அந்தக்காலத்தில் ஷை தஸ்தாவேஜு பிறப்பிவிக்கப்படவில்லையென்று எதிரிக்குத்தெரியும்.

(5) எதிரி, அயோக்கியமானவும் மோசடியானவும் எண்ணத்துடனும், நஷ்டம் அல்லது கெடுதல் செய்யவேண்டுமென்றாவது அல்லது தனக்கு யேதாவது பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணியாவது, பிறரை சொத்தை இழக்கும்படி செய்யும்பொருட்டாகவாவது அல்லது வேறு மோசம் செய்யவேண்டுமென்று எண்ணியாவது செய்தான்.

(6) ஒரு தஸ்தாவேஜு பிறப்பிவிக்கப்பட்டதின்பின் அதில் எதையாவது மோசடியாக மாற்றி எழுதிக்கொண்டான்.

பிராது:—என்னவென்றால் எதிரி ராமசுப்பையர் எனக்கு வெகு நாளாகத்தெரிந்தவர். அவருடைய நடத்தைப் பிசகினால் அவருடைய சொத்துக்களை யெல்லாம் போக்கடித்துவிட்டு இப்போது சாப்பாட்டுக்கே யில்லாத நிலைமையிலிருக்கிறார். அவர், சிவகிரி ஜமீன்தாரவர்கள் மிகவும் தர்மிஷ்டராகயிருப்பதாகவும் நான் அவர்களுக்கு சிபார்சுக்காயிதம் கொடுக்கும் விஷயத்தில் எனக்கு யேதும் பொருள் உதவிசெய்வார்களென்றும் என்னிடம் சிபார்சுக்கடிதம் கேட்டார். நான் கொடுக்கமுடியாதென்று சொல்லிவிட்டேன். அதன்பேரில் எதிரி, ஷை சிவகிரி ஜமீந்தார் அவர்களுக்கு நான் எழுதிய லெட்டர்போல ஒரு லெட்டர் எழுதிக்கொண்டு அதில் என் கையெழுத்தைப்போல போட்டுக்கொண்டு அந்த லெட்டரை சிவகிரி ஜமீன்தாரவர்களிடம் கொண்டு கொடுத்துவிட்டார். ஷை ஜமீன்தார் அவர்கள் ஏதோ சந்தேகித்துக்கொண்டு எதிரியை மறுநாள் வரும்படி சொல்லிவிட்டு எனக்கு ரகசியமாகச்சொல்லியனுப்பினார்கள். நான் அன்று ராத்திரியே அவர்களிடம் போனேன். லெட்டரைப்பார்த்தேன். என் கையெழுத்துப்போல போட்டிருக்கிறது. ஆனால் அது என் கையெழுத்தல்ல.

இ. பி. கோ டு, 465-வது பிரிவுப்படி.

மறுநாள் காலை எதிரி ஜமீந்தார் அவர்களிடத்தில் வந்தார். நானுமிருந்தேன். என்னைக்கண்ட உடன் எதிரி மெள்ள நழுவிப்போக ஆரம்பித்தார். நானெதிரியை இப்படிச்செய்ய நியாயமாவென்று கேட்டதற்கு இப்போது என்ன செய்து விட்டேன் யாசகம் கொடுக்க இஷ்டமுண்டானால் கொடுக்கட்டும் இல்லை யென்றால் போய்விடுகிறேனென்றார்.

எதிரி நானெழுதியதுபோல் கள்ளத்தனமாக லெட்டரை எழுதிக்கொண்டு நானெழுதின லெட்டரதானென்று சிவகிரி ஜமீந்தாரவர்களை நம்பும்படி செய்து அவர்களை ஏமாற்றி ஷை ஜமீந்தாரவர்களிடமிருந்து பொருளை அபகரித்துக்கொள்ளும்படியாக இவ்விதம் எதிரி சிருஷ்டனை செய்திருக்கிறார்.

எதிரியின் செய்கையானது. இ. பி. கோடு 465-வது பிரிவுப்படி குற்றமாகிறது. எதிரி எழுதிய சிருஷ்டனை லெட்டரையும் இந்தப்பிராதுடன் ஆஜர் செய்திருக்கிறேன்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிராத்திக்கிறேன்.

1-5-08. (ஒப்பம்) : பிரதாப கேசயியர்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது—வாறண்டு கேஸ் -படிகட்டவேண்டாம்-ஜாமீனில் விடலாம்--ராஜியாகக்கூடாது—இரெண்டுவருஷ காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்- ஸெஷனஷன் கோர்ட்டார், ராஜதானிமே, அல்லது 1-வது வகுப்புமே, இவர்கள் விசாரிக்கலாம்.

83

அவதூறு என்னும் குற்றத்தைப்பற்றி இ. பி. கோடு 499-வதுபிரிவில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கவனமாக படிப்பதனால் சில செய்கைகளும், பிரஸ்தாபங்களும் பார்க்கிறவர்களுக்கும் கேழ்கிறவர்களுக்கும் அவதூறாகத் தோற்றினாலும் வாஸ்தவத்தில் அவைகள் அவதூறிலிருந்து விலக்கப்பட்டிருப்பது தெரியவரும். அவதூறு என்னும் குற்றமாக வேண்டியதற்கு முக்கியமான அம்சங்களெல்லாம் அடியில்கண்டவைகள்தான்:— அவதூறான பிரஸ்தாபத்தை அல்லது செய்கையைச் செய்பவன் அவதூறு செய்யப்படப்பட்டவனுக்குக் கெடுதல், நஷ்டம், கஷ்டம், மனவருத்தம் இவைகளை உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்துடனாவது, அல்லது, இவைகள் உண்டாகக்கூடியதென்றாவது தெரிந்திருந்து ஒரு சங்கதியைச் செய்தாலும் சொன்னாலும் அது அவதூறாகும், ஆனால் அது உண்மையாகவும் பொதுஜன நன்மையை உத்தேசித்துச் செய்யப்பட்ட அல்லது சொல்லப்பட்டதாகவுமிருந்தால் அது அவதூறாகமாட்டாது.

ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) அவதூறான விஷயம், வாய்மொழியாகச் சொல்லப்படாதா, மற்றவர்கள் படிக்கும்படியாக எழுத்து மூலமாய் யெழுதப்படாதா, அல்லது அடையாளங்களினால் செய்யப்பட்டதாவென்பது. (2) அது வாதியைப்பற்றித்தான் சொல்லப்பட்டது. (3) எதிரிதான் அப்படிச் செய்தான். (4) அதை பகிரங்கமாகஅப்படிச் செய்தான். (5) அப்படிச் செய்வதனால் வாதியின் மதிப்பைக் குறைக்கவேண்டுமென்றாவது, குறைந்துவிடக்கூடுமென்றாவது தெரிந்திருந்து அப்படிச் செய்தான்.

பிராது:—என்னவென்றால் எனக்கு புதூர் குடியிருப்பு ஜமீந்தாருடைய
இ. பி. கோடு. 500-வது பிரிவுப்படி பெண்ணைக் கலியாணஞ்செய்வதாக நிச்சயித்திருந்தது. அது சரியான பெரிய இடத்துப் பெண்ணென்று அநேகர்கள் அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள திருஷ்டி வைத்திருந்தார்கள். என் கலியாணத்தைக் கெடுத்துவிட எண்ணி வேலை செய்யும் பொருட்டாக அவர்களில் யாருடைய



ஏவுதலின் பேரிலோ எதிரி, நான் பறச்சியுடன் தேக சம்மந்தப்பட்டதாகப் பிரஸ்தாபித்தது என் அடியில்கண்ட சாக்ஷிகளால் எனக்குத் தெரியவந்தது. அந்தச் சாக்ஷிகளைக் கேட்டதில் இது வெமாராரம் ஊரெல்லாம் எதிரியால் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

எதிரியின் செய்கையினால் மேற்படி புதூர் குடியிருப்பு ஜமீந்தாருடைய பெண்ணை எனக்குக் கலியாணஞ்செய்து கொடுக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். என்னை என் ஜாதியிலிருந்து விலக்கி வைத்திருக்கிறார்கள். எனக்கு எங்கே போனாலும் அவமானமாயிருக்கிறது.

எதிரி வேணுமென்றே எனக்கு இவ்விதமான கஷ்டம், நஷ்டம், மனவருத்தம், இடைஞ்சல் இவைகளை உண்டுபண்ண வேண்டுமென்று சொல்லியே இவ்விதம் செய்திருக்கிறான். எதிரியின் செய்கையானது, இ. பி. கோடு 500-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

ஆகையால், கிருபை செய்து விசாரித்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கிறேன்.

2-5-08. (ஒப்பம்) முத்துத்தாண்டவராயபிள்ளை.

நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாது——வாறண்டு கேஸ்——படிகட்டவேண்டாம் - ஜாமீனில் விடலாம் - ராஜியாகலாம் - 2 வருஷம் காவல், அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம் - ஸெஷஷன் கோர்ட்டு, ராஜதானி மேஜிஸ்ட்ரேட்டு அல்லது 1-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு விசாரிக்கலாம்.

84

ருஜூச்செய்யவேண்டிய அம்சங்கள்.

(1) எதிரி வாதியை மானபங்கமாகப் பேசிக் கோபமூட்டினான். (2) அப்படி வேணுமென்று மனதாரச் செய்தான். (3) அப்படிச்செய்து வாதியைக் கோபமூட்டினான். (4) அப்படிச் செய்ததினால் வாதி கோபமடைந்து சேமை சமாதானத்தைக் கெடுக்கும்படி கலகம் செய்யும்படிக்காவது அல்லது வேறு குற்றச் செய்கையைச் செய்யும்படிக்காவது நேரிடும்.

பிராது:—என்னவென்றால் எதிரி மாடசாமித்தேவன் இந்த ஊரி இ. பி. கோடு. 504-வது பிரிவுப்படி
லுள்ள பிரபல துஷ்டர்களிலொருவன். அவனுடைய மாடுகள் வழக்கமாக என்னுடைய தோட்டத்திலுள்ள பயிர்களை மேய்ந்து அழித்துக்கொண்டு வந்தது. அவனிடம் அநேக தரம் சொல்லியும் அவன் கவனிக்கவில்லை. இன்று காலையில் அவனுடைய மாடுகளில் 2 என் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தவைகளை பவுண்டில் அடைக்கும்படி சொல்லிவிட்டேன்.

அதற்காக எதிரி இன்று பகல் 12-மணி சுமாருக்கு என்வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு என்னைப்பார்த்து "பாப்பாரப்பயலே என்னை இன்னானென்று தெரிந்துகொள்ளவில்லையோடா, உன்னைச் செருப்பினாலடித்தால் என்ன வந்துவிடும்" என்று அவமானமாகப் பேசினான்.

உயர் குலத்தைச் சேர்ந்தும் என் கிராமத்தில் தக்க அந்தஸ்துடனும் ஸர்க்காருக்கு ரூபா 800 பேஷ்கஷ் செலுத்துகிறவனுமிருக்கிற என்னை இழிகுலத்தானாகிய மறவன் இப்படிப் பேசி என்னைக் கோபமூட்டியதானது இ. பி. கோடு 504-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

இது சங்கதிகள் நடக்கும்போது இந்த ஊர் கிராம முனிசீபும் என் பக்கம் மற்றச்சாக்ஷிகளும் என்கூடயிருந்தவர்கள் என்னை ஸமாதானஞ்செய்து என் வீட்டிற்குள் கூட்டிக்கொண்டு போனார்கள்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்த பிரார்த்திக்கிறேன்.

3-5-08. (ஒப்பம்) ராஜகோபாலையங்கார்.

## நடவடிக்கை.

வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாது—வாறண்டு கேஸ்—படிகட்ட வேண்டாம்—ஜாமீனில் விடலாம்—ராஜியாகலாம்—2 வருஷம் காவல் தண்டனை, அல்லது அபராதம் அல்லது 2ம் விதிக்கலாம்—எந்த மாஜிஸ்ரேட்டும் விசாரிக்கலாம்.

## 85

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

எதிரி, வாதிக்காவது, வாதியைச்சேர்ந்த வேறயாருக்குமாவது, அல்லது அப்பேர்ப்பட்டவர்களுடைய தேகத்துக்காவது, சொத்துக்காவது, அல்லது கியாதிக்காவது, கெடுதல் செய்வதாக பயமுறுத்தினான் - வாதியையாவது அல்லது அவனைச்சேர்ந்த வேறொருவனையாவது பயப்படுத்தும்பொருட்டு அவ்விதம் எதிரி வர்மித்தான் - வாதியல்லது அவனைச்சேர்ந்த யாராவது நியாயமாகச் செய்யவேண்டியதைச் செய்யாமலிருக்கும்படிக்காவது அல்லது செய்யத்தகாத வேலையைச் செய்யும்படி கட்டாயப்படுத்தும்படிக்காவது அப்படி எதிரி வர்மித்தான்.

பிராது:—என்னவென்றால் எதிரி என்னூரிலுள்ள ஒரு மறவன். அவனுக்கு ஜீவனம்சத்துக்கே ஐவேஜூ கிடையாது. அவன் நேற்று என்னிடம் வந்து என் தோட்டத்திலுள்ள கத்திரி நாத்தில் தனக்குக்கொஞ்சம் கொடுக்கவேண்டுமென்பதாக என்னிடம் கேட்டான். நான் கொடுக்கமுடியாதென்று சொல்லிவிட்டேன். அதற்காக எதிரி என்னுடைய மகனிடம் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்போது "உங்கள் தோட்டத்திலுள்ள பயிர்களை எல்லாம் எப்படியாவது நாசம்செய்து விடாவிட்டால் நான் மறவனல்ல" வென்றும் "இதைப்போய் உங்கள் தகப்பனாரண்டை சொல்லுங்கள்" என்றும் சொல்லி வர்மித்திருக்கிறான். இது நடந்தது இன்று காலை. எதிரி எதையும் செய்யக்கூடிய துஷ்டன். இப்படி முன் அநேகர் வீட்டில் செய்துமிருக்கிறான்.

இதைப்பற்றி கிராமமுனிசீபிடம் தெரியப்படுத்தியதில் அவனைப்பற்றி ரிப்போர்ட்டுச் செய்யவே அவர் பயப்படுகிறார்.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

4-5-08.

(ஒப்பம்) சுந்தரேசய்யர்.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது - வாறண்டு கேஸ் - படிகட்டவேண்டாம் - ஜாமீனில் விடலாம் - ராஜியாகலாம் - மூன்று மாதம் காவல் அல்லது அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம் - ஸெஷன்ஸ் கோர்ட்டு, ராஜதானிமே அல்லது 1-வகுப்பு மேஜிஸ்ட்ரேட் இவர்கள் விசாரிக்கலாம்.

## 86

### பவுண்டாக்ட்டு.

(1871-ம் வருஷத்து 1-வது ஆக்ட்டு) படிக்குள்ள கேசுகள்.

எதிரியின் கால் நடைகள் வாதியின் பயிர் முதலியதுகளில் பிரவேசித்து தின்றோ அல்லது மிதித்தோ அழித்துக்கெடுதல் செய்தது - அவைகளை வாதி பவுண்டுக்கு ஓட்டிக்கொண்டுபோனான், அல்லது ஓட்டிக்கொண்டு போக யத்தனப்பட்டான் - அப்படி பவுண்டுக்கு ஓட்டிக்கொண்டு போகவொட்டாமல் கால் நடைகளை மறித்து எதிரி ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

பவுண்டு ஆக்ட்டு 24-வது பிரிவுப்படி பிராது:—என்னவென்றால் எதிரிகளுடைய ஆடுகள் 100 வரை என் நஞ்சைப் பயிரில் இன்று காலை மேய்ந்துகொண்டிருந்தன. அவைகளை நானும்



என் பக்கம் சாக்ஷிகளும்பக பவுண்டுக்கு ஓட்டினோம். எதிரிகள் வந்து எங்களை உடாயித்து ஆடுகளைப்பத்திக்கொண்டு போய்விட்டார்கள்.

இது பவுண்டு ஆக்ட்டு 24-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதி செலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

(ஒப்பம்) கிருஷ்ணசாமிப்பிள்ளை.

நடவடிக்கை.

பிடிக்கக்கூடாது—ஸம்மன் கேஸ்—படிகட்டவேணும்—ஜாமீனில் விடலாம்—ராஜியாகக்கூடாது—எந்த மாஜிஸ்ரேட்டும் விசாரிக்கலாம். 6 மீ. காவல் அல்லது ரூபா 500 அபராதம் அல்லது 2-ம் விதிக்கலாம்.

## 87

### ருஜுச்செய்யவேண்டிய அம்சங்கள்.

எதிரி வாதியின் கால் நடைகளை பவுண்டுக்கு ஓட்டினான் - அவைகள் எதிரியினுடையவாவது அல்லது யாருடையவாவது. பயிர் முதலியதுகளில் மேய்ந்துகொண்டாவது அல்லது வேறவகையில் எந்தப்பொருளுக்கும் கெடுதல் செய்யவாவதில்லை - அவைகளை எதிரிகள் வேணுமென்று அநியாயமாய் பவுண்டுக்கு ஓட்டினார்கள்.

பிராது:—என்னவென்றால் எதிரிகள் என்னூர் காவல்காரர்கள் - அவர் பவுண்டு ஆக்டு, 22-வது
கள் என் உழவுமாடுகளை ஒரு நாளைக்குத் தங்கள் நிலத்தில் ஏருமாக உழ பிரிவுப்படி
வேண்டியதற்காகக் கேட்டார்கள், நான் கொடுக்கவில்லை. அதற்காக எதிரிகள் என் காளை மாடுகள் பசுமாடுகள் இவைகள் 10 உருப்படிகளை என் பண்ணைக்காரன் தருவில் மேய்த்துக்கொண்டிருந்தவைகளை அக்கிரமமாக பவுண்டில் கொண்டுபோய் நேற்று அடைத்து விட்டார்கள்.

அது சங்கதி தெரிந்து நான் போய் ரூ. 1-4-0 கொடுத்து ரசீது பெற்று அவைகளைத் திருப்பிவந்திருக்கிறேன். ரூபாய் செலுத்தியதற்குப் பெற்ற ரசீதையும் இத்துடன் ஆஜர் செய்திருக்கிறேன்.

என் மாடுகள் தருவில் மேய்ந்துகொண்டிருந்தவைகளை எதிரிகள் அக்கிரமமாகப் பவுண்டிலடைத்ததற்குச் சாட்சிகளிருக்கின்றன.

எதிரிகளுடைய செய்கையானது பவுண்டாக்ட்டு 22-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

ஆகையால், கிருபைசெய்து விசாரித்து நீதிசெலுத்தப்பிரார்த்திக்கிறேன்.

(ஒப்பம்) அரியமுத்துப்பிள்ளை.

பிடிக்கக்கூடாது - ஸம்மன்கேஸ் - படிகட்டவேணும் - ஜாமீனில் விடலாம் - ராஜியாகலாம் - அக்கிரமமாய்ப் பவுண்டில் அடைக்கப்பட்ட கால்நடைகளை பவுண்டிலிருந்து திருப்புவதற்குச் செலுத்தவேண்டிய தொகைபோடு ரூபா 100 வரை அபராதம் போடலாம் - எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கலாம்.

குறிப்பு:—அக்கிரமமாக கால்நடைகளை பவுண்டில் அடைத்தது முதல் 10 நாளைக்குள் பிராது செய்யவேண்டும்.

### ஜீவனம்சத்தைப்பற்றிய விஷயங்கள்.

போதுமானஐவேஜூவுடைய ஒருவன்தன்பெண்சாதியையாவது, தன்னைக் கி. பு. கோ
காப்பாற்றிக்கொள்வதற்குச் சக்தியற்றதாகயிருக்கிற தன் சொந்தக்குழந்தை 488-வது
யையாவது, தன் வைப்பாட்டிக்குத் தன்னால் பிறந்த குழந்தையையாவது பிரிவுப்படி.
காப்பாற்ற அசட்டை செய்தால், அவன் குடியிருக்கிற இடம் யாருடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கிறதோ அந்த டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது

ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டிடமாவது, ஸப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டிடமாவது அல்லது 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடமாவது ஜீவனும்சத்துக்காக மனுத்தாக்கல்செய்யலாம். ஜவேஜிருக்கும் காப்பாற்ற அசட்டை செய்கிறதாக ருஜுவானால் மாஜிஸ்ட்ரேட் [illegible]றுக்கு ரூ. 50-க்கு மேல் போகாமல் அவனைக்கொடுக்கும்படி உத்தர செய்யலாம்.

ஜீவனும்சத்துக்காக மனுப்போட்ட தேதி முதலாவது, அல்லது அந்த மனுவை பைஸல்செய்கிற தேதி முதலாவது ஜீவனும்சம் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்ய[illegible]

ஜீவனும்சம் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்யப்பட்ட ஒருவன் வேறு மென்று அந்த உத்தரவுப்படி நிர்த்தார மாசத்துகையை மாதா மாதம் செலுத்தத்தவறினால் ஜீவனும்சத்துகையை வசூல் செய்யும்பொருட்டு அபராத வசூலுக்கு எப்படி வாரண்டு பிறப்பித்து நடவடிக்கைகள் நடத்தப்படுமோ அப்படி நடவடிக்கைகள் நடத்தப்படும் (இந்தப் புஸ்தகத்தின் 32-வது பக்கத்தில் 44 - வது விஷயமும் முதல் 36-வது பக்கத்தில் 53-வது விஷயம் வரை பார்க்க)

அந்த வாரண்டு நிறைவேற்றப்பட்டதின்பேரில் ஜீவனும்சத்துகை பூராவும் வசூலாகாமல் பாக்கியிருந்தாலுமே, அல்லது கொஞ்சம் வசூலாய் கொஞ்சம் பாக்கியிருந்தாலுமே, பாக்கியிருக்கும் துகைக்கு ஒரு மாதம்வரை காவலில் வைக்கலாம். ஒரு மாதத்துக்குள் எப்போது துகை வசூலானாலும் விடுதலை செய்துவிடவேண்டும்.

## ஜீவனும்சம் கொடுக்கும்படிக்கு உத்தரவுசெய்வதை நியாயமாக்கும் ஸந்தர்ப்பங்கள்

I. புருஷனுக்கு ஜவேஜிருக்கிறது (2) ஜவேஜிருக்கும் தன்பெண்சாதியையாவது தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளுவதற்கு அசக்தியாயிருக்கிற, தன் குழந்தைகளையாவது, காப்பாற்ற அசட்டைசெய்து விட்டுவிட்டான். (3) பெண்சாதி நல்ல நடத்தையுடனிருக்கிறாள். (4) அவள் புருஷன் கூடயிருந்து வாழத்தயாராகயிருக்கிறாள் (5) அவளை புருஷன் ஹிம்சை செய்வதினால் அவன் கூடயிருக்க அவள் சம்மதிக்கவில்லை.

## ஜீவனும்சம் கொடுக்கும்படிக்கு உத்தரவுசெய்யாமலிருப்பதை நியாயமாக்கும் காரணங்கள்.

II. புருஷனுக்கு ஜவேஜில்லாத காரணத்தால் காப்பாற்றவில்லை (2) பெண்சாதி கெட்ட நடவடிக்கையாகயிருக்கிறாள் (3) புருஷன் காப்பாற்றத் தயாராகயிருக்கும்போது நியாயமான காரணமில்லாமல் அவள் அவனுடனிருந்து வாழமாட்டேனென்று சொல்லுகிறாள்.

ஜீவனும்சக்கேஸுகளில் ஜீவனும்சம் கேட்டு மனு எழுதுவது மேலே 1-ல் கண்ட முகாந்திரங்கள் கண்டு எழுதவேண்டியது.

ஜீவனும்சம் கொடுக்க மறுத்ததின்பேரில் புருஷன் எழுதிக்கொடுக்கும் ஸ்டேட்டுமெண்டுகளை மேலே II-ல் சொல்லப்பட்ட காரணங்கள் கண்டு எழுத வேண்டும்,

### நகல் மனு.

நாகப்பட்டணம் ம-ா-ா-ஸ்ரீ, ஸ்டேஷனரி 2 - வது கிளாஸ் மாஜிஸ்ட்டார் அவர்கள் சமுகத்திற்கு.

ஷ. கோர்ட்டு 1908-ம் வருஷத்து காலேண்டர் கேஸ் நெ. 598.

ஷை கேஸின் வாதி / எதிரி [illegible]மாயெழுதிக்கொண்ட நகல் மனு.



என்னவென்றால் இதனடியில் கண்டகார்டுகளுக்கு நகல் கொடுக்கும்படிக்கு உத்திரவாகப் பிரார்த்திக்கிறேன்.

நகல் கேழ்க்கிற தஸ்தாவேசுகளின் விபரம்.

1. ஷை கேஸின் பிராதும் பிரமாண வாக்குமூலமும்.
2. வாதிபக்கம் சாக்ஷிகளின் வாக்குமூலங்கள்.
3. எதிரி ஸ்டேட்மெண்டு.
4. ஷை கேஸில் கிராம முனிசீபு ரிப்போர்ட்டு.
5. போலீஸ் மிமோக்கள்,
6. எதிரிபக்கம் சாக்ஷி வாக்குமூலங்கள்.

5-4-08. (ஒப்பம்) வேலாயுத முதலியார்.

### படிமனு.

ஈரோடு ம-ா-ா-ஸ்ரீ, ஸ்டேஷனரி 2 வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டார் அவர்கள் சமுகத்துக்கு.

ஷை கோர்ட்டு 1908வருஷத்து காலேண்டர்கேஸ் நெ. 399.

ஷை கேஸின் வாதி / எதிரி [illegible]யெழுதிக்கொண்டபடி மனு.

என்னவென்றால் இதனடியில்கண்ட அல்லது என் ஸ்டேட்டுமெண்டில் கண்ட (வாதியாகயிருந்தால், என் பிராதில் கண்ட) சாக்ஷிகளுக்கு ஸம்மன் பிறப்பிக்கும்படிக்கு உத்திரவாகப் பிரார்த்திக்கிறேன். (படி கட்டவேண்டிய கேசாகயிருந்தால்) ஷை சாக்ஷிகளுக்கு ஸம்மன் பிறப்பிக்கவேண்டியதற்காக இதில் ரூ. 3-0-0 க்கு கோர்ட்டுபீஸ் லேபில் ஒட்டியிருக்கிறேன்.

| நெ. | சாக்ஷியின் பெயர். | தகப்பன் பெயர். | இருப்பிடம். | ஷரா. |
|---|---|---|---|---|
| 1 | முத்து சேர்வை. | பொன்னுசாமி சேர்வை. | ஈரோடு | இதில் சாக்ஷிகள்யேதும் தஸ்தாவேஜு முதலியது ஆஜர்செய்யவேண்டியதிருந்தால் அந்த தஸ்தாவேசு சஹிதம் ஆஜராகவேணுமென்று அந்த சாட்சிக்கு நேரில் இந்த ஷராகலத்தில் எழுத வேண்டும். |
| 2 | ராமசாமி பிள்ளை. | நல்லபிள்ளை. | ஷை | |
| 3 | சேஷாச்சாரி. | ரங்காச்சாரி. | மதுரை. | |
| 4 | முருகக்கோன். | சுந்தரக்கோன் | மேலூர். | |

13-5-08. (ஒப்பம்) நயினாசாரி,

வாதி.
―――
எதிரி

## தாக்கல்செய்த தஸ்தாவேஜை வாப்ஸ்வாங்க மனு.

கும்பகோணம் ம-ா-ா-ஸ்ரீ, ஸ்டேஷனெரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டார் அவர்கள் சமுகத்துக்கு.

டை கோர்ட்டு 1908-ம் ளுு-த்து காலெண்டர் கேஸ் நெ. 600.

மேல்கண்ட கேஸின் வாதியாகிய இதனடியில் கையெழுத்து வைத்திருக்கிற நான் வணக்கமா யெழுதிக்கொண்ட தஸ்தாவேஜு வாப்ஸ் மனு.

என்னவென்றால் நான் ஏதக்கேஸில் என்பக்கம் ஆதாரமாகத் தாக்கல்செய்திருக்கிற இதனடியில் கண்ட தஸ்தாவேஜுகள் எனக்கு வாபஸ்கொடுக்கும்படிக்கு உத்தரவாகப் பிரார்த்திக்கிறேன்.

வாப்ஸ் கிடைக்கவேண்டிய தஸ்தாவேஜுகளின் விபரம்.

14-12-08. (ஒப்பம்.) டேவிட் நாடார்,

வாதி.

குறிப்பு:—தஸ்தாவேஜு வாப்ஸ் மனுவுக்கு லேபில் ஒட்டவேண்டியதில்லை.

## விதிக்கப்பட்டு அப்பீலில் மாற்றப்பட்ட அபராதத்தை வாப்ஸ்வாங்கமனு.

திருச்சினாப்பள்ளி ம-ா-ா-ஸ்ரீ, ஸ்டேஷனெரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டார் அவர்கள் சமுகத்துக்கு.

டை கோர்ட்டு 1908-ம் ளுு-த்து காலெண்டர் கேஸ் நெ. 601.

டை கேஸின் எதிரி வைரமுத்துப்பிள்ளை வணக்கமாயெழுதிக்கொண்ட மனு.

என்னவென்றால் டை கேஸில் எனக்கு இந்தக் கோர்ட்டில் விதிக்கப்பட்ட அபராதத்தொகை ரூ. 25-யும் திருச்சினாப்பள்ளி ஹெட்குவார்ட்டர் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டாரவர்கள் அந்த கோர்ட்டு 1908-ம் ளுு-த்து கிரிமினல் அப்பீல் நெ. 108-ல் மாத்தியிருக்கின்றார்கள்.

ஆகையால், சமுகத்தில் கிருபைசெய்து டை தொகை ரூ. 25-ம் எனக்குக் கிடைக்கும்படி தாலூகா சஜானாவுக்கு ரிபண்டு உத்தரவு முதலியது ஹெட்குவார்ட்டர் டிப்டி மேஜிஸ்ட்ரேட்டாரவர்களால் அனுப்பப்பட்டவைகளையும், மற்றும் வேண்டும் ஆதாரங்களையும் எனக்குக் கொடுக்கும்படிக் குத்தரவாகப் பிரார்த்திக்கிறேன்.

15-5-08. (ஒப்பம்) வைரமுத்துப் பிள்ளை.

குறிப்பு:—இந்த மனுவுக்கு லேபில் ஒட்டவேண்டியதில்லை.

---

Printed by Thompson & Co., at the "Minerva" Press, 36, Broadway Madras.